14/50

[illegible]

1977. [illegible].

கௌதம புத்தர்
அடிச்சுவட்டில்

RATNA STORES
BOOK SELLERS
130 MALAY STREET
COLOMBO-2.



1.
பரிநிருவாண
சாந்தி —
குசிநகர்
(பக். 309)

கௌதம புத்தர்
அடிச்சுவட்டில்

சோ. சிவபாதசுந்தரம்

RATNA STORES
BOOK SELLERS
130 MALAY STREET
COLOMBO-2.

அமுத நிலையம் பிரைவேட் லிமிடெட்
தேனும்பேட்டை :: சென்னை-18

அமுதம்—189
முதல் பதிப்பு—மே, 1960
உரிமை பதிவு

விலை ரூ. 12

நேஷனல் ஆர்ட் பிரஸ், தேனாம்பேட்டை, சென்னை-18

சமர்ப்பணம்

எனது

அருமைத் தாயாருக்கு

பொருளடக்கம்

	அறிமுகம்	...	xi
1.	எக்கா வண்டி	...	1
2.	சாக்கியர் நகரம்	...	8
3.	குதிரை முதுகிலே	...	24
4.	குழந்தை பிறந்தது	...	32
5.	சோதிடன் வாக்கு	...	42
6.	அழகுப் போட்டி	...	52
7.	கண்டதும் கேட்டதும்	...	62
8.	கட்டவிழ்த்த காளை	...	71
9.	நெடும் பயணம்	...	81
10.	மகதத்தின் தலைநகர்	...	86
11.	பால் பாயசம்	...	101
12.	தவம் பலித்தது	...	108
13.	கோயிலைக் கண்டேன்	...	112
14.	கங்கா ஸ்நானம்	...	126
15.	சக்கரம் சுழன்றது	...	137
16.	மான் காடு	...	150
17.	மூன்று முனிவர்கள்	...	159
18.	தந்தையும் மகனும்	...	175
19.	வள்ளல் மகிழ்ந்தான்	...	187
20.	விலையும் மதிப்பும்	...	197
21.	கோசலத் தலைநகர்	...	209
22.	வானக் காட்சி	...	221
23.	புயலும் அமைதியும்	...	228
24.	சூழ்ச்சி நாடகம்	...	233
25.	வினையும் விளைவும்	...	247
26.	தளகர்த்தர் பிரிவு	...	254

27.	பல்கலைக் கழகம்	...	258
28.	கங்கையைக் கடத்தது	...	262
29.	பெண்ணுக்குச் சம உரிமை	...	270
30.	மாஞ்சோலை மங்கை	...	279
31.	மகாபரிநிருவாணம்	...	294
32.	யாத்திரை முடிந்தது	...	307
	முடிவுரை	...	313
	அனுபந்தம்	...	315
	ஆதார நூல்கள்	...	323
	சிறப்புப் பெயர் அகராதி	...	325

படங்களின் அட்டவணை

[பக்க எண் அல்லது எண்கள், படத்துக்கு எதிரிலுள்ள பக்கத்தை, அல்லது படத்தை இடையில் கொண்டுள்ள பக்கங்களைக் குறிக்கும்.]

		பக்கம்
1.	பரிநிருவாண சாந்தி—குசீநகர்	முகப்புப் படம்
2.	கபிலவஸ்து—மகாதேவர் ஆலயம்	48
3.	மாயாதேவியின் கனவு—சாஞ்சி சிற்பம்	48–49
4.	மாயாதேவி ஆலயம், தில்லோராக்கோட்டம்	48–49
5.	உலும்பினி யாத்திரை	48–49
6.	உலும்பினி—அசோகஸ்தம்பம், கோயில், குளம்	48–49
7.	புத்தர் பிறப்பு—உலும்பினி	48–49
8.	இராஜகிருகம்—வைபாரகிரி	48–49
9.	இராஜகிருகம்—சப்ததாரை வெந்நீர் ஊற்று	49
10.	இராஜகிருகம்—மணியார் மடம்	96
11.	இராஜகிருகம்—சுவர்ண பண்டார குகை	96–97
12.	இராஜகிருகம்—கிருத்ரகூடம்	96–97
13.	இராஜகிருகம்—கிருத்ரகூடத்தில் பிரசங்க மேடை	96–97
14.	உருவில்வா—சுஜாதை அமுதளித்த ஸ்தலம்	96–97
15.	புத்தகயை—நைரஞ்சனை நதி	96–97
16.	புத்தகயை—ஜீயர் மடம்	96–97
17.	புத்தகயை—விஹாரம்	97
18.	புத்தகயை—போதி விருக்ஷம்	144
19.	புத்தகயை—வஜ்ராசனம்	144-145
20.	புத்தகயை—சங்கமனம்	144–145
21.	புத்தகயை—அனிமிஷலோசனம்	144–145
22.	புத்தகயை—ரதனகாரம்	144–145
23.	வாரணசி—கங்கை	144-145
24.	வாரணசி—காசி விஸ்வநாதர் ஆலயம்	144–145
25.	வாரணசி—கங்கா புத்திரர்கள்	145

		பக்கம்
26.	சாரநாத்—சௌகண்டி	192
27.	சாரநாத்—தர்மமுக ஸ்தூபி	192–193
28.	சாரநாத்—தர்மமுக ஸ்தூபி சிற்பம்	192–193
29.	சாரநாத்—மிருகதாவம்	192–193
30.	சாரநாத்—மூலகந்தகூடம்	192–193
31.	சாரநாத்—அசோக சின்னம்	192–193
32.	தர்ம சக்கரப் பிரவர்த்தனம்—அஜந்தா	192–193
33.	கௌசாம்பி—புதைபொருட் சின்னம்	193
34.	சிராவஸ்தி—ஜேதவனம்	240
35.	ஜேதவன தானம்—பாரூத் சிற்பம்	240–241
36.	சிராவஸ்தி—அங்குலிமால சைத்தியம்	240–241
37.	சிராவஸ்தி—ஆனந்தபோதி விருக்ஷம்	240–241
38.	சங்கர்ஷபுரம்—விசாரிதேவி கோயில்	240–241
39.	சங்கர்ஷபுரம்—அசோக சின்னம்	240–241
40.	நாலந்தை—விஹாரம்	240–241
41.	நாலந்தை—பல்கலைக் கழகமிருந்த இடம்	241
42.	கண்டகி நதி	288
43.	கங்கை நதி—மாலைக்காட்சி	288–289
44.	வைசாலி—அசோக ஸ்தம்பம்	288–289
45.	வைசாலி—வைசாலி மங்கை	288–289
46.	வைசாலி வானரங்கள்—சாஞ்சி சிற்பம்	288–289
47.	குசீநகர்—ஸ்தூபி	288–289
48.	குசீநகர்—மள்ளர்	288–289
49.	குசீநகர்—மகா பரிநிருவாணம்	289

குறிப்பு: இவ் வட்டவணையிற்கண்ட படங்களில் 33, 35, 36, 40, 41 ஆகிய ஐந்தும் இந்திய அரசாங்க தொல் பொருள் இலாகா காமிரைட். மற்றைய யாவும் ஆசிரியர் உரிமை.

அறிமுகம்

இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு அவதரித்தார் கௌதம புத்தர். கி. மு. 563-ம் ஆண்டு இமயமலைச் சாரலில் கபிலவஸ்து நகரத்தையடுத்த உலும்பினி வனத்தில் பிறந்தார் என்பது சரித்திர ஆராய்ச்சியாளர் முடிவு. சாக்கியர் வம்சத்தில் பிறந்து அரசபோகத்தையும் கீர்த்தியையும் உதறித் தள்ளி விட்டு, பிறவிப் பிணி தீர்க்கும் உண்மை வழியைக் கண்டு பிடிக்க வேண்டும் என்று துறவு பூண்டார். ஆறு வருடகாலம் உறுதி யோடு கடும் தவம் செய்தார். அதன் பின்னர் அவர் இலட்சியம் நிறைவேறியது. மெய்ப் பொருளைக் கண்டார். அதை அடையும் மார்க்கத்தையும் கண்டார். தான் பெற்ற இன்பத்தை இந்த வையகமே பெற வேண்டுமென்று நாடு நாடாகச் சென்று உபதேசம் செய்தார். அவர் உபதேசங்களைப் பலர் ஏற்றுக் கொண்டார்கள். ஏற்றுக் கொள்ளாமல் அவரை எதிர்த்தவர் களும் இருந்தார்கள். ஆனால் அவர் உறுதியைக் கைவிடவில்லை. இறக்கும் வரையும், மரணப்படுக்கையிலிருந்து கொண்டும் அவர் உபதேசித்தார்.

கௌதம புத்தர் இறந்து இருநூறு வருடங்கள் கழித்து மகத சாம்ராஜ்யத்துக்குத் தலைவனாக வந்த மன்னன் அசோகன் நாடு நாடாகக் கைப்பற்றி வந்து கலிங்கத்தையும் வெற்றி கொண்டபோது, அந்தப் போரில் அவன் கண்ட காட்சி, கொலைக் களக் காட்சி, அவன் இதயத்தைத் தொட்டது. அந்த உடனேயே அவன் போரை வெறுத்துத் தன் செயலுக்குப் பச்சாத்தாபப் பட்டு, "மறப் போர் வேண்டாம் அறப்போர் வேண்டும்" என்று சங்கல்பம் செய்தான். போதி வேந்தனாகிய புத்தர் உபதேசித்த தரும மார்க்கமே சிறந்தது என்று அதனைக் கைக் கொண்ட தோடு, உலகத்துக்கே அதனைப் போதிக்க வேண்டுமென்று விரதம் பூண்டு நாற்றிசையும் அத்தருமத்தைப் பிரசாரம் செய்யத் தூதுவர்களை யனுப்பினான். தன் சொந்தப் புதல்வன் மகிந்தனையும் புதல்வி சங்கமித்திரையையும் தெற்கே ஈழத் துக்குத் தரும தூதுவர்களாக அனுப்பினான்.

ஈழத்திலிருந்து பௌத்தம் பர்மாவுக்கும் சீயத்துக்கும் கம்போடியாவுக்கும் கடல் கடந்து சென்றது. ஜாவாவில் உறை

விடம் பெற்றது. வடக்கே இமயம் கடந்து திபேத்தில் குடி கொண்டு, கோயில்களையும் மடங்களையும் நூல் நிலையங்களையும் எழுப்பிவிட்டு, அங்கிருந்து மங்கோலியா வழியாகச் சீனு சென்றது. பின்னர் அங்கிருந்து கொரியாவுக்குப் போய், கடலைத் தாண்டி ஜப்பானிலும் குடியேறியது. இங்ஙனம் வியாபித்த பௌத்தம் உலகத்திலேயே மிகப் பெரிய மதமாகி, உலகமக்கள் தொகுதியில் ஐந்திலொரு பங்கினரையே தன் வசப்படுத்தியது.

★

பல்லாயிரம் ஆண்டுகளாகவே சிந்தனைச் செல்வர்களையும் அறிவியல் கலைகளையும் பண்பாடுகளையும் பிறப்பித்து வரும் பாரத நாடு ஒரு புத்தரை யீந்தது. பௌத்த நாகரிகத்தையீந்தது. மனிதனின் சிந்தனைப் போக்கிலே அந்த பௌத்தம் ஒரு திருப் பத்தை யேற்படுத்தியது. நாகரிக வளர்ச்சியில் மாறுதல்கள் தென்பட்டன.

பௌத்த மடங்களெல்லாம் கல்விக் கூடங்களாகத் திகழ்ந்தன. நாலந்தையும் தக்ஷசிலமும் காஞ்சீபுரமும் அனுராத புரமும் பல்கலைக் கழகப் பட்டணங்களாயின. மன்னர்கள் மானியங்களை வாரியிறைத்தனர். இலக்கணம், தருக்கம், வானியல், பூதவியல் முதலிய கலைகள் வளர்ந்தன. மொழிகள் வளர்ந்தன. சொற்கள் பெருகின. இலக்கியங்களும் வளர்ந்தன. ஏன், பௌத்தத்தின் செறிவிலே, அதன் தாக்குதலிலே, மற்றைய சமயங்களே புதிய ஆக்கமும் எழுச்சியும் பெற்று வளர்ந்தன என்றும் சொல்லலாம்.

கல்லிலும் சாந்திலும் உருவான கலை வடிவங்கள் கொஞ்சமா? சிற்பக்கலையைச் சமயத்தின் தேவைக்கு முதன் முதலில் உபயோகப்படுத்தியது பௌத்தம். அதன் பின்னரே மற்றைய சமய சிற்பங்களெல்லாம் தோன்ற ஆரம்பித்தன. குகைகளில் வளர்ந்த சிற்பங்கள் கோயில்களில் குடி கொண்டன.

கங்கைப் பள்ளத்தாக்கில், மகத நாட்டிலே தோன்றிய பௌத்தம் ஒரு காலத்தில் பாரதம் முழுவதிலுமே வியாபித் திருந்தது. ஆனல் காலத்தின் கோலம், பாரதத்தில் பிறந்த பௌத்தம், ஆயிரம் ஆண்டுக் காலத்துள்ளாக, பாரதத்தையே விட்டுப் பிரிந்து வேறெங்கெல்லாமோ வேரூன்றியது. பெய ரளவில் பாரதத்தில் பௌத்தம் என்ற மதம் மறைந்தது உண்மைதான். ஆனல் அந்த பௌத்தம் தோற்றி வைத்த பண்

பாடும், பௌத்தத்தின் ஆதரவில் வளர்ந்த கலைகளும் மற்றைய சமயக் கொள்கைகளிலும் மக்கள் அனுட்டானங்களிலும் மக்கள் வாழ்க்கையிலும் ஊறிப்பதிந்து நிலை பெற்றுவிட்டன. இன்றைய பாரதப் பண்பாட்டில் பௌத்தப் பண்பாடு செறிந்துள்ளது. அந்தப் பண்பாட்டில் பெற்ற "பஞ்ச சீல"க் கொள்கையையே, அற வழியையே, இன்று சுதந்திர பாரதம் தனது அரசியல் கொள்கையில் சேர்த்துக் கொண்டு, உலக அரசியல் அரங்கிலேயும் நிலை நாட்டி வைத்து விட்டது. சர்வதேசங்களுமே இந்தப் பஞ்ச சீலக்கொள்கையை அங்கீகரித்துவிட்டன. பௌத்தம் தந்த தரும சக்கரமே இன்றைய பாரதத்தின் அரச இலச்சினையாகி விட்டது.

★

ஐந்து வருடங்களுக்கு முன்பு அஜந்தா குகைச் சிற்பங்களையும் சித்திரங்களையும் பார்த்தபோது பௌத்த க்ஷேத்திரங்கள் எல்லாவற்றையுமே பார்த்துவிட வேண்டுமென்ற ஆவல் பிறந்து, அந்த யாத்திரையின் பலனாக எழுந்தது இந்நூல். கௌதம புத்தர் வாழ்க்கையோடு சம்பந்தப்பட்ட, அவர் தரிசித்த க்ஷேத்திரங்கள் யாவும் கோசலம், மகதம், ஆகிய இரு நாடுகளிலும் மாத்திரமே காணப்படுகின்றன. அவை தற்போது உத்தரப் பிரதேசம், பிஹார் ஆகிய இரு ராச்சியங்களிலு முள்ளன. கபில வஸ்துவும் உலும்பினியும் மாத்திரம் வடக்கே நேபாளத்தின் தெற்கெல்லையிலுள்ளன. உலும்பினியில் அவர் பிறந்தார். கபில வஸ்துவில் வாழ்ந்தார். பின்னர் உருவில்வா என்ற புத்த கயையில் ஞானோதயம் வரப்பெற்று, காசிக்கடுத்த சாரநாத்தில் முதல் உபதேசம் செய்தார். இராஜகிருகம், சிராவஸ்தி, வைசாலி, கௌசாம்பி, சங்காஷ்புரம், நாலந்தை, பாடலிபுரம் ஆகிய இடங்களைத் தரிசித்து அங்கெல்லாம் உபதேசம் செய்தார். முடிவில் குசீநகரில் அவர் இறந்தார். அவர் தமது இறுதி யாத்திரையில் வைசாலியிலிருந்து குசீநகர் செல்லும் மார்க்கத்தில் பல சிறு கிராமங்களைத் தரிசித்தார் என்று சொல்லப்படுகிறது. அவையெல்லாம் எங்குள்ளன என்று கண்டு பிடிக்கப்படவில்லை. பாஹியன், ஹியூங் சியாங் முதலிய சீனயாத்திரிகர் எழுதி வைத்த குறிப்புக்களின் உதவியோடு தொல்பொருள் ஆராய்ச்சி நிபுணர்கள் முக்கியமான க்ஷேத்திரங்களை யெல்லாம் கண்டு பிடித்து விட்டனர். கௌதம புத்தர் இலங்கைக்கு மூன்று தடவை விஜயம் செய்தார் என்றும்,

அந்த மூன்று தடவையும் ஆகாய மார்க்கமாகப் பறந்து சென்று திரும்பினர் என்றும் மகாவம்சம் என்ற சிங்களவரது காவியம் கூறுகிறது. ஆயினும் இந்தச் செய்திக்கு பௌத்த பிடக நூல் களிலாவது அவற்றின் உரைகளிலாவது எவ்வித ஆதாரமும் கிடைக்கவில்லை.

எனவே, கங்கைப் பள்ளத்தாக்கிலும் வடக்கே நேபாளத் திலுமுள்ள பௌத்த க்ஷேத்திரங்களை யெல்லாம் பார்த்து விட்டு, சிறந்த அறிஞர்கள் எழுதிய நூல்களை ஆதாரமாகக்கொண்டு எனது சொந்த அனுபவத்தையும் சேர்த்து, யாத்திரை நூலாகவும் வரலாற்று நூலாகவும் இதனை எழுதி முடித்தேன். சில வருடங் களுக்கு முன்பு நான் எழுதிய மாணிக்கவாசகர் அடிச்சுவட்டில் என்ற நூலை வரவேற்ற தமிழ் உலகம் இந்த நூலையும் வரவேற்று ஆதரிக்கும் என்று நம்புகிறேன்.

இந்த நூலை எழுதும்போதும் அச்சில் இது வெளிவரும் போதும் துணை நின்ற அன்பர்கள் பலர். அவர்கள் யாவருக்கும் நான் கடமைப்பட்டுள்ளேன். ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு இந் நூலுக்குத் திட்டம் போட்ட சமயத்தில் எனக்கு உற்சாகமளித்து நூல்கள் பலவற்றைக் கொடுத்துதவி நல்ல ஆலோசனைகள் பல தந்த நண்பர் நவாலியூர் சோ. நடராஜன் அவர்கள். எனது யாத்திரையின்போது கல்கத்தாவிலுள்ள மகாபோதி சங்கத்துத் தலைவர் தேவப்பிரிய வாலிசிங்ஹ அவர்கள்தான் சிறந்த முறையில் பிரயாணத்திட்டம் அமைத்துக் கொடுத்தார். அவர் வெளியிட்டுள்ள பௌத்த க்ஷேத்திரங்கள் சம்பந்தமான புத்தகமும் சிறந்த துணைபுரிந்தது. அங்கங்கு க்ஷேத்திரங்கள் பலவற்றில் நான் சந்தித்த பௌத்த சந்நியாசிகள் யாவரும் அன்போடு ஆதரித்து உபசரித்தார்கள். இவர்கள் யாவருக்கும் நான் கடமைப்பட்டிருக்கிறேன். வெளிப்புற உறையில் காணப் படும் சித்திரம் அனுராதபுரத்திலுள்ள மிகப் புராதனமான சந்திர வட்டக்கல் என்ற பௌத்த சிற்பத்தை ஆதாரமாகக் கொண்டது. இதை அற்புதமாக வரைந்து உதவிய நண்பர் சைத்திரிகர் சங்கீத ராஜன் அவர்களுக்கு எனது நன்றியுரியது. இந்த நூல் அச்சில் ஓடிக்கொண் டிருக்கும்போது அச்சுத் தாள்களைப் படித்துப் பார்த்துச் சிறந்த பல ஆலோசனைகளைத் தந்துதவிய எனது நண்பர் ரா. பாலகிருஷ்ணன் அவர்களுக்கு விசேஷ நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன். அழுத நிலைய அன்பர்களுக்கும், அங்குள்ள அச்சுத் தொழில் நண்பர்களுக்கும் எனது நன்றி கலந்த பாராட்டுக்கள். இந்நூலின் இறுதியி

லுள்ள சிறப்புப் பெயர் அகராதி தயாரிக்கும் பணியில் உதவிய எனது புதல்வி மஞ்சுபாஷிணிக்கும் புதல்வன் ரவிலோசனனுக்கும் நன்றி.

சென்ற ஆண்டு மதுரையில் ஒரு மாதகாலம் தங்கியிருந்து, மதுரை மீனாக்ஷி யம்மையின் தரிசனத்தைப் பெற்றுக் கொண்டே இந் நூலின் கையெழுத்துப் பிரதியை எழுதி, வைசாகபூர்ணிமை தினத்தில் கடைசி அத்தியாயத்தைப் பூர்த்தி செய்தது என் ஞாபகத்திலிருக்கிறது. இவ்வாண்டு அதே வைசாகபூர்ணிமை தினத்தில், போதி வேந்தனகிய புத்தர் ஞானோதயம் பெற்ற அதே நாளில், இப்புத்தகம் அச்சிலிருந்து வெளிவருவது ஒரு மன நிறைவைக் கொடுக்கிறது. இந்தப் பணிக்கு அந்த மதுரை மீனாக்ஷி யம்மையின் அருள்தான் துணை நின்றது.

காந்தி நகர்
சென்னை-20
வைசாக பூர்ணிமை
11-5-60

சோ. சிவபாதசுந்தரம்


ஹிமாசலம்
ரப்தி
ரோஹிணி
கோலிய நாடு
சாக்கிய நாடு
சிராவஸ்தி
கபிலவஸ்து
உரும்பினி
நௌசத்தன்வா
பலராம்பூர்
ஷோரத்கர்
மல்லர் நாடு
சங்கர்ஷபுரம்
ஆக்ரா
பருக்காபாத்
பக்னு
கோண்டா
கோசலம்
லக்ஷ்மணபுரி
சாகேதம்
குசீநகர்
கோரக்பூர்
சரயு நதி
கண்டகி நதி
வைதேகம்
கான்பூர்
யமுனை
கோமதி
விரிஜி நாடு
முசாபர்பூர் (மதலை)
வைசாலி
ஹாஜிப்பூர்
அங்கம்
கங்கை
பாடலிபுரம்
கௌசாம்பி
பிரயாகை
காசி
சாரநாத்
வாரணசி
மகதம்
வத்ஸம்
பிஹார்
நாலந்தா
ராஜகிருஹம்
நவாடா
கயை
புத்தகயை
உருவில்வா
கோணகி
நைரஞ்சனை
பல்குனி
கல்கத்தா
பௌத்த
யாத்திரைப் படம்
1" = 80 மைல்

முதல் அத்தியாயம்

எக்கா வண்டி

காசியிலிருந்து வடக்கே கோரக்பூர் என்ற நகரத்துக்கு ஒரு ரயில் போகிறது. பின்னர் அங்கிருந்து வடமேற்கே சுற்றி வளைந்து கோண்டா என்ற இடத்துக்கு ஒரு ரயில் பாதை செல்லுகின்றது. இந்தப்பாதையில் ஷோரத்கர் என்ற ஒரு சிறிய ஸ்டேஷன் இருக்கிறது. அங்கிருந்து வடக்கே பத்து மைல் தூரத்திலே தௌலீவா என்ற இடமுள்ளதென்றும், அங்குதான் கபிலவஸ்து என்ற சாக்கிய நகரத்தைப் பார்க்கலாம் என்றும் தெரிந்து வைத்திருந்தேன். வழித் துணைக்கு எவரும் அகப்படவில்லை. பாஷைக்கு ஆங்கிலத்தையும் அரை குறையாக இரண்டொரு ஹிந்திச் சொற்களையும் மாத்திரமே நம்பிக்கொண்டு பிரயாணத்தில் புறப்பட்டேன்.

ஒரு நாட் பொழுதுக்குள்ளேயே கபிலவஸ்துவுக்குப் போய் அங்குள்ள முக்கிய இடங்களைப் பார்த்துத் தெரிந்துகொண்டு திரும்பி விடவேண்டுமெனத் திட்டம் போட்டிருந்தே னையால் அதற்கு வசதியான ஒரு ரயில் வண்டியில் ஏறி ஷோரத்கர் என்ற ஸ்டேஷனை யடையும்போது இரவு சரியாகப் பன்னிரண்டு மணி. நல்ல குளிர். அந்த வண்டியிலிருந்து என்னைத் தவிர நாலைந்து பிரயாணிகள் மட்டுமே ஸ்டேஷனில் இறங்கினர்கள். ஸ்டேஷன்மாஸ்டர் அந்தச் சமயத்தில் நிம்மதியாக வீட்டிலே தூங்கிக்கொண்டிருந்தா ராகையால் அவருடைய உதவியாளர் ஒருவர் மாத்திரம், நன்றாகக் கம்பளியால் மூடிக்கொண்டு, தமது ஆபீஸில் உட்கார்ந்திருந்தார். நேரிலே சென்று அந்த மனிதனைக் கண்டு பேசிப் பார்ப்போம் என்று அணுகி, "ஸார், நான் வெகு தூரத்தில் சிலோனிலிருந்து வரும் ஒரு பிரயாணி. கபிலவஸ்துவுக்கு எப்படிப் போவதென்று சொல்லுவீர்களா?" என்று கேட்டேன். ரயில்வே உத்தியோகத்திலுள்ளவ ராகையால் துணிவோடு ஆங்கிலத்திலே பேசினேன். அந்த மனுஷன் முதலில் திருதிருவென்று முழித்தார். ஆங்கிலம் இங்கு செல்லுபடியாகாதோ என்று எனக்குச் சந்தேக முண்டாயிற்று! ஆனால் மறுகணமே அவர் புரிந்துகொண்டு ஆங்கிலத்திலேயே பதிலளித்து, "கபிலவஸ்துவா? அப்படி ஓர் இடம் இங்கே யிருக்கிறதா? நான் கேள்விப்பட்டதில்லையே!" என்று கையை விரித்தார். எனக்கு ஒரே திகிலா யிருந்தது. இவ்வளவு தூரம் கஷ்டப்பட்டு இந்த அர்த்த ராத்திரி

யிலேயே பிரயாணம் செய்து வந்தும் வீணுகிவிட்டதே என்று கவலைப்பட்டேன். இருந்தாலும் இன்னும் கொஞ்சம் நன்முக விசாரித்துப் பார்க்கலாம் என்று எண்ணிக்கொண்டு, "இந்தப் பக்கத்திலேதான் எங்கேயோ இருப்பதாகப் பலர் சொல்லக் கேட்டு நம்பி வந்துவிட்டேன். இங்கிருந்து பத்து மைல் தூரத்திலே தெளலீவா என்ற ஓர் இடம் இருக்கிறதாம், உண்மைதானு?" என்று கேட்டேன்.

"ஓஹோ, அப்படிச் சொல்லுங்கள்! தெளலீவா. ஆமாம், அந்தப் பெயருள்ள ஊருக்கு இங்கிருந்து தினமும் நேபாளிகள் போகிறார்கள். எக்கா வண்டிக்காரரைக் கேட்டால் தெரிந்து போகிறது. ஆனல், கபிலவஸ்துவைப்பற்றி அவர்களுக்கும் தெரியாது ஸார். தாங்கள் எந்த ஊர் என்று சொன்னீர்கள்?"

"என்னுடைய சொந்த ஊர் சிலோன்."

"சிலோன்...அஸ்ஸாமிலிருக்கிற ஷிலோங், அப்படித்தானே?"

உலகப் பூமிசாஸ்திர அறிவு இந்தப் பக்கத்திலே பூஜ்யம் போலும் என்று எண்ணிக்கொண்டே நான், இராமாயணத்தைப் பற்றி நன்கறிந்த வடநாட்டாருக்குப் புரியும் பாஷையில் பேச வேண்டுமென்பதை யுணர்ந்து, "நான் லங்கா தேசத்தவன்" என்று பதிலளித்தேன்.

அந்த நண்பர் ஆனந்தத்தோடு குதித்தெழுந்தார். "ஆஹா! லங்காவாசியா? என்ன ஆச்சரியம்! எவ்வளவு தூரத்திலிருந்து இங்கே வந்திருக்கிறீர்கள்! உட்காருங்கள் ஸார். தெளலீவாவுக்குப் போக நன்முக விசாரித்து உங்களுக்கு ஆகவேண்டிய வசதிகளைச் செய்து தருகிறேன். இந்த நாட்களில் இங்கே குளிர் அதிகம். இதோ, இந்த சிகரெட்டைப் பற்ற வையுங்கள்" என்று உபசரித்தார். மறுகணம் ஒரு போர்ட்டரை யழைத்து நல்ல 'சாயா' இரண்டு கப் சுடச் சுட வாங்கி வருமாறு உத்தரவிட்டார். நான் புறப்பட்ட சகுனம் அவ்வளவு மோசமாகிவிடவில்லை என்று நானும் பெருமிதப் பட்டேன்!

சிறிது நேரத்தில் தேநீர் வந்து சேர்ந்தது. இருவரும் சாப்பிட்ட பின்னர் நண்பர் மறுபடியும் போர்ட்டரை யனுப்பி எக்கா வண்டிக்காரன் ஒருவனை வரவழைத்தார். எக்கா என்பது வடநாட்டுக் குதிரை வண்டி. வண்டிக்காரன் வந்ததும் அவனிடம் பேரம் பேசி, "இந்த நண்பரைத் தெளலீவாவுக்கு அழைத்துப் போய் அங்கே அவர் பார்க்கவேண்டிய இடங்களையெல்லாம் பார்த்த பின்னர் மறுபடியும் இங்கே ஸ்டேஷனுக்கு அழைத்துக்கொண்டு

வா" என்று உத்தரவு பிறப்பித்தார். வண்டிக்காரன் பத்து மைல் போய்த் திரும்பி வருவதற்கு ஆறு ரூபாய் கேட்டான். நண்பர் அதெல்லாம் முடியாதென்று அதட்டிப் பேசி, "நாலு ரூபாய் வாங்கிக் கொள், போ. வண்டி புறப்படும்போது வந்து சொல்" என்று சொல்லி யனுப்பினர். எக்கா வண்டிக்காரன் அப்படியே யாகட்டும் என்று ஒரு சலாம் போட்டுவிட்டு அங்கிருந்து சென்றான்.

எக்கா வண்டி அதிகாலையிலே நான்கு மணிக்குப் புறப்படு மென்று அறிந்து தமது அறையிலேயே படுக்கை விரித்து அந்த நண்பர் என்னைப் படுத்துறங்குமாறு கேட்டுக் கொண்டார். தாம் மாத்திரம் விடிய விடிய அந்த ஸ்டேஷனில், வண்டி வந்தாலும் வராவிட்டாலும், காவல் காக்கவேண்டும் என்று சொல்லி உட்கார்ந்து கொண்டார். இடையிடையே தமது பெரிய உத்தியோகத்தர் நிம்மதியாக வீட்டில் படுத்துறங்குவதைப் பற்றியும் புகார் சொல்லி முணு முணுத்துக்கொண்டார். இந்த நண்பரின் உபசாரத்துக்கு நன்றி தெரிவித்துவிட்டு நான் மறுநாட் பிரயாணக் கஷ்டத்தைச் சமாளிக்க ஆயத்தமாகவே படுத்துறங்கினேன்.

சரியாக நான்கு மணிக்கு அந்த ரயில்வே நண்பர் என்னைத் தட்டி எழுப்பினர். கம்பும் கையுமாக எக்கா வண்டிக்காரன் வாசலிலே காத்து நின்றான். நண்பர் என்னை வழியனுப்பும்போது, "நன்றாகப் பார்த்துவிட்டு வாருங்கள். பக்கத்தூரி லிருக்கும் எங்களுக்கே கபிலவஸ்துவைப்பற்றி ஒன்றும் தெரியாது. தாங்கள் திரும்பி வந்ததும் எல்லாம் விவரமாகச் சொல்லுங்கள்" என்று கேட்டுக் கொண்டார். "அவசியம் தெரிவிக்கிறேன்" என்று சொல்லி நன்றியுடன் அவருக்கு என் வணக்கத்தைத் தெரிவித்துவிட்டு நானும் புறப்பட்டேன்.

எக்கா வண்டி என்ற அந்த வாகனம் எனக்கும் வண்டிக்கார னுக்கும் மாத்திரம் போதுமானதாக இருந்தது. இரண்டு சக்கரங் களைப் பொருத்திய அச்சின் மேலே இரண்டடி அகலம் மூன்றடி நீளமுள்ள ஒரு சிறு தொட்டில். மேலே இரண்டு கம்பிகளை வளைத்து வெயிலை மறைக்க ஒரு கூடாரம். அதுவும் பெயரளவில் இருந்ததே யல்லாமல் பாதுகாப்பு என்று சொல்ல முடியாது. முன்னும் பின்னும் கந்தல். வண்டியில் பூட்டப்பட்டிருந்த குதிரையோ உடலொட்டி உலர்ந்துபோய்க் காணப்பட்டது. தென்னாட்டிலே யுள்ள ஜட்கா வண்டிக் குதிரைகளைப் பற்றிய அனுபவம் எனக்கு ஏற்கெனவே யிருந்தபடியால், பத்து மைல் தூரப் பிரயாணத்தையும் குறைந்தது பத்து மணி நேரத்திலாவது முடித்துவிடலாம் என்று மனத்துக்குத் தைரியம் கூறிக்கொண்டு புறப்பட்டேன்.

ஷோரத்கர் என்ற அந்தச் சிறிய ஊரின் கடைத் தெருக்களைக் கடந்து கால் மைல் தூரம் சென்றதும் வண்டிக்காரன் திடீரெனக் குதிரையை யிழுத்து நிறுத்தினன். விஷயம் என்னவென்று தெரிந்து கொள்ள நான் ஆவல் கொண்டேன். ஆனல் பாஷை தெரியவில்லை. என்னுடைய அரை குறை ஹிந்தி அவனுக்குப் புரிந்தால்தானே! ஆகையால், நடக்கிறது நடக்கட்டும் என்று தக்ஷிணமூர்த்தியைப் போலக் கண் மூடி மௌனியாக உட்கார்ந்து கொள்வதுதான் சாதுரியம் என்று நினைத்துப் பேசாமலிருந்தேன்.

அந்தச் சமயத்தில் ஸ்டேஷனை யடுத்த கடைத்தெருவைத் தாண்டிக் கிராமத்தின் ஒரு கோடிக்கு வந்துவிட்டோம் என்பதை மாத்திரம் உணர்ந்தேன். வண்டிக்காரன் மூச்சுப் பேச்சில்லாமல் குதிரையை வண்டியிலிருந்து பிரித்து அவிழ்த்துக்கொண்டு போனன். அதை ஓரிடத்தில் கட்டிவிட்டு வேறொரு குதிரையைக் கொண்டுவந்து பூட்டினன். ஓகோ, இது நமக்காக ஒரு 'ஸ்பெஷல்' என்று எனக்குத் தைரியம் பிறந்தது. ஆனல், அவன் குதிரையோடு மாத்திரம் வரவில்லை. ஒரு திண்ணையில் படுத்திருந்த மூன்று மனிதர்களையும் தட்டி எழுப்பி அழைத்து வந்தான்! எனக்குத் திகில் பிடித்தது. அவர்களில் ஒருவன் பீமசேனன் போல் காட்சி யளித்தான். உரத்த குரலில் அதிகார தோரணையில் உத்தரவுகள் பல பிறப்பித்துக் கொண்டு வந்தான். அந்தப் பாஷையில் ஒரு வார்த்தையாவது எனக்கு அர்த்தமாகவில்லை யாகையால் அச்சமும் சந்தேகமுந்தான் அதிகரித்தன. கபிலவஸ்துவுக்குத்தான் போகிறோமா அல்லது ஒரே யடியாகக் கைலாசமே போக ஏற்பாடுகள் நடைபெறுகின்றனவா என்ற பீதி யெழுந்து நெஞ்சு 'திக் திக்' என்று அடிக்கத் தொடங்கியது. அந்தச் சமயத்தில் என்ன செய்யலாம்? கஷ்டத்தைப் பொறுத்துக் கொண்டு வண்டியின் ஓரத்தில் நழுவி உட்கார்ந்தேன். ஒவ்வொரு வரும் வண்டியின் ஆசனம் முழுவதும் தமக்கே சொந்த மென்ற உரிமையோடு அகல உட்காரத் தொடங்கினர்கள். கூடாரத்தில் வளைத் திருந்த இருப்புக் கம்பியைப் பிடித்துத் தொங்கிக் கொண்டாவது போய்ச் சேருவோம், வேறு வழி யென்ன இருக்கிறது என்று தீர் மானித்துக்கொண்டே கம்பளிச் சால்வையால் தலையையும் காது களையும் இறுக மூடிப் பல்லைக் கடித்துக்கொண்டு ஒரு விக்கினமும் நேரலாகாதென்று தியானித்தவாறு அடக்கமா யிருந்தேன். ஆயிரத்து இருநூறு ரூபாய் விலையுள்ள எனது புகைப்படக் கருவி கையி லிருந்த பையினுள் பத்திரமா யிருக்கிறதா என்று மாத்திரம், மற்றவர்கள் அறியாத சமயங்களில், தடவிப் பார்த்துக்கொண் டிருந்தேன்.

நல்ல அழகான சாலை வழியே எக்கா வண்டி எதிர்பாராத வேகத்தில் பறந்து சென்றது. கார்த்திகை மாதத்து அபரபக்கச் சந்திரன் பசும் நிலவை அள்ளி இறைத்துக் கொண்டிருந்தது. சாலையின் இரு மருங்கும் அடர்ந்து வளர்ந்த புளிய மரங்களின் இருண்ட கிளைகளுக்குப் பின்னல் நிர்மலமான வானமும், அதிலே தாரகைக் கூட்டத்தை யோட்டிவிட்டுத் தனியரசு நடத்தும் வைகறைச் சந்திரனின் காட்சியும் பிரயாணத்துக்கு உற்சாக மளித்தன. அந்த உணர்ச்சியில் மெய்ம்மறந்திருந்த சமயம் வண்டியில் உட்கார்ந்திருந்த பீமசேனன் வண்டிக்காரனுடன் ஏதோ பேசினன். அவர்கள் இருவர் கண்களும் என்னையே அடிக்கடி பார்ப்பதுபோ லிருந்தது. இதைக் கண்டதும் என் இருதயத் துடிப்பு எக்ஸ்பிரெஸ் வேகத்தில் அடிக்கத் தொடங்கி, வண்டியி லிருந்தே நழுவி விழுந்துவிடுவோமோ என்ற பயமும் எழுந்தது. திடீரென அந்த ஆசாமி என்னைப் பார்த்து, "தாங்கள் எந்த ஊர்?" என்று அரை குறையாகத் தெரிந்து வைத்திருந்த ஆங்கிலத்தில் கேட்டதும் திடுக்கிட்டேன். அதேசமயம் ஒரு பெரும் பாரம் நீங்கியது போன்ற நிம்மதி யுணர்ச்சியும் ஏற்பட்டது. நல்ல வேளையாக இந்த ஆசாமிக்கு நாம் அறிந்த ஒரு பாஷை தெரியும் போலிருக்கிறது; ஆகையால், பக்காத் திருடனை யிருந்தாலும் பரவா யில்லை, பேச்சுக் கொடுத்துச் சமாளித்துக் கொள்ளலாம் என்ற ஒரு வரட்டுத் தைரியம் பிறந்தது! நிமிர்ந்து உட்கார்ந்துகொண்டு கதை கொடுத்தேன். சரமாரியாக ஆங்கிலத்தை அள்ளி வீசினேன். இந்த அபூர்வ மனுஷன் என்னதான் படே படே கதைகள் அளக் கிறானே என்று வண்டிக்காரனும் மற்றைய பிரயாணிகளும் என் வாயையே பார்த்துக்கொண்டு ஆச்சரியத்திலல் தங்கள் வாய்களை அங்காந்து வைத்துக்கொண்டிருந்தனர். அதைக் கண்டு மேலும் உற்சாகமடைந்தவனாக நான் கதாநாயகன் வேஷம்போட ஆரம் பித்தேன். அந்தப் பெரிய ஆசாமியும் இடையிடையே பதில் சொல்லி வந்தார். அவர் கல்கத்தாவிலே வியாபாரம் செய்பவர் என்றும், தெளலீவாவுக்குப் பக்கத்திலுள்ள ஒரு கிராமத்தில் வசிப்பவர் என்றும் அவர் சம்பாஷணையில் தெரிந்தது. என்னுடன் ஆங்கிலத்தில் சம்பாஷிக்கும்போது மற்றவர்கள் மத்தியில் அவருக்கு முன்னைவிட உற்சாகம் அதிகரித்தது. தமது நாகரிக வளத்தை அவர்களுக்காக மேலும் ஒரு படி அதிகமாகக் காண்பித்துக்கொண்டார். சந்தர்ப் பத்தை உபயோகித்துக்கொண்ட நான் சும்மா விடவில்லை. மேற்கு நாடுகள் சிலவற்றுக்குப் பிரயாணம் செய்த அனுபவத்தை வைத்துக் கொண்டு கற்பனைக் கதைகள் அளக்க ஆரம்பித்தேன். அந்நியர்

மத்தியில் அகப்பட்டுக்கொண்ட நான் வேஷம் போட்டாவது அவர்களது மதிப்பைப் பெற்றுவிட வேண்டுமென்று உள்ளம் தூண்டியது. எனவே, உள்ளதும் இல்லாததுமான கதைகளை எடுத்துச் சொன்னேன். அதில் பாதி விஷயத்தை அந்த ஆசாமி கிரகித்திருக்க முடியாது என்பதை நான் அறிவேன். ஆனால் அவர் புரிந்துகொள்ளாவிட்டாலும் மற்றவர்களுக்குக் காண்பிப்பதற்காக அடிக்கடி "ஆஹா, ஊஹூ" என்று சொல்லி வந்தார். கிலி பிடித்திருந்த என் உள்ளத்தில் இப்பொழுது ஒரு தெளிவும் தைரியமும் பிறந்தது. அத்துடன், சூது வாதறியாத கிராமவாசிகள் மத்தியில் அநாவசியமான சந்தேகத்தை வளர்த்துக்கொண்டேனே என்ற வெட்கமும் ஏற்பட்டது.

பாதி தூரம் கழிந்ததும் பாரதத்தின் வட எல்லை முடிவுற்று நேபாள ராஜ்யம் உதயமானதைக் கண்டேன். அதைக் குறிப்பிட ஒரு பெரிய தூண நாட்டி வைத்திருக்கிறார்கள். அது மாத்திரமல்ல, நாங்கள் சென்றுகொண்டிருந்த சாலையும் வேற்றுருவம் எடுத்தது. அதுவரையும் நல்ல ஒப்புரவான சாலையில் குதிரை வண்டி சுகமாக ஓடிக்கொண்டிருந்தது. நேபாள எல்லைக்கு வந்ததும் சாலை கல்லும் கரடும் குழியும் நிறைந்ததாகக் காட்சி யளித்தது. 'கச்சா ரோடு' என்று சொல்வார்கள். இதிலே வண்டியும் குதிரையும் மிகவும் கஷ்டப்பட்டன. நன்றாக விடிந்துவிட்ட படியால், பக்கங்களில் கண்ணுக்கெட்டிய தூரமெல்லாம் பச்சைப் பசேலென்று காட்சி யளித்த நெல் வயல்களைக் கண்டு மகிழ்ந்தோம். நேபாள விவசாயிகள் வைகறைப் பொழுதிலேயே அங்கு வந்து வயல்களில் வேலை செய்துகொண்டிருந்தார்கள். எங்கு பார்த்தாலும் உழவர்கள் ஏர் உழும் காட்சி. சில வயல்களில் எருதுகள் பூட்டி யுழுதார்கள்; வேறு சிலவற்றில் எருமைகள்; இன்னும் சிலவற்றில் யானை பூட்டி ஏர் உழுவதைக் கண்டோம். தூரத்தே ஹிமாசலத்தின் சாரல் குறிஞ்சியும் மருதமும் உறவு கொண்டாடும் இந்தக் காட்சி அற்புதமாயிருந்தது. என்னுடன் வந்த அந்தப் பெரிய ஆசாமி இதற்குள் நல்ல அத்தியந்த நண்பராகிவிட்டார். நேபாளக் கிராமங்களைப்பற்றி விவரிக்க ஆரம்பித்தார். யானை பூட்டி ஏர் உழுவது அந்தப் பிரதேசத்தில் சர்வ சாதாரணம். மேலே போகப் போக யானைகளின் உபயோகம் நேபாளத்தில் அதிகமாக உண்டு. தெளலீவாவி லிருந்து சில மைல் தூரத்தில் பைரவா என்ற ஓரிடம் இருக்கிறது. அங்கிருந்து நேபாளத்தின் தலைநகராகிய காட்மாண்டுவுக்குச் செல்பவர்கள் யானை மீதுதான் ஏறிச் செல்வார்கள். சிலர் ஒட்டகத்தின்மேல் ஏறிச் செல்வது முண்டு. ஒட்டகமும் யானையுந்

தான் நேபாள எல்லைப்புறத்தில் மிக முக்கியமான போக்குவரத்து வாகனங்கள் என்று தெரிந்து கொண்டேன்.

சாலையின் ஓரத்தில் ஒரு மரத்தடியிலிருந்த சிறு கடையின் பக்கத்திலே வண்டி நிறுத்தப்பட்டது. பிரயாணிகள் இறங்கிச் சிரம பரிகாரம் செய்துகொண்டார்கள். குதிரைக்கும் வண்டிக்காரன் ஓய்வு கொடுத்து வைக்கோல் போட்டான். பெரிய ஆசாமி நண்பர் எனக்கு மிகவும் வற்புறுத்தலோடு தேநீர் விருந்தளித்தார். மறுபடியும் வண்டியேறிப் பிரயாணத்தைத் தொடர்ந்தோம்.

தூரத்திலே அடி வானத்தில் ஹிமாலயச் சிகரங்கள் தலை நிமிர்ந்து உதயசூரியனின் இளங் கதிர்களைச் சுமந்து வெள்ளிப் பனி மலையின் ஒப்பற்ற எழிலைக் காண்பித்து நின்றன. சாலை நெடுகிலும் பல வாய்க்கால்களையும் அவற்றின் மீது போடப்பட்டிருந்த மரப் பாலங்களையும் தாண்டிச் செல்லவேண்டி யிருந்தது. அந்தப் பாலங்கள் மத்தியிலே உயரமாகவும் இரு பக்கங்களிலும் சரிவாகவும் காணப்பட்டன. அவற்றில் ஏறி யிறங்கும்போது குதிரைக்குப் பிராணன் போய்த் திரும்பும். ஏறும்பொழுது வண்டிக்காரன் குதிரையின் கடிவாளத்தை நெகிழ்த்துவிட்டு அடித்து விரட்டுவான். பின்னர் இறங்கும்போது இழுத்துப் பிடித்துக்கொண்டு ஒவ்வொரு காலாக அடி எடுத்து வைத்து நடக்கச் செய்வான்; வண்டியைக் குதிரை யிழுத்துச் செல்வதற்குப் பதிலாக, குதிரையைத் தள்ளிக் கொண்டு வண்டி சென்று மோதும். ஒவ்வொரு பாலத்தையும் தாண்டும்போது நமது உடலிலுள்ள எலும்புகள் யாவும் பக்குவமாக உள்ளனவா என்று நாம் அடிக்கடி தடவிப் பார்த்துக்கொள்ள வேண்டும். ஒன்றிரண்டு பாலங்களல்ல, சுமார் இருபதுக்கு மேற் பட்ட பாலங்களைத் தாண்டவேண்டி யிருந்தது.

ஒருவாறு காலை எட்டு மணிக்கு தெளலீவா போய்ச் சேர்ந்தது எக்கா வண்டி. நண்பர் வண்டியி லிருந்து இறங்கி என் பெயர் விலாச மெல்லாம் கேட்டுக் குறித்துக்கொண்டு புன்னகையுடன் விடை பெற்றுக்கொண்டு சென்றார். நானும் நன்றியுடன் "நமஸ்தே" என்று சொல்லிவிட்டு வண்டியைவிட் டிறங்கினேன்.

இரண்டாம் அத்தியாயம்

சாக்கியர் நகரம்

தெளலீவா மிகவும் ஏழ்மை நிலையிலுள்ள ஒரு சிறு கிராமம். தென்னாட்டுச் சேரிப்புறங்கள் போலப் பல மண் குடிசைகள் காட்சியளித்தன. குடிசைச் சுவர்களிலெல்லாம் எருவராட்டிகள். கூரைகளில் பூசினிக் கொடி படர்ந்திருந்தது. சுற்றுப் புறங்களில் எருமைகள் சுற்றியலைந்தன. சாக்கடைகளை வட்டமிட்டுக்கொண்டு பன்றிக் கூட்டங்கள் படையெடுத்துத் திரிந்தன. கிராமத்தின் மத்தியிலே உயர்ந்து வளர்ந்த கோபுரத்துடன் கோயில் ஒன்று காட்சி தந்தது. அந்தக் கோயிலொன்றுதான் தெளலீவா ஒரு மிகப் பழைய க்ஷேத்திரம் என்பதை யாத்திரிகர்களுக்கு ஞாபகமூட்டிக் கொண்டிருக்கிறது.

பக்கத்தில் ஏதாவது ஹோட்டல் இருக்காதா என்று சுற்றிப் பார்த்தேன். மருந்துக்கும் ஒன்றில்லை. கோயிலின் பக்கத்திலே தாழ்வாரத்தில் மிட்டாய் வைத்திருந்த சில சாடிகளையும் கரி அடுப்பு ஒன்றையும் பார்த்தவுடன் ஒருவேளை இதுதான் இந்த ஊர் "ஹோட்டலா" யிருக்கலாமோ என்ற சந்தேகத்துடன் போய் எட்டிப் பார்த்தேன். நான் நினைத்தது சரிதான். ஒரு கிழவர் உட்கார்ந்து குளிர் காய்ந்துகொண்டிருந்தார். "சாயா ஹை?" என்று எனக்குத் தெரிந்த ஹிந்தியில் தேநீர் கிடைக்குமா என்று கேட்டேன். கிழவனர் ஏதோ முணு முணுத்துக்கொண்டே அடுப்பைச் சரிப்படுத்தினர். ஒரு பாத்திரத்தில் நீரையும் பாலையும் சிறிது தேயிலையையும் சர்க்கரையையும் போட்டு அடுப்பில் ஏற்றினர். கால் மணி நேரமாக நன்றாகக் கொதித்து அவியவிட்டு, நல்ல தடித்த ஒரு கஷாயம் போட்டு இறக்கினர்.

வடநாட்டிலே பிரயாணம் செய்யும் தென்னாட்டுத் தமிழர் அங்கே காப்பி கிடைக்கு மென்று எதிர் பார்க்கலாகாது. எங்கு பார்த்தாலும் "சா.....சா" என்ற கானம்தான் கேட்கும். அது தேநீரல்ல, "தேயிலைச் சாயம்" என்றுதான் பொருள். தேநீர்ப் பானம் தயாரிக்கும் விதம் வடநாட்டிலே, முக்கியமாகக் கிராமப் புறங்களில், ஒரு தினுசாயிருக்கும். தேயிலை, நீர், பால், சர்க்கரை—சில வேளைகளில் வேறு சில மசாலைச் சாமான்கள்—எல்லாம் போட்டு அவியவிட்டு ஒரு கஷாயமாக இறக்குவார்கள்.

தேநீரைச் சாப்பிட்ட பின்னர் கபிலவஸ்து எங்கே யென்று தேடும் படலத்தை யாரம்பித்தேன். அக்கம் பக்கத்திலுள்ள எவருக்கும் எனது நோக்கத்தை விளங்கவைக்க என்னால் முடியவில்லை. அவர்கள் சொல்வதை என்னால் கிரகித்துக்கொள்ளவும் முடியவில்லை. யாராவது அந்தக் கிராமத்தில் ஆங்கிலம் தெரிந்தவர்கள் இருக்கிறார்களா என்று தேடி ஐந்தாறு பேரை விசாரித்தபோது யாரோ ஒருவர் சாஸ்திரி என்ற பெயரோடு ஒரு தெருவின் கோடியில் வசிக்கிறார் என்று அறிந்துகொண்டு, சாஸ்திரியைத் தேடிப் போனேன். ஒரு குடிசையின் வெளித் திண்ணையில் கயிற்றுக் கட்டில் ஒன்றிலே சுமார் அறுபது வயதுள்ள ஒல்லியான மனிதர் ஒருவர் கையிலே ஹிந்திப் பத்திரிகை யொன்றை வைத்துப் படித்துக்கொண் டிருந்தார். அவருக்குப் பக்கத்தில் ஐந்தாறு பழைய புத்தகங்கள் பரவிக் கிடந்தன. அதில் ஒரு புத்தகம் விரிந்து கிடந்ததால் அது "ஸாங்கிய தர்ஸனம்" என்று சமஸ்கிருதத்திலுள்ள பெயரைக் காண்பித்தது. இன்னொரு பக்கத்தில் ஒரு சிறு பெட்டி. அதன் மீது சில கற்களும், உடைந்த சிப்பிகளும், நாலைந்து செங்கல் துண்டுகளும், புராதன செப்பு நாணயங்களும் உலோகத் துண்டுகளும் காணப்பட்டன. ஒரு பாழடைந்த குடிசையில் தன்னந் தனியே யிருந்து மந்திர தந்திரங்கள் பயிலும் மாயவித்தைக்காரரோ என்றுதான் அவரைப் பார்த்தவுடன் சந்தேகம் தோன்றியது!

"தாங்கள்தான் மிஸ்டர் சாஸ்திரியோ?" என்று நான் அவரைப் பார்த்துப் பணிவுடன் ஆங்கிலத்தில் கேட்டேன்.

"ஆமாம். உட்காருங்கள். என்னைத்தான் சாஸ்திரி என்று இங்குள்ளவர்கள் அழைப்பார்கள். கிருஷ்ணசந்த்ர சாஸ்திரி என்பது எனது பெயர். பள்ளிக்கூட வாத்தியாரா யிருந்து இப்போது ஓய்வு பெற்றிருக்கிறேன். தங்களுக்கு என்ன வேண்டி யிருக்கிறது? எங்கிருந்து வருகிறீர்கள்?" என்று தெளிவான ஆங்கிலத்திலேயே பதிலளித்து அளவுகடந்த பரிவோடு உபசரித்தார். கபிலவஸ்துவைத் தேடி நான் வந்த விவரத்தைச் சொல்லி அதைப்பற்றிய தகவல்கள் ஏதாவது தெரிந்துகொள்ளலாமா என்று கேட்டபோது சாஸ்திரியின் முகம் மலர்ந்தது. அவர் சொன்னார்:

"இந்தக் கிராமமேதான் கபிலவஸ்து! கடந்த பதினைந்து வருட காலமாக நான் இங்கு வசித்து, புராதன கபிலவஸ்து நகரம் சம்பந்தமாக ஆராய்ச்சி செய்துகொண் டிருக்கிறேன். தொல்பொருளாராய்ச்சிக் கலைதான் எனது சொந்தப் பிரீதி. பௌத்த மத நூல்களைக் கற்றுவிட்டு, இந்தக் கபிலவஸ்துவைப் பற்றி ஓர் ஆராய்ச்சி நூல் எழுதி வருகிறேன்."

இந்த வார்த்தைகளைக் கேட்டதும் எனக்கு அவ்வேளையில் ஒரு புதையலைக் கண்டெடுத்தது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது. எனது கஷ்டமான பிரயாணத்துக்கு இப்போது கைமேற் பலன் கிடைத்தது. சாஸ்திரி தமது இளம் வயதிலே பௌத்த பிக்குவாக வேண்டு மென்று பல இடங்களைத் தரிசித்துவிட்டு இலங்கையில் கொழும்பு நகரத்திலுள்ள வித்யோதய மடத்தில் சேர்ந்தாராம். ஆனால் வாலிப வயதிலிருந்த ஆசைகளைத் துறக்க முடியாமலும், மடத்தின் கட்டுப் பாடுகள் கடுமையா யிருந்ததாலும் அவர் மடத்தைவிட்டு எவரு மறியாமலே ஓடிப் போய்விட்டாராம். இப்போது பழையபடியும் பௌத்தப்பற்று ஏற்பட்டுவிட்ட தென்று தெரிவித்தார்.

மேலும் அவர் சொன்னார்: "புத்த கயாவைப்பற்றியும் சார நாத்தைப் பற்றியும் சாஞ்சியைப்பற்றியும் நூற்றுக் கணக்கான ஆராய்ச்சி நூல்கள் எழுதப்பட்டிருக்கின்றன. ஆனால் கபிலவஸ்து வைப்பற்றி ஒரு புத்தகம்கூட இல்லை. ஒரு யாத்திரிகராவது இந்தத் திசையை எட்டியும் பார்ப்பதில்லை. நேபாள அரசாங்கம் காட்டும் அசிரத்தைதான் இதற்குக் காரணம். இங்கிருந்து ஒரு மைல் தூரத் திலே சித்தார்த்தர் வசித்த மாளிகையின் அஸ்திவாரங்கள் புதை யுண்டு கிடக்கக் காணலாம். இங்கிருந்து எட்டு மைல் சுற்றளவில் நாற்புறமும் நிலத்தை வெட்டிப் பார்த்தால் புராதன செங்கற் கட்டிடங்களைக் காணலாம். சாக்கிய மன்னரும் மற்றும் பிரபுக் களும் கட்டி யெழுப்பிய மாட மாளிகைகளும் கூட கோபுரங்களும் இந்தக் கபிலவஸ்துவில் மண்ணோடு மண்ணாய்ப் புதையுண்டு கிடக் கின்றன. இதோ பாருங்கள், நான் சேகரித்து வைத்திருக்கும் செப்புக் காசுகளை! இவை மொகஞ்சதரோ ஹரப்பா நாகரிகத்தை நினைவூட்டவில்லையா? இவற்றையெல்லாம் நான் இந்தக் கிராமத்தி லிருந்துதான் சேகரித்தேன்" என்று பெருமிதத்துடன் விளக்கினார் கிருஷ்ணசந்த்ர சாஸ்திரி.

★

னது சிந்தனை இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன் னிருந்தபாரதத்தின் வட எல்லையை ஒரு தரம் எட்டிப் பார்த்தது. கி. மு. ஆறாவது நூற்றாண்டிலே கோசலம், மகதம் என்ற இரு ராஜ்யங்கள் வட இந்தியாவில் மிகுந்த செல்வச் செழிப்புடன் விளங்கின. கோசலத்துக்கு சிராவஸ்தி தலைநகரா யிருந்தது. மகதத்துக்கு இராஜகிருகம் தலைநகர். இவ்விரு ராஜ்யங்களிலும் ஏற்கெனவே வடமேற்குத் திசையில் குடியேறிய ஆரியரின் கொள்கைகளும் நாகரிகமும் பரவி யிருந்தன. மற்றைய ராஜ்யங் களுடன் வியாபாரம் முதலிய உறவுகள் அதிகரித்ததால் செல்வம்

செழித்திருந்தது. கோசலத்துக்கு வடக்கே சாக்கியர், கோலியர் என்ற இரு வகுப்பு மக்கள் குறுநில மன்னர் ஆட்சியில் வாழ்ந்து வந்தனர். ஒரு காலத்தில் இவர்களும் தனி ஆட்சியிலிருந்து, பின்னர், கோசலத்தின் ஆதிக்கத்தில் அகப்பட்டுத் திறை கொடுத்து வந்தனர். இவர்களைப் போலவே மகதத்துக்கு விரிஜி என்ற நாட்டவரும் திறை கொடுத்து வந்தனர். விரிஜிக்கு அயலிலே கோலியருக்குத் தெற்குத் திசையில் மள்ளர் என்ற வகுப்பினர் வாழ்ந்து வந்தனர். சாக்கியருடைய தலைநகர்தான் கபிலவஸ்து.

இமயமலைச் சாரலில் வசித்த சாக்கியர் சாக விருக்ஷங்கள் (தேக்க மரங்கள்) அடர்ந்த பிரதேசத்தில் வாழ்ந்த காரணத்தால் சாக்கியர் என்ற பெயரைப் பெற்றார்கள் என்று சொல்லப்படுகிறது. இவர்கள் தம்மைச் சூரிய குலத் தோன்றல்கள் என்றும் இக்ஷ்வாகு பரம் பரையில் வந்தவர்கள் என்றும் சொல்லிக்கொண்டார்கள். இந்தச் சாக்கிய வம்சத்தைப் பற்றியும் அவர்கள் கபிலவஸ்துவில் குடியேறிய வரலாறுபற்றியும் ஒரு ரஸமான கதையுண்டு. பௌத்த நூலாகிய தீர்க்க நிகாயத்துக்கு பாலி மொழிப் புலவர் புத்தகோஷாச் சாரியார் எழுதிய வியாக்கியானத்திலே இந்தச் செய்தி காணப்படுகிறது.

கோசலத்தை அரசாண்ட இக்ஷ்வாகு மன்னனுக்கு ஆண் குழந்தைகள் நால்வரும் பெண்கள் ஐவரும் பிறந்த பின் மனைவி இறந்து போனாள். இரண்டாந் தாரமாக மிக அழகுள்ள ஒருத்தியை அவன் மணந்துகொண்டான். அவளுக்கு ஒரு பையன் பிறந்தவுடன் அரசன் உவகை மேலீட்டால், "செல்வப் புதல்வனைப் பெற்ற உனக்குப் பரிசாக ஒரு வரம் கொடுக்கத் தீர்மானித்திருக்கிறேன். விரும்பிய சமயம் உனது மனத்துக்குப் பிடித்ததைக் கேள்" என்று வாக்குக் கொடுத்துவிட்டான். இளைய ராகிய அந்தப் பட்டத்தரசி தனது பந்துக்களுடன் ஆலோசனை செய்விட்டு, "தாங்கள் வாக்குறுதி கொடுத்துள்ளபடி ஒரு வரம் கேட்கிறேன். தங்கள் ராஜ்யத்தை எனது மகனுக்குக் கொடுங்கள்" என்றாள். மன்னன் இதைக் கேட்டதும் பேரிடி விழுந்தவன்போல் துடித்தான். "பெண்ணே, என்ன காரியம் செய்யத் துணிந்தாய்? தாயில்லாக் குழந்தைக ளாகிய ஒன்பது பேரையும் தெருவில் நிற்கச் சொல்கிறாயா? பட்டத்துக்குரியவர்கள் மூத்த சகோதரர்க ளல்லவா?" என்று சினந்தான். ஆனால் அரசி பிடிவாதமாக, "மன்னவன் வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும்" என்று வாதித்தாள். முடிவில் இக்ஷ்வாகு மன்னன் தனது மூத்த புதல்வர்களை யழைத்து, "மக்காள்! உங்கள் தம்பி பிறந்தவுடன் சிறிய தாயாருக்கு ஒரு வரம் கொடுத்தேன் அதை நிறைவேற்றவேண்டி எனது ராஜ்யத்தை உங்கள் தம்பிக்கே

கொடுக்கிறேன். ஆகையால், உங்களுக்கு வேண்டிய பணியாட்கள், வாகனங்கள், யானைகள், குதிரைகள் எல்லாவற்றுடனும் நீங்கள் இந்நாட்டை விட்டு வெளியேற வேண்டிய நிர்ப்பந்த மிருக்கிறது. ஆனல் நான் இறந்த பின்னர் நீங்கள் என்ன வேண்டுமானலும் செய்யலாம். திரும்பி வந்து ராஜ்யத்தைக் கைப்பற்றிக் கொள் ளுங்கள்" என்ருன்.

தேசப்பிரஷ்டம் செய்யப்பட்ட ராஜபுத்திரர்கள் தமது பரிவாரங் களுடன் இமயமலைச் சாரலை யடைந்தனர். அங்கே யவர்கள் காட்டின் புறத்தே யுட்கார்ந்துகொண்டு ஆலோசனை செய்தார்கள். "நமக்கோ படை முதலிய சகல வசதிகளும் கையிலிருக்கின்றன. ஆகையால் எந்த ஒரு நாட்டையும் எளிதில் போரிட்டுக் கைப்பற்றி விடலாம். ஆனல், வீணுகப் போரிட்டுத் துன்பத்தைத் தேடிக் கொள்வதைவிட, இந்தப் பரந்த காட்டிலேயே ஒரு புதிய நகரத்தை நிருமாணித்துச் சுதந்திரமாக வாழ்ந்தா லென்ன?" என்று தீர்மானித் தனர். இங்ஙனம் முடிவு செய்துகொண்டு ராஜபுத்திரர்கள் அந்தக் காட்டிலே புதிய நகர மொன்றைச் சிருஷ்டிக்க வாய்ப்பான இடமெங்கே யிருக்கிற தென்று தேடி வரும் வழியில் ஒரு தடாகத்தின் கரையில் ஆசிரமம் ஒன்றிருக்கவும், அதிலே ஒரு முனிவர் தவத்திலிருக்கவும் கண்டு அதிசயத்தோடு சென்று அம்முனிவரை வணங்கினர்.

ராஜபுத்திரரின் வரலாற்றை விசாரித்தறிந்த முனிவர் மகிழ்ச்சி யடைந்து "மக்காள்! எனது பெயர்தான் கபிலர் என்பது. எனது இந்தச் சிறு குடிசையிருக்கும் இந்த ஸ்தலத்தின் அயலிலே எத்தகைய கொடிய வன விலங்குகள் புகுந்தாலும் உடனே மூர்க்கக் குணம் மாறிச் சாதுவாகி விடுகின்றன. ஆகையால், நீங்கள் தேடி வந்த நல்ல ஸ்தலம் இந்தக் குடிசைதான். இந்த இடத்திலேயே உங்கள் அரண்மனையைக் கட்டி நகரத்தை நிருமாணித்துக் கொள்ளுங்கள். மிக விரைவிலே இந்த ஆரண்யம் சகல சிறப்பும் பெற்று மற்றைய நாட்டு மன்னர்கள் பார்த்து அதிசயிக்கத்தக்க ஒப்பற்ற நகரமாகி, ஒரு காலத்திலே சர்வ லோகத்தையும் ஒரு தனிக் குடைக்கீழ் ஆட்சி செலுத்தும் சக்கரவர்த்தி ஒருவன் இங்கு தோன்றுவான். என்னைப்பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம். அந்த மலைச் சாரலில் எனக்கு ஒரு பர்ணசாலை மாத்திரம் கட்டிக் கொடுங்கள். இந்த ஆசிரமத்தையே உங்கள் அரண்மனையாக நிருமாணியுங்கள்" என்று கபில முனிவர் சொன்னர்.

ராஜபுத்திரர்களும் மன மகிழ்ந்து புதிய நகரத்தை நிருமாணித்து, கபிலர் வாழ்ந்த இடமாகையால் அந்நகரத்துக்குக் கபிலவஸ்து என்று பெயரிட்டனர்.

நாட்கள் பல சென்றன. ராஜபுத்திரர்கள் நால்வரும் சகோதரிகள் ஐவருமாகத் தமது புதிய நகரத்தில் வாழ்ந்து வரும் போது மந்திரிகள் ஆலோசித்து ராஜபுத்திரர்களுக்கு மணம் செய்து வைக்க வேண்டுமென்ற விருப்பம்கொண்டு அழகும் குணமும் குலமும் பொருந்திய பெண்களாகப் பார்த்துத் தேடச் சென்றனர். ஆனல், சூரிய குலத்தில் பிறந்த க்ஷத்திரியப் பெண்கள் ஒருவராவது அகப் படவில்லை. இதைக் கேட்ட ராஜபுத்திரர்கள் ஒரு முடிவுக்கு வந்தனர். "கையில் வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்க்கு அலைய வேண்டுமா? சூரிய குலமும் க்ஷத்திரிய இரத்தமும் ஒருங்கமைந்த பெண்கள் நமது சொந்தச் சகோதரிகளைத் தவிர வேறு யார் இருக்கப் போகிறார்கள்? ஆகையால், நாம் நமது சகோதரிகளையே மணந்து கொண்டால் க்ஷத்திரிய இரத்தத்தைப் பேணலாம்" என்று தீர்மானித் தனர். யாவரும் இந்த ஏற்பாட்டை ஆமோதிக்கவே ராஜபுத்திரர்கள் நால்வரும் தமது சகோதரிகள் ஐவரில், மூத்தவளைத் தாயாக வைத்துக் கொண்டு, மற்றைய நால்வரையும் மனைவியராக்கிக் கொண்டனர். அதிலிருந்து உற்பத்தியானவர்களே சாக்கிய மரபினர் என்பது கதை.

பௌத்த மத சம்பந்தமான புராதன இலக்கியங்களிலும் புராணங்களிலும் இராமாயணக் கதையில் வரும் சம்பவங்கள் பல காணப்படுகின்றன. கோசல மன்னன் தசரதன் இராமனை வனத்துக்கு அனுப்பிவிட்டுப் பரதனுக்குப் பட்டம் சூட்டிய கதை போன்றதே இந்தக் கதையும். ஸ்ரீராமன் மூதாதையும் சூரிய குலத் தோன்றலாகிய இக்ஷ்வாகு என்றுதான் சொல்லப்படுகிறது. சகோதர சகோதரிகள் ஒருவரையொருவர் மணம் புரிந்து கொள்வது அந்தக் காலத்துச் சமூக நிலையில் காணப்பட்ட ஒரு வழக்கம்தான்.

மேலே சொன்ன விதமாகத் தோன்றிய சாக்கிய மரபில் வந்த ஒரு மன்னனின் பெயர் ஜயசேனன். அவனுக்குச் சிம்மஹனு என்ற ஒரு புதல்வனும் யசோதரை என்ற ஒரு புதல்வியு மிருந்தார்கள். சிம்மஹனுவுக்கு சுத்தோதனன், சுக்லோதனன், தௌதோதனன், சகலோதனன், அமிதோதனன் என்ற ஐந்து புதல்வர்களும், அம்ருதை, பிரமிதை என்ற இரு புதல்வியரும் இருந்தார்கள். சிம்மஹனுவின் சகோதரி யசோதரை கோலிய நாட்டில் தேவதாகம் என்ற நகரத்துக் கதிபதியா யிருந்த அஞ்சனன் என்பவனை மணந்து தண்டபாணி, சுப்பிரபுத்தன் என்ற இரு புதல்வர்களையும், மாயாதேவி, மகா பிரஜாவதி என்ற இரு புதல்வியரையும் பெற்றெடுத்தாள்.

கபிலவஸ்துவுக்கு அரசனாயிருந்த சுத்தோதனன் தனது அத்தை புதல்விகளாகிய மாயாவையும் பிரஜாவதியையும் தனக்கு மனைவி

யராக்கிக் கொண்டான். மூத்தாளாகிய மாயாதேவியே பட்ட மகிஷி. இவள் வயிற்றிற் பிறந்தவர்தான் புத்தராக வந்த சித்தார்த்தர் என்பது வரலாறு. மாயாதேவி கருப்பவதியான வரலாறு பற்றியும் சித்தார்த்தர் பிறப்புப்பற்றியும் பல விசித்திர மான கதைகள் புராணங்களில் காணப்படுகின்றன.

மாயாதேவிக்கு நெடுங்காலமாகப் பிள்ளைப்பேறு கிடைக்க வில்லை. எத்தனையோ நோன்புகளை நோற்றாள். தெய்வங்களை வழிபட்டாள். புத்திர பாக்கியம் கிட்டவில்லை. முடிவில் அவள் வாழ்க்கையைத் தவத்திலும் விரதத்திலும் ஈடுபடுத்தி நாற்பத்தைந் தாவது வயதாயிருக்கும்போது தேவலோகத்தில் சில சம்பவங்கள் நிகழலாயின. வானவர் வசிக்கும் முப்பத்திரண்டு லோகங்களி லொன்றுகிய துஷித லோகத்தில் இருந்தாற் போலிருந்து தேவர்கள் யாவரும் ஆனந்தக் களிப்பி லாழ்ந்தனர். முன்னொரு பிறவியில் அந்தணனாய்ப் பிறந்த சுமேதர் என்பவர் இல்லறத்தி லிருந்து சந்நியாசம் வாங்கித் தவத்தி லிருந்தபோது தீபங்கரர் என்ற பழைய புத்தரின் தரிசனம் கிடைத்தது. அவருடைய அருளால் சுமேதர் கௌதம போதிசத்துவராகித் துஷித லோகத்தில், புத்தாவதாரம் எடுக்கவேண்டிய சமயம் வரும்வரை காத்திருந்தவருத்து, தேவர்களின் இந்த ஆனந்தக் களிப்பு என்னவென்று விளங்கவில்லை தேவர்க ளெல்லாம் அவரை வணங்கி, "ஐயனே! மண்ணுலகில் தீமைகள் அகன்று தர்மம் தழைத்தோங்கத் தாங்கள் புத்தாவதாரம் எடுக்க வேண்டிய் சமயம் வந்து விட்டது," என்று ஆர்ப்பரித்தார்கள். போதிசத்துவர் உடனே எவ்வித விடையும் கூறுமல் புத்தாவதாரம் எடுக்க ஐவகையான பொருத்தங்களும் கூடிவிட்டனவா என்று ஆராய்ந்து பார்த்தார்.

புத்தராக மண்ணுலகில் வந்து பிறவி யெடுப்பதற்கு ஐவகைப் பொருத்தங்கள் அமையவேண்டு மென்பது நியதி. முதலாவது காலப் பொருத்தம்: கல்பாரம்பத்தின் முதல் பகுதியிலே மனித வர்க்கத்தின் ஆயுட்காலம் நூறுயிரம் ஆண்டுகள் என்று சொல்லப் பட்டிருக்கிறது. அத்தகைய நீண்ட ஆயுளை அனுபவிக்கும் மக்கள் மரணத்தைப்பற்றியும் விருத்தாப்பியத்தைப் பற்றியும் விசாரம் கொள்ளமாட்டார்க ளாகையால் அந்த அவஸ்தைகளைப்பற்றி உப தேசிக்கவேண்டிய அவசியம் ஏற்படாது. கல்ப காலத்தின் இறுதிப் பாகத்தில் மனிதப் பிறவியின் ஆயுட்காலம் மிகக் குறுகியதா யிருக்கும். ஞானசிரியராகத்தோன்றும் ஒருவர் மக்கட் பிறவி யெடுத்து, இல்லறம் நடத்திப் பின்னர் துறவு பூண்டு, ஞானோதயம் பெற்றுப் புத்தராகி, அதன் பின்னரே தர்மோபதேசம் செய்ய

வேண்டு மென்பது நியதி. ஆகையால் அதற்கு வேண்டிய காலப் பரப்பு கல்ப காலத்தின் கடைக்கூற்றிலே கிடைக்காது. எனவே கல்ப காலத்தின் இறுதிப்பாகத்திலும் புத்தர் தோன்ற மாட்டார்.

ஆகையால், போதிசத்துவர் துஷித லோகத்திலிருந்து காலப் பொருத்தத்தைக் கணக்கிட்டுப் பார்த்தார். மக்கள் நூறுண்டு வாழும் பெற்றியுடைய காலமா யிருக்கக் கண்டு காலப் பொருத்தம் சரியெனத் தீர்மானித்தார். பின்னர் பொருத்தமான கண்டம் எது என்று பார்த்து, ஜம்புத்துவீபத்தில் பரத கண்டமே சிறந்ததென்று தீர்மானித்தார். மூன்றுவதாக, நாட்டுப் பொருத்தம் பார்த்து மத்திய தேசமாகிய உத்தரகோசலம்தான் சிறந்ததென்று கண்டார். நான்காவதாக, நகரப் பொருத்தம் பார்த்து கபில முனிவர் வாழ்ந்த கபிலவஸ்துவே உத்தமம் என்று எண்ணினர். ஐந்தாவதாக, க்ஷத்திரிய குலத்தில் மிகச் சிறந்த பண்புகள் நிறைந்த குடும்பம் எதுவென்று ஆராய்ந்து பார்த்து சகல குணச் சிறப்பும் பொருந்திய மாதர்க்கரசி, சுத்தோதனன் மனைவி மாயாதேவியின் வயிற்றில் பிறப்பேன் என்று முடிவு செய்தார்.

உடனே போதிசத்துவ கௌதமர் தேவர்களைப் பார்த்து, "நீங்கள் அகமகிழ்வது போலப் புத்த ஞாயிறு தோன்றுவதற்குரிய சமயம் வந்துவிட்டது. உத்தரகோசலத்தில் கபிலவஸ்து நகரத்திலே மாயாதேவி வயிற்றில் கருவுற்றுப் பிறக்க நான் முடிவு செய்து விட்டேன்" என்று கூறினர். தேவர்கள் மன மகிழ்ந்து வாழ்த் தினர்கள். பின்னர் போதிசத்துவர் தமது ஸ்தானத்தில் அடுத்த புத்தராகப் பிறப்பதற்கு மைத்திரேய போதிசத்துவரை நியமித்து விட்டுத் துஷிதலோகத்தி லிருந்து பூமியை நோக்கி வந்தார் என்பது புராணக் கதை.

★

ஆடி பிறந்தது.

கபிலபுரத்து நெல்வயல்களில் உழுதுண்டு வாழும் மக்கள் "ஆடிப் பருப்புத் தேடி விதை" என்ற பழமொழிக் கிணங்க ஆடி பிறந்ததும் மட்டற்ற மகிழ்ச்சி கொண்டார்கள். ஆடி மகோற்சவம் என்ற சிறந்த விழா எடுத்தார்கள். உழவர் யாவரும் பயிர்த் தொழிலுக்கான ஆயத்தங்களில் ஈடுபட்டிருக்கப் பெண்பாலர் எல்லோரும் ஆடி நோன்பு அனுஷ்டித்தனர். இந்தக் காலத்தில் கூட ஆடி மாதத்திலே பெண்கள் கணவருடன் சுகித்திருக்கலாகாது என்ற ஒரு கொள்கை இருக்கிறதல்லவா? அந்த வழக்கத்தின் பிரகாரம் சுத்தோதனன் மனைவி மாயாதேவியும் மற்றைய குடும்பஸ்திரீகளைப் போல ஆடிநோன்பனுஷ்டித்தாள். பூரணதினத்துக்கு ஏழு நாள் முன்ன

தாகவே கணவனைப் பிரிந்துறைந்து, காமம் வெகுளி மயக்கம் என்ற முக்குற்றங்களையும் கடிந்து ஏழு நாள் விரதம் காத்து, ஏழாவது நாளாகிய பூரணை தினத்திலே அதிகாலையில் நீராடித் தூய ஆடை யணிந்து, கோயிலுக்குப் போய் வழிபாடு செய்தபின் ஏழைகளுக்குத் தானம் வழங்கினள். அன்றிரவு தனது விரதம் நற்பலனை யளிக்க வேண்டுமென்று உள்ளத்தில் தியானித்துக்கொண்டே படுக்கைக்குச் சென்றவள் என்றுமில்லாத விதமாக அதியற்புதமான ஒரு கனவைக் கண்டாள்.

நாற்றிசைப் பாலகர்களான நான்கு தேவர்கள் தோன்றி மாயா தேவியைக் கட்டிலுடன் தூக்கிச் சென்று ஹிமாசலச் சாரலில் ஒரு நந்தவனத்தில் வைத்தனர். பின்னர் அத்தேவர்களின் பத்தினிமார் வந்து பரிமளத் திரவியங்கள் கலந்த நன்னீரால் மஞ்சனமாட்டி வெண் பட்டாடை அணிவித்து அழகிய மலர் கொண்டு அலங்கரித் தனர். அதன் பின் அவளை வெண்கட்டில் ஒன்றிலே தலைப்பக்கம் கிழக்குத் திசை நோக்கி யிருக்கும் வண்ணம் படுக்க வைத்தனர். அச்சமயம் வானவீதியி லிருந்து அதியற்புதமான வெள்ளை யானை யொன்று இறங்கி வந்தது. ஆறு கொம்புகளை யுடைய வெண் யானை தனது துதிக்கையில் ஒரு வெண்டாமரை மலரை வைத்து வீசிக்கொண்டு வந்து மாயாதேவியின் கட்டிலைச் சுற்றி மும்முறை வலம் வந்தது. பின்னர் வலப்பக்கம் வந்து நின்று அம்மலரால் மாயாதேவியின் வலது பாரிசத்தில் ஒரு தரம் தட்டிவிட்டு அவள் உதரத்துள் புகுந்துகொண்டது. மாயாதேவி திடீரென விழித்தாள்.

இந்த விசித்திரமான கதைக்கு ஒரு விளக்க மிருக்கிறது. மாயாதேவி வயிற்றில் புருஷ சம்பந்தமாகப் போதிசத்துவர் தோன்ற வில்லை யென்பதும், அவள் நோன்பிருந்த காலத்தில் சுத்தோதனன் பிரிந்திருக்கப் போதிசத்துவர் தேவபிண்டமாக வந்து கருவானார் என்பதும் பொருள். மரியாள் வயிற்றிற் பிறந்த ஏசுநாதரும் இங்ஙனமே தேவபிண்டமாக உற்பத்தியானர்.

இக்கனவைக் கண்டு மட்டற்ற மகிழ்ச்சி யடைந்த மாயாதேவி மறுநாட் காலையிலேயே தன் கணவன் சுத்தோதனனுக்குச் சொல்லி யனுப்பினள். இதில் ஏதோ விசேஷ மிருக்கிறது என்று கண்ட மன்னன் உடனே நிமித்திகரை வரவழைத்துக் கனவின் பலனைச் சொல்லுமாறு கேட்டான். நிமித்திகர் சொன்னார்கள்: "மன்னவ! அற்புதமான கனவு இது. தேவியாரும் தாங்களும் மகா புண்ணியம் செய்தவர்கள். இத்தனை ஆண்டுகளாகப் புத்திரப் பேறில்லாதிருந்த தங்களுக்கு இப்போது ஒரு சற்புத்திரன் பிறக்கப் போகிறான். தேவியார் கருவுற்றிருக்கின்றார். அவர் வயிற்றிற் பிறக்கும் மகன்

சர்வ லோகத்துக்கும் நாயகனாக விளங்குவான். சாக்கிய மரபு தழைப்பது மாத்திரமல்ல, தங்கள் செல்வப் புத்திரன் சக்கரவர்த்தியாகி மன்னாதி மன்னரையெல்லாம் அடி பணியச் செய்து வாழ்வான்" என்று பலன் சொன்னார்கள்.

இங்ஙனம் மாயாதேவியின் கனவுக்குப் பலன் கூறிய மறையோர் யாவருக்கும் மன்னவன் பொன்னும் மணியும் பட்டு வஸ்திரங்களும் பரிசிலாக வழங்கினன். கபிலவஸ்து நகரெங்கும் இந்த நற்செய்தி விரைவிலே பரவியது. பட்டத்துக்கு இளவரசரில்லாமல் கவலை கொண்டிருந்த நாட்டுக்கு இப்போது ஒரு செல்வன் பிறக்கப் போகிறான் என்ற செய்தி பெருமிதமளித்தது. கொட்டு மேளங்கள் முழங்கின. ஆடி விழா மிக உற்சாகமாகக் கொண்டாடப்பட்டது. வீட்டுக்கு வீடு தானமும் தருமமும் காட்சியளித்தன.

தாமரை யிலையில் தண்ணீர்போல மாயாதேவியின் வயிற்றிலே போதிசத்துவக் கரு ஒட்டாமல் உறையாமல் தனித்திருந்து வளர்ந்தது. சாதாரணமாக மற்றைய பெண்களுக் கேற்படும் வயாவும் வருத்தமும் மாயாதேவிக்கு உண்டாகவில்லை. ஒளி நிறைந்த மேனியோடு மாயாதேவி தன் தெய்வச் சிசுவைப் பேணிக்கொண்டு நல்லறம் காத்துத் தூய வாழ்வு நடத்தி வந்தாள்.

பத்தாவது மாதம் நிறைவுறும் சமயம் மாயாதேவி தன் கணவனிடம் தாம் தந்தையின் ஊராகிய தேவதாக நகரத்துக்குச் சென்று தமது பெற்றோரின் அரண்மனையிலேயே தாயார் துணையிருக்கப் பிரசவிக்கவேண்டுமென்ற விருப்பத்தைத் தெரிவித்தாள். தலைப் பிரசவத்துக்கு ஊர் வழக்கத்திலிருந்து மாறுபடலாகாதென்று கருதிய மன்னன் சுத்தோதனனும் ஆகவேண்டிய ஏற்பாடுகளைச் செய்து வைத்தான். பொற்பல்லக்கு ஒன்று ஆயத்தமானது. தாதியரும் மற்றும் பரிவாரங்களும் சித்தமாயினர். கபிலவஸ்துவிலிருந்து தேவதாக நகரத்துக்கு இருபது மைல் தூரம் பிரயாணம். சாலை நெடுகிலும் புது மணல் விரித்துப் புஷ்பம் சொரிந்து இருமருங்கும் வாழைகள் நாட்டிப் பூரண கும்பங்களெடுத்துத் தேவியாரின் மனத்துக்கும் கண்ணுக்கும் நிறைவு பொலியச் செய்யுமாறு அரசன் கட்டளை பிறப்பித்தான். சகலவிதமான மங்கல வாத்தியங்கள் ஒலிக்க, குடை கொடி ஆலவட்டம் முதலிய விருதுகளுடன் மாயாதேவியின் பரிவாரம் கபிலவஸ்துவிலிருந்து தேவதாக நகரத்துக்குப் புறப்பட்டது.

★

கபிலவஸ்துவில் நண்பர் கிருஷ்ண சந்த்ர சாஸ்திரியுடன் பேசிக் கொண்டிருக்கையில் பொழுது போனதே தெரியவில்லை. "வெயில்

ஏறுவதற்கு முன்பு இங்குள்ள புராதன சின்னங்களைப் பார்த்துவிட்டு வருவோமா?" என்று சொல்லி சாஸ்திரி அழைத்தார். அப்படியே பார்த்துவிடுவோம் என்று சொல்லிக்கொண்டு இருவரும் கிளம்பினோம். புறப்படும்போது சாஸ்திரி, "இந்த ஊரிலே மங்கள்மான் வஜ்ராச்சார்யா என்ற பெயருள்ள ஒரு நேபாள நண்பர் இருக்கிறார். பௌத்த மதத்தில் நிறைந்த பற்றுள்ளவர். தம்மிடமிருந்த ஏராளமான சொத்துக்களை யெல்லாம் புத்த வித்யாபீடம், புத்த பத்ம உயர்நிலைப்பள்ளி ஆகிய இரு ஸ்தாபனங்களுக்கும் தானம் செய்துவிட்டுச் சீல வாழ்க்கை நடத்தி வருகிறார். தங்கமான மனிதர். இந்த ஊருக்கு விருந்தினர் எவர் வந்தாலும் அவரிடமிருந்து தப்பிப் போக முடியாது. அவரை நீங்கள் அவசியம் பார்க்கவேண்டும்," என்று சொல்லி என்னை வஜ்ராச்சார் யாவிடம் அழைத்துச் சென்றார்.

சாஸ்திரி சொன்னது போலவே மங்கள்மான் வஜ்ராச்சார்யா என்ற அந்த நேபாளப் பெரியார் தங்கமான மனிதராகத்தான் காணப்பட்டார். குணத்தில் மாத்திரமல்ல, உருவ அமைப்பிலும், மேனி அழகிலும் உருக்கி வார்த்த தங்கம்போ லிருந்தார். ஆசார சீலராய் அமைதியாக வாழ்க்கை நடத்திவரும் அவர் தமது பெரிய வீட்டின் ஒரு பகுதியில் மாத்திரம் தமது குடும்பத்துடன் வசித்து வந்தார். வீட்டின் பெரும் பகுதியையும் யாத்திரிகர்களுக்கும் விருந்தினருக்கும் ஒதுக்கி வைத்ததுடன், மேலும் ஒரு தர்மசாலை கட்டுவதற்குத் திட்டம் போட்டு வைத்திருந்தார். எங்களைக் கண்ட வுடன் அவர் மிகுந்த உற்சாகமும் களிப்பும் கொண்டு பிரமாதமாக உபசரிக்க ஆரம்பித்தார். சுடச்சுடக் கறந்து காய்ச்சிய பசும்பால் கொண்டுவந்து அருந்தும்படி வற்புறுத்தினர். கபிலவஸ்துவைச் சுற்றிப் பார்ப்பதற்கு ஒரு தனி எக்கா வண்டி ஏற்பாடு செய்து தந்தார். பார்த்துவிட்டுத் திரும்பி வந்து தமது இல்லத்திலேயே மத்தியான்னப் போசனம் உண்டுவிட்டுப் போகவேண்டும் என்றும் ஆக்ஞாபித்தார். அவர் சொல்லைத் தட்ட முடியவில்லை.

சாஸ்திரியும் நானுமாகத் தெளலீவா என்று இப்பொழுது வழங்கும் கபிலவஸ்து நகரத்தைச் சுற்றிப் பார்க்கப் புறப்பட்டோம். எங்கு பார்த்தாலும் புராதன செங்கற் கட்டிடங்களின் சின்னங்கள் நிறைந்து காணப்பட்டன. பல மைல் தூர நீள அகலத்தில் மதில் சூழ்ந்த பெரிய தலைநகராக முன்னொருபோது விளங்கிய தென்பதற்கு அடையாளங்கள் தெரிந்தன. வண்டியை நிறுத்தி நிறுத்தி அந்த எல்லைச் சுவர்களின் தடங்களையெல்லாம் சாஸ்திரி சுட்டிக் காண் பித்து வந்தார். சுற்றுப்புறங்களி லெல்லாம் கண்ணுக்கெட்டிய

தூரம் வரையும் ஒரே நெல் வயல்கள். சாக்கிய நாடு உழவர் மிகுத் திருந்த நாடு. நெல்தான் அவர்கள் செல்வமா யிருந்தது. அதனை லேயே சிம்மஹனுவின் பிள்ளைகள் யாவரும் சுத்தோதனன், சுக்லோதனன் என, 'ஓதனம்' என்ற அரிசியின் பெயரைக் கொண் டிருந்தனர் போலும். இமயமலைச் சாரலிலிருந்து இழிந்து வரும் சிறு நீரோடைகள் சிற்றாறுகளாகப் பெருகி நாட்டை வளம் செய்தன. கபிலவஸ்துவின் பக்கத்தில் ரோகிணி என்ற சிற்றாறு ஓடி வந்து ரப்தி என்ற கங்கைக் கிளையுடன் கலக்கிறது. ரோகிணி நதி இப் போது கொஹானா என்ற பெயரில் வழங்கப்படுகிறது. 'நீருயர நெல்லுயரும்' என்ற முதுமொழிக் கிணங்க நாடு செழித்தது. உத்தர கோசலமே வடபாரதத்தின் நெற்களஞ்சியமாக விளங்கியது அந்தக் காலம். கபிலவஸ்துவில் பல பிரபுக்கள் விவசாயச் செல்வத்தின் செழிப்பிலே வாழ்ந்து வந்தனர். மாட மாளிகைகளையும் கூட கோபுரங்களையும் எழுப்பி வைத்தார்கள். சுத்தோதன மன்னனே தனது புதல்வன் சித்தார்த்தருக்கு அலங்கார மாளிகைகள் மூன்று கட்டிக் கொடுத்தான் என்று சொல்லப்படுகிறது. அவை யாவும் இப்போது எங்கே? எல்லாம் தரைமட்டமாகி மண் மேடுகளால் மூடப்பட்டுவிட்டன.

உத்தரகோசலத்தை வளம்படுத்திய ரோகிணியாற்றின் நீர் உரிமை பற்றி சாக்கியருக்கும் கோலியருக்கும் அடிக்கடி பூசல்கள் ஏற்பட்டு வந்தன. புத்தர் காலத்திலேயே அவர் இந்தச் சச்சரவு களைக் கண்டு மனம் நொந்து ஒருமுறை இரு சார்பினரையும் ஒன்று கூட்டிச் சமாதானம் செய்துவைத்ததாக வரலாறு காணப்படுகிறது. இந்தச் சச்சரவுகள் காரணமாகவும் பல அழிவுகள் கபிலவஸ்துவில் ஏற்பட்டன. புத்தர் துறவறம் பூண்டு தருமோபதேசம் செய்துவந்த காலத்தில் சாக்கிய வம்சமே சீரழிந்து போயிற்று. தமக்குப் பின் பட்டத்துக்குரிய மகன் ராகுலனையும் புத்தர் தமது சங்கத்தில் சேர்த்துக் கொண்டார். அவனைத் தொடர்ந்து அரச குடும்பத்தி லுள்ள பலரும் பௌத்த சங்கத்தில் சேர்ந்துகொண்டனர். அச் சமயத்தில் சாக்கிய நாட்டின் பலம் குன்றிப்போ யிருந்தது. கோசல நாட்டின் தலைவனையிருந்த விதூர்த்தபன் என்ற மன்னன் சாக்கிய நாட்டின்மீது படையெடுத்து வந்து கபிலவஸ்து நகரத்தை நிர்மூல மாக்கிச் சாக்கிய வம்சத்தையே அழித்தொழித்தான் என்று சொல்லப்படுகிறது.*

புத்தர் பெருமான் பரிநிர்வாணமடைந்து சுமார் ஆயிரம் ஆண்டு களுக்குப் பின்னால், கி. பி. ஐந்தாம் நூற்றாண்டில், பாஹியன் என்ற

* 20-ம் அத்தியாயம் பார்க்கவும்.

சீன யாத்திரிகன் பாரதத்திலுள்ள பல பௌத்த க்ஷேத்திரங்களுக்கு விஜயம் செய்து தனது யாத்திரைக் குறிப்புக்களை யெல்லாம் சீன மொழியில் எழுதி வைத்துள்ளான். அந்தக் குறிப்புக்களிலே கபில வஸ்துவைப் பற்றிய செய்தியில் அந்த நகரம் ஒரே வனாந்தரமாகக் காட்சியளித்தது என்று கூறியுள்ளான்.

"இந்த நகரத்திலே மன்னரையும் மக்களையும் காண முடிய வில்லை. எங்கும் வனாந்தரமாகக் காட்சி யளிக்கிறது. ஒரு பத்துக் குடிகளையும் துறவிகள் சிலரையும்தான் நான் கண்டேன். புத்த பகவான் வாழ்க்கையில் சில சம்பவங்களை ஞாபகமூட்டும் பல தூபிகளும் இடிந்த கட்டிடங்களும் காணப்படுகின்றன. அசித முனிவர் வந்து சித்தார்த்தரைத் தரிசித்த இடம், சித்தார்த்தர் அரண்மனையைத் துறந்து குதிரையேறிப் போன இடம், மற்றும் பல இடங்களி லெல்லாம் கோபுரங்கள் எழுப்பப்பட் டிருக்கின் றன" என்று பா ஹியன் குறிப்பிட்டிருக்கிறான்.

பா ஹியனுக்குப் பின்னர் இரு நூற்றாண்டுகள் கழித்து ஹியூங் ஸியாங் என்ற மற்றொரு சீன யாத்திரிகன் கபிலவஸ்து நகரத்தைச் சுற்றிப் பார்த்துக் குறிப்புக்கள் எழுதி வைத்தான். அவன் குறிப்புக் களில் பின்வருமாறு சொல்லப்படுகிறது:

"சாக்கிய நாடு சுமார் 4000 லீ (ஒரு லீ 3 மைல்) சுற்றள வுள்ளது. இங்கு பாழடைந்துபோன பத்து நகரங்கள் காணப்படு கின்றன. தலைநகரம் மண்ணோடு மண்ணாய்க் கிடக்கிறது. நகரத் தின் மத்தியிலிருந்த அரண்மனைக் கட்டிடங்கள் செங்கற் கட்டிடங் களாக இருந்தன என்று தெரிகிறது. இப்போது சுமார் 14 அல்லது 15 லீ தூரம் அஸ்திவாரக் கற்கள்தான் காணப்படு கின்றன. பல காலத்துக்கு முன்னரே இவையெல்லாம் அழிவு பட்டிருக்கின்றன என்று தெரிகிறது. கபிலவஸ்துவில் ஒரு சில கிராமங்களே எஞ்சியுள்ளன. அவையும் மிக்க ஏழ்மை நிலையில் காணப்படுகின்றன.

"இங்கு ஆயிரத்துக்கு மேற்பட்ட சங்காராமங்கள் ஒரு காலத்தில் இருந்திருக்க வேண்டும். இப்போது சில கட்டிடங்கள் தான் காணப்படுகின்றன. அரண்மனைக்குப் பக்கத்திலுள்ள ஒரு சங்காராமத்தில் சில பிக்ஷுக்களைக் கண்டேன். இவர்கள், சுமார் முப்பது பேர், ஹீனயான பௌத்தக் கொள்கையை அனுசரித்து வருகிறார்கள். இரண்டொரு தேவாலயங்களில் வேறு மதத்தவர்கள் வழிபட்டு வருவதையும் கண்டேன்."

இக் குறிப்புக்களில் புத்தர் வாழ்க்கையுடன் சம்பந்தப்பட்ட கட்டி டச் சின்னங்கள் சிலவற்றைப் பற்றியும் சொல்லப்பட்டிருக்கிறது.

புத்தர் காலத்திலேயே கோசல மன்னன் விதூர்த்தபன் சாக்கிய வம்சத்தை நிர்மூலமாக்கி விட்டதாக பௌத்த நூல்கள் சொன்ன போதிலும், ஒரு சில சாக்கியர் எஞ்சியிருந்து ஹிமாலயச் சாரலி யண்டி வாழ்ந்தார்கள் என்பதில் ஐயமில்லை. புத்தர் இறந்த பின்னர் அவருடைய அஸ்தியைப் பங்கு போட்டபோது சாக்கியருக்கும் ஒரு பங்கு கிடைத்து, அதை அவர்கள் கபிலவஸ்து நகரிலே வைத்து ஒரு தாதுகர்ப்பம் கட்டி எழுப்பினர்கள் என்றும் பௌத்த நூல்கள் குறிப்பிடுகின்றன. அன்றியும், கி. பி. ஐந்தாம் நூற்றாண்டில் கபில வஸ்து ராஜதானியிலிருந்து ஒரு தூதுவர் திறை கொண்டுசென்று சீனச் சக்கரவர்த்தி வென் தீ என்பவரைத் தரிசித்ததாகச் சீன நூல்கள் குறிப்பிடுகின்றன. ஆகையால், சாக்கிய மரபைச் சேர்ந்த வர்கள் முற்றுக அழிக்கப்பட்டுவிடவில்லை என்றுதான் கருத வேண்டும்.

கபிலவஸ்துவாகிய தௌலீவாவுக்கு நான் சென்றபோது அக் கிராமத்தின் மத்தியில் மகாதேவ ஆலயம் என்று வழங்கும் ஒரு கோயிலைக் கண்டேன். மிகவும் புராதனமான கட்டிடம். அதன் உயர்ந்த கோபுரம் பல மைல்களுக்கப்பா லிருந்தும் காணக்கூடியதா யிருக்கிறது. கபிலவஸ்துவுக்கு இந்த ஆலயத்தின் கோபுரம்தான் வழிகாட்டி நிற்கிறதென்று சொல்லலாம். சதுர வடிவமான உள் மண்டபத்தின் மத்தியில் ஒரு சிவலிங்கத்தை வைத்து அவ்வூர் மக்கள் வழிபட்டு வருகிறார்கள். வேறு எவ்வகையான விக்கிரகங்களும் அங்கில்லை. சாஸ்திரி என்னை அழைத்துக்கொண்டு போனபோது பண்டா (பூசாரி) ஒருவர் லிங்கத்துக்கு வில்வார்ச்சனை செய்து கொண்டிருந்தார். பூஜை முடிந்ததும் சாஸ்திரி என்னையழைத்து, அந்த லிங்கத்தை நன்றாக உற்று நோக்கும்படி சொன்னார். மற்றைய கோயில்களில் நான் பார்த்தது போன்ற லிங்கமாக அது புலப்பட வில்லை. லிங்கத்தின் மேற்புறத் தண்டு உடைந்து போயிருந்தது. ஆவுடையார் வட்டவடிவமாக, ஒரு குடையை விரித்துத் தலைகீழாக நாட்டிவைத்தது போன்று, காட்சியளித்தது. சாஸ்திரி அதன் மர்மத்தை விளக்கினார்: முன்பு இந்தப் பகுதியில் ஒரு பௌத்த சைத்தியமிருந்தது. அந்த சைத்தியம் அழிந்துபட்டபோது சைத் தியத்தின்மேல் இருந்த சத்ரம் (குடை) என்ற தூபி ஒரு புறத்தில் உடைந்துகிடக்கக் கண்ட கிராமவாசிகள் அது சிவலிங்கம் என்று நினைத்து இங்கு கொண்டுவந்து வைத்துப் பிரதிஷ்டை செய்து வழி பட்டு வருகின்றனர். அந்த லிங்கத்தை மறுபடியும் நன்றாக உற்றுப் பார்த்தபோது சாஸ்திரி சொன்ன விளக்கம் சரியாயிருக்கலாம் என் றுணர்ந்தேன்.

இந்த மகாதேவ ஆலயத்திலிருந்து சுமார் ஒரு மைல் தூரத்தில் திலோராக்கோட்டம் என்று வழங்கும் ஓர் இடம் இருக்கிறது. இங்கு சுமார் ஒரு மைல் சுற்றளவுள்ளதாக காடும் பற்றையும் வளர்ந்த ஒரு மேடு காணப்படுகிறது. இதுவே கபிலவஸ்து நகரத்தின் அரண்மனைக் கட்டிடங்களிருந்த ஸ்தலமாயிருக்கலாமென்று தொல்பொருளாராய்ச்சியாளர் கருதுகின்றனர். எங்கு பார்த்தாலும் செங்கற் கட்டிடங்களின் சின்னங்களைக் காணலாம். தௌலீவாவிலுள்ள மக்கள் பலர் இந்த மேட்டிலேயுள்ள நிலத்தை வெட்டிச் செங்கற்களை யெடுத்துச் சென்று தமது வீடுகளைக் கட்ட உபயோகித்து வருகிறார்கள். சில இடங்களில் மழை வெள்ளத்தில் மண்ணரிக்கப்பட்டுக் கிடந்த பகுதிகளில் புராதன காலத்துச் செப்பு நாணயங்களையும் உலோகத் துண்டுகளையும் மட்பாண்ட ஓடுகளையும் மணிகள் முதலியவற்றையும் இன்றும் காணக்கூடியதாயிருக்கிறது. என் கண் முன்னலேயே கிருஷ்ணசந்த்ர சாஸ்திரி சிலவற்றைப் பொறுக்கி எடுத்தார். நேபாள அரசாங்கம் மாத்திரம் இந்தத் திலோராக்கோட்டம் என்ற இடத்தைப் பாதுகாத்து அகழ்ந்து ஆராய்ந்து பார்த்தால் நிச்சயமாகப் பல அரிய உண்மைகள் வெளிப்பட்டு சாக்கிய வம்சத்தின் பூர்வீகச் சிறப்பை நிரூபிக்குமென்று சொல்லலாம்.

திலோராக்கோட்டத்தில் முன்பு ஒரு காலத்தில் மாயாதேவிக்கென ஒரு கோயில் எடுக்கப்பட்டிருந்தது. அந்தக் கோயில் இப்போது அழிந்தொழிந்து போகக் கிராமவாசிகள் ஒரு சிறு குடிசையமைத்து 'ஸமயமஹீ' என்ற ஒரு விக்கிரகத்தை வைத்து ஆராதனை செய்துவருகிறார்கள். மஹாயான பௌத்தம் வளர்ந்திருந்த காலத்தில் மாயாதேவி, ரூபாதேவி, தாராதேவி முதலிய மூர்த்தங்களை வைத்து பௌத்தர்கள் வழிபட்டுவந்தார்கள். உலும்பினியில் இன்றும் மாயாதேவியின் சிலையை வைத்து 'ரூபாதேவி' என்ற ஆலயம் கட்டி வழிபடுகிறார்கள். புத்த கயாவிலும் தாராவின் சிலை காணப்படுகிறது.

கபிலவஸ்துவுக்கு ஐந்து மைல் தூரத்தில் நிக்லீவா, கோஷ்டிஹாவா என்ற இரு சிறு கிராமங்களிருக்கின்றன. இவற்றிலும் புராதன பௌத்த சின்னங்கள் காணப்படுகின்றன. அசோக மன்னன் ஸ்தல யாத்திரை செய்த காலத்தில் இந்த இரு இடங்களிலும் இரு ஸ்தம்பங்களை நாட்டி வைத்தான். அவை இப்போது அடிவரையில் உடைந்துபோய் சிறு துண்டுகளாக மாத்திரம் காணப்படுகின்றன.

★

சுமார் மூன்றுமணி நேரமாகக் கபிலவஸ்துவைச் சுற்றிப் பார்த்து விட்டு மங்கள்மான் வஜ்ராச்சார்யா வீட்டுக்குத் திரும்பிவந்தோம். வழி மேல் விழி வைத்தபடி எங்களையே எதிர்பார்த்துக்கொண் டிருந்தார் அவர். அறுசுவையோடு கூடிய உணவு பரிமாறப்பட்டது. அவரது விருந்தோம்பும் பண்புக்கு நன்றி தெரிவித்துவிட்டு, சாஸ்திரி யிடமும் விடை பெற்றுக்கொண்டு கபிலவஸ்து நகரத்துக்கும்— தெளலீவாவுக்கு—ஒரு நமஸ்காரம் செய்துவிட்டு, மகாதேவர் ஆலயத்திலுள்ள லிங்கத்தையும் வணங்கிக்கொண்டு எக்கா வண்டியில் ஏறினேன். நன்றுக வைக்கோலையும் கொள்ளையும் உண்டு பசி தீர்த்துக்கொண்ட குதிரையும் வீடு திரும்பும் உற்சாகத் திலே வாயு வேகமாக ஷோரத்கர் ஸ்டேஷனை நோக்கி விரைந்தோட ஆரம்பித்தது. நல்ல வேளையாக அந்தச் சமயத்தில் என்னைத் தவிர வேறு பிரயாணிகள் எவரும் அகப்படவில்லை யாகையால் வண்டிக் காரன் பளுவேற்ற முடியவில்லை. நானும் சிறிது சாய்ந்து வசதியாக உட்கார்ந்து பிரயாணம் செய்யச் சந்தர்ப்பம் கிடைத்தது.

ஷோரத்கர் ஸ்டேஷனை வந்தடையும்போது இரவு மணி ஏழாகி விட்டது. முன்னர் என்னை வழியனுப்பி வைத்த ஸ்டேஷன் நண்பர் ஸ்ரீவாஸ்தவா தம்முடன் மற்றும் நண்பர்கள் நால்வரைக் கூட்டி வைத்துக்கொண்டு என்னை எதிர்பார்த்தபடி காத்திருந்தார். நான் திரும்பி வரக் கண்டதும் அவர்கள் யாவரும் மகிழ்ச்சியுடன் வரவேற்றுப் பலவிதமான உபசாரத்தி லீடுபட்டனர். பக்கத்தி லுள்ள ஒரு சிறிய ஹோட்டலில் விருந்தும் ஏற்பாடு செய்தனர். கபிலவஸ்துவைக் கண்டு பிடித்த கதை யெல்லாவற்றையும் கேட்டு அவர்கள் அளவற்ற மகிழ்ச்சியடைந்தனர். பின்னர் இரவு ஒரு மணிக்கு அடுத்த ரயில் ஏறும்வரை அவர்களே நின்று வழியனுப்பியும் வைத்தார்கள். முன் பின் அறியாத ஊருக்கு முதன் முதலாகப் பலவித சந்தேகத்துடன் சென்ற எனக்கு அவர்கள் மூலம் கிடைத்த அன்பை மறக்க முடியாது.

கபிலவஸ்துவிலிருந்து மாயாதேவி பிரசவத்துக்காக தேவதாக நகரத்துக்குப் புறப்பட்டுச் சென்றாள் என்று முன்பு சொல்லி யிருந்தோ மல்லவா? ஆனால் அவள் சென்ற வழியில் உலும்பினி என்ற வனத்திலேயே குழந்தை பிறந்து விட்டதாகவும் அங்கிருந்து மறுபடியும் அவள் கபிலவஸ்துவுக்குத் திரும்பினாள் என்றும் சரித்திரம் கூறுகிறது. ஆகவே, நாமும் உலும்பினிக்கு மாயாதேவி யையும் அவள் பரிவாரத்தையும் பின் தொடர்ந்து சென்று அங்கு நடந்த சம்பவங்களைப் பார்ப்போம்.

மூன்றும் அத்தியாயம்

குதிரை முதுகிலே

இதற்குமேல் போக இடமில்லை யென்று சொல்லியதுபோல கோரக்பூரிலிருந்து வடக்கே சென்ற பாரதத்தின் சின்னஞ்சிறு ரயில் வண்டி வடக்கெல்லையாகிய நேபாளத்தை முட்டிக்கொண்டு நௌத் தன்வா என்ற குக்கிராமத்தில் திடீரென்று நின்றுவிட்டது. இரவு சரியாக ஒரு மணி. கும்மென்ற இருட்டு; திக்குத் திசையொன்றும் தெரியவில்லை. கயா நகரத்திலிருந்து என்னுடன் வழித்துணையாக வந்த வஸந்தராம் * வண்டியிலிருந்து பெட்டியையும் படுக்கையையும் இறக்கித் தலைமேல் வைத்துக்கொண்டு, "இது என்ன பிரமாதம் ஸார், வாருங்கள். விடிகிறதற்கு முன்பு எப்படியாவது லங்கா பாபா தர்மசாலாவைத் தேடிக் கண்டுபிடித்துவிடுகிறேன்" என்று தைரியம் கூறிக்கொண்டே மற்றைய பிரயாணிகளைத் தொடர்ந்து என்னையும் அழைத்துக்கொண்டு ஸ்டேஷனைவிட்டு வெளியே வந்தான்.

ஒற்றை அகல் விளக்கை ஏற்றி எரியவைத்து சாயா வியாபாரம் செய்துகொண்டிருந்தான் ஒருவன். அக்கம் பக்கத்திலிருந்த கடைக ளெல்லாம் மூடப்பட்டு விட்டன. அழுக்கடைந்த கம்பளிப் போர்வை யால் சுருட்டி மூடிக்கொண்டு தன் முன்னிலிருந்த அடுப்பில் குளிர் காய்ந்து குடுகிக்கொண்டிருந்த அந்த நேபாளியிடம் போய், "லங்கா பாபா தர்மசாலா எங்கே யிருக்கிறது?" என்று வஸந்தராம் ஹிந்தி யிலே கேட்டான். அந்தச் சாய்வாலா ஏறெடுத்தும் பார்க்கவில்லை. இவனுக்குக் காது செவிடாயிருக்கலாமோ என்று நான் எண்ணிக் கொண்டிருக்கையில் வஸந்தராம் திடீரென்று, "இந்தாப்பா, இரண்டு சாயா கொடு" என்று உத்தரவு போட்டான். நேபாளியின் கைகள் அசைந்தன. இரண்டு கப் தேநீர் வார்த்துக் கொடுத்தான். அப் புறம் வஸந்தராம் அவனைப் பார்த்து மீண்டும், "லங்கா பாபா தர்ம சாலா எங்கே யென்று தெரியுமா?" என்று கேட்டபோதுதான் அவன் வாய்க்குள்ளே முணுமுணுத்து அரைவாசி ஹிந்தியும் அரை வாசி நேபாளியுமாக வழியைத் தெரிந்துகொள்ளச் சில குறிப்புக் களைச் சொன்னான். "இந்த நேபாள ஆசாமிகளே இப்படித்தான்

---

* வஸந்தராமைப் பற்றி 10-ம் அத்தியாயம் பார்க்க.

எவ்வளவு ஒத்தாசையாயிருக்கிறான் இவன் பார்த்தீர்களா? தன் கையில் பணம் வந்த பிறகுதான் வழி தெரிவிக்க உடன்பட்டிருக் கிறான்" என்று வஸந்தராம் விளக்கினான். சாய்வாலா சொன்ன வழி வஸந்தராமுக்கு அரை குறையாகத்தான் புரிந்தது. இருந்தும் கண்டு பிடித்துவிடலாம் என்ற தைரியத்தோடு இருவரும் அங்கிருந்து கிளம்பி ஒரு குறுக்குப் பாதையில் இறங்கினோம். இருட்டிலே ரயில் தண்டவாளங்களையும் கரிக்கிடங்குகளையும் காலால் தடவிப் பார்த்துச் சாவதானமாக நகர்ந்து செல்ல வேண்டியிருந்தது. பின்னர் ஒரு நெல் வயலைத் தாண்டி வரப்புகளின் மேல் நடந்து எப்படியோ ஒரு மதில் கட்டிய தோட்டத்தை வந்தடைந்தோம். இதுதான் லங்கா பாபா தர்மசாலா என்ற தைரியத்தோடு வெளியே நின்றபடி வஸந்தராம் "ஸ்வாமிஜி! ஸ்வாமிஜி!" என்று கூவி யழைத்தான். உலகமே தூங்கிக்கொண்டிருக்கும் அந்தச் சாம வேளையில் ஆசிரமத்தில் உறங்கும் ஸ்வாமிகளை எப்படித் தொந்தரவு செய்வதென்று எனக்குத் தோன்றவில்லை. ஆனால் வஸந்தராம் கற்ற பள்ளிக்கூடம் வேறு. என்னைப்போல அவன் சங்கோஜப் பேர்வழியல்ல. "வழிப்போக்கிலே வரும் யாத்திரிகர்களுக்குத் தானே மடம் கட்டி வைத்திருக்கிறார்கள்?" என்று எனக்குச் சமாதானம் சொல்லிவிட்டுச் சிறிதும் அலுப்புக் கொள்ளாமல், "ஸ்வாமிஜி!" என்று மீண்டும் குரல் கொடுத்தான். அப்பொழுது உள்ளே இருந்து, "யாரது?" என்று ஹிந்தியில் ஒரு குரல் கேட்டது. வஸந்தராம் விடையாக, "லங்கா ஆத்மி ஒருவர் வந்திருக்கிறார்" என்று சொன்னதும், "இதோ வந்துவிட்டேன், நில்லுங்கள்" என்று பதில் வந்தது. சிறிது நேரம் கழித்து மிதியடிச் சப்தம் கேட்டது. தோட்டக் கதவின் உட்புறமாகச் சிறிது வெளிச்சம் தெரிந்தது. கதவின் பூட்டைத் திறப்பதற்கு முன்பு எச்சரிக்கையாக, "லங்காவி லிருந்து வந்த யாத்திரிகர் யார்?" என்று சிங்கள பாஷையில் கேள்வி பிறந்தது. நானும் சிங்களத்திலே விடை கூறியவுடனே தாமத மில்லாமல் கதவு திறக்கப்பட்டது. பௌத்தபிக்கு ஒருவர் மிக அன்புடன் எங்களை உள்ளே அழைத்துக்கொண்டு போய் உட்கார வைத்து உபசரித்தார்.

பல வருடங்களுக்கு முன்பு சிங்கள நாட்டிலிருந்து வடக்கே புத்த கயை சென்று சமயத்தொண்டு செய்துவந்த ஸ்ரீ கும்பல்வெல ஸ்ரீநிவாஸ நாயக தேரர் என்ற பௌத்த பிக்ஷு மகாபோதி சங்கத் தாரை இயக்கி பௌத்த யாத்திரிகர்களின் வசதிக்காக நௌத் தன்வாவில் ஒரு நிலம் வாங்கி அருமையான ஒரு மடம் கட்டி, 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற முறையில் எல்லா யாத்திரி

கர்களுக்கும் நல்ல தொண்டு செய்து வருகிறார். "லங்கா பாபா" என்றுதான் அவ்வூர் மக்கள் இவரை அருமையாக அழைத்து வருகிறார்கள். அவரைத் தெரியாதவர்கள் அங்கில்லை. சிங்களவரா யிருந்தும் ஹிந்தி மிக அழகாகப் பேசுகிறார். ஆங்கிலமும் தெரியும். இலங்கையிலிருந்து ஒரு யாத்திரிகர் வந்திருக்கிறார் என்றவுடன் ஸ்ரீநிவாஸ பிக்கு அளவற்ற மகிழ்ச்சியோடு அந்த அகால வேளை யிலும் "ஏதாவது சாப்பிடக் கொடுக்கலாமா?" என்று கேட்டார். நாங்கள் ஒன்றும் வேண்டியதில்லை யென்றும், உலும்பினிக்குப் போக உதவி செய்தால் மாத்திரம் போதும் என்றும் சொன்னோம். "சரி, ஒன்றுக்கும் கவலைப்பட வேண்டாம். உலும்பினி இங்கிருந்து சரியாகப் பத்து மைல் தூரத்திலிருக்கிறது. இடையிலே ஏழெட்டு நதிகளைத் தாண்ட வேண்டும். இரண்டு நதிகளில் மாத்திரம் வெள்ளம் அதிகமா யிருக்கக்கூடும். நீங்கள் கால்நடையாகப் போவது முடியாது. குதிரைகளில் ஏறித்தான் போகவேண்டும், அல்லது பல்லக்கிலேறிச் செல்ல வேண்டும்" என்றார். பல்லக்கு என்ற வார்த்தையைக் கேட்டதும் எனக்கு கபிலவஸ்துவி லிருந்து மாயாதேவி உலும்பினிக்குப் பல்லக்கில்தான் சென்றாள் என்ற கதை ஞாபகத்துக்கு வந்தது. அந்தப் புராதனமான வாகனம் இன்றும் அப்பிரதேசத்தில் வழக்கத்தில் இருந்து வருகிறது. பல்லக் கிலும் பார்க்க குதிரை முதுகில் போவதுதான் செலவு குறைவு என்று பிக்ஷு சொன்னபடியால் அப்படியே குதிரைச் சவாரி செய்வோம் என்று ஒப்புக்கொண்டோம். அதிகாலையில் நான்கு மணிக்கே புறப்பட்டுச் சென்றால் பார்க்க வேண்டியவற்றைப் பார்த்துக்கொண்டு திரும்பலாம் என்றும் அவர் சொல்லி வைத்தார். அத்துடன், "கையிலே ஏதாவது சாப்பாட்டுக்கு எடுத்துச் செல்வது நல்லது. உலும்பினியில் உங்களுக்கு ஒன்றுமே கிடைக்காது. ஆகையால் நௌத்தன்வாவிலேயே ரொட்டியும் பழமும் வாங்கிக் கொண்டு போங்கள்" என்று சொன்னார். நாங்களும் சரி என்றோம். "இப்போது பிரயாணக் களைப்பி லிருப்பீர்க ளாகையால் படுத்துத் தூங்குங்கள். விடியற்காலையில் குதிரைகளுக்கு ஏற்பாடு செய்து விட்டு உங்களையும் எழுப்பி விடுகிறேன்" என்று ஸ்ரீநிவாஸ பிக்கு அளவற்ற பிரியத்துடன் சொன்னார். ஓர் அறையிலே கயிற்றுக் கட்டில்கள் இரண்டு போடப்பட்டிருந்தன. அரிக்கன் விளக்கொன்றை எங்களுக்காக ஏற்றித் தந்தார். ஒரு கூஜாவில் தண்ணீர் கொண்டு வந்து வைத்துவிட்டுத் தாமும் படுக்கைக்குச் சென்றார் பிக்ஷு. நாள் முழுவதும் ரயில் பிரயாணம் செய்த களைப்பில் எனக்கும் உடம்பை எப்பொழுது சாய வைக்கலாம் என்றிருந்தது. குறிப்பை

யறிந்த எனது தோழன் வஸந்தராம் தாமதமில்லாமல் படுக்கையை விரித்துத் தட்டி ஒழுங்கு செய்து கொடுத்தான். உடனே படுத்து உறங்கிவிட்டேன்.

அதிகாலையிலேயே மறுபடியும் பிக்குவின் குரல் கேட்டது. நேரமாகிவிட்ட தென்றும் தாமதமில்லாமல் புறப்பட்டால்தான் வெயி லின் கொடுமைக்குத் தப்பலாம் என்றும் சொல்லிக்கொண்டு கதவைத் தட்டி எழுப்பினர். நாங்களும் அவசர அவசரமாக எழுந்து கை கால் முகங்களை அலம்பிக்கொண்டு புறப்பட்டோம். இரண்டு குதிரைகள் வாசலில் காத்து நின்றதைக் கண்டதும் விடியற்காலையிலேயே ஸ்ரீநிவாஸ பிக்கு எழுந்து சென்று குதிரைக்காரரிடம் சொல்லி அழைத்து வந்துவிட்டார் என்று அறிந்து ஆச்சரியப்பட்டோம். கோலும் கையுமாகக் குதிரைப் பாகரும் அங்கே காத்து நின்றார்கள். குதிரைகளைப் பார்த்ததும் எனக்கு மாத்திரம் ஒரு சிறிது சந்தேகம் ஏற்பட்டது. அவைகள் உண்மையில் குதிரைகள்தானே அல்லது குதிரைகள் போன்று வேறு ஏதாவது மிருகமா யிருக்குமா என்பது தான் சந்தேகம்! அவ்வளவு வித்தியாசமான உருப்படிகள் அவை. கழுதை, குதிரை, கோவேறு கழுதை—இந்த மூன்றும் ஒன்று சேர்ந்து உதயமான உருப்படிகளைப்போல் காட்சி யளித்தன! உடலொட்டி வரண்டு உயிர் மாத்திரம் அந்த மிருகத்தில் ஊசலாடிக்கொண் டிருந்தது. இதன்மேல் எப்படி ஏறிச் சவாரி செய்வது? என்னைப் பொறுத்தவரையில், எனது எடை ஆக நூறு பவுண்டு மாத்திரம் இருப்பதால் சமாளித்துவிடலாம். ஆனால் என்னிலும் பார்க்க மூன்று மடங்கு கனமுள்ள எனது வழித்துணை நண்பன் வஸந்த ராமை அந்தக் குதிரை எப்படிச் சுமந்து செல்லப்போகிறது என்று கவலைப்பட்டேன். குதிரைச் சாரதிகள் கொஞ்சமும் யோசிக்காமல், "சும்மா ஏறி உட்காருங்கள். இந்தக் குதிரைகள் இப்படி எத் தனையோ பேரைச் சுமந்து சென்று பழக்கம்" என்று தைரியம் கூறினர்கள். ஏறுவிட்டால் குதிரைகளே கோபித்துக்கொள்ளும் என்றும் சொன்னர்கள்!

வைக்கோற் பொதியொன்றைக் கோணியில் வைத்துத் தைத்துக் குதிரை முதுகில் பரப்பி ஆசனமாக வைத்திருந்தார்கள். இரு பக்கமும் இரும்புக் கொக்கி போட்டுக் கயிற்றினால் வயிற்றைச் சுற்றிச் சேணம் கட்டியிருந்தது. கடிவாளத்துக்கு இரண்டு புரிக் கயிறுகள். குதிரைக்காரன் என்னைக் கைகொடுத்து ஏறி யுட்காரச் செய்தான். வஸந்தராம் அந்தச் சின்னஞ்சிறு குதிரைமீது ஏறு வதற்கு மிகவும் சிரமப்பட்டான். சிறிது நேரம் சென்ற பின் சமாளித் துக்கொண்டு ஏறி உட்கார்ந்தான். குதிரைப் பாகர் இருவரும்

பக்கத்தில் நடந்துகொண்டே குதிரைகளை வழி நடத்தினர்கள். எங்கள் கையிலும் இரண்டு கம்புகளைக் கொடுத்து வைத்தனர்.

நௌத்தன்வாக் கிராமத்தின் கடைத்தெருவுக்கு வந்ததும் சில பழங்களும் ரொட்டியும் வாங்கிக் கட்டிக்கொண்டு, நாங்களும் ஆளுக் கொரு கப் சூடான பால் சாப்பிட்டுவிட்டு உலும்பினிப் பிரயாணத் தைத் தொடங்கினேம்.

நௌத்தன்வாவி லிருந்து உலும்பினிக்குள்ளது ஆகப் பத்து மைல் தூரம்தான். ஆனல் ஆரம்பத்திலே இதைக் கடந்து செல்லப் பத்து நாள் செல்லும்போல்தான் எனக்குத் தோன்றியது. 'மாதம் போம் காதவழி' என்ற விகடராமன் குதிரை எங்கள் குதிரை களைவிட எவ்வளவோ மேலானதா யிருக்கவேண்டு மென்று எண்ணிக்கொண்டேன். அந்த நௌத்தன்வாக் குதிரைகள் அவ்வளவு நோஞ்சல்கள். 'இட்டடி நோவ எடுத்தடி கொப்பளிக்கும்' பாவனை யில் அசைந்தன. ஓரோவிடத்தில் நின்றுவிடும்; குதிரைப் பாகன் அதட்டி அடிப்பான். இரண்டு பாய்ச்சல் பாயும் குதிரை, அதன் பின் பழையபடி மக்கர் பண்ணும். செக்கிலே கட்டப்படும் மாடும், பொதி சுமக்கும் கழுதையும், யாத்திரை ஸ்தலங்களில் காணப்படும ஜட்கா வண்டிக் குதிரைகளும் ஓரினத்தவை என்பதை, இன்று நேற்றல்ல, பல வருடங்களாக நான் அனுபவத்தில் தெரிந்துகொண் டிருக்கிறேன். நௌத்தன்வாவில் குதிரை ஜட்கா வண்டி இழுக்க வில்லையானலும் பொதி சுமக்கும் குதிரை யென்பதை நான் மறக்க வில்லை. ஆகையால், அது புதிய அனுபவமாக எனக்குப் படவில்லை. பல வருடங்களுக்கு முன்பு 'மாணிக்கவாசகர் அடிச்சுவட்டில்'* தென் னாட்டிலே யாத்திரை செய்தபோது ஒரு சமயம் இராமநாதபுரத்தி லிருந்து உத்தரகோசமங்கைக்கு ஜட்காவில் சென்று இடைவழியில் என் வண்டியை யிழுத்துச் சென்ற குதிரைக்குப் பதிலாக நானே இறங்கி ஜட்காவையும் குதிரையையும் இழுத்துச் சென்ற அனுபவ முண்டு! அதேபோல் இந்த உலும்பினி யாத்திரையிலும் என்னைச் சுமந்து சென்ற குதிரையை நானே சுமக்கவேண்டி வருமோ என்று சில வேளை சந்தேகம் எழுந்ததுண்டு.

ஆனல் நல்ல வேளையாக அப்படி யொன்றும் நேர்ந்து விட வில்லை. பல தடவை குதிரையிலிருந்து கீழே யிறங்கிக் குதிரை நடப்பதற்கு முன்னர் நானே விரைவாக நடந்து போவேன்; பின்னர் குதிரை வந்து சேரும் வரை ஓரிடத்தில் காத்து நிற்பேன். மீண்டும் நடப்பேன். நான் இப்படி நடப்பது குதிரைக்கு வெட்கத்தைத் தரும்

---

* இந்நூலாசிரியர் எழுதிய மற்றொரு நூல்.

என்று குதிரைக்காரன் முறையிட்டபடியால் மீண்டும் குதிரை முதுகில் ஏறிக்கொள்வேன். அதனால் எனக்குத்தான் வலி அதிகம்!

அந்தப் பிரயாணத்தின்போது நான் நேபாளத்திலிருப்பதாகவே கருத முடியவில்லை. 'நேபாள் தரை' என்று வழங்கப்படும் அந்தப் பிரதேசம் கிட்டத்தட்ட மதுரை, இராமநாதபுரம் ஜில்லாப் பிரதேசம் போலவே காட்சியளித்தது. எங்கும் ஒரே பரந்த நெல்விளை நிலம். தூரத்திலே மாத்திரம் அடிவானத்தில் நீலம் படர்ந்த ஹிமாசலத் தொடரும் அதன்மேல் வெள்ளி முலாம் பூசியது போன்ற பனிப் படலமும் கண்கொள்ளாக் காட்சியாயிருந்தது. கண்ணுக்கெட்டிய தூரம் வரை நெல்வயல்களும் இடையிடையே சணல், கோதுமை, தினை, கரும்பு ஆகிய பயிர்கள் நிறைந்த வயல்களும்தான். சில வயல்களில் நெல் விதைப்பு நடைபெற்றது; வேறு சிலவற்றில் கதிர் புறப்பட்ட பயிர்கள்; இன்னும் சிலவற்றில் அறுவடை செய்யக் கூடியதாக விளைந்த நெல். இப்படி மூன்று பருவத்திலும் ஒரே பிரதேசத்தில் நெல் சாகுபடி நடப்பதைக் கண்டேன்.

இடையிடையே ஒரு சிற்றூறு எதிர்ப்படும். அதையடுத்து ஒரு கிராமம் தோன்றும். அங்கே பசுமையான சோலையாக மாந்தோப்புக்கள் தென்படும். இந்த மாஞ்சோலைகள் வடநாட்டிலே உத்தரப் பிரதேசம், பிஹார், நேபாளம் முதலிய பிராந்தியங்களில் ஏராளமாக வுள்ளன. புத்தர் காலத்தில் அவர் கிராமம் கிராமமாகச் சென்று தருமோபதேசம் செய்தபோது இப்படியான மாஞ்சோலைகளில் தங்கித்தான் உபதேசம் செய்தார் என்று சொல்லப்படுகிறது. கொளுத்தும் வெயிலில் பிரயாணம் செய்யும்போது இடையிடையே இத்தகைய மாந்தோப்புக்களைக் கண்டதும் நான் பரவசமடைந்தேன். அந்தத் தண்ணென்ற குளிர்ச்சியில் ஒரு சிறிது ஆறிப் போகக் களைப்பு நீங்கியது.

பரந்த வயல்களுக்கூடாக வுள்ள வரம்புகளின்மீது எங்கள் குதிரைகள் நடந்து சென்றன. மிகவும் பழக்கப்பட்ட குதிரைகளாதலால் வரம்புகளில் நடக்கும்போது ஓரிடத்திலாவது கால் இடறி விழாமல் சாவதானமாகவே சென்றன. சுமார் பாதி தூரம் வரையில் சென்றிருப்போம். காலை வேளையாயிருந்தும் வெயில் கொளுத்திக்கொண்டிருந்தது. வழியிலே ஒரு மாந்தோப்பும் அதன் பக்கத்தில் ஐந்தாறு குடிசைகளுள்ள ஒரு சேரியுமிருக்கக் கண்டோம். விசாரித்துப் பார்த்ததில் இவர்கள் மள்ளர் என்ற ஜாதியினர் என்றும், மழைக் காலங்களில் ஆற்று வெள்ளம் அதிகரித்தவுடன் ஓடம் விட்டுப் பிழைப்பவர்கள் என்றும், மற்றைய காலங்களில் மீன் பிடிப்பதும் விவசாயம் செய்வதும்தான் தொழில் என்றும் அறிந்தோம்.

வெயில் ஏறிவிட்டதால் பசியும் தாகமும் அதிகரிக்க ஆரம் பித்தன. குளிர்ந்த மாந்தோப்பில் சிறிது இறங்கி இளைப்பாறிய வுடன் வழித்துணை வஸந்தராமின் மூளை வேலை செய்யத் தொடங் கியது. மள்ளர் சேரியில் நாலைந்து எருமைகள் கட்டப்பட்டிருப் பதையும் புறம்பாகக் கன்றுகள் கட்டப்பட்டிருப்பதையும் வஸந்தராம் பார்த்தவுடன் என்னைப் பார்த்து, "ஸார்! பசியா யிருக்கும், கொஞ்சம் பால் சாப்பிடுகிறீர்களா?" என்று கேட்டான். "அதற் கென்ன, பால் அகப்பட்டால் சாப்பிடலாம். அதுவும் நல்ல யோசனைதான்" என்றேன். "கவலைப்படவேண்டாம், எல்லாம் கிடைக்கும். சற்றே யிருங்கள்" என்று சொல்லிவிட்டு மள்ளரிடம் போய் ஒரு நொடிப் பொழுதில் புதிதாகப் பால் கறந்து காய்ச்சும்படி ஏற்பாடு செய்துவிட்டான்.

மள்ளர்கள் மளமளவென்று பால் கறந்து அந்த முற்றத்திலேயே அடுப்பு மூட்டி வராட்டி வைத்து எரித்துக் காய்ச்சினர்கள். தனது மார்பிலுள்ள பூணூலுக்குச் சிறிது மதிப்புக் கொடுக்கும் வஸந்தராம் மள்ளரிட மிருந்து ஒரு பெரிய லோட்டாவும் இரண்டு வெண்கல டம்ளர்களும் வாங்கித் தன் கைப்படவே மண் போட்டுத் தேய்த்துக் கழுவினன். வடநாட்டிலே இது சர்வ சாதா ரணம். எந்தக் குடிசையிலானாலும் வெண்கலப் பாத்திரம்—இரண்டு தட்டுக்கள், ஒரு லோட்டா அல்லது செம்பு—நாளொன்றுக்கு அனேக தடவை மண்போட்டுத் தேய்த்துப் பளபளக்க வைத்திருப்பார்கள். சாப்பிடுவதற்கும், மற்றும் வீட்டுக்குரிய சகல உபயோகத்துக்கும் இந்தப் பாத்திரங்களே கையாளப்படும். மள்ளர் வீட்டுப் பாத்திரங் களை உபயோகப்படுத்துவதில் வஸந்தராம் கொஞ்சம் யோசித்து விட்டுத் தானே தன் கைப்படப் பற்றுத் தேய்த்துக் கழுவிக்கொண் டான். பின்னர் சுடச்சுடப் பாலை வாங்கி, பிரயாணத்துக்கென்று நாங்கள் கொண்டு வந்திருந்த கற்கண்டை அதில் கொட்டிக் கரைத்து எனக்குப் பரிமாறத் தொடங்கினன். அந்தப் பசி வேளையில் 'கறந்த பால் கன்னலொடு' பேரானந்த மளித்தது. பின்னர் வஸந்தராம் தானும் சாப்பிட்டுவிட்டு குதிரைப் பாகர் இருவருக்கும் வார்த்துக் கொடுத்தான். இந்த வைபவத்தின் நடுவே என்னையும் எனது சகாக் களையும் அந்தக் கிராமத்தில் கண்ட மள்ளர் குடும்பங்கள், ஆண் களும் பெண்களும் சிறுவர்களும், ஒரே கும்பலாய்க் கூடிவிட்டார்கள். இந்த மள்ளர் ஜாதியினர்தான், சாக்கியர், கோலியர் போல, விரிஜி நாட்டுக்கு வடக்கே புத்தர் காலத்திலே வாழ்ந்தவர்கள். புத்தர் இறந்த சமயத்தில் அவரது வேண்டுகோளின்படி மள்ளர் ஜாதியினரே குசி நகரில் அவர் உடலைத் தகனம் செய்தவர்கள். அக் காலத்தி

லேயே பிற்போக்கிலிருந்த மள்ளர் இன்றும் அதே நிலையில் இருந்து வருவது ஆச்சரியம்தான்

மீண்டும் குதிரையேறிப் பிரயாணத்தைத் தொடர்ந்தோம். போகும் வழியிலே பதினைந்து நீர்ப்பாசன வாய்க்கால்களையும் எட்டு நதிகளையும் தாண்டவேண்டி யிருந்தது. நதிகளில் இரண்டு, ஏற்கெனவே ஸ்ரீநிவாஸ பிக்கு எச்சரிக்கை செய்திருந்தது போல, சிறிது ஆழமா யிருந்தன. கடந்துவிடலாம்; ஆனால் அரையளவு தண்ணீராகையால் உடை நனையாமல் கடக்க முடியாது. குதிரைக் காரர் தமது வேஷ்டியை உயர்த்திக் கட்டிக்கொண்டு நடந்து ஆற்றைக் கடந்தார்கள். குதிரை மேல் இருந்த நாங்கள் கால்களைத் தூக்கிக் குதிரையின் பிடரிலே வைத்துக்கொண்டு செல்லவேண்டி யிருந்தது. உலும்பினிக்குப் பக்கத்திலே யிருந்த ஒரு நீர்ப்பாசன வாய்க்கால் ஆழம் சிறிது அதிகமா யிருந்ததால் குதிரைமே லிருந்தும் அதைக் கடக்க முடியவில்லை. குதிரைகளைத் தனியே கடக்கவிட்டுக் குதிரைக் காரர் அன்புடன் எனக்குத் தோள் கொடுத்து உதவினர்கள்.

நௌத்தன்வாவி லிருந்து உலும்பினிக்கு பத்து மைல் தூரம்தான் என்று சொல்லப்பட்டாலும் எங்கள் குதிரைகள் மேலதிகமாக மூன்று அல்லது நான்கு மைல் நடந்திருக்க வேண்டும். வயல்களுக் கூடாக விருந்த வரம்புகள் மீது சுற்றிச் சுற்றி வளைந்து பிரயாணம் செய்ய வேண்டி யிருந்ததால் தூரம் அதிகமாயிற்று. காலை ஐந்து மணிக்குப் புறப்பட்டிருப்போம். உலும்பினிக்குப் போய்ச் சேரும்போது பத்து மணியாகிவிட்டது. உலும்பினிக்கு மற்றொரு பாதையு முண்டு. ஷோரத்கர் வழியாகவுள்ள ரயில் பாதையில் நௌகர் என்ற ஸ்டேஷனி லிருந்து இருபது மைல் தூரத்துக்கு ஒரு கச்சா ரோடு இருக்கிறதென்றும் அது வழியாகப் போகலாம் என்றும் சொன் னர்கள். ஆனால் அங்கே வண்டி வாகனம் கிடைப்பது கஷ்டம் ஆகவே நௌத்தன்வா வழியாகப் போவதே புத்திசாலித்தனமானது என்று விஷய மறிந்தவர்கள் ஆலோசனை கூறினர்கள்.

கபிலவஸ்து நகரத்திலிருந்து உலும்பினிக்குப் பல்லக்கில் பிரயாணம் செய்தாள் மாயாதேவி. ராஜமரியாதைகளுடன் பலவித பரிவாரங்கள் புடைசூழ வந்தாள். ஆகையால் அந்தக் காலத்தில் இவ்வளவு பிரயாணக் கஷ்டம் அவர்களுக்கு இருந்திருக்க முடியாது தான்.

நான்காம் அத்தியாயம்

குழந்தை பிறந்தது

உலும்பினி அந்தக் காலத்திலே சுத்தோதன மன்னனின் உல்லாசத் துக்கான வசந்தகால உபவனமா யிருந்தது. அசோகும் சம்பகமும் கோங்கும் வேங்கையும் சால விருக்ஷங்களும் அடர்ந்த சோலை. எந் நேரமும் பலவித புஷ்பங்கள் பூத்துக் குலுங்கும். மாயாதேவி தனது சேடியர்கள் புடைசூழப் பல்லக்கில் வந்த சமயம் வசந்தத்தின் உச்ச நிலை. நிறைந்த வைசாக பூர்ணிமை நாள். இளவேனிலின் சிறு வெயிலில் அந்த உபவனம் ஒரே பொன்மயமாகக் காட்சி யளித்தது. இளம் தென்றலில் பூந்தாதுக்கள் படர்ந்தன. பஞ்ச வர்ணத்துடன் கூடிய பல ஜாதி வண்டுகள் மதுவுண்ட மயக்கத்தில் திசை தெரியாது சுற்றிச் சுற்றி யலைந்தன. பக்ஷி ஜாலங்கள் யாவும் பலவித சுருதி களில் மதுர கீதம் பயின்றன. இந்த மனோகரமான சோலையில் மாயாதேவி சிறிது வேளை இளைப்பாறிச் செல்லவேண்டு மென்று விரும்பியதில் ஆச்சரிய மொன்று மில்லை.

பல்லக்கை நிறுத்திவைக்கச் சொல்லி அவள் அதிலிருந்து இறங்கிச் சிறிது நேரம் அங்கிருந்த நீலோத்பலம் நிறைந்த தடாகத்தின் எழிலைப் பார்த்து ரசித்துக்கொண் டிருந்தாள். பக்கத்தில் நின்ற சால விருக்ஷத்தின் ஒரு கிளையில் அதியற்புத அழகுடனிருந்த மலர்க் கொத்தொன்று அவள் கண்ணில் பட்டது. காலமல்லாக் காலத்தில் அபூர்வமாகப் பூத்திருந்த அந்த மலரைக் கண்டு அவள் வேட்கையுற்று அதை நாடிச் சென்றாள். எட்டாத கிளையென்று அவளுக்குத் தெரிந்த போதிலும் உள்ளத் தெழுந்த ஒருவித உணர்ச்சியால் உந்தப் பெற்று அந்தக் கொம்பைப் பற்று வதற்கு அவளது வலது கை தானாகவே மேலுயர்ந்தது. அந்த க்ஷணத்தில், தென்றலில் வணங்கும் இளங்கொடி போல், அந்தச் சால விருக்ஷத்தின் பெருங் கிளையும் ஒரு தெய்விக சக்தியால் தாழ்ந்து பணிந்து வணங்கிக் கொடுத்தது. ஆனந்த மேலீட்டால் மாயாதேவி தன் கரங்கொண்டு அக்கிளையைப் பற்றிப் பிடித்தாள். பற்றியதுதான் தாமதம், அவளுக்குத் திடீரென ஒரு மயக்கம் – பிரசவ வேதனை ஏற்பட்டது. மயங்கிய வதனத்துடன் வானத்தைப் பார்த்தபடி நின்றாள் மாயாதேவி. சேடிகள் செய்வதின்னதென் றறியாது ஒரு நொடிப் பொழுது திகைத்து நின்றனர். பின்னர்

விரைந்து ஒரு பட்டுத் திரை போட்டு அந்த இடத்தை மறைத்துவிட்டு ஒரு புறம் ஒதுங்கி நின்றனர்.

விதி தன் விளையாட்டைக் காண்பித்துவிட்டது. அன்னை மாயா தேவி தான் வழிபடுதெய்வத்தைத் தியானித்துக்கொண்டு வலக் கரத்தால் சால விருக்ஷத்தின் கிளையைப் பற்றியவாறு நிற்க, அவளது வலது மருங்குல் வழியாக ஓர் ஆண்மகவு புறப்பட்டு வந்து பூமியி லிறங்கியது. புத்த ஞாயிறு தோன்றியது.

"உலும்பினி வனத்து ளொண்குழைத் தேவி
வலம்படு மருங்குல் வடுதோ யுருமல்
ஆன்ரு னவ்வழித் தோன்றினன்" *

அந்தச் சுபவேளையில் பரதகண்டம் முழுவதும் பற்பல நன்னி மித்தங்கள் நிகழலாயின. தேவர்கள் மலர்மாரி பொழிந்தனர். வானத்தி லோர் பேரொளி படர்ந்து உலகெங்கும் ஜோதி பரப்பியது. வன விலங்குகள் தம் கொடுமையைத் துறந்து துள்ளிக் குதித்தன. பறவைகள் தம் இருக்கைகளில் சிறகடித்துக் களித்தன. மக்களில் அங்கவீனர்களா யிருந்தோ ரனைவரும் பூரணப் பொலிவுடன் விளங் கினர். வையகம் முழுவதும் ஒரு கணம் வானகமாக மாறியது.

"மைத்திருள் கூர்ந்த மனமாசு தீரப்
புத்த ஞாயிறு தோன்றுங் காலத்
திங்களு ஞாயிறும் திங்குரு விளங்கத்
தங்கா நாண்மீன் தகைமையி னடக்கும்
வானம் பொய்யாது மானிலம் வளம்படும்
ஊனுடை யுயிர்கள் உறுதுயர் காணை
வளிவலம் கொட்கு மாதிரம் வளம்படு
நளியிரு முந்நீர் நலம்பல தரூஉம்
கறவை கன்றூர்த்திக் கலநிறை பொழியும்
பறவை பயன்றுய்த் துறைபதி நீங்கா
விலங்கு மக்களும் வெரூஉப் பகை நீங்கும்
கலங்கஞர் நரகரும் பேயும் கைவிடும்
கூனுங் குறளு மூமுஞ் செவிடு
மாவு மருளு மன்னுயிர் பெரூஅ." †

அந்த க்ஷணமே திக்குப் பாலகர்களாகிய தேவர்கள் நால்வர், இந்தச் சம்பவத்தை எதிர்பார்த்து அங்கு காத்திருந்தவர்கள், பிரசன்னமாகி அத் தெய்வக் குழந்தையை ஒரு வெண்பட்டி லேந்தி

* விம்பசார கதை
† மணிமேகலை 12-ம் காதை: 85–98

யெடுத்துப் புனிதமாக அவ்விடத்தில் முளைத் தெழுந்த நீலத் தாமரை மலரொன்றில் வீற்றிருக்கச் செய்து அன்னையைப் பார்த்து, "மாயாதேவி, உன் வாழ்வின் பலனை இதோ பெற்றுவிட்டாய். மனித வர்க்கத்துக்கு வழி காட்ட வந்த உத்தமனை ஈன்றெடுத் துள்ளாய்" என்று வாழ்த்தினர். அச்சமயம் வானத்திலிருந்து இழிந்த வெப்பமும் தட்பமு முள்ள நீர்த் தாரைகள் மாயா தேவியையும் சிசுவையும் மஞ்சனம் செய்தன.

நீலத் தாமரை மலரில் வீற்றிருந்த போதிசத்துவராகிய குழந்தை கண் விழித்துப் பார்த்தது. திடீரென்று எழுந்து கிழக்குத் திசையை நோக்கி நிற்க, முப்பத்து முக்கோடி தேவர்களும் அக்குழந்தையை இறைஞ்சி மறைந்தனர். பின்னர் அக் குழந்தை அட்ட திக்குகளையும் ஒவ்வொன்றாக நோக்கியது. தொடர்ந்து வானத்தையும் பூமியையும் பார்த்துப் பத்துத் திக்குகளிலும் தம்மைப் போல் ஒருவரையும் காண வில்லை யென்று சந்தேக நிவிர்த்தி செய்துகொண்டதும் வட திசையை நோக்கி ஏழடி எடுத்து நடந்தது. ஒவ்வொரு அடிக்கும் ஒவ்வொரு கமல மலர் தோன்றி அந்தச் சிற்றடியை ஏந்தி நின்றது. பிரம்மா வெண்கொற்றக் குடை நிழற்றினர். இந்திரன் வெண்சாமரை வீசினன். மற்றைய தேவர்கள் விருதுகள் பல தாங்கி நிற்க, போதி சத்துவர் பின் வருமாறு திருவாய் மலர்ந்தருளினர்:

அக்ரோஹ மஸ்மி லோகஸ்ய:
ஜ்யேஷ்டோஹ மஸ்மி லோகஸ்ய:
ச்ரேஷ்டோஹ மஸ்மி லோகஸ்ய:
அய மந்திமா ஜாதி
நாத் திதானி புநர்பவோ

"நானே உலகில் தலைவன்; நானே உலகில் முதல்வன்; நானே உலகில் பக்குவன். இதுவே எனது பிறப்பின் முடிவு; மறுபிறப் பென்பது இனி இல்லை."

பகவான் புத்தர் அவதரித்த அந்த நன்னாளில்—வைசாக பூர்ணிமை தினத்திலே—மற்றும் ஏழு ஜீவன்கள் பிறவியெடுத்தன என்று சொல்லப்படுகிறது. பின்னால் அவர் ஞானோதயம் பெற்றபோது நிழல் கொடுத்துதவிய புண்ணிய போதி விருக்ஷம், அவருக்கு மனைவியாகப் போகும் யாசோதரை, திரவியம் நிறைந்த நான்கு குடங்கள், அவரது பட்டத்து யானை, கண்டகம் என்ற குதிரை, அவரது தேர்ப்பாகன் சந்தகன், தோழனாய் வாழ்ந்த அந்தணச் சிறுவன் உதாயி. புத்தரின் வாழ்க்கையில் இந்தப் பெயர்கள் முக்கிய இடம் பெற்றுள்ளன.

சால விருக்ஷத்தி னடியில் தமது சேவைகளை முடித்துக்கொண்டு தேவர்கள் விடை பெற்றுச் சென்றதும் மாயாதேவி பரிசுத்தவதி யாகித் தன் ஒப்புயர்வற்ற மகவின் முகத்தைப் பார்த்தாள். மாணிக்கக் கொழுந்துபோல் ஒளி வீசிக்கொண்டிருந்த வதனத்தில் வீரப் புன்னகை யொன்று தாண்டவமாடியது. அப்படியே வாரி யெடுத்தணைத்து மெய்ம்மறந்து நிற்கும்போது சேடியர் வந்து மிருதுவான காசிப் பட்டிலே குழந்தையை வாங்கி ஏந்திச் சென்றனர்.

★

உலும்பினி கிராமத்துக்கு நான் சென்றபோது புத்த மகவு பிறந்த உப வனத்தையோ சால விருக்ஷத்தையோ அங்கு காண முடிய வில்லை. நேபாள அரசாங்கம் கட்டி வைத்திருக்கும் ஒரு மடம், பக்கத்திலே ஒரு குளம், அக் குளத்தின் பக்கத்தில் ஒரு சிறிய கோயில், கோயிலுக்கெதிரில் பாதி யுடைந்துபோ யிருக்கும் அசோக ஸ்தம்பம் ஒன்று – இவ்வளவும் சேர்ந்துதான் இன்றைய உலும்பினி க்ஷேத்திரமாகக் காட்சி யளிக்கிறது. நாற்புறமும் கண்ணுக்கெட்டிய தூரம் வரை பரந்த வயல் வெளியும் கட்டாந்தரையும்தான். அதிதூரத்தில் அடி வானத்தை அலங்கரிக்கிறது ஹிமாசலத் தொடர்.

உலும்பினி என்ற பெயர் இப்போது வழக்கி லில்லை. அந்தப் பிரதேசத்தி லுள்ளவர்கள் இக் கிராமத்தை 'ரும்மிந்தேயி' என்று தான் வழங்கி வருகிறார்கள். ஆதியில் 'லும்பினி' கிராமத்தில் மாயாதேவியின் ஆலயம் இருந்ததால் 'லும்பினிதேவி' என்று நேபாளிகள் இக் கிராமத்துக்குப் பெயர் கொடுத்து வழங்கினர் எனவும், பின்னர் அது காலகதியில் 'லும்மின் தேயி', 'ரும்மின் தேயி' என்று மாறிவிட்ட தெனவும் சரித்திர ஆராய்ச்சியாளர் சிலர் கருதுகின்றனர். 'ரூபாதேவி' என்ற பெயரே பிற்காலத்தில் மாறி 'ரும்மிந்தேயி' என வழங்குகிறது என்று வேறு சிலர் நம்பு கின்றனர். எப்படி யிருந்தபோதிலும் இங்குள்ள சிறிய ஆலயத்தில் பிரதிட்டை செய்யப்பட்டிருக்கும் தேவியின் பெயராலேயே உலும்பினி கிராமம் 'ரும்மிந்தேயி' என வழங்கி வருகிறதென்ப தில் சந்தேகமில்லை.

கோயில் மிகச் சிறியது. கட்டிடக் கலையைப் பற்றி எவராவது எந்தக் காலத்திலாவது இங்கே சிரத்தை யெடுத்ததாகத் தெரிய வில்லை. மிகப் பழைய காலத்தில் யாரோ ஒருவர் ஸ்தாபிதம் செய்து வைத்த பழைய சிலையொன்றைப் பாதுகாத்து வைப்பதற் காக எழுப்பிய சிறு சாந்துக் கட்டிடம் என்பது மாத்திரம் தெரிந்தது.

இங்குள்ள சிலை சுமார் ஐந்தடி உயரமும் நாலடி அகலமு முள்ள தட்டையான கல்லிலே, மாயாதேவி சால விருக்ஷத்தின் கிளை யொன்றை வலக்கரத்தால் பற்றி நிற்பதாகவும், அவளது வல மருங்குல் வழியாகப் போதிசத்துவர் வெளிவருவதாகவும், பக்கத்திலே தேவர்கள் அந்த மகவை ஏந்தி நிற்பதாகவும், வானவர்கள் வணங்குவதாகவும், சேடி ஒருத்தி பக்கத்தில் நிற்ப தாகவும் செதுக்கப்பட்டுள்ளது. சாதாரண மானிடப் பிறவி போன்று போதிசத்துவர் யோனி வாய்ப்பட்டுப் பிறத்தலாகா தாகையால் வலது மருங்குல் வழியாக உதயமானர் என்பது ஐதிகம். இங்குள்ள சிலை மிகப் பழையது என்பதில் சந்தேகமில்லை. உருவங்களின் திரட்சித் தன்மை தேய்ந்துவிட்ட போதிலும் சிற்ப விவரத்தை அறிந்துகொள்ளக் கூடிய நிலையி லிருக்கிறது. இச் சிலை அசோக மன்னனால் பிரதிட்டை செய்யப்பட்டதென்று கர்ண பரம் பரையாக வழங்குகிறது. ஆனால், அசோகன் காலத்தில் புத்த உருவம் வழக்கிலில்லை. போதி விருக்ஷம் அல்லது தர்ம சக்கரமே சின்னமாக விருந்தது. இந்து சமயப் பூசாரி யொருவர் இந்தச் சிலைக்கு நித்தியம் குங்குமமும் புஷ்பமும் சாத்திப் பூஜை செய்து வருகிறார். கிராமத்திலுள்ள குடியான மக்கள் பக்தி சிரத்தையோடு காணிக்கை செலுத்தி வழிபட்டு வருகின்றனர். விக்கிரகத்திலே குங்குமமும் நெய்யும் புஷ்பமும் சாத்தப்பட்டிருப்பதால் புகைப்படம் பிடிக்க விரும்புபவர்கள் இலகுவில் தெளிவான அமைப்பாகப் படம் பிடித்துவிட இயலாதென்பதை உணர்ந்தேன். நான் போன சமயத்தில் பூசாரியின் கையில் எட்டணு காணிக்கையாகச் செலுத்தியவுடன் பட்டுத் திரையை நீக்கிப் படம் பிடிக்க அனுமதி தந்தார். ஆனால் மிகக் குறுகிய அந்த மண்டபத்தில் வெளிச்சம் வர இடமில்லை. இருந்தும் அகப்பட்ட ஒரு படத்தை மாத்திரம் சிரமத்துடன் பிடித்துக்கொண்டு வெளியேறினேன்.

புத்தர் அவதரித்த இந்த உலும்பினி ஸ்தலத்தை முதன் முதலாகக் கண்டு பிடித்து நிர்ணயித்தவர் டாக்டர் ஃபூரர் என்பவர். 1896-ம் ஆண்டிலே ரும்மிந்தேயி பகுதியில் ஆராய்ச்சி செய்த போது தற்செயலாக அசோக ஸ்தம்பம் ஒன்று கண்டெடுக்கப் பட்டது. அந்த ஸ்தம்பத்தில் ஐந்து வரிகளிலே பிராஹ்மி எழுத்துக் களில் பொறிக்கப்பட்டிருந்த கல்வெட்டு சாஸனம் தான் இந்த இடத்தில் புத்தர் அவதரித்தார் என்பதையும் இதற்கு உலும்பினி கிராமம் என்ற பெயர் அப்போதே வழங்கிய தென்பதையும் நிச்சய மாகத் தீர்மானிக்க உதவியது. அந்தச் சாஸனத்தில் கண்ட வாக்கியத்தின் பொருள் வருமாறு :

தேவாநாம் பிரியனை பிரியதர்ஸ ராஜன் அசோகன் தனது மகுடாபிஷேகம் நடந்த இருபதாம் ஆண்டிலே இந்த ஸ்தலத்துக்கு விஜயம் செய்து சாக்கிய முனியாகிய புத்தர் அவதரித்த காரணத்தால் இதில் வழிபட்டார். இங்கு பகவான் அவதரித்தார் என்பதைக் குறிக்க ஒரு சிலாஸ்தம்பமும் குதிரை வடிவமுள்ள ஒரு சிலையும் இங்கே நட்டு வைத்தார். லும்பினி கிராமத்தை அற நிலையச் சட்டத்தின் பிரகாரம் வரியிலிருந்து விலக்கி, விளைவில் எட்டிலொரு பாகம் மாத்திரம் கொடுக்குமாறு கட்டளையும் பிறப் பித்தார்.

இந்த அசோக ஸ்தம்பம் இன்றும் உலும்பினியில் காணப் படுகிறது. சுமார் பதினன்கு அடி உயரமுள்ள ஸ்தம்பம் சுனர் என்ற பிரதேசத்திலுள்ள ஒருவகைக் கல்லில் செதுக்கி எடுக்கப் பட்டது. சாரநாத்திலுள்ள ஸ்தம்பமும் இதே போன்றதுதான். கண்ணாடி போன்ற பளபளப்பும் மெருகும் தோன்றக் கல்லுளி கொண்டே செதுக்கப்பட்டிருப்பது அக்காலத்துச் சிற்பிகளின் கைவண்ணத்துக்கோர் எடுத்துக்காட்டு. இரண்டாயிரத்து முந்நூறு ஆண்டுகளாக வெயிலையும் மழையையும் தாங்கி நின்ற போதிலும் ஸ்தம்பம் மெருகு குன்றுமல் புத்தம் புதிதுபோற் காட்சி யளிப்பது தான் விந்தை. கல்வெட்டு எழுத்துக்கள் சிறிதும் பழுதுபடாமல் காணப்படுகின்றன. தூணின் ஒரு பக்கத்தில் ஒரு வெடிப்புக் காணப்படுகிறது. இது இடியேறு காரணமாக ஏற்பட்டதெனக் கருதுகின்றனர். கல்வெட்டில் குறிக்கப்பட்ட குதிரை வடிவுள்ள சிலை இன்னும் ஒருவருக்கும் தென்படவில்லை. அது இந்தப் பிரதேசத்தில் தான் எங்கோ இன்னும் மண்ணுள் புதையுண்டு கிடப்பதாக நம்பப் படுகிறது. அசோக ஸ்தம்பத்தின் உச்சி மொட்டையா யிருப்பதால் அச்சிலை ஸ்தம்பத்தின் மேல் ஆரோகணிக்கப் பட்டிருந்ததா, அல்லது, தனிப்பட்டதா என்பதும் தெரியவில்லை.

கோயிலுக்கும் அசோக ஸ்தம்பத்துக்கும் அருகாமையில் ஒரு குளம் காணப்படுகிறது. இதை பிரம்ம குண்டம் என்று சொல்லு கிறார்கள். ஆகாச கங்கையொன்று வந்து போதிசத்துவரையும் மாயாதேவியையும் மஞ்சன மாட்டியபோது அந்த நீர் தேங்கி நின்ற மடு இதுவே என்பது ஐதிகம். இந்த மடுவின் பக்கத்திலே தொல் பொருளாராய்ச்சிப் பகுதியினர் தோண்டி யெடுத்த புராதன சின்னங்கள் பல காணப்படுகின்றன. அசோகன் காலத்தில் ஒரு ஸ்தூபியும் விஹாரமும் இருந்ததாகச் சொல்லப்படுகிறது. உலும் பினியில் இந்த விஹாரம் இருந்ததென்பதற்கு அடையாளமாக செங்கற்கட்டிடத்தின் அஸ்திவாரங்க ளிருக்கின்றன. இந்த இடத்தில்

புதியதொரு விஹாரத்தைக் கட்டியெழுப்ப நேபாள அரசாங்கம் திட்டம் போட்டிருப்பதாக அறிந்தேன். (இவ் விஹாரம் இப்போது கட்டப்பட்டுவிட்டதாகத் தெரிகிறது). தொல்பொருளாராய்ச்சி இலாகாவினர் உலும்பினிப் பிரதேசத்தில் அகழ்ந்தபோது லக்ஷக் கணக்கில் செங்கற்கள் கிடைத்து அவர்கள் அவற்றை ஒரு பக்கத்தில் குவித்து வைத்திருந்தனர். கற்பனை யுள்ளம் படைத்த சில உபாஸகர்கள் அந்தச் செங்கற்களை யெல்லாம் திரட்டிக் கோயிலுக்கு இரு புறத்திலும் ஸ்தூபி வடிவத்தில் மேடுகளாக அமைத்து, அந்த மேடுகளின் மீது பழைய கற்றூண்களையும் நாட்டி வைத்துள்ளனர். இது மிகவும் சமீபகாலத்தில் செய்யப்பட்ட கைங்கரியம். சாதாரணமாக யாத்திரிகர் கண்களுக்கு இவை பழைய ஸ்தூபிகள் போலவே காட்சி யளிக்கின்றன.

நேபாள அரசாங்கத்தின் செலவிலே உலும்பினியில் ஒரு மடம் கட்டப்பட்டிருக்கிறது. யாத்திரிகர்கள் இதில் தங்க வசதி யுண்டு. நான் போயிறங்கியபோது இம் மடத்தில் ஒரு பௌத்த பிக்ஷுவைச் சந்தித்தேன். பிக்ஷு சுந்தா என்பது அவர் பெயர். அரை குறையாகத்தான் ஆங்கிலம் பேசினர். நான் லங்காவாசி யென்பதை யறிந்ததும் அவர் தெள்ளத் தெளிந்த சிங்களத்தில் உரையாடியதைக் கேட்டு அவர் சிங்களத் தீவைச் சேர்ந்தவரா யிருக்கலாம் என்று நினைத்து எந்தவூர் என்று கேட்டேன். அவர் தாம் நேபாளவாசி யென்றும் காட்மாண்டுவிலுள்ள ராணு வம்சத்தவர் என்றும் சிறு வயதில் இலங்கைக்குப் போய் பன்னிரண்டு வருட காலம் ஒரு பௌத்த மடத்தில் பயின்றதாகவும் சொன்னர். நேபாளத் தலைநகர் காட்மாண்டுவிலே 1944-ம் ஆண்டில் தர்மோதய சபா என்ற பெயரில் ஒரு பௌத்த நிலையம் ஸ்தாபிக்கப்பட்டது. அந்த ஸ்தாபனத்தின் ஆதரவில்தான் உலும்பினி மடத்தின் நிர்வாகம் இப்போது கண்காணிக்கப்பட்டு வருகிறது. ஆனால் உலும்பினியிலுள்ள மாயாதேவியின் கோயில் நிர்வாகம் இந்துப் பூசாரியைச் சேர்ந்தது.

போதிசத்துவர் உலும்பினிக் கிராமத்தில் அவதரித்திருந்த போதிலும் அவர் ஞானோதயம் பெற்றுப் புத்தராகித் தருமோபதேசம் செய்த காலத்தில் மற்றும் ஸ்தலங்களுக்குச் சென்றதுபோல உலும்பினிக்கும் வந்ததாக பௌத்த நூல்கள் எதிலும் சொல்லப்படவில்லை. இது வியப்பைத் தருகிறது. ஆனால், 'மஹாபரிநிர்வாண சூத்திரம்' என்ற நூலில் நான்கு முக்கிய க்ஷேத்திரங்களை ஒவ்வொரு பௌத்தனும் பக்தி சிரத்தையோடு தம் வாழ்நாளில் ஒருக்காலாவது தரிசிக்கவேண்டும் என்று புத்தர் கூறியதாக ஒரு குறிப்புண்டு.

அந்த க்ஷேத்திரங்களாவன : உலும்பினி, புத்த கயை, சாரநாத், குசீநகர் ஆகியவை.

"ஆனந்தா, நம்பிக்கையுள்ள ஒவ்வொருவரும் வணக்கத்துடன் தரிசிப்பதற்கு நான்கு க்ஷேத்திரங்கள் இருக்கின்றன. ததாகதர் பிறந்த க்ஷேத்திரத்தையும், அவர் ஞாலேதையம் பெற்ற க்ஷேத் திரத்தையும், உபதேசம் செய்து தர்மசக்கரம் உருட்டிய க்ஷேத் திரத்தையும், ததாகதர் பரிநிர்வாணமடைந்த க்ஷேத்திரத்தையும் எவரொருவர் கருத்துடன் தரிசித்து வருகிறார்களோ அவர்களுக்குச் சாந்தியும் முத்தி யின்பமும் கிடைக்கும்."

சீன யாத்திரிகனை பா ஹியன் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டிலே உலும்பினியைத் தரிசித்திருக்கிறான். அவனுக்குப் பின் ஹியூங் ஸியாங் என்ற யாத்திரிகனும் இரண்டு நூற்றாண்டுகள் கழித்து அங்கு போயிருக்கிறான். இவர்கள் எழுதி வைத்த யாத்திரைக் குறிப்புக்களில் பல சுவாரசியமான செய்திகள் காணப்படுகின்றன. பா ஹியன் எழுதிய குறிப்புக்களில் உலும்பினியைப் பற்றி அவன் கண்டவை பின்வருமாறு சொல்லப்பட்டுள்ளன :

"கபிலவஸ்து நகரத்துக்குக் கிழக்கிலே சுமார் ஐம்பது லீ தூரத்தில் (பதினைந்து மைல்) காணப்படுவது அரசனின் நந்தவனம். இதற்கு லும்பினி என்ற பெயர் வழங்குகிறது. மாயாதேவி இங்குள்ள ஒரு தடாகத்தில் ஸ்நானம் செய்த பின்னர் வடக்கு நோக்கி நடந்து இருபது அடிகள் எடுத்து வைத்ததும் ஒரு மரத்தின் கிளையைப் பற்றி நின்று கிழக்குத் திசையை நோக்கியவாறு இளவரசரைப் பெற்றெடுத்தாள். பூமியில் இறங்கிய அந்த மகவு ஏழடி எடுத்து நடந்தது. தேவர்கள் இருவர் தோன்றி அவரது உடலை மஞ்சனமாட்டினர். அந்த ஸ்தலத்திலே இப்போது ஒரு மடுவைத் தோண்டி வைத்துள்ளனர். அந்த மடுவும் அதன் பக்கத்திலுள்ள தடாகமும் இங்குள்ள பிக்ஷுக்களின் உபயோகத்திலிருந்து வருகின்றன."

கி. பி. ஐந்தாம் நூற்றாண்டில் பா ஹியன் வந்து பார்த்தபோது மேற்சொன்னவற்றையே கண்டு குறித்துள்ளான். அசோகன் எழுப்பி வைத்த ஸ்தம்பத்தைப்பற்றியோ கல்வெட்டைப்பற்றியோ மற்றும் அங்கிருந்த ஸ்தூபி விஹாரங்களைப்பற்றியோ எதுவும் குறிப்பிடப்படாமையால் அவையெல்லாம் அப்போதே அழிவுபட்டு மண்ணுள் புதையுண்டுபோ யிருக்கவேண்டும். அதன்பின் இரு நூற்று முப்பது வருடங்கள் கழித்து ஹியூங் ஸியாங் வந்து பார்த்த காலத்தில் அசோக ஸ்தம்பத்தைப்பறறியும் மடுவைப்பற்றியும் பல ஸ்தூபிகளைப்பற்றியும் குறிப்பிட்டுள்ளான். அசோக ஸ்தம்பம் கீழே

விழுந்துகிடந்ததாகச் சொல்லப்படுகிறது. கி. பி. பதினோராம் நூற்றாண்டில் பௌத்த அரசர்களாகிய பாலர் வம்சத்தினர் அந்த ஸ்தம்பத்தைப் பழையபடி நிறுத்தி வைத்திருத்தல் கூடும் என்று வின்ஸெண்ட் ஸ்மித் என்ற அறிஞர் அபிப்பிராயப்படுகிறார்.

உலும்பினி வனத்தில் சால விருக்ஷங்கள் அடர்ந்திருந்தன என்று வரலாறு கூறுகிறது. புத்தர் வாழ்க்கை சம்பந்தமாக, அவர் தரிசித்த பல இடங்களில் இந்த சால விருக்ஷம், மாந்தோப்புக்களைப் போல, முக்கிய இடம் பெறுகிறது. அவர் பிறந்ததும் சால விருக்ஷ நிழலில், இறந்ததும் அதே சால விருக்ஷ நிழலில்தான். மாயாதேவி அந்த மரத்தின் கிளையைப் பற்றிக்கொண்டே புத்தரைப் பெற்றெடுத்தாள் என்ற சிறப்பைக் கொண்டிருந்தும் உலும்பினியில் மருந்துக்கும் கூட ஒரு சால விருக்ஷத்தை நான் காண முடியவில்லை. புத்தரின் ஞாலேதயத்துடன் சம்பந்தப்பட்ட அரசமரம் ஒன்றுதான் சம்பிரதாயத்துக்காக அங்குள்ள கோயிலுக்குப் பக்கத்தில் வளர்ந்திருப்பதைக் கண்டேன். என்னுடன் பேசிக்கொண்டு வந்த பிக்ஷு சுந்தாவிடம் விசாரித்தபோது அவர் புன்னகையுடன் தாமே இன்னும் சால விருக்ஷம் ஒன்றைத் தம் கண்ணால் கண்டதில்லை யென்றும் உலும்பினிக்கு வெகு தூரத்தில், பத்துப் பதினைந்து மைல் தொலைவிலுள்ள காட்டில், அந்த விருக்ஷம் இருப்பதாக மட்டும் கேள்விப்பட்டிருக்கிறதாகவும் சொன்னார். ஐதிகத்தைக் காப்பாற்றுவதற்காக அந்தப் புண்ணிய ஸ்தலத்தில் ஒரு சால விருக்ஷக்கிளையை எவராவது கொண்டுவந்து நாட்டியிருக்கக் கூடாதா என்று நான் எண்ணினேன். 1956ம் ஆண்டு நடைபெற்ற புத்த ஜயந்தி விழாவின்போது நேபாள அரசாங்கம் இங்கு சால விருக்ஷம் நாட்டியிருப்பதாக இப்போது அறிகிறேன்.

★

சுமார் ஒரு மணி நேரமாக நேபாள பிக்ஷு சுந்தாவுடன் பேசிக்கொண்டே உலும்பினியின் கோயிலையும் மடத்தையும் திருக்குளத்தையும் சுற்றிவந்தோம். குதிரைக்காரர் தமது குதிரைகளின் சேணத்தை அவிழ்த்துவிட்டுத் தினி போட்டுக்களை தீர்த்து வைத்திருந்தார்கள். நானும் எனது வழித்துணை நண்பன் வஸந்தராமும் சிறிது வேளை உட்கார்ந்து மடத்துத் தோட்டத்திலுள்ள கிணற்றிலிருந்து குளிர்ந்த நன்னீர் அள்ளிக் குடித்துவிட்டு மறுபடியும் பிரயாணத்தை ஆரம்பித்தோம். குதிரைகள் முதலில் சேணம் தரித்துக் கொள்ள மறுத்தன. பின்னர் ஒருவாறு இணங்கி, வீடு திரும்பு கிறோம் என்ற உணர்ச்சி வந்ததும் முன்னரைவிட அதிக வேகமாக நடக்க ஆரம்பித்தன.

நௌத்தன்வாவி லுள்ள லங்கா பாபா தர்மசாலைக்கு மறுபடியும் வந்து சேரும்போது மாலை மூன்றரை மணியாகிவிட்டது. நான்கு மணிக்கே அங்கிருந்து கோரக்பூருக்கு ஒரு வண்டி புறப்படுமென்று அறிந்ததும் மூட்டையைக் கட்ட ஆரம்பித்தான் வஸந்தராம். மடத்திலுள்ள ஸ்ரீநிவாஸ நாயக தேரரிடம் விடைபெற்றுக்கொண்டு நௌத்தன்வாவை விட்டுப் புறப்பட்டோம்.

போதிசத்துவராகிய குழந்தையைப் பெற்றெடுத்துக்கொண்டு மாயாதேவி கபிலவஸ்துவுக்குத் திரும்பினாள். நாமும் அங்கே தொடர்ந்து சென்று போதிசத்துவர் வாழ்க்கையைக் கவனிப்போம்.

ஐந்தாம் அத்தியாயம்

சோதிடன் வாக்கு

உலும்பினி வனத்திலே மாயாதேவிக்குக் குழந்தை பிறந்துவிட்ட தென்ற செய்தி அந்த க்ஷணமே குதிரை வீரர்கள் மூலம் கபிலவஸ்து வில் சுத்தோதன மன்னனுக்கும் தேவதாக நகரில் மாயாதேவியின் தந்தை அஞ்சனனுக்கும் அறிவிக்கப்பட்டது. சுத்தோதனன் கொண்ட மகிழ்ச்சிக் களவில்லை. சாக்கிய வம்சம் தழைக்க ஒரு சற்புத்திரன் பிறந்துவிட்டான் என்று கேள்விப்பட்டு ஆனந்தக் கண்ணீர் வடித் தான். தாமதமில்லாமலே தனது பரிவாரங்கள் புடைசூழ உலும்பினி வனத்துக்குப் புறப்பட்டான். புறப்படு முன்பு கபிலவஸ்து நகரத்தை, இளவரசனை வரவேற்குமுகமாக அலங்கரித்து வைக்குமாறு பறை யறைவித்துவிட்டுச் சென்றான்.

உலும்பினியிலிருந்து ஏற்கெனவே மாயாதேவியின் பரிவாரம் புறப்பட்டு வந்து விட்டதால் சுத்தோதனன் பரிவாரமும் அஞ்சனன் பரிவாரமும் அவர்களை இடைவழியிலே சந்தித்தன. இதற்கிடையில் இரு நகரத்திலிருந்தும் செய்தியைக் கேட்டுத் திரண்டு வந்திருந்த மக்கட் கூட்டமும் பெருகிவிட்டது. சாக்கியரும் கோலியரும் மள்ள ரும் சமுத்திரம்போல் பெருகி ஜயகோஷமிட்டனர்.

நவமணி பதித்த பொற் பூம்பல்லக்கில் நானிலத்தை யரசாள வரும் நாயகனைக் கபிலவஸ்து மக்கள் கரை புரண்ட குதூகலத்தோடு வரவேற்றனர். 'தோமறு வீதியும் தோமறு கோட்டியும் பூரண கும்பமும் பொலப் பாலிகைகளும் பாவை விளக்கும் பல உடன் பரப் பினர். காய்க்குலைக் கமுகும் வாழையும் வஞ்சியும் பூக்கொடி வல்லி யும் கரும்பும் நாட்டினர்'. வீதி எங்கணும் பழ மணல் மாற்றிப் புது மணல் பரப்பினர். கபிலவஸ்து நகரமே இந்திரலோகமாக மாறியது.

ஊர்வலம் அரண்மனையை வந்தடைந்ததும் சுத்தோதன மன் னன் ஆயிரம் பிராமணர்களை யழைத்துப் பொன்னும் மணியும் பட்டு மாக வாரி வாரி யிறைத்துத் தானம் வழங்கினன். பல்லாயிரக் கணக்கான உழவர்களுக்கு அன்னதானம் கொடுத்தான்.

கொண்டாட்டமெல்லாம் ஓய்ந்து ஊரடங்கிய வேளையில் தவ சிரேஷ்டரான அசித முனிவர் என்பவர் அங்கு வந்து சேர்ந்தார். உச் சயினி நகரத்தில் அந்தண குலத்தில் பிறந்த அந்த உத்தமர் விந்திய

கிரிச்சாரலில் உறைந்து கடுந் தபசில் ஈடுபட்டு அரும்பெரும் சித்தி களைப் பெற்றிருந்தார். உலும்பினி வனத்தில் ஒரு குழந்தை பிறந்த தென்பதைத் திரிகாலமு முணர்ந்த அந்த ஞானியாகிய அசித முனிவர் அறிந்ததும் வருங்கால புத்தர் தோன்றினர் என்று கண்டு மிகவும் விரைந்து கபிலவஸ்து நகரத்திற்கு வந்தார். முனிவரைக் கண்டதும் சுத்தோதன மன்னன் பெருமகிழ்ச்சி கொண்டு வரவேற்று உபசரித்தவுடன் அசித முனிவர் மன்னனைப் பார்த்து, "மன்னவ! ஒப்பற்ற மாணிக்கமான ஒரு தவச்செல்வன் பிறந்துளான் என்று கேள்வியுற்று நான் இங்கு வந்தேன், உன் வாழ்வு நல்வாழ்வாகுக" என்று வாழ்த்தினர். சாக்கிய மரபின் பெருமையைக் காக்க வந்த செம்மலுக்கு வேதரிஷியின் ஆசீர்வாதம் கிடைக்கவேண்டுமென்று ஆசை கொண்ட சுத்தோதனன் குழந்தையைக் கொண்டுவரச் செய்து முனிவரின் பாதத்தடியில் வைக்க முயன்றான். அசித முனிவர் திடுக்குற்று, "சுத்தோதன! இந்தக் குழந்தை சாமானியப் பிறப் பென்று கருதாதே. மகாஞானிகளுக்கும் ஞானியாக வரப்போகும் உத்தம ஜீவன் இது. எனது பாதங்கள் இக் குழந்தையின் முடியில் தீண்டுவதற்குப் பதிலாக அதன் பாதங்களையே நான் என் முடியில் தரித்துக்கொள்ளவேண்டும்" என்று சொல்லித் தடுத்தார். போதி சத்துவரின் பாதங்கள் தாமாகவே முனிவரை நோக்கித் திரும்பின. அசித முனிவர் நன்றாகக் குழந்தையை உற்று நோக்கினர். போதி சத்துவரின் பாதத்தில் ஸஹஸ்ரார சக்கர ரேகையும்* மற்றும் அவரிடம் முப்பத்திரண்டு லக்ஷணங்களும் நிறைந்திருப்பதைக் கண்ட வுடன் மெய்ம்மயிர் சிலிர்த்துக் கண்ணீர் வார நின்றார்.

இந்தக் காட்சியைக் கண்டதும் சுத்தோதனன் நடுங்கினன். குழந்தைக்கு ஏதோ தீங்கு நேரிடப் போகிறது என்று முனிவர் தெரிந்துகொண்டார் போலும் என எண்ணி மனம் வெதும்பினன். பக்கத்தில் சூழ்ந்திருந்தோர் யாவரும் கவலை கொண்டனர். சுத்தோ தனன் முனிவரைப் பார்த்து, "ஸ்வாமி! எதற்காக இங்ஙனம் கண்ணீர் வார நிற்கின்றீர்கள்? குழந்தைக்கு அரிஷ்டம் ஏதாவ துண்டென்று கண்டீர்களா?" என்று குளறினன். அசித முனிவர் அழுகையை நிறுத்திக்கொண்டு, "மன்னவா! உத்தமோத்தம ஜீவ னுக்குரிய முப்பத்திரண்டு லக்ஷணங்களும் இந்தக் குழந்தையிடம் காணப்படுகின்றன. இது, கேவலம், சாதாரண மானிடப் பிறவி யல்ல. சகல குண சம்பன்னனாக இது வாழ்ந்து அரண்மனையில் தங்கி யிருந்தால் அவனியை யாளும் சக்கரவர்த்தியாவான் உன்

* "ஆயிரவாரத்தாழியன்"—மணிமேகலை 5: 101

மகன். அரண்மனையைத் துறப்பானுயின் சர்வஞ்ஞத்துவம் பெற்றுப் பரிபூரண புத்தனுவான். உலக மக்களின் அல்லலைத் தீர்க்க இப்புத்த ஞாயிறு உபதேசம் செய்யப்போகும் நாள் வரை என் கட்டை உயிருடன் வாழக் கொடுத்துவைக்கவில்லையே என்று தான் நான் கவலைப்பட்டுக் கண்ணீர் வடித்தேன். ஆகையால் குழந்தையின் பொருட்டாக நான் அழவில்லை. என் பொருட்டாகவே அழுதேன்" என்றார்.

அசித முனிவர் கூறிய வார்த்தைகளைக் கேட்டதும் சுத்தோதன மன்னன் ஒரு கணம் திகைத்தான். வேதரிஷி வாக்குப் பொய்யாதென்பதை யுணர்ந்தவன். இருந்தும், அரண்மனையில் தங்கியிருந்தால் அவனியை யாளும் சக்கரவர்த்தியாவான் என்ற வார்த்தைகளில் தைரியம் கொண்டு, "ஸ்வாமி! தங்கள் ஆசீர்வாதத்துக்காக நன்றி செலுத்துகிறேன்" என்று கூறி உளம் குளிர்ந்து பலவிதமான பரிசுகளையெல்லாம் வரவழைத்து முனிவரின் பாதங்களில் வைத்து நமஸ்கரித்தான். முனிவர் புன்முறுவல் செய்து அப் பரிசுகளையெல்லாம் தம் இரு கை கொண்டும் எடுத்துப் போதிசத்துவரின் பக்கமாக வைத்து நமஸ்கரித்துவிட்டு, "மன்னவா! இவையெல்லாம் சேரத் தகுதியுள்ள இடத்துக்கே நீ வழங்க வேண்டும்" என்று கூறி விடை பெற்றுக்கொண்டு தம் மார்க்கத்தில் சென்றார்.

குழந்தை பிறந்த ஐந்தாவது நாள் பிள்ளைக்குப் பெயரிட வேண்டு மென்று அதற்குரிய விழாவுக்கான சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டன. வேதவேள்விகளில் சிறந்த அந்தணர் நூற்றெண்மரை அரசன் வரவழைத்திருந்தான். சோதிடம் வல்லுநரான பிராமணர் எண்மர் ஜாதகம் கணிக்க வந்திருந்தனர். குழந்தையை ஈன்றெடுத்த தாயாராகிய மாயாதேவியை வாழ்த்துவதற்கென்று கபிலவஸ்துவிலுள்ள பெருங்குடிப் பெண்கள் யாவரும் அங்கு வந்து கூடினர். மகதநாட்டு மன்னனும் கோசலநாட்டு மன்னனும் பெருந் திரவியங்களுடன் தமது தூதுவரை யனுப்பியிருந்தனர். கோலியரும் விரிஜியரும் மள்ளரும் பல்வேறு பரிசங்களுடன் வந்திருந்தனர். சுத்தோதனன் அரண்மனை முழுவதும் அன்று குபேர னிருக்கைபோல் காட்சியளித்தது. பெரியோர்கள் முன்னிலையில் குழந்தைக்கு சர்வார்த்த சித்தர் என்று பெயரிட்டார்கள்.

தோன்றும்போதே சகல சம்பத்துக்களிலும் சித்தி பெற்றுள்ள குழந்தை என்பதற்காக இவ்வாறு பெயரிடப்பட்டதென்று சிலர் பொருள் கொள்ளுகிறார்கள். ஆனால், சுத்தோதனனின் வாழ்க்கை லக்ஷியத்தை நிறைவேற்ற வந்தவன் என்று வேறு சிலர் அதற்குப்

பொருள் கொள்வர். சர்வார்த்த சித்தர் என்று பெயரிடப்பட்ட தாயினும் புத்தரின் இளமைப் பெயர் சித்தார்த்தர் என்றே வழங்கி வந்தது. க்ஷத்திரியரிற் பலர் அந்நாளில் வேத ரிஷிகளின் பெயர் களையும் கோத்திரப் பெயராக வழங்கி வந்தனராகையால் சித்தார்த்தர் கௌதமர் என்ற பெயரையும் தரித்திருந்தார். ஆகவே, சர்வார்த்த சித்தர் என்றும், சித்தார்த்தர் என்றும், சித்தார்த்த கௌதமர் என்றும் அவரை அழைத்தனர்.

ஜாதகம் கணிக்க வந்திருந்த வேதியர் எண்மரும் முன்பு மாயாதேவி கண்ட கனவின் பலன் சொன்ன அதே மறையோர்தான். இவர்களில் ஏழு பேர் இக் குழந்தை அகில லோகத்தையும் ஆளும் சக்கரவர்த்தியாவான் என்று ஜாதக பலன் சொன்னர்கள். அவர்களில் மிக இளையோனாகிய கௌண்டின்னியன் என்ற அந்தணன் மாத்திரம் வேறு விதமாகக் கருதினன். அவன் சொன்னன்: "அரசே! இந்தக் குழந்தை சர்வ கலைகளிலும் தேர்ச்சி யடைந்து அரண்மனையில் ராஜ போகத்துடன் வளர்ந்த போதிலும் என்றோ ஒருநாள் துறவியாகிப் புத்தனவது நிச்சயம்" என்று தைரியத்துடன் கூறினன்.

முன்பே அசித முனிவர் சொன்ன வார்த்தைகள் சுத்தோதனன் காதுகளில் இன்னும் ஒலித்துக்கொண்டுதா னிருந்தன. கௌண் டின்னியன் சொன்ன சொற்கள் அதை ஊர்ஜிதப்படுத்தியதைக் கண்டதும் தீராக் கவலை ஏற்பட்டது. "எப்பொழுது துறவியாவான்? அதற்கு அடையாளங்கள் ஏதாவது உண்டா?" என்று கேட்டான் சுத்தோதனன். அந்தணன் கௌண்டின்னியன், "அதற்கு நான்கு நிமித்தங்கள் ஏற்படும். வயோதிகன், பிணியாளன், பிணம், துவராடை தரித்த சிரமணன்; இந்த நான்கு காட்சிகளைக் கண்டதும் உன் மகன் துறப்பான்" என்று கூறினன்.

தன் மகன் துறவியாவான் என்பதைக் கேட்டதும் சுத்தோதனன் மனம் கவன்றான். எப்படியும் அந்த நான்கு காட்சிகளையும் காண முடியாதவாறு தடுக்கவேண்டும் என்று உறுதி கொண்டான்.

சோதிடன் மேலும் ஒரு துயரத்தை அறிவித்தான். "மன்னவ! நீ இன்னும் ஒரு துன்பத்தை எதிர்கொள்ள ஆயத்தமா யிரு:

> புத்தன்தாய் நண்டு இப்பி வாழை புன மூங்கில்
> கத்தும் விரியன் கடுஞ் சிலந்தி—இத்தனையும்
> வேலாலும் வாளாலு மன்றியே தாங்கொண்ட
> சூலாலே தம்முயிர்க்குச் சோர்வு*

---

* நீலகேசி உரை மேற்கோள்.

என்பது லோக வசனம். புத்தராகவேண்டிய இக் குழந்தையைப் பெற்ற தாய் கருவுயிர்த்த ஏழாம் நாளில் உயிர் துறப்பாள் என்றும் சொல்லப்படுகிறது" என்ருன்.

மங்கலச் சிறப்புடன் கூடியிருந்த சுத்தோதனன் அரண்மனையில் அந்தக்ஷணமே துக்கசாகரம் சூழ்ந்துகொண்டது. சோதிடன் வாக்குப் படியே கருவுயிர்த்த ஏழாம் நாளில் அன்னை மாயாதேவி மரண மடைந்தாள். அவளுடம்பைத் தகனம் செய்து அஸ்தியை ஒரு குடத்தில் வைத்து அரண்மனையின் வெளிப் புறத்தில் ஒரு ஸ்தூபி எழுப்பி வைத்தனர். பெற்ற தாயைப் பறிகொடுத்த சித்தார்த்த ருக்கு சிற்றன்னை பிரஜாவதி கோதமி யிருந்து சகல காரியங்களையும் ஈன்ருளருமையுடன் கவனித்து வந்தாள்.

மழலைப் பருவத்தில் வளரும்போது சித்தார்த்தரை ஒரு நாள் கபிலவஸ்துவிலுள்ள ஆலயத்துக்கு அழைத்துப் போய் வரவேண்டு மென்று சாக்கியர் பலர் தமது குடும்ப வழக்கத்தை எடுத்துச் சொல்லியதன் பேரில் சுத்தோதனன் உடன்பட்டான். சிற்றன்னை பிரஜாவதி குழந்தையை அலங்கரித்தபோது சித்தார்த்தர் தமது மழலை மொழியில், "எங்கேயம்மா நாம் போகிறோம்?" என்று கேட்டார். "கோயிலுக்குப் போய் ஸ்வாமி தரிசனம் செய்து வருவோம்" என்று தாயார் சொன்னவுடன் சித்தார்த்தர் புன்னகை செய்து, "தேவாதி தேவன் என்று தேவர்கள் எல்லாரும் என்னையே அழைக்கக் கேட் டிருக்கிறேன்!" என்ருராம். இது குழந்தையின் மழலைப் பேச்சு என்று மாத்திரம் பிரஜாவதி கருதிக் கட்டி யணைத்து முத்தமிட்டாள். குழந்தையை அலங்கரித்து அரண்மனையி லுள்ளார் யாவரையும் அழைத்துக்கொண்டு கோயிலுக்குப் போனர்கள். ஆலயத்தில் ஓர் அற்புதம் நிகழ்ந்தது.

சித்தார்த்தரின் சின்னஞ்சிறு வலது பாதம் கோயில் வாசற் படியில் பட்ட மாத்திரத்தே உள்ளே யிருந்த விக்கிரகம் கண்டோர் அதிசயிக்கும் வண்ணம் தலை வணங்கியது! இந்த அற்புதத்தைக் கண்ட சுத்தோதனன் மெய்ம்மறந்தான். இது தெய்வீகக் குழந்தை யென்று பாராட்டினன்.

சித்தார்த்தருக்கு ஐந்து வயதாகிய வுடன் வழக்கப் பிரகாரம் அக்ஷராரம்பம் செய்விக்க எண்ணிய சுத்தோதனன், உத்தர கோச லத்தில் புகழ்பெற்று விளங்கிய மாதவ சிரேஷ்டராகிய விஸ்வா மித்திர முனிவரின் ஆசிரமத்துக்கு அழைத்துச் சென்ருன். அந்தக் காலத்தில் ஆரியாவர்த்தத்திலுள்ள பிராமணர்களும் க்ஷத்திரியரும் வேதாத்யயனம் முதல் படைக்கலப் பயிற்சி வரையில் குருகுலவாச மமர்ந்து கற்றுக்கொள்வது வழக்கம். விஸ்வாமித்திர முனிவர் சகல

சாஸ்திரங்களும் உணர்ந்தவர். உபநிஷத்துக்களில் வல்லவர். விஸ்வாமித்திரர் அன்புடன் சித்தார்த்தரை வரவேற்று அக்ஷரா ரம்பம் செய்யத் தொடங்கினர். 'அகரம்' என்று ஆசிரியர் வாய் திறப்பதற்கு முன்னரே சித்தார்த்தர், "குருதேவா! அறுபத்து நான்கு வகை மொழிகளிலே எந்த மொழியின் அக்ஷரங்களைத் தாங்கள் முதலில் புகட்ட விரும்புகிறீர்கள்?" என்று கேட்டுவிட்டு, அறுபத்துநான்கு மொழிகளின் பெயர்களையும் ஒப்பு வித்தார்.

இந்த அதிசயத்தைக் கண்ட ஆசிரியர் விஸ்வாமித்திரர் திகைத் துப்போய் காயத்ரி மந்திரத்தை யுபதேசித்தார். சித்தார்த்தர் அந்த மந்திரத்தை ஆசிரியர் சொல்லி முடிப்பதற்கு முன்பே உச்சரித்து விட்டு, சந்தனப் பலகையில் அம்மந்திரத்தைத் தமக்குத் தெரிந்த அறுபத்துநான்கு மொழிகளின் லிபிகளிலும் எழுதிக் காண்பித்தார். விஸ்வாமித்திர முனிவர் யோசிக்கத் தொடங்கினர்: இது சாமா னியப் பிறவியல்ல. தெய்வப் பிறப்பு. முற்பிறப்பில் பல கோடி புண்ணியங்கள் செய்த பலத்தினல் இவ்வளவு ஞானம் பெற்று விளங்குகிறது என்று மகிழ்ந்தார்.

விஸ்வாமித்திர முனிவரிடம் சித்தார்த்தர் சில கால மிருந்து சகல கலைஞானங்களையும் கற்கலானர், இலக்கணம், காவியம், நாடகம், கணிதம், சாஸ்திரம் முதலிய எல்லாத் துறைகளிலும் தனக் குவமை யில்லை யென்னும் வகையில் கற்றுத் தேறினர். அவருடன் கூடப் பயின்றவன் உதாயி என்ற அந்தணச் சிறுவன். சித்தார்த்தர் பிறந்த அதே தினத்தில் பிறந்தவன். இருவரும் இணை பிரியாத் தோழர்களாக விளங்கினர்கள். சித்தார்த்தர் கலைகளில் வல்லவரா யிருந்தும், சில சமயங்களில் ஆசிரியரைவிட அதிக தர்சன உணர்ச்சி பெற்றவராயிருந்தும், குருவிடத்தில் மிகுந்த பக்தியோடு சிறந்த ஒழுக்க சீலராக விளங்கினர்.

அறிவுக்கலைகள் யாவற்றையும் விஸ்வாமித்திரரிடம் பயின்ற பின்னர் சித்தார்த்தர் சாந்திதேவர் என்ற ரிஷியின் ஆசிரமத்திலே படைக்கலப் பயிற்சியையும் யானையேற்றம் குதிரை யேற்றம் முதலிய அரசிளங் குமரருக்குரிய வித்தைகளையும் கற்றுத் தேறினர். சாக்கிய அரச குடும்பத்திலுள்ள மற்றும் பல இளைஞரும் சகபாடிக ளாகப் பயின்றபோதிலும் சித்தார்த்தரின் திறமைக்கு எவரும் நிகராக முடியவில்லை.

போதிசத்துவர் தோன்றிய நாளிலிருந்து சாக்கியர் நாட்டிலே செல்வம் கொழித்தது. வறியோரும் பிணியோரும் அருகத் தொடங் கினர். மக்கள் யாவரும் பெருமகிழ்ச்சியுடன் எவ்வித குறையு மில்லாமல் வாழ்ந்து வந்தனர். சுத்தோதன மன்னனும் தனது

ராஜ்ய பரிபாலனத்தில் என்று மில்லாத கவனம் செலுத்திக் குடிகளின் இன்பமே தனது இன்பம் என்று செங்கோல் செலுத்தி வந்தான். சிறைக் கூடங்களில் கைதிகளில்லை; நியாயஸ்தலங்களிலே வழக்காடுவாரில்லை. நாட்டிலே திருடர் பயமில்லை. எங்கும் சத்தியமும் சாந்தமும் நோயற்ற வாழ்வும் குறைவற்ற செல்வமுமாக கபிலவஸ்து நகரம் பொலிவுடன் விளங்கியது. உலகை உய்விக்க வந்த உத்தமன் தோற்றத்திலல் அவர் பிறந்த நகரத்தில் பசியும் பிணியும் போய் தர்மம் தலைதூக்கி நின்றது.

குருகுல வாசத்தை முடித்துக்கொண்டு சித்தார்த்தர் அரண்மனைக்கு வந்தார். அரண்மனையிலே மற்றும் பல இளைஞர்களைத் தோழர்களாக நியமித்துச் சகலவிதமான ஆடல் பாடல்களுக்கும் கேளிக்கை விளையாட்டுக்களுக்கும் சுத்தோதன மன்னன் ஏற்பாடுகளெல்லாம் செய்து வைத்தான். பக்கத்திலுள்ள வனத்திலே வேட்டை முதலிய பொழுது போக்குகளுக்கும் ஏற்பாடுகள் செய்து கொடுத்தான். ஆலல், சித்தார்த்தரின் உள்ளம் அவற்றை யெல்லாம் நாட மறுத்தது. அரண்மனையை விட்டு வெளியேறுமல் அங்கேயே பொழுதைக் கழித்து வந்தார். நாளுக்கு நாள் அவர் இளம் உள்ளத்திலே சிந்தனைகள் படரலாயின. ஏற்கெனவே விஸ்வாமித்திர முனிவர் ஆசிரமத்தில் சமயக் கணக்கர் பலர் கூடி வாதம் செய்வதையெல்லாம் செவிமடுத்து வந்திருக்கிறார். வேதவேள்விகள் ஒரு புறமும், உபநிஷத வியாக்கியானங்கள் ஒரு புறமும், தத்துவ விசாரணைகள் இன்னொரு புறமுமாகப் பாரமார்த்தம் தேடி ஆராய்ச்சிகள் நடந்த சூழ்நிலையில் சித்தார்த்தர் சிந்தனையைப் பறிகொடுத்திருந்தார். யோகநிஷ்டையி லீடுபட்ட பலரின் அனுபவங்களையும் அவர் அறிந்து வைத்திருந்தார். ஆகவே, அரண்மனையில் அவர் அமைதி கொள்ளாததில் ஆச்சரியமில்லை.

கபிலவஸ்து நகரத்தில் ஆண்டுதோறும் நடக்கும் ஏர் மங்கல விழாவுக்காக ஒரு நாள் பிரமாதமான ஆயத்தங்களெல்லாம் நடைபெற்றன. மன்னனும் மந்திரி பிரதானிகளும் நாட்டிலுள்ள பெரியோர்களும் சாதாரண விவசாயிகளும் இந்த விழாவில் கலந்து கொள்வார்கள். பருவ மழை பெய்து புதிய விதைப்பு ஆரம்பிக்கும் போது சுபதிருஷ்டியாக மன்னன் ஏர் பிடித்து உழுவது ஒரு வழக்கம். அன்றியும், சாக்கியர் யாவருமே உழவைத் தொழிலாகக் கொண்டவர்கள். ஆகையால், சுத்தோதனன் அன்றைய விழாவில் பல் சிறப்போடும் கலந்துகொள்வதற்கு ஏற்பாடாகி யிருந்தது. ஊரே திரண்டு வந்த அந்த விழாவில் மன்னன் அரண்மனையிலுள்ளவர்களும் கலந்துகொண்டன ராகையால் சித்தார்த்தரும்



2. கபிலவஸ்து—மகாதேவர் ஆலயம் (பக். 8)



3.
மாயாதேவியின்
கனவு—சாஞ்சி
சிற்பம் (பக். 16)



4. மாயாதேவி ஆலயம்— தில்லோராக் கோட்டம், கபிலவஸ்து (பக். 22)



5.
உலும்பினி யாத்திரை
(பக். 29)



6.
உலும்பினி—
அசோகஸ்தம்பம்,
கோயில், குளம்
(பக். 35)



7 புத்தர் பிறப்பு—உலும்பினி (பக்- 36)



8.
திராஜகிருகம்
வவபாரகிரி
(பக். 96)



9. இராஜ கிருகம்—சப்ததாரை வெந்நீர் ஊற்று (பக். 97)

தோழர்கள் சூழ அங்கே போயிருந்தார். ஏர் விழா மிக ஆரவாரத்துடன் நடைபெற்றது. வெள்ளியால் சமைக்கப்பட்ட ஏரைப் பிடித்து மங்கள வாத்தியங்கள் முழங்க மன்னன் சுத்தோதனன் முதல் வயலை உழுதான். ஆயிரம் ஆயிரம் கலப்பைகள் அதே சமயம் மன்னனைத் தொடர்ந்தன. இந்த அற்புதக் காட்சியையே மக்களெல்லாரும் கண்கொட்டாமல் பார்த்து நின்றனர்.

விழா முடிவுற்றதும் அரண்மனையி லுள்ளவர்கள் யாவரும் திரும்பினர். ஆலை சித்தார்த்தரை மட்டும் எங்கும் காணவில்லை. முதலிலே அவரை விட்டுச் சென்ற இடத்தில் தோழர்கள் வந்து பார்த்தனர். சித்தார்த்தர் பத்மாசனம் வகித்துச் சிந்தையை அடக்கி மோன நிஷ்டையில் ஆழ்ந்திருப்பதைக் கண்டு திகைத்தனர். இந்தக் காட்சியைச் சுத்தோதனனும் மற்றவர்களும் வந்து பார்த்தார்கள். மற்றைய விருக்ஷங்களின் நிழலெல்லாம் சூரியன் நின்ற திசைக் கெதிராகச் சாய்ந்திருக்க, சித்தார்த்தர் உட்கார்ந்திருந்த இடத்திலுள்ள நாவல் மரத்தின் நிழல் மாத்திரம் சிறிதும் இடம் விட்டுப் பெயராது அவர் ஆரம்பத்தில் உட்கார்ந்தபோது எங்கே யிருந்ததோ அதே திசையில் அப்படியே இருந்தது. இந்த அற்புதம் சுத்தோதன மன்னனைத் திகைக்கச் செய்தது. தன்னையு மறியாமல் அவன் தன் புதல்வனை விழுந்து வணங்கினன். நிஷ்டை கலைந்ததும் ஒன்றுமே நிகழாதது போல சித்தார்த்தர் எழுந்து நடந்தார். யாவரும் அரண்மனை போய்ச் சேர்ந்தனர்.

புத்தர் வாழ்க்கையில் இது ஒரு முக்கியமான சம்பவம். அவரே பின் ஒரு நாள் இதைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார். தியானத்துக்குரிய படிகளில் முதல் நான்கு படிகளை இந்த முதல் அனுபவத்தில் அவர் பெற்றார். சம்போதி ஞானம் பெற அவர் பின்பு உருவில்வாவில் அரச மரத்தின் கீழ் நிஷ்டை யிருக்கும்போதும் இதே அனுபவத்தை ஞாபகத்தில் கொண்டே தியானத்திலமர்ந்து வெற்றி கண்டதாகச் சொல்லுகிறார்.

சித்தார்த்தரின் உடலானது வளர்ச்சியடைய உள்ளமும் வளர்ச்சியடையத் தொடங்கியது. முற்பிறவிகளில் செய்த புண்ணியச் செயல்களின் பலன்களெல்லாம் ஒருங்கு திரண்டு இப் பிறவியில் நிர்வாண மோக்ஷம் எய்துதற்குரிய பக்குவ நிலையை உருப்படுத்தின.

போதிசத்துவராகப் பிறவி யெடுப்பதற்குப் பத்துவிதமான பண்புகள் நிறைவுறவேண்டு மென்று பௌத்த நூல்கள் கூறுகின்றன. கௌதம சித்தார்த்தர் அங்ஙனம் நிறைவுறப் பெற்றவர். இவற்றைத் தசபாரமிதைகள் என்று சொல்வார்கள்.

முற்பிறவிகள் பலவற்றில் செய்து வந்த புண்ணியச் சேர்க்கைகள் இவை. இவை நிறைவுற்றபோதுதான் புத்த ஞாயிறுகப் பூவுலகில் தோன்றி மக்களை உய்விக்கப் போதிக்கவேண்டு மென்பது நியதி.

பாரமிதை என்பதற்குக் 'கரையை அடைவது' என்று பொருள். பல்வேறு தியாகங்களைச் செய்து புண்ணியப் பேறுகளை நிறைத்துக் கரை சேர்வது. அது பத்து வகைப்படும். தானம், சீலம், நிஷ்காம்யம், பிரஜ்ஞை, வீரியம், சாந்தி, சத்யம், அதிஷ்டானம், மைத்திரி, உபேக்ஷை. (ஈகை, ஒழுக்கம், தியாகம், மெய்யறிவு, முயற்சி, பொறை, வாய்மை, பலம், கருணை, சமநிலை).

தானம் சீலமே பொறை தக்கதாய வீரியம்
ஞானமில் தியானமே உணர்ச்சியோ டுபாயமும்
மானமில் லருளினை வைத்தலே வலிமையும்
ஞானமீ ரைம்பாரமிதை நாடுங்கா லிவைகளும்.

—நீலகேசி.

இந்தப் பாரமிதைகள் பத்தும் பொருள், உடல், உயிர் என்ற மூன்று வகையான தியாகம் காரணமாக, ஒவ்வொன்றும் மூன்று படிகளில் வைத்தெண்ணப்பட்டு மொத்தம் முப்பது பாரமிதைகள் என்றும் சொல்லப்படும். புத்தர் போதிசத்துவராகப் பிறப்பதற்கு முன்பு பல பிறவிகளில் தானம், சீலம் முதலிய பாரமிதைகளை நிறை வேற்றிய கதைகளே "ஜாதகக் கதைகள்" என்ற பெயரில் வழங்கு கின்றன. விஸ்வாந்தர ஜாதகக் கதை தான பாரமிதைக்கும், சங்க பல அல்லது திருஷ்டி விஷ ஜாதகம் சில பாரமிதைக்கும் உதாரணங் கள். அங்ஙனமே சோமனுகப் பிறந்து ராஜ்யத்தைத் தியாகம் செய் ததும், சேனக பண்டிதனுகப் பிறந்து ஞானம் பெற்றதும், மகா ஜனகனுகப் பிறந்து சமுத்திரத்தைக் கடந்து வீரிய பாரமிதை நிறை வேற்றியதும், காந்தி வாதன் என்ற பிறவியில் பொறையை நிரூபித் ததும், மகாசௌத சோமன் என்ற பிறவியில் தம் உயிரையே பலி கொடுத்து வாய்மையாகிய பாரமிதையை நிறைவேற்றியதும், மூக பக்ஷி ஜாதகத்தில் உறுதியை நிலைநாட்டியதும், ஏகராஜ ஜாதகத்தில் கருணையைக் காட்டியதும், லோமஹம்ஸ ஜாதகத்தில் சமநிலையைக் காண்பித்ததும் தசபாரமிதைகளை நிறைவேற்றியதற்கு உதாரணங்க ளாகும்.

இந்தப் பத்துவித பாரமிதைகளையும் நிறைவேற்றிய பின்னரே போதிசத்துவர் துஷித லோகத்தில் ஒரு தேவனுகப் பிறவி யெடுத் திருந்தார். தசபாரமிதைகளை நிறைவேற்றியதனல் புத்தருக்கு 'தசபலர்' என்ற ஒரு பெயரு முண்டு.

இங்ஙனம் சித்தார்த்தரின் இளமைப் பருவத்திலேயே நல்வினையின் முதிர்ச்சி காரணமாக வீடுபேற்றுக்குரிய மெய்ஞ்ஞானம் கனிய ஆரம்பித்தது. பிறர் ஒருவருக்காகத் தமக்குரியவற்றைத் தியாகம் செய்யும் பண்பும், பிற உயிர்களுக்காகத் தாம் வருந்தும் கருணை உள்ளமும், அன்பும், பொறையும் சித்தார்த்தருடன் கூடவே வளர்ந்தன.

சித்தார்த்தருடைய தாய்மாமனை சுப்பிரபுத்தனுக்குத் தேவதத்தன் என்ற புதல்வன் ஒருவன் இருந்தான். சித்தார்த்தரோடு ஒத்த வயது. இருவரும் ஒன்றுகவே கற்று விளையாடி வந்தார்கள். ஆனால் தேவதத்தன் வெகு முரடன். கருணை யென்றால் என்னவென்றறியாதவன். ஒரு நாள் வானவீதியில் அழகாகக் கொடிவிட்டுப் பறந்த அன்னப்பறவைகளின் கூட்டத்தை நோக்கி ஈவிரக்கமின்றி அம்பாலெய்து ஒரு பறவையைத் தாக்கி வீழ்த்திவிட்டான். அடிபட்ட அன்னப் புள் சித்தார்த்தர் உலாவிக்கொண்டிருந்த ஒரு தோட்டத்தில் அலறிக்கொண்டு விழுந்தது. கருணைமூர்த்தியான சித்தார்த்தர் உடனே அப்பறவையை யெடுத்து அதன் மீது தைத்திருந்த அம்பை அகற்றிக் குருதியைத் துடைத்து அதன் வருத்தத்தை மாற்றினர்.

தான் அடித்து வீழ்த்திய அன்னம் சித்தார்த்தர் நின்ற தோட்டத்தில் வீழ்ந்ததை யறிந்த தேவதத்தன் தன் தோழன் ஒருவனை யனுப்பி அந்தப் பறவையை எடுத்து வருமாறு உத்தரவிட்டான். தோழன் திரும்பி வரவில்லை யென்று கண்ட தேவதத்தன் தானேவே வந்து சித்தார்த்தரிடம் தனக்குரிமையான அந்தப் பறவையைத் தரும்படி கேட்டான். சித்தார்த்தர் மறுத்து, "இந்தப் பறவை என் தோட்டத்தில் விழுந்தது. ஆகையால் தரமுடியாது" என்று சொல்லிவிட்டார். தேவதத்தன் உடனே கோபங்கொண்டு, "அம்பெய்தவன் நான். ஆகையால் பறவை எனக்கே சொந்தம்" என்று வாதாடினான். சித்தார்த்தர் மேலும் மறுத்து, "நீ அம்பெய்தது உண்மைதான். இந்தப் பறவை இறந்து விழுந்திருந்தால் உனக்கே சொந்தம். ஆனால், அது உயிரோடு என்னிடம் அடைக்கலம் புகுந்தது. உயிரைக் காப்பாற்றிய எனக்கே அது சொந்தம்" என்றார். அவ்வழியாகப் போன ஒரு பெரியவரிடம் இருவரும் முறை யிட்டார்கள். பெரியவர் கேட்டுவிட்டு, "மக்காள்! வீணுகச் சண்டை யிட்டுக்கொள்ளாதீர். பறவையின் உயிரைக் காத்தவனே அதற்குரியவன்" என்று சொல்லிவிட்டு நடந்தார். தேவதத்தன் கடுஞ்சினத்தோடு அவ்விடத்தை விட்டுச் சென்றான். சித்தார்த்தர் குழந்தையைப் போல அவ்வன்னப் பறவையை வாரி யணைத்து அதன் துயரைத் துடைத்து மீண்டும் அது நிம்மதியாகத் தன் துணைகளுடன் வானில் சஞ்சரிக்க விட்டார்.

ஆரும் அத்தியாயம்

அழகுப் போட்டி

இளவரசர் சித்தார்த்தருக்கு வயது பதினேழாகியது. தேஜோமயமாக ஒளி வீசிக்கொண்டிருக்கும் மேனியும் பழுத்த உள்ளத்தின் பண்பைக் காண்பிக்கும் முகவிலாசமும் கொண்ட பேரெழில் படைத்த இளங்கன்றைப் பற்றிய கீர்த்தி பாரதத்தின் நாற்றிசையும் பரவியது. 'கபிலவஸ்து இளவரசருக்கு ஒப்பாரும் மிக்காரும் இவ்வுலகிலில்லை' என்று எல்லாரும் பேசிக்கொண்டார்கள்.

ஆனால் சித்தார்த்தரின் உள்ளமோ அரண்மனையிலும் அங்குள்ள செயற்கையின்பங்களிலும் நாட்டமுறுவதாகக் காணவில்லை. சுத்தோதனனின் கட்டளைப்படி சித்தார்த்தரின் பக்கத்திலிருந்த அந்தணச் சிறுவன் உதாயி எச்சமயத்திலும் எவ்வகையாகவும் துயர உணர்ச்சி ஏற்படாதவாறு பார்த்துக்கொள்ளத் தனது சாணக்கியம் முழுவதையும் உபயோகித்து வந்தான். லோகோபகாரமான நியாயங்களுக்கெல்லாம் கட்டுப்பட்ட சித்தார்த்தர் வெளிப்பார்வைக்குக் குதூகலமாய்க் காணப்பட்டபோதிலும் அவர் உள்ளத்தில் மாத்திரம் பெரும் புயல் வீசிக்கொண்டிருந்தது. கூண்டிலடைபட்ட பறவை போல ஆன்ம விடுதலை பெறும் நாளை எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்.

உதாயியின் மூலமாகச் சித்தார்த்தரின் உண்மை நிலையைக் கேள்வியுற்ற சுத்தோதனன் உள்ளம் தத்தளித்தது. அசித முனிவர் சொல்லி வைத்த துறவு விருப்பம் ஏற்பட்டுவிடுமோ என்றஞ்சி, தனது மந்திரிமாரை அழைத்து வைத்து மைந்தனின் மனக்கவலையை மாற்றுவதற்கு மருந்துண்டா என்று ஆலோசித்தான். சித்தார்த்தருக்கு மணப்பருவம் வந்துவிட்டபடியால் தக்க ஒரு பெண்ணைத் தேடிக் கொண்டுவந்து திருமணம் செய்துவைத்து மதன லோகத்துக்கான சகல சூழ்நிலையையும் ஏற்படுத்திலை இளவரசர் உளநிலையை மாற்றலாம் என்றும், அவர் லௌகிக வாழ்வில் லயித்துப்போய்விடுவார் என்றும் மந்திரிகள் ஆலோசனை கூறினர். இதைக்கேட்ட சுத்தோதனனும் நல்ல யோசனைதான் என்று அதற்கு வேண்டிய காரியங்களைப் பற்றிச் சிந்திக்கலானான்.

கோசலத்திலும் மகதத்திலும் அங்க நாட்டிலும் செல்வச் செழிப்புடன் வாழும் மன்னர்கள் பலர் தங்கள் பெண்களைச் சித்தார்த்

தருக்குக் கொடுக்க எங்கே யென்று காத்திருந்தார்கள். இதனைச் சுத்தோதனன் அறிவான். இருந்தும் தன் புதல்வனிடம் ஒரு வார்த்தை கேட்டு அவன் உள்ளக்கிடக்கையை நேரில் அறிந்து கொள்ளவேண்டும் என்று கருதினன். தானே பெண்ணைத் தேடிக் கொண்டு வந்தபின் மைந்தனின் சம்மதம் கிடைக்கா விட்டால் வீணான அவமானத்துக் குள்ளாக வேண்டி வருமே என்றெண்ணினன். ஆகையால், தக்க சமயம் பார்த்து ஒரு நாள் சித்தார்த்தரை வரவழைத்து மிகவும் சாதுரியமாகத் தன் கருத்தைக் குறிப்பா லுணர்த்தினன். சித்தார்த்தர் விஷயத்தைத் தெரிந்துகொண்டு மௌனமா யுட்கார்ந்தவாறே முகத்தில் ஒரு புன்னகையை வர வழைத்துக்கொண்டார். தந்தையின் மனம் கோணுதவாறு மகிழ்விக்க வேண்டும் என்று சொல்லியது உள்ளத்தின் ஒரு பக்கம்; மறுபக்கம், வீணான பந்தத்தில் எதற்காக மாட்டிக்கொள்ள வேண்டும் என்று வாதித்தது. ஆயினும், விவேகமுள்ள சுத்தோதனனுக்கு இந்தப் புன்னகையின் அர்த்தம் புரியாம லில்லை. சாதுரியமாகக் கதைகளை அளந்தான். சாக்கிய மரபின் பெருமையையும் மெய்க்கீர்த்திகளையும் விளக்கினன். தலைமுறை தலைமுறையாக வந்த ராஜ்யத்தின் அரசுரிமை பங்கப்படாம லிருக்க வேண்டியதன் அவசியத்தை எடுத்துச் சொன்னன். குலத்துக்கொரு தனிக் கொழுந்தாயிருக்கும் சித்தார்த்தரின் கடமையையும் விளக்கினன். சாக்கிய நாட்டு மக்களைத் தனக்குப் பின் தவிக்கவிட்டு வைப்பது தர்ம மல்ல வென்றும் உபதேசம் செய்தான். ஈற்றில், தனயனின் உள்ளம் நெகிழ்ந்து கொடுத்தது. தன் பொருட்டாகவல்ல, மற்றவர் பொருட்டாக வென்ற தர்மவாதம் அவர் பிடிவாதத்தை அசைத்து விட்டது.

சிறிது நேரம் மௌனமாக வீற்றிருந்த சித்தார்த்தர் முடிவிலே, "தாங்கள் சொல்வதில் நியாயமிருக்கிறது. இருந்தும் எனது விவாகத்தைப் பற்றித் தங்களுக்கு ஒரு முடிவு சொல்ல எனக்கு ஏழு நாள் தவணை கொடுங்கள்" என்று கேட்டுக்கொண்டார். இந்த வார்த்தைகளாவது வெளிவந்தனவே என்று பரவசப்பட்டவனாய் சுத்தோதனன், "உன் இஷ்டப்படியே ஒரு வாரம் கழித்து விடை சொன்னால் போதுமானது" என்று உடன்பட்டான்.

அந்த ஒரு வாரமும் தந்தையும் மகனும் எத்தகைய மன நிலையில் காலத்தைப் போக்கினார்கள் என்று சொல்ல முடியாது. சுத்தோதனன் தன் வழிபடு தெய்வங்களை யெல்லாம் வேண்டிக்கொண்டான். அன்றியும், சித்தார்த்தரின் நண்பன் உதாயியின் சாதுரியத்தில் அவன் நம்பிக்கை வைத்திருந்தான்.

தந்தைக்குக் கொடுத்த வாக்குறுதியின்படி சித்தார்த்தர் மறுபடியும் சந்தித்தார். தாம் மணம் செய்துகொள்ளச் சம்மதப் படுவதாகவும் ஆனால், தன் மனைவியாக வரவிருப்பவளுக்குத் தாம் விரும்பும் சில குண விசேஷங்கள் அமைந்திருக்கவேண்டும் என்றும் தெரிவித்தார். சுத்தோதனன் மட்டற்ற மகிழ்ச்சி கொண்டு அந்தக் குண விசேஷங்களைத் தெரியச் செய்தால் அத்தகைய கன்னியை எந்த நாட்டிலிருந்தாவது தேடிவருவதாக வாக்களித்தான்.

"எனக்கு மனைவியாக வரவிருப்பவள் கன்னிகையாகவும் அழகுள்ளவளாகவும் இருந்தால் மட்டும் போதாது. கணவன் எத்தகைய காரியங்களைச் செய்தாலும் மனமுவந்து விட்டுக் கொடுப்பவளாயும், தானம் சீலம் தயை நிறைந்தவளாயும், சிற்றின் பங்களையும் ஆடல் பாடல்களையும் அதிகமாய் விரும்பாதவளாயும், கடமையில் தவறுதவளாயும் இருத்தல் வேண்டும்."

இந்த நிபந்தனையைக் கேட்ட சுத்தோதனன், "இது பிரமாத மான காரியமல்ல. உன் மனத்துக்குப் பிடித்தவளை நீயே தெரிந் தெடுத்துக் கொள்ளத்தக்கதாக நான் ஏற்பாடு செய்கிறேன்," என்று சொல்லி மட்டற்ற மகிழ்ச்சியுடன் சென்றான்.

சென்றவன், தாமதமில்லாமலே அரண்மனைப் புரோகிதர்களை யழைத்தான். சித்தார்த்தர் திருமணம் செய்ய இசைந்துவிட்டார் என்ற நற்செய்தியைச் சொல்லி ஆனந்தப்பட்டான். சகல லக்ஷணங் களும் பொருந்திய கன்னிகை பலரை உடனே கண்டுபிடிக்குமாறு கட்டளை பிறப்பித்தான். அத்துடன், சித்தார்த்தரின் உள்ளத்தை யறிந்துகொள்ள ஓர் உபாயத்தையும் தெரிவித்தான். "சித்தார்த் தரின் பிறந்த நாள் எதிரே வருகின்றது. அந்நாளில் நடக்கும் கொண்டாட்டங்களிலே மிக்க அழகுள்ள மங்கையராகக் கருதப்படும் ராஜகுமாரிகள் வந்து அணி வகுத்து நின்று இளவரசர் கையாலே பரிசு பெற்றுப் போகவேண்டும். இந்த ஏற்பாட்டில் இளவரசரின் போக்கைக் கவனித்தால் அவர் மனத்துக்குப் பிடித்த கன்னிகை எவள் என்று தீர்மானித்து விடலாம்," என்ற யோசனையை சுத்தோதனன் தெரிவித்தான். மந்திரிகளும் புரோகிதர்களும் அது நல்ல யோசனையென்று ஆமோதித்தனர்.

விரைவிலே சகல ஏற்பாடுகளும் நடைபெற்றன. சித்தார்த்தரின் பிறந்த நாள் கொண்டாட்டம் மிக விமரிசையாக நடந்தது. ஆடலும் பாடலும் அமர்க்களமா யிருந்தன. உத்தரகோசலத்திலுள்ள இளவல்களும் இளங்கன்னியரும் இணையற்ற கோலாகலத்தில் கலந்து களிப்புற்றனர். கொண்டாட்டத்தின் முடிவில் பரிசுகள் வழங்கும் வைபவம் வந்தது.

நூற்றெட்டுக் கன்னியர்கள் தாரகைக் கணங்கள் போல அழகொளி வீசிக் காத்து நின்றனர். மேடையில் பொன்னும் மணியும் புனைந்த அரியாசனத்தில் பூரணசந்திரன்போல் உட்கார்ந்திருந்தார் சித்தார்த்தர். அவர் பக்கத்தில் பொற் சரடுகளும் முத்து வடங்களும் வைரப்பதக்கங்களும் என்று நவ நவமான ஆபரணங்கள் குவித்து வைக்கப்பட்டுப் பிரகாசித்துக் கொண்டிருந்தன. கன்னியர்கள் ஒவ்வொருவராகச் சென்று நாணிக் கோணி அடக்க வொடுக்கத்துடன் ஒவ்வொரு பரிசாகப் பெற்றுக்கொண்டு திரும்பினர். சுத்தோதனனும் அவனது மந்திரிகளும் புரோகிதர்களும் நண்பன் உதாயியும் இமை கொட்டாமல் இந்தக் காட்சியைப் பார்த்துக்கொண்டிருந்தனர். சித்தார்த்தரின் முகத்திலே தொடக்கத்திலிருந்த சாயலில், மங்கைக்குப் பின் மங்கையாக வந்து பரிசு வாங்கிச் சென்றும், எத்துணை மாறுதலையும் காண முடியவில்லை. சில பெண்கள் இது வென்ன கற்சிலையா என்ற வெறுப்புடன் பரிசைப் பெற்றுக்கொண்டு வெடுக்கென்று திரும்பியதையும் அவர்கள் கவனித்தார்கள். அதற்கும் சித்தார்த்தரின் முகம் மாறவில்லை.

ஒருத்தியைத் தவிர எல்லாப் பெண்களும் பரிசுகளை வாங்கிச் சென்றுவிட்டார்கள். அந்த ஒருத்தி மாத்திரம் இட்டடி நோவ எடுத்தடி கொப்புளிக்க மின்னற் கொடிபோல் அசைந்தாடி வருவ தற்கு அத்துணை தாமதமேன்? இளவரசர் பக்கத்திலிருந்த கனக மணிக் குவியலைப் பார்த்து வைத்திருந்தாள் அவள். அத்தனை ஆபரணங்களும் செலவாகிவிட்டன! "ஒன்றில், கொண்டாட்டத்தை ஏற்பாடு செய்த இந்தச் சாக்கியர் புத்தியில் பெண்களின் எண்ணிக் கைக்குச் சரியான பரிசுகளைக் கணக்கிட்டு வைத்திருக்கத் தெரிய வில்லை; அல்லது, மங்கையரின் அழகில் மயங்கிய இளவரசர் எவளோ ஒருத்திக்கு ஒன்றுக்கு இரண்டு பரிசுகளைத் தூக்கிக் கொடுத்துவிட்டார். எதற்கும் இளவரசரின் மானத்தை இந்தச் சபையில் வாங்கி விடுகிறேன் பார்," என்று திடீரெனத் தீர்மானித்தாள் அந்தப் பொல்லாத பெண்!

கோலிய நாட்டுப் பெண் அவள். சித்தார்த்தரின் அம்மான் சுப்பிரபுத்தனின் மகள். தேவதத்தனின் தங்கை யசோதரை. பத்தரை மாற்றுப் பசும்பொன் நிறமும் நிறைமதி போன்ற முகமும் குறுகுறுத்த பார்வையுங்கொண்ட அவள் இளவரசர் முன்னிலையில் போய் நின்று துடுக்கெனத் தலையை நிமிர்த்திக் குறும்புடன் நோக்கினாள். அந்தப் பார்வையில் ஒரு கணம் தன் வசமிழந்த இளவரசர் சித்தார்த்தர் எதிர் பாராத வியப்புடன் அவள் முகத்தைக் கூர்ந்து கவனிக்கையில் அந்த அணங்கு, "எனக் கென்ன பரிசு

வைத்திருக்கிறீர், இளவரசரே?" என்று கேட்டுவிட்டு மீண்டும் குறும்புப் புன்னகை புரிந்தாள். அப்பொழுதுதான் தன் பக்கத்திலிருந்த பரிசுகளெல்லாம் செலவாகிவிட்டன என்பதை யுணர்ந்த சித்தார்த்தர் திகைத்தார். இருந்தும், எல்லையற்ற பிரியத்தோடு சிறிதும் தயங்காமல் தன் கழுத்திலணிந்திருந்த மரகத மணி மாலையைக் கழற்றி, "இதோ! உனக்காகவே இந்தப் பரிசு காத்திருந்தது. பெற்றுக்கொள்," என்று யசோதரை கையில் கொடுத்தார். சற்றும் எதிர்பாராத விதமாக சித்தார்த்தர் கழுத்திலிருந்த விலை மதிக்கவொண்ணாத மாலை தன் கையில் வந்ததைக் கண்ட யசோதரை ஆச்சரியவசத்தளாய் மெய்ம்மறந்தாள். துடுக்கெல்லாம் பறந்தது. நாணித் தலை குனிந்து வணங்கியவள் தன் இதயத்தையே அங்கு நிறுத்திவிட்டுத் திரும்பினாள்.

அவள் திரும்பி நடந்த வழியெல்லாம் சித்தார்த்தர் கண்கள் பின் தொடர்ந்தன.

இந்தக் காட்சியைக் கண்ட சுத்தோதனனுக்கும் மந்திரிகளுக்கும் எல்லையற்ற மகிழ்ச்சியா யிருந்தது. சுப்பிரபுத்தன் மகள் யசோதரை தான் சித்தார்த்தரின் சிந்தையைக் கலக்க வல்லவள் என்று முடிவு செய்தனர். இளவரசரின் காதல் அவள்பாலேயே சென்றுவிட்டதென்பதை, அவர்கள் மாத்திரமல்ல, அங்குக் கூடியிருந்த ஆயிரக் கணக்கான மக்களும் உணர்ந்துகொண்டனர். ஒரு சில இளவல்களுக்கு மாத்திரம் பொறுமையா யிருந்தது.

ஒரு நல்ல நாள் பார்த்து சுத்தோதனன் தனது மைத்துனன் சுப்பிரபுத்தனுக்கு ஓலை யனுப்பினான். தன் மகள் யசோதரையைச் சித்தார்த்தருக்கு மணம் கேட்டு வந்த ஓலையைக் கண்டதும் சுப்பிரபுத்தன் வெகுண்டான். அவன் மகன் தேவதத்தன், யசோதரையின் அண்ணன், "அரண்மனைத் தொட்டிலில் அங்கம் நோவாமல் வளர்ந்த பேடி ஒருவனுக்கா நம் பெண்ணைக் கொடுப்பது," என்று சீறினான். "சாக்கிய மன்னன் பெண் கேட்டால் எவரும் தலை வணங்கிக் கொடுத்துவிடுவார்கள் என்று கருதினான் போலும் சுத்தோதனன்," என்று சுப்பிரபுத்தன் கனன் றெழுந்து, பதிலுக்கு ஒரு தூதனுப்பினான். "உன் மகன் சித்தார்த்தன் விட்டில் பூச்சிபோல் வீட்டில் வளர்ந்தவன். வில்லையும் வாளையும் தொட்டு அறியாதவன். அவன் காட்டிலே வேட்டை யாடியதை எவரும் கண்டிலர். அரச குமாருக்குரிய நால் வகைப் படைகளும் நடத்திப் பழகாதவன். ஆகையால் அத்தகைய ஒருவனுக்கு என் மகளைக் கொடுக்க விரும்பேன். இஷ்டமிருந்தால் அவன் க்ஷத்திரியருக்குரிய வீரப் பண்பைக் காண்பிக்கட்டும்" என்று சொல்லி யனுப்பினான். இதைக் கேள்வியுற்ற

சுத்தோதனன் எதிர் பாராத கவலையுடன் கோபமும் ஆத்திரமும் கொண்டு யோசித்துப் பார்த்தான். சித்தார்த்தர் படைக்கலப் பயிற்சி பெற்றது உண்மைதான். ஆனால் அது நடந்து வெகு காலமாகி விட்டது. அரண்மனையில் சொகுசாக வளர்ந்தவன். சாக்கியரின் வீரத்தைச் சுப்பிரபுத்தனுக்கு எப்படியாக உணர்த்துவது? இங்ஙனம் ஆலோசித்துவிட்டு வாடிய முகத்துடன் தன் மைந்தனைக் கண்டான். தந்தையின் வதனத்தில் கவலைக் குறி தேங்கியிருப்பதைக் கண்ட சித்தார்த்தர் திகைப்புடன் என்ன வென்று விசாரித்தார். செய்தியை யறிந்ததும் அவர் மனம் புண்பட்டது. என்னவானாலும் தந்தையின் மானத்தைக் காப்பாற்றவேண்டுமென்று துணிந்தவராய், "தந்தையே! என் பொருட்டாகத் தாங்கள் கவலைப்படவேண்டாம், எத்தகைய போட்டியிலும் நான் கலந்துகொள்ளச் சித்தமாயிருக்கிறேன். அம்பையும் வில்லையும் என் கைகள் தொட்டுப் பல வாண்டுகளாகின்றனதான். இருந்தும் நான் கற்ற வித்தையை ஊர் அறியப் புலப்படுத்த இப்போது சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. போட்டிக்கு ஏற்பாடு செய்யுங்கள்!" என்று சங்கல்பம் செய்தார். மைந்தனின் துணிவைக் கண்ட சுத்தோதனன் அளவற்ற மகிழ்ச்சி கொண்டான்.

கபிலபுரத்தின் எல்லையி லமைந்த பிரமாண்டமான உபவனம் ஒன்றில் வீரப் போட்டிக்கு ஒழுங்குகள் செய்யப்பட்டன. பல்லாயிரக் கணக்கான மக்கள் திரண்டு வந்து இந்தப் போட்டியைக் காண ஆவலோடு நின்றனர். சித்தார்த்தரது பருவத்துக்கொத்த சாக்கிய இளஞ்சிங்கங்களும் கோலியக் காளைகளும் மற்றும் பல இளைஞரும் தத்தம் கைவரிசைகளைக் காண்பித்து வெற்றி பெறக் காத்து நின்றனர். சுப்பிரபுத்தனின் மைந்தன் தேவதத்தன், அந்தப் பிரதேசத்திலேயே வில்லுக்கும் வாளுக்கும் குதிரை யேற்றத்துக்கும் மகாசமர்த்தன் என்று பெயர் பெற்றவன், வெள்ளைப் பரிதி யொன்றில் மிடுக்காக வீசையை முறுக்கிவிட்டுக்கொண்டு வீற்றிருந்தான். சித்தார்த்தருக்குத் தம்பி முறையான ஆனந்தன்—அமிதோதனன் மைந்தன்—தானும் போட்டிக்குச் சித்தமாய் நின்றான். சுத்தோதனனின் இரண்டாவது மனைவி பிரஜாவதி கோதமியின் மைந்தன் நந்தன், வாள் வீச்சில் சமர்த்தன் என்று பெயரெடுத்தவன், அவன் கூட இந்தப் போட்டியில், இராமனுக்கு ஒரு லக்ஷ்மணன் போல, சித்தார்த்தரின் பெருமையைக் காப்பாற்ற வேண்டுமென்று போலும், கலந்து கொண்டான். தேவதத்தனுக்குத் தம்பி முறையான அர்ஜுனனும் அங்கு நின்றான். இப்படியாக எண்ணிக்கையற்ற வீரர்கள் அங்கே கூடிவிட்டனர். நாட்டிலுள்ள இள மங்கைய

ரெல்லாம் இந்த ஆண் சிங்கங்களின் புயவலிமையை நேரில் கண்டு மகிழ வந்திருந்தனர். அவர்களில் ஒருத்தி யசோதரை யென்பதை இங்கு சொல்லத் தேவையில்லை. அவள் நெஞ்சு மாத்திரம் பட படத்தது. தனது மனதுக்கினியான் இந்தப் போட்டியில் தோற்று விட்டாலோ?

புழுதிப் படலத்தை யெழுப்பிக்கொண்டு வாயு வேகத்தில் பறந்து வந்து மைதானத்தை ஒரு தரம் தலையைத் திருப்பி வெற்றிப் பார்வை பார்த்துவிட்டு அதிகாரத்துடன் கனைத்து நின்றது ஒரு குதிரை. அதுதான் சித்தார்த்தரின் சிறந்த வாகனமாகிய கண்டகம் என்ற குதிரை யென்பதை அங்குக் கூடி நின்றவர்கள் தெரிந்துகொண் டனர், அக்குதிரை மீது கடிவாளமும் கையுமாகக் கந்தர்வ வீரன் போன்று வீற்றிருந்தார் சித்தார்த்தர். யசோதரையின் முகம் ஒரு தரம் மலர்ந்தது.

போட்டி ஆரம்பித்தது. முதலிலே வீரர்கள் வில்லிலே தமது திறமையைக் காண்பித்தார்கள். ஐந்து காத தூரத்தில் ஓர் இலச்சி னையை வைத்து ஆனந்தனும் நந்தனும் குறி தவறாது அடித்தனர். அதற்குமேல் இரு காதம் தனது ஆழி செல்லும் என்று தேவதத்தன் அடித்து வீழ்த்தி இறுமாந்து நின்றான். இதோ மேலும் ஒரு காதம் என்று இலச்சினையைத் தள்ளிவைக்கச் சொல்லிச் சித்தார்த்தர் வில்லைக் கையி லெடுத்தார். நிலத்தி லூன்றி நாணேற்றிப் பார்த் தார். உடனே வில்லை இரு கையிலும் பிடித்து வளைத்து முறித்து விட்டு, "இதுவென்ன கருப்பு வில்லைக் கொண்டு சிறு பிள்ளை விளை யாட்டா? வீரன் ஒருவன் கைக்குத் தகுந்த இருப்பு வில் இருந்தால் கொண்டு வாருங்கள்!" என்று கேட்டு ஏறு போல் நிமிர்ந்து நின்றார். இதுதான் தக்க சமயம் என்று கருதி உடனே தேவதத்தன், "சித்தார்த்தா, வாய்ச்சொல்லில் வீரம் பேசாதே. நமது பாட்டனர் சிம்மஹனு வைத்திருந்த காண்டீபம் அதோ கோயிலில் இருக்கிறது. அந்த வில்லை வளைத்து நாணேற்றி இலச்சினையை அடிப்பாயானால் உண்மையில் நீ வீரன்தான், உடன்படுகிறாயா?" என்று கேட்டான். இந்தச் சவாலைக் கேட்டதும் அங்கு நின்றோர் அதிசயித்தனர். சுப்பிர புத்தன் புன்னகை புரிந்தான். சுத்தோதனனே தன் பிள்ளை எப்படி அந்த முரட்டுக் காண்டீபத்தை வளைக்கப் போகிறது என்று திகைத் தான். சிம்மஹனுவின் அந்த வில் சாதாரணமான வில் அல்ல. யாருமே அசைக்க முடியாத பாரமும் வலிவும் கொண்ட வில். யாரோ அவன் மூதாதையர் கொடுத்துவைத்திருந்தது. ஒரு வீரப் பொரு ளாக, சாக்கியரின் ஒரு சின்னமாக அங்குள்ள ஒரு கோயிலில் பத்திரப்படுத்தி வைக்கப் பட்டிருந்த அந்த வில்லைத் தேவர்கள்

அல்லது அசுரர்கள்தான் வளைக்க முடியும். சித்தார்த்தர் நிச்சயம் தோல்வியுறுவார் என்று நம்பியே தேவதத்தன் அப்படிச் சவால் விடுத்தான், ஆனால் சித்தார்த்தர் சிறிதும் பின் நிற்காது, "கொண்டு வாருங்கள் அந்த வில்லை!" என்று வீர கர்ஜனை செய்தார். தோள் வலிமை மிக்க பலர் சேர்ந்து கஷ்டப்பட்டுத் தூக்கி வந்தனர் வில்லை. யாவர் முகத்திலும் சோகக் குறி படர்ந்தது. சித்தார்த்தர் எவ்வாறு சமாளிக்கப் போகிறார் என்று சந்தேகப்பட்டனர். யசோதரையோ தனது காதலன் தோல்வி யடைவதைத் தன் கண்களால் காணச் சகியாதவளாய், தாமரைக் கைகளால் முகத்தை மூடிக்கொண்டாள். மறு கணம் என்ன நடந்த தென்று அங்கு நின்றவர்கள் உணர்வதற்கு முன்னர் அண்ட முகடு அதிரும் வண்ணம் பயங்கரமான பேரொலி ஒன்று கேட்டது! சித்தார்த்தர் அநாயாசமாக அந்தக் காண்டீபத்தை யெடுத்து வளைத்து அம்பு தொடுத்தபோது எழுந்த நாணொலியே அது என்பதை யறிந்த யாவரும் வியப்புற்றனர். தேவன் ஒருவன்தான் இம்மாதிரி சித்தார்த்தர் வடிவத்தில் வந்து நின்றானே என்று சந்தேகம் கொண்டனர். வைத்த இலச்சினையைத் துளைத்துக்கொண்டு அம்பு பல காத தூரம் சென்று மறைந்தது. தேவதத்தன் தலை குனிந்தான். யசோதரை தன்னை மறந்து இரு கை கூப்பி வணங்கினாள். சித்தார்த்தர் விட்டிற் பூச்சி யென்று கருதி யிருந்த சுப்பிரபுத்தன் சாக்கிய இளஞ்சிங்கத்தின் தோள் வலிமையைக் கண்டு வியந்தான். வில் வித்தைக்குப் பின் வாட் போர், மற்போர், குதிரை யேற்றம் முதலியவை நடந்தன. இவற்றிலும் சித்தார்த்தர் தமது திறமையைக் காண்பித்ததும் தேவதத்தன் ஒரு மதங்கொண்ட யானையைக் கொண்டு வரச் செய்து அதை யடக்குமாறு சித்தார்த்தருக்குச் சவால் விடுத்தான். ஆனால் சித்தார்த்தரைக் கண்டதும் அந்த யானை அடி பணிந்து நின்றது.

இப்படியாக அந்தப் போட்டியில் சகல செயல்களிலும் வெற்றி பெற்றுச் சித்தார்த்தர் வாகை சூடி நின்றதும் அங்குக் கூடியிருந்த ஜன சமுத்திரம் ஜே! என்று ஆர்ப்பரித்தது. சுப்பிரபுத்தனும் மன மகிழ்ந்து தன் புதல்வி யசோதரையைச் சித்தார்த்தருக்கு மண முடித்து வைக்கச் சம்மதித்தான்.

முகூர்த்தத்துக்கு நன்னாள் நியமித்தனர் புரோகிதர்கள். மறை யோர் பலர் வேதமோத, மன்னர்கள் பலர் வாழ்த்த யசோதரைக்கு மங்கல நாண் பூட்டி மகிழ்ந்தார் சித்தார்த்தர்.

சித்தார்த்தர் பிறந்த காலத்தில் அசித முனிவரும் நிமித்திகரும் கூறிய வார்த்தைகள் சுத்தோதனன் மனத்தை விட்டகலவில்லை. மைந்தனுக்கு மணம் முடித்து வைத்துவிட்ட போதிலும் அவர்

துறவுக்குக் காரணமா யிருக்கப் போகும் நான்கு காட்சிகளையும் காண நேராதவாறு தடுத்து வைப்பதற்கு சுத்தோதனன் பிரயத்தனப் பட்டான். அதற்காகவேண்டிய சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கு இராமம், சுராமம், சுபதம் என்ற பெயரில் மூன்று மாளிகைகள் சித்தார்த்தருக்கு அமைத்துக் கொடுத்தான். வஸந்த காலத்துக்கு ஒன்றும், மழைக் காலத்துக்கு ஒன்றும், பனிக்காலத்துக்கு ஒன்றுமாக இந்த மூன்று மாளிகைகளையும் கண்கொள்ளா வேலைப்பாடுகளுடன் குபேரன் இருக்கைகள் போல் அமைக்கச் செய்தான். தூண்களி லெல்லாம் பேரெழில் வாய்ந்த சிற்பங்களைச் செதுக்கச் செய்தான். சுவர்களெல்லாம் இணையற்ற சைத்திரிகர்களைக் கொண்டு சித்தி ரங்கள் எழுதுவித்தான். அரண்மனைகளைச் சுற்றிக் காமனுக்கு விருப்புள்ள பஞ்ச புஷ்பங்களைத் தரும் செடிகளையும் நிழல் மரங் களையும் நாட்டுவித்தான். நீரோடைகளும் தடாகங்களும் அவற்றில் அன்னப் புட்களும் புதிய தம்பதியின் பொழுது போக்குக்காக அமைத்துக் கொடுத்தான். இசையிலும் நாட்டியத்திலும் வல்ல அழகிய நடன மாதர்கள் ஒவ்வொரு மாளிகையிலும் நிரந்தரமா யிருக்க வசதி செய்து கொடுத்தான். கண்ணுக்கினிய காட்சிகள், செவிக்கினிய மதுரகீதம், நாசிக்கினிய பல் வகை நறுமணங்கள், வாய்க்கினிய சுவையுடைய பண்டங்கள், மெய்க்கினிய மெல்லணையும் பட்டுமாகப் பஞ்சப் புலன்களையும் வசீகரிக்கும் காமன் திருநகரம் போலச் சித்தார்த்தரும் யசோதரையும் இல்வாழ்க்கை நடத்தும் மாளிகைகளைச் சுத்தோதனன் சிருஷ்டித்துக் கொடுத்தான்.

இம் மூன்று மாளிகைகளையும் சூழ்தரப் பெருமதில் ஒன்று கட்டப்பட்டிருந்தது. நாற்புற வாயில்களிலும் கதவுகள் போடப் பட்டுக் காவல் வீரர்கள் நிறுத்தப்பட்டிருந்தனர்.

பின்னொரு காலத்தில், சித்தார்த்தர் போதி ஞானமடைந்து தருமோபதேசம் செய்யும்போது, தமது இல்லற வாழ்க்கையைப் பற்றிப் பின் வருமாறு குறிப்பிட்டார்:

"பிக்ஷுக்களே, நான் மிகச் செல்வமாக வளர்ந்தவன். எனது தந்தையின் அரண்மனைத் தோட்டத்திலே வெண்டாமரைத் தடா கமும் செந்தாமரைத் தடாகமும் நீலோத்பலத்துக்கு ஒரு தடாகமும் என் பொருட்டாக நிர்மாணிக்கப்பட்டிருந்தன. காசிச் சந்தனம் தவிர வேறு சந்தனம் நான் உபயோகித்தறியேன். காசிப் பட்டன்றி வேறெந்தப் பட்டையும் நான் அணிந்தறியேன். வெயிலோ மழையோ தூசியோ என்னுடலைத் தொடாதவாறு பணியாளர்கள் பகலும் இரவும் என்மேல் வெண் குடை நிழற்றிய வண்ணமா யிருந்தனர்.

"வஸந்த காலத்துக்கும் மழைக்காலத்துக்கும் பனிக்காலத் துக்கும் மூன்று மாளிகைகள் கட்டப்பெற்றிருந்தன. மாரிக்காலம் நான்கு மாதங்களும் நான் என் அரண்மனையிலிருந்து இறங்கி வந்தது கிடையாது. இந்திர சபையிலுள்ள எழில் மங்கையர் போன்ற பரத்தையர் பலர் ஆடியும் பாடியும் அல்லும் பகலும் என்னைக் களிப்பித்தனர்."

இவ்வாறு சித்தார்த்தரின் இல்வாழ்க்கை ஆரம்பித்தது. கற்ப கத்தின் பூங்கொம்பை நிகர்த்த யசோதரைபால் அவர் தம் உள்ளத்தைப் பறி கொடுத்தார். தன் மனத்துக்கினிய மதனனே இவன் என்று அவளும் களிபேருவகை கொண்டாள். இந்தக் காட்சி யைக் கண்ட சுத்தோதனனும் கவலை தீர்ந்தது என்று களிப் படைந்தான்.

ஏழாம் அத்தியாயம்

கண்டதும் கேட்டதும்

இந்திர போக வாழ்க்கையில் சித்தார்த்தர் சில காலம் திளைத்துக் கிடந்தார்.

மாளிகை யெங்கணும் மதுரகீதம் ஒலித்தது. நாட்டிய மாதரின் பாதச் சிலம்பொலி நாற்றிசையும் எதிரொலித்தது. வாசனைத் திரவியங்களின் நறு மணம் சித்தப் பிரமை யுண்டுபண்ணியது. முற்றும் துறந்த முனிவர்களையும் ஒரு கணம் ஆட்டிவைக்கும் சூழ் நிலையில் சித்தார்த்தர் மாரனுக்கு ஆட்பட்டு அடிமையானர்.

ஆனல் எத்தனை காலத்துக்கென்றுதான் உள் வீட்டு இன்பத்தை அனுபவிக்க முடியும்? அத்துடன் முன்னினைப் பயனும் வந்து உருத்தத் தொடங்கியது. பார்த்தார், "இந்த அரண்மனைக் கோட்டைக்குள்ளேயே இருந்து இவ்வளவு காலமும் ஆடலையும் பாடலையும் அனுபவித்தோம். ஆனல், இயற்கையின் பேரெழில் நிறைந்த வெளிப்புறக் காட்சிகளையும், பசுஞ்சோலைகளையும், துள்ளிக் குதிக்கும் மான் கூட்டங்களையும், இன்பமாய்ப் பறந்து பாடி வட்ட மிடும் பக்ஷிகளையும் போய்ப் பார்த்து அவற்றின் இன்பங்களைப் பெற்றலென்ன?" என்று யோசித்தார். தனது தோழர்களிடம் இந்த விருப்பத்தைத் தெரிவித்ததும் அது சுத்தோதனன் காதுக்கும் எட்டியது.

சிலகாலம் நிம்மதியோ டிருந்த சுத்தோதனனுக்கு மறுபடியும் உள்ளம் கலக்கமடைய ஆரம்பித்தது. இருந்தபோதிலும் யோசித் தான்: மைந்தனை வெளி யுலகத்தில் திறந்துவிட்டால் ஆபத்து நேரக் கூடும்தான். ஆனலும், உள்ளே அகப்படுத்திக்கொண்டிருக்க அவன் உள்ளம் வெறுப்படைய ஏதுவாகும். ஆகையால், தகுந்த பாது காப்புக்களுடன் சித்தார்த்தரை வெளியே அனுப்பி இயற்கையின் அழகுகளைப் பார்த்து நுகரும்படி செய்தால் அனுகூலம் தரும் என்று சுத்தோதனன் கருதினன்.

தேர் ஒன்று தயாரானது. அனுபவ மிக்கவனும் சித்தார்த்தரின் அன்பைக் கவர்ந்தவனுமாகிய சந்தகன் என்ற சாரதி தேரைச் செலுத்த நியமிக்கப்பட்டான். இளவரசர் நாட்டைச் சுற்றிப் பார்க்க வருகிறார் என்ற செய்தி நாற்றிசையும் பறை சாற்றுவிக்கப்பட்டது. தெருக்களெல்லாம் சுத்தம் செய்யப்பட்டு அலங்கரிக்கப்பட்டன.

எங்கும் தோரண வாயில்கள் நிறுவப்பட்டன. அரசன் உத்தரவுக் கிணங்கி மக்கள் யாவரும் விலையுயர்ந்த ஆடைகளைத் தரித்துப் பல வித ஆபரணங்களால் தம்மை யலங்கரித்துத் தத்தம் விட்டு வாயில்கள் தோறும் நின்று பேருவகையுடன் இளவரசரை நமஸ் கரித்தனர். வறியோர், பிணியோர், மூத்தோர் யாவரும் மன்னனுக்கு அஞ்சி மறைவிலிருந்தனர்.

சித்தார்த்தர் பவனி வந்தார். மக்களின் கரை கடந்த அன்பைக் கண்டு அதிசயித்தார். அவர்கள் முகங்களில் பூத்த புன்னகையையும் மகிழ்ச்சியையும் அனுபவித்துத் தாமும் மகிழ்ந்தார். முன்பு சிறு பிள்ளையா யிருக்கையில் எல்லாவற்றையும் வேடிக்கையாகப் பார்த்தவர், இப்போது இளவரசர் என்ற பதவியில் தமது சொந்த மக்கள் இதோ நிற்கிறார்கள் என்ற உணர்ச்சியோடு பார்த்தார். உள்ளத்தில் எழுந்த உவகையோடு விவரிக்க முடியாத ஒரு அனுதாப உணர்ச்சியும் ஏற்பட்டது. தம்மைக் கண்டு எதற்காக இப்படிக் குதூகல மடையவேண்டும்? தம்மிலே என்ன வித்தியாசத்தைக் கண்டு விட்டார்கள்? இந்த விசாரணையோடு சாரதி சந்தகனை நகரைத் தாண்டி இமாசலச் சாரலிலுள்ள சோலையை நோக்கித் தேரைச் செலுத்துமாறு கட்டளையிட்டார்.

இயற்கையின் உண்மையான வனப்பு அவருள்ளத்தைக் கொள்ளை கொண்டது. பச்சைப் பசேலென்று காட்சி யளித்த சோலையையும், நிர்மலமான வான வெளியையும், இமயத்தின் பனி படர்ந்த சிகரங்கள் உயர்ந்துகொண்டே போகும் தோற்றத்தையும் பார்த்தார். உள்ளத்திலும் ஒருவித உணர்ச்சியை அனுபவித்தார். சிந்தனை தன் இருப்பிடத்திலிருந்து இமயச் சிகரம்போல மேல் நோக்கி யெழுந்தது. சிறகு விட்டுப் பறந்து எங்கெல்லாமோ சஞ்சரித்தது.

சந்தகன் குதிரைகளை நிறுத்தியபோதுதான் வெகு நேரமாகி விட்டதென்பதையும் வெகுதூரம் சென்றுவிட்டோம் என்பதையும் சித்தார்த்தர் உணர்ந்தார். "இனி அரண்மனை திரும்புவோம்" என்று தேரைத் திருப்பச் சொன்னார்.

மாலை மயங்கும் வேளை. கபிலவஸ்து நகரின் வீதிகளில் முன் பிருந்த மக்கட் கூட்டம் அருகிவிட்டது. ஒரு சில உருவங்கள் மாத்திரம் தென்பட்டன. முதலில் தாம் கண்ட காட்சிகளையெல்லாம் மனக்கண் முன்பு வரவழைத்துக்கொண்டு சிந்தனையி லாழ்ந்தபடி தேரில் வீற்றிருந்தார் சித்தார்த்தர். அந்தச் சமயத்தில் சாலை யோரத்திலிருந்து ஒருருவம் தேரை நாடி வந்து, "சாமி, பசிக்குது!" என்று சொல்லி இரு கைகளையும் நீட்டியது.

கனவு லோகத்திலிருந்து விழித்தார் சித்தார்த்தர். குனிந்து அந்த உருவத்தை ஒருதரம் உற்று நோக்கினர். ஒட்டி யுலர்ந்த உடலும், குழிந்த கண்களும், கூன்விழுந்த உடலைத் தாங்க ஒரு ஊன்றுகோலும், கந்தலாடையும், நரையும் திரையுமாக வந்த அந்த உருவம் மனித வர்க்கத்தைச் சேர்ந்ததுதானா என்று ஒரு கணம் சந்தேகப்பட்டார். திரும்பவும் ஒரு முறை பார்ப்பதற்கிடையில் கடிவேகத்தில் தேரைச் செலுத்திக்கொண்டு சென்றுவிட்டான் சந்தகன். தம் வாழ்வில் ஒருபோதும் காணாத அதிசயக் காட்சியைக் கண்ட சித்தார்த்தர் சந்தகனைப் பார்த்து, "இப்போது நாம் கண்ட அந்த உருவத்தைக் கவனித்தாயா?" என்று கேட்டார். முதலில், கவனிக்கவில்லை யென்று சொல்லத்தான் எண்ணினான் சந்தகன். ஆனால் ஊழ்வினை விடவில்லை. "ஆம், கண்டேன். யாரோ ஒரு கிழவன் வழியிலே போகிறான். நமக்கேன் அந்த விசாரணை யெல்லாம்?" என்று சொல்லிக்கொண்டே தேரைச் செலுத்தினான். ஆனால் சித்தார்த்தர் விடவில்லை. மேலும் கேள்விகளைக் கேட்டார். "இவன் உடல் ஏன் இப்படி இருக்கிறது? தலை ஏன் நரைத்துப் போயிருக்கிறது? கண்கள் ஏன் குழி விழுந்திருக்கின்றன? ஆண்மை யின் அழகு எங்கே போய்விட்டது?"

சந்தகன் பின் வருவதை யுணராதவாறு விளக்கினான்: "இவன் கிழப்பருவம் அடைந்துவிட்டான். முன்பு எழிலுடைய வாலிபனாகத்தா னிருந்தான். இன்பங்களையெல்லாம் அனுபவித்தான். ஆனால் இப்போது அந்த வாலிபப் பருவம் மங்கிக் கிழப்பருவம் வந்துவிட்டது. கிழம் என்றால் தலை நரைக்கும்; உடலில் திரைகள் ஏற்படும், கண்கள் ஒளி இழக்கும். கால்கள் தள்ளாடி நடக்க முடியாமல் போகும்" என்றான்.

சித்தார்த்தர் மேலும் தொடர்ந்து, "இவன் என்ன, கிழப் பருவத்தைத் தானாக வருவித்துக்கொண்டானா அல்லது இயற்கையாக ஏற்பட்டதா?" என்று கேட்டார்.

சந்தகன் இந்தக் கேள்வி அர்த்தமற்ற கேள்வி என்பதை யறிவான். ஆனால், உலக விசாரங்களைக் காணமுடியாமல் அரண் மனையி லடைபட்டுக் கிடந்த சித்தார்த்தருக்கு இதெல்லாம் எப்படித் தெரியப் போகிற தென்பதை உணர்ந்தவனாகையால், தன்னை யு மறியாமல் உபதேசம் செய்தான்:

"உலகத்தில் பிறந்த எல்லாருக்குமே இந்தக் கதி ஏற்படுவது இயல்பு. மனிதருக்கும் மிருகங்களுக்கும் மற்றும் ஜீவராசிகள் எல்லாவற்றுக்குமே முதுமை என்ற ஒரு பருவம் என்றோ ஒரு நாள் வந்து சேரும். இந்தக் கிழவனுக்கும் வயதாகிவிட்டது. அதனால்தான்

இப்படியான இயக்கமற்ற நிலையை எய்திவிட்டான். நமக்கும் ஒரு காலத்தில் கிழப்பருவம் வரத்தான் போகிறது," என்று சொல்லிச் சிரித்துக்கொண்டே சந்தகன் தேரை யோட்டினன்.

சித்தார்த்தரின் சிந்தனை விசாரணை செய்து பார்த்தது. "உலகத்தில் பிறந்த எல்லாருக்கும் இந்தக் கதி ஏற்படுவது இயல்பு... நமக்கும் ஒரு காலத்தில் கிழப்பருவம் வரத்தான் போகிறது! அப்படியானால், எனக்கும் நரை திரையோடு உடல் வலிமை குன்றுமா? பேரழகோடு துள்ளிக் குதிக்கும் யசோதரையும் அழகொழிந்து வாடி வதங்கவேண்டி ஏற்படுமா? அரண்மனையில் ஆடல் பாடல் செய்யும் அரம்பையர் யாவருமே இந்தக் கதிக் குள்ளாவார்களா? மூப்பு! தடுக்க முடியாத இயற்கையின் நியதி!"

இவ்வாறுக அவர் சிந்தித்துக்கொண்டிருக்கத் தேரைச் செலுத்திக் கொண்டு சந்தகன் அரண்மனைக்கு வந்துவிட்டான். என்றுமில்லாத பேரெழிலுடன் யசோதரை வாசலில் நின்று சித்தார்த்தரை வரவேற்றாள். ஆனால், சித்தார்த்தரின் உள்ளம் நிலை கொள்ளவில்லை. தளர்ந்து தத்தளித்தது. தனது வாழ்வில் முதன் முதலாக விசாரம் என்றால் என்ன என்பதை அப்போது உணர்ந்தார். மௌனத்தோடு உள்ளே நுழைந்தார்.

முதுமைப் பருவத்தின் வடிவிலே விசாரத்தின் முதற் காட்சியைக் கண்ட சித்தார்த்தர் சம்சாரத்தின் மற்றைய துன்பங்க ளென்ன என்று ஆராயத் துடித்தார். தமது உள்ளப் போராட்டத்தை வெளிக் காட்டிக் கொள்ளாமலே மேலும் தொடர்ந்து மாலை வேளைகளில் உலாப் போந்தார். சந்தகன் மனம் கோணமல் தேரோட்டினன்.

ஒரு நாள் அவர்கள் செல்லும்போது பிணியாளன் ஒருவனைக் கண்டனர். மனிதர் எல்லாருக்கும் நோய் வருவது இயற்கையின் நியதி என்றும், நோய் பலவிதமான தன்மையுடையதென்றும், பல விதமாய் வருத்துமென்றும், நோய்க்குத் தப்பாமல் மக்கள் வாழ முடியாதென்றும் சந்தகன் விளக்கினன். சித்தார்த்தர் மற்றொரு பெரிய உண்மையை நேரிலே கண்டு உணர்ந்துகொண்டார்.

பின் ஒரு நாள் மூன்றாவது காட்சியையும் கண்டனர். வாழ்வின் காலவட்டத்தை முடித்துக்கொண்டு உயிர் பிரிந்து போனதும் எஞ்சிய உடலைக்கொண்டு சுற்றத்தவர்கள் சுடு காட்டில் தீ மூட்டச் செல்லுகின்றனர். சித்தார்த்தர் அந்தப் பிணத்தை இமை கொட்டாமல் பார்த்தார். சற்று வேளையில் அந்தப் பிணம் தீயிடப்பட்டுச் சாம்பராகப் போகிறது. "இந்தப் பிணம்தான் வாழ்க்கையின் முடிவு; பிறந்தோர் யாவரும் பிணமாவது நிச்சயம்," என்று சந்தகன் மற்றொரு பெரிய உண்மையை அறிவுறுத்தினன்.

"நம்மைப் போலவே அந்த மனிதனும் உண்டு களித்து வாழ்ந்த ஒருவன். பொல்லாத விதி வந்து குறுக்கிட்டது. கூற்றுவன் வந்து உயிரைப் பறித்துப் போய்விட்டான். உடல்தான் எஞ்சியது. அதுவும் இப்போது சாம்பராகிறது. இப்போது அவனுக்குச் சுகமில்லை, துக்கமுமில்லை. பஞ்சப் புலன்களும் மறைந்து விட்டன. இயற்கையின் நியதி இப்படித்தான்," என்று சந்தகன் பெருமூச் செறிந்து கொண்டே சொன்னான்.

இதுதானா உலகம்? இதுதானா பிறவியின் திருவிளையாடல்? இதுதானா வாழ்வின் அமைப்பு? சித்தார்த்தர் யோசிக்கத் தொடங்கினர்.

"இவ்வுலகத்தில் துன்பத்தின் உண்மையையும் இன்பத்தின் பொய்மையையும் கண்டு விட்டேன். உயர்ந்தன என்று சொல்லப்படுவன வெல்லாம் வெறும் ஜால மென்றும், தாழ்ந்தன வென்று சொல்லப்படுவன வெல்லாம் துன்பமென்றும் அறிந்தேன். இன்பம் துன்பத்திலும், யௌவனம் விருத்தாப்பியத்திலும், அன்பு பிரிவிலும், வாழ்வு மரணத்திலும், மரணம் மீட்டும் பிறவியிலும் முடிகிறது. பிறவி தோறும் இதே துன்ப வட்டம். பொய்த் தோற்றங்களெல்லாம் இதுகாறும் என் கண்களைக் கட்டி நின்றன. வாழ்க்கை என்ற நதி மரணத்தில் கொண்டுபோய் வீழ்த்தும் என்ற உண்மையை அறியாமலிருந்தேன். ஆனந்தமா யோடும் சிற்றாறு தனது ஸ்படிகம் போன்ற தெள்ளிய நீரைக் கொண்டு போய் உவர்க் கடலில் கொட்டிவிடுகிறதென்பதை மறந்தேன். என் கண்களை மறைத்திருந்த இருள் இன்று நீங்கிவிட்டது."

இப்படிச் சிந்தித்து ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவராக சித்தார்த்தர் கண்ணை விழித்துப் பார்த்தார். சந்தகனை நோக்கி, "சந்தகா! திருப்பு தேரை. என் கண்கள் பார்த்த காட்சிகள் போதும்," என்று சொன்னார்.

தேரும் அரண்மனையை நோக்கித் திரும்பியது.

★

விஸந்தம் படர்ந்திருந்த வானிலே துன்பம் என்ற கருமேகம் சூழ்ந்தது. சிந்தனைச் சுடர்கள் மின்னற் பொறிகளாகிப் பேரிடி இடித்தன. சித்தார்த்தரின் உள்ளம் குழம்பியது. குமுறியது. நிலை கொள்ளாது தத்தளித்தது. உணவு செல்லவில்லை; உறக்கம் கொள்ளவில்லை. அரண்மனை வாழ்க்கையே கசந்தது. மனைவி யசோதரையின் அமுத மொழிகள் புளித்தன. அரிவையரின் ஆடல் பாடலெல்லாம் அமைதியைக் குலைத்தன.

சுத்தோதன மன்னன் இதைக் கேள்வியுற்று என்ன செய்வ தென்றறியாது திகைத்தான். சித்தார்த்தர் பிறந்த சமயத்தில் அசித முனிவரும் நிமித்திகரும் சொன்ன வார்த்தைகளை மன்னன் சில காலமாக மறந்திருந்தான். இப்போது அவைகள் உருவெடுத்துப் பயங்கர வடிவத்தோடு முன் வந்து நின்றன. மைந்தனின் மனக் கவலையை மாற்றுவதற்கு மருந்தென்ன வென்று சிந்தித்தான். வழி தெரியவில்லை. அரண்மனையில் அடைத்து வைத்துக் காப்பதி லும் பயனில்லை யென்பதை யுணர்ந்தான். அப்படி யடைத்து வைத்தும் கூட விதி தன் விளையாட்டை நடத்திவிட்டது. பிணி மூப்புச் சாக்காடு என்ற துன்பக் காட்சிகளைத் தடுத்துவைத்தும் சித்தார்த்தர் கண்களில் அவை எதிர்ப்பட்டு விட்டன. இன்னும் என்ன நடக்குமோ!

சித்தார்த்தரின் தோழன் உதாயியை அழைத்தான் சுத்தோத னன். உதாயி தனது சாமர்த்தியம் முழுவதையும் உபயோகித்துச் சித்தார்த்தரின் மனத்தைத் திருப்பவேண்டுமென்று கேட்டுக்கொண் டான். "கருவுற்றிருக்கும் யசோதரை இன்றோ நாளையோ குழந்தை பெற்றெடுக்கப் போகிறாள். ஆகையால் அதுவரையும் இளவரசனின் உள்ளம் விபரீதமடையாமல் இருந்தால் புத்திர வாஞ்சை வந்து குணப்படுத்தி விடலாம்" என்றும் சொல்லி வைத்தான் தந்தை.

நாள் முழுவதும் சிந்தனையி லாழ்ந்திருந்த சித்தார்த்தர் மாலை யானதும் வழக்கம்போல் உலாவப் புறப்பட்டார். முன்னறிவித்தல் கொடாமலே சந்தகனும் வந்து காத்து நின்றான். இன்று எங்கே அழைத்துப் போகவேண்டும் என்பதைச் சந்தகனே தீர்மானித்து வைத்துக்கொண்டான்—உதாயியின் ஏற்பாடு போலும். தேரும் புறப்பட்டது.

நகர எல்லையைக் கடந்து சென்ற தேர் என்றுமில்லாத அழகுடன் விளங்கிய சோலை யொன்றில் பிரவேசித்தது. ஆனால் இயற்கையின் எழிலையோ சூழ்நிலையின் உணர்ச்சியையோ அனுபவிக்க முடியாமல் தேரிலே மௌனமா யுட்கார்ந்திருந்தார் இளவரசர் சித்தார்த்தர். அவருடைய சிந்தனைக ளெல்லாம் வெறும் காட்சி யுலகுக்கு அப்பால் சஞ்சரித்துக்கொண் டிருந்தன. நிம்மதியான ஒரு ஸ்தலத்தில் உயர வளர்ந்த ஒரு மரத்தடியில் அமைக்கப்பட்டிருந்த பளிங்குக் கற்பீடத்தி னருகில் சந்தகன் தேரைக் கொண்டு வந்து நிறுத்தினன். சுற்று முற்றும் அமைதி குடிகொண்ட அந்த இடத்திலே திடீரென்று தேர் நிறுத்தப் பட்டபோதுதான் சித்தார்த்தர் சுய நினைவு வந்து விழித்துப் பார்த்தார். அமைதியை நாடி வந்த அவருக்கு அந்த இடம் திருப்தியைத் தந்தது. மௌனமாக இறங்கி வந்து பளிங்குக்கல்

ஆசனத்தில் உட்கார்ந்து தியானத்தி லாழ்ந்தார். ஆனல் அந்த அமைதி நீடித்து நிற்கவில்லை.

எங்கிருந்தோ மதுர கீதம் ஒன்று காற்றிலே மிதந்து வந்தது. அதைத் தொடர்ந்து சதங்கை ஒலியும் வாத்தியங்களின் ஓசையும் நெருங்கி வந்தன. மறு கணமே கந்தர்வலோகம் கட்டவிழ்த்துவிடப் பட்டது போல எழிலுடை நங்கையர் பலர் காட்சி யளித்தனர். மாலை யிள வெயிலில் அவர்கள் மேனியின் பிரபை தங்கக் குழம்பு போல் பிரகாசித்தது. ஆடலும் பாடலும் அள்ளி வீசப்பட்டன. புருவங்கள் நெறித்தன; கண்கள் வெட்டின; கரங்கள் பற்றின; அதரங்கள் கொஞ்சின. மேலாடைகள் சரிய, ஸ்தன பாரங்கள் விம்மிப் புடைத்தன. இடைகள் மெலிய மேகலைகள் நெகிழ்ந்து வீழ்ந்தன. கதலி மென் தொடைகள் அதிர்ந்தன. பாதச் சிலம்புகள் கதறின. ஆடலும் பாடலும் என்ற பெயரில் காமவேளே சூத்திர தாரியாக நின்று இயக்கிய இத் திருக்கூத்தின் காட்சியைக் கண்ட கதிரவன் நாணிப் புறம்போந்து அடிவானத்துள் ஒதுங்கினன். இது தான் சமயமென்று தாரகைகள் எட்டி யெட்டிப் பார்த்தன.

கண்மூடி மௌனியாகிக் கடுந் தபசில் நிஷ்டை கொள்ளும் கைலையங்கிரி யண்ணலையும் கண் விழிக்க வைக்கும் அந்தக் காம மங்கையரின் லீலா விநோதங்கள் சித்தார்த்தரின் அசையா நிலையைக் கலைக்க முடியவில்லை. கற்சிலைபோல் ஸ்தம்பித்திருந்தார் அவர். ஈற்றில், அப் பெண்கள் யாவரும் விரக்தி யுற்றவர்களாய் வாடிச் சோர்ந்து வலி யிழந்து வெறுப்புடன் ஒதுங்கினர்.

யாவற்றையும் ஒரு புறத்தே நின்று பார்த்துக்கொண்டிருந்த உதாயி மெதுவாக நடந்து வந்து சித்தார்த்தரை யணுகினன். சோகம் படர்ந்த அவர் முகத்தை உற்றுப் பார்த்தான். அவனுக்கே அதிசயமா யிருந்தது. "இளவரசே! ஏன் இந்தப் பிடிவாதம்?" என்று கேட்டான்.

சித்தார்த்தர் பேசலானர்: "உதாயி! ஆடலும் பாடலும் அமைதி யூட்டும் காலம் போய்விட்டது. பாவம், இந்தப் பேதைப் பெண்கள் தம் இளமை என்றும் நிலைத்திருக்கும் என நம்புகிறார்கள். மூப்பும் பிணியும் மரணமும் விரைவிலே வந்து மூடிவிடும் என்பதை அவர்கள் அறியமாட்டார்கள். இன்பம் யாவும் துன்பத்தில் முடிகின்றன. இளமை போய் முதுமையில் முடிகின்றது. வாழ்க்கை மரணத்தில் போய் முடிகின்றது. இந்த உண்மைகளை நேரில் கண்ட பின்னரும் உள்ளம் நிலைகொள்ள முடியுமா? உதாயி! துன்பம் நிறைந்தது இந்த உலகம். மக்கள் யாவரும் அந்தத் துன்பத்தின் பிடியிலிருந்து எப்படி விடுபட முடியும் என்று சிந்திக்கிறது எனது

உள்ளம். அதன் இரகசியத்தை அறியும் வரை மனம் நிலை கொள்ளாது."

உதாயி சொன்னான்: "இளவரசே! நீங்கள் தத்துவ விசாரணை செய்வது ஆச்சரியமல்ல. நம்மை விட முதியவர்கள், கடுந்தவம் செய்த மகாஞானிகள் கூட அதற்கு விடையை இன்னும் கண்டதாகத் தெரியவில்லை. இன்று நேற்றல்ல, எத்தனையோ பல ஆயிரம் ஆண்டுகளாகத்தான் முயலுகிறார்கள். ஆனால், இயற்கையின் நியதியை வெல்ல முடியுமா? வாழ்க்கை வட்டத்தில் கிடைக்கும் ஒரு சில ஆண்டுகளில் அனுபவிக்கக் கூடிய இன்பத்தை அனுபவிக்காமல் ஒதுங்கியிருப்பது பேடித்தனம் என்பது என் கருத்து. அனுபவித்து முடிந்த பின் என்றோ ஒரு நாள் அது நிற்கவேண்டிய சமயத்தில் நிற்கட்டும்.

"கடமை என்பது ஒன்றிருக்கிறதல்லவா? நீங்கள் க்ஷத்திரியனுகப் பிறந்துவிட்டீர்கள். அந்த க்ஷத்திரியனுக்குரிய வாழ்க்கையை வாழ்ந்து காட்டவேண்டியது நீங்கள் கடமை. மனம் தளர்ந்து இப்படியான தத்துவ விசாரணைகளில் இறங்கினால் வீரம் குன்றும். நாடு சீரழியும். குடிகள் வருந்துவர். அது முறையாகுமா? உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கினால் ஆண்மை சிறக்கும். வீரம் பொலியும். அரசனுக்குரிய கடமை தெரியும். மக்கள் சந்தோஷமாக வாழ வழி பிறக்கும். ஏதோ எனக்குத் தெரிந்ததைச் சொன்னேன். நீங்கள் இஷ்டம்," என்று உதாயி எடுத்துச் சொன்னான்.

"உதாயி! கடமையைப் பற்றிச் சொன்னாய். அந்தக் கடமையைப்பற்றியே நானும் சிந்தித்தேன். இந்த வாழ்வில் மாத்திரம் மக்கள் சந்தோஷமாக இருப்பதை நான் விரும்பவில்லை. நித்திய இன்பத்தை யனுபவிக்க, என்றும் சந்தோஷமாக இருக்கவே நான் வழி தேடுகிறேன். முன்னோர்கள் முயன்றார்கள். வெற்றியைக் காணவில்லை யென்பதற்காக அந்த முயற்சியைக் கைவிடுவதா? நானும் முயன்று பார்க்கிறேன். வெற்றி கிட்டும்வரை மனித வர்க்கம் முயலட்டும்," என்றார்.

உதாயி அதற்குமேல் பேசவில்லை.

ஆடல் மகளிர் யாவரும் புறப்பட்டனர். உதாயியும் நகர்ந்தான். சற்று வேளை சிந்தனையி லாழ்ந்திருந்த சித்தார்த்தர் சந்தகனை யழைத்துத் தேரைக் கொண்டு வரச்சொல்லி அரண்மனையை நோக்கிப் புறப்பட்டார்.

திரும்பி வரும் வழியில் அரண்மனைத் தூதுவர்கள் சிலர் ஓடிவந்து யசோதரை ஓர் ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தாள் என்று களிப்புடன் தெரிவித்தனர். சித்தார்த்தர் திடுக்கிட்டார். "மகனே

பிறந்தான்? அவன் எனக்கு வந்த இராகுலன்.* பந்தத்தின் மேற் பந்தம்," என்று தமக்குள் சொல்லிக் கொண்டார்.

புத்திரவாஞ்சை சித்தார்த்தரின் மனத்தை மாற்றிவிடும் என்று சுத்தோதனன் கொண்டிருந்த நம்பிக்கை பயனளிக்க வில்லை. அதற்கு மாறாக, சித்தார்த்தரின் உள்ளத்தில் மேலும் விசாரமே அதிகரித்தது. தமக்கு மகன் பிறந்தான் என்ற செய்தியைக் கேட்டதும் அவர் நேரே தம் அரண்மனைக்குள் சென்று தனிமையிலிருந்து சிந்திக்கலானார்.

* சித்தார்த்தரின் புதல்வனுக்கு இராகுலன் என்று பெயர். தமது புத்தியாகிய திங்களை மறைக்க வந்த இராகு என்று சொன்னதாகவும் அதன் காரணமாக இராகுலன் என்ற பெயர் நிலைத்ததாகவும் சொல்லப் படுகிறது.

எட்டாம் அத்தியாயம்

கட்டவிழ்த்த காளை

நாட்கள் சில கழிந்தன. ஒரு நாள் மாலை வழக்கம்போலத் தமது தேர்மீதேறி உபவனம் சென்று தனிமையில் உலாவிய சித்தார்த்தர் என்றுமில்லாத ஒரு புதிய காட்சியைக் கண்டார். துவராடை யணிந்த ஒரு சந்நியாசி எங்கிருந்தோ தோன்றி, "சித்தார்த்த!" என்று பெயர் சொல்லி அழைத்தார்.

தன்னந் தனிமையான அந்த உபவனத்தில், அரண்மனை யாட்களைத் தவிர வேறெவரும் நுழைய முடியாத அச்சோலையில், திடீரென ஒரு சந்நியாசி தோன்றியதைக் கண்ட சித்தார்த்தர் திகைத்துப் போய், "ஸ்வாமி! தாங்கள் யாரோ?" என்று கேட்டார். துறவி சித்தார்த்தரை நெருங்கி வந்து, "நான் ஒரு சிரமணன். துக்கத்தை நினைந்து நினைந்து என் மனம் இடை விடாது வருந்தா நின்றது. இத் துக்கத்தி னின்றும் நீங்கி என்றும் அழியாததும், ஆதி அந்தம் இல்லாததும், நட்புப் பகைமை யற்றதும், ஏகாந்தமானதும், ஆனந்த மயமாகவுள்ளதுமான ஒரு நிலையை அடைவதற்கு என் உள்ளம் அவாவுகின்றது. ஆதலால், ஊர்ப்புறத்தே தங்கி ஐம்புலன்களையும் அடக்கிச் சமாதியி லிருந்துகொண்டு, உயிரைப் பாதுகாப்பதற்கு வேண்டிய வளவே உணவை இரந்துண்டு வாழும் பிக்ஷுக்களின் நிலைமையை விழைந்தேன்"* என்று சொல்லி விட்டு அப்பால் சென்றார்.

சித்தார்த்தருக்கு இது ஒரு புதிய சிந்தனையைத் தூண்டியது. "இந்தச் சிரமணன் சாதாரணமாக இங்கு வந்திருக்க முடியாது. எனக்கு வழிகாட்ட வந்த ஒரு தேவகையே யிருக்கவேண்டும். நெடு நாளாக என் உள்ளம் தேடியலைந்த பொருளை யடைவதற்கு இந்தச் சிரமணக் கோலமே தக்கது," என்று எண்ணிக்கொண்டு தமக்கு அந்த மார்க்கத்தைக் காண்பிக்க வந்த பிக்ஷுவுக்கு நன்றி தெரிவிக்க வேண்டித் திரும்பிப் பார்த்தார். ஆனால் அந்தச் சிரமணனைக் காண வில்லை!

தமது தேரில் ஏறி அமர்ந்தார் சித்தார்த்தர். தேரும் எவ்வித அவசரமு மின்றி மெதுவாக ஊர்ந்து சென்றது. உபவனத்திலிருந்து

---

* புத்த சரித்திரம்: டாக்டர் சாமிநாதையர் அவர்கள்.

நகரவீதியில் நுழைந்தார். ஊரடங்கிய அமைதியில் பிரகாசமாய் எரிந்த வீதி வெளிச்சத்தில் கந்தர்வனைப் போல் தேரில் வீற்றிருந்த அவர் தோற்றம் உப்பரிகை ஒன்றின் மேல் நின்ற கிரிஷா கோதமி என்ற இளம் மங்கை யொருத்தியின் கண்களில் படவே அவள் உவகை மேலீட்டால் வாய்விட்டுப் பாடினாள்:

நிப்புதா நாணஸா மாதா
நிப்புதா நாணஸோ பிதா
நிப்புதா நாணஸா நாரீ
யஸ்ஸா யஸ் ஈதிஸோ பதி.

"இந்தக் குமரனை மகனைப் பெற்ற தாய் மகிழ்ச்சி யடைகிறாள்; தந்தை மகிழ்ச்சி யடைகிறான்; மணாளனைப் பெற்ற மனைவியும் மகிழ்ச்சி யடைகிறாள்" என்ற இப்பாட்டைக் கேட்ட சித்தார்த்தர் சற்று நின்று மேலே எட்டிப் பார்த்தார். கிரிஷா கோதமி என்ற அந்த க்ஷத்திரிய யுவதியின் சாதாரண வார்த்தையில் ஒரு பெரிய உண்மையைக் கண்டார். 'நிப்புதா' என்ற பாலி வார்த்தைக்கு 'மகிழ்விக்கப்படுதல்' என்ற பொருளைத் தவிர 'அவியப் படுதல்' என்ற பொருளும் சித்தார்த்தருக்கு உதயமாயிற்று. "சரியாகத்தான் அவள் சொன்னாள். எது அவிந்தால் மகிழ்ச்சி ஏற்படுகிறது? பற்று என்ற தீ அவிந்தால் மகிழ்ச்சி; காமமும் பகையும் பொய்யும் சூதும் அவிந்தால் மகிழ்ச்சி. துன்பம் என்ற தீ அவிந்தால் மகிழ்ச்சி. இந்தப் பெண் இன்று எனக்கு ஒரு சிறந்த பாடத்தைக் கற்பித்து விட்டாள். நிர்வாணம் என்ற விடுதலையை நாடி அலையும் எனக்கு ஓர் உண்மையை உணர்த்திவிட்டாள். இன்றே நான் துறவியாக உறுதிகொண்டுவிட்டேன்" என்று சிந்தித்துக்கொண்டு அவளுக்குப் பிரதியுபகாரமாகத் தன் கழுத்தில் கிடந்த முத்துச் சரமொன்றைக் கழற்றி அன்போடு அனுப்பி வைத்தார். சித்தார்த்தர் தன்மீது காதல் கொண்டுவிட்டார் என்று கிரிஷா கோதமி புளகாங்கித மடைந்தாள்! ஆனால், மறுபேச்சுப் பேசாமலே சித்தார்த்தர் அரண்மனைக்குத் திரும்பினார்.

தன் மைந்தனின் நிலைகொள்ளா உள்ளத்தின் சஞ்சலத்தைப் பற்றியும் அரண்மனையில் சூழ்ந்துவரும் பேர் இருளைப்பற்றியும் மந்திரி பிரதானிகளுடன் ஆலோசனை நடத்திவிட்டு அவர்களைப் பிரிந்து தனித்திருந்த சுத்தோதன மன்னனிடம் ஒரு பணியாளன் வந்து, "அரசே! இளவரசர் தங்களைக் காண ஆவல் தெரிவித்தார்" என்று கூறினான். "உள்ளே வரச்சொல்," என்று விடை கொடுத்து விட்டுக் கபிலபுர மன்னன் கவலையுடன் காத்திருந்தான்.

உள்ளே வந்த சித்தார்த்தர் மௌனமாகச் சென்று தந்தையின் பக்கத்தில் உட்கார்ந்தார். சிறிது வேளை தந்தையும் தனயனும் வார்த்தை யேதுமில்லாமல் மௌனமாயிருந்தனர். பின்னர் இள வரசர் வாய் திறந்து, "அப்பா! பலகாலமாக என் மனத்தில் எழுந்த ஆவலை இப்போது நிறைவேற்றத் தீர்மானித்துவிட்டேன். இந்த இல்வாழ்க்கை எனக்குப்போதும். இனித் துறவியாக வெளியேறிச் செல்லத் துணிந்துவிட்டேன். அதற்குத் தாங்கள் விடை தர வேண்டும்," என்றார்.

சுத்தோதன மன்னன் இதைக் கேட்டதும் துடிதுடித்தான். அவன் கட்டி வைத்திருந்த மனக்கோட்டைக ளெல்லாம் இடிந்து சரிந்தன. அவன் எதிர் பாராத விஷயமல்ல; பல நாளாக எதிர்பார்த்திருந்த விஷயம் தான். ஆனால், யசோதரைக்குக் குழந்தை பிறந்த ஏழாவது நாளிலேயே மனைவியையும் குழந்தையையும் புறக்கணித்துவிட்டுச் சித்தார்த்தர் இப்படிப் புறப்பட்டுச் செல்ல முடிவு செய்வார் என்று அவன் கருதவில்லை. முன்பு அசித முனிவரும் நிமித்திகரும் சித்தார்த் தர் பிறந்த சமயத்தில் சொன்னது பலிக்கப் போவதைக் கண்டு ஆற்றொணாத் துயரி லாழ்ந்தான். "அருமைக் குழந்தாய்! இந்த வயதில் உனக்கு இந்தப் புத்தி எப்படி வந்ததோ தெரியவில்லை. வானப்பிரஸ்தத்துக்கு இன்னும் எவ்வளவோ காலம் இருக்கிறது. மிக விரைவில் நானே இராச்சியத்தை உன் கையில் ஒப்படைத்து விட்டு சந்நியாசம் பூணக் காத்திருக்கிறேன். உனது பரிபாலனம் முடிந்து, உன் புதல்வன் வயது வந்து இராச்சிய பாரத்தை ஒப்புக் கொண்ட பின் வேண்டுமானால் நீ துறவு பூணலாம். அதற்குள் என்ன அவசரம்?" என்று ஆறுதல் மொழிகள் சொல்லிப் பார்த்தான் சுத்தோதனன்.

ஆனால், சித்தார்த்தர் கேட்கவில்லை. "அப்பா, உலகில் எவரும் என்றென்றும் நிலைத்திருக்கப் போவதில்லை. என்றோ ஒரு நாள் பிரியவேண்டியவர்களே. ஆகையால், ஓர் உன்னத லக்ஷியத்தை நாடி நான் பிரிகிறேன். அதில் தாங்கள் தடை நிற்கலாகாது என்று கேட்டுக்கொள்கிறேன்," என வேண்டினர். சுத்தோதனன் கண்களில் நீர் ஆறுப்ப் பெருகியது. பேசுவதற்கு நா எழவில்லை. அந்தக் காட்சியைக் காணச் சகியாதவராய்ச் சித்தார்த்தர் அங்கிருந்து தன் அரண்மனைக்குச் சென்றார்.

அன்றிரவு.

வழக்கம் போல் ஓயாது ஆடலிலும் பாடலிலும் ஈடுபட்டிருந்த அந்தப்புரத்துப் பரத்தையர் யாவரும் அப்படி யப்படியே உறக்கத்தி லாழ்ந்தனர். சித்தார்த்தர் திடீரென்று விழித்தார்.

வீடு தீப்பற்றி யெரிவதை யறிந்த ஒருவன் அந்த ஆபத்தினின்றும் தப்பியோட எவ்வாறு பரபரப்புக் கொள்வானே அவ்வாறு அவரும் அரண்மனையை விட்டு வெளியேறத் துடித்தார்.

ஆடல் மகளிர் யாவரும் உறங்கிக்கொண்டிருந்த அலங்கோல நிலையைக் கண்டார். வாரிய கூந்தல் கலைந்து புரள, துயில்கள் புறம்போக, மார்பகம் திறந்தபடி அங்காந்தவாயுடன் கால்களையும் கைகளையும் தாறுமாறாக வீசிவிட்டு ஆழ்ந்த நித்திரையி லிருந்தனர் யாவரும்.

வீணை வாசித்தவள் தந்தியில் வைத்த விரல்களை யெடுக்கவில்லை. குழல் வாசித்தவள் அதை அதரத்தில் வைத்தவாறு துயின்றுள். மத்தளம் வாசித்தவள் அதை வருடியபடியே கிடந்தாள்.

சித்தார்த்தர் இந்தக் காட்சியைக் கண்டு, "இதோ பிணக்காடு! இளமையும் எழிலும் என்று சொல்லி நிலையா இன்பத்தை நாடுபவர்கள் இதோ இந்த உண்மை நிலையைப் பார்க்கவேண்டும்," என்று சொல்லிக்கொண்டார்.

பக்கத்து அறையில் துயில்கொண்டிருந்த யசோதரை ஏதோ தீக் கனாக்கண்டு துடிதுடித் தெழுந்து, "நாதா! நாதா!" என்று அலறினாள். சித்தார்த்தர் பதறி யோடிச் சென்று தன் மனைவியின் பக்கத்தி லுட்கார்ந்து, "யசோதரா! என்ன நேர்ந்தது? எதற்காக இந்த அச்சம்?" என்று பரிவுடன் கேட்டார். யசோதரை, தான் கெட்ட கனவுகள் கண்டதாயும் அதன் பின் உடல் நடுக்கமுறுவதாகவும் சொன்னாள். "நாதா! அவைகளை நினைத்தால் இன்னும் உடல் நடுங்குகிறது. பிரகாசம் பொருந்திய மாணிக்கம் ஒன்றை நெற்றியிற் சூட்டி, நன்றாக அகன்ற கொம்புகளையுடைய காளையொன்று கம்பீரமாக வீதி வழியே நடந்து நகரவாயிலை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது. அப்பொழுது இந்திரன் கோயிலினின்றும் ஓர் அசரீரி, "இந்த எருத்தைப் பிடித்துக் கட்டாவிட்டால் இந் நகரத்தின் சிறப்பு இங்கிருந்து வெளியே போய்விடும்!" என்று எச்சரித்தது. ஆனால் ஒருவராவது அந்தக் காளையைத் தடுக்கத் துணியவில்லை. உடனே நான் ஓடிப்போய் அந்தக் காளையின் கழுத்தைக் கட்டிக் கொண்டு போகவொட்டாது தடுத்தேன். ஆனால் காளையோ என்னையும் உதறித் தள்ளிவிட்டு மதிற் கதவுகளையும் முட்டித் திறந்து கொண்டு வெளியே ஓடிவிட்டது!

"மற்றொரு கனவில், இந்திரன் கோயிலில் மாட்டப்பட்டிருந்த பொற்கொடி அசைந்து கீழே விழ அந்த இடத்தில் வேறொரு கொடி உயரக்கிளம்பிற்று. அக்கொடியில் பற்பல அக்ஷரங்களெல்லாம் வரையப் பெற்றிருந்தன!

"என் அன்பே! இவையெல்லாம் ஏதோ தீய நிமித்தங்களாகவே யிருக்கவேண்டும். எனக்கு ஒரே பயமா யிருக்கிறது," என்று யசோதரை அழுதாள்.

சித்தார்த்தர் தம் மனைவிக்கு ஆறுதல் வார்த்தைகள் கூறி, "யசோதரா! நீ கண்ட கனவுகள் நன்னிமித்தங்களே. எதிர் காலம் உனக்கு நல்ல பலனைத் தரப்போகிறது. பயப்படாதே. உன்னிடம் எனக்குள்ள அன்பு என்றும் மாறாது. இப்போது நன்றாகத் தூங்கு," என்று சொன்னர். சற்று நேரத்தில் யசோதரை அயர்ந்த நித்திரையி லாழ்ந்தாள்.

தத்தளித்த மனத்துடன் தமது படுக்கை யறையில் இங்கு மங்குமாக நடந்தார் சித்தார்த்தர். உள்ளம் உறுதி கொண்டு விட்டது. அரண்மனையை விட்டுக் காளை கட்டவிழ்த்துக்கொண்டு பிரியவேண்டிய சமயம் வந்துவிட்டது. நாற்புறமும் சுற்றிப் பார்த்தார். எங்கும் நிம்மதி. வெளி மண்டபத்தில் தூங்கிக்கொண்டிருந்த அரிவையர் விடும் நெடு மூச்சுத்தான் கேட்டது. தமது அறையி லிருந்து வாயிற்படி வரை வந்தார். பின்பு ஏதோ சிந்தித்தவராக உள்ளே சென்றார். இனியும் தாமதிக்கலாகாது என்று மீண்டும் புறப்பட்டு வெளியே நடந்து அரண்மனை வாயிற்படிக்கு வந்துவிட்டார். அந்தச் சமயத்தில் அவரது புத்திரன் இராகுலனின் ஞாபகம் வந்துவிடவே, அந்தச் செல்வக் குழந்தையை ஒரு தரம் பார்த்துவிடவேண்டுமென்று சபலம் தட்டியது. திரும்பிப் போவதா விடுவதா? சற்று நேரம் தாமதம். இறுதியில் திரும்பிப்போய்ப் பார்க்கத் துணிந்து யசோதரையின் அறைப்பக்கம் வந்தார். கதவு திறந்தபடிதா னிருந்தது. தன்னையு மறியாத மோகனப் புன்னகை தவழ யசோதரை அயர்ந்த தூக்கத்திலிருந்தாள். அவளது வலது கை அணைத்தபடி இராகுலன் படுத்திருந்தான். அப்படியே அந்தக் குழந்தையை வாரி யெடுக்கவேண்டும் என்ற ஒரு பிரமை! ஆனால் யசோதரை விழித்துக்கொண்டால்? அது அவர் மேற்கொண்ட நெடும் பயணத்துக்குப் பங்கமாகிவிடுமே! ஆசை தூண்டியதுதான்; ஆனால் அவர் உறுதி தடுத்தது. முடிவில் சித்தார்த்தர் அங்கு நின்றபடியே மனைவியையும் குழந்தையையும் பார்த்தார். "என் அன்புச் செல்வங்களே! விடை கொடுங்கள்! உங்கள் பொருட்டாகவும் உலக மக்கள் யாவர் பொருட்டாகவும்தான் நான் இந்த யாத்திரையில் செல்கிறேன். எனது லக்ஷியம் நிறைவேறியவுடன் என்றோ ஒரு நாள் மீண்டும் உங்களை வந்து பார்க்கிறேன்" என்று மனத்தால் சொல்லிவிட்டுத் தடுத்து நிறுத்திய கண்ணீரையும் துடைத்துக் கொண்டு வாயிற் கதவைத் தாண்டி வெளியேறினர்!

அன்று ஆடிப் பூர்ணிமை நாள். போதிசத்துவர் மாயாதேவியின் வயிற்றில் உற்பத்தியான அதே தினம். நிர்மலமான வானத்தி னுச்சியில் நிறைமதி தாரகைகள் சூழ்தரப் பவனி வந்தது. ஹிமா சலத்தை வருடிக்கொண்டு இளங்காற்று அவ்வேளையில் தண்ணென்று வீசியது. சித்தார்த்தர் அரண்மனை வாயிற்படியை அடைந்தவுடன் ஏற்கெனவே சுத்தோதனன் ஆணைப்படி தாழ்ப்பாள் போட்டுக் காவல் வைக்கப்பட்டிருந்த நெடுங்கதவுகள் தாமாகவே திறந்து கொடுத்தன. காவலர்கள் யாவரும் கடுந் துயிலில் ஆழ்ந்திருந்தனர். மேலும் நடந்து தோட்டத்தின் கரையிலுள்ள சிறு குடிசையை அணுகினர் அவர். உறங்கிக்கொண்டிருந்த குதிரைப்பாகன் சந்தகனை மெது வாகத் தட்டி எழுப்பினர். உயிர்த்தோழனைப் பழகிய அந்த உத்தமன் சட்டென்று விழித்துக்கொண்டு, சித்தார்த்தரே அவ் வேளையில் அங்கு வந்து நிற்பதைக் கண்டு மிகுந்த கலவரத்துடன், "இளவரசே! ஏது இந்த வேளையில்? என்ன நேர்ந்துவிட்டது?" என்று கேட்டுத் திகைத்து நின்றான். சித்தார்த்தர் அவனை அமைதியா யிருக்கும்படி சைகை காட்டிவிட்டு மெதுவாகத் தம் திட்டத்தைப் பற்றிக் கூறினர்.

"சந்தகா! நெடுநாளாக என் உள்ளத்தில் உறுதிகொண்டிருந்த விரதத்தை இன்றுதான் நிறைவேற்றச் சந்தர்ப்பம் கிடைத்தது. அதற்கு உனது துணை அவசியம் வேண்டப்படுகிறது. இல்லற வாழ்வின் இன்பம் யாவும் அனுபவித்துவிட்டேன். போதும் இந்த வாழ்க்கை. இனி நான் எல்லையற்ற பேரின்பத்தை நாடித் துறவு பூணத் தீர்மானித்துவிட்டேன். இந்த ராத்திரிக்குள்ளாகவே அரண் மனையையும் ஊரையும் விட்டுச் சென்று காட்டை யடைந்து பிக்ஷு வாகிவிடவேண்டும். தாமதமில்லாமல் போய் எனது உயிருக் குயிரான கண்டகப் பரிதியைக் கொண்டு வந்து நிறுத்து" என்றார்.

எதிர்பாராத இந்தக் கட்டளையை அந்த நடுநிசியில் கேட்ட சந்தகன் தயங்கினான். அவன் கண்களில் நீர் மல்கியது. ஆனால் பேசுவதற்கு நா எழவில்லை. ஏற்கெனவே உலாப் போந்த சமயங்களி லெல்லாம் சித்தார்த்தர் துறவுக் கோலத்துக்கு அடிகோலி வருகிறார் என்பதை உணர்ந்துதா னிருந்தான். ஆனால் இந்த அர்த்த யாமத்திலே எவருக்கும் தெரியாமல் திடீரென இங்ஙனம் கிளம்பி விடுவார் என்று அவன் கனவிலும் நினைத்திருக்கவில்லை. நாளைப் பொழுது விடிந்ததும் அரண்மனை அல்லோல கல்லோலப்படும். சுத்தோதன மன்னனுக்கும் தேவி யசோதரைக்கும் அவன் என்ன பதில் சொல்லுவான்? எல்லாம் ஒரே குழப்பமா யிருந்தது.

"எதற்காக யோசிக்கிறாய் சந்தகா? இன்றுதான் நிமித்தங்கள் யாவும் பொருந்தி யிருக்கின்றன. ஊரே துயில்கொண் டிருக்கிறது. கட்டும் காவலும் போடப்பட்டிருந்தும் கதவுகள் யாவும் தாமாகவே திறந்துகொண்டு வழி விடுகின்றன! எனது விரதம் நிறைவேறும் நாள் இதுதான். ஆகையால் யோசிக்காமல் போய்க் குதிரையைக் கொண்டு வா," என்று சித்தார்த்தர் மறுபடியும் உத்தரவிட்டார்.

சந்தகன் கவிழ்ந்த தலை நிமிராமல் சென்றான். சென்று, சித்தார்த்தரின் வாகனமாகிய கண்டகம் என்ற குதிரையை அவிழ்த்து வந்து சேணம் கட்டிப் பக்கத்தில் நிறுத்திக் காத்து நின்றான்.

சித்தார்த்தர் மகிழ்ந்து குதிரையைத் தடவிக் கொடுத்தார். இறுதி யாத்திரையில் தன் எஜமானை யேற்றிச் செல்லப்போவதை யுணர்ந்த குதிரையும் தவிப்புடன் ஏறிட்டுப் பார்த்தது. சித்தார்த்தர் பரிவோடு, "என் அருமைக் கண்டகமே! இந்தப் புனித யாத்திரையில் கிடைக்கும் நற்பலனில் உனக்கும் பங்குண்டு. பிறவி யெடுத்த சகல உயிர்களும் துயர் துடைத்து வாழும் மார்க்கத்தையே தேடி நான் செல்லுகின்றேன். இதற்கு உன் உதவியைச் செய். சூரியோதய மாவதற்குள் என்னைக் கண் காணாப் பிரதேசத்துக்கு அழைத்துச் செல்வாயாக," என்று சொல்லிக்கொண்டு அதன் முதுகில் தாவி யேறி உட்கார்ந்து கொண்டார். சந்தகனையும் பின்னால் ஏறி உட்காரும்படி பணித்தார். சித்தார்த்தரின் மன உறுதியை யறிந்த குதிரையும் தலையை நிமிர்த்திச் சுற்று முற்றும் பார்த்தது. பின்னர் வானத்தைப் பார்த்து ஒரு கனைப்புக் கனைத்து விட்டு வாயு வேகத்தில் பாய்ந்து சென்றது!

அரண்மனை வாயிற் கதவுகள் தாமாகவே திறந்து கொண்டது போலக் கோட்டை வாயில்களும் திறந்து கொடுத்தன. கண்டகக் குதிரையின் காலோசை கூட எவர் காதிலும் படவில்லை. தேவர்கள் நால்வர் அந்தக் குதிரையின் நான்கு பாதங்களையும் தாங்கிப் பிடித்தனர் என்பது புராணைக் கூற்று. நிசப்தமான வேளையில் சித்தார்த்தர் ஒரு நொடிப்பொழுதில் கபிலவஸ்து நகரத்தைக் கடந்து வெளியேறியதும், இருபத்தொன்பது ஆண்டுகளாக அடை பட்டுக் கிடந்த அந்த நகரத்தை ஒரு தரம் திரும்பிப் பார்த்தார். "பிறவிப் பிணி மருந்தைக் கண்டுபிடித் தல்லாது இந்த நகரத்துக்கு மீளேன்" என்று சபதமிட்டார்.

வாயு வேகத்தில் சென்றது போதிசத்துவரின் கண்டகம். காடும் மேடும் நதியும் சுனையும் அதன் பாதங்களில் பட்டதாகவே தோன்ற வில்லை. வான வெளியில் மிதக்கும் ஊர்தி போல எவ்வித தடையு மில்லாமல் சென்றுகொண்டிருந்தது. இடையிலே சில விரோதியாகிய

மாரன் என்ற தேவன் தோன்றி, "இளவரசே! இந்த முயற்சியைக் கைவிட்டுவிடும். இன்றிருந்து ஏழாவது நாள் சர்வ லோகத்தையும் அடி பணியச் செய்து ஒரு குடைக்கீழ் அரசாளும் சக்கர வர்த்தியாகச் செய்து விடுகிறேன்," என்று ஆசை மொழி கூறித் தடுத்தான். ஆனல் போதி சத்துவர், "மாரனே! அப்பாலே செல். உன் மாயா ஜாலங்களை என்னிடம் காட்டி மயக்காதே. என் உறுதி தளராது!" என்று சொல்லிச் சென்ருர். மாரன் ஆத்திரத்துடன், "நன்று நன்று சித்தார்த்தா! நானும் பார்க்கிறேன். என்று உன் உள்ளத்தில் ஆசையோ பற்ருே பகைமையோ கொடுமையோ எழுகின்றதோ அன்று எனக்குத் தெரியாமல் விடாது. அந்தச் சமயத்தில் பார்த்துக் கொள்கிறேன்," என்று சொல்லிக்கொண்டு நிழல் போல் பின் தொடர்ந்தான்.

★

நிழக்கு வெளுக்கும் சமயம். பல காத தூரம் விரைந்து சென்ற குதிரை அநோமை நதிக் கரைக்கு வந்தது. அங்கிருந்து ஒரே தாவில் தாவி ஆற்றைக் கடந்து நின்றது. கபிலவஸ்துவிலுள்ள சாக்கியர் அறிந்துகொள்ள முடியாத தூரம் கடந்துவிட்டோம் என்று கண்டதும் சித்தார்த்தர் கீழே யிறங்கிக் குதிரையைத் தட்டிக்கொடுத்து, "அசுவ திலகமே! உன் பராக்கிரமத்தை மெச்சினேன். உன் அன்பின் மகத்துவம் எனது பெருந் துறவுக்கு ஆதரவாயிருந்தது. அடுத்த பிறவியில் நீ இருக்கவேண்டிய இடத்தி லிருப்பாய். போதிசத்து வரைச் சுமந்த உனக்குத் தேவலோகத்தில் இடம் கிடைக்கும்," என்று பாராட்டினர். கண்டகம் சோகத்தால் வாடியது. இரக்கம் கலந்த பார்வையுடன் போதிசத்துவரை ஒரு தரம் நோக்கிவிட்டு அவர் பாதங்களை நக்கியது. அதன் கண்ணீரால் பாதங்களைக் கழுவியது.

சோகத்தால் நிலை தளர்ந்தான் சந்தகன். "இளவரசே! தங்களை விட்டுத் தனியாக நான் நகரத்துக்கு எப்படித் திரும்புவேன்? மன்னவ னுக்கும் தங்கள் தேவியாருக்கும் நான் என்ன பதில் சொல்லுவேன்? தங்கள் சிற்றன்னைக்கு என்ன சொல்ல முடியும்? ஸ்வாமி! தங்களுடன் என்னையும் அழைத்துச் செல்லுங்கள். நானும் தங்களுடன் சேர்ந்து துறவியாகி வருவேன்," என்ருன்.

சித்தார்த்தர் அவனைத் தடுத்து, "சந்தகா! நீ ஊர் திரும்பிப் போகவேண்டியது அவசியம். சென்று அங்கே மன்னவனுக்கும் மற்று முள்ளோருக்கும் நான் துறவியாகிவிட்டேன் என்ற செய்தி யைச் சொல்லவேண்டும். பின் ஒரு காலத்தில் என் கூட்டத்தில் நீயும் வந்து சேரலாம்," என்று சொல்லிவிட்டுத் தமது மணி முடியைக்

கழற்றிச் சந்தகன் கையில் கொடுத்தார். உடை வாளை எடுத்துத் தமது சிகையைக் கத்தரித்து ஆகாயத்தில் பறக்கவிட்டார். உடலில் தரித்திருந்த அங்கியையும் அரைக் கச்சையையும் ஆபரணங்களையும் அகற்றி உடை வாளோடு சேர்த்துச் சந்தகன் கையில் கொடுத்தார். "இந்த ஆடைகளையும் வாளையும் ஆபரணங்களையும் கொண்டு போய் மன்னனிடம் கொடுத்து என் பொருட்டாக எவ்வித கவலையும் கொள்ளவேண்டாம் என்று கேட்டுக்கொள்," என்று சொல்லிவிட்டு மறு பக்கம் திரும்பிப் பார்த்தபோது ஒரு வனவேடன் அவ்வழியே செல்வதைக் கண்டார். அவன் தரித்திருந்த மரவுரியைப் பார்த்து விட்டு, "இந்த மரவுரிதான் என் துறவுக் கோலத்துக்கு ஏற்றது. என் உடலி லிருக்கும் பட்டு வஸ்திரம் சிறிதும் பொருந்தாது," என்று எண்ணிக்கொண்டு வேடனை யணுகி, "அப்பா, என் உடையை ஏற்றுக்கொண்டு நீ யணிந்திருக்கும் மரவுரியைத் தருகிறாயா?" என்று கேட்டார்: வேடன் அதற்காகவே அங்கு தோற்றமளித்தவன் போல மறு பேச்சுப் பேசாமல் மாற்றிக் கொண்டான்.

இப்போது தமது துறவுக் கோலம் பூர்த்தியாகிவிட்டது என் பதைக் கண்டு திருப்தியோடு சித்தார்த்தர் சந்தகனைப் பார்த்து, "சந்தகா! நான் பிரியவேண்டிய சமயம் வந்துவிட்டது. எனக்கு விடை தா. இத்தனை ஆண்டுகளாக என் உயிர்த் தோழனாயிருந்தாய். எனக்கு வழி காட்டினாய். என்னை ஆதரித்தாய். இந்த நன்றியை நான் மறக்கமாட்டேன். அதன் பலனை நீ பின்னால் ஒரு நாள் காண்பாய். இப்போது எனக்கு விடை கொடு. கபிலவஸ்துவில் யாவருக்கும் நல் வார்த்தை சொல்லித் தேற்றுவது உன் பொறுப்பு. நான் போய் வருகிறேன்," என்று சொல்லிக் கொண்டு சந்தகனின் பதிலை எதிர்பார்த்து நின்றார். ஆனால் சந்தகன் நா எழவில்லை. கற்சிலைபோல் நின்றான். அவன் கண்களில் நீர் பெருகியது. தன்வச மிழந்தான். அந்தக் காட்சியைச் சகியாதவராய்ச் சித்தார்த்தர், மேலும் அங்கு நிற்பது தமது விரதத்துக்குத் தடை செய்யும் என்று கருதி, அவ்விடத்தை விட்டுத் திரும்பி விரைவாக நடந்தார். அவரது நெடும் பயணம் ஆரம்பித்தது. பாத யாத்திரை தொடங்கியது.

சித்தார்த்தரின் இந்தப் பெருந்துறவு "மகாபி நிஷ்கிரமணம்" என்று சொல்லப்படுகிறது.

மகுடந் தரிக்கவேண்டிய இளவல் மரவுரி தரித்து வனத்தை நாடிச் செல்லும் காட்சி ஒரு பெரும் சோகக் காட்சியா யிருந்தது. வளர்ந்து வரும் உதய வெயிலிலே அடிமேல் அடி வைத்துத் தலை குனிந்தபடி சித்தார்த்தர் நடந்தார். வெகுதூரம் நடந்துவிட்டார். அதன் பின் அந்த இளம் பிக்ஷுவின் உருவம் வனத்துள் வனமாக மறைந்தது.

சந்தகன் கண்கொட்டாமல் அந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டே உயிரற்ற சடலம்போல் நின்றான். பக்கத்திலே கண்டகம் சோர்ந்து விழுந்ததையும் அவன் உணரவில்லை. அந்த உணர்ச்சி நிறைந்த மிருகம் அடியற்ற மரம்போல் விழுந்து உயிர் துறந்தது. தனது தலைவனுக்குச் செய்ய வேண்டிய இறுதிக் கடமையை அது நிறைவேற்றிவிட்ட பின் இனி மேல் தனக்கு இவ்வுலகில் இடமில்லை யென்று கண்டது போலும்.

சற்று நேரத்தில் சுய நிலைக்கு வந்த சந்தகன் செய்வதின்ன தென்றறியாதவனாய் அங்கிருந்து திரும்பினான். தலைவனை யிழந்து, குதிரையை யிழந்து, தன் உணர்ச்சிகள் யாவற்றையுமே இழந்து கபிலவஸ்துவை நோக்கி நடந்தான்

ஒன்பதாம் அத்தியாயம்

நெடும் பயணம்

அநோமை நதிக்கரையில் சிரமணக்கோலம் பூண்ட சித்தார்த்தருக்கு அன்றிலிருந்து கௌதம பிக்ஷு என்ற பெயர் வழங்கலாயிற்று. அங்கிருந்து அவர் அநுப்பியா என்ற ஒரு கிராமத்துக்குச் சென்றார். அங்கே ஒரு சோலையில் சில நாள் தங்கி யிருந்துவிட்டு, பார்க்கவர் என்ற ஒரு முனிவரின் ஆசிரமத்துக்குச் சென்றார் என்றும், அங்கே அவர் தங்கியிருந்து பல தவ முறைகளைப் பயின்றார் என்றும், அவை யாவும் அவருக்குத் திருப்தி யளிக்காததால் வேறு குருவை நாடி மகத நாட்டின் தலைநகராயிருந்த இராஜகிருகத்தை நோக்கிச் சென்றார் என்றும் சொல்லப்படுகிறது.

கபிலவஸ்துவிலிருந்து புறப்பட்ட சித்தார்த்தர் எந்த வழியாக அநோமை நதிக்கரைக்கு வந்தார், பின்னர் எவ்வழியாக நடந்து பார்க்கவ முனிவரின் ஆசிரமத்தை யடைந்தார், அந்தத் தவ முனிவரின் ஆசிரமம் எங்கே யமைக்கப்பட்டிருந்தது, அங்கிருந்து மீண்டும் கௌதமர் எவ்வழியாக இராஜகிருகத்துக்குச் சென்றார் என்ற விவரங்களையெல்லாம் தொடர்ச்சியாக நாம் எந்த நூல் வாயிலாகவும் அறிவதற்கில்லை. புத்தர் காலத்து நாட்டின் பூமி சாஸ்திரம்பற்றி ஆராய்ந்த நிபுணர்கள் கூடச் சரியான முடிவுக்கு வந்ததாகத் தெரியவில்லை. நாம் அறியக் கூடிய விவரமெல்லாம் மிகவும் கொஞ்சமே.

கோசலம் மிகவும் செழிப்புற்றிருந்த பெரிய நாடு. அதன் வடக்கிலேதான் சாக்கியரின் கபிலவஸ்து இருந்தது. மேலும் வடக்கே சென்றால் இமயமலைத் தொடர். சித்தார்த்தர் கபிலவஸ்துவி லிருந்து கிழக்குத் திசையை நோக்கிச் சென்றார் என்று சொல்லப்படுகிறது. எத்தனை மைல் தூரம் குதிரையில் சென்றிருப்பார்? இமயத்தி னடிவாரத்திலிருந்தே தெற்கு நோக்கி வைசாலி வரையும் அந்தக் காலத்தில் சுமார் நூறு அல்லது நூற்றைம்பது மைல் தூரத்துக்குப் பரந்து கிடந்தது மகாவனம் என்ற பெருங்காடு. இந்த வனத்தி னூடாகப் பாய்ந்து வந்து பாடலிபுரத்தில் கங்கையுடன் கலக்கிறது கண்டகி என்ற நதி. சித்தார்த்தர் இந்த மகாவனத்தி னூடாகத் தனி வழி நடந்து, மகதம் சேர்ந்திருப்பார் என்று எண்ணுவதற் கில்லை.

சாக்கியர் நாட்டுக்குத் தெற்கே யிருந்தது மள்ளர் நாடு. குசீநகர் அதன் பிரதான நகரம். அதற்குத் தெற்கே யிருந்தது காசி ராச்சியம்—வாரணசியைத் தலைநகராகக் கொண்டது. இங்கிருந்து கிழக்கே யுள்ளதுதான் மகதம். மகதத்துக்கு வடக்கெல்லையிலிருந்தன விரிஜியர் நாடும் அங்க நாடும். வைசாலியும் மிதிலையும் முக்கிய நகரங்கள். ஆகையால், சித்தார்த்தர் கபிலவஸ்துவிலிருந்து புறப்பட்டு இராஜகிருகத்துக்குப் பிரயாணம் செய்த மார்க்கம், ஒன்று, தெற்கே மள்ளர் நாட்டின் வழியாக நடந்து, கிழக்கே விரிஜியரின் நாட்டுக்குப் போய், அங்கிருந்து கங்கையைக் கடந்து பாடலிபுரம் வழியாக வந்திருக்கலாம். அல்லது, மள்ளர் நாட்டிலிருந்து தெற்கே காசிக்கு வந்து, கங்கையைக் கடந்து பின்னர் கிழக்கு நோக்கி நடந்து கயா வழியாக இராஜகிருகத்தை யடைந்திருக்கலாம்.

எந்த வழியாக வந்திருந்தாலும் சரி இடையிடையே காடுகளும் மலைகளும் சோலைகளும், அவற்றில் முனிவர்களின் ஆசிரமங்களும், பர்ணசாலைகளும், குகைகளும் ஆங்காங்கு பரவியிருந்தன என்பதில் ஐயமில்லை. ரிஷிகள் பலர் வாழ்ந்த காலம் அது. துறவியாகப் புறப்பட்ட கௌதமர் முதலிலே ஒரு குருவை நாடிச் சென்றார். அவர் பல முனிவர்களைச் சந்தித்து ஆன்ம விசாரணை செய்தார் என்றும், பின்னர் அந்த விசாரணை யொன்றும் திருப்தி தராமல் கடுந் தவம் புரிந்து தமது சொந்த முயற்சியில் ஞானோதயம் பெற்றார் என்றும் சொல்லப்படுகிறது.

கபிலவஸ்துவில் வாழ்ந்த காலத்தில் சித்தார்த்தர் ஒன்று மறியாத விட்டில் பூச்சியாக வளர்ந்தார் என்றும், உலகத்தைப் பற்றியே அறியாமல் அரண்மனையில் அடைபட்டுக் கிடந்தார் என்றும் புராணங்கள் வருணித்தபோதிலும், அவர் தபசிகளைப் பற்றியும் ஆசிரமங்களைப் பற்றியும் அறிந்திருக்கவில்லை யென்று எண்ண முடியாது. அவர் காலத்தில் ஆரண்யக, உபநிடதக் கொள்கைகள் வலுப்பெற்றிருந்தன. ஆன்மாவின் தன்மையைப் பற்றி வாதப் பிரதிவாதங்கள் நடத்திய பலமதங்களிருந்தன. ஜைன மதத்தின் இருபத்து நான்காவது தீர்த்தங்கரர் என்று சொல்லப்படும் வர்த்தமான மஹாவீரர் என்ற சிறந்த ஞானியும், அவரைப் பின்பற்றிய சமணத் துறவிகளும் நாட்டில் செல்வாக்குப் பெற்றிருந்த காலம் அது. மற்றொரு புறத்தில் சாங்கிய சித்தாந்தம் வலுப்பெற்றிருந்தது. யோக மார்க்கத்தின் மூலமாகவே ஆன்ம ஈடேற்றம் பெறலாம் என்ற கொள்கை பரவியிருந்தது. ஆலாரகாலாமர், ருத்திரக ராமபுத்திரர், காசியபர் முதலிய யோகியர்களின் ஆசிரமங்

களும் அவர்கள் தவ முறைகளும், பிராமணர்களதும் க்ஷத்திரியர் களதும் பெரு மதிப்பைப் பெற்றிருந்தன.

இந்தச் சூழ்நிலையில் சித்தார்த்தர் தமது இளமைப் பருவத் திலேயே பிரம்ம நியமத்தில் தலை சிறந்த விஸ்வாமித்திரர் என்ற முனிவரின் ஆசிரமத்தில் சகல கலைஞானங்களையும் கற்றுவிட்டு உலக விசாரம் தெரியாத அறியாமையில் வாழ்ந்தார் என்று எப்படிச் சொல்ல முடியும்? துறவு மார்க்கம் அந்தக் காலத்தில் மிகவும் பிரசித்தி பெற்றிருந்ததை சித்தார்த்தர் நன்கு உணர்ந்திருந்தார் என்று கொள்ளுவதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. உணர்ந்திருந்த காரணமாக அவர் உள்ளத்தில் இளமையி லிருந்தே வேரூன்றிய கொள்கை அவரது இருபத்தொன்பதாவது வயதில் அம்மார்க் கத்தைக் கடைப்பிடிக்க ஏதுவாயிற்று என்றுதான் கொள்ளவேண்டும்.

சித்தார்த்தரின் துறவுபற்றிப் புராணங்களும் ஜாதகக் கதை களும் பல்வேறு கற்பனைகளையெல்லாம் புகுத்தி வருணனை செய் திருந்த போதிலும், மிகப் பழமையான பௌத்த பிடக நூல்களில், அவர் எவ்வித ஆடம்பரமு மில்லாமல் சாதாரணமாகவே வீட்டைத் துறந்து காடு சென்றார் என்று கூறப்பட்டிருக்கிறது. மத்யம நிகாயம் என்ற பிடக நூலில் புத்தரின் கூற்றாகவே, மஹாசச்சகன் என்ற ஒரு சமணனுக்கு அவர் அறிவுறுத்திய சந்தர்ப்பத்தில் பின் வரும் வரிகள் காணப்படுகின்றன:

"நான் ஞாதேயம் பெறுவதற்கு முன்பு, பூரண பரிபக்குவம் பெறாத போதிசத்துவராக இருந்த காலத்தில், எனக்கு ஒரு சிந்தனை யுதயமாயிற்று: 'அசுத்தம் நிறைந்த இல்லறத்தில் வாழ்வது சகிக்க முடியாத துயரைத் தருவதாகும். லோக பந்தங்களை விட்டு நீங்கக் கட்டுப்பாடற்ற பரந்த வெளியே ஏற்றது. பூரண அமைதியும், பூரணத் தூய்மையு முடைய பூரணமான சன்மார்க்க நெறியைப் பின்பற்ற இல்லறத்தில் வாழும் ஒருவனுக்கு இயன்றதல்ல. ஆகவே நான் எனது கேசத்தை முண்டித்துத் துவராடைதரித்து, இல்லறத்தை விட்டுத் துறவறத்தை மேற்கொண்டாலென்ன?' என்று சிந்தித்தேன்.

"பின்னர், என் இளமையின் மத்தியில், வாலிபப் பருவம் கழியு முன்னரே, ஒரு நாள் எனது தாயும் தந்தையும் துயர் தாங்காது கண்ணீர் சோரக் கவலை தேங்கிய முகத்தினராய்ப் பார்த்து நிற்க, எனது சடை முடியையும் தாடி மீசையையும் முண்டித்துவிட்டுத் துவராடை தரித்துக்கொண்டு மனையை விட்டேகி மனையற்ற வானப் பிரஸ்தத்தை மேற்கொண்டேன்." *

---

* மத்யம நிகாயம், மஹாசச்சக ஸூத்ரம். i: 240.

இந்தச் செய்திக்கும் பிற்காலத்தெழுந்த புராணச் செய்திகளுக்கும் எவ்வளவோ வித்தியாச முண்டு. இதிலே புத்தரின் தாயார் இறவாமல் அவர் துறவு பூண்ட சமயத்தில் உயிருட னிருக்கிறார். சித்தார்த்தர் மணம் செய்துகொண்டதைப் பற்றியோ புதல்வன் பிறந்ததைப் பற்றியோ ஒன்றும் சொல்லப்படவில்லை. சரித்திரக் கண்ணோடு பார்க்கும்போது சித்தார்த்தரின் மகாபிநிஷ்கிரமணம் என்ற பெருந்துறவு ஏற்பட்டதென்பது உண்மையான ஒரு செய்தியென்று மாத்திரம் ஏற்றுக்கொள்ளலாம். சரித்திர நாயகன் ஒருவனைப் பெருமைப்படுத்துவதற்காகச் சூழ்நிலைகளை மிகைப்படுத்திக் கற்பனைச் சம்பவங்களைப் புகுத்துவது தடுக்க முடியாத ஒரு இலக்கிய நியதி. ஆகையால், கர்ண பரம்பரையாக வந்த கதைகளை நாம் ஒதுக்கி விடாமல், கதையின் சுவாரஸ்யத்துக்காக வைத்துக்கொள்வோம்.

பார்க்கவ முனிவரின் ஆசிரமத்தை நாடி வந்தார் கௌதமர். அந்த ஆசிரமம் மள்ளர் நாட்டுக்கு வரும் வழியிலோ, காசியிலோ, வைசாலியிலோ அல்லது இவற்றுக் கிடையிலிருந்த வனங்களிலோ குன்றுகளிலோதான் இருந்திருக்கவேண்டும். உடலை வருத்தித் துன்புறுத்திலை தவம் கைகூடும் என்றும், அதன் பேரால இகபரம் இரண்டிலும் சித்தி பெறலாம் என்றும் கொள்கை வைத்திருந்தவர்கள் பார்க்கவரும் அவரது மதத்தினரும். கௌதமர் அந்தக் கூட்டத்தில் ஒருவராக வந்து சேர்ந்தார். உண்மையான சீடனை உழைத்தார். அவர்கள் தவ முறைகள் பலவற்றை மிகவும் சிரத்தையோடு பயின்றார். ஆனல், அவர் நாடி வந்த தேட்டத்தைப் பெற முடியவில்லை. உள்ளம் திருப்திப்படவில்லை. சஞ்சலப்பட்ட அவர் ஒரு நாள் பார்க்கவரின் மற்றைய சீடர்களை யணுகித் தமது சந்தேகத்தைப் பற்றிப் பிரஸ்தாபித்தார். அவர்கள் சொன்னர்கள்: "உடலை வருத்தித் தவம் செய்வதில் பலவித படிகள் இருக்கின்றன. கீழ்ப் படியில் செய்யும் தவத்திலை இகத்திலேயே பலவித உயர்ந்த சித்திகளைப் பெறலாம். அதற்கு மேலே போனல் சுவர்க்கத்தில் அனுபவிக்கும் சித்திகளைப் பெறலாம். தேவர்களைக் காட்டிலும் அதிக வல்லமையைப் பெற்றுக்கொள்ளலாம். கடும் தவத்துக்கு உடலை வருத்தவேண்டியது இன்றியமையாதது. அங்ஙனம் வருத்துவதில் துன்பம் பெறவேண்டும். அத்துன்பத்தின் மூலமாகத்தான் சாஸ்வதமான இன்பத்துக்கு வழி பிறக்கும்."

இந்த வாதத்திலே கௌதமர் நம்பிக்கை கொள்ளவில்லை. அவர் பார்க்கவப் பள்ளியில் எத்தனையோ தவ முறைகளைப் பயின்று கொண்டார். அபூர்வ சித்திகளையும் கைவரப் பெற்றார். ஆனல் அவையெல்லாம் அமைதியைக் கொடுக்கவில்லை. சித்திகளைப் பெற்று

என்ன பயன்? பிணி, மூப்பு, சாக்காடு என்ற துன்பங்களை விட்டொழிக்க மார்க்கத்தைக் காண்பிக்கவில்லை. இன்பத்தைப் பெற வேண்டு மென்பதற்காக இவர்கள் துன்பத்தை யனுபவிக்கிறார்கள். ஆனால் இவர்களுக்குக் கிடைக்கப் போவது நித்தியமான இன்பமா? பிறப்பையும் இறப்பையும் தவிர்க்குமா? இவர்கள் தவ முறையில் குறை காண முடியாது. ஆனல் தவத்தின் லக்ஷியம்தான் அதைவிட மேலானதா யிருக்கவேண்டும். சுவர்க்க இன்பத்தைப் பெற்றுத் தேவபலம் கிடைத்துவிட்டால் மாத்திரம் போதாது. மீட்டும் பிறவி யெடுக்காத அதீத நிலையைப் பெறவேண்டும். தேவர்களும் மனிதர் களைப் போலவே பிறப்பு இறப்பென்னும் துன்பத்துக்கு ஆளானவர் கள்தானே? ஆகையால், அப்பாலுக் கப்பாலும் முயலவேண்டிய அவசியமின்றி, இப்போதே நித்தியானந்த நிலையைப் பெறவேண்டும். உடலை வருத்துவது மாத்திரம் போதாது. உடலைக் கொண்டு நடத்துவது சிந்தை; ஆகையால், அந்தச் சிந்தையை வசப்படுத்தி அதன் மூலம் ஒரு மார்க்கம் தேடவேண்டும்.

இவ்வாருகச் சிந்தித்த கௌதமர் பார்க்கவ முனிவரின் ஆசிர மத்தில் அதிக நாள் தங்கியிருக்க மனம்கொள்ளவில்லை. முனிவர் களிடம் விடைபெற்றுக்கொண்டு மகதத்தின் தலைநகரான இராஜ கிருகத்தை நோக்கிச் சென்றார்.

பத்தாம் அத்தியாயம்

மகதத்தின் தலைநகர்

மகத தேசத்தின் தலைநகராய் விளங்கிய இராஜகிருகம் இந்தியாவின் மிகப் புராதனமான நகரங்களில் ஒன்று. பிருகத்ரதபுரம் என்று மகாபாரதத்திலும், வசுமதி என்று இராமாயணத்திலும் குறிப்பிடப் பட்டிருக்கிறது. புத்தர் காலத்தில் இந்த நகரத்திலிருந்து அரசாண்ட மன்னன் மிகப் புகழ் படைத்த பிம்பிசாரன். புத்தர் மீது அளவிறந்த பக்தி யுள்ளவன். நாற்புறமும் ஏழு குன்றுகளால் சூழப்பட்ட ஒரு பள்ளத்தாக்கில் இராஜகிருக நகரத்தை நிருமாணித்து அழகிய அரண்மனைகள் பல கட்டி அங்கிருந்து ஆட்சி நடத்தினன் அவன். புத்தர் ஞானோதயம் பெறுவதற்கு முன்பு கௌதம பிக்குவாக இந்த நகரத்துக்கு வந்தார். பின்பு அவர் தருமோபதேசம் செய்த காலத்தில் பல தடவை விஜயம் செய்து ஆயிரக் கணக்கிலே சீடர் களைச் சேர்த்ததும் இதே நகரத்தில்தான். அவரது பிரதம சீடர்க ளான மௌத்கல்யாயனர், சாரீபுத்திரர், மஹா காசியபர் மூவரும் இந்த இராஜகிருகத்தைச் சேர்ந்தவர்களே. புத்தர் இறந்த பின்னர் பௌத்த மகா சங்கம் முதன்முதலாகக் கூடியதும் இங்குதான்.

பிம்பிசாரன் தயவில் பௌத்தம் வளர்ந்தபோதிலும் ஏற் கெனவே சமணர்களின் க்ஷேத்திரமாக விளங்கியது இராஜகிருகம். வர்த்தமான மஹாவீரர் பதினைந்து வருடகாலமாக இங்கிருந்து உப தேசம் செய்திருக்கிறார். இராஜகிருகத்தை யடுத்துள்ள உபவனங்க ளெல்லாம் துறவியர் ஆசிரமங்களால் நிரம்பப் பெற்றிருந்தன. சமணருக்கும் பௌத்தருக்கு மிடையில் சமய வாதங்கள் பல நடை பெற்றன. பிம்பிசாரனுக்குப் பின்னர் அவன் மகன் அஜாதசத்துரு வடக்கே லிச்சவிகளுடன் போர் தொடுத்து அவர்களது விரிஜி நாட்டைக் கைப்பற்றுவதற்காக இராஜகிருகத்தைக் கைவிட்டுக் கங்கைக் கரையில் பாடலிபுரத்தைத் தலை நகரமாக்கினன். அதுவே பின்னர் மகத சாம்ராஜ்யத்துக்கு மௌரியர்களின் தலைநகராக சர்வ தேசப் புகழ் பெற்று விளங்கியது.

பாடலிபுரம் என்ற பாட்னாவுக்குத் தென் கிழக்கில் அறுபது மைல் தூரத்திலிருக்கிறது இராஜகிருகம். பக்தியார்பூர் என்ற ஒரு ஸ்டேஷனிலிருந்து ஒரு சிறிய கிளை ரயில்வே மார்க்கமாக இராஜ

கிருகத்தை யடையலாம். அல்லது, கயா நகரத்துக்குப் போய் அங்கிருந்து பஸ் மார்க்கமாகவும் இராஜகிருகத்துக்குப் போகலாம்.

*

கல்கத்தாவி லிருந்து ரயிலேறி கயா நகரத்தில் நான் போய்ச் சேர்ந்தபோது ரயில்வே ஸ்டேஷனில் ஓர் ஆசாமி என்னைச் சந்தித் தான். வடநாட்டுக்காரன் என்பதை யறிந்து கொண்டேன். கயா க்ஷேத்திரத்தைத் தரிசிக்க வரும் யாத்திரிகர்களுக்கு வழிகாட்டும் 'கைடு' களும், புரோகிதர்களுக்கு ஆள் திரட்டிச் செல்லும் 'புரோக் கர்'களும் நிறைந்த அந்த ஸ்டேஷனில் என்னிடம் வந்து பேச்சுக் கொடுத்தவனும் ஒரு பண்டாவின் கையாள் என்பதை நான் உணர்ந்து கொண்டேன். ஆனால் மற்றவர்களைப்போல் அவனையும் தட்டிக் கழித்துவிட முடியவில்லை. சுத்தமான தமிழில், மரியாதையாக வந்து, கயாக்ஷேத்திரத்தில் வேண்டிய காரியங்களையெல்லாம் செய்துகொடுக்க உதவுவதாகச் சொன்னான். ஹிந்தி தெரியாமல் வட நாட்டில், முக்கியமாகக் கிராமப் புறங்களில், பிரயாணம் செய்யும் கஷ்டத்தை யுணர்ந்த நான் அந்த வழிகாட்டியுடன் சிறிது பேச்சுக் கொடுத்தபோது, யோக்கியமுள்ள மனிதன் போல் தெரிந்தது. அன்றிரவு கயாவிலுள்ள மகாபோதி மடத்தில் தங்கி யிருக்கையில் மறுநாள் இராஜகிருகத்துக்கும் நாலந்தைக்கும் போய்த் திரும்ப வேண்டிய பிரச்சினையைப் பற்றி யோசித்துவிட்டு, அந்த வழிகாட்டி யிடம் விவரம் கேட்டேன். அதிகாலையில் பஸ் ஏறிப் போனால் மாலை யில் திரும்பிவிடலாம் என்று ஆலோசனை தந்தான். நீயும் வருகிறாயா என்று கேட்டதற்கு, "ஸ்வாமி உத்தரவிட்டால் வருகிறேன்," என்று நாசூக்காகப் பதில் சொன்னான். மறுநாட் பொழுது விடியும் சம யத்தில் வந்து பார்க்கும்படி சொல்லி அனுப்பிவிட்டேன்.

வஸந்தராம் என்பது அவன் பெயர். யோக்கியமான குண முள்ளவன். நல்ல உடற்கட்டும் மனத் தைரியமும் படைத்தவன். கயா க்ஷேத்திரத்துத் தீர்த்தப் புரோகிதர்களாகிய பண்டா குடும் பத்தைச் சேர்ந்தவன். பல வருட காலம் கயாவிலுள்ள நாட்டுக் கோட்டை நகரத்தார் சத்திரத்திலும், காசியிலுள்ள நகரத்தார் சத்தி ரத்திலும் வேலை பார்த்த அனுபவத்தில் சரளமாகத் தமிழ் பேச வல்லவன். தமிழ் நாட்டுக்கும் பல தடவை வந்துபோன அனுபவ மிருக்கிறது. இந்த வஸந்தராம்தான் என்னுடன் பின்னால் குசீநகர், உலும்பினி, வைசாலி ஆகிய சில ஸ்தலங்களுக்குத் துணையாக வந்த வன். வழித் துணை நண்பன், வழிகாட்டி, மொழிபெயர்ப்பாளன், வேலைக்காரன், மெய்காப்பாளன்—இத்தனையும் ஒருங்கு சேர்ந்த

ஒரு பிறவி. கயா நகரத்தில் 'வஸந்தராம் மதராஸி' என்றால் எவருக்கும் அவனைத் தெரியும்.

அதிகாலையிலேயே மகாபோதி மடத்து வாசலில் வந்து காத்திருந்தான் வஸந்தராம். பஸ் பிரயாணத்துக்கு வேண்டிய அளவில் சில பொருள்களை மாத்திரம் எடுத்துக்கொண்டு இராஜகிருகத்துக்கு யாத்திரை கிளம்பினோம். கயாவிலிருந்து இராஜகிருகத்துக்குப் போக எழுபத்தைந்து மைல் என்று சொன்னார்கள். நேராகச் செல்லும் ஒரே பஸ் கிடையாது. கயாவிலிருந்து நவாடா என்ற ஓரிடத்துக்கு முப்பத்தாறு மைல் தூரம் ஒரு பஸ். பின் அங்கிருந்து பிஹார் ஷரிப் என்ற இடத்துக்கு ஒரு பஸ். கடைசியாக அங்கிருந்து இராஜகிருகத்துக்கு மற்றொரு பஸ். முதல் பஸ்ஸிலே தாங்க முடியாத கூட்டம். அதிலும் வடநாட்டுக் கிராம வாசிகளின் கூட்டம் எப்படியிருக்குமென்று சொல்லவேண்டிய தில்லை. மிகவும் கஷ்டப்பட்டு ஒரு விதமாக அந்த பஸ்ஸில் உட்கார்ந்து மூன்று மணி நேரத்தில் நவாடா போய்ச் சேர்ந்தோம். அங்கே இறங்கியவுடன் பிஹார் ஷரிபுக்குப் போகும் பஸ் ஏற்கெனவே கிளம்பிவிட்டதென்றும், அடுத்த பஸ் புறப்பட இரண்டு மணி நேரமாகு மென்றும் சொல்லக் கேட்டுக் கவலை யடைந்தோம். இப்படி நெருக்கடியான சந்தர்ப்பங்களில் எனது வழித்துணை நண்பன் வஸந்தராம் ஒரு போதும் மனம் தளர மாட்டான். தோல்வி யென்பது அவன் அகராதியில் கிடையாது. எப்படியோ சுற்றிச் சுழன்று ஒரு மோட்டார் கார் சாரதியை வசப்படுத்திவிட்டான். அந்த மோட்டார் ரோட்டி, பிரயாணிகள் போதியளவு சேர்ந்தால் பிஹார் ஷரிபுக்கு பஸ் சார்ஜுக்கே வண்டி விடுவதாக ஒப்புக்கொண்டது ஆச்சரியமாயிருந்தது. வஸந்தராம் சிறிது நேரத்தில் ஐந்து பேரைத் திரட்டிக் கொண்டு வந்துவிட்டான். எங்களிருவரையும் சேர்த்து ஏழு பேர். ஐந்து பேர் தான் உட்காரக்கூடிய அந்த வண்டிக்கு, மேலதிகமாகவே ஆட்கள் கூடிவிட்டோம் என்று சொல்லியும் மோட்டார் ஓட்டி திருப்திப் படவில்லை. இன்னும் சிலர் சேரவேண்டும் என்று காத்திருந்தான். முடிவில் பதிலைு பேர் சேர்ந்ததும் அத்தனை உருப்படிகளையும் உள்ளே தள்ளிக் கதவை யடைத்தான்! எப்படித்தான் அவன் ஏற்றினன், எவ்வாறு பிரயாணம் செய்தோம் என்று அதை இப்போது நினைத்துப் பார்த்தாலே ஆச்சரியமாயிருக்கிறது! வண்டியில் நாங்கள் எவராவது உட்கார்ந்திருந்தோம் என்று சொல்ல முடியாது. எப்படியோ ஒருவிதமாக அடுக்கப்பட்டிருந்தோம். மூச்சு விட முடியவில்லை. கண்களைத் திறந்து வெளியே பார்க்கவும் கூட வில்லை. எப்படியாவது இருபது மைல் தூரமுள்ள பிஹார் ஷரிப்

போய்ச் சேர்ந்துவிட்டால் போதும் என்ற நம்பிக்கையோடு மூச்சுத் திணறுவதையும் எலும்பு முரிவதையும் நாங்கள் அந்தச் சமயத்தில் பொருட்படுத்தவில்லை.

பிஹார் ஷரிப் அந்தப் பிரதேசத்தில் ஒரு முக்கியமான நகரம். பிஹார் மாகாணமே இந்த நகரத்தின் பெயரைக்கொண்டது தான். பௌத்த மதம் மகதத்தில் உச்ச நிலையை யடைந்திருந்த காலத்தில் விஹாரங்கள் பல இங்கு தோன்றியிருந்த காரணத்தால் இதற்கு 'விஹார்' என்றே பெயர் இருந்தது. பின்னர் முகம்மதியர் ஆட்சிக் காலத்தில் விஹார் ஷரிப், பிஹார் ஷரிப் என்றாயிற்று.

அரை மணி நேரத்துக்கு மேல் மூச்சைப் பிடித்துக்கொண்டிருந்த பின் ஒரு படியாக வந்து சேர்ந்தோம் பிஹார் ஷரிபில். வெயில் ஏறிக்கொண்டு வந்தது. பசியும் அதிகரித்தது. இந்த விஷயத்தில் வஸந்தராம் முன் யோசனைக்காரன். எங்கே போனாலும் வேளா வேளைக்கு வயிற்றுப்பாட்டுக்கு ஏதாவது தேடிக்கொள்ளவேண்டும் என்ற திடமான நம்பிக்கை யுள்ளவன். "இராஜகிருகத்துக்குப் போனால் ஒன்றும் அகப்படாது. ஆகையால் இங்கேயே ஏதாவது ஆகாரம் பண்ணிக்கொண்டால் நல்லது. சுத்தமான ஒரு சைவ போஜன 'கிளப்' இருக்கிறது. என்ன சொல்லுகிறீர்கள்?" என்று கேட்டான். சரிதான் என்று ஒப்புக்கொண்டு நான் வஸந்தராமுடன் ஒரு சிறு ஹோட்டலில் நுழைந்தேன். வட நாட்டு ஹோட்டல்களைப் பற்றியும் சுத்தத்தைப் பற்றியும் நான் அறியாதவனல்ல. இருந்தும் பட்டினி யிருக்கலாகாது என்ற கொள்கையில், சாதமும் பருப்பும் சிங்ஹாலா கறியும் தயிருமாகச் சாப்பிட்டோம். 'சிங்ஹாலா' என்பது பிஹார் பிரதேசத்தில் காணப்படும் ஒருவகை நீர்ச் செடியின் கிழங்கு. உருளைக் கிழங்கு போன்ற ருசியுள்ளது. பச்சையாகவும் சாப்பிடலாம்.

சாப்பாடு முடிந்ததும் பழையபடி பஸ் பிரச்சினை குறுக்கிட்டது. பிஹார் ஷரிபிலிருந்து இராஜகிருகத்துக்குப் போகவேண்டும். பின்னர் அங்கிருந்து நாலந்தைக்கும் போகவேண்டும். இதற்கு என்ன வசதி செய்யலாம்? நவாடாவிலிருந்து எங்களைக்கொண்டு வந்த மோட்டார் அங்கேதான் நின்றுகொண்டிருந்தது. ஒரு வகையாக வஸந்தராம் டிரைவரிடம் பேசி குறைந்த கட்டணத்தில் மோட்டாரை ஏற்பாடு செய்துவிட்டான். "ராஜாக்களைப் போல நாம் இரண்டு பேருமே தனிக் காரில் இப்போது பிரயாணம் செய்வோம்!" என்று சொல்லி வஸந்தராம் பெருமையடைந்தான்.

கயாவிலிருந்து இராஜகிருகத்துக்கு மொத்தம் எழுபத்தைந்து மைல் என்றுமுன்பு குறிப்பிட்டிருந்தேன். இது சுற்றிவளைத்து மூக்கைத்

தொடுவது போன்ற பிரயாணம். கயாவிலிருந்து நேரே வடகிழக்கில் நாற்பத்தைந்து மைல்தான் தூரம். ஆனால், நாங்கள் முதல் தடவை போனபோது நேர்ப்பாதை கிடையாது. கிழக்கே நவாடா வரையும் சென்று, பின்னர் வடக்கே பிஹார் ஷரிப் போய், அங்கிருந்து திரும்பியும் தென்கிழக்கே இராஜகிருகத்துக்கு வந்தோம். மூன்று வருஷம் கழித்து மறுபடியும் நான் போனபொழுது நவாடா போகாமலே கயாவிலிருந்து நேரே இராஜகிருகத்துக்கு ஒரு புதிய சாலை போடப்பட்டிருந்தது. இரண்டு மணி நேரத்தில் அந்தப் பிரயாணம் முடிந்தது.

ஒரு சிறிய ரயில்வே ஸ்டேஷன். அதையடுத்து ஒரு சிறு கிராமம். அவ்வளவுதான் இன்றைய இராஜகிருகம். இதற்குத் தெற்கே சுமார் ஒரு மைல் தூரத்தில் சிதைந்த மதில் சுவர்களும், ஸ்தூபிகள் இருந்ததாகச் சொல்லப்படும் மண்மேடுகளும், மலையடிவாரத்தில் சில குகைகளும், குன்றுகளின் உச்சியில் ஜைன மதத்தினர் தொழும் சிறு சுதைக் கோயில்களும்—இவைதான் புராதன இராஜகிருகத்தின் எச்சங்களாய்க் காட்சியளிப்பன.

வைபாரகிரி, விபுலகிரி, இரத்னகிரி, சத்திரகிரி, சாலியகிரி, உதயகிரி, ஸ்வர்ணகிரி என்ற ஏழு குன்றுகளால் சூழ்தரப்பட்ட இராஜகிருகம் உண்மையில் ஒரு கோட்டை நகரம். தெற்குப் புறத்திலும் வடபுறத்திலும்தான் இரு வாயில்களில் பிம்பிசார மன்னன் காவல் படைகளை வைத்திருந்தான். மற்றைய எந்தத் திசையிலிருந்தும் பகைவர்கள் உட்புக முடியாமல் மலைகளே இயற்கையரணமைந்திருக்கின்றன. வடக்கு வாயிலால் நுழையும்போது இடது புறத்தில் விபுல கிரியும் வலது புறத்தில் வைபார கிரியும் காட்சியளிக்கின்றன. வைபாரகிரி இவற்றில் முக்கியமானது. இதன் பக்கங்களிலெல்லாம் அந்தக் காலத்தில் எத்தனையோ குகைகள் இருந்தன. இந்தக் குகைகளிலேயே பௌத்த சந்நியாசிகளும் சமணத் துறவிகளும் வசித்தார்கள் என்று சொல்லப்படுகிறது. வைபாரகிரிக்கு ஏறும் சரிவிலே தபோத நாடி என்ற வெந்நீர் ஊற்று இருக்கிறது. சப்த தாரைகள் என்று பெயருள்ள ஏழு தாரைகளாக இவைகள் மலைக்குள்ளே எங்கேயோ ஊற்றெடுத்து வருகின்றன. அரசாங்கத்தார் அழகிய கோமுகி கட்டி, 'பசு'வின் வாய் வழியாக நீர் விழுவது போன்று அமைத்திருக்கிறார்கள். கந்தகச் சத்துள்ள நீராகையால், பல வியாதிகள் நீங்கு மென்று நம்பப்படுகிறது. பல மைல் தூரத்திலிருந்து யாத்திரிகர்கள், முக்கியமாகப் பூரணை தினத்தில் இங்கு வந்து தீர்த்தமாடிச் செல்கிறார்கள். சுகவாசத்துக்குப் பலர் மாரிக்காலத்தில் வந்து இராஜகிருகத்தில் வசிப்பது முண்டு.

சப்த தாரைகளைவிட பிரம்ம குண்டம் என்ற பெயரோடு ஒரு தீர்த்தக் கிணறும் காணப்படுகிறது. இது சிலவேளைகளில் கொதி நீராகி, சாதாரணமாக ஸ்நானம் செய்ய முடியாத சூடு கொண்டிருக்கும்.

விபுலகிரி என்ற மலைதான் அந்தக்காலத்தில் பாண்டவ மலை யென்று பாலி நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. கௌதம பிக்ஷு இராஜகிருகத்தின் பெருமையையும் அங்கு வசித்த தபோதனர்களை யும் பற்றிக் கேள்விப்பட்டிருக்கவேண்டும். பிம்பிசாரமன்னனின் பெருங்குணத்தைப் பற்றியும் கேள்விப்பட்டிருக்கலாம். யோக மார்க்கத்தில் சிறந்த அனுபவமும் சித்தியும் பெற்ற முனிவர் இராஜ கிருகத்துக் குன்றுகளிலும் குகைகளிலும் வசித்தார்கள் என்ற செய்தி யையும் அவர் அறிந்திருந்தார். ஆகவே, அவர் சன்மார்க்கம் தேடி வருகையில் இராஜகிருகத்துக்கு விஜயம் செய்ததில் ஆச்சரிய மில்லை.

பாண்டவ மலையென்ற விபுல கிரியிலே ஒரு சோலையில் தங்கி யிருந்த கௌதமர் காலை வேளையில் பிக்ஷாபாத்திர மேந்திக்கொண்டு இராஜகிருக நகர வீதியில் நடந்து வருவார். இங்குதான் அவர் முதன் முதலாகப் பிச்சை யிரந்துண்ண ஆரம்பித்தது. தலைகுனிந்து கண்கள் பூமியை நோக்க, அடி மேல் அடி வைத்து நடந்த இவ்வுரு வத்தைப் பார்த்து இராஜகிருக மக்கள் அவர் முகத்தில் விளங்கிய ஒளியையும் சாந்தியையும் கண்டு இவர் தேவனே என்று ஐயுற்றனர். பற்பல விதமான உணவுகள் அவர் பிக்ஷா பாத்திரத்தை நிறைத்தன. பொழுது உச்சிக்கு வரு முன்பே கௌதமர் பிச்சையுடன் திரும்பித் தன் இருக்கைக்கு வந்துவிடுவார். இந்தச் செயல் சில நாட்களில் இராஜகிருகம் முழுவதும் ஓர் அபூர்வ நிகழ்ச்சியாகப் பேசப்பட்டது. பிம்பிசாரன் காதிலும் எட்டியது. சுமார் ஒரு வாரகாலமாக கௌதமர் இராஜகிருகத்தில் பிச்சை யெடுப்பதையும் சாந்தமாகப் பாண்டவ மலைக்குச் செல்வதையும் அரசன் தூதுவர்கள் கவ னித்து வந்து, ஒரு நாள் மன்னனின் கட்டளைப்படி கௌதமரைப் பிம்பிசாரன் முன்பு அழைத்துச் சென்றனர். கௌதமர் முகத்திலே பொலிந்து விளங்கிய அழகையும் அவர் தோள்களின் வலிமையையும் கண்ட பிம்பிசாரன் இவர் சாதாரணமான குடும்பத்தைச் சேர்ந்தவ ரல்ல என்றும், உயர் குடும்பத்தில் பிறந்தவரா யிருக்கவேண்டும் என்றும் சந்தேகித்து விசாரணை செய்தான்.

ஏற்கெனவே தபோதனர்களிடம் மிகுந்த பற்றுள்ளவன் பிம்பி சாரன். இராஜகிருகத்தை யடுத்துள்ள வனங்களில் துறவிகளா யிருந்த பலரிடம் அபிமானம் வைத்திருந்தவன். காசியப முனிவர் அவனுடைய முக்கிய குரு. ஜைனத் துறவிகளெல்லாம் பிம்பிசாரனுல்

ஆதரிக்கப்பட்டவர்கள். பாகுபாடில்லாமல், எம்மதத்தைப் பின்பற்றும் சந்நியாசிக ளானலும் பிம்பிசார மன்னன் அன்பும் மரியாதையும் காட்டி ஆதரிப்பவன். கௌதமரை யழைத்து உபசாரமாக வரவேற்று மன்னன் விசாரித்தான்: "சிரமண! தங்கள் முக விலாசத்தைப் பார்த்தால் சாதாரண பிக்ஷுவைப்போல் காணப்பட வில்லை. இந்த இள வயதிலேயே துவராடை தரித்துத் துறவை நாடிய காரணம் யாதோ?"

கௌதமர் விவரத்தைச் சொன்னர். "சாக்கிய நாட்டுத் தலைவன் சுத்தோதனன் புதல்வன் நான். இல்லறத்தில் அமைதியைக் காணுமல் ஆன்ம ஈடேற்றம் நாடித் துறவு பூண்டேன்."

இதைக் கேட்டதும் பிம்பிசாரன் வியப்போடு பார்த்தான். ஏற்கெனவே சித்தார்த்தர் அரண்மனையை விட்டு வெளியேறிய செய்தி பிம்பிசாரன் இராச்சியத்தையும் எட்டியிருக்கத்தான் வேண்டும். அவன் ஒற்றர்கள் சொல்லி யிருப்பார்கள். அந்தச் சித்தார்த்தரே தம் முன் பிக்ஷுவாகக் காட்சி யளிப்பதைக் கண்டு உள்ள முருகி, இந்தச் சின்ன வயதில் அரசிளங் குமரன் ஒருவன் இராச்சியத்தையே துறந்து வரக் காரணமென்ன வென்று பிம்பி சாரனால் உணர்ந்துகொள்ள முடியவில்லை. மணிமுடி தரித்துச் செங்கோலேந்தி அரியாசனத்தில் அமர்ந்திருக்க வேண்டிய இந்த இளவல் பட்டைத் துவராடைப் படிமத்துடன் கையில் பிக்ஷாபாத்திரத் துடன் இரந்துண்டு மர நிழலில் படுத்துறங்கிக் காலம் கழிப்பதை அவன் விரும்பவில்லை. வாய்விட்டுச் சொல்லிவிட்டான்:

"சாக்கிய குல இளவலே! தங்கள் அந்தஸ்துக்கு இது ஏற்றதா? இரந்துண்டு வாழ முடிகிறதா? துறவறத்தை மேற்கொள்வதற்கு இன்னும் எவ்வளவோ காலம் காத்திருக்கலாம். தாங்கள் இந்த முயற்சியைக் கைவிட்டு, என் அரண்மனையில் சில காலம் தங்கி யிருங்கள். என்னுடைய இராச்சிய பரிபாலனத்தையே தங்களுக்கு ஒப்படைக்கிறேன்," என்றான் பிம்பிசாரன்.

கௌதமர் மன்னன் கருத்துக்கு நன்றி தெரிவித்துவிட்டு, "மன்னவ! நான் எடுத்த விரதத்தை நிறைவேற்றவே துணிந் துள்ளேன். அரச போகத்தில் இன்பம் கண்டிலேன். உலக வாழ்வே அநித்தியம். இன்பம் என்பதெல்லாம் வெறும் கனவு. ஆசைதான் மனிதரையெல்லாம் துயரத்திலாழ்த்துகிறது. இந்தத் துயரத்தை அடியோடு அகற்றுவதற்கு மார்க்கம் தேடியே நான் இவ்வாறு துறவை மேற்கொண்டேன். அந்த மார்க்கத்தை நான் இன்னும் கண்டறியேனையினும் அதைக் காணும் வரை என் முயற்சியைக் கைவிடப் போவதில்லை," என்றார்.

பிம்பிசாரன் அவர் உறுதியைப் பாராட்டிவிட்டு, "தாங்கள் துறவுக் கோலத்தை விரும்பினால் அப்படியே செய்யலாம். ஆனால் இந்த இராஜகிருக நகரத்தில் பிச்சை யெடுத்து வாழ வேண்டிய அவசியமில்லை. எனது அரண்மனை யிருக்கிறது தங்குவதற்கு. வேண்டிய உணவை நானே அளிக்கிறேன். தங்களைப் போன்ற துறவிகள் பலரை எனக்கு நன்கு தெரியும். அவர்களுடன் தத்துவ விசாரணை செய்யவும் அளவளாவவும் நானே ஏற்பாடுகளைச் செய்து தருகிறேன். ஆகையால், தங்கள் இஷ்டத்தைத் தெரிவித்தருள வேண்டும்," என்று கேட்டுக்கொண்டான்.

"மன்னவ! உனது அன்பைப் பாராட்டுகிறேன். ஆனால், தவத்தை மேற்கொண்டவர்களுக்குச் சுக வாழ்வு எதற்கு? முதலில் நான் பிச்சை யெடுத்து உண்ணும்போது கஷ்டமாகத்தானிருந்தது. இப்போது பழக்கப்பட்டு விட்டது. பசியும் தாகமும் வெயிலும் குளிரும் ஒருவரைத் தாக்கும்போதுதான் உண்மையான உறுதி யேற் படுகிறது. இன்னும் எத்தனையோ சோதனைகளுக்கு நான் ஆளாக வேண்டி யிருக்கிறது. அவற்றையெல்லாம் கடந்து இறுதியில் வெற்றி பெறும்வரை நான் முயலுவேன். அதற்கு அரண்மனை வாழ்வு உகந்ததல்ல. நிம்மதியான வனம்தான் ஏற்றது. ஆகையால் எனக்கு விடை கொடு. கடும் தவமிருந்து உண்மையான ஞானம் பெற விழைகின்றேன். அந்த ஞானம் கிடைக்கும் வரை நான் உறுதியைக் கைவிடப் போவதில்லை."

பிம்பிசாரன் கௌதமரின் உறுதியைக் கண்டு வியந்தான். அவருடைய முயற்சி கைகூடலாம் என்றும் உணர்ந்தான். "தவ சிரேஷ்டரே! தங்கள் உறுதியை நான் மெச்சுகிறேன். அந்த ஞானம் வரப்பெற்ற பின் தாங்கள் மறுபடியும் அடியேன் வசிக்கும் இந்த நகரத்துக்கு வந்து எனக்கு உபதேசித்தருளவேண்டும்," என்று கேட்டுக்கொண்டான்.

கௌதமர் கட்டாயம் மீண்டும் இராஜகிருகத்துக்கு வருவதாக வாக்குக் கொடுத்துவிட்டு, பிம்பிசாரனிடம் விடை பெற்றுக் கொண்டு அங்கிருந்து புறப்பட்டுச் சென்றார்.

★

இராஜகிருகத்து மலைச் சாரலிலே அந்தக் காலத்தில் பல சித்தர் களின் ஆசிரமங்களிருந்தன. அத்தகைய சித்தர்களில் ஒருவர் ஆலாரகாலாமர். திரிகாலமும் உணர்ந்த ஞானி. யோகசாதனைகளில் நிகரற்றவர். இவருடைய புகழ் மகதத்திலும் கோசலத்திலும் பரவி யிருந்ததால் கௌதமர் அவரை நாடிச் சென்றார்.

ஆலாரகாலாமரை கௌதமர் சந்தித்த இந்தச் சம்பவம் பௌத்த மத சரித்திரத்திலேயே மிக முக்கியமானதாகக் கொள்ளப்பட வேண்டும். தியான மென்பது பௌத்த பிக்ஷுக்களுக்கு ஒரு கண்டிப்பான நியமம். இந்தத் தியானத்தின் மூலமாக ஞானதிருஷ்டிக்குரிய பக்குவ நிலையை எய்தி அதற்கு மேலான நிர்வாண மோக்ஷத்தைப் பெறலாம் என்பது பௌத்தத்தில் கண்ட கொள்கை. இந்தக் கொள்கைக்கு அந்தக் காலத்திலே பெரு வழக்கிலிருந்த யோக மார்க்கம், சாங்கிய சித்தாந்தத்தை யடுத்து வந்த தத்துவம், அடிப்படையாயிருந்தது என்று சொல்லவேண்டும். மோக்ஷம் என்ற விடுதலையைப் பெறுவதற்கு தாரணம், தியானம், சமாதி என்ற மூன்று வகையான நிலைகள் யோக மார்க்கத்தில் அவசியம் என்று குறிப்பிடப் படுகின்றன. கௌதமர் ஞாதேயம் பெற்ற சமயத்திலும் இத் தியான நிலைகளே—சமாபத்திகளே—உதவின என்று தெரிகிறது.

எத்தனை வருட காலம் ஆலாரகாலாமரிடம் கௌதமர் யோக முறைகளைக் கற்றுக்கொண்டார் என்பது தெரியவில்லை. ஆனால், அவர் அங்கு போய்ச் சேர்ந்து காலாமரிடம் பல சித்திகளைத் திறம்படக் கற்றார் என்பதில் சந்தேக மில்லை. தியான முறைகளிலே ரூபத் தியானம் அரூபத்தியானம் என்று இருவகை கூறப்படுகிறது. அரூபத்தியானத்தில் உருவமற்ற அரூப லோகங்களில் (பிரம்ம லோகங்களில்) நமது சிந்தனை சஞ்சரிக்கு மென்றும் அப்போது முக்காலமும் உணரக்கூடிய சித்தி யேற்படுமென்றும் சொல்வார்கள். இந்த அரூப லோகங்களையே பழைய தர்சனங்கள் பிரம்ம விஹாரங்கள் என்று குறிப்பிட்டன. பௌத்தர்களும் இந்த அரூப லோகக் கொள்கையைப் பின்பற்றுபவர்கள். ஆனால், அவர்கள் சித்தாந்தப்படி, தியானத்தின் எட்டாவது படியைத் தாண்டிய பின் நிர்வாணம் என்றும், அதாவது மறுபிறப்புக்கு ஹேதுக்கள் யாவும் அற்றுப்போய் விடுகின்றனவென்றும் சொல்வார்கள். அந்த எட்டாவது படியைத் தாண்டி விட்டால், துறவி, விரும்பிய சமயத்தில், எந்தப் படியிலும் – எந்த லோகத்திலும் – சஞ்சரிக்கலாம். குறைந்த படிகளில் சித்தி பெற்றவர்கள் ஒவ்வொரு தடவையும் படிப்படியாக ஏறிச் சஞ்சரிக்க வேண்டும். விருப்பம்போல் தாண்டிச் செல்ல முடியாது.

ஆலாரகாலாமருடன் கௌதமர் மேற்சொன்ன சமாபத்தி வரிசையில் ஆறுவது படியாகிய 'சூன்ய நிலை' வரையும்தான் கற்றுக்கொள்ள முடிந்தது. அதற்கு மேல் காலாமரிடம் கற்க ஒன்றுமில்லை யென்று கண்டார் என்பது கதை. இந்த நிலை வரையும் தியானத்தில் அப்பியாசம் பெற்ற கௌதமர், ஆன்மாவின் தன்மையைப் பற்றியும் காலாமரிடம் விசாரணை செய்தார். சூன்ய

நிலையில் ஆன்மா விடுதலை யடைகிறது என்ற சித்தாந்தத்தை அவரால் ஒப்புக்கொள்ள முடியவில்லை. மேலும் சந்தேகங்கள் வளரவே, தமக்கும் அவற்றைத் தீர்த்துக்கொள்ள வழி தெரியாமல், ஆலார காலாமரிடமிருந்து பிரிந்து ருத்ரக ராமபுத்திரர் என்ற மற்றொரு யோகியிடம் சென்றார். ராமபுத்திரரும் காலாமரின் கொள்கையைத்தான் பின் பற்றியவர். ஆனால் அவரது தியான முறையில் ஆறுவது படிக்கு மேலான ஏழாவது சமாபத்தியாகிய 'சிந்தனை இயங்காத, விழிப்பும் உறக்கமு மற்ற நிலை'யைப்பற்றி அறிந்துகொண்டார் என்றும், அதனைக் கௌதமர் தெரிந்து அதிலும் திருப்தி காணுமல் புறப்பட்டுச் சென்றார் என்றும் சொல்லப்படுகிறது.

இராஜகிருகத்தை விட்டு அவர் பிரியும்போது மீண்டும் அந்த நகரத்துக்கு வரவேண்டு மென்ற ஆவலோடுதான் அவர் சென்றார் என்று சொல்லவேண்டும். பிம்பிசாரனுக்குக் கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவதற்கு மாத்திரமல்ல, தமக்கு வழிகாட்டிய இரு பெரும் முனிவர்களை மறுபடியும் பார்க்கவேண்டு மென்ற வேட்கை அவரிடம் நீடித்திருந்தது. பின்னல் அவர் ஞானோதயம் பெற்ற பிறகு தமது அறவழியைப் பற்றி யாரிடம் சொல்வதென்று சிந்திக்கையில் இந்த இரு பெரும் யோகியர்களாகிய ஆலாரகாலாமரைப் பற்றியும் ருத்ரக ராமபுத்திரரைப் பற்றியுமே முதலில் சிந்தித்தார் என்று சொல்லப் படுகிறது.

★

இராஜகிருகத்துக்கு நாங்கள் போய்ச் சேர்ந்தது ஒரு பூரணை தினத்துக்கு முதல் நாள் மாலை. பழைய இராஜகிருகத்தின் மத்தியில் வடக்குத் தெற்காகப் போடப்பட்டிருக்கும் சாலை வழியே இரு திசைகளிலிருந்தும் நூற்றுக் கணக்கான கிராம வாசிகள் கூட்டம் கூட்டமாகப் பாதயாத்திரையில் வந்துகொண்டிருந்தனர். ஒவ்வொரு பூரணை தினத்திலும் இந்த ஸ்தலத்தில் 'மேளா' என்ற விழா நடை பெறும் என்றும் அதற்காகவே யாத்திரிகர் பல மைல் தூரத்திலிருந்து கால் நடையாகவே வந்து கூடுவார்கள் என்றும் அறிந்தோம். இராஜகிருகம் பௌத்தர்களுக்கு விசேஷமானதென்றே உணர்ந் திருந்தும் ஒரு பௌத்தரையாவது நான் அங்கு பார்க்க முடியவில்லை. ஜப்பானிய பௌத்தர்கள் வந்தால் தங்குவதற்கென்று மாத்திரம் ஜப்பானிய மடம் ஒன்று அங்கே கட்டப்பட்டிருந்தது. மற்றும்படி இப்போது இராஜகிருகம் ஒரு முக்கியமான ஜைன க்ஷேத்திரமாகவே காட்சி யளிக்கிறது. ஜைனர்களும் இந்துக்களும் பூரணை முதலிய விசேஷ நாட்களில் வந்து அதிகமாகக் கூடுவார்கள்.

அன்றிரவு இராஜகிருகம் மக்கள் ஆரவாரம் நிறைந்து, காவிரிப் பூம்பட்டினத்து இந்திர விழாவை எனக்கு ஞாபக மூட்டியது. வெகு தூரத்தில் ஒதுங்கி யுறையும் கிராமப்புறத்து விவசாயிகளுக்கு இந்த மேளா தான் சந்தை நாள். வெந்நீர் ஊற்றுக்களில் நீராடுவதும், மர நிழலில் உணவு சமைத்துண்பதும், பாட்டுக்கள் பாடி ஆடிக் களிப்பதும், வேடிக்கை விநோதங்களில் கலந்துகொள்வதும், அங்காடி வியாபாரிகளிடம் துணியும் மணியும் விளையாட்டுப் பொருள்களும் பேரம் பேசி வாங்குவதும் – இந்தக் களிப்பெல்லாம்தான் அவர்கள் விழா. கயா முதலிய நகரங்களிலிருந்து பல வியாபாரிகள் பல் வகைப் பண்டங்களைக் கொண்டுவந்து விற்பனை செய்வார்கள். ஆடவரும் மகளிரும் சிறுவர்களும் இந்த விழா நாளில் தம்மை மறந்து மகிழ்ச்சி கொண்டாடுவர்.

அன்றிரவு தங்குவதற்கு மடங்களில் இடம் கிடைக்காமல் கவலைப் பட்ட எங்களுக்கு அங்கே எதிர்பாராத ஓர் அதிர்ஷ்டம் வந்து சேர்ந்தது. அரசாங்கத்தின் கணக்கிலே இராஜகிருக நகரத்துக்குத் தண்ணீர் விநியோகம் செய்வதற்காக மோட்டார் யந்திரம் பூட்டிய ஒரு தண்ணீர்த் தேக்கம் பழைய இராஜகிருகத்தில் அமைத்திருக்கிறார்கள். அந்த யந்திரத்தை மேற்பார்வை செய்வதற்கு அடிக்கடி இராஜகிரு கத்துக்கு வரும் ஓர் இன்ஸ்பெக்டர் தங்குவதற்கென்று ஒரு சிறிய வீடிருக்கிறது. அந்த வீட்டிலிருந்த காவற்காரப் பையன் நாங்கள் படுக்க இடம் தேடிக்கொண்டிருந்த சிரமத்தைப் பார்த்துவிட்டு, "இங்கே பங்களாவில் தங்கலாம். இன்ஸ்பெக்டர் ஸாப் ஊரில் இல்லை. உங்கள் இஷ்டம்போல் ஏதாவது சந்தோஷமாய்க் கொடுத்தால் போகிறது" என்று சொன்னான். அது எங்களுக்கு நல்ல வசதியா யிருந்தது.

பழைய இராஜகிருக நகரத்தில் வடக்குப் பக்கத்தில்தான் அந்தக் காலத்தில் புத்தருக்கு பிம்பிசார மன்னன் உவந்தளித்த வேணுவனம் இருந்ததாக ஐதிகம். ஆனால் இப்போது அங்கே நாங்கள் மூங்கிலைக் காணவில்லை. வேணு வனத்தின் பக்கத்திலே 'கலந்தக நிவாசம்' என்ற ஓரிட மிருந்தது. அணில்கள் வசித்த இடம் அது. புத்தருக்கு அந்த அணில்கள் சேவை செய்தன என்று சொல்லப்படுகிறது.

நாங்கள் தங்கியிருந்த ஸ்தலத்துக்கு எதிரிலே யிருந்தது வைபாரகிரி. அதன் அடிவாரத்திலேதான் வெந்நீர் ஊற்றுக்கள் பல காணப்படுகின்றன. பக்கத்திலே ஈஸ்வரன் கோயில் இருக்கிறது. அதைத் தாண்டி மேலே ஏறினால் ஒரு பெரிய குகை காணப்படுகிறது. இக்குகையின் மேலே செங்கற்களால் கட்டப்பெற்றிருந்த ஒரு கட்டி டத்தின் சின்னங்கள் காணப்படுகின்றன. இதிலேதான் புத்தர் பல



10.
இராஜகிருகம்—
மணியார் மடம்
(பக். 97)



11.
இராஜகிருகம்—
சுவர்ண
பண்டார குகை
(பக். 97)



12. இராஜகிருகம்—கிருத்ரகூடம் (பக். 99)



13
திருத்ரகூட
சிகரத்தில்
புத்தர்
பிரசங்க மேடை
—இராஜகிருகம்
(பக். 99)



14.
உருவில்வா கிராமத்தில் சுஜாதை பகவானுக்கு அமுதளித்த ஸ்தலம்
(பக். 105)



15. நைரஞ்சனை நதியும், புத்தகயை க்ஷேத்திரமும் (பக். 106)



16.
புத்தகயையில்
ஜீயர் மடம்
(பக். 115)



17. புத்தகயை—விஹாரம் (பக். 118)

சந்தர்ப்பங்களில் உட்கார்ந்து தருமோபதேசம் செய்தார் என்றும், கீழே குகையில் வசித்தார் என்றும், சப்த தாரை என்ற வெந்நீர் ஊற்றில் குளித்தார் என்றும் சொல்வார்கள்.

தபோத நாடி அல்லது சப்த தாரை என்ற வெந்நீர் ஊற்றுக்களைத் தாண்டித் தெற்கே ஒரு மைல் நடந்தோம். மணியார் மடம் என்ற ஒரு கோயில் எதிர்ப்பட்டது. முன் ஒரு காலத்தில் இந்தப் பிரதேசத்தில் நாக வழிபாடு இருந்ததாகவும், நாகருடைய நாகரிகம் பரவியிருந்ததாகவும் சொல்லப்படுகிறது. மணிநாகன் என்ற அரசன் ஒருவன் இங்கே ஆட்சி புரிந்தான். தொல் பொருளாராய்ச்சிப் பகுதியார் இராஜகிருகத்தில் ஆராய்ந்தபோது மணியார் மடம் என்ற கட்டிடம் இருக்கும் இடத்திலே மணி நாகன் என்ற பெயர் பொறிக்கப்பட்ட பல செங்கற்களைக் கண்டெடுத்தார்கள். கி. பி. முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்த சின்னங்கள் அவை. மகாபாரதத்தில் ஓரிடத்தில் இராஜகிருக நகர் மணிநாகன் ராஜதானி என்றும் குறிப்பிடப்பட்டுள்ளதால், மணிநாகன் என்ற பெயருள்ள நாகர் வம்சம் பிரசித்தி பெற்றிருந்த தென்பதில் சந்தேகமில்லை. அந்த மணிநாகன் என்ற பெயரே திரிபு கொண்டு இப்போது 'மணியார் மடம்' என்று வழங்குகிறது. மணிநாகன் கோயில் இருந்த இடத்தில் இப்போது ஒரு செங்கற் கட்டிடத்தின் சின்னங்களே காணப்படுகின்றன. இந்துக்களும் பௌத்தர்களும் ஜைனர்களும் இங்கு வழிபட்டு வந்திருக்கிறார்கள் என்பதற்கு ஆதாரங்களைத் தொல்பொருளாராய்ச்சியாளர் கண்டு பிடித்திருக்கிறார்கள்.

இந்தச் சந்தர்ப்பத்தில் மணிமேகலையில் குறிக்கப்பட்டுள்ள ஒரு செய்தியைப்பற்றியும் நாம் இங்கு ஞாபகப்படுத்திக்கொள்ளலாம். நாகநாட்டு வேந்தர் இருவர், மணிபல்லவம் என்ற தீவில் தோன்றிய புத்த பீடிகை தமக்குரியதென்று கடும் போர் புரிந்தார்களாம். அச்சமயத்தில் புத்தரே நேரில் தோன்றி அவர்கள் சமரை நிறுத்தி விட்டு, அந்த ஆசனம் தம்முடையதெனக் கொண்டு அதிலே உட்கார்ந்து அறம் உரைத்ததாகச் சொல்லப்படுகிறது. மகாவம்சம் என்ற பௌத்த நூலில் இந்த நாக வேந்தர்களில் ஒருவன் மணிநாகன் என்று குறிப்பிடப்படுகிறது. அப்படியானால் அவனுக்கும் இராஜகிருகத்து மணிநாகனுக்கும் ஏதாவது சம்பந்த முண்டா?

மணியார் மடத்துக்கு மேற்கே வைபாரகிரியின் சரிவில் சில குகைகள் காணப்படுகின்றன. இவற்றை 'சோணபண்டார' குகைகள் என்பார்கள். இவை பிம்பிசார மன்னனின் ஸ்வர்ணபண்டாரம் அல்லது திரவிய சாலை யென்பது ஐதிகம். உண்மையில் இவைகள் ஜைனத்துறவிகள் வசித்திருந்த குகைகளா யிருத்தல்வேண்டும்.

அதற்குச் சான்றாகக் கல்வெட்டுக்கள் பல காணப்படுகின்றன. பல வருடங்களுக்கு முன்பு இந்தப் பிரதேசத்தில் நிறுத்தப்பட்டிருந்த பிரிட்டிஷ் பட்டாளத்தைச் சேர்ந்த போர் வீரன் ஒருவன் ஸ்வர்ண பண்டார ஐதிகத்தைக் கேள்விப்பட்டு, அந்தக் குகையில் ஏதாவது திரவியம் இன்னும் மறைந்திருக்கலாம் என்ற நம்பிக்கையோடு பீரங்கி வெடி வைத்து ஒரு சுவரைத் தகர்க்க எத்தனித்தான்! ஆனால், குகையில் ஒரு சிறிய வெடிப்பு மாத்திரம் ஏற்பட்டதே யல்லாமல் உடைக்க முடியவில்லை. அவன் முயற்சியும் பலனளிக்கவில்லை. பீரங்கிக் குண்டு பட்ட இடம் இன்னும் காணப்படுகிறது.

இங்கிருந்து ஆறு மைல் தூரத்தில் இராஜகிருக நகரத்துக்கு வெளிப் புறத்திலே யஷ்டிவனம் என்ற ஒரு சோலை யிருந்தது. கயாவிலிருந்து இராஜகிருகத்துக்கு வரும் வழியில் புத்தர் இந்த யஷ்டி வனத்தில் தங்கியிருந்து தருமோபதேசம் செய்தார் என்றும் சொல்லப்படுகிறது.

மணியார் மடத்திலிருந்து சுமார் அரை மைல் தூரம் நடந்து சென்றோம். ஒரு மேட்டு நிலம் காணப்பட்டது. 'ஜாராசந்தன் மேடு' என்று தொல்பொருளாராய்ச்சியாளர் அதற்கு ஒரு விளம்பரப் பலகை யெழுதி நாட்டி வைத்திருக்கிறார்கள். உள்ளூர் மக்கள் அந்த இடத்தை 'அகாளா' அல்லது ரணபூமி என்று வழங்குகிறார்கள். பீமனுக்கும் ஜராசந்தனுக்கும் நடந்த இருபத்தெட்டு நாள் மல்யுத்தம் இந்த ஸ்தலத்திலேதான் நடந்தது என்பது ஐதிகம். சுற்றுப் புறங்களிலெல்லாம் உள்ள மண்ணைப் போலல்லாமல் இந்த மேட்டு நிலத்திலுள்ள மண் விபூதி போன்று பட்டுப்போல் வெண்மையாகக் காணப்படுகிறது. ஜராசந்தனும் பீமனும் ஒரு பெரிய பாறையில் நின்று மற்போர் புரிந்தபோது அவர்கள் பாதங்களில் மிதிபட்ட பாறையே தூசியாகிவிட்டதாம். என்னுடன் வந்த கயா வாசி வஸந்தராமுக்கு இந்த ரணபூமியில் கால் வைத்தவுடனேயே உடல் சிலிர்க்க வாரம்பித்தது! "இந்தப் புண்ணிய பூமியில் கால் வைத்தது என் பாக்கியம்தான். நான் பீமசேனன் போன்ற புயவலிமையும் பராக்கிரமும் வாய்க்கப் பெறவேண்டும்" என்று சொல்லி மிகவும் பயபக்தியோடு சிறிது மண்ணை எடுத்து விபூதியாக அணிந்துகொண்டு இன்னும் சிறிதை யெடுத்து மடியில் கட்டிக்கொண்டான்!

அங்கிருந்து மேலும் தெற்கே நடந்து சென்றோம். பிம்பிசாரன் அரண்மனையைச் சுற்றி யிருந்ததாகச் சொல்லப்படும் மதிற்சுவர்களின் கற்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. தெற்கே ஸ்வர்ணகிரி என்ற மலை தெரிந்தது. பாலி நூல்களில் இதனை ரிஷிகிரி என்று குறித்திருக்கிறார்கள். நாங்கள் சென்றுகொண்டிருந்த பாதையின்

இடது புறத்திலே ஒரு கட்டிடத்தின் அஸ்திவாரக் கற்கள் மாத்திரம் காணப்பட்டன. பிம்பிசாரனை அவன் மகன் அஜாதசத்துரு அடைத்து வைத்த சிறைக்கூடம் இங்குதா னிருந்தது என்பது ஐதிகம். இந்த ஸ்தலத்திலே நின்று பார்த்தால் ஸ்வர்ண கிரியின் ஒரு சிகரமாகிய கிருத்ரகூடம் தெரியும். கிருத்ரகூடத்தில் பகவான் புத்தர் தங்கியிருப்பதைத் தனது சிறைக்கூடத்திலிருந்தே பிம்பி சாரன் தரிசித்து மகிழ்ந்தான். அஜாதசத்துரு தன் தந்தையைப் பட்டினி போட்டு வதைத்துக் கொன்ற போதும் பிம்பிசாரனுக்கு புத்த தரிசனம் ஒரு பெரிய ஆறுதல் அளித்தது.

இராஜகிருகத்தில் நாங்கள் முக்கியமாகப் பார்க்கச் சென்ற ஸ்தலம் கிருத்ரகூடம் என்ற கழுகு மலை. பிம்பிசாரன் சிறைக் கூடம் இருந்த இடத்திலிருத்து ஒரு பாதை பிரிந்து கிருத்ர கூடத்துக் குச் செல்கிறது. போகும் வழியிலே 'ஜீவகாம்ரவனம்' என்ற ஒரு ஸ்தலத்தையும் கண்டோம். மகதத்தின் புகழ்பெற்ற ஜீவகன் என்ற அரண்மனை வைத்தியன் புத்தருக்கு மிகவும் வேண்டியவன். அவன் புத்தருக்கு அளித்த மாஞ்சோலையே ஜீவகாம்ரவனம் என்று சொல்லப்படும்.

கிருத்ரகூடம் என்ற சிகரத்துக்கு ஏறுவதற்குப் படிக்கட்டுக்கள் காணப்படுகின்றன. மிகப் பழங்காலத்திலேயே இப்படிக்கட்டுக்கள் கட்டப்பெற்றன என்று தெரிந்தது. பிம்பிசார மன்னனே தான் அடிக்கடி புத்த பகவானைப் போய்த் தரிசிப்பதற்காக வழியைச் செப்பனிட்டுப் படிக்கட்டுக்கள் அமைத்திருந்தான் என்று கதை. பிம்பிசாரன் தனது தேரில் ஏறி வந்து தேரை நிறுத்திவிட்டுக் கால் நடையாகவே நடந்து சென்ற இடம், தேவதத்தன் என்ற சீடன் புத்தரைக் கொல்வதற்கு ஒரு பெரிய பாறையை உருட்டிவிட்ட இடம், இன்னோரன்ன ஸ்தலங்களையெல்லாம் தாண்டி கிருத்ரகூடத்தின் உச்சிக்கு ஏறினோம்.

அங்கிருந்து நாற்புறமும் சுற்றி இராஜகிருகத்தின் எழிலைப் பார்த்தோம். மலை யுச்சியில் புத்தர் வசித்த ஒரு குகையும் மண்டபம் இருந்ததற்கு அடையாளமாக ஒரு செங்கற் கட்டிடத்தின் சின்னமும் காணப்படுகின்றன. புத்தருடைய பாதம் இங்கு பட்ட காரணத்தி னலே கிருத்ரகூட மலைக்கு 'பாதபங்கயமலை' யென்றும் ஒரு பெயர் இருந்தது. இராஜகிருகத்துக்கு புத்தர் வந்த சமயங்களிலெல்லாம் இந்தக் கழுகுக் குன்றம் என்ற கிருத்ரகூடத்திலேதான் அடிக்கடி தங்குவார். தமது சீடர்களுக்கு உபதேசம் செய்வார்.

நெடு வழி நடந்தும் மலைகளில் ஏறியும் இராஜகிருகத்தின் பல முக்கிய மான இடங்களைப் பார்த்துவிட்டுப் பழையபடி நாங்கள்

தங்கியிருந்த இடத்துக்குத் திரும்பினேம். சுமார் பதினைந்துமைலுக்கு அதிகமாகவே நடந்திருப்போம் என்று நினைக்கிறேன். அந்தக் களைப்பிலே போய், தாரை தாரையாக வழிந்துகொண்டிருந்த தபோத நாடி யென்ற வெந்நீர் ஊற்றில் குளித்தபோது ஆனந்தமா யிருந்தது. மணிக்கணக்காக அந்த இயற்கை வெந்நீர்த்தாரையின் கீழ் உட்கார்ந் திருக்கலாம் போலிருந்தது. அத்தனை சுகம்.

பிம்பிசாரன் காலத்தில் மிகவும் புகழ் பெற்றிருந்த இராஜகிருகம் அவனுக்குப் பின் அவன் புதல்வன் அஜாதசத்துருவின் காலத்தி லேயே கைவிடப்பட்டுவிட்டது. காலக்கிரமத்தில் அந்த அற்புதமான நகரம் அழிந்தே போய்விட்டது. கி. பி. ஏழாம் நூற்றாண்டில் சீன யாத்திரிகன் ஹியூன் சியாங் தரிசித்தபோது இராஜகிருகம் அழிந்து கிடக்கக் கண்டான். பௌத்தர்களே அங்கில்லை என்றும் சில பிராமணர்தான் வசித்தார்கள் என்றும் அவன் குறிப்பிட்டிருக்கிறான்.

பதினோராம் அத்தியாயம்

பால் பாயசம்

ஆலாரகாலாமர் ஆசிரமத்திலும் ருத்ரக ராமபுத்திரர் ஆசிரமத்திலும் யோக முறைகளைப் பயின்று அவை யாவும் தமது ஆன்ம விடுதலைக்கு வழி காண்பிக்கவில்லை யென்று கண்ட கௌதமர் இராஜகிருகத்திலிருந்து புறப்பட்டுக் கயா க்ஷேத்திரத்தை நோக்கி நடந்தார். பல நாள் நடந்து ஈற்றில் கயாவை அடைந்து அந்த க்ஷேத்திரத்தின் பக்கத்திலுள்ள கயாசீர்ஷம் என்ற குன்றின் மேலேறிச் சில நாட்கள் தியானத்திலமர்ந்து மனத்தை ஒரு வழிப் படுத்த முயன்றார். அங்கும் அவருக்கு நிம்மதி கிடைக்கவில்லை. அதை விட்டுக் கீழ் இறங்கி வெகு தூரம் சென்றபோது ஒரு சிறு கிராமமும் அதன் பக்கத்தில் ஓர் அற்புதமான சோலையும் அதன் நடுவே தெள்ளிய நீர் பாயும் ஒரு நதியு மிருக்கக் கண்டு அதுவே தமது தவத்துக்குப் பொருத்தமான ஸ்தலமென்று தீர்மானித்துக் கொண்டு அங்கே தரித்துவிட்டார். அந்த ஸ்தலத்தைப் பற்றிப் புத்தரே ஒரு சமயம் பின் வருமாறு சொல்லி யிருக்கிறார்:

"சன்மார்க்கம் தேடி, மாசு மறுவற்ற உயர்ந்த நிலையாகிய சாந்தியைப் பெறுவதற்காக நான் முயன்று வரும் நாளிலே, மகத தேசத்தில் சேனிகமம் என்று சொல்லப்படும் உருவில்வா கிராமத்தை யடைந்தேன். இங்கு ரமணீயமான ஒரு சோலையும் தெள்ளிய நீரோடும் நதியும் பக்கத்திலே இரந்துண்ணை வசதி தரும் சில குடிகளும் இருக்கக் கண்டு இதுவே எனது தவ முயற் சிக்கு ஏற்ற இடம் என்று நான் அங்கே தங்கினேன்."

உருவில்வா என்ற அந்தக் கிராமமே இப்போது புத்த கயை என்று வழங்குகிறது. கயா க்ஷேத்திரத்துக்கு ஏழு மைல் தூரத்தி லுள்ளது. இக்கிராமத்தின் பக்கத்திலே பல்குனி யாற்றின் கிளை நதியாகிய நைரஞ்சனை நதி யுள்ளது. கௌதமர் இந்த கயா க்ஷேத்திரத்தைத் தெரிந்தெடுத்ததற்கு வேறொரு முக்கியமான காரணமு முண்டு. அந்தக் காலத்திலே வேள்விகளிலும் யாக முறை களிலும் பிரசித்தி பெற்று விளங்கிய அக்னி காசியபர், நதி காசியபர், கயா காசியபர் என்ற வேத ரிஷிகள் இந்த கயா க்ஷேத் திரத்திலேயே ஆயிரம் ஆயிரம் சிஷ்ய கோடிகளுடன் வசித்து வந்தவர்கள். கயாவிலுள்ள கயாசீர்ஷம் என்ற குன்று அந்தக்

காலத்தில் பிரம்மயோனி என்ற பெயரோடு விளங்கிய புண்ணிய ஸ்தலம். தவத்தை விரும்பிய யாவரும் இந்த இடத்தையே அடிக்கடி நாடி வந்தார்களாகையால் கௌதமரும் அங்கு வந்ததில் ஆச்சரிய மில்லை.

ஆலாரகாலாமரையும் ருத்ரக ராமபுத்திரரையும் விட்டுப் பிரிந்த பின் கௌதமர் கயாவுக்கு வந்து பிரம்ம யோனி என்ற கயா சீர்ஷக் குன்றிலே சொந்தத்தில் முயன்று பார்த்தும் நிம்மதி காணுததால் கீழ் இறங்கி உருவில்வா கிராமத்துக்கு வந்தார். அங்கே யுள்ள உப வனத்திலே தபசிகள் ஐவர் கடுந்தவம் இயற்றிக்கொண் டிருப்பதைப் பார்த்தார். அவர்கள் ஊக்கமும் சிரத்தையும் கௌதமருக்கு நம் பிக்கையைக் கொடுத்ததால் அவர்களுடன் சேர்ந்து மீண்டும் யோக நிஷ்டையில் ஈடுபட்டார். தபசிகள் ஐவரும் கௌதமரின் கடுந்தவ முறைகளைக் கண்டு ஆச்சரியப்பட்டு அவருக்குச் சீடர்களாயினர். அவர்களில் முதன்மையானவர் கௌண்டின்னியர் என்பவர். இவரே முன்பு சித்தார்த்தர் பிறந்த சமயத்தில், அவர் துறவியாவார் என்று சோதிடம் சொன்ன அந்தணர். மற்றவர்கள் மகாநாமன், வாஷ்பர், அசுவஜித், பத்ரிகர் என்ற பெயர்களைக் கொண்டவர்கள்.

உருவில்வா வனத்திலே கௌதமர் ஆறு வருடகாலம் மிகக் கடுமையான தவத்தில் ஈடுபட்டிருந்தார் என்று சொல்லப்படுகிறது. அவர் தமது இருபத்தொன்பதாவது வயதிலே அரண்மனையை விட்டு வெளியேறினர். முப்பத்தைந்தாவது வயதிலே ஞானோதயம் பெற்றார். இடைக்காலமாகிய ஆறு வருடங்களும் உருவில்வா வனத்தில் தவம் செய்ததாகக் கணக்கிடப்படுகிறது. ஆனல், அவர் முதலில் பார்க்கவ முனிவர் ஆசிரமத்தில் எவ்வளவு காலம் தங்கினர், பின்னர் ஆலாரகாலாமரிடத்திலும் ருத்ரக ராமபுத்திர ரிடத்திலும் எவ்வளவு காலம் பயின்றார் என்பதெல்லாம் கணக்கில் சேர்க்கப்பட வில்லை. ஆலாரகாலாமரிடத்தில் ஆறு சமாபத்தி முறைகளைக் கற்றுக்கொண்டார் என்பதை ஒப்புக்கொண்டால் அவ்வித அனுஷ்டானத்துக்குப் பல ஆண்டுகள் அப்பியாசம் தேவை என்பதை மறுக்க முடியாது. ஆகையால் உருவில்வாவில் அவர் ஆறு வருடத்துக்குக் குறைவாகவே தங்கியிருத்தல் கூடும்.

எப்படியாயினும் உருவில்வாவில் அவர் இயற்றிய தவமே மிகக் கடுமையான தவம் என்று சொல்லப்படுகிறது. பார்க்கவ முனிவரின் ஆசிரமத்திலிருந்த துறவிகள் அனுட்டித்த அதே முறையைத்தான் உருவில்வாவி லிருந்தவர்களும் அனுட்டித்ததாகத் தெரிகிறது. ஐம்புலன்களையும் அடக்கி வெயில் மழை காற்று ஒன்றையும் பொருட்படுத்தாமல் பசி தாகம் என்ற வேட்கைக்கு

இடம் கொடுக்காமல் தியான நிஷ்டையில் உட்கார்ந்து மனத்தை ஒருவழிப் படுத்த முயன்றனர் இத் துறவிகள். கௌதமரும் அதே வழியைக் கடைப் பிடித்தார். அதைப்பற்றி அவரே சொல்லுகிறார் :

"எனது பற்களை இறுகக் கடித்துக்கொண்டு நாவை அண்ணத்தி லழுத்தி வைராக்கியத்தோடு என் மனத்தை யடக்கி எவ்வித சிந்தையு மெழாமல் நசுக்கினு லென்ன என்று நினைத்து அப்படியும் செய்து பார்த்தேன். உடலோடி வியர்த்தது. பலசாலி யொருவன் கையில் பலமற்ற ஒருவன் நசுக்கப்படுவது போன்ற உணர்ச்சி யேற்பட்டது. எவ்வித சிந்தனைக்கும் இடம் கொடாமல் மேலும் மேலும் வைராக்கியத்துடன் பஞ்சப் புலன்களையும் அடக்கினேன். இதனல் மனத்தில் குழப்பம் ஏற்படாவிட்டாலும் உடலில் அமைதியோ சாந்தியோ ஏற்படவில்லை.

"பின்னர் நான் மூச்சை யடக்கிச் சமாதி நிலையி லிருந்தா லென்ன என்று நினைத்தேன். வாயாலும் மூக்காலும் சுவாசிப்பதை நிறுத்தி நிஷ்டையி லிருந்தேன். அச்சமயம் கொல்லன் உலையில் துருத்தி போன்று பேரிரைச்சலுடன் காது வழியாக வாயு வெளி வந்தது. அதையும் தடுத்து நிறுத்தினலென்ன என்று உறுதி கொண்டு, வாயையும் மூக்கையும் காதுகளையும் அடைத்து மூச்சைப் பிடித்திருந்தேன். முதலில், என் தலையை வார்கொண்டு இறுகக் கட்டுவதுபோலவும், பின்னர் என் உடலை ஈட்டியால் குத்துவது போலவும், அதன்பின் நெருப்பிலே வேகவைப்பது போலவும் வேதனை யேற்பட்டது. அதற்கும் என் மன வைராக்கியம் தளர வில்லை.

"இந்த நிலையில் தேவர்கள் சிலர் என்னைப் பார்த்துவிட்டு, 'கௌதம முனி இறந்துவிட்டான்' என்றனர். வேறு சிலர், 'அவன் இறக்கவில்லை, இறக்கும் நிலையி லிருக்கிறன்' என்றனர். இன்னும் சிலர் பார்த்துவிட்டு, 'கௌதமன் இறந்துவிடவுமில்லை இறந்து கொண்டிருக்கவுமில்லை. அவன் 'அருகத்' நிலையி லிருக்கிறன். அருகத்துக்களின் தன்மையே இப்படித்தான்' என்றனர்.

"அதற்குப் பிறகு நான் உணவை முற்றுக ஒழித்து உண்ணு விரதத்தை மேற்கொள்ளத் துணிந்தேன். இதனை யறிந்த தேவர்கள் என்னைப் பார்த்து, 'கௌதம! அங்ஙனம் துணியாதே. துணிந்தால் நாங்கள் உன் சருமத்தின் வழியாகவும் உரோமக் கண்களின் வழியாகவும் உணவூட்டுவோம்' என்றனர். ஆகையால் நான் உண்ணுவிரத மிருப்பதில் அர்த்தமில்லை யென்று கண்டு, படிப் படியாக உணவைக் குறைத்து வந்தாலென்ன என்று நினைத்து,

முதலில் உள்ளங்கையளவு தானியத்தை யுட்கொண்டேன். நாளுக்கு நாள் இங்ஙனம் உணவைக் குறைத்துக் குறைத்து வந்தபோது என் சரீரம் மெலிந்து குச்சிபோலாகிவிட்டது. எலும்போடு தோல் ஒட்டி விட்டது. விலா எலும்புகள் கோவையாகத் தெரிந்தன. கண்கள் குழி விழுந்தன. தலையில் தோல் சுருங்கி வெடிப்புக்கள் ஏற்பட்டன. வயிற்றின் தோலைத் தொட எத்தனித்தபோது என் முள்ளெலும்பு தான் அகப்பட்டது. முள்ளெலும்பைத் தொடப் போனேன், அதில் வயிற்றின் தோல் ஒட்டி யிருந்தது. போஷிப்பின்மையால் உடல் வற்றிக் கருகிச் சுருண்டு போய்விட்டது."

இத்தகைய ஹடயோக சாதனைகளை யெல்லாம் செய்து பார்த்த கௌதமருக்கு இன்னும் விடிவு ஏற்படவில்லை. தமக்கு முன்னுள்ள தபோதனர்களெல்லாம் செய்த தவத்தைவிடத் தாம் எவ்வளவோ கடுமையும் துன்பமும் தரக்கூடிய தவத்தைச் செய்தும் பலன் கிடைக்கவில்லையானால், இதற்கு வேறு மார்க்கம் ஏதோ இருத்தல் வேண்டும் என்று சிந்தித்தார்.

அந்தச் சமயத்திலே அவர் தாம் சிறு வயதா யிருக்கையில் ஏர் மங்கல விழாவின் போது நாவல் மரத்தடியில் தியான நிஷ்டையி லிருந்து அனுபவித்த ஓர் உண்மை புலப்பட்டது. அந்தச் சமாதியின் போது தியானத்தின் முதற் படியை எவ்வித ஹடயோக சாதனையு மின்றியே அனுபவிக்க நேர்ந்தது. ஆகையால் அவர், சுவர் இருந் தால்தான் சித்திர மெழுதலாம் என்ற கொள்கையை மேற்கொண் டார். உடலானது களைப்பின்றி யிருந்தால்தான் சிந்தனையை இயக்கித் தத்துவ போதத்தைப் பெறலாம் என்று தீர்மானித்தார்.

அப்போது கௌதமர் இருந்த சோலையின் பக்கமாகச் சில வழிப்போக்கர்கள் போனர்கள். அவர்கள் பாணர்கள். அந்தக் கூட்டத்திலுள்ள பெண் ணொருத்தி பாடிய பாட்டு கௌதமரின் காதில் விழுந்தது.

யாழின ரம்பை வலிந்து கட்டாதே
நரம்பிற்று விட்டா லிசை யற்றுவிடும்
யாழி னரம்பை மெலிந்து கட்டாதே
நரம் பியங்கா விட்டா லிசை யற்றுவிடும்
தோழி! சமன்செய்து சுருதி யமைந்திட
யாழினை வாங்கி நரம் பணைவாய்

யாழின் தந்தியை அதிகமாய் முறுக்கினால் தந்தி அறுந்து நாதமும் போய்விடும். தந்தி மிகவும் தளர்ந்தால் நாதமே பிறக்காது. ஆகையால், வலிவும் மெலிவு மின்றிச் சமமாய் முறுக்கினால்தான்

இசை பிறக்கும். இந்த உண்மை கௌதமருக்குப் புதியதொரு தைரியத்தைக் கொடுத்தது. உடலை அதிகமாக வருத்திஞல் அறிவாகிய தந்தியே அறுந்து தத்துவபோதம் காண முடியாமல் போய் விடும். அளவுக்கு மிஞ்சி உடலுக்குப் போஷிப்புக் கொடுத்தாலும் அறிவாகிய தந்தி இயக்கமற்றுத் தளர்ந்து நாதமே பிறக்காமல் போய்விடும். ஆகையால் இரண்டுக்கும் நடுவிலுள்ள மத்திய வழியைக் கடைப்பிடிக்க வேண்டும். இந்த மத்திய மார்க்கமே புத்தரின் முக்கியமான உபதேசமாய், பௌத்த தர்மத்தின் அடிப் படைத் தத்துவமாய் ஏற்பட்டது.

பகவத் கீதையில் ஓர் அழகான சுலோக மிருக்கிறது :

நாத்யச்ன தஸ்து யோகோஸ்தி ந சைகாந்த மனச்னத :
ந சாதி ஸ்வப்ன சீலஸ்ய ஜாக்ரதோ நைவசார்ஜுன.

"அர்ஜுன! அளவு கடந்துண்பவனுக்கு யோகமில்லை. அறவே உண்ணுதவனுக்கும் அது இல்லை. மிகைபட உறங்குபவனுக்கும் மிகைபட விழித்திருப்பவனுக்கும் யோகமில்லை."

இந்த உண்மை புலப்பட்டதும் கௌதமர் தமது உண்ணுவிரதத் தையும் ஹடயோக சாதனைகளையும் கைவிட்டு, தத்துவ போதம் பெறுவதற்கு உடலுக்குத் தேவையான அளவு உணவருந்தத் தீர்மானித்தார். அந்த உறுதியோடு அவர் மெல்ல எழுந்து நதியில் குளித்துவிட்டு வந்து, ஆட்டிடையர் வழக்கமாகத் தங்கியிருக்க நிழல் கொடுத்துதவும் ஆலமரமாகிய அஜபால விருக்ஷத்தினடியில் சோர்ந்துபோய் உட்கார்ந்திருந்தார்.

அந்த சேனுநிகமம் என்ற உருவில்வா கிராமத்தில் வசித்த இடைப் பெண் சுஜாதை யென்பவள், நெடுங்காலமாகக் குழந்தைப் பேறில்லாததால், அஜபால விருக்ஷத்தி னடியில் வந்து வன தேவதையை நினைத்து அடிக்கடி வேண்டி வந்தாள். அவள் செய்த தவத்தின் பயனை அவளுக்கு ஓர் ஆண் மகவு பிறந்தது. அதற்கு நன்றியறிதலாகத் தான் வரங்கிடந்த தெய்வத்துக்கு அமுது படைக்க எண்ணிய சுஜாதை மிகச் சிறந்த பசுக்களிலிருந்து கறந்த பாலை வற்றக் காய்ச்சி அரிசி கலந்து பால் பாயசம் செய்து பொற்கிண் ணத்தில் கொண்டு போய்ப் படைக்க எண்ணியவள், அஜபால விருக்ஷத்தி னடியில் சுத்தம் செய்து மெழுகிக் கோலமிடுமாறு தன் பணிப் பெண் பூரணி என்பவளை அனுப்பினுள். பூரணி வந்து பார்த்த போது ஆல மரத்தடியிலே கௌதமர் பேரெழிலோடு சமாதியிருக்கக் கண்டு திகைத்தவளாய், ஓடோடியும் போய் சுஜாதையிடம், "நீ வேண்டிக்கொண்ட தெய்வம் பிரத்தியட்சமாகவே ஆலமரத்தடியில்

வீற்றிருக்கிறதை என் கண்களால் கண்டேன்!" என்று தெரிவித்தாள். இதைக் கேட்ட சுஜாதை பேருவகை யடைந்தவளாய்த் தன் குழந்தையையு மெடுத்துக்கொண்டு வந்து கௌதமர் முன் நின்று அவர் அடி பணிந்து பொற்கிண்ணத்தில் கொண்டு வந்த பாலமுதை அவர் முன் வைத்து, "ஐயனே! இந்த அமுதைப் புசித் தருளவேண்டும்," என்று கேட்டுக்கொண்டாள்.

நாற்பத்தொன்பது நாட்கள் உணவின்றித் தளர்ந்துபோ யிருந்த கௌதமர் சுஜாதை கொடுத்த பாயசத்தைக் கையில் வாங்கினர். "அம்மணீ! நீயும் உன் செல்வனும் நீடூழி வாழ்வீர் களாக!" என்று வாழ்த்திவிட்டு அவள் கொடுத்த இன்னமுதை யருந்தினர். அவர் உடலி லிருந்த தளர்வு நீங்கி மீண்டும் பொலிவு பெற்றார். என்றுமில்லாத ஒரு பேரொளி அவர் வதனத்தைச் சுற்றிப் படர்ந்தது.

சுஜாதை கொடுத்த இந்த அமுது புத்தரின் எண்பது வயது நிறைந்த வாழ்வில் ஒரு முக்கிய இடம் பெற்றது. நிர்வாண மோக்ஷம் பெறுவதற்கு முன்பு சுஜாதை கொடுத்த உணவும், அவர் இறப்பதற்கு முன்பு சுந்தன் என்ற கொல்லன் கொடுத்த உணவும் தம்மால் மறக்க முடியாத இரு சிறந்த உணவுகள் என்று அவர் பாராட்டிப்பேசியுள்ளார்.

அமுது உண்ட பின்னர் கௌதமர் அந்தப் பொற்கிண்ணத்தைக் கொண்டுபோய் நைரஞ்சனா யாற்றில் மிதக்கவிட்டு, "என் உறுதி வெற்றி பெறுமாயின், நான் தத்துவபோதம் பெறக்கடவேனையின், இந்தக் கிண்ணம் ஆற்றின் எதிர்ப்புறமாய் மிதந்து செல்லும்" என்று சோதனை செய்தார். அப்படியே அந்தப் பொற்கிண்ணம் நதியிலே எதிர்ப்புறமாய் எண்பது பாகம் மிதந்து சென்றபின் உள்ளே மூழ்கிப் பின்னர் மிதந்து ஒரு சுழிப்புச் சுழித்துவிட்டு மீண்டும் மூழ்கியது. இது சுபசகுனம் என்று கண்ட கௌதமர் திரும்பியும் அஜபால விருக்ஷத்தி னடியில் வந்து நிஷ்டையி லுட்கார்ந்தார்.

கௌதமரோடு இதுகாறும் தவத்தி லீடுபட்டிருந்த பஞ்ச பிக்ஷுக் கள் கலவரப் பட்டனர். அவருடைய கடுந் தபசைக் கண்டு இது காறும் மெச்சி, அவர் பெறும் பிரம்மானுபவத்தைத் தாமும் பெறலாம் என்று எதிர்பார்த்திருந்த முனிவர் ஐவரும் இப்போது கௌதமர் தவத்தைக் கைவிட்டதையும் உண்ணுவிரதத்தை யொழித்து இடைச்சி யின் கையால் அமுதுண்டதையும் கண்டு வெறுப்படைந்தவர்களாய், கௌதமன் உறவு இனி நமக்கு வேண்டாம் என்று சொல்லி உருவில் வாவை விட்டு வேறிடம் போய்விட்டனர்.

பகற்பொழுது முழுவதையும் அஜபால ஆலமரத்தடியில் கழித்த கௌதமர் மாலை யானதும் மெல்ல நடந்து நைரஞ்சனை நதியைக் கடந்து அதற்கப்பா லிருந்த ஒரு பெரிய வெள்ளரசு மரத்தடியில் சமாதியி லிருக்க எண்ணியபோது, சுவஸ்திகா என்ற பெயருள்ள ஓர் இடையன், புல் அறுத்துச் சென்றவன், கௌதமரைப் பார்த்து விட்டுத் தன் கையிலிருந்த ஒரு கட்டுப் புல்லை எடுத்து அவரிடம் நீட்டினன். அதை கௌதமர் வாங்கிக் கீழே பரப்பி விட்டு, அந்த ஆசனத்தின் மீது கிழக்குத் திசை நோக்கிய வண்ணம் தியானத்தி லுட்கார்ந்தார்.

பன்னிரண்டாம் அத்தியாயம்

தவம் பலித்தது

கபிலவஸ்துவை விட்டு, அரண்மனைச் சுகபோகங்களைத் துறந்து, உற்றார் உறவினரையும் துறந்து, கரடு முரடான பாதை வழியே நடந்து, காட்டிலும் மலையிலும் குகைகளிலும் வசித்து, ஆறு வருட காலம் ஆன்ம விடுதலையை நாடிக் கடுந்தவம் புரிந்த சித்தார்த்த கௌதமர் தாம் தேடி வந்த மனச் சாந்தியையும், ஜனன மரணத் துன்பங்களை விட்ட பேரின்ப நிலையையும், காமக் குரோதம் முதலிய மாசுகளற்ற உள்ளொளியையும் பெறுவதற்காக அரும்பாடு பட்டார். விமுக்தி நிலையைப் பெறுவதற் காக விரதங்க ளிருந்தார். ஆனால், அவர் முயற்சி ஒன்றும் சித்தி தரவில்லை. உடலை வருத்தி உணர்ச்சிகளைக் கெட வைத்தும் விடை காண முடியவில்லை. ஈற்றில் உருவில்வா வனத்திலுள்ள வெள்ளரச மரத்தடியில் சமாதி யிருந்து தன் புத்தியை வசப்படுத்திப் போதம் காண உறுதி கொண்டு, சுவஸ்திகா கொடுத்த புல்லாசனத்தி லமர்ந்து, "என் என்பும் தோலும் கருகி, ஊனும் உருகிக் குருதியே வற்றிப் போயினும் நான் தேடி வந்த ஞானைதயத்தைப் பெறும் வரை இவ்வாசனத்தைவிட் டெழுந்திரேன்," என்ற வைராக்கிய சித்தத்துடன் தியானத்தி லமர்ந்தார்.

வைசாக பூர்ணிமைச் சந்திரன் அவர் முகத்துக் கெதிரே கீழ் வானத் தெழுந்து தண்ணென்ற நிலவுக் கதிர்களைப் பரப்பினன். நாற்புறமும் அடர்ந்த காட்டில் விலங்குகளும் பறவைகளும் உறங்கின. சில்வண்டுகள் மாத்திரம் ஏக சுருதியில் இசைபாடிக் கொண் டிருந்தன. கௌதமரின் சித்தமும் ஏக சுருதியில் நிலைத்து நின்றது. ஐம்புலன்களும் ஸ்தம்பித்து நிற்கச் சிந்தனை யொன்றே மேலெழுந்து சஞ்சரித்தது. அந்தச் சமயத்தில், வெண்ணிலவு காய, பல்வகை மலர்களின் நறுமணம் சுமந்த இளந் தென்றல் வீச, இதுவே ஏற்ற சமயம் என்று தர்ம விரோதியாகிய மாரன் – காமம் வெகுளி மயக்கம் என்ற இச்சைகளின் தந்தை – தனது இராச்சியத்திலிருந்து விடுபட்டுச் செல்ல கௌதமர் துணிந்துவிட்டார் என்று கண்டதும், தனது அதர்மப் படைகள் யாவும் புடை சூழ வந்து கௌதமரை வளைந்துகொண்டான். இதை யறிந்து பிரமனும் இந்திரனும் மற்றும் தேவர்களும் கௌதமரைச் சுற்றிக் கவசமிட வந்தவர்கள், மார

சேனையின் பலத்தையும் அவர்கள் உக்கிரத்தையும் கண்டு பின் வாங்கினர். கௌதமர் தன்னந் தனியாகத் தன் புத்தியைக் கொண்டே மாரனை எதிர் கொள்ளவேண்டிய நிலை ஏற்பட்டது. மாரன் அனுட்டித்த தந்திரங்கள் பல. முதலில், சாக்கிய நாட்டிலிருந்து வந்த ஒரு தூதுவன் போல வேடந் தாங்கிக் கௌதமர் முன்னின்று, "தேவதத்தன் என்ற சாக்கிய இளவல் கபிலவஸ்து இராச்சியத்தை முறை கேடாக அகப்படுத்திக்கொண்டு அரண்மனையுட் புகுந்து சூறையாடி, யசோதரையைத் தனக்காக்கி, சுத்தோதன மன்னனையும் சிறையிலடைத்துவிட்டான்; ஆகையால், சித்தார்த்தர் உடனே திரும்பிக் கபிலவஸ்துவுக்கு வந்து நியாயத்தையும் நீதியையும் நிலை நாட்ட வேண்டும்," என்று எழுதப்பட்ட ஓர் ஓலையைக் கொடுத்தான். ஆனால், கௌதம முனிவர் சிந்தித்தார்: "எதற்காக நான் குறுக்கிட வேண்டும்? தேவதத்தனின் காம இச்சையே பெண்களை அபகரிக்கத் தூண்டியது. அவன் பொறுமையே சுத்தோதனனைச் சிறை வைக்கத் தூண்டியது. தங்கள் மன்னனைக் காப்பாற்றச் சக்தி யில்லாமல் சாக்கிய நாட்டு மக்கள் வாளா விருப்பதற்குக் காரணம் அவர்களது கோழைத்தனமே." இங்ஙனம், மனிதனின் இயல்பான துர்க்குணங்களைப் பற்றிச் சிந்தித்த போதிசத்துவர் தமது உறுதியில் மேலும் வைராக்கியம் பெற்றார்.

இந்த முயற்சியில் தோல்வியுற்ற மாரன் தன் சேனைகளை யேவி விட்டுப் பெரும் புயலடிக்கச் செய்தான்; பெரு மழை பொழியச் செய்தான்; வெள்ளம் பெருக்கெடுத் தோடியது. ஆனால், கௌதமர் தரித்திருந்த துவராடையின் ஓரத்தில் கூட அந்த வெள்ளம் தொட்டுக்கொள்ள முடியவில்லை. மழையின் ஒரு திவலையாவது அவர் உடலைத் தீண்ட முடியவில்லை. அதன் பின் மாரன் கொதித் தெழுந்து கல்லையும் மண்ணையும் வாரி யிறைத்தான்; கனல் யள்ளிக் கொட்டினன்; கடும் இருளைக் கவித்தான். ஒன்றும் கௌதமரின் வைராக்கியத்தைக் கலைக்க முடியவில்லை. ஈற்றிலே மாரன் வெறுப் படைந்து போதிசத்துவரை நோக்கி, "சித்தார்த்தா! எழுந்திரு இந்த ஆசனத்தை விட்டு! இது உன் ஆசனமல்ல, என்னுடையது," என்று உரிமை வழக்காடினன். போதிசத்துவர் சிறிதும் அசையாமல், "மாரனே! எப்படி இந்த ஆசனம் உனக்குரிமையாகும்? பத்துவித பாரமிதைகளை நீ நிறைவேற்றினையா? அல்லது ஏதாவது சிறு தர்மத்திலாவது நீ ஈடுபட்டாயா? அறிவு தேட விழைந்தாயா, அல்லது லோகத்தின் சுபீட்சம் நாடி உழைத்தாயா? எவ்வாறு நீ இந்த ஆசனத்தை அபகரிக்கத் துணியலாம்?" என்றார். மாரன் இதைக் கேட்டு ஆத்திரங்கொண்டு பூமி யதிரும்படி தன் ஆயுதங்களை

யள்ளி வீசினன். அவை யாவும் ஆகாயத்தில் அந்தரத்தில் நின்றனவே யல்லாமல் கௌதம போதிசத்துவரின் உடலையே தீண்டவில்லை.

அச்சமயத்தில் போதிசத்துவர் மாரனைப் பார்த்துக் கேட்டார்: "மாரனே! நீ வலியவன் என்று சொல்லிக்கொள்வாயானால் ஏதாவது ஒரு வகையில் தானம் என்ற பண்பைக் காப்பாற்றி யிருக்கிறாயா? அப்படித் தானம் செய்திருப்பாயானால் உனக்கு சாட்சி ஏதாவதுண்டா?"

மாரன், "சாட்சிகளா வேண்டும்? இதோ பார், எத்தனை சாட்சி கள் வேண்டுமானாலும் தருகிறேன்," என்று சொல்லிக் கொண்டு தன் கையை நீட்டினன். அந்த க்ஷணமே அவன் சேனையிலிருந்து ஆயிரம் குரல்கள், "நான் சாட்சி, நான் சாட்சி" என்று ஏக சமயத் தில் எழுந்தன. பின்னர் மாரன் இறுமாப்புடன் போதிசத்துவரை நோக்கி, "சித்தார்த்தா! இப்பொழுதாவது என் சக்தியின் பெருமையை நீ உணர்ந்தாயா? என்னோடு போட்டி போடும் நீ தான் எத்தகைய தானம் வழங்கியிருக்கிறாய் என்பதற்கு என்ன சாட்சி வைத்திருக்கிறாய் என்று சொல்," என்று கேட்டான்.

கௌதம போதிசத்துவர் அடக்கமாகவே பதிலிறுத்தார். "மாரா! நீ தானம் செய்திருக்கிறாய் என்பதற்கு உயிருடனிருக்கும் ஆயிரக்கணக்கான சாட்சிகளை நீ வைத்திருக்கிறாய் என்பதை ஒப்புக் கொள்ளுகிறேன். ஆனால், அத்தகைய சாட்சிகள் எவரும் எனக் கில்லை. என் முற்பிறவிகள் பலவற்றில் செய்த எண்ணிறந்த தானங்களைத் தவிர, என் இறுதிப் பிறவியில் விஸ்வாந்தர மன்ன னாகப் பிறந்து செய்த தானங்களைப்பற்றி இந்த உறுதி பெற்ற பூமியையே சாட்சி சொல்லும்படி கேட்கிறேன்!" என்று சொல்லித் தன் வலக் கரத்தை எடுத்துப் பூமியைத் தொட்டு, "பூமியே! உன் விடை யென்ன?" என்று கேட்டார்.

அந்தக்ஷணத்தில் பூமி யதிர்ந்தது, வானத்தில் இடி இடித்தது. "நானே உனது சாட்சி" என்ற பேரொலி வானைப் பிளந்தது. மாரன் தலை வணங்கி ஸ்தம்பித்து நின்றான். அவன் சேனைகள் காற்றாய்ப் பறந்தன.

ஆயினும் மாரன் தன் முயற்சியைக் கைவிட இன்னும் துணிய வில்லை. சேனைகள் பறந்தோடிவிட்டபோதிலும் தன் இறுதி அஸ்தி ரத்தைப் பிரயோகிக்கத் துணிந்தான். காமம், வெகுளி, மயக்கம் என்ற தன் மூன்று புதல்வியர்களையும் ஏவிவிட்டான். அவர்கள் வந்து போதிசத்துவரின் முன் நின்று தம் பேரெழிலைக் காட்டி சகல வித சாகஸங்களையெல்லாம் ஒன்றுகூட்டி நின்று ஆடினர், பாடினர்,

மயக்கினர். இன்பலோகத்தின் எழிலைக் காட்டினர். இந்திர போகத்தையே வாக்களித்தனர். ஆனால் போதிசத்துவரின் உறுதி தளரவில்லை. "மின்னல் போல் க்ஷணத்தில் தோன்றி க்ஷணத்தில் மறைவது உங்கள் இன்பம். அத்தகைய நிலையற்ற இன்பத்தை நான் எதற்காக நாடவேண்டும்? ஜனனம், மரணம், நீங்காப் பிணி, நீடித்துச் செல்லும் மூப்பு - இந்த மாசுகள் நிறைந்த உங்கள் உடல்களை நான் எதற்காக விரும்பவேண்டும்? நான் இவற்றுக் கெல்லாம் அப்பாற்பட்ட பேரின்பத்தை நாடியுள்ளேன். மனிதருக்கு அரிதிற் கிடையாத தத்துவபோதத்தின் பேருகப் பெறத்தக்க சாஸ்வத இன்பமே எனக்கு வேண்டும். ஆகையால், நீங்கள் வீணாக இங்கு நின்று உங்கள் போலி அழகைக் காண்பிக்க வேண்டாம்," என்று சொல்லி விட்டு மறுபடியும் மோன நிஷ்டையி லாழ்ந்தார். முக்குற்றங்களாகிய மும்மே ரழகிகளும் நாணித் தலை குனிந்து, "காமனை வென்ற வீர! நின் முயற்சி வெல்வதாக. தளையி லிருந்து நீ விடுபட்டு சர்வ மக்களையும் அவ்வாறே விடுவிக்க மார்க்க மருள்வா யாக," என்று வாழ்த்திவிட்டுச் சென்றனர். தேவர்கள் ஆனந்த மேலீட்டால் மலர் மாரி பொழிந்தனர்.

அந்த இரவின் முதலாவது யாமத்தில் மார யுத்தம் முடிந்ததும், இரண்டாம் யாமத்தில் போதிசத்துவர் சமாபத்தி நிலையிலே தமது பழம் பிறப்புக்களையெல்லாம் உணர்ந்தார். மூன்றும் யாமத்தில், முழுதும் பொய்யின்றுணரும் சர்வஜ்ஞத்துவம் பெற்றார். நான்காம் யாமத்தில் ஞானம் முதிர்ந்தது. துவாதச நிதான ரூபமாகிய ஏது நிகழ்ச்சி என்று சொல்லப்படும் பிறப்பு இறப்புக்குக் காரணமும், அதன் நிவாரணமும் மார்க்கமும் தெளிவாயிற்று. போதம் பிறந்தது. புன்மை யிருள் நீங்கியது. சம்போதி ஞான ஒளி வீசியது. அப்போது கீழ்த்திசை வானத்தில் பகலவனும் எழுந்தான்.

பதின்மூன்றும் அத்தியாயம்

கோயிலுக் கண்டேன்

கயா க்ஷேத்திரத்தில் நான் போய்ச் சேர்ந்தபோது வஸந்தராம் என்ற வழிகாட்டியைச் சந்தித்தேன் என்று முன்னரே குறிப்பிட்டிருந்தேனல்லவா? அங்கிருந்து அவனையு மழைத்துக்கொண்டு இராஜகிருகம் போய்விட்டுத் திரும்பி வந்ததும், புத்த கயைக்குப் போகவேண்டு மென்ற விருப்பத்தைத் தெரிவித்தேன். ஆனால் வஸந்தராம் தன் சொந்த மனோபீஷ்டத்தை, இரண்டு நாட்களாக அடக்கி வைத்திருந்தவன், அப்போது வெளியிட்டான்.

"தங்கள் பூர்வ புண்ணியப் பலனில் ஏதோ குறை யிருக்கிறது. அதனால்தான் தங்களை இந்தப் புனித க்ஷேத்திரமாகிய கயைக்குக் கொண்டு வந்திருக்கிறது. உத்தரவாஹினியாகிய தெய்வ நதி பல்குனியில் தீர்த்தமாடி, விஷ்ணுபாதம் அக்ஷயவடம் ஆகிய இரு பெரும் ஸ்தானங்களிலும் தங்கள் பித்ருக்களின் பொருட்டுப் பிண்ட ப்ரதானம் செய்துவிட்டுச் செல்வதுதான் பொருத்தமானது" என்று ஒரு குட்டிப் பிரசங்கம் செய்தான்.

வஸந்தராம் விஷ்ணுபாதத்துப் புரோகித வர்க்கம் என்பதை நான் முன்பே தெரிந்துகொண்டேன். பொதுவாகத் தீர்த்த க்ஷேத்திரங்களுக்குப் போகும் சமயங்களிலெல்லாம் யாத்திரிகர்களை மடக்கிப் பேரம் பேசி வியாபாரம் செய்யும் தீர்த்தப் புரோகிதர்களைக் கண்டால் ஒதுங்கிக் கொள்வது என் வழக்கம். ஆகவே கயை க்ஷேத்திரத்துக்குப் போனபோதும் வஸந்தராமை வழிகாட்டியாக மாத்திரம் வைத்துக்கொண்டு தப்பித்துக்கொள்ளவேண்டு மென்றுதான் தீர்மானித்திருந்தேன். ஆனால் சந்தர்ப்பம் கிடைத்தபோதெல்லாம் வஸந்தராம் தன் அண்ணன் ஒரு புரோகிதர் என்பதை ஞாபகப் படுத்திக்கொண்டே வந்தான்!

பாரதத்தில் பல்லாயிரம் ஆண்டுகளாக இந்துக்கள் தமது புனித க்ஷேத்திரங்களாக மதித்துப் போற்றி வரும் ஸ்தலங்களில் ஒன்று கயை க்ஷேத்திரம். கங்கையின் தென் கிளைகளில் ஒன்றாகிய பல்குனி நதியின் கரையிலுள்ளது. வடக்கே இமய மிருப்பதால் நதிகளெல்லாம் அங்கிருந்து ஊற்றெடுத்துத் தாழ்ந்த பிரதேசமாகிய தெற்கை நாடிப் பாய்வதில் அதிசயமில்லை. ஆனால் தெற்கிலிருந்து வடக்கே செல்லும் நதிக்கு ஒரு தெய்விகத் தன்மை கொடுத்து மக்கள் அதிலே

தீர்த்தமாடுவது சிறந்த தென்று கருதுகின்றனர். அதனாலேயே உத்தரவாஹினியாகிய பல்குனியில் தீர்த்தமாடுவது கிடைத்தற்கரிய பேறென்று நம்பப்படுகிறது. கயா க்ஷேத்திரத்துக்கு மதிப்புக் கொடுப்பது அங்குள்ள விஷ்ணுபாதம், அக்ஷயவடம் என்ற இரு பெரும் ஸ்தானங்கள். கயாசுரன் என்ற அசுரன் தேவர்களுக்கின்னல் விளைவித்த காலத்தில் ஈரடியால் மூவுலகளந்த விஷ்ணுமூர்த்தி அவன் தலைமேல் வைத்த பாதமே இன்று விஷ்ணுபாதம் என்று போற்றப் படுகிறது. ஆலிலைமேல் பள்ளி கொள்ளும் அதே மூர்த்தியின் சின்னமாக விளங்குவது அழியாத் தன்மையுள்ள ஆலமரமாகிய அக்ஷய வடம். இந்த இரு இடங்களிலும் பிண்டம் போட்டால் பித்ருக்களின் ஆன்மாக்கள் சாந்தி யடையு மென்பது நம்பிக்கை.

எவ்வளவுதான் சொல்லியும் பல தந்திரங்களை யுபயோகித்தும் வஸந்தராம் என்னை விடுவதா யில்லை. "கயாசிராத்தம் மிகவும் விசேஷமானது. இங்கு சிராத்தம் செய்து பிண்டப் பிரதானம் பண்ணிக்கொண்டால் தங்கள் ஜீவியத்தில் பித்ருக்களுக்கு இதுவரை செய்யாமல் தவறிய சிராத்தங்களுக்கெல்லாம் ஈடு கொடுப்பதுடன், இனிமேலும் தங்கள் வாழ்க்கையில் சிராத்தம் கொடுக்கவேண்டிய அவசிய மில்லை!" என்ற ஒரு பெரிய செய்தியையும் தெரிவித்தான்.

இந்த விளக்கம் என்னைக் கொஞ்சம் சிந்திக்க வைத்தது. எவ்வளவுதான் நவ நாகரிக வாழ்வை மேற்கொண்டாலும் நம் தமிழ் நாட்டுச் சைவப் பண்பாட்டில் பிறந்தவர்களுக்குக் கொஞ்சம் கர்நாடக ஊறல் உடலோடு ஒட்டி யிருக்கத்தான் செய்கிறது. ஆகையால், நான் கயாக்ஷேத்திரத்துக்கு வேறு காரணமாகத்தான் வந்த போதிலும் வஸந்தராம் சொல்வது போல் கயாசிராத்தம் ஒன்று செய்துவிட்டுப் போனால் ஓர் ஆத்ம திருப்தியாவது இருக்கு மென்று என் மனம் இளகிக் கொடுத்தது. அன்றியும் வேறொரு நினைவும் என்னை உறுத்தியது. எனது தந்தை இறந்து பலவாண்டுகளாகியும் எத்தனை தடவை நான் சிராத்தம் பண்ணி யிருக்கிறேன் என்பது எனக்கு ஞாபகமில்லை. ஆகையால் விடுபட்ட ஆண்டுகளுக்கெல்லாம் பிராயச் சித்தமாகவும், இனி வரப்போகிற ஆண்டுகளுக்கு மொத்தமாகவும் கயா க்ஷேத்திரத்தில் வஸந்தராம் சொல்வது போல சிராத்தம் செய்துவிட்டுப் போனால் நல்லது என்று நினைத்தேன்.

வஸந்தராம் மகிழ்ந்தான். ஆனால் செலவு விஷயத்தில் நான் சிறிது கண்டிப்பாகவே சொல்லிவிட்டபடியால், என் கையிருப்புக்குத் தக்கவாறே, கிரியையில் குறைவில்லாமல், ஏற்பாடு செய்து தந்ததற்கு நான் நன்றி செலுத்தவேண்டும். ஆனால், கயா சிராத்தம் ஒரு தடவை செய்துகொண்டால் போதும், வாழ்க்கையில் வேறு

சிராத்தம் பண்ணவேண்டிய அவசியமில்லை யென்று வஸந்தராம் உறுதிமொழி கொடுத்தபோதிலும், மூன்று ஆண்டுகள் கழித்து நான் கயாவுக்கு இரண்டாம் முறையாகப் போனபோதும் அவன் என்னை விட்டுவிடவில்லை! "ஒரு தரம் பண்ணினால் போதும் என்று சொன்னேன். மீண்டும் எதற்கு?" என்று கேட்டேன். அதற்கும் ஒரு பதில் அவன் ஆயத்தமாக வைத்திருந்தான். "தாங்கள் இரண்டாம் முறையாக கயா க்ஷேத்திரத்துக்கு வந்ததே பித்ரு கன்மாக்களுக்குத் தாங்கள் செய்யவேண்டியதில் ஏதோ குறை இன்னும் இருக்கிற தென்பதைக் குறிக்கிறது! ஆகையால், அந்தக் குறையை வைக்காமல் பிண்டப் பிரதானம் செய்துகொள்வதுதான் நல்லது" என்று சொன்னான். அதிலிருந்தும் தப்பித்துக்கொள்ள முடியவில்லை!

கயாக்ஷேத்திரத்தின் மகிமை எப்போதிருந்து ஆரம்பித்தது என்று நிச்சயமாகக் கூற முடியாவிட்டாலும் மிகவும் புராதனமான ஒரு க்ஷேத்திரம் என்பதில் சந்தேகமில்லை. இல்லாவிட்டால் சித்தார்த்த கௌதமர் அங்கே தவத்தை நாடிப் போயிருக்கமாட்டார். அவரைச் சேர்ந்த பஞ்ச பிக்ஷுக்களும் சென்றிருக்கமாட்டார்கள். வேதவேள்விகள் நடத்திய காசியபர் ஆயிரம் சீடர்களுடன் அங்கே வசித்திருக்கமாட்டார். இந்துக்களுக்குப் புனிதமான இந்த க்ஷேத் திரம் முகம்மதியர் படையெடுப்புக் காலத்தில் காசி முதலிய மற்றைய க்ஷேத்திரங்களைப் போல் பெரிதும் பாதிக்கப்பட்டது. இந்துக்களும் முகம்மதியரும் மாறி மாறிக் கைப்பற்றி, இப்போது 'பழைய கயா' என்று சொல்லப்படும் பகுதி உருக்குலைந்து, மக்கள் குடியிருந்த போதிலும், இருண்ட நகரமாகக் காட்சி யளிக்கிறது. மேல் நாட்டில் அதென்ஸ், நேபிள்ஸ், வெனிஸ் நகரங்களைப் போன்ற பழைய போர்வை போர்த்திருக்கக் கண்டேன். முன்னொரு காலத்தில் கோயில் எப்படி யிருந்ததோ தெரியாது, ஆனால் இன்று விஷ்ணு பாதக் கோயில் சந்துகளுக்குள்ளே மறைந்து, காசி விஸ்வநாதர் ஆலயத்தைப் போல், முஸ்லிம் படையினரின் கொடுமைக்குப் பயந்து போலும், ஒதுங்கி யிருக்கிறது. அந்தப் பேரரசி குவாலியர் மகாராணி அனுசூயாபாய் கைங்கரியத்தால் ஓரளவு கோயிலாகவே இன்றும் காட்சி யளிக்கிறது.

கயா க்ஷேத்திரம் முழுவதும் மொத்தம் நாற்பத்தெட்டு இடங்களில் பிண்டம் போடப்படுகிறது. ராம குண்டம், சீதா குண்டம், அனுமான் குண்டம் என்று பல தீர்த்தக் கரைகளிருக் கின்றன. இவையெல்லாவற்றிலும் பிண்டம் போடப்படவேண்டு மென்பது நியதி. கயா க்ஷேத்திரமே பித்ருக்களின் ராஜதானிதான்.

கயா மாவட்டம் முன்பு ஒரு ஜமீனை இருந்தது. மகாராஜா கோபால் சரண் என்பவர் ஆட்சி செய்தார் என்றும், இவர் மிகுந்த செல்வம் படைத்தவர் என்றும் சொல்லப்படுகிறது. இந்தக் குடும்பத்தைப்பற்றி வஸந்தராம் ஒரு ருசிகரமான கதை சொன்னன். கோபால் சரண் ராஜா பாடலிபுரத்துக்குப் பக்கத்திலுள்ள ஒரு ஜமீனைச் சேர்ந்தவர். இவர் தகப்பனர் 'சாத்தணை' ராஜா என்றழைக்கப்பட்டாராம். அதாவது, ஜமீனில் ரூபாய்க்கு ஏழணை வீதம் வரி வசூலித்து வந்தவர். கயாவிலிருந்த ராஜா 'நவாணை' ராஜா – ரூபாய்க்கு ஒன்பது அணை வசூலித்தவர். கயா ராஜாவின் புதல்வியை மணந்து இவர் மாப்பிள்ளையாக வந்ததும் "பதிறணை ராஜா"வாக மாறிவிட்டாராம்!

கயா க்ஷேத்திரத்தி லிருந்து புத்த கயை ஏழு மைல். நல்ல சாலை யிருக்கிறது. இரு பக்கங்களிலும் நிழல் தரும் மரங்கள். நாங்கள் சென்று கொண்டிருந்த எக்கா வண்டி அதிக வேகமாகச் செல்லாவிட்டாலும் பிரயாணத்தில் அலுப்புத் தோன்றவில்லை. பல்குனி நதி பாலாறு போன்று எப்பொழுதும் மணற்பரப்பாகவே காணப்படுகிறது. சில வேளைகளில் மழை யதிகமானால் வெள்ளம் பெருகும் என்று சொல்லக் கேள்வி. ஆனால், எனது இரண்டு தடவைப் பிரயாணத்தின் போதும், (ஒரு ஐப்பசி மாதம், பின்னர் மாசி), அந்த நதியிலே பெரும்பாலும் நீரைக் காணவில்லை.

இடையிடையே சிறு கிராமங்கள், பின்னர் பெரும் சோலைகள். நாடோடிக் குறவர் கூட்டங்கள் இந்தச் சோலைகளின் நிழலிலே பாளையம் அமைத்திருந்தார்கள்.

புத்த கயையை நெருங்கியதும் முதலில் எதிர்ப்படுவது பிரமாண்டமான மதில் சூழ்ந்த ஒரு கட்டிடம். இதுதான் புத்த கயை அதிபதியாகப் பல நூற்றாண்டு காலம் ஆட்சி நடத்தி வந்த ஜீயர் மகா சந்நிதானத்தின் ஆதீன மடம் என்று சொல்லுவார்கள். பௌத்த மதத்துக்கும் இவருக்கும் சம்பந்தமில்லை – உண்மையில் இவர் ஆதி சங்கரரின் பரம்பரையில் வந்த ஜீயர் ஒருவர். ஆனால், சமீப காலம் வரையும் புத்த கயை கோயிலும் சொத்தும் இவரது பூரண ஆதிக்கத்தி லிருந்தது.

அது ஒரு பெரிய கதை.

ஆதி சங்கராச்சாரியார் தமது திக் விஜயத்தின்போது பாரதத்தின் நான்கு கோணங்களில் நான்கு வேதங்களின் பெயர்களிலே மடங்கள் ஸ்தாபித்தார் என்பது யாவருமறிந்த விஷயம். அந்த மடங்களில் அதர்வ வேத மடமான ஜோஷி மடத்தைச் சேர்ந்த சிஷ்ய பரம்பரையில் வந்தவர்கள் ஜீயர்கள். கி. பி. 1590-ஆம் ஆண்டிலே

கோசேன கமந்தி ஜீயர் என்ற சந்நியாசிதான் முதன் முதலில் புத்த கயையில் தமது சீடர்களுக்கென ஒரு மடம் ஸ்தாபித்தவர். இவர் பரம்பரையில் வந்த இரண்டாவது மகா சந்நிதானம் சைதன்னிய ஜீயர் 1644-ல் சமாதி யடைந்தபோது அவர் உடல் புத்த கயையி லுள்ள பௌத்த விஹார மிருக்கும் தோட்டத்திலேயே அடக்கம் செய்யப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. இந்தப் பரம்பரையில் வந்த நான்காவது ஜீயர் லால் அப்போதிருந்த முகலாய சக்கர வர்த்தி முகம்மத் ஷாவிடமிருந்து மானியமாகப் பெற்ற இரண்டு கிராமங்களில் புத்த கயை விஹார மிருக்கும் கிராமமும் சேர்ந்ததால் அன்று முதல் (1727) இந்த பௌத்த விஹாரமும் ஜீயர் மடத்தின் ஆதீனச் சொத்தாகிவிட்டது. பின்னர் வேறு பல கிராமங்களும் மானியமாகக் கிடைத்து, ஆதீனத்தின் சொத்து கோடிக்கணக்கில் பெருகியது. புத்த கயையிலுள்ள கோயிலின் உள் மண்டபத்தின் மத்தியிலே தாமரை வடிவம் செதுக்கப்பட்ட ஒரு கல் பதிக்கப்பட் டிருப்பதைக் காணலாம். இதனடியில் ஆதி சங்கரர் தமது திக் விஜயத்தின்போது புதைத்து வைத்த ஸ்ரீசக்கரம் ஒன்று இருக் கிறதாக நம்பப்படுகிறது. 'பிரசன்ன பௌத்தர்' என்று சிலரால் அழைக்கப்பட்ட சங்கரர் ஒருவேளை அப்படிச் செய்திருக்கவும் கூடும்! பௌத்தம் மேலோங்கி யிருந்த காலத்தில் அந்த பௌத்தத்தின் தத்துவங்களையே அதை யழிக்கும் ஆயுதங்களாகக் கொண்டு தெற்கிலிருந்து வடக்கு வரையும் திக் விஜயம் செய்து பௌத் தத்தை விரட்டி அத்வைதத்தை அவர் நிலைநாட்டினர் என்ற செய்தியை யாவரும் அறிவர்.

1891-ஆம் ஆண்டிலே இலங்கையி லிருந்து பௌத்த க்ஷேத்திரங் களுக்கு யாத்திரை செய்த அநகாரிக தர்மபாலா என்பவர் மகா போதி சங்கத்தை ஸ்தாபித்து புத்த கயை விஹாரத்திலே ஒரு புத்த விக்கிரகத்தை வைத்து வழிபடத் தொடங்கினர். ஜீயர் மடத் தாருக்கும் இவருக்கு மிடையில் பல சச்சரவுகள் ஏற்பட்டு நீதி ஸ்தலத்தில் வழக்குகளும் நடந்தன. ஆனால், ஜீயருக்கே அந்த வழக்கு சாதகமாக முடிந்தது. 1922-ஆம் ஆண்டில் கயையில் நடந்த அகில இந்திய தேசிய காங்கிரஸிலும் இந்த உரிமைப் பிரச்சினை எழுந்தது. 1925-ல் காங்கிரஸ் நியமித்த ஒரு விசாரணைக் குழு வினர் புத்த கயை ஆலய நிர்வாகம் இந்துக்களும் பௌத்தர்களும் சேர்ந்த ஒரு கூட்டு நிர்வாக சபையின் பொறுப்பிலிருந்தால் இரு சாராருக்கும் பலனளிக்கும் என்று சிபார்சு செய்தது. 1949-ல் பிஹார் அரசாங்கம் புத்த கயை ஆலய நிர்வாகச் சட்டம் ஒன்றை, மேற்படி சிபார்சின் அடிப்படையில் நிறைவேற்றியது. இதற்கு பாரத

ராஷ்டிரபதி ஸ்ரீ ராஜேந்திர பிரசாத் மிக முக்கியமான முயற்சி யெடுத்து உழைத்தார். 1953-ல் ஜீயர் ஆதீனத்திலிருந்து நிர்வாகம் குறித்த கூட்டுச் சபைக்கு மாற்றப்பட்டது. இதிலே நால்வர் இந்துக்கள், நால்வர் பௌத்தர், அரசாங்கத்தின் உத்தியோகத்தர் ஒருவர் தலைவர். மடாதிபதியாகிய ஜீயரும் இந்துப் பிரதிநிதிகளில் ஒருவரா யிருக்கிறார்.

சித்தார்த்த கௌதமர் உருவில்வா வனத்தின் வெள்ளரசு மரத் தடியில் அந்த வைசாக பூர்ணிமை யிரவிலே சம்மா சம்போதியாகிய ஞானோதயம் பெற்ற சமயத்திலிருந்து இன்று வரையும், இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு மேலாக, அந்தப் புண்ணிய மரம் போதி விருக்ஷம் என்ற பெயருடன் உலகத்து மக்களால் போற்றப்பட்டு வருகிறது. கோடி கோடி பௌத்தர்கள், இலங்கையிலும் பர்மாவிலும் சீயத்திலும் திபேத்திலும் நேபாளத் திலும் சீனத்திலும் ஜப்பானிலு மிருந்து வந்து போதி விருக்ஷத்தைத் தரிசித்துச் செல்லுகின்றனர்.

இந்த மரம் ஆதியில் புத்தர் தவத்துக்கு நிழல் கொடுப்பதற் காகவே அவர் பிறந்த சமயத்தில் தோன்றியது என்பது புராணக் கதை. சரித்திரத்தைப் பார்க்கும்போது ஆதியில் அங்கே யிருந்த மரம் சசங்கன் என்ற அரசனல் வெட்டி யழிக்கப்பட்ட தென்றும், பின்னர் அதன் வேரிலிருந்து மற்றொரு விருக்ஷம் தழைத்தது என்றும் தெரி கிறது. 1870ல் கன்னிங்ஹாம் என்ற தொல்பொருளாராய்ச்சி நிபுணர் சென்று பார்த்தபோது பழைய மரம் விழுந்து கிடக்கக் கண்டு, அந்த ஸ்தலத்திலே மற்றொரு கணுவை நாட்டி வைத்தார். அதுவே இப்போது காணப்படும் மரம். மூல விருக்ஷத்தின் கிளை யொன்றை அசோகன் புதல்வி சங்கமித்திரை ஈழ நாட்டுக்குக் கொண்டுபோய் அனுராத புரத்தில் கி. பி. மூன்றும் நூற்றாண்டில் நாட்டி வைத்தாள் என்று சிங்கள காவியமாகிய மகாவம்சம் கூறுகிறது. அந்த மரம் இன்றும் அழியாமல், இரண்டாயிரம் வருடங்களுக்கு மேலாகத் தழைத்து நிற்பதைக் காணலாம். புத்த சரித்திரத்தின் தொன்மைக்கு அது ஒரு எடுத்துக்காட்டாக நிற்கிறது.

மகாபோதி விருக்ஷத்தின் பக்கத்திலே கௌதம முனிவர் தியானத்திலமர்ந்த தர்ப்பாசனம் அவர் நிர்வாண முத்தி பெறும் சமயத்தில் தேவர்களால் ஒரு வஜ்ராசனமாக நிருமாணிக்கப்பட்ட தென்று ஐதிகம். சுமார் ஏழடி நீளமும் நாலடி அகலமும் மூன்றடி உயரமுமான ஒரு சிலாசனம் இப்போது அங்கே காணப்படுகிறது. இது போதி விருக்ஷத்துக்கும் மகாபோதி விஹாரத்துக்கு மிடையி லிருக்கிறது.

மகாபோதி ஆலயம் என்று இப்போது வழங்கப்படும் கட்டிடம் ஓர் ஆலயமாகவே கருதப்பட்டாலும் உண்மையில் இது ஒரு பௌத்த விஹாரம். ஆதியில் புத்தர் பரிநிர்வாண மடைந்து இருநூறு ஆண்டுகள் கழித்து, பௌத்த தர்மத்தின் உயர் கருத்துக்களை உலகத்துக்கு வழங்கித் தானும் வாழ்ந்து காட்டிய அஹிம்சா மன்னனாகிய அசோக சக்கரவர்த்தி இந்தப் புண்ணிய க்ஷேத்திரத்துக்கு விஜயம் செய்து அங்கு ஒரு சிறிய விஹாரம் கட்டிவைத்தான் என்று சொல்லப்படுகிறது. ஆனால் அது சில வருடங்களில் அழிந்து போயிருக்கவேண்டும். ஏனெனில், கி. பி. ஐந்தாம் நூற்றாண்டில் புத்த கயைக்கு யாத்திரை செய்த பா ஹியன் என்ற சீன யாத்திரிகன் அப்படி யொரு விஹாரம் இருந்ததாகத் தனது குறிப்புக்களில் எழுதிவைக்கக் காணோம். அவனுக்குப் பின் இரு நூறு ஆண்டுகள் கழித்து யாத்திரை செய்த ஹியூங் சியாங் என்ற சீன யாத்திரிகன் குறிப்பிலே விஹாரத்தைப் பற்றிக் கூறப்படுகிறது. இது ஒரு பிராமண சந்நியாசியால் கட்டப்பெற்றது என்று ஹியூங் சியாங் எழுதியிருக்கிறான். அவனுடைய விஹார வருணனை இன்றுள்ள விஹாரத்துக்கு மிகவும் பொருத்தமாயிருக்கிறது. கன்னிங்ஹாம் என்ற நிபுணர் நிச்சயமாக அந்தப் பழைய விஹாரமே இன்றும் நிலைத்திருக்கிறது என்று முடிவுகட்டியுள்ளார். காலப் போக்கிலே பற்பல அரசர்களும் மற்றும் பக்தர்களும் பல திருத்தங்களையும் சேர்க்கைகளையும் செய்து வந்திருக்கிறார்களானாலும் ஏறக்குறைய ஆயிரத்தைந்நூறு ஆண்டுகளாக இந்த விஹாரத்தின் பழைய உருவம் அழியாது காப்பாற்றப்பட்டு வந்தது ஆச்சரியம்தான்.

170 அடி உயரமும் அடித்தளத்தில் 48 அடி சதுரமும் கொண்ட இந்தக் கட்டிடம் இந்தியாவில் வேறெவ்விடத்திலும் காணப்படாத ஒரு விசேஷ சிற்ப அமைதியைக் கொண்டது. குப்தர் காலத்தில் எழுந்த இந்த விஹாரம் பன்னிரண்டு பதின்மூன்றும் நூற்றாண்டுகளில் பர்மிய பௌத்த மன்னர்களின் ஆதரவில் ஒரு புனருத்தாரணமும், பின்னர் 1880-ல் பிரிட்டிஷ் ஆட்சியின்போது ஒரு புனருத்தாரணமும் பெற்றது.

தஞ்சை பிருஹதீஸ்வரர் கோயில் விமானத்தை ஞாபக மூட்டும் இந்த விஹாரம் நாலு பக்கங்களிலும் புத்த விக்கிரகங்களாலேயே அலங்கரிக்கப்பட்டிருக்கிறது. விமானத்தின் நான்கு மூலைகளிலும் நான்கு சிறிய விமானங்கள் எழுப்பப்பட்டிருக்கின்றன. ஆலயத்தின் மண்டபத்தினுள்ளே பர்மியர்கள் உபயமாகக் கொடுத்த புத்த விக்கிரகம் ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது.

★

போதி நிழலிருந்து மாதவம் முடித்துப் பெறற்கரிய மெய்ஞ்ஞானத்தைப் பெற்ற கௌதமர் அந்த ஆனந்த நிலையிலே நெடு நேரம் திளைத்திருந்தார். அப்போது அவருக்கு அந்த இருள் கடிந்த ஞான ஒளியிலே மனித குலம் உய்வதற்கு மார்க்கம் தெரிந்தது. பிறப்பு, பிணி, மூப்பு, சாக்காடு ஆகிய வேதனைகளை யொழிப்பதற்கு வழி பிறந்தது. அறிவாகிய சூரியனை ஆசை என்ற முகில் மறைத்து நிற்பதாலேயே மக்கள் இடர்ப்படுகின்றனர் என்ற உண்மை தெளிவாயிற்று. அவித்யை என்ற அறியாமையே சகல துன்பங்களுக்கும் காரணம் என்பதை யுணர்ந்தார். இந்தப் பேரின்ப நிலையைக் கொடுத்த தியானத்தின் உச்சப்படியிலே வெகு நேரம் தங்கி அதை அனுபவித்தார். அந்த அனுபவ முதிர்ச்சியில் பின்வருமாறு வாய் விட்டு மொழிந்தார்:

அநேக ஜாதி ஸம்ஸாரம் சந்தாவிஸ்ஸம் அநிப்பிஸம்
கஹகாரகம் கவேஸந்தோ துக்கா ஜாதி புனப்புனம்
கஹகாரகா! திட்டோஸி புனகேஹம் ந காஹஸி
ஸப்பா தே பாஸு கா பக்கா கஹகூடம் விஸங்கிதம்
விஸங்கார கதம் சித்தம் தண்ஹாணம் கயம் அஜ்ஜங்கா.

"எண்ணில் பிறவிக ளெடுத்து இந்த உடலாகிய குடிலைக் கட்டிய வனைத் தேடித்தேடி அலைந்தேன். மீட்டும் மீட்டும் பிறவி யெடுப்பது துக்கத்தையே தருவது. இந்தக் குடிலைக் கட்டியவனே! இனிமேல் நீ குடில் கட்ட முடியாது. உனது உத்திரங்களெல்லாம் தகர்ந்து விட்டன. முகட்டு வளையும் அழிந்துவிட்டது. குரம்பை யொழிந்தது. நிர்வாணப் பேற்றை நாடிச் செல்லும் என் சித்தம் வேட்கைகளைக் களைந்துவிட்டது."

இவ்வாறு சர்வஜ்ஞத்துவ ஞானம் பெற்றுப் புத்தராகிய கௌதமர் ஏழு நாட்களாக அந்தப் போதி விருக்ஷத்தி னடியிலேயே தியானத்தி லமர்ந்து தாம் பெற்ற ஆனந்தத்தைப் பற்றிச் சிந்தித்தார். அதற்கடுத்த ஏழு நாட்களும் போதி விருக்ஷத்தின் பக்கத்தில் மேலும் கீழுமாக நடந்துகொண்டே சிந்தித்தார். அந்த இடம் இப்போது 'சங்கமனம்' என்ற பெயரோடு வழங்குகிறது. மகாபோதி ஆலயத்தின் வடக்கு வீதியில் அறுபது அடி நீளத்தில் மூன்றடி உயரத்தில் ஒரு மேடை அமைக்கப்பட்டு, அதன் மீது புத்தரின் பாதங்கள் பட்ட அடையாளமாகப் பல தாமரை வடிவங்கள் பொறிக்கப்பட்டிருக்கின்றன. இதுவே சங்கமனம்.

அதற்கடுத்த மூன்றாவது வாரமாகிய ஏழு நாட்களும் சங்கமனத்துக்குக் கிழக்குத் திசையில் போய் நின்று இமை கொட்டாமல்

போதி விருக்ஷத்தின் அழகைப் பார்த்தவண்ணம் தியானத்தில் நின்றார். அந்த இடத்தை 'அனிமிஷ லோசனம்' என்பர். இப்போது அங்கே ஒரு சிறு சைத்தியம் கட்டி வைத்திருக்கிறார்கள். அதற்கடுத்த நான்காவது வாரத்தில் போதி விருக்ஷத்தின் வடமேற்கே யுள்ள ஒரு ஸ்தலத்தி லிருந்து தியானித்தார். அப்போது அவர் உடலிலிருந்து பொன் மயமான கிரணங்கள் பரவி, நீலம், சிவப்பு, மஞ்சள், வெள்ளை, பொன் ஆகிய ஐந்து நிறங்களாக மாறிப் பின் ஒன்று சேர்ந்தன என்று சொல்லப்படுகிறது. இந்த ஐந்து நிறங்களைக் கொண்டே பௌத்தர்கள் தமது சமயக் கொடியை அமைத்திருக் கிறார்கள். புத்தர் அங்ஙனம் நின்ற இடம் இப்போது 'ரதனகாரம்' என்று சொல்லப்பட்டு அங்கே ஒரு சிறு கட்டிடம் கட்டிவைத்திருக் கிறார்கள்.

ஐந்தாவது வாரத்தில் புத்தர் நைரஞ்சனை நதியைக் கடந்து போய் சுஜாதை தமக்குப் பால் பாயசம் கொடுத்தருளிய அஜபால ஆல மரத்தடியில் உட்கார்ந்து தியானம் செய்தார். இந்த ஆலமரம் இருந்த இடத்திலே இப்போது போய்ப்பார்த்தோம். பற்றை படர்ந்த ஒரு மேடு மாத்திரம் காணப்படுகிறது. அந்தக் கிராமத்தை, சுஜாதை குடியிருந்த பகுதியென்று ஞாபகப்படுத்த இப்போதும் சுஜாதகூடம் என்று சொல்வார்கள். நாற்புறமும் கோதுமையும் பயறும் கடலையும் விளையும் நல்ல செழிப்பான நிலம் காணப்படுகிறது.

ஆறுவது வாரத்தில் ராஜாயதனம் என்ற மற்றொரு ஆல மரத்தின் நிழலில் உட்கார்ந்து தியானம் செய்தார் என்றும், ஏழாவது வாரத்தில் மேலும் ஓர் இடத்திலே தியானத்தி லிருக்கையில் கடும் மழை பெய்ததாகவும், அதைக் கண்ட முசலிந்தன் என்ற நாகம் புத்தரைப் பாதுகாக்க அவர் உடலைச் சுற்றி வளைந்து தலைக்கு மேல் படம் விரித்துக் குடையாக நின்றதாகவும் சொல்லப்படுகிறது.

இவ்வாறு புத்தர் நாற்பத்தொன்பது நாள் பலவித தியானங் களில் இருந்துவிட்டுக் கண் விழித்தபோது, உத்கலம் என்ற ஒரிஸா தேசத்திலிருந்து கயாவை நோக்கி வந்த திரிபுஷன், பல்லிகன் என்ற இரு வணிகர் புத்தரைக்கண்டு அவர் இளைத்துப் போயிருந்ததைப் பார்த்துத் தேனமுது கொடுத்து வணங்கினர். பாத்திர மில்லாது வெறுங்கை கொண்டு பிச்சை யேற்பது முறையாகா தாகையால் புத்தர் அந்தச் சமயத்தில் என்ன செய்வதென்று யோசித்துக் கொண்டிருக்கும்போது தேவர்கள் மனமுவந்து கல்லிலே செய்த ஒரு பிக்ஷாபாத்திரத்தைக் கொடுத்தனர். புத்தர் அதிலே வணிகர் கொடுத்த அமுதை வாங்கி உண்டு மகிழ்ந்தார். அந்த இரு வணிக ரையும் புத்தர் ஆசீர்வதித்தபோது அவர்கள் வணங்கி, புத்தரையும்

அவர் தருமத்தையும் சரணடைவதாக, "புத்தம் சரணம் கச்சாமி, தம்மம் சரணம் கச்சாமி" என்று புகழ் பெற்ற திரி சரணங்களில் இரு சரணங்களை ஓதிப் புத்தரின் முதலாவது சீடர்களானார்கள் என்று சொல்லப்படுகிறது.

ஆனால், அவர்கள்தான் முதல் சீடர்களா, அல்லது புத்தர் அவர்களுக்கு அந்தச் சமயத்தில் ஏதாவது உபதேசம் செய்தாரா என்பது கேள்விக்கிடமானது. ஏனெனில், அவர் தருமோபதேசம் செய்வதற்கு முன்பு பலவித சந்தேகங்களைக் கொண்டிருந்தார் என்றும், மக்கள் தம்முடைய உபதேசத்தை ஏற்றுக்கொள்வார்களா என்று சிந்தித்தார் என்றும் சொல்லப்படுகிறது.

புத்தர் தமது ஞானோதயத்தில் பெற்ற நித்தியானந்தம் சாதாரணமாக எவராலும் சொல்லித் தெரிந்து கொள்ளத்தக்க ஆனந்தமல்ல ஒருவர் தம் சொந்த முயற்சி கொண்டு தவமிருந்து பெறவேண்டியது. அன்றியும், அந்த ஞானோதயத்தின் பேருக அறிந்துகொண்ட உண்மையும் சாதாரண மக்களால் கிரகித்து விளங்கிக்கொள்ளத் தக்கதல்ல. ஆகையால், புத்தர் முதலிலே சிறிது சந்தேகப்பட்டார்: "நான் பெற்ற அனுபவத்தையும் உண்மையையும் பொதுமக்களுக்கு எடுத்துச் சொன்னால் அவர்கள் நம்புவார்களா? ஏற்றுக்கொள்வார்களா? அவர்கள் அதை விளங்கிக்கொள்வதற்கு அல்லது ஏற்றுக் கொள்வதற்குத் தகுந்த மனப்பக்குவ முள்ளவர்களா?" இந்தச் சந்தேகம் அவரை வாட்டியது. அவரே சொல்கிறார்:

> "எளிதாக அறிந்துகொள்ளவோ உணர்ந்து கொள்ளவோ முடியாததும், சாதாரண அறிவுக்கு அப்பாற்பட்டதும், சாந்தி நிலையிலுள்ளதுமான மகா உன்னதமான தத்துவத்தை நான் பெற்றுவிட்டேன். சிந்தனையை இயக்கி ஆராய்ந்து தத்துவ ரீதியாகக் கண்டுகொள்ளப்பட வேண்டிய இந்தச் சத்திய மார்க்கத்தை ஞானிகளும் அறிவு நிறைந்த மகான்களுமே எளிதில் உணர்ந்து கொள்ளலாம். லோகத்திலுள்ள மனிதர்களோ பற்றுக்களால் சூழப்பட்டிருப்பதால் அந்தப் பற்றைத் துறந்து காரணகாரிய ஞான ஆராய்ச்சி செய்ய அவர்கள் அகங்காரம் இடமளிக்காது.* அன்றியும் நான் இந்தத் தருமத்தை உபதேசித்தும், மக்கள் அதனை விளங்கிக் கொள்ள முடியாவிட்டால் அது எனக்குச் சலிப்பைத் தரும்; விரக்தியே யுண்டாகும். ஆகையால், நான் மிகவும் அரிதில் பெற்ற தத்துவ போதத்தை, காமம், வெகுளி, மயக்கம் என்ற பற்றுக்களால் சூழப்பட்ட உலகத்துக்குப் போதிக்கவே வேண்டாம் என்று தீர்மானித்தேன்."

*மணிமேகலை 10: 7, 30: 7, பார்க்க.

இங்ஙனம் புத்தர் தாம் ஆறு வருட காலம் அருந்தவ மிருந்து பெற்ற பேரறிவை, காரணகாரிய ஞானம் என்ற தத்துவத்தை, உலக மக்களுக்கு அறிவுறுத்துவதற்குத் தயங்கினர். அந்தச் சமயத்தில் மஹா பிரம்மா என்ற தேவர் தோன்றி வேண்டிக்கொள்ளாதிருந்தால் புத்தருடைய தவத்தின் பெருமையும், அவர் கண்ட ஞானமும் தரும மார்க்கமும் இந்த உலகத்துக்கே பயன் பட்டிருக்க முடியாது.

உலகில் தர்மம் குன்றி அதர்மம் மேலோங்கி நிற்கும் சமயங் களி லெல்லாம் தேவர்கள்தான் மனித குலத்தை மீட்பிக்க முன் வருபவர்கள். அன்று கிருஷ்ண பரமாத்மா அர்ஜுனன் மூலமாகத் தர்மத்தை நிலைநாட்ட வந்தார். அதே போன்று பகவான் புத்தர் மூலமாக மஹா பிரம்மா உலகத்தில் தர்மத்தைப் பரப்ப முன் வந்தார். "சுகதரே, உலகத்தில் தர்மம் குறைந்துவிட்டது. அதர்மம் பெருகிவிட்டது. இச்சமயத்தில் தாங்கள் மௌன விரதம் மேற்கொண்டால் என்ன வாகும்? தங்கள் தத்துவத்தை யுணரக் கூடிய தவசிரேஷ்டர்கள் சிலர் இன்னும் உலகத்தில் இருக்கிறார்கள். தங்கள் அறவுரையை அவர்கள் கேட்காவிட்டால் அந்தச் சில பக்குவ சீலரையும் உலகம் இழந்துவிடப் போகிறது," என்று மஹா பிரம்மா சொல்லி, மேலும், "மகத நாட்டு மக்களிடையே புராதன காலத்திலிருந்து மாசு படிந்த, பரிசுத்தமற்ற சித்தாந்த மொன்று பரவியுள்ளது. ஆகையால் அந்த மக்களின் மனமாசு தீர உண்மையும் பரிசுத்தமும் நிறைந்த தங்கள் தர்மத்தைப் போதித்தருள வேண்டும்." என்றார்.

மத்யம நிகாயம் என்ற பௌத்த பிடகநூலில் காணப்படும் இக்கூற்று சிறிது அளவு கடந்த வாதமாகத்தான் படுகிறது. மகத நாட்டில் வெறுப்புக்கொண்ட யாரோ ஒரு தடித்த பௌத்த சித்தாந்தி பிரம்மனின் வாயால் இதைச் சொல்லிவிட வேண்டு மென்று பிற்காலத்தில் இடைச் செருகல் செய்திருக்கவேண்டும்.

புத்தர் காலத்திலே மகதநாடு சாங்கியர்களும் யோகாச்சாரியர் களும் ஜைனரும் நிறைந்த நாடாய், அந்தச் சித்தாந்தங்கள் செழித்து வளர்ந்தன என்பதில் சந்தேகமில்லை. மகதத்தில் பிம்பிசாரனுக்குப் பின் அஜாதசத்துரு ஜைனத்தையே ஆதரித்து வந்ததாகவும் வரலாறு காணப்படுகிறது. அதன் காரணமாக மகதநாடு அஞ்ஞானம் நிறைந்த நாடென்றும், அந்த நாட்டு மக்களுக்குத்தான் முதலிலே மாசு துடைக்க வேண்டுமென்றும் அக்காலத்து பௌத் தர்கள் நம்பியிருக்கலாம்.

உண்மையில் கௌதம புத்தர் அவ்வாறு ஒரு அபிப்பிராயம் வைத்திருந்ததாகவே தெரியவில்லை. அவர் சந்தேகமெல்லாம்,

சாதாரண மக்களின் அறிவு நிலைக்கு அப்பாற்பட்ட ஒரு தத்துவத்தை எப்படி எடுத்துச் சொல்லி விளங்க வைப்பது என்பதுதான்.

மஹா பிரம்மாவின் வேண்டுகோளைக் கேட்டதும் புத்தர் உலக மக்களின்மீது கருணைகொண்டு தமது ஞானக் கண்ணால் சுற்று முற்றும் பார்த்தார். அல்லற்படும் உயிரினங்கள் யாவற்றையும் விடுவிக்கவேண்டு மென்ற காருண்ணியம் அவர் உள்ளத்தில் பதிந்தது. அன்றியும், தவ சிரேஷ்டர்களாயுள்ளவர்கள் இன்னும் சிலர் உலகத்தில் வாழ்வதால் அவர்களுக்குத் தருமத்தை யுபதேசித்து அவர்கள் மூலமாய் உலகத்தில் பரவச் செய்யலாம் என்றும் தெரிந்தது. எனவே, பிரம்மாவின் விருப்பப்படியே அவருக்கு வாக்குக் கொடுத்துவிட்டு, "எனது சத்திய மார்க்கத்தை எவருக்கு முதலில் உபதேசிக்கலாம்" என்று ஆலோசிக்கலானர்.

தமக்கு இராஜகிருகத்தில் முதலிலே தியான மார்க்கத்தைத் தெளிவுபடுத்திய ஆலாரகாலாமரைப் பற்றி நினைத்தார். "அறிவிலும் ஆற்றலிலும் தவத்திலும் நிகரற்றவர் அந்த மகான். அவருக்கு நான் பெற்ற அனுபத்தைச் சொன்னல் விரைவிலே கிரகித்துக்கொள்வார்" என்று சிந்தித்தார். ஆனல், மறுகணமே, ஆலாரகாலாமர் இறந்து ஏழு நாட்களாகி விட்டன என்று தெரியவந்தது. ருத்ரக ராமபுத்திரர் என்ற மற்றொரு குருவைப்பற்றி எண்ணிப் பார்த்தபோது அவரும் காலமாகிவிட்டார் என்று தெரிந்தது. ஆகையால், தவவொழுக்கத்தில் சிறந்த வேறு யாரிடம் சென்று உபதேசிக்கலாம் என்று யோசித்துப் பார்க்கையில், முன்பு உருவில்வா வனத்தில் தமக்குச் சகல விதத் திலும் பணிகள் பல செய்து தவத்தில் பங்கமில்லாமல் நடந்து கொண்ட பஞ்ச பிக்ஷுக்களைப்பற்றிய ஞாபகம் வந்தது. அவர்களே இதற்குரியவர்கள் என்று முடிவு செய்துகொண்டு, அவர்கள் அச்சமயம் வாரணசியை யடுத்த ரிஷிபதனத்தில் வசித்துக்கொண் டிருப்பதை ஞானதிருஷ்டியில் உணர்ந்து கௌதமர் உருவில்வா விலிருந்து வாரணசியை நோக்கி நடக்கலானர்.

★

மற்றைய பௌத்த க்ஷேத்திரங்களைப் போலல்லாது புத்த கயை யாத்திரிகர்களுக்கான எத்தனையோ புதிய வசதிகளைக்கொண் டிருக்கிறது. பர்மியரும் சீனரும் திபேத்தியரும் இங்கு அழகான மடங்கள் கட்டி வைத்திருக்கிறார்கள். அரசாங்கத்தின் கணக்கிலேயும் மிக நவின முறையில் தங்குமிடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. ஆனல் சாதாரணமாக இந்த அரசாங்க நிலையங்களில் தங்குவதென்றல் பகீரதப் பிரயத்தனம் வேண்டும். ஆதி முதலிலே இங்கு மடம்

ஸ்தாபிக்கவும் யாத்திரிகர்களின் வசதியைக் கவனிக்கவும் முற்பட்டவர் இலங்கையைச் சேர்ந்த பிக்கு தர்மபாலர். இவர்தான் மகாபோதி சங்கத்தை ஸ்தாபித்தவர்.

கயா க்ஷேத்திரத்திலேயே மகாபோதி மடம் ஒன்றிருக்கிறது. அதைத் தவிர புத்த கயையிலும் ஒன்று கட்டப்பட்டிருக்கிறது. நாங்கள் அங்கு சென்ற சமயத்தில் சில சிங்கள பௌத்த சந்நியாசிகள் அந்த மடத்தை நல்ல முறையில் நடத்தி வரக் கண்டோம். அங்குள்ள வாசிக சாலையைப் பார்வையிட்டுக்கொண்டிருந்தபோது ஒரு வயது சென்ற பிக்ஷு என் அருகில் வந்து மிகவும் அடக்கத்தோடு, "தாங்கள் என்ன பாஷை பேசுபவர்கள்?" என்று கேட்டார். நான் தமிழ் பேசுவன் என்று தெரிவித்தவுடன் அவர் முகம் மலர்ந்தது. "எனக்கும் கொஞ்சம் தமிழ் பேச வரும்" என்று புன்முறுவலுடன் தெரிவித்துவிட்டு அவர் அழகான தமிழில் தொடர்ந்து சம்பாஷித்தார். இவரும் தமிழ் நாட்டவர்தாமே என்று நான் சந்தேகித்தபோது அவரே விளக்கினர்: "நான் சிங்கள நாட்டைச் சேர்ந்தவன். ஆரம்பத்தில் நான் கற்ற பிராசீன பாடசாலையில் பாலி, சம்ஸ்கிருதம், சிங்களம், தமிழ் ஆகிய நான்கு பாஷைகளையும் கற்றேன். பின்னர் சென்னையிலுள்ள மகாபோதி மடத்தில் சில வருடங்கள் தங்கி யிருந்தபோது தமிழ் பாஷையைச் சுமாராகக் கற்றுக்கொண்டேன். அதனால்தான் இப்போது பேச முடிகிறது" என்றார். 'சுமாராகக் கற்றுக்கொண்டேன்' என்று அவர் சொன்னதற்கென்ன, தமிழிலே பாண்டித்தியம் நிறைந்தவர் அவர் என்பதைப் பின்னால் தெரிந்துகொண்டேன். அவர்தான் தமிழ் மொழியில் பல நூல்களை யெழுதிய பிக்கு சோமாநந்தர். சென்னையில் பல காலம் வாழ்ந்தவர். சில நிமிஷ நேரம் பேசிக்கொண்டிருந்த பின் அந்த பிக்ஷு மிகவும் அன்போடு, "விருந்தினராக வந்திருக்கும் தங்களுக்கு நான் என்ன கொடுக்கலாம்? சிறிது தேநீர் தயாரித்துத் தரட்டுமா?" என்று கேட்டார்.

இந்த உபசரணை என்னை அப்படியே தூக்கிவாரிப் போட்டது. ஒரு பௌத்த சிரமணன்; கிருகஸ்தர்களிடம் பிச்சை வாங்கி உண்ண வேண்டிய ஒரு சந்நியாசி; எனக்கு அவரே தேநீர் தயாரித்துக் கொடுப்பதா! இது நான் முன் பின் கண்டு கேட்டறியாத அதிசயமாகத் தோன்றியது. எனது திகிலைத் தெரிந்துகொண்டு சோமாநந்தர் முக மலர்ச்சியுடன், "இந்த வடநாட்டுச் சாப்பாடு எனக்கு அவ்வளவாகப் பிடிக்கிறதில்லை. ஆகையால், மடத்துச் சாப்பாட்டை உட்கொள்ளாமல் நானேவே சமையல் செய்து சாப்பிட்டுக்கொண்டிருக்கிறேன். வாருங்கள் எனது சிறு குடிலுக்கு. ஒரு சின்னச்

சமையலறைதான் வைத்திருக்கிறேன்" என்று சொல்லி எங்களை அழைத்துக்கொண்டு போனார். மண்ணெண்ணெய் 'ஸ்டவ்' அடுப்பு ஒன்றை ஏற்றினார். அதிலே தேநீர் தயாரித்து எங்களுக்கு அன்போடு வழங்கி விருந்தோம்பலின் பெருமையைக் காண்பித்தார்.

இந்தக் காலத்தில் பௌத்தத்தின் பெயரில் வழங்கும் ஒழுக்கத்தைப் பற்றி நாமெல்லாரும் அறிவோம். பௌத்த சங்கத்தின் சீலத்தைப் பற்றியும் அறிவோம்.

"தர்மத்தைப் பயிலுங்கள், அது நற்கதியைத் தரும். இந்தத் தர்மத்தில் என்ன அடங்கியுள்ள தென்றால்: பாவச் செயல்களை நீக்கவேண்டும், உத்தமமான செயல்களையே பெருக்கவேண்டும். ஈகை, தயை, தூய சிந்தனை, வாய்மை யாகிய குணங்களை வளர்க்கவேண்டும். இதுவே தர்மத்தின் பொருள்."*

இதைவிட மேலான விளக்கம் பௌத்த தர்மத்தைப்பற்றி வேறெந்த நூலிலும் காண முடியாது. அந்த உண்மையான தர்மச் சரியத்திலே ஒழுகி வருபவர் சோமாநந்த பிக்ஷு என்று நான் உவகை கொண்டேன். கருணையே உருவமான அந்த பிக்ஷுவுடன் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டு நான் விடைபெற்றுக் கொண்டு கயாவுக்குத் திரும்பினேன். அங்குள்ள மகாபோதி மடத்துச் சந்நியாசியிடமும் சொல்லிக்கொண்டு காசிக்கு ரயிலேறி னேன். வழித்துணை நண்பன் வஸந்தராமும் கூடவே வந்தான்

---

*அசோகன் கல்வெட்டு - தோப்ரா கற்றூண்.

பதினைன்காம் அத்தியாயம்

கங்கா ஸ்நானம்

உருவில்வாவி லிருந்து காசியை நோக்கிச் சென்ற புத்தர் சற்று தூரம் கடந்து கயா நகரத்தை யடைந்தபோது உபகர் என்ற ஆஜீவக மதத் துறவி ஒருவரைக் கண்டார். இளம் வயதுடைய அந்த ஆஜீவக சந்நியாசி புத்தரின் சாந்த நடையையும் அவர் முகத்தில் வீசிய பேரொளியையும் கண்டு இந்த சிரமணன் சாதாரண துறவியாக இருக்க முடியாது. யாரோ பெரிய தபசியிடம் சித்துக்களைப் பெற்றிருக்கவேண்டும். முகத்தைப் பார்த்தாலே சித்தர் என்பது தெரிகிறது என்று எண்ணிக்கொண்டு புத்தரை யணுகி, "நண்பரே, உமது முகத்தைப் பார்த்தால் தெளிவும் சாந்தமும் நிறைவும் காணப்படுகிறது. நீர் எத்தகைய மதத்தைக் கடைப் பிடித்து வருகிறீர்? யார் உமது குரு?" என்று கேட்டார்.

புத்தர் நிமிர்ந்து உபகரைப் பார்த்து, "நான் சர்வத்தையும் விட்ட துறவி. காமம் வெகுளி மயக்கம் முதலிய பற்றுக்களி லிருந்து விடுபட்டவன். இத்துறவின் பேருக நான் உள்ளொளி பெற்றேன். மகா ஞானம் பெற்றேன். நானே சர்வஜ்ஞன். எதற்காக எனக்கு ஒரு குரு வேண்டும்? நானே சம்மா சம்போதி ஞானம் பெற்ற, எனக்கு நிகர் வேறொருவர் இல்லாத, முதல்வன். எனது ஞானானுபவத்தின் விளைவாக நான் ஆராய்ந்து கண்ட தத்துவார்த்தங்களை உபதேசிக்க இப்போது காசியை நோக்கிச் செல்லுகின்றேன்" என்றார்.

இந்தப் பதில் ஆஜீவகத் துறவி உபகரைச் சிந்திக்க வைத்தது. "இதுவரை காலத்திலும் எத்தனையோ துறவிகளைச் சந்தித்திருக் கிறேன். ஆனால் எந்த ஒரு சிரமணராவது இவ்வாறு தற்பெருமை யுடன் பேசியதை நான் அறியேன். இந்தச் சந்நியாசியோ தனக் குவமை யில்லை யென்று இறுமாப்புடன் வாதாடுகிறார்" என நினைத் துக்கொண்டு சிறிது ஏளனம் தொனிக்க, "ஓகோ! அப்படியானால் உமது சித்தாந்தத்தின்படி நீரே மகாவீரர் ஸ்தானத்தை யெட்டி விட்டீரோ?" என்று கேட்டார். புத்தர் அதற்கு, "மகாவீரர் எனப் படுவோர் யாவருமே பற்றுக்களி லிருந்து விடுபட்ட மெய்ஞானிகள். ஆகையால் நான் மகாவீரர்தான்" என்றார்.

உபகர் ஆச்சரியத்தோடு புத்தரைப் பார்த்தார். இப்படிப் பேசும் ஒருவருடன் சம்வாதம் செய்வது எவ்வித பயனையு மளிக்கப்

போவதில்லை யென்று கண்டார் போலும், உடனே சந்தர்ப்பத்துக்குத் தக்கவாறு, "ஒருவேளை அப்படியு மிருக்கலாம். அதோ இருக்கிறது உங்கள் வழி! நான் போவது எதிர்த் திசை" என்று உருவகமாகச் சொல்லிவிட்டு நடந்தார்.

புத்தர் காலத்திலும் அதற்குப் பின் அனேக ஆண்டுகளாகவும் வைதிகம், பௌத்தம், ஜைனம், ஆஜீவகம், சாங்கியம் முதலிய சமயக் கொள்கைகளிடையே வாதப் பிரதிவாதங்கள்தான் முக்கிய அம்சமாக விளங்கியது. 'மாறு கொண்டலையு மதிநூற் கடல் கிளர் சமயக் கணக்கர்கள்' தத்தம் மதங்களை நிலைநாட்டப் பாடுபட்ட காலம் அது. ஆகையால்தான் உபகர் என்ற ஆஜீவகத் துறவியும் புத்தரை வாதுக் கிழுத்தார். புத்தரின் பதில் தர்க்க முறைக்கு அப்பாற்பட்டதா யிருக்கவே வழியைக் காண்பித்துவிட்டு அப்பாற் சென்றார். ஆனல், புத்தர் தம் தத்துவத்தை மற்றவர்கள் இலகுவில் அறியமாட்டார்கள் என்று முதலிலே சந்தேகம் கொண்டது இப்பொழுது கைம்மேற் பலனை நிரூபிக்கப்பட்ட போதிலும் அவர் தமது பழைய சகாக்களாகிய பஞ்ச பிக்ஷுக்களைத் தேடிச் சென்ற காசி யாத்திரையைக் கை விடவில்லை.

★

கங்கை தோன்றிய போதே காசியும் தோன்றிற்றே என்னவோ, சரித்திர காலத்துக்கு முன்பிருந்தே வாரணசி என்ற காசி மிகப் புகழ்பெற்ற க்ஷேத்திரமாக விளங்கி வருகிறது என்பதில் சந்தேக மில்லை. வேதங்கள் பிறந்த காலிலிருந்தே காசி மாநகரம் வைதிகப் பண்பாட்டுக்குத் தலைமைப் பீடமா யிருந்து வந்திருக்கிறது. எண்ணில் பல்லாயிரம் ஆண்டுகளாகவே இந்த சிவ க்ஷேத்திரத்தில் வேதகோஷம் ஒலித்துக்கொண் டிருக்கிறது. மணி முடிகள் பல சரிந்தன; அரசுகள் கை மாறின. ஆனல், கங்கையும் காசியும் என்றும் போல் இன்றும் அசையா நிலையைப் பெற்று விளங்கு கின்றன. தவசிரேஷ்டர்களான ரிஷிகள் பலர் உறைவிடமா யிருந்தது காசி. யோகிகள் பலர் இருந்தனர். தத்துவ போதகர் களும் காவிய சாஸ்திர வியாகரணப் புலவர்களும் காசியி லிருந்து கலை பரப்பினர். சரித்திர காலத்தில் புத்தர் தமது தருமோபதேசத் தைச் செய்யத் தேர்ந்தெடுத்த க்ஷேத்திரம் காசி. வைதிக தர்மத்தைப் புனருத்தாரணம் செய்ய ஆதிசங்கரர் தேர்ந்தெடுத்த க்ஷேத்திரம் காசி. சைதன்னியரும் துளசிதாஸரும் குமரகுருபரரும் கபீரும் குருநானக்கும் - வாழையடி வாழையாக வந்த மெய்ஞானிகள் யாவரும் ஆத்ம தாகம் தீர்க்கச் சென்றடைந்த க்ஷேத்திரம் காசி.

தெய்வ நதியாகிய கங்கை மத்திய இந்தியாவில் வந்து உத்தர வாஹினியாக வடக்கே திரும்பும் ஒரு வளைவிலே, அந்தப் பெருங் கங்கையின் மேற்குக் கரையிலே, குடிகொண்டுள்ளது காசி. வடக்கில் வாரணம் என்ற கிளை நதியும் தெற்கில் அசி என்ற நதியு மிருப்ப தால் வாரணசி என்ற பெயர் பெற்றுள்ளது. பிறவி என்னும் பெருந் துன்பத்தை விட்டு நீங்கப் பாடுபடும் மக்கள் காசியில் இறக்க நேர்ந்தால் அவர்களுக்கு மறு பிறவியில்லை யென்றும், முத்தி யடை வார்களென்றும் ஒரு நம்பிக்கை. ஆன்மகோடிகளனைத்துக்கும் முத்தி யின்பத்தை யருளும் ஸ்வயம்பு லிங்கமாகக் காட்சி கொடுக்கும் விஸ்வ நாதரும், விசாலாக்ஷியம்மையும், நித்திய உணவளிக்கும் தேவி அன்னபூரணியும் எழுந்தருளியிருக்கும் க்ஷேத்திரம் காசி.

சைவத்தின் பெரு நிதியமாய் விளங்கிய காசி இடைக்காலத்தில் வழிப்பறி கொள்ளை செய்த கொடுங்கோல் மன்னர்கள் பலரின் கவனத்தில் விழுந்தது ஆச்சரியமல்ல. கி. பி. பதினோராம் நூற்றாண்டிலே காஸ்னி முகம்மது என்ற முகலாய மன்னன் காசியை அடிமைப்படுத்தி அங்கு சந்ததி சந்ததியாக ஆட்சி புரிந்த இந்து மன் னர்களை விரட்டிவிட்டுப் புனித ஆலயங்களை யெல்லாம் தகர்த்தெறிந் தான். அதற்குப் பின் குத்புடின் என்பவனும், அவனுக்குப் பின் அவுரங்கஸீபும் தமது கைவரிசையைக் காண்பித்தனர். அவுரங்க ஸீப் காலத்திலேயே, கி. பி. 1669-ல், விஸ்வநாதர் ஆலயம் தரை மட்டமாகியது. அவுரங்கஸீப் இறந்தபின் அயோத்தியி லிருந்த சாடத் அலிகான் என்ற மன்னனிடம் காசி சேர்ந்தது. அதன் பின்னரே இந்து மன்னரிடம் பழையபடி கை மாறியது.

கயாவிலிருந்து நான் ரயிலேறிக் காசிக்குப் போய்ச் சேரும் போது இரவு பத்து மணிக்குமேலாகிவிட்டது. புகழ் பெற்ற தீர்த்த ஸ்தலமா யிருப்பதாலும் லக்ஷக் கணக்கான யாத்திரிகர்கள் நாள் தோறும் காசிக்கு விஜயம் செய்வதாலும் அங்கே யாத்திரிகர் தங்க வசதிக் குறைவே கிடையாது. ஹோட்டல்கள் பல; ஆலை சத்திரங்களும் மடங்களும் சகலவித வசதிகளோடு ஏராளமா யிருக்கின்றன. கயாவிலிருந்து என்னுடன் கூட வந்த வஸந்தராம் ஸ்டேஷனிலிருந்து ஒரு சைக்கிள் ரிக்ஷா பிடித்து நேரே தசாஸ்வமேத கட்டம் என்ற இடத்துக்குப் பக்கத்திலுள்ள ஒரு சத்திரத்துக்கு அழைத்துச் சென்றான். இரண்டொரு பெரிய சாலைகளைத் தவிர மற்றும்படி காசியில் ஜனப்போக்கு வரத்துக்காக இருப்பவை சந்துகள்தான். இவையே பழைய காலத்து வீதிகள். நான்கு அல்லது ஐந்தடி அகலமுள்ள இந்தச் சந்துகள் வளைந்து வளைந்து எலி வளைபோல் நகரம் முழுவதும் பரவி யிருக்கின்றன. சந்துகளா

யிருப்பதற்கென்ன இரு பக்கங்களிலு மிருப்பவை உப்பரிகைகள். மிகவும் பழங் காலத்துக் கட்டிடங்கள். ஆயிரக்கணக்கான ஆண்டு களாக மக்கள் நடந்து சென்று நடைபாதையில் பதித்திருந்த கற்க ளெல்லாம் தேய்ந்து போய்க் காணப்படுகின்றன. எத்தனை நாள்தான் காசியில் குடியிருந்தாலும் இந்தச் சந்துகளின் சரியான வழியை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள முடியாது.

தசாஸ்வமேத கட்டத்திலிருந்து ஒரு சந்தில் நுழைந்து வளைந்து வளைந்து சென்று ஈற்றில் ஆற்றங்கரையை யடுத்துள்ள ஒரு பிரமாண்டமான கட்டிடத்துக்கு வந்தோம். அங்கே நின்ற ஒரு தீர்த்தப் புரோகிதர் வஸந்தராமைக் கண்டவுடன் நட்புரிமை பாராட்டி எங்களை அன்புடன் வரவேற்றார். சாதாரணமாகத் தீர்த்தப் புரோகிதர்களென்றால் இராமேஸ்வரத்தையும் திருச்செந்தூரையும் நாம் ஞாபகப்படுத்திக்கொள்ளலாம். ஆனால் காசியில் எங்களை வரவேற்ற கங்காபுத்திரர் என்ற காசிப் புரோகிதர் பரம்பரையைச் சேர்ந்த "ராம்குமார்ஜி கிருஷ்ணஜி" ஒரு மடிசஞ்சியாகக் காட்சி யளிக்கவில்லை. ஒரு பெரிய பண்ணையார் போலக் காட்சியளித்தார்! அவர் குடியிருக்கும் வீடு பல தட்டுக்களையுடைய மாளிகை. அண்ணன் தம்பிமார்களோடு கூட்டுக் குடும்பம். கண்ணைப் பறிக்கும் மின்சார விளக்குகளும், மின்சார விசிறிகளும் மற்றும் இத்தியாதி நவீன உபகரணங்களும் நிறைந்திருந்தன. இந்த மாளிகைக்குப் பக்கத்திலே தான் அவருடைய சத்திரம் – பழைய காலத்து அன்னக்காவடிகளுக்கு ஏற்பட்ட சத்திரமல்ல – நவீன வசதிகளுடன் நாகரிக மனிதர் தங்குவதற்கான வீடு.

எங்களைக் கண்டவுடன் அழகிய தமிழில் பேசி வரவேற்றார். நெடுங்காலமாக அவர் அப்பா காலத்திலிருந்தே தென்னகத்துத் தமிழ் யாத்திரிகர்களுடன், முக்கியமாக நாட்டுக்கோட்டை நகரத்தார்களுடன் தொடர்பு வைத்துக்கொண்டு, அவர்களின் பணத்தைக்கொண்டே செல்வாக்கடைந்து பிரயாணிகள் இளைப்பாறத் தங்குவதற்கென்று ஒரு சத்திரமும் கட்டிவைத்திருக்கிறார்.

காசியில் எத்தனை நாள் தாமசம் என்று விசாரித்துவிட்டு அவர், "ரயில் பிரயாணத்தில் களைத்துப்போய் வந்திருப்பீர்கள். சௌகரிய மாகப் படுத்து உறங்குங்கள். நாளைக் காலையில் பார்க்கிறேன்" என்று சொல்லி முன்னெச்சரிக்கையாக இரண்டு துண்டுப்பிரசுரங்களை என் கையில் கொடுத்து வைத்தார். ஒன்று "ஸ்ரீ காசி மஹா யாத்திரை பூஜா அனுஷ்டான விதி" என்ற தலைப்பில் ஒரு நீண்ட பட்டியல். காசி தீர்த்த சம்பிரதாயத்தைப் பற்றி அறிவதற்கு இந்தப் பிரசுரம் மிகவும் ருசிகரமான தகவல்களைத் தருகிறது. "ஆத்ம கர்ம, பிதுர்

கர்ம சங்கல்பவிதிகள், பிண்ட கர்மானுஷ்டானத்தில் நடத்தவேண்டிய கோதானம், தசதானம், அன்னதானம், சாளிக்கிராம தானம்" முதலிய தானங்கள், நித்திய யாத்திரை என்று சொல்லப்படும் "விஸ்வேஸம் மாதவம் துண்டீம், தண்டபாணிம்ச பைரவம், வந்தே காசிம் குஹாம், கங்காம் பவானிம் மணிகர்கணிகா" என்ற பத்துத் தெய்வ தரிசனங்கள், இன்னும் எத்தனையோ கருமங்கள் அடங்கிய இப்பத்திரத்தின் இறுதியில், "மேற்சொன்ன பிதுர் கர்மங்களையும் தெய்வ தரிசனங்களையும் புண்ணிய தீர்த்த ஸ்நானங்களையும் மந்திரோபதேசத்துடனும் பூஜா அனுஷ்டான விதிப்படியும் நிறைவேற்றி வைக்கும் புரோகிதப் பிராமணர்கள்..." என்று சொல்லி மேற்படி நண்பரின் பெயர் குறிப்பிடப்பட்டிருந்தது.

நன்றாகப் படித்துப் பார்த்தேன். விவரங்களைத் தெரிந்து கொண்டேன். ஆனால், பத்திரத்தில் "விலைவாசிகள்" மாத்திரம் குறிப்பிடப்படாமலிருந்ததால் கொஞ்சம் யோசனையாகவே யிருந்தது!

இதற்கு அடுத்த இரண்டாவது பிரசுரத்தைப் படித்தேன். சிறிது நீளமான பத்திரம். காசி யாத்திரை செய்ய வருபவர்களுக்கு இலவசமாக ஆலோசனை கூறும் இந்தப் பிரசுரத்தின் ஓரிடத்தில் பின் வரும் முக்கியமான ஒரு குறிப்புக் காணப்பட்டது:

"காசியாத்திரை செய்ய வரும் புண்ணியசீலர்கள் மடத்திலிறங்கி காசியில் செய்யவேண்டிய கிரியைகளை ஒழுங்காக மணிகர்ணிகா கட்டத்தில் யதாசக்திப் பிரகாரம் சௌகர்யம்போல் முடித்துக் கொண்டு சகல புண்ணிய ஸ்தலங்களையும் தரிசித்துக்கொண்டு ஊருக்குத் திரும்புவீர்களாக."

இதிலே "யதாசக்திப் பிரகாரம்" என்ற வார்த்தைகள் என் மூளையைத் துளைத்தன. கோதானம், தசதானம், அன்னதானம், சாளிக்கிராம தானம் என்றெல்லாம் பிண்டகர்மானுஷ்டானத்துக்குத் தானங்களை விதித்துவிட்டு, யதாசக்திப் பிரகாரம் என்று குறிப்பிட்டிருப்பதுதான் எனக்கு விளங்கவில்லை! யதாசக்தியின் கீழெல்லையென்ன? இந்த விலை வாசிகளைப்பற்றி மறுநாட்காலைதான் எத்தனையோ விவரங்கள் அறிந்துகொண்டேன்.

மற்று மொரு புதிய செய்தி இந்தத் துண்டுப் பிரசுரத்தின் மூலம் தெரியவந்தது. காசியிலே பண்டைக்காலம் தொட்டுத் தமிழ் நாட்டுப் புரோகிதர்கள் தீர்த்தக் கிரியைகள் செய்துகொண்டு வருகிறார்கள். முக்கியமாகத் தென்னாட்டு யாத்திரிகர்களே இந்தக் கிரியானுஷ்டானங்களில் மிக்க அக்கறை கொள்பவர்களாகையால் தெற்கே யிருந்து பல பிராமணர்கள் அங்கே போய்க் குடியேறியிருந்து தமிழ் நாட்டவர்களின் தேவைகளை நிறைவேற்றி

வருகிறார்கள். குறித்த துண்டுப் பிரசுரத்தில் "தக்ஷிண தேசத்திலிருந்து வரும் யாத்திரைக்காரர்களுக்கு விசேஷ அறிக்கை" யென்ற தலைப்பில் பின் வரும் எச்சரிக்கை காணப்பட்டது:

"ஸ்ரீ காசி க்ஷேத்திரத்தின் கண்ணுள்ள அறுபத்துநான்கு கட்டங்களில் பிரதானமானது மணிகர்ணிகா கட்டம். இம் மணிகர்ணிகா கட்டத்திலே காசியில் செய்யவேண்டிய சகல கிரியைகளையும் செய்வது உத்தமம். இந்த கட்டத்தில் சிராத்தம், பிராயச்சித்தம் முதலியவைகள் செய்துவைக்கத் தீர்த்தப் புரோகிதர்களாகிய கங்கா புத்திரர்களுக்கே அதிகாரமுண்டு. காசியில் அனுமான், கேதார கட்டங்களில் புரோகிதர்களென்று பேர் வைத்துக் கொண்டிருக்கும் தக்ஷிண தேசத்துப் பிராமணர்கள் போலிப் புரோகிதர்களே யொழிய, அவர்களுக்கு மணிகர்ணிகா கட்டத்திலோ அல்லது அறுபத்துநான்கு கட்டங்களில் எதிலோ யாதொரு கிரியையும் செய்து வைக்க அதிகாரம் கிடையாது. தீர்த்த யாத்திரைக்காக வந்து ஸ்வதேசாபிமானத்தால் ஏமாறவேண்டாம். ஆகையால் சகல கிரியைகளும் மணிகர்ணிகா கட்டத்தில் தீர்த்தப் புரோகிதர்களாகிய கங்கா புத்திரர்களைக்கொண்டு செய்வித்துக்கொண்டு காசி யாத்ரா கங்கா ஸ்நான பலன்களை யடைவீர்களாக!"

இந்த எச்சரிக்கை என்னை அவ்வளவாகப் பாதிக்கவில்லை. மறுநாள் இதற்கும் விடை தெரிந்தது.

காசி நகரத்தில் பகல் பொழுதைவிட இராப் பொழுதுதான் மிகவும் கலகலப்பாகவும் உற்சாகமாகவு மிருக்கும். வருஷம் பன்னிரண்டு மாதங்களும் ஒரே திருவிழாக் காட்சிகள் இந்த க்ஷேத்திரத்தின் அழகைப் பொலியச் செய்யும். "ஏழு நாட்களில் ஒன்பது விழா" என்பது காசியில் ஒரு சம்பிரதாயம். இதனால் நகரவாசிகள் இரவு நேரம் முழுவதும் தெருவாசலில் வெற்றிலை போட்டுக் கொண்டு களிப்புற்று வாழ்வது வழக்கம். காசி மக்கள் வெற்றிலை மடித்துச் சாப்பிடுவதே ஒரு தனிக் கலை.

நாங்கள் காசிக்குப் போன சமயத்தில் அங்கு "ராம் லீலா" என்ற விழா நடந்துகொண்டிருந்தது. இராமாயணத்திலுள்ள காட்சிகளைத் தெருவுக்குத் தெருவாகத் திறந்த வெளி அரங்குகளில் நடிப்பதும் நடிகர்கள் விநோதமான உடை யுடுத்து ஊர்வலம் வருவதும் இந்த விழாவின் விசேஷம். அக்டோபர் முதல் பிப்ரவரி முடிய ஐந்து மாதங்களும் தினந்தோறும் இந்த விழா நடந்துகொண்டிருக்கும். நாங்கள் போன அன்றிரவு கலகலப்பாயுள்ள வீதிகளையும் கடைத் தெருக் களையும் சுற்றிப் பார்க்கலா மென்று கிளம்பியபோது எதிர் பாராத விதமாக இந்த ராம் லீலாக் காட்சிகளைப் பல தெருக்கோடி

களில் பார்க்கக் கிடைத்தது. அன்று நடந்த விழாவுக்கு 'நாக் கட்டையா' என்று பெயர்—சூர்ப்பணகையின் நாசியை லக்ஷ்மணன் அறுத்த படலம். இந்த அற்புதமான தெருக்கூத்தைப் பார்த்துவிட்டு இரவு வெகு நேரம் கழித்தே சத்திரத்துக்குத் திரும்பினேம்.

தென்னிட்டிலுள்ள நமக்குக் காசி யாத்திரை செய்வதென்றால் வாழ்க்கையில் கிடைத்தற்கரிய ஒரு பேறாகக் கருதப்படும். ஆனால், பௌத்த யாத்திரையில் சென்ற நான் காசிக்கும் போகக் கிடைத்த சந்தர்ப்பத்தை நழுவவிடலாகாது என்று மனத்துக்குள் தீர்மானித்துக் கொண்டேன். மறுநாட்காலை வஸந்தராம் ஜாடையாக 'பிதுர்கர் மானுஷ்டான'த்தைப்பற்றி ஞாபக மூட்டினான். ஒன்று, அவனே கொஞ்சம் வைதிகப் பேர்வழி ; மற்றது, காசிப் புரோகிதர் அவனது நண்பர். ஆனால், என் போக்கைப்பற்றியும் கொள்கையைப்பற்றியும் வஸந்தராம் நன்றாகத் தெரிந்துகொண்டு விட்டானாகையால் கிரியை விஷயத்தை 'யதாசக்திப் பிரகாரம்' முடித்துக்கொள்ளலாம் என்று குறிப்பாகச் சொல்லிவைத்தான்.

இருவரும் 'மகா பண்டிதர், மடாதிபதி ராம்குமார்ஜீ கிருஷ்ணஜீ' அவர்கள் முன்னிலையில் ஆஜரானேம். மிகவும் விசாலமான ஓர் ஆபீஸ் அறையில் திண்டுகள் சூழ்தர உட்கார்ந்திருந்தார் அவர். இரண்டு மூன்று கையாட்கள் கை கட்டி வாய் புதைத்து அவர் உத்தரவுகளுக்காகக் காத்திருந்தனர். கணக்குப் பிள்ளை ஒருவரின் பக்கத்திலே நூற்றுக் கணக்கில் பேரேடுகளும் தினக்குறிப்புக்களும் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. எங்களை வரவேற்ற கங்கா புத்திரர் என் ஊர்ப் பெயரைக் கேட்டார். யோசித்தோ யோசிக்காமலோ சிலோன் என்று சொல்லிவிட்டேன்! "அப்படியா? அடிக்கடி நம்ம சிலோன் நண்பர்கள் இங்குதான் வருவார்கள். அவர்கள் யாவரும் மணிகர்ணிகா கட்டத்திலேதான் பிதுர்கர்மானுஷ்டானங்களைச் செய்து போவார்கள்" என்று சொல்லிக்கொண்டே பக்கத்திலிருந்த ஒரு பேரேட்டை எடுத்துப் பக்கங்களைப் புரட்டினர். "அவரைத் தெரியுமா, இவரைத் தெரியுமா" என்று மிகவும் பிரபலமான பல சிலோன் நண்பர்களின் பெயர்களையெல்லாம் கேட்டார். பேரேட்டையே என் முன் வைத்து, "சும்மா பாருங்கள்" என்று கேட்டுக் கொண்டார். ஆர்வம் காட்டிக்கொள்ளாமலே நானும் பேரேட்டைப் புரட்டிப் பார்த்தேன். என் கண்களையே என்னால் நம்ப முடியவில்லை! எனக்கு அறிமுகமான பல நண்பர்கள், பெரிய மனிதர்கள், மற்றவர்களின் பெயர்களெல்லாம் அதில் காணப் பட்டன. பெயரும் விலாசமும் மாத்திரம் இதில் முக்கியமல்ல, அவர்கள் பெயருக்கெதிராக அவர்கள் செலவழித்த தொகைகளும்

தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருந்தன. இருநூற்றைம்பது, முந்நூறு, ஐந்நூறு, ஆயிரம், இரண்டாயிரம்—இந்த வகையைச் சேர்ந்தன அத்தனை தொகைகளும்! எனக்குக் கொஞ்சம் திகிலுண்டாயிற்று. அந்த இடத்திலிருந்து எப்படித் தப்பிப் போவதென்று சிந்தனை. சீட்டுப் புத்தகத்தைத் தமக்கு முன்னால் வைத்துக்கொண்டே, என் பெயர் விலாசமெல்லாம் பதிவதற்கு ஆயத்தமாயிருக்கிறார் கங்கா புத்திரர். கடைசியில், "இவர்கள் பெயர்கள் பல எனக்கு முன் பின் பழக்கமில்லாதவை. நான் சாதாரணமாக சமூகத்தோடு அதிகம் பழகாதவன்" என்று கங்காபுத்திரரிடம் சொல்லி, "சிறிது நேரம் கழித்து வந்து பார்க்கிறேன்" என்று கூறிவிட்டு எழுந்திருந்தேன்.

வெளியே வந்தபோது வஸந்தராமிடம் நான், "என்ன வஸந்தராம், இதெல்லாம் பெரிய இடத்து விஷயம் போலிருக்கிறதே?" என்று கேட்டேன். அவன் சிரித்துக்கொண்டே, "கவலைப்படாதீர்கள். யதாசக்திப் பிரகாரம்தானே எல்லாம் நடக்கவேண்டும்? உங்கள் 'பட்ஜெட்' நிலைமையை என்னிடம் சொல்லுங்கள், அதற்கேற்றுப் போல் முடித்துக்கொள்வோம்" என்றான். "மூன்று ரூபாய்தான் என்னுடைய பட்ஜெட்," என்றேன் நான். வஸந்தராம் ஒருவேளை கோபித்துக்கொள்வானே என்று நினைத்தேன்! மூன்று ரூபாய் எங்கே, பேரேட்டில் கண்ட நூறு, ஆயிரம் எங்கே! ஆனால் அவன், "பேஷாகச் செய்வோம்! இதோ கொடுங்கள் என்னிடம் ரூபாயை. நான் பார்த்துக்கொள்ளுகிறேன்" என்று சொல்லி மூன்று ரூபாயையும் வாங்கிக்கொண்டு புரோகிதரிடம் போனான். "ஞாபக மிருக்கட்டும். சகலமும் அதற்குள் அடக்கம்" என்று நான் வஸந்தராமுக்குச் சொல்லியனுப்பினேன்.

சற்று நேரம் கழித்து ஆச்சரியப்படத்தக்கவிதமாகச் சகல காரியங்களும் திட்டப்படி நடந்தன! கிரியைக்கான சாமான்கள், தக்ஷிணைக்கான சில்லறை, தானத்துக்குச் சில பொருள்கள் எல்லாம் வந்து சேர்ந்தன! மணிகர்ணிகா கட்டத்தில் கங்கா ஸ்நானம் செய்து கொண்டபின் பிதுர்கர்மானுஷ்டானங்கள் நடைபெற்றன. ஆனால், கங்கா புத்திரர் தக்ஷிணதேசத்துப் பிராமணர்களை நம்ப வேண்டாம் என்று துண்டுப் பிரசுரத்தில் எச்சரிக்கை செய்ததற்கென்ன, அவர் சம்பளத்திலே வேலை பார்க்கும் ஒரு தஞ்சாவூர் சாஸ்திரிகளே என்னுடைய காரியத்தைக் கவனித்தார்! இல்லாவிட்டால் தென்னாட்டு யாத்திரிகர் அவ்வளவாக வாடிக்கைக்காரராவார்களா? அதுவே வியாபார தந்திரம்.

சங்கல்பங்கள் யாவும் முடிந்தன. சாஸ்திரிகள் கொஞ்சம் அதிக நேரமாகவே என் பொருட்டாகச் செலவழித்தார். ஒன்றிலும்

குறை வைக்கலாகா தென்பது அவர் நோக்கம். ஈற்றில் ஆசீர்வாத சுலோகத்துடன் அதே தொனியில் ஒரு தமிழ் சுலோகம் வந்தது "ஏதோ தஞ்சாவூர்ப் பிராமணன் கேட்கிறான், யதாசக்திப் பிரகாரம் மத்தியான்னப் போஜனத்துக்கு ஒரு தக்ஷிணை கொடுத்தால் தேவலே!" இது என் இதயத்தைத் தொட்டது. ஒரு முழு ரூபாயை உள்ளன்போடு அவர் கையில் வைத்துவிட்டு எழுந்திருந்தேன். அந்த அனுபவத்தை என்றும் மறக்க முடியாது.

காசியிலே பல தீர்த்தங்க ளிருப்பினும் பஞ்ச தீர்த்தங்களில் ஸ்நானம் செய்வது மிக உத்தமம் என்று சொல்லப்படுகிறது. அந்தப் பஞ்ச தீர்த்தங்களாவன:

முதலாவது அசி சங்கமம். இது அசி நதி கங்கையுடன் சங்கம மாகு மிடம். மகா புண்ணிய ஸ்தலம் என்று கருதப்படும்.

இரண்டாவது, தசாஸ்வமேத கட்டம். இது மிகவும் பிரசித்த மான இடம். ஆயிரக்கணக்கிலே பக்தர்கள் கூடி கங்கையில் ஸ்நானம் செய்வதையும் ஆத்ம கர்ம பிதுர்கர்மானுஷ்டானங்கள் நடைபெறுவதையும் காலை வேளையில் மணிக்கணக்காக இங்கு நின்று கவனிக்கலாம். மாலை நேரங்களில் ஆற்றில் மிதக்கும் படகுகளிலே பஜனைக் கோஷ்டிகளைக் காணலாம். மோட்டார் படகுகளை வாடகைக் குப் பிடித்துக்கொண்டு கங்கையில் ஊர்ந்து காசியின் மகோன்னத மான காட்சியை அனுபவிக்க இந்த தசாஸ்வமேத கட்டமே சிறந்த இடம். பிரமதேவன் பத்து அசுவமேத யாகங்களை இந்த இடத்திலே செய்ததாக ஐதிகம்.

மூன்றுவது, மணிகர்ணிகா கட்டம். இது வரிசைக்கிரமத்தில் மூன்றுவதாகக் கருதப்பட்டாலும் பஞ்ச தீர்த்தங்களில் மிகவும் உத்தமம் என்று கொள்ளப்படுகிறது. இங்குள்ள சக்கர தீர்த்தம் என்ற தீர்த்தக் கிணறு ஆதியில் மகாவிஷ்ணு தமது சக்கராயுதத் தைக்கொண்டு தோண்டி வைத்தார் என்றும் அதில் சாக்ஷாத் பரமசிவனே தோன்றி மோக்ஷ க்ஷேத்திரமாகப் புனிதப்படுத்தினர் என்றும், அப்போது சிவனுடைய குண்டலங்களில் ஒன்று கீழே விழுந்ததாகவும் அதனாலே இது 'மணிகர்ணிகா' என்ற பெயரைப் பெற்றதாகவும் கதை. சக்கரதீர்த்தத்தின் நீரிலே மகாவிஷ்ணுவின் திருவதனத்தைக் காணலாம் என்றும் சொல்லப்படுகிறது. இதற்கு அயலிலே ஒரு மயான பூமி யுள்ளது. ஜாதி இந்துக்களின் பிரேதங் கள் இங்கு தகனம் செய்யப்படுகின்றன.

பஞ்ச தீர்த்தங்களில் நான்காவது தீர்த்தம், பஞ்ச கங்கா தீர்த்தம் என்று சொல்லப்படுவது. கங்கையின் ஓரிடத்தில் தூதவாபி, தர்ம நதி, கிரணநதி, சரஸ்வதி என்ற நான்கு அதல நதிகளும் வந்து கங்கையோடு சங்கமமாகு மிடமென்பது ஐதிகம்.

ஐந்தாவது தீர்த்தம் வாரணம் என்ற கிளை நதி கங்கையுடன் சங்கமமாகு மிடம்.

காசியிலுள்ள தீர்த்த கட்டங்கள் அறுபத்துநான்கில் தென்னாட்டவர்கள் அபிமானத்தை அதிகம் பெற்றிருப்பது கேதார கட்டம் என்பது. கி. பி. பதினேழாம் நூற்றாண்டின் மத்தியில் குமரகுருபர ஸ்வாமிகள் துறவு நிலை பெற்று காசியில் தங்கியிருந்தபோது இந்த கேதார கட்டத்திலேயே காசி மடம் என்ற ஆதீனத்தை ஸ்தாபித்தார். அதுவே இப்போதுள்ள திருப்பனந்தாள் மடத்து ஆதீனம். அந்நாளில் அரசாண்ட அவுரங்கஸீப் மன்னனிடம் குமரகுருபரர் ஒரு சிங்கத்தின் மீதேறிச் சென்று காட்சி யளித்தார் என்றும், மன்னன் பல மானியங்களை வழங்கினன் என்றும் சொல்லப்படுகிறது. தமிழ் நாட்டுக் கோயில்களில் நடைபெறுவது போன்று இங்குள்ள கேதாரேஸ்வரர் ஆலயத்திலும் சிவாகம முறைப்படி இன்றும் நித்திய பூஜைகள் நடைபெற்று வருகின்றன. காசி விஸ்வநாதர், அன்ன பூர்ணை தேவி, விசாலாக்ஷி தேவி ஆலயங்களெல்லாம் சந்துகளினிடையேயுள்ளனவாகையால் தென்னாட்டுக் கோயில்களைப்போல அவற்றின் பூரண அழகையும் பொலிவையும் பார்க்க முடியாது. விஸ்வநாதர் ஆலயத்தின் விமானத்தை மாத்திரம் ஆலயத்தின் பின் பக்கத்திலுள்ள ஒரு வீட்டின் மாடிச் சாளரம் வழியாகப் பார்க்கவும் படம் பிடிக்கவும் ஒரு சிறு பையன் எனக்கு வழி காட்டித் தந்தான். பழைய கோயில் அவுரங்கஸீப்பின் வெறிக்கு இலக்காகித் தகர்க்கப்பட்ட பின் இந்தூர் மகாராணி அகல்யாபாய் 1774ல் புதிதாகக் கட்டுவித்தார் என்பது சரித்திரம். பஞ்சாப் ராஜா ரஞ்சித் சிங் என்பவர் இதன் விமானத்தைப் பொன் கொண்டு வேய்ந்து வைத்தார். நித்தியம் இந்த ஆலயத்துக்கு வரும் அடியார் கூட்டம் சுமார் பதினாயிரம் பேர் இருக்கும். இங்கு நடைபெறும் மூன்று காலப் பூஜை நாட்டுக் கோட்டை நகரத்தார் என்ற செட்டியார் மக்கள் ஆரம்பித்து வைத்தது. இன்றும், மாலை வேளையில் நடைபெறும் அபிஷேகமும் பூஜையும் அவர்கள் உபயமாகவே நடைபெற்று வருகிறது.

விஸ்வநாதர் ஆலயத்துக் கணித்தாய் 'ஞானவாபி' என்ற தீர்த்தக் கிணறு காணப்படுகிறது. இந்தக் கிணற்றிலேதான் விஸ்வநாதர் ஆலயத்தினுட் பிரதிட்டை செய்யப்பட்டிருக்கும் காசி லிங்கம் கண்டெடுக்கப்பட்டது. இது ஸ்வயம்பு லிங்கம் என்று சொல்கிறார்கள்.

★

அன்று மாலை காசி விஸ்வநாதர் ஆலயத்துக்குச் சென்று தரிசனம் செய்துவிட்டு, சந்துக்குச் சந்தாகவுள்ள கடைவீதிகளைச் சுற்றிப்

பார்த்தபோது வேறு ஏதோ புதுமையான லோகத்தில் சஞ்சரிப்பது போன்ற உணர்ச்சிதான் ஏற்பட்டது. ஜகஜ்ஜோதியான மின்சார விளக்குகள் அடுக்கடுக்காகப் பிரகாசித்துக்கொண்டிருக்கப் பூமிக்கடியில் குடைந்தெடுத்த அதலச் சாலைகள் வழியே நடமாடுவது போன்றிருந்தது. இக் கடைவீதிகளில் விற்பனைக்கிருக்கும் பொருள்களைப் பற்றிச் சொல்லி முடியாது. விபூதி, குங்குமம், ருத்திராக்கம், காசிக் கயிறு, சாளிக்கிராமம் முதல் விளையாட்டுப் பொம்மைகள், பட்டுக்கள், அடுக்களைத் தட்டுமுட்டுச் சாமான்கள் வரை சகல பண்டங்களும் கடைகளிலே பெருவாரியாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன, இந்தச் சந்துக் கடைவீதிகளின் வழியாகச் சுற்றிச் சுற்றி நடந்து வந்தபோது ஒரு பெரிய சாலையின் முகப்புக்கு வந்தேன். அதுவே 'சவுக்' என்று வழங்கப்படும் அரிச்சந்திர பஜார் என்று என் கூட வந்த வஸந்தராம் விளக்கினன். காசிக்கும் சத்திய விரதனுகிய அரிச்சந்திரனுக்கு முள்ள தொடர்பை யார்தான் அறியமாட்டார்கள்? அந்த அரிச்சந்திர மன்னன் தன் மனைவியை ஏலம்போட்டு விற்ற ஸ்தலமே இப்போது 'அரிச்சந்திர பஜார்' என்று வழங்குகிறதாம். கங்கைக் கரையில் அவன் காத்த மயானத்தில் இப்போது தாழ்ந்த வகுப்பு மக்களின் பிரேதங்கள் எரிக்கப்படுகின்றன.

அரிச்சந்திர பஜாரின் பக்கத்திலே ஒரு சிறிய கடைத்தெரு. பட்டு வியாபாரத்துக்குப் பெயர் போன இடம். மாலை வேளையில் அந்தத் தெருவில் நெசவாளர் கூட்டம் கூட்டமாகக் கையில் துணி மூட்டை கொண்டு சென்றனர். கைத்தறியில் அவர்கள் நெய்த பட்டுக்களையும் ஜரிகைப் புடைவைகளையும் கடைத்தெருவில் விற்பதற்காகக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று தெரிந்துகொண்டேன். மொத்த வியாபாரிகளே இந்த நெசவாளரிடம் நமக்குத் தேவையான புடைவைகளை ரூபாய்க்கு ஓர் அணு கமிஷன் வைத்துக்கொண்டு வாங்கித் தருகிறார்கள்.

காசி நகரத்தின் கடைத் தெருவைச் சுற்றிப் பார்ப்பதே ஒரு தனி அனுபவம். காசிக்குச் சென்ற ஞாபகத்துக்காக, காசிக் கயிறும், காசிக் குங்குமமும், காசி 'முண்டு'ம், ருத்திராக்க மாலையும் வாங்கிக்கொண்டு நானும் திரும்பினேன்.

பதினைந்தாம் அத்தியாயம்

சக்கரம் சுழன்றது

போதி மாதவப் பெருந்தகை யாளராகிய புத்தர் பகவான் கயா க்ஷேத்திரத்திலிருந்து காசிக்கு வந்து சேர்ந்தார். காசிக் கருகே யுள்ள ரிஷிபதனம் என்ற இடத்தில் எண்ணற்ற தவ சிரேஷ்டர்கள் வசித்து வந்தனர். சாக்கிய முனிவரோடு உருவில்வா வனத்தில் சகவாசம் செய்து, பின்னர் அவரைப் பிரிந்து வந்த பஞ்சவர்க்கீய பிக்ஷுக்கள் ஐவரும் ரிஷிபதனத்திலேயே மெய்ஞானம் தேடித் தவமிருந்து வந்தனர். அவர்களையே மறுபடியும் தமது சீடர்களாகத் தேடிவந்தார் புத்தர்.

மாலை யிளவெயிலில் தன்னந்தனியே ஒருருவம் வெகு தூரத்தில் நடந்து வருவதைக் கண்ட பிக்ஷுக்கள் ஐவரும் அந்த உருவந்தான் தமது பழைய நண்பர் என்பதைச் சுலபமாக அறிந்துகொண்டனர். "உருவில்வாவை விட்டு கௌதம முனி ரிஷிபதனத்துக்கு வரவேண் டிய காரணமென்ன? துறவு மார்க்கத்துக்கே விரோதமான முறையில் நடந்துகொண்டவர் இங்கே ரிஷிபதனப் பள்ளிகளில் எவ்வாறு காலம் கழிக்கப் போகிறார்?" என்று அவர்கள் சிந்திக்கும்போது புத்தர் அன்றிராப் பொழுதைக் கழிப்பதற்காகப் பக்கத்திலுள்ள ஒரு சோலை யில் நுழைவதைக் கண்டனர்.

அன்றிரவு பஞ்ச பிக்ஷுக்களும் கௌதம முனிவரைப் பற்றியே ஆலோசிக்கத் தொடங்கினர். "இந்த கௌதமர் ஒருவேளை நம்மை நோக்கி நாளைய தினம் வரக்கூடும். நமது பழைய உறவை நாடி நம்முடன் சம்பாஷிக்க வந்தால் ஒரே முகமாக நாம் அவரைத் திரும்பி யும் பாராமல் உட்கார்ந்திருக்கவேண்டும். ஆசனத்தை விட்டெழுந்து மரியாதை செலுத்தவும் கூடாது. வா என்று கூட ஒரு வார்த்தை பேசலாகாது. துதாங்க அனுஷ்டானங்களை அறவே துறந்து வழி தவறிய இந்த பிக்ஷுவுக்கு என்ன வரவேற்பு?"

பஞ்ச பிக்ஷுக்களில் முதன்மையானவர் கௌண்டின்னியர். அவரது ஆலோசனைப்படியே யாவரும் நடந்துகொள்ளச் சித்தமா யிருந்தனர்,

பொழுது விடிந்தது. அன்று ஆடிப் பூரணை. பிக்ஷா பாத்திரத் தையும் கையிலெடுத்துக்கொண்டு ரிஷிபதனத்துக் கருகாமையி லுள்ள கிராமத்தில் கௌதமர் கருணையே உருவமாக நடந்து

சென்றார். வெகு விரைவிலேயே பாத்திரம் நிறைந்துவிட்டது. ஒதுக்கமான ஓரிடத்தில் மர நிழலில் உட்கார்ந்து அமுதுண்ட பின்னர் தியானத்தி லமர்ந்தார்.

மாலை வந்தது. ரிஷிபதனத்தில் என்று மில்லாத ஓர் அமைதி குடிகொண்டது. அந்த அமைதியிலேயே கதிரவனை எதிர்பார்த் திருக்கும் தாமரைக் கண்ணி போன்று ரிஷிபதனத்திலே ஒரு துடிப்பு நிலையும் காணப்பட்டது.

பிக்ஷுக்கள் ஐவரும் உட்கார்ந்திருந்த திசையை நோக்கி வந்தார் புத்தர். அவர்கள் மனம் இருநிலைப்பட்டிருந்தது. நேற்றுச் செய் திருந்த தீர்மானத்தின்படி நடப்பதா வேண்டாமா என்று சிந்திக்கத் தொடங்கினர். அதற்குள் சமீபத்திலே வந்த கருணைமூர்த்தியின் வதனத்திலிருந்து படர்ந்த அன்புக் கதிர்களினால் அவர்கள் ஆகர்ஷிக் கப்பட்டு விரைவிலே எழுந்து நின்று யாவரும் ஒரு சிறந்த ஆசனம் அமைத்து வைத்து இரு கரம் கூப்பியவாறே, "ஆயுஷ்மான் பவதி, கௌதம சோதர!" என்று வாழ்த்தினர்.

பகவான் அவர்கள் உபசாரத்தை ஏற்றுக்கொண்டவராய், பிக்ஷுக்கள் தமது அருகத் நிலையை அறிந்துகொள்ளவில்லை யென்று சொன்னார்: "பிக்ஷுக்களே! நான் வரும் பொழுது உங்கள் மனத்தி லெழுந்த போராட்டங்களை யெல்லாம் அறிவேன். இப்போது உங்கள் முன் வந்திருப்பது பழைய கௌதமனல்ல. என்னை நீவிர் இன்று முதல் சோதர என்றோ நண்ப என்றோ அழைத்தலாகாது. நான் தேடிய மெய்ஞானம் எனக்குக் கிடைத்துவிட்டது. நான் சம்போதி ஞானம் பெற்ற ததாகதர்."*

மேலும் அவர் தொடர்ந்து சொன்னார்: "ஞான ஏணியில் ஏறி உச்சிப்படியை யடைந்தவரே ததாகதர். சம்பூர்ண மெய்ஞானம் பெற்றவர் அவர். அழிவற்ற நிலை கிடைக்கப்பெற்றதால், பிக்ஷுக் களே! அந்த தர்மத்தை உங்களுக்கு உபதேசித்து அறவுரை நிகழ்த்த இங்கு வந்துள்ளேன். கேட்டுப் பயனடையுங்கள். நான் சொல்ல விருக்கும் மார்க்கத்தை நீங்களும் கேட்டு அவ்வழி நடப்பீர்களானால் நீங்களும் விரைவிலே, உங்கள் உள்ளொளியில் அந்த ஞானத்தைக் கண்டு, இந்தப் பிறவியிலேயே, துறவு மார்க்கத்தை யனுசரித்த ஆரிய புத்திரர்கள் நாடிச் செல்லும் தத்துவபோத நிலையை யெய்தி வாழ்வீர்கள்."

இந்த வார்த்தைகளைக் கேட்டதும் பிக்ஷுக்கள் ஐவரும் புத்தரைப் பார்த்துக் கேட்டனர்: "கௌதம! அந்த நாளிலேயே உமது கடுந்

*ததாகதர் - ''அங்ஙனம் சென்றவர்'', அருகத்துவம் பெற்றவர். புத்தர் தம்மைத்தாம் குறிப்பிடும்போதெல்லாம் ததாகதர் என்றே சொல்வார்.

தவத்தாலும் ஹடயோக சாதனையாலும் அமானுஷ்யமான விசேஷ ஞானத்தையும் ஆரிய புத்திரர்களுக் கேற்ற உள்ளொளியையும நீர் பெற முடியவில்லை. இப்போது இன்பங்களை நாடி, உண்டு களித்து வாழ்ந்து, தவத்தி லிருந்து வழுவிய நீர் அமானுஷ்யமான விசேஷ ஞானத்தையும் ஆரிய புத்திரர்களுக்கேற்ற உள்ளொளியையும் எப்படிப் பெற முடிந்தது?"

புத்தர் பதிலாக, "பிக்ஷுக்களே! ததாகதர் உண்டு களித்திருக்க வில்லை. தவத்தைக் கைவிடவில்லை. ததாகதர் சம்போதி ஞானம் பெற்றவர்," என்று சொல்லி, முன்மொழிந்ததையே மீண்டும் சொன்னர். பிக்ஷுக்கள் திருப்திப்படாமல் இரண்டாம் முறையும் தமது கேள்வியை அப்படியே கேட்டனர். அதற்கும் புத்தர் முன் சொன்னதைத் திருப்பிச் சொல்லவும் பிக்ஷுக்கள் மூன்றும் தடவை யாகவும் கேட்டனர். அதற்கு விடையாக புத்தர் ஒரு கேள்வி கேட்டார்: "பிக்ஷுக்களே! இதற்கு முன்பு எச்சமயத்திலாவது இவ் வாறு நான் உங்கள் முன் மொழிந்திருக்கிறேனா?"

பிக்ஷுக்கள் யாவரும் ஒரே தொனியில் "ஒருபோதும் மொழிய வில்லை, பிரபோ!" என்றனர். அந்த வார்த்தைகளில் ஒரு நம்பிக்கை, ஒரு பக்தி, ஒரு உணர்ச்சிப் பிரவாகம், ஒரு அச்சமும் ஆர்வமும் தொனித்தது. புத்தர் மறுபடியும், மூன்றும் முறையாகத் தாம் முன் சொன்ன பதிலையே சொன்னர். அதன்பின் பிக்ஷுக்கள் ஐவரும் கை கட்டி வாய் புதைத்து பகவானின் உபதேசத்தைச் செவி மடுக்க ஆவலோ டமர்ந்தனர்.

புத்த பகவான் மொழிந்தார்:

தர்ம சக்கரப் பிரவர்த்தனம்

"பிக்ஷுக்களே!"

"சன்மார்க்கம் தேடித் தவத்தை மேற்கொள்ளும் துறவிகள் தவிர்க்கவேண்டிய இருவித யோக மார்க்கங்களுள்ளன: ஒன்று அமிதமான இன்பத்தைப் பற்றி நிற்கும் காமசுகல்லிகானு யோகம். இந்திரியங்களின் இயக்கங்களுக்கு முற்றுமே அடிமைப்பட்டு அந்தப்போகத்தில் இன்பம் காணும் மார்க்கம் வெறுக்கத்தக்கது, இழிவானது, சிறுமை யுடையது, பயன் விளைக்காதது. இது ஒரு புறம். மற்றொரு புறம் தவிர்க்கப்படவேண்டியது அத்தகிலமதானு யோகம் என்ற உடலை வருத்திக் கடுமையான நோன்புகளைக் கடைப் பிடிக்கும் ஹடயோக மார்க்கம். இதுவும் இழிவானது, துன்பத்தை விளைவிப்பது, பயனற்றது.

"இந்தப் பயனற்ற, அமிதமான இரு வழிகளின் மத்தியிலேதான் மிதமான சன்மார்க்க வழி அமையப்பெற்றிருக்கிறது. இந்த மத்யம மார்க்கம் தான் ததாகதர் கண்ட மார்க்கம். இது அகக் கண்களைத் திறந்து உள்ளொளி பிறப்பிக்கும்; அறிவைக் கொடுக்கும்; சாந்தியைத் தரும். பூரண மெய்ஞானத்தையும் தத்துவ போதத்தையும், இறுதியில், நிர்வாண மோக்ஷமாகிய விமுக்தி நிலையையும் அடையக் கொண்டு செல்லும்.

"இங்ஙனம் அகக் கண்களைத் திறந்து உள்ளொளி பிறப் பிப்பதும், அறிவும் சாந்தியும் தருவதும், பூரண மெய்ஞானத்தையும் தத்துவ போதத்தையும், இறுதியில் நிர்வாண மோக்ஷமாகிய விமுக்தி நிலையையும் அடையக்கொண்டு செல்வதுமாகிய மத்யம மார்க்கம் எண் வகையாக அஷ்டாங்க மார்க்கம் எனப்படும்.

"அவைதான்: நற்காட்சி, நல்லூற்றம், நல்வாய்மை, நற்செய்கை, நல்வாழ்க்கை, நன்முயற்சி, நற்கடைப்பிடி, நல்லுளத்தோர் தலைப்பாடு என்பன. இந்த அஷ்டாங்க மார்க்கமே நிர்வாண மோக்ஷத்தின் திறவுகோல்.

"பிக்ஷுக்களே! பிறத்தல் துன்பம். தளர்ச்சி துன்பம். பிணி துன்பம். மரணம் துன்பம். வேண்டாதனவற்றோடு பிணிக்கப் பட்டிருப்பது துன்பம். வேண்டுவனவற்றிலிருந்து பிரிக்கப் பட்டிருப்பதும் துன்பம். விழைவு கூடாமை துன்பம். சுருங்கச் சொன்னால், உருவம், நுகர்ச்சி, குறிப்பு, பாவனை, உள்ளவறிவாகிய விஞ்ஞானம் என்ற பஞ்சஸ்கந்தங்களே* துன்பத்தைத் தருவன. ஆதலால், பிக்ஷுக்களே! துக்கம் உளது. இது முதலாவது வாய்மை, அல்லது ஆரிய சத்தியம்.

---

*பஞ்சஸ்கந்த மென்றால் ஐவகையான கூட்டம். அவை: ரூபம், வேதனை, சம்ஞை, சம்ஸ்காரம், விஞ்ஞானம். அதாவது: உருவம், நுகர்ச்சி, குறிப்பு, பாவனை, உள்ளவறிவு என்பன. அவற்றுள், உருவம் மண், நீர், நெருப்பு, காற்று என்ற நான்கு பூதங்களும், அவற்றிலுண்டாகும் உபாதாயங்களான வலி, இரதர், வன்னம், கந்தம் என்பவைகளும் சேர்ந்த தொகுதியாகும். வேதனை அல்லது நுகர்ச்சி என்பது சுகம், துக்கம், சுகதுக்கம் என்ற உணர்வுகளின் தொகுதி. குறிப்பு என்ற சம்ஞாஸ்கந்தம் மெய், வாய், கண், மூக்கு, செவி, என்ற ஐம்புலன்களாலும் பெறும் பொது அறிவும், மனம் என்ற ஆறாவது புலன் வழியாகப் பெறும் சிறப்பறிவும். அதாவது, 'இவன் மனிதன்' என்ற பொது அறிவும், மனிதனிலும் 'இவன் இராமன்' எனற சிறப்பறிவும் சேர்ந்த தொகுதி. சம்ஸ்காரம் என்ற பாவனை மனம், வாக்கு, காயம், என்ற மூக்கரணங்களால் செய்யப்படும் தொழில் வேறுபாடுகளின் தொகுதி. உள்ளவறிவு அல்லது விஞ்ஞானஸ் கந்தம் என்பது புலனறிவுக்கு அப்பாற்பட்டதாகச் செய்யும் தொழில் யாதொன்று மின்றி யிருக்கும் உள்ளத்தினறிவின் தொகுதி. மேலும் மணி மேகலை 30:189 சாமி நாதையர் உரை பார்க்க.

"இத்துக்கத்துக்குக் காரணம், துக்கத்தின் உற்பத்தி, பிறப்பீனும் வித்தாகிய அவா* அல்லது வேட்கை அல்லது திருஷ்ணை. காமலோபங் களோடு சேர்ந்த இந்த வேட்கையே துன்பத்துக்குக் காரணம். சிற்றின்பங்களை விரும்பும் காமதிருஷ்ணை, சாஸ்வத திருஷ்டி என்ற உயிர்வாழ் வேட்கை அல்லது பவதிருஷ்ணை, உச்சேத திருஷ்டி என்ற அழிவுத் தன்மையை விரும்பும் விபவ திருஷ்ணை, ஆக திருஷ்ணை அல்லது வேட்கை மூன்று வகையாகத் துக்கத்துக்கு உற்பத்தி அல்லது காரணமாகும். எனவே, பிக்ஷுக்களே! துக்க உற்பத்தி உளது. இது இரண்டாவது வாய்மை, ஆரியசத்தியம்.

"இனி, இந்தத் துக்கம் நீங்கப் பெறுதல் வேண்டும். தன்னிடத்தி லுண்டான ஆசையை அகற்றி அதைத் தன்மீது பற்றுக்கொள்ளாமல் பிரித்துக்கொண்டு மேலும் அது வந்து பீடிக்காமல் அழித்தலினு லுண்டாகும் வேட்கையழிவே துக்க நீக்கமாகிய துக்க நிவாரணம். ஆகையால், பிக்ஷுக்களே! துக்க நிவாரணம் உளது. இது மூன்றுவது வாய்மை, ஆரிய சத்தியம்.

"இறுதியாக, இத் துக்க நிவாரணத்துக்கு மார்க்கமுண்டு என்பது. இதுவே நான்காவது வாய்மையாகிய துக்க நிவாரண மார்க்கம், நான்காவது ஆரிய சத்தியம். இதுவே முன்பு மத்யம மார்க்கம் என்று ததாகதர் சொல்லிய அஷ்டாங்க மார்க்கம்— நற்காட்சி, நல்லூற்றம், நல்வாய்மை, நற்செய்கை, நல்வாழ்க்கை, நன்முயற்சி, நற்கடைப்பிடி, நல்லுளத்தோர் தலைப்பாடு.

"இங்ஙனமாக, பிக்ஷுக்களே! இது துக்கம், இது துக்க உற்பத்தி, இது துக்க நிவாரணம், இது துக்க நிவாரண மார்க்கம் என்று நான்கு ஆரிய சத்தியங்களையும் உள்ளுணர்வால் கண்டேன். பின்னர் ஒவ்வொன்றுக சத்ய ஞானம் என்ற வாய்மையைப்பற்றிய அறிவு, கிருத்யஞானம் என்ற வாய்மையின் தொழிற்பாடு பற்றிய அறிவு கிருதஞானம் என்ற வாய்மையின் தொழிற்பாடு நிறைவெய்திவிட்ட தென்ற அறிவு—ஆக மூன்று வகையான அளவைகள் கொண்டு நான்கு ஆரிய சத்தியங்களையும் பின் வருமாறு பன்னிரண்டு நிலையில் உணர்ந்தேன்.

1. (அ) இதுவே துக்கம்.
   (ஆ) இந்தத் துக்கம் அறியப்படவேண்டியது.
   (இ) இந்தத் துக்கத்தை அறிந்துகொண்டேன்.
2. (அ) இதுவே துக்க உற்பத்தி.

---

* அவா வென்ப வெல்லா வுயிர்க்கும் எஞ்ஞான்றும்
தவாஅப் பிறப்பீனும் வித்து—திருக்குறள்.

(ஆ) இத் துக்க உற்பத்தி அழிக்கப்படவேண்டியது.
(இ) இத் துக்க உற்பத்தியை அழித்துவிட்டேன்.

3. (அ) இதுவே துக்க நிவாரணம்.
(ஆ) இத் துக்க நிவாரணம் தேடிக் காணப்பட வேண்டியது.
(இ) இத் துக்க நிவாரணத்தைத் தேடிக் கண்டு விட்டேன்.

4. (அ) இதுவே துக்க நிவாரண மார்க்கம்.
(ஆ) இத் துக்க நிவாரண மார்க்கம் கடைப்பிடித்து ஒழுகப் படவேண்டியது.
(இ) இத் துக்க நிவாரண மார்க்கத்தைக் கடைப்பிடித்து ஒழுகிவிட்டேன்.

"இங்ஙனமாக, பிக்ஷுக்களே! ஒவ்வொன்றும் மூன்று வகைமையின் நான்கு ஆரிய சத்தியங்களையும் பன்னிரு சிறப்பு வகையாக உணர்ந்தேன். இவை இது வரை சொல்லப்பட்டுள்ள சுருதிகளில் காணப்படாதவை. என் அகக் கண் திறந்தது, அறிவு பிறந்தது, ஞானமும் உள்ளொளியும் பிறந்தன. நான்கு வாய்மைகளும் பூரணமாக என் உள்ளறிவில் தெளிவாகும் வரையும் நான் ஒப்பற்ற சம்போதிஞானம் பெற்றேன் என்பதை ஏற்றுக்கொள்ள வில்லை. நான்கு வாய்மைகளும் அவற்றின் தன்மைகளும் பூரணமாக என் உள்ளறிவில் தெளிவாகிவிட்டது என்று நான் கண்ட பின்னரே ஒப்பற்ற சம்போதிஞானம் பெற்றிருக்கிறேன் என்பதை ஏற்றுக் கொண்டேன்.

"அப்போது என்னுள்ளே ஓர் ஒளி படர்ந்தது. பின்வரும் ஓர் அறிவு பிறந்தது: 'அசைக்கப்பட முடியாதது எனது விமுக்தி நிலை. இதுவே எனது பிறவியின் இறுதி; பிறவிகளிலிருந்து நான் விடுதலை பெற்றுவிட்டேன்'."

ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாகப் பாரதத்தில் மனிதவர்க்கம் உய்யும் வகையைத் தேடிய தவ முனிவர்களும் சித்தர்களும் தரிசனப் புலவர்களும் மற்றும் மகான்களும் பலர். ஒவ்வொருவரும் ஒவ்வொரு மார்க்கத்தைக் கடைப்பிடித்து அதன் வழி சென்று முயன்றனர். அவரவர் கொள்கையில் ஈடுபட்டவர்கள் சேர்ந்து மதங்கள் பிறந்தன. ஒற்றுமை வேற்றுமை ஆராய்ச்சிகளும் வாதப் பிரதி வாதங்களும் இயல்பாகவே பிறந்தன. புத்தர் காலத்தில் அவ்வாதங்க ளெல்லாம் அளவை என்ற தர்க்கப் பிரமாண ரீதியில் நடந்துவந்தன. அங்ஙனம் தர்க்க ரீதியில் ஆராய்ந்து சிந்தனையின் தெளிவில் பிறந்த முடிவுகளை புத்தர் நான்கு வாய்மைகளாகவும் எண்வகை மார்க்கங்களாகவும் உலகத்துக்கு எடுத்து உபதேசித்தார். அந்த உபதேசமே தர்ம

சக்கரப் பிரவர்த்தனம் என்று கொண்டாடப்படுகிறது. பிற்காலத் தெழுந்த பௌத்த பிடக நூலாகிய அங்குத்ர நிகாயத்தில் இந்த முதல் உபதேசம் 'தர்ம சக்கரப் பிரவர்த்தன சூத்திரம்' என்ற பெயரில் காணப்படுகிறது.

இத் தர்மசக்கரப் பிரவர்த்தனம் என்ற உபதேசத்தில் புத்தர் துக்கத்தைப்பற்றியும் துக்கத்தின் காரணத்தைப் பற்றியும், அந்தத் துக்க காரணத்தை யொழிப்பது பற்றியும், அதற்குரிய மார்க்கத்தைப் பற்றியும் தெளிவுபட எடுத்துக் கூறினர்.

பிரதீத்ய சமுத்பாதம்

பின்னர் ஒருநாள், அவர், தமது சீடர்கள் மனப்பக்குவம் பெற்று விட்டார்கள் என்று தெரிந்துகொண்டதும் பிரமாண ரீதியாக அவரது சிறந்த தத்துமான 'ஹேதுப்பிரபவ தர்மம்' என்ற காரண காரிய ஞானத்தை உபதேசித்தார். பௌத்த கிரந்தங்களி லெல்லாம் மிகவும் பிரசித்தி பெற்றதும், மூல மந்திரம் போன்றதும் பௌத்தத்தின் அடிப்படை தர்மத்தை மிகவும் சுருக்கமாக எடுத்துரைப்பதுமான ஒரு சுலோகமுள்ளது:

யேதர்மா ஹேதுப்ரபவா : தேஷாம் ஹேதும் ததாகத
ஆஹ தேஷாம் யோ நிரோத : ஏவம் வாதீ மஹா சமண :

"காரணத்திலிருந்து உண்டாகும் தன்மைகள் எவைகளோ, அவைகளுக்குக் காரணம் யாதோ, பின்னும் அவற்றின் தடை யாதோ இவற்றைத் ததாகதர் சொன்னர். இப்படிச் சொன்னவர் மஹா சிரமணன்." இதுவே மேற்கண்ட சுலோகத்தின் பொருள்.

துக்கத்தின் உற்பத்தி வேட்கை என்று சொல்லிய புத்தர் அதற்கு மூலகாரணம் அவித்தை அல்லது பேதைமை என்று சொல்லி, அந்தப் பேதைமையி லிருந்து சார்பு வழியாகப் பன்னி ரண்டு நிதானங்கள் கூறிக் காரண காரியத் தொடர்பை விளக்கு கிறார்,

பேதைமை என்றால் மேற்சொல்லப்பட்ட நான்கு பௌத்த வாய்மைகளாகிய துக்கம், துக்க உற்பத்தி, துக்க நிவாரணம், துக்க நிவாரண மார்க்கம் என்பவற்றை அறியாமை,

பேதைமைதான் வாழ்க்கைச் சக்கரத்தில் முதலாவது அலகு. நான்கு வாய்மைகளை அறிய முடியாமல் அது பேதித்து விடுகிறது. இந்தப் பேதைமையி லிருந்து உண்டாவது நல்வினை தீவினைகளாகிய செய்கைகள். இந்தச் செய்கைகள் பேதைமையி லழுந்திக் கிடந்து, தமது பயனை விளைவிக்க, சம்சாரத்தில் நீடித்து உழலவேண்டி யேற்

படுகிறது. நல்வினை தீவினை காரணமாக உணர்வு என்ற விஞ்ஞானம் தொழிற்பட ஆரம்பித்து, இறந்த காலத்தோடு நிகழ் காலத்தை இணைக்கிறது. அதே சமயத்தில் உணர்வு காரணமாக சத்து, சடம் என்ற அரு உரு அல்லது நாம ரூபங்கள், சீவராசிகள், தோன்றுகின்றன. அவற்றோடு தோன்றுவன மெய், வாய், கண், மூக்கு, செவி, மனம் என்ற ஆறு வாயில்கள் அல்லது புலன்கள். இவை காரணமாக ஊறு அல்லது ஸ்பரிசம் பிறக்கிறது. ஸ்பரிசம் தோன்றியதும் இயல்பாகவே நுகர்வு அல்லது வேதனை பிறக்கிறது. நுகர்வு காரணமாக அவாவும், அவாக் காரணமாகப் பற்றும் பிறக் கின்றன. பற்றி லிருந்து பவம் அல்லது, பிறப்புக்கு மூலமான கருமக்கூட்டம், தோன்றுகிறது. பவத்திலிருந்து பிறப்பும், அந்தப் பிறப்பிலே மூப்பு, மரணம், வலி, அழுகை, துன்பம், கவலை, ஏக்கம் என்று சொல்லப்படும் வினைப்பயன்களும் உண்டாகின்றன.

இங்ஙனம் பேதைமை முதலிய பன்னிரண்டு நிதானங்களும் சார்பு வழியாகக் காரண காரியத் தொடர்பில் வருவதை பிரதீத்ய சமுத்பாதம் என்று சொல்வார்கள். பிரதீத்ய சமுத்பாதம் என்றால், 'இதன் காரணமாக அது உண்டாகிறது' என்பது பொருள். "அவித்யா ப்ரத்யயோ ஸம்ஸ்காரம், ஸம்ஸ்கார ப்ரத்யயோ விஞ் ஞானம்..." என்ற வாய்பாடு மணிமேகலையில் பின்வருமாறு நேர் மொழிபெயர்ப்பாகச் சொல்லப்பட்டிருக்கிறது :

பேதைமை சார்வாச் செய்கையாகும்
செய்கை சார்வா உணர்ச்சி யாகும்
உணர்ச்சி சார்வா அரு வுரு வாகும்
அருவுரு சார்வா வாயி லாகும்
வாயில் சார்வா வூறுகும்மே
வூறு சார்ந்து நுகர்ச்சி யாகும்
நுகர்ச்சி சார்ந்து வேட்கையாகும்
வேட்கை சார்ந்து பற்று கும்மே
பற்றிற் றோன்றும் கருமத் தொகுதி
கருமத் தொகுதி காரணமாக
வருமே யினை வழிமுறைத் தோற்றம்
தோற்றம் சார்பின் மூப்புப் பிணி சாக்காடு
அவலம் அரற்றுக் கவலை கையாறெனத்
தவலில் துன்பம் தலைவரும் என்ப
ஊழின் மண்டிலமாச் சூழுமின் நுகர்ச்சி

—மணிமேகலை, 30-ஆம் காதை 101.118



18. போதி விருக்ஷம்—புத்தகயை (பக். 117)



19.
வஜ்ராசனம்—
புத்தகயை
(பக். 117)



20. சங்கமனம்—புத்தகயை (பக். 119)



21. அநிமிஷலோசனம் — புத்தகயை (பக். 120)



22.
ரதஞகாரம்
மரத்தின் நிழல்
காணப்படும்
உயர்ந்த
சாந்துக்
கட்டிடம்—
புத்தகயை
(பக். 120)



23
கங்கை தீர்த்தம்
வாரணசி
(பக். 127)



24. காசி விஸ்வநாதர் ஆலயம்--வாரணசி (பக். 135)



25.
காசி—
தீர்த்தக்கட்டத்தில்
"கங்கா
புத்திரர்கள்"
(பக். 134)

இந்த வாய்பாடு துக்க காரணத்தைக் கூறுகிறது. துக்க நிவாரணத்துக்கு, முதலில் சொன்னதை மாற்றி, "பேதைமை நீங்கச் செய்கை நீங்கும், செய்கை நீங்க உணர்வு நீங்கும்" என்ற முறையே தொடராகச் சொல்லிக்கொண்டு வரவேண்டும்.

இவற்றுள் உணர்வு, அருவுரு, வாயில், ஊறு, நுகர்வு, வினைப் பயன், பிறப்பு ஆகிய ஏழு நிதானங்களும் துக்கம். பேதைமை, செய்கை, வேட்கை, பற்று, பவம் ஆகிய ஐந்தும் துக்க காரணம். ஆதலால், தோன்றுதல் துன்பம். அதற்குக் காரணம் பற்று. விடுதல் இன்பம். அதற்குக் காரணம் பற்றின்மை. இவையே நான்கு வாய்மைகளும்.

பிறந்தோ ருறுவது பெருகிய துன்பம்
பிறவா ருறுவது பெரும் பேரின்பம்
பற்றின் வருவது முன்னது, பின்னது
அற்றோர் உறுவது.

இதுவே பௌத்தத்தில் முக்கியமான சித்தாந்தமாகிய பிரதீத்ய சமுத்பாதம் அல்லது காரண காரியத் தொடர்பு. காரணத்திலிருந்து காரியம் பிறக்கிறது. ஆகவே, காரணம் இல்லையாயின் காரியமும் இல்லையாகும்.

பிறவிக்கடல் நீந்தப் பிணை கொடுத்தருளிய புத்தர் பெருமானின் இந்த ஞாபைதேசத்தைச் செவிமடுத்துக் கேட்ட பிக்ஷுக்கள் ஐவரில் கௌண்டின்னியர் என்பவர் தவத்திலும் சீலத்திலும் பக்குவ நிலையைப் பெற்றிருந்தா ராகையால் அந்த முதல் உபதேசத்திலேயே தெளிவைக் கண்டார். அவர் புத்தரை அணுகி, "பகவன்! தங்கள் உபதேசம் எனக்கு உள்ளொளியை விளக்கியது. இருள் நீங்கியது. சத்தியத்தைக் கண்டேன். நான் பக்குவம் வரப்பெற்றவன் என்று கண்டால் தாங்கள் என்னையும் தருமத்தில் அணைத்துக்கொண்டருள வேண்டுகிறேன்," என்று கேட்டுக்கொண்டார். அதற்கு புத்த பகவான் மன மகிழ்ந்து, "கௌண்டின்னிய! நீயே ஞானவான். நீ தருமத்தை யுணர்ந்தாய் என்பதை அறிந்துகொண்டேன். அதில் சரணடைவாயாக," என்று சொல்லி பௌத்த பிக்ஷுவாக ஏற்றுக் கொண்டார். பௌத்த சங்கம் ஸ்தாபிக்கப்படு முன்பு முதலாவது பிக்ஷுவானவர் கௌண்டின்னியரே. அவருடைய பழுத்த ஞானம் காரணமாக அவர் அஞ்ஞாத கௌண்டின்னியர் என்ற பெயரைப் பெற்றார். மேலும் சில நாட்கள் சென்ற பின்னரே மற்றைய நால்வருக்கும் ஞான முதிர்ச்சி கிடைத்து தரும தீக்ஷை பெற்றனர்.

அநாத்ம லக்கணம்

அதன் பின்னர் ஒரு நாள் புத்தர் தமது சீடர் ஐவருக்கும் ஆன்மாவைப் பற்றிய உபதேசம் செய்தார். பௌத்தத்தில் ஆன்மா என்ற ஒன்றில்லை யென மறுக்கும் அநாத்மவாதம் முக்கியமானது. புத்தர் இந்த வாதத்தைச் சீடருக்கு உபதேசித்த பிரசங்கம் அநாத்ம லக்கண சூத்திரம் என்று சொல்லப்படும்.

"பிக்ஷுக்களே! இந்த உருவமாகிய உடல் அநாத்மமானது. அதாவது, ஆன்மாவற்றது. உடலே ஆன்மாவா யிருக்கு மாயின் அது நோய் முதலிய உபாதைகளுக்கு உட்படவேண்டிய அவசிய மில்லை. என் உடல் இப்படி யிப்படி யிருக்கக் கடவது, அல்லது இப்படி யிப்படி யிருக்கலாகாது என்று நாம் கட்டுப்பாடு செய்யக் கூடியதா யிருக்கும். அத்தகைய கட்டுப்பாடுகள் செய்ய முடியாமல், நாமே வழிப்படுத்த முடியாம லிருப்பதால் சரீரம் ஆன்மாவற்றது.

"நுகர்ச்சி என்ற வேதனையும் அநாத்மமானது. நுகர்ச்சி ஆன்மாவா யிருந்தால் உபாதைகளைத் தராமல் கட்டுப்படுத்தலாம். கட்டுப்படுத்த முடியாம லிருப்பதால் நுகர்ச்சியும் சரீரத்தைப்போல ஆன்மாவற்றது.

"இவ்வாறே குறிப்பு (சம்ஞை), பாவனை (சம்ஸ்காரம்), உள்ள அறிவு (விஞ்ஞானம்), என்பனவற்றை ஆராயும்போதும் அவையும் அநாத்ம மானவை என்று தெரியும்.

"பிக்ஷுக்களே! இப்பொழுது சொல்லுங்கள்; உடலாகிய உருவம் நித்தியமானதா, அல்லது அழியுந் தன்மையுள்ள அநித்திய மானதா?"

"அநித்தியமானது."

"அநித்தியமானதும், அழியும் தன்மையுள்ளதும், இன்பத்தையா துன்பத்தையா தரும்?"

"துன்பத்தையே தரும்."

"அங்ஙனம் துன்பத்தைத் தருவதும், அழியும் தன்மையுள்ள தும், அநித்தியமானதுமா யுள்ள ஒன்றை 'இது எனது,' 'இது நான்,' 'இதுவே என் ஆன்மா' என்று சொல்ல முடியுமா?"

"முடியாது."

இதே விதமாக வாதம் செய்து புத்தர் பஞ்ச ஸ்கந்தங்களாகிய உருவம், நுகர்ச்சி, குறிப்பு, பாவனை, விஞ்ஞானம் என்ற ஐந்தும் அநித்தியமானவை யென்றும், துன்பத்தைத் தருவன வென்றும், மாறும் தன்மையுள்ள அநாத்ம மானவை யென்றும் நிரூபிக்கிறார். துக்கம், அநித்யம், அநாத்மம் என்ற மூன்று தத்துவங்களையும் விளக்குகிறார்.

"முன்பு உண்டாகியதும், இப்போது உண்டாகி யிருப்பதும், இனி உண்டாகப் போவதுமான நம் சரீரத்திலே அகத்தில் அல்லது புறத்தில் இருப்பதும், தூலமாகவோ சூக்குமமாகவோ உள்ளதும், உயர்ந்ததும் தாழ்ந்ததும், கிட்ட உள்ளதும் எட்ட உள்ளதுமான சடப்பொருள் 'எனது' அல்ல; 'நான்' அல்ல; 'ஆன்மா' அல்ல என்று உள்ளதை உள்ளவாறு ஸம்யக்ஞானம் என்ற நல்லறிவால் உணர்ந்துகொள்ள வேண்டும். அவ்வண்ணமே, மற்றைய நான்கு ஸ்கந்தங்களான நுகர்ச்சி, குறிப்பு, பாவனை, விஞ்ஞானம் ஆகிய வற்றையும் ஆராய்ந்து அவை 'எனது' அல்ல, 'நான்' அல்ல, 'ஆன்மா' அல்ல என்று உள்ளதை உள்ளவாறு நல்லறிவால் உணர வேண்டும்.

"அங்ஙனம் உணர்ந்துகொண்ட துறவியானவன் (ஆரிய சிரமணன்) உருவம், நுகர்ச்சி, குறிப்பு, பாவனை, விஞ்ஞானம் ஆகிய ஐந்து வகையான பொருள்களிலுமிருந்து விரக்தி யடைகிறான். அங்ஙனம் விரக்தி பெற்றவன் வேட்கையிலிருந்து விடுபட்டவனாகி, மெய்ஞானம் வரப்பெற்றவனாய், 'நான் விமுக்தி பெற்றேன்' என்ற தத்துவபோதத்தை யறிகிறான். பிறவிகள் முற்றுப்பெற்றன என்பதை யும் இனிப் பிறவியில்லை யென்பதையும் உணர்ந்துகொள்ளுகிறான்."

இவ்வாறு அநாத்ம தத்துவத்தைப்பற்றியும் பஞ்ச ஸ்கந்தங்களி லிருந்து விடுபட்டு விமுக்தி நிலையாகிய நிர்வாணத்தைப் பெறுவது பற்றியும் புத்தர் தமது சீடர் ஐவருக்கும் உபதேசித்த பின்னர் அந்தச் சீடர்கள் மெய்யறிவு பெற்று அருகத் நிலை யெய்தினர்.

அதன் பின்னர் ரிஷிபதனத்திலேயே சில நாள் தங்கி யிருந்து தமது சீடர்களுக்கு மேலும் பல உபதேசங்களைச் செய்து வரும்போது, காசி நகரில் மிகவும் செல்வப் பெருக்குடன் வாழ்ந்து வந்த யசன் என்ற வணிகன் ஒருவன் இல்லறத்தைத் துறந்து வந்து புத்தரின் உபதேசங்களைக் கேட்டுப் புத்தருடைய சீடனான். பெரியதோர் அரண்மனையில் பல பெண்கள் நிறைந்த சூழ்நிலையில் காமலோகத்தில் வசிப்பது போன்ற வாழ்வில் ஈடுபட்டிருந்த யசன், ஒரு நாளிரவு அரண்மனைப் பெண்கள் அலங்கோலமான நிலையில் துயில் கொள்வதைக் கண்டு, "பிணக்காடு போலிருக்கும் இது தானா இன்பம்?" என்று கேட்டுவிட்டு அரண்மனையைவிட்டு வெளியேறினான். ரிஷிபதனத்தில் புத்தரைக் கண்டு அவரிடம் தருமோபதேசம் கேட்டு பிக்ஷுவானான்.*

---

* யசனுடைய துறவு சம்பந்தமான கதை சித்தார்த்தர் துறவு நிகழ்ச்சியை யொத்திருப்பதனால் ரைஸ் டேவிட்ஸ் என்ற ஆராய்ச்சியாளர் யசனின் கதையைத் தழுவியே சித்தார்த்தரின் துறவு பற்றிய கதை

யசன் தருமோபதேசம் பெற்றுப் பிக்ஷுவாகிய பின்னர் புத்தர் யசனுடைய வீட்டுக்கே சென்று அவனுடைய தந்தைக்கும் தாய்க்கும் மனைவிக்கும் உபதேசம் செய்தார். அவர்களும் தருமம் கேட்டு இல்லறத்தி லிருந்தபடியே பௌத்த உபாசகர்களானார்கள். புத்தரின் முதலாவது உபாசிகைகளான பெண்கள் யசனின் மனைவியும் அவனது தாயாருமே.

பின்னர் ஒரு நாள் யசன் தனது நண்பர்கள் ஐம்பத்து நால்வரை யழைத்து வந்து புத்தரிடம் சமர்ப்பித்து உபதேசம் செய்யுமாறு கேட்டுக்கொண்டான். அவர்களுக்கும் தருமோப தேசம் செய்து புத்தர் தீக்ஷை கொடுத்தார்.

இவ்வாருக, பஞ்சவர்க்கியர் என்ற பிக்ஷுக்கள் ஐவர், யசன், அவனுடைய நண்பர்கள் ஐம்பத்து நால்வர் ஆகிய அறுபது பேருடன், புத்தரும் சேர்ந்து ஆரம்பத்திலே அறுபத்தொரு பிக்ஷுக்கள் ரிஷிபதனத்திலே வாழ்ந்தனர். இவர்களே பௌத்த தருமத்தைக் கடைப்பிடித்த முதல் பிக்ஷுக்கள்.

அச்சமயத்திலே பகவான் புத்தர் தமது அறவுரை சீடர்களின் உள்ளத்தில் பதிந்துவிட்டதென்பதையும், அத்தருமத்தை அவர்களே போதிக்கும் பக்குவம் பெற்றுவிட்டனர் என்பதையும் கண்டு தீக்ஷை கொடுக்கும் கிரியையை ஒரு சம்பிரதாய மாக்கி வைக்கச் சில நிபந்தனைகளை உருப்படுத்த எண்ணினர். அதற்காக முதலிலே சீடர்களை ஒருங்கு கூட்டி பௌத்த சங்கத்தை ஸ்தாபித்தார்.

"பிக்ஷுக்களே! சன்மார்க்கத்தில் செல்லத் துணியும் ஒருவன் தனித்து நின்றால் தளர்ச்சி ஏற்படலாம். அதன் காரணமாகப் பழைய பழக்கங்களுக்கே திரும்பிவிடவும் கூடும். ஆகையால், ஒருவர் முயற்சிக்கு மற்றவர் ஆதரவாயிருக்க உங்கள் அறுபதின்மரையும் ஒரு சங்கமாக அமைத்துக் கொள்வீர்களாக. ததாகதரைச் சரணடைந்தவர்கள் தருமத்தைச் சரணடைந்தவர்களாவர். அது போலவே, சங்கத்தைச் சரணடைந்தவர்கள் தருமத்தைச் சரண டைந்தவர்களாவர். ஆகையால், திரிசரணமே தீக்ஷா மந்திரமாகவும், மூண்டிதம், துவராடை, பிக்ஷா பாத்திரம் ஆகியவையே தவச்

பிற்காலத்தில் எழுதப்பட்டிருக்கவேண்டும் என்று கருதுகிறார். இதைக் குறிப்பிட்டு மற்றொரு மேல்நாட்டு நிபுணரான ஈ. ஜே. தாமஸ் என்பவர், 'இங்ஙனம் கொள்வதால் புத்தருடைய துறவுபற்றிய சம்பவங்களையெல்லாம் சரித்திர சம்பவங்களாக நாம் ஏற்றுக்கொள்ளும் பெருமையை இழக்க வேண்டி வருமே' என்று வருந்துகிறார். எந்தக் கதை முந்தியது? சித்தார்த்தர் கதையை வைத்து யசன் கதை எழுதப்பட்டதா, அல்லது யசன் கதையைப் பின்பற்றி சித்தார்த்தர் துறவுக் கதை எழுதப்பட்டதா என்பது தெரியவில்லை.

சின்னங்களாவும் தருமத்தை நாடி வரும் துறவிகளுக்கு நிபந்தனையா யிருக்கக் கடவது. பக்குவ நிலையைப் பெற்ற நீங்களே இனி மற்றும் துறவிகளுக்குத் தீக்ஷை யளித்துச் சங்கத்தில் சேர்த்துக்கொள்ளும் உரிமையை நான் உங்களுக்கு வழங்குகிறேன்.

"பிக்ஷுக்களே! இன்று முதல் என்றென்றைக்கும் நீங்கள் சகோதரர்களைப்போல் ஒற்றுமையா யிருங்கள். அன்பிலும் துறவிலும் அறத்திலும் ஒன்று யிருங்கள். சகோதரர்களே! இனி இந்த அறமானது உலக மக்களின் நன்மைக்காகப் பயன்படுத்தப்பட வேண்டிய சமயம் வந்து விட்டது. ஆகையால், பலருடைய நன்மைக் காகவும் உலகின் எல்லாத் திசைகளிலும் சென்று தருமத்தைப் பரவச் செய்யுங்கள். தர்மராஜ்யத்தை நிறுவுங்கள். முதலிலும் நடுவிலும் கடையிலும் இனிதாகவுள்ள இத் தருமத்தை உலகெங்கும் பிரகடனம் செய்யுங்கள். உலகத்தில் எண்ணிறந்த மக்கள் துன்பத்தில் கிடந்து சிக்கி அவதி யுறுகின்றனர். அவர்களில் தருமத்தைக் கேட்கப் பக்குவம் பெற்றவர்கள் சிலர் இருக்கிறார்கள். அவர்கள் பொருட் டாகவேனும் தருமம் போதிக்கப்பட வேண்டும். ஆனால், உங்களுக்கு ஓர் எச்சரிக்கை செய்கிறேன்: தகுதியற்றவர்களிடமும் உணர முடியாதவர்களிடமும் செல்லாதீர். நிந்தனையும் வெறுப்பும் ஏளனமும் தடையும் அவர்களால் ஏற்படுமாகையால் கேட்கத் தக்கவர்களுக்கே உபதேசம் செய்யுங்கள். அவர்களிலும் தகுதி வாய்ந்தவர்களுக்கே தரும தீக்ஷை யளியுங்கள்."

அப்போது கௌண்டின்னியர் அடியெடுத்துக்கொடுக்க மற்றைய பிக்ஷுக்களெல்லோரும் பின் வருமாறு 'திரிசரணம்' என்ற பௌத்த மும்மணிகளை மும்முறை யோதினர்:

நமோ தஸ்ஸ பகவதோ அரஹதோ
ஸம்மா ஸம்புத்தஸ்ஸ
புத்தம் சரணம் கச்சாமி
தம்மம் சரணம் கச்சாமி
சங்கம் சரணம் கச்சாமி
துதியம்பி புத்தம் சரணம் கச்சாமி
துதியம்பி தம்மம் சரணம் கச்சாமி
துதியம்பி சங்கம் சரணம் கச்சாமி
ததியம்பி புத்தம் சரணம் கச்சாமி
ததியம்பி தம்மம் சரணம் கச்சாமி
ததியம்பி சங்கம் சரணம் கச்சாமி

பதினேழாம் அத்தியாயம்

மான் கூடு

மிருகதாவம் என்றும் ரிஷிபதனம் என்றும் வழங்கப்பட்ட சாரநாத் க்ஷேத்திரம் காசியை யடுத்து ஆறு மைல் தூரத்திலேதான் இருந்த போதிலும், புத்தர்பிரான் உபதேசம் செய்து மகிமைப்படுத்திய நாளிலிருந்து தொடர்பறுத நாகரிகம் காசியைப் போன்று காப்பாற்றப் படாமலிருப்பதுதான் ஆச்சரியத்தைத் தருகிறது. மாறி மாறிப் படையெடுத்த அரசர்களாலும் வேற்று மதக் கொள்ளைக் கூட்டத்தினராலும் காசி க்ஷேத்திரம் பல தடவைகளில் பாதிக்கப்பட்ட போதிலும் அதன் நாகரிகம் அழியப் பெறவில்லை. சந்ததி சந்ததியாகக் காப்பாற்றப்பட்டு வந்திருக்கிறது. ஆனால், சாரநாத் விஷயம் அப்படியல்ல. மற்றைய பௌத்த க்ஷேத்திரங் களைப்போல சாரநாத் தனித்த ஒரு கானகப் புறத்திலோ அல்லது மலைச் சாரலிலோ குன்றிலோ இருந்த தல்ல. காசியைச் சேர்ந்த ஒரு கிராமமாகவே இருந்து வந்தது. அப்படி யிருந்தும் அதன் பழைய உருவம் நிலைத்து நிற்காது, காலத்துக்குக் காலம் அழிவுபட்டு, ஈற்றில் மண்ணுள் புதையுண்டது.

புத்தர் காலத்திலே சாரநாத் காசி நகர்ப் புறத்தில் மான்கள் மிகுத்திருந்த ஓர் உபவனமாக இருந்தது. துறவு பூண்ட பல சந்நியாசிகள் ஆசிரமங்கள் அமைத்துக்கொண்டு அங்கே வாழ்ந்து வந்தனர். புத்தரே தமக்கு அங்கே ஒரு பர்ணசாலை கட்டிவைத் திருந்தார் என்றும் 'கந்தகூடம்' என அது வழங்கப்பட்ட தென்றும் சொல்வர். அன்றிலிருந்து சாரநாத் வளர்ச்சி யுற்றது. இருநூறு ஆண்டுகள் கழித்து அசோக மன்னன் சாரநாத்தில் சில ஸ்துபிகளை யும் விஹாரங்களையும் கட்டி வைத்தான். அங்கு வசித்து வந்த பௌத்த சங்கத்தாருக்கும் பௌத்த மதத்தைப் பின்பற்றிய பொது மக்களுக்குமாக அறக்கட்டளைகளைப் பிரகடனம் செய்யும் நடுகற்களை நிறுவி வைத்தான். அசோகன் வழிவந்த மற்றைய அரசர் காலத்திலும் சாரநாத் கலைப் பொக்கிஷங்களான பல கோயில்களையும் விஹாரங்களையும் கலாசாலைகளையும் மாளிகைகளையும் கொண்டு விளங்கியது. கி. பி. ஏழாம் நூற்றாண்டில் சாரநாத் க்ஷேத்திரத்தைத் தரிசித்த ஹியூங் சியாங் என்ற சீன யாத்திரிகன் பின்வருமாறு குறிப்பிட்டான்:

"வாரண நதியின் வடகிழக்கில் பத்து லீ தூரத்திலே மிருகத்வாவம் என்ற சங்காராமம் இருக்கிறது. இந்த சங்காராமம் எட்டுப் பிரிவுகளை யுடையது. சுற்றி வர ஒரு பெரிய மதில் கட்டப்பட்டிருக்கிறது. சங்காராமத்தினுள்ளே கலைச் சிறப்புள்ள அனேகம் கட்டிடங்களிருக்கின்றன. ஹீனயான சித்தாந்தத்தைப் பின்பற்றும் சம்மட்டிய பள்ளியில் ஆயிரத்தைந்நூறு பிக்ஷுக்கள் பயின்று வருகிறார்கள். இங்குள்ள விஹாரம் இருநூறு அடி உயரமுள்ளது. விஹாரத்தைச் சுற்றிவர அமைக்கப்பட்டிருக்கும் நூற்றுக்கணக்கான மாடங்களில் தங்கத்தால் செய்யப்பட்ட புத்த விக்கிரகங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. விஹாரத்தின் கோபுரத்திலே தங்கத்தில் செய்த மாங்கனியின் வடிவம் வைக்கப்பட்டிருக்கிறது. உள் மண்டபத்திலிருக்கும் புத்தருடைய விக்கிரகம் ஆறு அடி உயரமுள்ளது. தாமிரத்தில் செய்யப்பட்ட இவ்விக்கிரகம் தருமோபதேசம் செய்யும் பாவனையிலமைந்துள்ளது."

இவ்வாறு கி. பி. ஏழாம் நூற்றாண்டில் காட்சியளித்தது சாரநாத். அதன் பின்னர் ஆயிரத்து இருநூறாண்டுகள் என்ன நடந்தது என்பது தெரியாது. சென்ற நூற்றாண்டிலேதான் அங்கு காணப்பட்ட சில மண்மேடுகளை அகழ்ந்து பார்த்தபோது கி. பி. இரண்டாம் நூற்றாண்டையும் ஏழாம் நூற்றாண்டையும் சேர்ந்த பல சின்னங்கள் காணப்பட்டன. அப்படியானால், ஏழாம் நூற்றாண்டிலேயே சாரநாத் அழிவுபட்டதா? பௌத்த மதம் அடைந்த கதி சாரநாத்துக்கும் ஏற்பட்டதா? நமக்கொன்றும் தெரியவில்லை.

காசியிலிருந்து சாரநாத்துக்குப் போவதற்கு வாகனக் கஷ்டம் ஒன்றுமில்லை. மிகவும் குறைந்த செலவில் சைக்கிள் ரிக்ஷா ஒன்றை அமர்த்திக்கொண்டு அதிகாலையிலேயே புறப்பட்டுச் சென்றேன். ஜன நெருக்கம் நிறைந்த காசிநகர் வீதிகளைக் கடந்து ஒரு மைல் தூரத்துக்கு மேல் சென்றதும் இரு பக்கமும் மரங்கள் நிழல் தர, நல்ல அகலமான சாலை யொன்று எதிர்ப்பட்டது. அந்தச் சாலையே சாரநாத்துக்குச் செல்லும் முக்கியமான தெரு. பார்த்தவிடமெல்லாம் மா மரங்கள். இடையிடையே அடர்ந்த மாந்தோப்பு. புத்தரின் சரித்திரம் முழுவதும் மாந்தோப்புச் சம்பந்தமான கதைகள் நிறைந்திருக்கின்றன. ஆம்ரவனம் என்ற மாந்தோப்புக்களில் தங்கியிருந்தே அவர் பல இடங்களில் உபதேசம் செய்து வந்திருக்கிறார். அந்த மாந்தோப்புக்கள் அக்காலத்திலிருந்தே தொடர்ந்து நிலை பெற்று வந்திருக்கின்றனவா அல்லவா என்பது நமக்குத் தெரியாது, ஆனால், இன்று வடநாட்டில், முக்கியமாக உத்தரப் பிரதேசத்திலும் பிஹாரிலும் மாந்தோப்புக்களுக்குக் குறைவில்லை.

எதிரே இரு ஒட்டகங்கள் பொதி சுமந்து வந்தன. சற்று தூரம் செல்ல மாடுகள் மீது பொதி. அதையும் தாண்டிச் செல்ல குதிரைகள்; மேலும் செல்ல கழுதைகள்—எல்லா மிருகங்களும் அந்தச் சாலையில் பொதி பொதியாகச் சுமந்து சென்றன. அவற்றோடு போட்டி போட்டுக்கொண்டு மனிதரும் பொதி சுமந்தனர். என்ன ஒத்துழைப்பு! என்ன சமரசம்!

சாரநாத் வந்து சேர்ந்தேன். சாரநாத் என்ற பெயரைப் பற்றி இரண்டு விதமான விளக்கங்களை இரு கட்சியார் சொல்லித் தத்தமக்கு மகிமை தேடிக் கொள்ளுகிறார்கள். இந்த ஸ்தலத்தில் முன்னொரு காலத்திலே மான்கள் சஞ்சரித்த சோலைகளும் காடுகளு மிருந்ததால் 'ம்ருகத்வாவம்'—மான் அடவி—என்ற பெயர் பெற்ற தாம். சிவனுக்கு 'சார்ங்க நாதர்' என்ற ஒரு பெயரும் இருக்கிறது. இங்கே சார்ங்கநாதர் கோயில் ஒன்று காணப்படுகிறது. இதன் காரணமாகவே இந்த ஸ்தலம் சார்ங்கநாத் அல்லது சாரநாத் என்ற பெயர் பெற்றதாக ஒரு கட்சியார் சொல்லிக் கொள்ளுகிறார்கள். ஆனால் பௌத்தர்கள் இதற்கு வேறு விளக்கம் கொடுத்துப் புத்தரின் மகிமையோடு சேர்த்துக் கொண்டாடுகிறார்கள்.

புத்த ஜாதகக் கதைகளில் மிக ருசிகரமான கதை யொன்றுளது. போதி சத்துவருடைய பழம் பிறவி ஒன்றிலே அவர் ஐந்நூறு மான்களுக்கு அரசனை ஒரு பொன்மானாக இருந்து வந்தார். அதே சமயத்தில் மற்றொரு மான் தேவதத்தன் என்ற பெயரில் வேறொரு கூட்டத்துக்கு அரசனையிருந்தது. இந்த இரு மான் கூட்டங்களும் வாழ்ந்த பெரிய காட்டில் அந்தத் தேசத்து மன்னன் அடிக்கடி வந்து காட்டுத் தீ எழுப்பி மான்கள் மீது அம்பு தொடுத்து வேட்டையாடுவது வழக்கம். இதனால் பல மான்கள் அநியாயமாக உயிர் துறக்கின்றன என்று இரங்கிய போதி சத்துவராகிய மான் அரசனை யணுகி, "அரசே! உனது காட்டிலே நீ வேட்டையாடுவது முறைதான். ஆனால் காட்டுத் தீ பரவுவதில் அனேக மான்கள் பொசுங்கி யிறந்து எவருக்கும் உபயோக மில்லாமல் போய்விடுகின்றன. உனக்கு மான் இறைச்சி தினம் தவறாமல் கிடைப்பதற்கு நாள்தோறும் நாங்களாகவே ஒவ்வொரு மானை உன் அரண்மனைக்கு அனுப்பி வைக்கிறோம்," என்றது. இதைக் கேட்ட அரசனும் சரி என்று ஒப்புக்கொண்டான்.

நாள் தவறாமல் ஒவ்வொரு மான் அரண்மனைக்கு அனுப்பப் பட்டது. ஒரு நாள் தேவதத்தன் என்ற மானின் மனைவியின் முறை வந்தது. ஆனால் அச்சமயத்தில் அந்தப் பெண் மான் கருவுற்றிருந்த தாகையால் தன் கணவனைப் பார்த்து, "நான் போகவேண்டிய முறை

யாக இருந்தாலும் என் வயிற்றி லிருக்கும் சிசு கொல்லப்பட வேண்டிய முறை வரவில்லை. ஆகையால் அந்தச் சிசு பிறந்து வளர்ந்தபின் இருவரையும் ஒரு நாள் அனுப்பி வைக்கலாம். இன்று எனக்குப் பதிலாக வேறு மானை அனுப்பினாலென்ன?" என்று கேட்டது. அதற்கு தேவதத்தன் என்ற மான், "அதெப்படி முடியும்? வாக்கை நிறைவேற்ற வேண்டும். ஆனால் வேறு யார்தான் உயிர் விட இணங்குவார்கள்?" என்று சொல்லிவிட்டு, போதிசத்துவ மானிடம் போய் முறையிட்டது. போதிசத்துவ மான் கேட்டுவிட்டு, "பெண்மான் சொல்வது சரியே. மானைக் கொல்லலாமே தவிர அதன் வயிற்றிலுள்ள கருவைக் கொல்ல ஒருவருக்கும் உரிமை யில்லை. ஆகையால் அந்தப் பெண் மானுக்குப் பதிலாக நானே செல்கிறேன். வேறு எந்த மானையும் போகச் சொல்வது நியாயமல்ல," என்று சொல்லிப் போதிசத்துவ மான் நடந்து அரண்மனைக்குச் சென்றது.

அன்று அசாதாரணமாகப் பொன்மானாகிய போதிசத்துவர் அரண்மனைக்கு இறைச்சிக்காகச் செல்வது ஊர் முழுவதும் பேச்சாகி விட்டது. அது அரசனின் காதில் விழுந்ததால் அவன் உடனே மானை யழைத்து விசாரித்தான். மான் சொன்ன விவரத்தைக் கேட்ட அரசன், "நீ ஒரு மிருகமாகப் பிறந்தும் மனிதனின் அறிவு படைக்கப்பட்டிருக்கிறாய். ஆனால் நானே மனிதனாகப் பிறந்தும் மிருகத்தின் அறிவு படைக்கப்பட்டிருக்கிறேன். இன்று முதல் எனக்கு மான் வேட்டையும் வேண்டாம், மான் இறைச்சியும் வேண்டாம். நீயும் உன் இனத்தவர்களும் நிம்மதியாகக் காட்டில் உலாவலாம்," என்று சொல்லி அனுப்பி வைத்தானாம். போதிசத்துவர் மான்களின் அரசனாயிருந்த காரணத்தால் 'சார்ங்கநாதர்' என்ற பெயர் கொண்டார் என்றும், அதனாலேயே சாரநாத் என்ற பெயர் அந்த ஸ்தலத்துக்கு ஏற்பட்டதென்றும் பௌத்தர்கள் சொல்வார்கள்.

எப்படி யிருந்தாலும், சாரநாத்துக்கும் மானுக்கும் தொடர்பிருந்திருக்கிறது. 'மான்காடு' என்பதுதான் அதன் பழைய பெயர். புத்தர் தருமோபதேசம் செய்யும் நிலையைக் குறிக்கும் பழைய சிற்பங்களி லெல்லாம் தர்ம சக்கரத்துக்கு இரு புறத்திலும் இரு மான் வடிவங்கள் அமைக்கப்பட்டிருந்தன. சில ஆண்டுகளுக்கு முன்பு நான் சாரநாத்துக்குப் போன சமயத்தில் அங்கு மான் ஒன்றையும் காணவில்லை. கடந்த 1956-ஆம் ஆண்டிலே புத்த ஜயந்தி கொண்டாடப்பட்ட சமயத்தில் இந்திய அரசாங்கம் சாரநாத்திலே ஒரு சோலை யமைத்து அதில் சில மான்களையும் கொண்டு

போய் உலாவ விட்டது. இரண்டாம் முறையாக நான் சாரநாத்துக் குப் போனபோது அம்மான்களைக் கண்டேன்.

சாரநாத் எல்லைக்குள் நுழையும்போது முதலிலே நமது கவனத் தைப் பெறுவது வழியிலே சாலை யருகி லிருக்கும் ஒரு மண் மேடும், அதன் மேல் கட்டப்பட்டிருக்கும் ஒரு எண் கோணக்கோட்டை போன்ற கட்டிடமும்தான். இதனை 'சௌகண்டி' என்று சொல்வார் கள். இந்த ஸ்தலத்திலேதான் முதன் முதலாகப் பஞ்ச வர்க்கீய பிக்ஷுக்களைப் புத்தர் பெருமான் சந்தித்ததாக ஐதிக முண்டு. இங்கு காணப்படும் கோட்டை போன்ற செங்கற் கட்டிடம் அக்பர் காலத்தில் கட்டப்பெற்றது. இக்கோட்டை யிருக்கும் பெரிய மேடு ஒரு காலத் தில் பௌத்த ஸ்தூபியா யிருந்திருக்கலாம் என்ற நம்பிக்கையோடு 1836-ல் சர் அலெக்ஸாந்தர் கன்னிங்ஹாம் என்ற புகழ்பெற்ற தொல்பொரு ளாராய்ச்சி நிபுணர் கட்டிடத்தின் உட்புறமாக மிக ஆழத்தில் அகழ்ந்து பார்த்தும் எவ்வித சின்னமும் அகப்பட வில்லை.

இந்த சௌகண்டி என்ற ஸ்தலத்தி லிருந்து கால் மைல் தூரத் தில்தான் சாரநாத் க்ஷேத்திர மிருக்கிறது. இந்த ஸ்தலத்தைக் கண்டு பிடித்த வரலாறு விசித்திரமானது. 1794-ஆம் ஆண்டிலே காசியில் தனது பெயரில் ஓர் அங்காடி கட்டத் தீர்மானித்த ஜகத் சிங் என்ற திவான் ஒருவன், அதற்கு நல்ல செங்கல் தேவைப் பட்டதால் சாரநாத்தில் காணப்பட்ட ஒரு புராதன ஸ்தூபியைக் குலைத்து அதிலிருந்து செங்கற்களைச் சேகரித்தான். ஸ்தூபியை உடைத்தெடுக்கும்போது அங்கே ஒரு பேழை கண்டெடுக்கப்பட்டது. அதில் எலும்புத் துண்டுகள் சேர்ந்த அஸ்தி காணப்பட்டதால் அதனை அவன் கங்கையில் சேர்த்துவிட்டான்.

இந்தச் செய்தியை அப்போது காசியில் கடமை பார்த்த பிரிட் டிஷ் அதிகாரி ஜோனதன் டன்கன் என்பவர் வெளியிட்டதும் தொல் பொரு ளாராய்ச்சியி லீடுபட்டவர்களும் சரித்திர ஆராய்ச்சியாளரும் உடனே ஆவல் கொண்டு அந்த ஸ்தூபி யிருந்த ஸ்தலத்தை ஆராய்ந் தார்கள். அதன் பேறுகவே இன்று சாரநாத் க்ஷேத்திரத்தின் திரை நீக்கப்பட்டு பண்டைப் புகழின் சின்னங்கள் காட்சி யளிக்கின்றன.

சாரநாத்திலுள்ள மகாபோதி சங்கத்துக்கு அன்று நான் போன சமயத்தில் வாயிற் கதவு பூட்டப்பட்டிருந்தது. சங்கத்திலுள்ள பிக்ஷுக்கள் தமது ஆசிரமத்தி லிருப்பாகள் என்று சொல்லக் கேட்டு அங்கு சென்றேன். ஆனல் நேரங் காலத்தை அனுசரிக்காமல் இங்ஙனம் அலைகிறேன் என்பதை ஆசிரமத்துக்குப் போன பின்னர்தான் உணர முடிந்தது. மணி பதினென்றரை யிருக்கும்.

உச்சிப் பொழுதுக்கு முன்னரே பிக்ஷுக்கள் உணவருந்தி முடித்துவிட வேண்டுமென்ற விதி தெரிந்திருந்தும் நான் ஆசிரமத்துக்குப் போனது தவறுதான். ஆசிரமத்தின் பக்கத்திலிருந்த மர நிழலில் உட்கார்ந்து பொழுதைப் போக்கினேன்.

நாற்புறமும் ஓர் அமைதி. இடையிடையே மெல்லிய காற்றில் அடிபட்டுச் சிதறும் சருகுகளின் ஒலியும் தன்னந் தனியாய் ஒரு செடியருகில் உலாவிய செம்போத்தின் ஓசையும் மாத்திரம் அந்த அமைதியைச் சிறிது கலைத்தன. ஆசிரமத்தினுள்ளே எவ்வித அரவமும் கேட்கவில்லை. சற்று நேரம் சென்றதும் அங்கிருந்து திடீரென ஒரு கோஷம் கிளம்பியது. "நமோ தஸ்ஸ, பகவதோ அரஹதோ, ஸம்மா ஸம்புத்தஸ்ஸ," என்று ஆரம்பித்து திரிசரண சுலோகத்தை ஒரு முதிய பிக்ஷுவின் குரல் எழுப்பியது. உடனே பல பிக்ஷுக்கள் சேர்ந்து ஏக சுருதியில் தொடர்ந்து துதித்தனர். பிக்ஷுக்களின் உணவு முடிந்து விட்டது, ஆகையால் விரைவில் வெளியே வந்துவிடுவார்கள் என்று நானும் எதிர்பார்த்தேன். ஆனால், திரிசரணத்தைத் தொடர்ந்து வரிசை வரிசையாகப் பல பாலி சுலோகங்கள் கோஷிக்கப்பட்டன. இதற்கு முடிவேயில்லை யென்று கருதும் வகையில் சுமார் அரை மணி நேரமாக இந்தச் சாதனை நடந்தபின் மீண்டும் ஓர் அமைதி. அதன் பின்னரே ஒரு பிக்ஷு, இரண்டு பிக்ஷுக்கள், மூன்று பேராகப் பலர் வெளியே வந்தனர்.

நிறைந்த ஊக்கமும் உற்சாகமு முள்ள மகாபோதி சங்கக் காரியதரிசி சங்கரத்ன தேரர் என்ற பிக்ஷுவைக் கண்டு பிடித்து நான் சாரநாத்துக்கு வந்த நோக்கத்தைத் தெரிவித்தவுடன் அவர் அன்போடு வரவேற்று அழைத்துச் சென்று எல்லா இடங்களையும் காண்பித்தார். அன்று பர்மாவிலிருந்து சங்கத்தார் சிலர் விசேஷ விருந்தினராக வந்திருந்த காரணத்தாலேயே ஆசிரமத்தில் வைபவம் சிறிது அதிகமாகிவிட்டது என்று எனக்குச் சமாதானம் சொல்லிக் கொண்டே சங்கரத்ன தேரர் என்னுடன் நடந்து வந்தார். இவர் இலங்கையைச் சேர்ந்த சிங்கள பிக்ஷு. மிகவும் செல்வாக்குள்ளவர். பொதுவாக இந்தியாவிலுள்ள மகாபோதி சங்க மடங்களையெல்லாம் சிங்கள பிக்ஷுக்களே நிர்வகித்து வருகின்றனர். இவர்கள் சூழ்நிலைக்கும் சந்தர்ப்பத்துக்கும் தக்கவிதமாக அனுசரித்து நடக்கக் கற்றுக்கொண்டிருக்கின்றனர். சங்கரத்ன தேரர் ஹிந்தியில் நல்ல பாண்டித்தியம் பெற்றவராகக் காணப்பட்டார். சிங்களம் அவரது தாய்மொழி. ஆனால் அவர் பேசுவது எழுதுவதெல்லாம் ஹிந்தி. சாரநாத்தில் மட்டு மல்ல, மகாபோதி வட்டாரத்திலும் இந்திய

ஆட்சியாளர் வட்டாரத்திலும் அவர் மிகுந்த செல்வாக்குடையவர் என்பதை யறிந்தேன்.

சங்கரத்ன தேரர் முதலில் என்னை யழைத்துக்கொண்டு சென்றது சாரநாத்தில் தொல்பொருள் ஆராய்ச்சியாளர் அகழ்ந் தெடுத்துத் திரை நீக்கியிருக்கும் முக்கியமான ஸ்தலத்துக்கு. புராதன மூலகந்தகூடம் இருந்த இடம், தர்மராஜிக ஸ்தூபி யிருந்த இடம், அசோகன் நிறுத்தி வைத்த ஒப்பற்ற ஸ்தம்பம் இருந்த இடம், அதைச் சூழ்ந்த பல கட்டிடங்கள் எல்லாவற்றையும் விளக்கிக் காண்பித்தார். சாரநாத்திலே புத்தர் முதன் முதல் தர்ம சக்கரப் பிரவர்த்தன சூத்திரம் என்று பேருரையை நிகழ்த்திய இடத்தையும் அவர் முக்கியமாக எனக்குக் காண்பித்தார்.

சாரநாத்திலே புத்தர் வசித்த காலத்தில் அங்கு கந்தகூடம் என்ற ஆசிரமம் இருந்தது. வெவ்வேறு ஸ்தலங்களிலும் பின்னால் கந்தகூடங்கள் நிறுவப்பட்டதால் சாரநாத்தின் கந்தகூடம் மூலகந்த கூடம் என்று வழங்கப்பட்டது. அந்த ஸ்தலத்தி லிருந்தே அவர் தமது புகழ் பெற்ற தருமப் பேருரையை நிகழ்த்தினர். பிற்காலத்தில் அசோகனும் அவனுக்குப் பின் வந்தவர்களும் அங்கு மிகப் பெரிய விஹாரம் ஒன்றை எழுப்பி வைத்தார்கள். ஹியூங் சியாங் என்ற சீன யாத்திரிகன் வருணித்ததுபோல், அந்தக் கட்டிடம் பிரமாண்டமான ஒரு கோபுரத்துடன் திகழ்ந்தது என்பதில் ஐயமில்லை. சுமார் பத்தடி அகலமான சுவர்களின் அஸ்திவாரங்களைப் பார்க்கும்போது கட்டிடம் எவ்வளவு உயரமா யிருந்திருக்கும் என்று ஊகித்துக்கொள்ளலாம். இந்த விஹாரத்தின் மத்தியி லிருந்த மண்டபம் முற்றுக அழிந்து போய்விட்டது. மண்டபத்தின் முன் புற வாயில்களைக் காண்பிக்க இரு பெரும் கல் தூண்கள் மாத்திரம் நிற்கின்றன. இந்த மண்டபத் தினுள்ளேதான் ஹியூங் சியாங் விவரித்த புத்த விக்கிரகம் இருந்தது.

மகாபோதி சங்கத்தின் ஸ்தாபகரான தர்மபால பிக்ஷு 1891-ம் ஆண்டிலே சாரநாத் க்ஷேத்திரத்தைத் தரிசித்தபோது அங்கே ஒரு கல்வெட்டில் மூலகந்தகூடம் என்ற பெயர் பொறிக்கப்பட்டிருந்ததை யறிந்தார். அவருடைய முயற்சியில் இப்போது சாரநாத்தில் புதியதாக ஒரு மூலகந்தகூடம் என்ற விஹாரம் கட்டி யெழுப்பப் பட்டிருக்கிறது.

மூலகந்தகூடம் இருந்த பழைய இடத்துக்குப் பக்கத்தில் குமார தேவி கோயில் என்று சொல்லப்படும் ஒரு கட்டிடம் இருந்தது. குமாரதேவி யென்பவள் பன்னிரண்டாம் நூற்றாண்டில் கஹ்ஜியை யாண்ட மன்னன் கோவிந்த சந்திரனின் மனைவி. இவள்

தென்னாட்டைச் சேர்ந்தவள். பௌத்த மதத்தில் சேர்ந்து சாரநாத்தில் ஒரு பெரிய தவப்பள்ளி கட்டி யிருந்தாள். தென்னிந்திய சிற்ப முறையில் அந்தப் பள்ளி கட்டப்பட்டிருந்தது என்று சொல்லப் படுகிறது.

இதற்கு மேற்குத் திசையி லுள்ள இடத்திலேதான் புகழ்பெற்ற அசோக ஸ்தம்பம் இருந்தது. அற்புதமான அழகுடன் நின்ற மிகப் பெரிய இந்த ஸ்தம்பம் ஏதோ ஒரு காலத்தில் உடைந்து மூன்று துண்டுகளாகிவிட்டது. அசோகன் காலத்தில் பிக்ஷுக்களிடையே ஒற்றுமைக் குறைவு காணப்பட்டதால் சாரநாத் கல் தூணிலே அசோகன் பௌத்த சங்கத்தின் ஒழுக்கத்தைப் பற்றியும் ஒற்றுமையின் அவசியத்தைப்பற்றியும் கட்டளை வாக்கியங்களைச் செதுக்கிவைத்தான். அசோக ஸ்தம்பத்தின் உச்சியி லிருந்த சிங்க முடி இப்போது சாரநாத் பொருட்காட்சிச் சாலையில் பேணி வைக்கப் பட்டிருக்கிறது. நான்கு பக்கமும் நான்கு சிங்க முகங்கள். அவற்றின் கீழே நான்கு அசோக சக்கரங்கள். இந்தச் சக்கரங்களுக் கிடையே ரிஷபம், குதிரை, சிங்கம், யானை ஆகிய மிருக வடிவங்கள். இந்த முடி ஒரு பெரிய தாமரைப் புஷ்ப வடிவத்தின் மீது நிறுவப்பட்டிருக் கிறது. இந்த அசோக சின்னமே இந்திய அரசாங்கத்தின் முத்திரையாக இப்போது வழங்குகிறது.

சாரநாத் க்ஷேத்திரத்துக்கு வழிகாட்டி போலத் தலை நிமிர்ந்து நிற்கும் கட்டிடம் 'தம்மேக ஸ்தூபி' என்று வழங்கப்படும் தர்ம முக ஸ்தூபி. மற்றைய பௌத்த ஸ்தூபிகளைப் போலல்லாமல் இது அடித்தளத்தில் எட்டு முகங்களைக் கொண்டது. எட்டுப் பக்கத்திலும் மாடங்கள் அமைக்கப்பட்டு ஒவ்வொன்றிலும் புத்த விக்கிரகம் வைக்கப்பட்டிருந்தது. இப்போது விக்கிரகங்களை அங்கே காணவில்லை. இந்த ஸ்தூபியின் சுவரில் சில அபூர்வ கொத்து வேலைப்பாடுகள் காணப்படுகின்றன. ஸ்வஸ்திகா சின்னத்தையும் தாமரைப் பூவையும் முக்கிய அம்சங்களாக வைத்து, மிகவும் சிக்கலான பின்னல் வேலைப்பாடுக ளமைந்த வடிவங்க ளெல்லாம் நாற்புறச் சுவர்களிலும் கல்லிலே செதுக்கப்பட்டுள்ளன. குப்தர் காலத்திலே கட்டப்பட்ட இந்த ஸ்தூபி முன்பு அசோகன் எழுப்பி வைத்த ஸ்தூபி யிருந்த இடத்திலேயே கட்டப்பட்டது என்று சொல்வர்.

சங்கரத்ன தேரருடன் சாரநாத் க்ஷேத்திரத்திலுள்ள மற்றும் பல தற்காலக் கட்டிடங்களையும். சுற்றிப் பார்த்தேன். அங்குள்ள பிர்லா மடம் சிறந்த ஒரு கட்டிடம். யாத்திரிகர் தங்குவதற்கு நல்ல வசதி களைக் கொண்டது. மகாபோதி சங்கத்தின் நூல்நிலையமும்

சாரநாத்தில் பார்க்கவேண்டிய ஓர் இடம். எல்லாவற்றையும் விட முக்கியமானது சாரநாத் பொருட்காட்சிச் சாலை. சிறந்த சிற்பப் பொக்கிஷங்க ளெல்லாம் இங்கு பேணி வைக்கப்பட்டிருக்கின்றன. புத்தரின் புகழ்பெற்ற தருமோபதேசச் சிலையொன்று இந்தப் பொருட்காட்சிச் சாலையில் இருக்கிறது.

இரண்டு மணி நேரத்துக்கு அதிகமாகவே சங்கரத்ன தேரருடன் நான் சாரநாத்தைச் சுற்றிப் பார்த்துவிட்டுக் காசிக்குத் திரும்பினேன்.

பதினேழாம் அத்தியாயம்

மூன்று முனிவர்கள்

முதலிலும் நடுவிலும் கடையிலும் இனிமையான சத்தர்மத்தைப் பிரகடனம் செய்யுமாறு தமது சீடர்களுக்குக் கட்டளை பிறப்பித்துவிட்டுப் புத்தர் பிரான் உருவில்வாவுக்குத் திரும்பி வந்தார்.

வரும் வழியில் ஒரு பெரிய சோலையைக் கண்டு அங்கே ஒரு மர நிழலில் களை தீர உட்கார்ந்திருந்தார். அச்சமயம் அதே சோலையில் வேறோரிடத்திலே சில வணிகர் குலத்துச் செல்வம் படைத்த ஆண்களும் பெண்களும் உல்லாசப் பிரயாணத்தில் வந்து ஆடிப்பாடி மகிழ்ந்துகொண் டிருந்தனர். அவர்களில் ஆண்கள் முப்பது பேர். இவர்கள் ஒவ்வொருவரும் தமது மனைவியருடன் வந்திருந்தனர். ஒருவனுக்குச் சொந்தமாக மனைவி யில்லாத காரணத்தால் அவன் ஒரு விலைமாதை யழைத்து வந்திருந்தான். எல்லாரும் உபவனத்தில் களிப்புற்றிருந்த சமயத்திலே அந்த விலைமாது அவர்களுடைய பொருள் பண்டங்கள் பலவற்றை யபகரித்துக்கொண்டு மற்றவர்கள் அறியாவண்ணம் ஓடிச் சென்றுவிட்டாள். சிறிது நேரத்தின் பின்னர் விலைமாதையும் பொருளையும் காணுமல் திகைத்த கூட்டத்தில், ஆண்களாயுள்ள முப்பது இளைஞரும் அவளைத் தேடி நாலா பக்கமும் சென்று பார்த்தனர். அப்போது ஒரு மர நிழலில் அமைதியாக உட்கார்ந்திருந்த சந்நியாசியாகிய புத்தரைக் கண்டு அவர்கள், "ஸ்வாமி! இந்த வழியாக ஒரு பெண் சென்றதைப் பார்த்தீர்களா?" என்று கேட்டனர். புத்தர் தாம் ஒருவரையும் பார்க்கவில்லை யென்று சொல்லிவிட்டு, "இளைஞர்களே! எதற்காக ஒரு பெண்ணைத் தேடு கிறீர்கள்?" என்று கேட்டார். அதற்கு அவர்கள் தமக்கு நேர்ந்த கதியைச் சொல்லி எப்படியாவது அந்தப் பெண்ணைக் கண்டுபிடிக்க வேண்டு மென்று ஆவலோடு தெரிவித்தனர்.

புத்தர் பார்த்தார். இந்தச் செல்வக் குடும்பத்தில் பிறந்த இளைஞர்கள் மனம் பக்குவம் பெறக்கூடிய மனமாகக் காணப்படு கிறது. ஆகையால் தருமத்தைப் போதித்தால் ஏற்றுக்கொள்ளக் கூடியவர்கள் என்று சிந்தித்து, அவர்களிடம் கேட்டார்: "வாலிபர் களே! ஒரு பெண்ணைத் தேடிச் செல்வதா அல்லது உங்களையே நீங்கள் தேடிச் செல்வதா, எது சிறந்தது?"

இந்தக் கேள்வியைக் கேட்ட செல்வர்கள் முப்பது பேரும் சிறிது கணம் திகைத்துப் போய் நின்றார்கள். பின்னர் அவர்கள் ஐயனைப் பார்த்து, "ஸ்வாமி! எங்களையே நாங்கள் தேடுவதுதான் விசேஷமானது," என்று பதில் கொடுத்தனர்.

பகவான் அவர்களை உட்காரச் சொல்லி அந்த இடத்திலேயே தருமத்தை உபதேசித்தருளினர். அறவுரை கேட்ட முப்பது இளைஞரும் உபதேச முடிவில் இல்லறத்தைத் துறந்து பௌத்த சங்கத்தில் சேர்ந்துகொண்டனர். இவர்களை பத்ரவர்க்க பிக்ஷுக்கள் என்று வழங்குவர். இந்தச் சம்பவத்துக்குப் பின்னர் புத்தர் மேலும் தொடர்ந்து நடந்து உருவில்வா வந்து சேர்ந்தார்.

உருவில்வாவில் அந்தக் காலத்தில் அக்னிஹோத்திரம் செய்து தவத்தில் பல சித்திகளைப் பெற்ற ஜடிலர்கள் என்ற ரிஷிகள் பலர் இருந்தனர். பல்குனி யாற்றங் கரையில் பல இடங்களில் வசித்து வந்த இந்த ரிஷிகளில் மிகவும் புகழ் பெற்றவர் அக்னி காசியபர் என்ற பெயருடைய மகரிஷி. இவரது தவ வலிமையால் ஆயிரக் கணக்கான அற்புத சித்திகளையெல்லாம் செய்து காண்பிக்கக் கூடிய அரிய சாதனைகளைப் பெற்றிருந்தார். இவர் சீடர்கள் ஐந்நூறு பேரும் இவரும் சடாமுடி தரித்திருந்து வேள்வித் தீ மூட்டி அக்னியை வழிபட்டு அதன் மூலம் நாளுக்கு நாள் சித்திகளைப் பெருக்கிக்கொண்டு வந்தனர்.

இந்த அக்னி காசியபரைப் போலவே நதி காசியபர், கயா காசியபர் என்ற மற்றும் இரு ரிஷிகள் பல்குனி யாற்றின் கீழ்க் கரையிலே தமது சீடர்களுடன் அக்னி ஹோத்திரத்தில் ஈடுபட்டிருந்தனர். அவர்களும் தவ வலிமை பெற்றவர்கள். நதி காசியபருக்கு முந்நூறு சீடர்களும், கயா காசியபருக்கு இருநூறு சீடர்களும் இருந்தனர். யாவரும் ஜடிலர்கள் என்றே அழைக்கப்பட்டனர்.

புத்தர் உருவில்வாவுக்கு மீண்டும் வந்ததே இந்த ஜடிலர்களுடைய தவ முறை பயனற்ற தென்பதை நிரூபித்து அவர்களை மாற்றவேண்டு மென்ற நோக்கத்தோடுதான். ஏற்கெனவே அவர் உருவில்வாவில் தவம் செய்துகொண் டிருந்த காலத்தில் அந்த ரிஷிகள் செல்வாக்குப் பெற்றிருந்தனர். கௌதமரும் அவர்களைப் போல் தவ மியற்றி அரிய சித்திகளை யெல்லாம் பெற்று அவற்றை யுபயோகித்தும் பார்த்தார். ஆனல், அத்தகைய சித்திகள் இம்மையில் சில பயனைத் தந்தாலும் பாரமார்த்தமான பயனைத் தரா என்று கண்டார். ஆகவேதான், மெய்ஞானம் தேடிச் சம்போதி பெற்ற பின் இந்த வேள்வி முறைக ளெல்லாம் பயனற்றவை என்று தாம் கண்ட முடிவை எடுத்துச் சொல்ல ஒரு சந்தர்ப்பத்தைத் தேடி

வந்தார். அக்னி காசியபரின் தவ வலிமையும் அவர் அடைந்துள்ள சித்திகளும் அவருக்கு மகரிஷி என்ற புகழைக் கொடுத்திருந்தன. ஆகவே, புத்தர் அந்த முனிவரை நேரில் கண்டு இருத்தி ஆற்றல்களைக் காண்பித்து அவர் அகம்பாவத்தை யடக்கி, அவருடைய சித்திகள் பயனற்றவை என்று நிரூபிப்பதற்கு ஒரு சந்தர்ப்பம் தேடி வந்தார்.

இந்த இடத்திலே புத்தர் அனுஷ்டித்த வழி ஒப்புக் கொள்ளத்தக்கதா என்பதைப் பற்றிப் பலர் சந்தேகம் கொள்ளக்கூடியதாயிருக்கிறது. மந்திர தந்திரங்களிலும் மாய வித்தைகளிலும் புத்தர் நம்பிக்கை கொள்ளாதவர். அவற்றை அறவே ஒதுக்கிவிட வேண்டுமென்றும் பல தடவை தமது சீடர்களுக்கு உபதேசித்து வந்தவர். அவரே அவற்றில் நன்கு சித்தி பெற்றிருந்தாலும் ஒருபோதும் ஈடுபட விரும்பவில்லை யென்று சரித்திரம் கூறுகிறது. அவருடைய சீடர்களில் முக்கியமானவரான மௌத்கல்யாயனர் ஒரு தடவை சில அபூர்வ சித்திகளைச் செய்தபோது புத்தர் மிக வன்மையாகக் கண்டித்தார் என்றும் சொல்லப்படுகிறது. அப்படி யிருக்க, காசியபர் முதலிய ஜடில முனிவர்களுடன் சித்திகளில் போட்டி யிட்டு அவர்களை வெல்ல இந்த மார்க்கத்தை புத்தர் அனுசரித்தது எப்படிப் பொருந்தும் என்று ஆராய்ச்சியாளர் கேட்கிறார்கள்.

எப்படி யிருந்த போதிலும் புத்தர் சரித்திரத்திலே இது ஒரு முக்கிய சம்பவமாகக் கூறப்பட்டிருக்கிறது. அக்னி காசியபரின் அபூர்வ பலத்தை யெல்லாம் வென்று அவர் நாணித் தலை குனிந்து தம் அக்னிஹோத்திர யாகமுறையை விட்டு பௌத்த தருமத்தைச் சரணடைய மூவாயிரத்தைந்நூறு சித்திகளைச் செய்து காட்டினர் என்ற கதை விசித்திரமானது.

மகரிஷியாகிய உருவில்வா காசியபர் உறையும் ஆசிரமத்துக்கு வந்தார் புத்தர். முன்னமே அவரை யறிந்திருந்தா ராகையால் மகரிஷி காசியபர் புத்தரைப் பார்த்து, "கௌதம! ஏது இந்தப் பக்கம்?" என்று விசாரித்தார். புத்தர் பதிலாக, "காசியபரே! உருவில்வாவுக்கு வந்த இடத்தில் தங்களையும் தரிசித்துவிட்டுச் செல்லலாம் என்று வந்தேன். இன்றிரவு இங்கேயே தங்கலாம் என்று விரும்புகின்றேன். ஆகையால், தங்கள் யாகசாலையில் நான் தங்குவதற்கு இடமளித்தால் நன்றாயிருக்கும். தங்கள் சித்தம் எப்படியோ," என்றார். காசியப மகரிஷி சிந்தித்துப் பார்த்தார்.

"இந்த சிரமணன் யாகசாலையில் தங்குவதற்கு இடம் கேட்கிறார். இவரது நோக்கந்தான் என்ன? சித்திகளில் தமது ஆற்றலைக் காண்பிக்கவே இங்கு வந்திருக்கவேண்டும்" என்று ஆலோசித்து

விட்டு கௌதமரைப் பார்த்து, "சிரமணரே! ஆசிரமத்தில் வேறிடங்க ளிருக்க யாகசாலையை எதற்கு விரும்புகிறீர்! அங்கே மிகவும் கொடிய ஒரு நாகம் இருக்கிறது. அதன் சக்தியை அளவிட முடியாது. ஆகையால் அந்த இடத்தில் தாங்கள் தங்குவது ஆபத்து" என்றார்.

புத்தர் மீண்டும் வற்புறுத்தி, "நாகம் எவ்வளவு கொடியதா யிருந்தாலும் என்னை ஒன்றும் செய்ய முடியாது. ஆகையால், எனக்கு அங்கேயே இடம் தருமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்," என்று கேட்டார். காசியபர் மறுக்கவில்லை.

புத்தர் யாகசாலைக்குள் நுழைந்தார். சற்று நேரத்துக் கெல்லாம் யாகத் தீயி லிருந்து மிகக் கொடிய ஒரு நாகம் புறப்பட்டுச் சீறி யெழுந்து புத்தர் மீது நச்சுப் புகையை உமிழ்ந்தது. புத்தர் அதற்கு எதிராகத் தமது இருத்தி ஆற்றலைக்கொண்டு நச்சுப் புகையை நாகத்தின் மீதே பரவச் செய்தார். நாகம் பின் வாங்கி மறுபடியும் தோன்றி அக்னியைக் கக்கியது. புத்தர் மிகவும் பயங்கரமான அக்னிச் சுவாலையை எழச் செய்தார். இவ்வாறு நாகத்துக்கும் புத்தருக்கும் பெரிய போராட்டம் நடந்து இறுதியில் கௌதமரின் சித்திகளுக்குக் கட்டுப்பட்ட நாகம் அறிவிழந்து வீழ்ந்து மடிந்தது.

மறுநாட் காலையில் ஜடிலர்கள் நாகத்தின் கொடுமைக்குப் புத்தர் ஆளாகியிருப்பார் என்று நம்பி யாகசாலைப் பக்கம் வந்தார் கள். அப்போது புத்தர் அந்த நாகத்தைத் தமது பிக்ஷாபாத்திரத்தில் போட்டுக்கொண்டு வெளியே வந்து, "காசியபரே! இதோ யாக சாலையி லிருந்த நாகம்! அது எழுப்பிய தீயை என்னுடைய தீ அவித்துவிட்டது," என்றார். இதைக் கண்ட மகரிஷி காசியபர், "இந்த சிரமணன் சித்திகளில் வல்லவன் என்பதை மறுக்க முடியாது. ஆனால், என்னைப் போல் இவர் தவத்தில் மேம்பட்ட மகரிஷி யல்ல" என்று சிந்தித்துக்கொண்டே, "கௌதம! இங்கேயே சில நாள் தங்கி யிருந்து செல்லக் கேட்டுக்கொள்ளுகிறேன்" என்றார். புத்தரும் சரி யென்று இணங்கினர்.

அதன் பின்னர் எத்தனையோ சந்தர்ப்பங்களில் புத்தர் பல வித மாய லீலைகள் செய்தார். ஏழ்கடல்களைத் தாண்டி ஒரு நொடியில் பழம் பறித்து வந்தார். மந்திர சக்தியால் மரக்கட்டைகளை யெல் லாம் விறகாகத் தறித்துக் கொடுத்தார். பெரு வெள்ளம் பாய்ந்த போது தாம் உட்கார்ந்திருந்த இடத்தில் தண்ணீர் செல்லவொட்டா மல் தடுத்து நிறுத்தினர். இங்ஙனமாக ஒவ்வொரு தடவையும் புத்த ரின் சித்தியைப் பார்த்துவிட்டும் மகரிஷி காசியபர், "என்னைவிட

இவர் பெரியவரல்லர்" என்ற அகங்காரத்தை விடவில்லை. முடிவில் மூவாயிரத்து ஐந்நூறு சித்திகளைக் காண்பித்த பின்னர் ஒரு நாள் புத்தர் காசியபரைப் பார்த்து, "காசியப! உமது உள்ளம் இன்னும் தூய்மை யடையவில்லை. அகங்காரம் என்ற இருள் அகலவில்லை. அருகத் நிலையை இன்னும் நீர் பெறவில்லை. நீர் உமது வழியை மாற்றிக்கொள்ள வேண்டும்" என்றார். காசியபர் உணர்ந்தார். புத்தர் சொன்னது அவரைச் சிந்திக்க வைத்தது. முடிவில் அவர் சாஷ்டாங்கமாக விழுந்து புத்தர் பாதங்களை நமஸ்கரித்து, "பகவானே! எனக்குத் தரும தீக்ஷை கொடுத்தருள வேண்டும்" என்று கேட்டுக்கொண்டார்.

ஆனால் புத்தர் அவரைப் பார்த்து, "ஐந்நூறு சீடர்களுக்குத் தலைவரா யிருக்கும் நீர் அவர்களிடம் ஒரு வார்த்தை சொல்லாமல், அவர்களைக் கலந்து ஆலோசிக்காமல் திடீரென இந்த முடிவுக்கு வருவதை நான் ஏற்றுக்கொள்ளலாகாது. ஆகையால், அவர்களைக் கேட்ட பின் வரலாம்" என்றார். காசியபர் சரி யென்று தமது சீடர் களிடம் போய் நிலைமையைச் சொன்னார். அதற்கு ஜடிலர்களாகிய அச்சீடர்கள், "மகரிஷி! அந்த சிரமணருடைய சித்திகளைப் பார்த்து நாங்கள் ஏற்கெனவே அவர் மீது நம்பிக்கையும் மதிப்பும் கொண்டு விட்டோம். தாங்கள் இப்போது அவர் மார்க்கத்தை யனுசரிப்ப தானால் நாங்களுமே சேர்ந்து வருகிறோம்" என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர்.

ஜடில ரிஷிகள் யாவரும் தமது சடைகளை முண்டிதம் செய்தனர். யாகசாலைகளைப் பிரித்து அர்க்கியங்களை யெல்லாம் ஆற்றில் கொட்டினர். புத்தரிடம் சரணடைந்து தீக்ஷை பெற்றுக்கொண்டு பிக்ஷுக்களாயினர்.

மறுநாட் காலை ஆற்றங்கரைக்குச் சென்ற நதி காசியப முனி வரின் சீடர்கள் ஆற்று வெள்ளத்திலே அர்க்கியப் பொருள்களும் சடை முடிகளும் மிதந்து வருவதைக் கண்டதும் தமது குருவிடம் சென்று தெரிவித்தனர். உருவில்வா காசியபருக்கும் அவரது சீடர் களுக்கும் ஏதோ தீங்கு நேர்ந்துவிட்டதென்று உணர்ந்த நதி காசிய பர் உடனே அக்னி காசியபரின் ஆசிரமத்துக்குச் சென்றார். அங்கு எவரையும் காணமல் மேலும் சென்றபோது கௌதம முனிவருடன் அவர்கள் யாவரும் சடைகளை மழித்துவிட்டு பிக்ஷுக்கள் கோலத்தில் நிற்பதைக் கண்டு திகைப்புற்று, "சோதர! இதுவென்ன கோலம்? இது தங்களுக்கு ஏற்றதா?" என்று கேட்டார். நதிகாசியபர் நேரிலே வந்திருப்பதைக் கண்ட உருவில்வா காசியபர் மகிழ்ச்சி யடைந்து, "சகோதரரே! இதுவே உத்தம மார்க்கம் என்பதை நான் கண்டு

கொண்டேன். வேள்வித் தீயில் ஒன்றும் பயனில்லை யென்பதையும் உணர்ந்தேன். இதுவே உமக்கும் பொருந்தும்" என்றார். யாவர்க்கும் முதியோராகிய உருவில்வா காசியபரே இங்ஙனம் கௌதம சந்நியாசியின் சீடராக மாறியதைக் கண்ட நதி காசியபர் தமது சீடர்கள் முந்நூறு பேரையும் அழைத்து வந்து புத்தரிடம் சரணடைந்து பிக்ஷுக்களாயினர். அவ்வாறே மூன்றாவது முனிவரான கயா காசியபரும் சீடர்களும் பௌத்தத்தில் சேர்ந்து கொண்டனர்.

இந்த மூன்று வேத ரிஷிகளையும் அவர்களது சீடர்களையும் பௌத்த சங்கத்தில் புத்தர் சேர்த்துக்கொண்ட செய்தி அவரது தருமத்தின் பெருமைக்கு அடையாளம் என்று பௌத்தம் கொண்டாடுகிறது. மிக உறுதியாக வேத வேள்விகளில் நம்பிக்கை கொண்டு சித்திகளில் வல்லவர்களாக மகரிஷிகள் என்று பெயர் பெற்றிருந்த இவர்களைப் புத்தர், தாம் அப்பியசிக்கக் கூடாது என்று தவிர்த்து வைத்த இருத்தி யாற்றல்களையே உபயோகித்து வெற்றி கொண்டது, வேள்விக்கும் மேலானது தரும மார்க்கம் என்பதை நிரூபிக்கவே.

ஜடில முனிவர்களைச் சங்கத்தில் சேர்த்துக் கொண்டதும் புத்த பகவான் அவர்கள் இதுகாறும் கைக்கொண்டிருந்த அக்னி வழிபாடும் வேள்வியும் பயனற்ற கருமங்கள் என்பதை யுணர்த்தி வைக்க ஓர் உபதேசம் செய்தார். மூன்று முனிவர்களையும் அவர்களது சீடர் ஆயிரவர்களையும் அழைத்துக்கொண்டு செல்லும் வழியிலே கயா சீர்ஷம் என்ற குன்றின்மேல் வைத்துப் பின் வருமாறு பேசினார்:

"பிக்ஷுக்களே! சர்வமும் தீப்பற்றி எரிகின்றன. இங்ஙனம் தீப்பற்றி எரியும் பொருள்கள் எவை?

"கண்ணுகிய இந்திரியம் எரிகின்றது; கண்ணினால் பார்க்கப்படும் உருவம் எரிகின்றது. கண்ணின் நுகர்ச்சி எரிகின்றது; காட்சியே எரிகின்றது; காட்சியின் விளைவு—நல்லதும் கெட்டதும், இன்பமளிப்பதும் துன்பமளிப்பதும்—எரிகின்றது.

"இவை எதனால் எரிக்கப்படுகின்றன? காமம் என்னும் தீயால், வேட்கை யென்னும் தீயால், துவேஷம் என்னும் தீயால் எரிக்கப்படுகின்றன.

"கண் மாத்திரமா எரிகின்றது? இல்லை, கண்ணோடு சேர்ந்த மெய், வாய், மூக்கு, செவி, மனம் என்ற ஆறு பொறிகளுமே காமம், வேட்கை, துவேஷம் என்னும் தீயால் எரிக்கப்படுகின்றன. பிறப்பு, இறப்பு, பிணி, தளர்ச்சி, வேதனை யாகிய தீயால் சுடப்படுகின்றன.

"ஆகையால், பிக்ஷுக்களே! சன்மார்க்கத்தை நாடிச் செல்லும் உத்தமமான சீடன் கண்ணிலிருந்தும் காட்சியி லிருந்தும் விலகிக் கொள்ளுகிறான். அதுபோலவே, மற்றைய புலன்களி லிருந்தும் விலகிக்கொள்ளுகிறான். புலன்களை யறுத்தவன் விமுக்தி பெறு கிறான். மறு பிறப்பில்லை யென்பதை யுணருகின்றான். அவன் தருமம் நிறைவெய்தி நிருவாண திசையை யடைகிறான்."

இந்த அறவுரையைக் கேட்டு முன்பு ஜடிலர்களா யிருந்து புத்தரின் சங்கத்தைச் சேர்ந்துகொண்ட யாவரும் அருகத் நிலையை எய்தினர்.

புத்தர் இதன் பின்னர் உருவில்வாவிலும் கயாவிலும் சில காலம் தங்கி யிருந்துவிட்டு, முன்பு பிம்பிசார மன்னனுக்குக் கொடுத்த வாக்குப்படி இராஜகிருகத்துக்குச் சென்றார். அவருடன் உருவில்வா காசியபரும் அவர் சகாக்களும் சீடர்களுமாக யாவரும் பின் தொடர்ந் தனர்.

போதிமாதவனாகிய புத்தர் தலைமையில் ஆயிரம் பிக்ஷுக்கள் அணிவகுத்து நடந்தனர். ஊர்ப் புறத்தே யுள்ள மக்கள் யாவரும் தேவர்களே பூமியி லிறங்கி வருகிறார்களோ என்று ஐயமுற்றனர். மேலும் பல மக்கள் இந்த ஊர்வலத்தில் கலந்துகொண்டு இராஜ கிருக நகரத்தின் வெளிப் புறத்தே யுள்ள யஷ்டி வனம் என்ற உப வனத்தில் தங்கினர்.

இந்தச் செய்தியைக் கேள்வியுற்ற மகத மன்னன் பிம்பிசாரன் தனது மந்திரி பிரதானிகள் புடைசூழ எண்ணற்ற அந்தணர்களையும் அழைத்துக்கொண்டு சென்று கௌதமர் தங்கியிருந்த உபவனத்தை யடைந்தான். அங்கே அவன் கண்ட காட்சி அவனுக்கு வியப்பைத் தந்தது.

முன்பு தம்முன் சாதாரண சிரமணனைக் காட்சி யளித்த கௌதம பிக்ஷுவின் முகத்தில் இப்போது ஞான ஒளி பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. விவரிக்க முடியாத ஒரு பிரகாசம் அது. அவர் பக்கத்திலே புகழ் பெற்ற உருவில்வா காசியபரும் அவரது சீடர் களும் உட்கார்ந்திருக்கின்றனர். காசியப மகரிஷியின் மகத்துவத் தைப்பற்றி பிம்பிசார மன்னன் ஏற்கெனவே அறிந்திருந்தான். மகா வல்லமை பொருந்திய தவ சிரேஷ்டர் அவர். சாதாரணமாக அவரைக் கண்டு கொள்வதே அதிசயம். அப்படிப்பட்ட மகான் இங்கு எழுந்தருளிய காரணம் யாது? ஒருவேளை கௌதம முனிவர் இந்த மகரிஷியின் மதிப்பைத் தேடி அவர் சீடராகிவிட்டாரா? அல்லது காசியபரே கௌதமருக்குச் சீடராகிவிட்டாரா? உண்மை எது? இந்தச் சந்தேகத்தை எவ்வாறு தீர்த்துக்கொள்வது?

இவ்வாறுக மகத மன்னன் ஐயப்பாடுற்றதை யுணர்ந்த புத்தர், பிம்பிசாரனதும் அவன்கூட வந்துள்ள அந்தணர்களதும் சந்தேகத்தை நீக்க ஒரு வழி செய்தார். அவர் உடனே காசியரைப் பார்த்துப் பின் வருமாறு வினவினர்: "உருவில்வாவில் வாழும் காசியபரே! மகரிஷி என்று வணங்கப்பட்ட தாங்கள் அக்னி ஹோத்திரத்தைக் கைவிட்டதன் காரண மென்ன?"

காசியபர் எழுந்தார். புத்தரை வணங்கிவிட்டு, "பஞ்சப் புலன்களுக்கும் மனத்துக்கும் இன்பத்தைத் தரும் சக்திகளே யாகத்தீயில் நான் கண்ட மோக்ஷம். ஆனல், இப்போது அவையெல்லாம் உபயோகமற்றவை யென்பதையும் உண்மையான இன்பத்தைக் தர முடியாதவை என்பதையும் உணர்ந்துகொண்டேன்" என்றார்.

புத்தர் மேலும் கேட்டார்: "வேள்வித் தீயிலல் உண்மையான இன்பத்தைப் பெற முடியவில்லை என்று சொன்னீர்கள். அப்படியானல் சாஸ்வதமான இன்பத்தை இப்போது காண வழி தெரிந்து விட்டதா? அது என்ன?''

"ஆம். சாஸ்வதமானதும் மெய்யானதுமான மார்க்கத்தை இப்போது கண்டு கொண்டேன். தரும மார்க்கமே சன்மார்க்கம். வேள்வி மார்க்கத்தில் இன்பமில்லை; நிலையில்லை. அது பிறவிப் பிணியை வேரோடு களையும் பெற்றியைப் பெறவில்லை."

இங்ஙனம் விடையளித்த உருவில்வா காசியபர், இதுவரை எந்த மானிடரையும் தமக்கிணை யென்று கருதாதவர், மகத மன்னன் சாட்சியாக, அங்கு கூடியிருந்த மகதப் பிராமணர்கள் பல்லாயிரவர் சாட்சியாக, தாம் புத்தரின் அடிமையாகிவிட்ட உண்மையை நிரூபிக்க அவர் பாதங்களில் சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரித்துவிட்டு, "பகவானே, தாங்கள்தான் எனது குருநாதன், நான் தங்கள் சீடன்" என்று மும்முறை சொல்லி வணங்கினர்.

இந்தக் காட்சியைக் கண்ட பிம்பிசாரனும் மகதநாட்டு அந்தணர்களும் ஆச்சரியப்பட்டனர். மகாவல்லமை பொருந்திய உருவில்வா காசியப மகரிஷியே கௌதமருக்கு அடிமையாகிவிட்டாரானல் உண்மையில் கௌதமர் பெறற்கரிய பேறு பெற்ற சம்புத்த ஞானி என்பதில் சந்தேகமில்லை யென்று போற்றினர்.

அன்றிலிருந்து பிம்பிசார மன்னன் புத்தரைத் தெய்வமெனத் துதித்தான். அடிக்கடி புத்தரின் தரும உரைகளைக் கேட்டு இன்புற்றான். இராஜகிருகத்து கிருத்திரகூட மலையின் உச்சியிலமைந்த குகையொன்றில் வசித்து, அம்மலையி லிருந்தே தமது சீடர்களுக்கெல்லாம் அபிதர்மக் கருத்துக்களை விளக்கி வந்த புத்தர் அங்கு பல நாள் தங்கி யிருந்தார். பிம்பிசாரன் அந்தக் குன்றுக்குச்

செல்லும் பாதையைச் செப்பனிட்டு வைத்தான். ஒவ்வொரு நாளும் அப்பாதையில் தனது ரதத்தில் ஏறிச் சென்று, பின்னர் பாதி வழியிலேயே இறங்கிக் கால் நடையாகச் சென்று புத்த தரிசனம் பெற்றுத் தருமங் கேட்டு வந்தான்.

இங்ஙனம் நடந்துகொண்டிருக்கையில் ஒரு நாள் பிம்பிசாரன் தன் மனக் கிடக்கையைப் போதிவேந்தனிடம் தெரிவித்தான். "மாமுனிவ! என் இளமைப் பருவத்தில் நான் ஐந்து காரியங்களில் சித்திபெற வேண்டுமென்று விரும்பி யிருந்தேன். இம் மகிதலத்துக்கு மன்னனாக வேண்டுமென்பது முதல் ஆசை. எனது ஆட்சிக்காலத் திலேயே புத்தாவதாரம் ஏற்பட்டால் பகவான் எனது இராச்சியத் துக்கு எழுந்தருளவேண்டும் என்பது எனது இரண்டாவது ஆசை. அங்ஙனம் வரும்போது நான் அவரை வரவேற்று நேரில் வணங்கக் கிடைக்கவேண்டு மென்பது மூன்றுவது. பகவான் எனக்கு அறத் தினைப் போதிக்கவேண்டு மென்பது நான்காவது ஆசை. ஐந்தாவ தாக, இந்தத் தருமத்தை நான் கேட்டு உணர்ந்துகொள்ள வேண்டு மென்பது. ஐயனே! இந்த ஐந்து விருப்பங்களும் இன்று நிறை வேறிவிட்டன என்று கண்டு உள்ளம் மகிழ்ச்சி யடைகின்றது. என் மன விருள் நீங்கி ஒளி பெற்றுவிட்டேன். உண்மைப் பொருளைக் கண்டுவிட்டேன். தாங்களே எனக்குத் தாரகம். தருமமே எனக்குத் தாரகம். சங்கமே எனக்குத் தாரகம்" என்று சொல்லிப் புத்தரின் பாதாரவிந்தங்களைத் தொட்டு நமஸ்கரித்துத் திரிசரணங்களை ஓதி வணங்கினன். அன்றே பிம்பிசாரன் புத்தரின் உபாசகனைன். அவனைத் தொடர்ந்து இராஜகிருகத்தி லிருந்த பல பிரபுக்களும் அந்தணர்களும் கிருகஸ்தர்களா யிருந்துகொண்டே பௌத்த உபாசகர்களாயினர்.

பின்பு புத்த பகவான் இராஜகிருகத்தில் கிருத்திரகூட மலையில் வசிக்கும்போதே பிம்பிசார மன்னன் தன்னிட மிருந்த வேணுவனம் என்ற உபவனத்தை பௌத்த சங்கத்தின் உபயோகத்துக்கெனத் தானம் செய்து அங்கே ஓர் ஆராமத்தையும் (ஆசிரமம்) கட்டிக் கொடுத்தான்.

புத்தருடைய தருமோபதேச வாழ்விலே இராஜகிருக நகரம் எவ்வளவோ முக்கியத்துவம் பெற்றிருந்தது. அவர் உலும்பினியில் பிறந்தும் அவர் வாழ்க்கையில் எப்போதாவது அந்த ஸ்தலத்தை எட்டியும் பார்த்ததாகத் தெரியவில்லை. இருபத்தொன்பது ஆண்டுகள் இளவரசனாக வாழ்ந்து இல்லறம் நடத்திய கபிலவஸ்துவுக்கு அவர் துறவுக் காலத்தில் இரண்டே யிரண்டு தடவை விஜம் செய்திருக்கிறார். உருவில்வாவில் ஆறு வருட காலம் தவம் செய்து ஞானோபதேசம்

பெற்ற பின்னர் காசியப சகோதர ரிஷிகளை மத மாற்றம் செய்வ தற்கு மாத்திரம் அங்கு ஒரு தடவை வந்திருந்தார். அதன் பின்னர் அந்த ஸ்தலத்திற்கு அவர் எப்போதாவது சென்றதாகத் தெரிய வில்லை. ஆனால் அவர் மகதத்திலும் கோசலத்திலும் பல நகரங்களை யும் கிராமங்களையும் தரிசித்துப் பல இடங்களில் உபதேசங்கள் செய்த போதிலும் அந்தத் தரும யாத்திரையில் பெரும்பாலான நாட்களை இராஜகிருகத்திலும் சிராவஸ்தியிலுமே செலவிட்டிருக்கிறார் என்று தெரிகிறது. இராஜகிருகம் மகத மன்னன் பிம்பிசாரனுடைய தலைநகரம். சிராவஸ்தி கோசல மன்னன் பிரசேனஜித்தின் தலைநகர். மகத மன்னனின் மனைவி கோசல மன்னனுக்குத் தங்கை. இவ்வாறு இரு நாட்டு மன்னர்களின் அபிமானத்தையும் பெற்றுக்கொண்டு அவர்கள் தலைநகரங்களிலேயே பெரும்பாலான நாட்கள் வாழ்ந்து வந்தார் புத்தர்.

★

இராஜகிருகத்தில் அவர் பிம்பிசார மன்னனையும் அவனைச் சேர்ந்த பலரையும் பௌத்த மதத்தில் சேர்த்த பிறகு ஒரு முக்கியமான சம்பவம் நிகழ்ந்தது. புத்தரின் வலக்கரமும் இடக் கரமும் என்று சொல்லத்தக்க அவரது முதன்மையான சீடர்கள் இருவர் அவருக்கு இராஜகிருகத்திலேதான் அச்சமயத்தில் கிடைக்கப் பெற்றனர். அறிவிலும் ஆற்றலிலும் ஒழுக்கத்திலும் தலை சிறந்த அந்த இரு சீடர்களும் இராஜகிருகத்தைச் சேர்ந்தவர்களே. அவர்களுடைய பெயர்கள் பௌத்த சரித்திரத்தில் புத்தருக்கு அடுத்த படியில் மகிமை பெற்றவை. புத்தருடன் மிக நெருங்கி அவரது மெய்ப் பாதுகாப்பாளராக விளங்கிய சீடர் ஆனந்தருக்குக் கூட அவ்வளவு பெருமையை பௌத்த நூல்கள் அளிக்கத் துணியவில்லை. அந்த இரு சீடர்களின் பெயர்கள்தான் மௌத்கல்யாயனரும் சாரிபுத்திரரும். அவர்கள் புத்தரைச் சரணடைந்து அவரது சீடர்களாக வந்தது ஒரு பெரிய கதை.

புத்தர் காலத்திலே, ஏற்கெனவே ஸ்தாபிக்கப்பட்டு வளர்ந்த பல சிரமண சங்கங்களிருந்தன. இவற்றில் ஆறு சங்கங்களின் பெயர்கள் பௌத்த நூல்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. இந்த சிரமண சங்கங்களுக்குத் தலைவர்களா யிருந்த மகான்கள் பூரண காசியபர், மக்கலி கோசலர், அஜித கேச கம்பளர், பகுத கச்சாயனர், சஞ்சயர், நிகண்டநாத புத்திரர் ஆகியோர். இவர்களில் நிகண்ட நாத புத்திரர் என்பவர்தான் ஜைன சமயத்து மகாவீரர். மற்றவர் என்ன மதங்களுக்குத் தலைவர்கள் அல்லது என்ன கொள்கையைக் கடைப் பிடித்தவர்கள் என்பது தெளிவாயில்லை. ஆனால், அக்

காலத்தில் சாங்கியம், யோகம், ஜைனம், ஆஜீவகம் முதலியன நன்கு வளர்ந்திருந்தன என்பதற்குச் சரித்திர ஆதாரங்கள் காணப்படுகின்றன. மேற்சொன்ன சமயத் தலைவர்கள் யாவரும் புத்தருக்கு வயதில் மூத்தவர்கள். அவர்களுடைய சீடர்களும் பௌத்த சங்கத் தாரைவிட அதிகமாகவே இருந்தனர். முக்கியமாக இந்த சிரமண சங்கங்கள் இராஜகிருகம், நாலந்தா, காசி, வைசாலி, சிராவஸ்தி முதலிய பகுதிகளில் மக்களிடம் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்தன. ஒவ்வொரு மதத்தினரும் தத்தம் மதமே சிறந்தது, தத்தம் தவவொழுக்கமே சிறந்தது, தத்தம் சித்தாந்தமே பெரிது என்று நிலைநாட்ட அவர்களுக்குள்ளே அடிக்கடி வாதப் பிரதிவாதங்கள் அதிகமாய்க் காணப்பட்டன,

இந்த நிலையில், இராஜகிருகம் மகத நாட்டின் தலைநகராயிருந்ததாலும், மகத மன்னன் பிம்பிசாரன் எல்லா மதத்தினரிடமும் அன்பும் பக்தியும் காண்பித்து ஆதரவு கொடுத்தமையாலும் வேறு வேறு மதத்தினரின் செல்வாக்கு இங்கு அதிகமாயிருந்தது. புத்தரின் வருகைக்குப் பின் பிம்பிசாரன் அவர் தருமத்தை மேற்கொண்டிருந்த போதும் மற்றைய சமயத்துச் சிரமணர்களுக்கு அவன் கொடுத்து வந்த ஆதரவும் காண்பித்து வந்த அபிமானமும் குறையவில்லை.

இராஜகிருகத்திலே அப்போது சஞ்சயன் என்ற பரிவிராஜகர் வசித்து வந்தார். யோக மார்க்கத்தில் சிறந்த இத் தலைவருக்கு ஏராளமான சீடர்களிருந்தனர். யாவரும் இருத்தி ஆற்றல்களில் வல்லவர். அவருடைய சீடர்களில் இருவரான மௌத்கல்யாயனரும் சாரீ புத்திரரும் ஒரே வயதினர்கள். இளமையிலிருந்தே ஒன்றுப்படித்து வளர்ந்து ஒருவரைப் பின் பற்றி மற்றவரும் இல்லறத்தை விட்டுத் துறவறம் பூண்டு சஞ்சய முனிவரிடம் சேர்ந்துகொண்டனர்.

மௌத்கல்யாயனர் என்பவரின் இயற் பெயர் கோலிதர் என்பது. இவர் அந்தணர் குடும்பத்திலே இராஜகிருகத்துக்குப் பக்கத்திலுள்ள ஒரு கிராமத்தில் பிறந்தவர். சாரீபுத்திரர் என்பவர் இராஜகிருகத்தை யடுத்துள்ள நாலந்தாவைச் சேர்ந்தவர். இவர் தாயார் சாரீ அல்லது சாரத்வதி என்ற ஒரு பிராமணப் பெண். ஆகையால் இவர் சாரீபுத்திரர் என்று பெயர் பெற்றார். இவருடைய இயற்பெயர் உபதிஸ்ஸர்.

இந்த இருவரும் சஞ்சயரிடத்தில் தவ முறைகள் பயின்று வரும் காலத்தில் எவர் முதலிலே மெய்ப்பொருள் உண்மையைக் காண்கிறாரோ அவர் உடனே மற்றவருக்குத் தெரிவித்து விட வேண்டும் என்று ஒப்பந்தம் செய்து வைத்திருந்தனர்.

ஒரு நாள் சாரீபுத்திரர் இராஜகிருகத்து வீதியில் நடந்து வரும்போது புத்தரின் சீடர்களில் ஒருவராகிய அசுவஜித் பிக்ஷா பாத்திர மேந்திக்கொண்டு நடந்து செல்வதைக் கண்டார். அவருடைய முக விலாசத்தையும் நடையையும் கண்ட சாரீபுத்திரர், "உண்மையில் இவர் ஒரு பக்குவத் துறவியா யிருத்தல் வேண்டும். அருகத்துவம் பெற்ற பிக்ஷுக்களில் ஒருவர் என்பதில் சந்தேக மில்லை", என்று தீர்மானித்துக்கொண்டு, "இப்போது நாம் போய்ப் பேச்சுக் கொடுப்பது முறையல்ல. அவர் தமது பிச்சை யெடுத்தலை முடித்த பின் பேசிப் பார்க்கலாம்" என்று நினைத்து அசுவஜித்தரைப் பின் தொடர்ந்தார்.

சிறிது வேளையில் அசுவஜித் பிச்சையெடுத்தலை முடித்துக் கொண்டு ஆசிரமத்துக்குத் திரும்பினர். அப்போது சாரீபுத்திரர் அவரை யணுகி, "நண்பரே! தங்கள் முகத்திலே ஒரு ஒளி காணப் படுகிறது. தெளிவு தெரிகிறது. தாங்கள் பின்பற்றும் குரு யாரோ?" என்று கேட்டார். அசுவஜித் தாம் சாக்கிய முனிவராகிய கௌதமரின் சீடர் என்றும் அவர் சம்போதிஞானம் பெற்ற புத்தர் என்றும் தெரிவித்தார். சாரீபுத்திரர் தொடர்ந்து, புத்தர் என்ன கொள்கையைப் போதிக்கிறார் என்று கேட்டார். அதற்கு அசுவஜித் விவரமாக அந்தத் தர்மத்தை விளக்கத் தமக்கு அவ்வளவு ஆற்றல் போதாதென்று சொல்லி மேலும் நடந்து போகையில் சாரீபுத்திரர் இடை மறித்து, "நண்பரே! உங்கள் தருமத்தை விவரமாகச் சொல்ல முடியாவிட்டாலும் அதன் சாரத்தையாவது சொல்ல முடியுமா?" என்று வற்புறுத்திக் கேட்டார். அதற்கு அசுவஜித் பின்வரும் வாக்கியத்தைச் சொன்னார்:

யே தர்ம ஹேதுப்ரபவா: தேஷாம் ஹேதும் ததாகத:
ஆஹ தேஷாம் யோநிரோத: ஏவம் வாதீ மஹா சமண:

"காரணத்தி லுண்டாகும் தன்மைகள் எவைகளோ, அவைகளுக்குக் காரணம் யாதோ, பின்னும் அவற்றின் தடை யாதோ– இவற்றைத் ததாகதர் சொன்னார். இப்படிச் சொன்னவர் மஹா சிரமணன்."

இதைக் கேட்டதும் சாரீபுத்திரர் சிந்தித்துப் பார்த்து அளவற்ற மகிழ்ச்சி யடைந்தார். காரணத்திலிருந்து காரியம் உண்டாகிறது. அந்தக் காரணத்தையே தடுத்து நிறுத்திலை காரியம் உண்டாகாது. என்ன அற்புதமான சித்தாந்தம்! என்று சிந்தித்தவர், அசுவஜித் பிக்ஷுவைப் பார்த்து, "நண்பரே! தங்கள் குருநாதர் உண்மையில் மகா சிரேஷ்டர் என்பதும், பிறவித் துன்பத்தைக் கடந்தவர் என்பதும் இந்தத் தத்துவத்திலிருந்து தெளிவாகிறது. தாங்கள்

எனக்கு இதை எடுத்துச் சொன்னதற்கு நன்றி தெரிவிக்கிறேன்", என்று சொல்லி விடை பெற்றுக்கொண்டார். நேரே தமது நண்பர் மௌத்கல்யாயனர் இருந்த இடத்தைத் தேடிச் சென்றார் சாரீபுத்திரர். மௌத்கல்யாயனர் சாரீபுத்திரரைக் கண்டதும், "நண்பரே! ஏது இன்று என்றுமில்லாத மகிழ்ச்சி தங்களிடம் தாண்டவமாடுகிறது? தேடியலைந்த மெய்ப் பொருளைக் கண்டு விட்டீரோ?" என்று கேட்டார். சாரீபுத்திரர் உடனே, "ஆமாம் நண்பரே, நான் கண்டு விட்டேன்! உண்மைத் தத்துவம் புலனாகி விட்டது. இறவாமைக்கு மருந்து கிடைத்துவிட்டது" என்று சொல்லித் தாம் புத்தரின் சீடன் அசுவஜித்தைக் கண்டதும் அவர் பௌத்த தருமத்தின் உட்பொருளை எடுத்து விளக்கியதும் பற்றிச் சொல்லிவிட்டு அத் தத்துவத்தை இருவரும் சேர்ந்து ஆராய்ந்தார்கள். அந்த நேரத்திலேயே அவர்கள் இருவருக்கும் மெய்ஞானம் ஏற்பட்டது. உள்ளத்தில் இருள் நீங்கி ஒளி தோன்றியது.

அவ்விருவரும் உடனே சென்று துறவி சஞ்சயரிடம் பாடம் கேட்ட மற்றைய சீடர்களுக்கெல்லாம் பௌத்த தருமத்தை எடுத்துச் சொன்னார்கள். எல்லோரும் அதுவே சிறந்தது என்று ஒப்புக் கொண்டனர். ஆனால் சஞ்சயர் மாத்திரம் ஒப்புக்கொள்ளவில்லை. அது பூரணத்துவம் வாய்ந்ததல்ல என்று நிராகரித்து விட்டார். ஆனால் மௌத்கல்யாயனரும் சாரீபுத்திரரும் அந்த க்ஷணமே தமது குருவையும் சகாக்களையும் விட்டுவிட்டு நேரே புத்தர் தங்கியிருந்த வேணுவனத்தைத் தேடி வந்தனர்.

வெகு தூரத்தில் அவ்விருவரும் வருவதைப் பார்த்த மாத்திரத்திலேயே பகவான் புத்தர், "அதோ வருகிறார்கள் கோலிதரும் உபதிஸ்ஸரும், இணை பிரியாத் தோழர்கள். அவர்களே எனது சீடர்களில் முதன்மையானவர்களாயிருக்கப் போகிறவர்கள்" என்று மற்றைய சீடர்களிடம் தெரிவித்தார்.

சாரீபுத்திரரும் மௌத்கல்யாயனரும் நேரே சென்று புத்த பகவான் பாதங்களில் விழுந்து, "அண்ணலே! எம்மை ஆட் கொண்டருள்க" என்று வேண்டி நின்றனர். பகவானும் சிறிதும் தயக்கமின்றி, "ஏற்கெனவே தருமத்தை நீவிர் உணர்ந்திருக்கிறீர்கள். ஆகையால் உங்களை வரவேற்கிறேன்", என்று சொல்லிச் சங்கத்தில் சேர்த்துக்கொண்டார்.

ஆனால், இவர்கள் இருவரும் சங்கத்தில் சேர்ந்துகொண்டதற்கென்ன, உடனேயே அவர்கள் அருகத் நிலையைப் பெறவில்லை என்று சொல்லப்படுகிறது. பஞ்ச வர்க்கத்துப் பிக்ஷுக்களில் ஒருவராகிய கௌண்டின்னியர் முதல் உபதேசத்திலேயே ஞானை

தயம் பெற்றார் என்றும், மற்றவர்களும் இரண்டு மூன்று நாட்களில் அந்நிலையை அடைந்தனர் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்களைவிட எத்தனையோ மடங்கு தவ வலிமையும் இருத்தி ஆற்றலும் வரப்பெற்றவர்கள் சாரீபுத்திரரும் மௌத்கல்யாயனரும். அன்றியும் உபதேசம் பெற்றுக்கொள்ளு முன்னரே புத்தர் அவர்களைத் தமது மெய்யடியார்களில் முதல்வர் என்று பகிரங்கமாக ஒப்புக்கொண்டு தரும தீக்ஷை கொடுத்துச் சங்கத்தில் சேர்த்துக் கொண்டார். அப்படி யிருந்தும் அவர்கள் உடனேயே அருகத் நிலையை அடையப் பெறுததற்கு ஒரு காரணம் சொல்லப்படுகிறது. மற்றைய சீடர்கள் யாவரும் ஏற்கெனவே முன்னைய பிறவிகளில் பாரமிதைகளைப் பூரணமாக நிறைவேற்றிய காரணத்தால் உடனேயே அருகத் நிலை பெற்றனர். மௌத்கல்யாயனர் அருகத் நிலை வரப்பெற ஒரு வாரம் காத்திருக்க வேண்டியிருந்தது. சாரீபுத்திரர் இரண்டு வாரங்கள் கழித்தே அந்நிலையை யடைந்தார்.

இந்த இரு முதன்மைச் சீடர்களும் ஒவ்வொரு விதத்தில் உயர்ந்தவர்கள். சாரீபுத்திரர் தத்துவார்த்த விளக்கங்களில் மகா சமர்த்தர். புத்தர் இல்லாத சமயங்களில் அவருக்குப் பதிலாக சாரீபுத்திரரே தரும உபதேசங்களையும் உபநியாசங்களையும் நடத்தினர். எந்த வகையான சிக்கல் நிறைந்த தத்துவமானாலும் அதற்கு விளக்கம் சொல்வதில் சாரீபுத்திரருக்கு நிகர் எவருமில்லை என்று சொல்லப் படுகிறது. அதனால் அவருக்கு 'தருமசேனபதி' என்ற பட்டம் கொடுக்கப்பட்டிருந்தது. அதாவது தருமராச்சியத்தின் மன்னனை இருந்தார் புத்தர், அந்த ராச்சியத்தில் சேனபதியாக, தருமத்தின் பாதுகாவலனை அமர்ந்திருந்தார் சாரீபுத்திரர்.

மௌத்கல்யாயனர் இருத்தி ஆற்றல்களில் வல்லவர். அதனால் அவர் பௌத்த சங்கத்தின் முதன்மைப் 'போர் வீர'னை அமர்ந்திருந்தார். மறுசமய வாதிகளின் வாதங்களிலெல்லாம் முன் நின்று நடத்துபவர் அவரே. பல சந்தர்ப்பங்களில், உருவில்வா காசியபர் விஷயத்தில் புத்தர் கையாண்ட அதே முறையை மௌத்கல்யாயனரும் கையாண்டு, இருத்தி ஆற்றல்களைக் காண்பித்தே வாதங்களில் எதிரிகளைப் புறமுதுகிட்டோடச் செய்திருக்கிறார். பௌத்த மத நூல்களில் மௌத்கல்யாயனரைப் பற்றி யுள்ள கதைகள் சிலவற்றில் அவர் அனேக தடவை சுவர்க்கத்துக்கும் மற்றைய லோகங்களுக்கும் சென்று, மரணத்தின்பாற் பட்ட மற்றைய பிக்ஷுக்கள் என்ன அந்தஸ்தில் அந்த லோகங்களிலே சஞ்சரிக்கிறார்கள் என்று பார்த்துவிட்டுத் திரும்புவது வழக்கம் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இராஜகிருகத்திலே பிக்ஷுக்கள் பல்கிப் பெருகிவிட்டனர். தருமத்தைப் போதிக்க வேண்டுமென்று மழையோ, வெயிலோ, பனியோ, இரவோ, பகலோ எனப் பாராமல் அளவு கடந்த உற்சாகத்தோடு பிக்ஷுக்க ளெல்லாரும் பிரசாரம் செய்யத் தலைப் பட்டனர். மழைக் காலத்திலே இந்த பிக்ஷுக்கள் குடியானவர்களின் தோட்டங்களையும் வயல்களையும் தம்மிஷ்டப்படி மிதித்துக் கடந்து செல்வதால் அனேக தோட்டக்காரர்களின் பயிர் செடிகள் சேத மடைந்தன. இதனால் நஷ்டமடைந்த விவசாயிகள் ஆத்திரம் கொண்டு பலபடப் பேசினர். "இந்த பிக்ஷுக்களுக் கென்ன மழை யென்றும் வெயிலென்றும் வித்தியாச மில்லையா? ஊரவர்களின் பயிர் பச்சைகளை யெல்லாம் பொருட்படுத்தாமல் சேதப்படுத்து கிறார்களே. மற்றைய சிரமணர்களும்தான் இருக்கிறார்கள். அவர்கள் கார்காலம் வந்துவிட்டால் தங்கள் ஆசிரமங்களில் ஒதுங்கிக் கொள்கிறார்கள். குருவிகள் கூட மழைக் காலத்தில் ஒதுங்கி வாழ் கின்றன. ஆனால் இந்த பௌத்த பிக்ஷுக்களுக்கு அத்தனை உணர்ச்சிதானுமில்லை" என்று வெறுத்துப் பேசினர்.

இந்தச் சொற்களைக் கேட்ட பிக்ஷுக்கள் சிலர் புத்தரிடம் சென்று முறையிட்டனர். கார் காலத்தில் தருமப் பிரசாரம் செய்யச் செல்லும்போது தவிர்க்க முடியாது தோட்டங்களிலும் வயல் களிலும் பயிர்ச் சேதம் ஏற்பட்டு விடுகிறது என்று சொன்னார்கள். அதிலிருந்து பிக்ஷுக்களுக்குப் புத்தர் ஒரு கட்டளை பிறப்பித்தார். ஒவ்வொரு கார் காலத்திலும் பிக்ஷுக்கள் ஆசிரமங்களிலேயே உறைவார்களாக என்பதுதான் அந்தக் கட்டளை. இதுவே பௌத்த சங்க விதிகளில் வருஷ காலம் என்ற நியதி.

இது மாத்திரமல்ல, இராஜகிருகத்தில் வேறு பல எதிர்ப்புக் களையும் அவர்கள் சமாளிக்க வேண்டியிருந்தது. மற்றைய சிரமண வர்க்கத்தினர் பலர் இராஜகிருகத்தி லிருந்த போதிலும் அவர்க ளெல்லாரும் பௌத்த பிக்ஷுக்களைப் போலப் பொது மக்கள் மத்தியில் சென்று பிரசாரம் செய்வது வழக்கமல்ல. ஆனால் பௌத்த பிக்ஷுக்களோ பிரசாரத்தி லீடுபட்டது மாத்திரமல்ல, அனேக குடும்பங்களிலுள்ள ஆண் மக்களைப் பிக்ஷு சங்கத்தில் சேர்க்கும் பணியிலும் ஈடுபட்டனர். இது நாளுக்கு நாள் அதிகரித்து வந்ததும் ஊரிலே பெருங் கிளர்ச்சி ஏற்பட்டது. எதிர்ப்புக்கள் பெருகின. "புத்தரும் அவரது சீடர்களும் மகத நாட்டிலே பிரஜா விருத்தியைத் தடுக்கிறார்கள்; குடும்பப் பெண்கள் பலரை விதவை களாக்கி விடுகிறார்கள்; தாம்பத்திய உறவைச் சிதைக்கிறார்கள். சாக்கிய முனி இராஜகிருகத்துக்கு வந்த நாளிலிருந்து குடும்ப

வாழ்க்கையே பாழாய்ப் போய்விட்டது" என்று மக்கள் வெறுத்துப் பேச ஆரம்பித்தனர். பௌத்த பிக்ஷுக்களைக் கண்டால் திட்டினர்கள். பிச்சை கொடுக்க மறுத்தார்கள். இவற்றை யெல்லாம் கேள்விப்பட்ட புத்தர், "மகத நாட்டு மக்கள் நம்மைத் திட்டுவதும் கூச்சலிடுவதும் இன்னும் ஏழு நாட்களுக்குத்தான் நிலைத்து நிற்கும். அதன்பின் ஓய்ந்துவிடும். மேலும் தொடர்ந்து நம்மை இகழ்வார்களானால், 'சத்தியத்தைக் கொண்டே ததாகதர் மக்களை வழிப் படுத்துகின்றனர். ஞானவான்களைப் பார்த்து எவர்தான் இகழ்வார்? அடக்கமும் சாந்தமும் நேர்மையும்தான் எமது பகவானின் கட்டளைகள்' என்று அவர்களைப் பார்த்துச் சொல்லி விடுங்கள்" எனக் கூறினர். ஏழு நாட்களில் இராஜகிருகத்தி லெழுந்த கிளர்ச்சி யடங்கி விட்டது. பௌத்த பிக்ஷுக்களுக்கு எங்கு சென்றாலும் வரவேற்புக் கிடைத்தது.

பதினெட்டாம் அத்தியாயம்

தந்தையும் மகனும்

பிம்பிசார மன்னன் ஆதரவும் மகத நாட்டு மக்கள் ஆதரவும் கிடைத்திருக்க புத்தர்பிரான் இராஜகிருகத்தில் வேணுவன ஆசிரமத்திலே நெடுநாள் தங்கி யிருந்தார். அவர் ஞானோதயம் பெற்று உபதேசங்கள் செய்து வந்து ஏறக்குறைய மூன்று ஆண்டுகளாகி விட்டன. புத்தரின் புகழ் நாலா பக்கமும் பரவி, கபிலவஸ்துவில் அவர் தந்தை சுத்தோதனன் காதிலும் எட்டிவிட்டது.

ஆரம்பத்திலே சித்தார்த்தர் துறவு பூண்டு கபிலவஸ்துவை விட்டுப் புறப்பட்டு, வனங்களில் வசித்துத் தவங்கள் செய்து வந்தபோது சுத்தோதனன் இரண்டொரு தடவை முயன்றும் புதல்வனைத் தன் அரண்மனைக்குத் திருப்பிக் கொண்டு வர முடியவில்லை. பின்னர் அவர் ஞானோதயம் பெற்றுத் தருமப் பிரசாரம் செய்து வந்தபோது எப்படியாவது ஒருநாள் அவரைத் திருப்பி யழைக்க வேண்டுமென்று காத்திருந்தான் சுத்தோதனன். அது இப்போது கைகூட வேண்டிய சமயமா யிருந்தது.

இராஜகிருகத்தில் அப்போது புத்தர் தங்கியிருந்து உபதேசங்கள் செய்து வருகிறார் என்பதைக் கேள்வியுற்ற சுத்தோதனன் தகுந்த ஒரு தூதுவனை அழைத்து, "சாக்கிய இளவரசர் பிம்பிசார மன்னன் அரசாளும் மகத நாட்டிலே இராஜகிருக நகரத்துக்குப் பக்கத்திலுள்ள வேணுவனம் என்ற உபவனத்தில் ஓர் ஆசிரமத்தில் தங்கி யிருக்கிறார் என்ற செய்தி கிடைத்திருக்கிறது. நாட்டையும் அரண்மனையையும் உலகத்தையுமே துறந்த துறவியாக இப்போது வாழும் இளவரசரை எப்படியாவது கபிலவஸ்துவுக்கு அழைத்து வந்து விடவேண்டும். இது சாமானியமான காரியம் என்று நான் நம்பவில்லை. இருந்தும், உனது சாதுரியத்தை உபயோகித்து நல்லன சொல்லி அந்த முனிவரை எதுவிதமும் கொண்டு வந்து சேர்த்துவிடு. உனக்குத் துணையாக வேண்டிய உதவியாளர் களையும் அழைத்துச் செல்", என்று உத்தரவிட்டார். தூதுவனும் பல நூற்றுக்கணக்கான ஆட்களுடன் கபிலவஸ்துவி லிருந்து இராஜகிருகத்துக்குப் புறப்பட்டான்.

இராஜகிருகத்தில் வேணுவனத்திலே தருமோபதேசம் செய்து கொண்டிருக்கும் கௌதமரை வந்து பார்த்தான் சுத்தோதனனின்

தூதுவன். பெருங்கூட்ட மொன்று புத்தரின் அறவுரையைக் கேட்டுக் கொண்டிருந்தது. உள்ளே நுழைய முடியாதபடியிருந்த அந்தக் கூட்டத்தின் பின்புறமாக நின்று, உபநியாசம் முடியும் வரை தூதுவன் காத்திருந்தான். அவனுடைய ஆட்களும் அங்கேயே நின்றனர். வெகுநேரம் வரை நடந்த உபநியாசத்தை அந்தத் தூதுவனும் அவனது ஆட்களும் செவிமடுத்தனர். உபதேசம் முடிந்தவுடன் அவர்கள் யாவரும் தாம் அங்கு வந்த காரியத்தை முற்றும் மறந்து புத்தரின் கருணை வலையிலகப்பட்டு அருகத் நிலை யெய்தினர். சற்று வேளையில் அவர்களும் மற்றைய பிக்ஷுக்களைப் போலத் தலையிலிருந்த மயிரை யிழந்து காஷாயம் தரித்துக் கையில் பிக்ஷா பாத்திரங்களுடன் காட்சி யளித்தனர். இது புத்தரின் லீலைகளி லொன்று என்றும் அங்ஙனம் காட்சி யளித்தவர்களைப் பார்த்தவர்கள் நூருண்டுகளாகவே அனுபவம் பெற்ற பிக்ஷுக்கள் இவர்கள் என்று கருதிக்கொண்டனர் என்றும் சொல்லப்படுகிறது. அருகத் நிலை யெய்தி பிக்ஷு சங்கத்தில் சேர்ந்து கொண்ட இவர்கள் உலக வியவகாரங்களில் சிந்தனை செலுத்த மாட்டார்க ளாகையால் தாம் முதலில் அங்கு வந்தது சுத்தோதனன் தூதுவர்களாக என்பதை மறந்து, வந்த காரியத்தை ஒரு பொழுதும் புத்தரிடம் தெரிவிக்கவே யில்லை.

தாம் அனுப்பிய தூதுவனும் அவன் ஆட்களும் இராஜகிருகத்தி லிருந்து திரும்பி வரவில்லை யென்று கண்ட சுத்தோதனன் மற்றொரு தூதுவனையும் சில ஆட்களையும் அனுப்பி வைத்தான். அவர் களுக்கும் இதே கதிதான் நேர்ந்தது. பிக்ஷு சங்கத்தில் சேர்ந்து, தாம் வந்த காரியத்தை மறந்துவிட்டனர். இங்ஙனம் ஒன்பது தடவை தூதுவர்களை யனுப்பிக் கொண்டிருந்தான் சுத்தோதனன் என்று சொல்லப்படுகிறது. இறுதியில் தனது முயற்சி யெல்லாம் வீணுகிப் போவதைக் கண்ட மன்னன் நன்கு யோசித்துவிட்டு, முன்பு சித்தார்த்தருடன் நெருங்கிய நட்புரிமை கொண் டிருந்தவனும் விவேகத்தில் சிறந்தவனுமாகிய அந்தணன் உதாயியை வரவழைத்து, "உதாயி! இளவரசரை யழைத்து வருமாறு இதுவரை ஒன்பது தூதுவர்களையும் அவர்களுடன் பல ஆட்களையும் அனுப்பி வைத்தேன். ஆனால் போனவர்கள் திரும்பியே வரவில்லை. என்ன நேர்ந்ததோ அறியேன். ஆகையால், இச்சமயத்தில் நீ ஒருவன்தான் எனக்கு ஏதாவது ஓர் உபாயம் தேடித் தர வேண்டும். கௌதமரை எது விதத்திலும் கபிலவஸ்துவுக்கு அழைத்து வரக்கூடியவன் நீதான் என்று எனக்கு நம்பிக்கை யுண்டு. இதற்கு என்ன சொல்கிறாய்?" என்று கேட்டான். உதாயி சிந்தித்துவிட்டு, "அரசே! கௌதமரின்

பிடிவாதம் தாங்கள் அறிந்ததே. இலகுவில் அவர் திரும்பி வரக் கூடியவரல்லர். அன்றியும் அவர் இப்போது சம்போதி ஞான மடைந்த பெரு முனிவராகத் திகழ்கிறார். அவரிடம் செல்லும் எவரும் அவர் ஞான ஒளியில் மயங்காமல் திரும்ப முடியாது. ஆகையால், நான் அங்கு செல்வதா யிருந்தால் ஒரு நிபந்தனையின் மேல் தான் செல்ல முடியும். நானும் பௌத்த சங்கத்தில் சேர்ந்து கொள்ள நேர்ந்தால் அதற்குத் தங்கள் சம்மதம் எனக்குத் தரல் வேண்டும்" என்றான்.

சுத்தோதனன் தயங்காமல், "கௌதமரை மாத்திரம் நீ இங்கு அழைத்து வருவதாக வாக்குக் கொடுத்தால் அதன் பின் நீ எந்தச் சங்கத்தில் வேண்டுமானாலும் சேர்ந்துகொள்ளலாம்" என்று சொன் னான். உதாயி அவ்வாறே தான் புத்த பகவானைக் கபிலவஸ்து வுக்கு அழைத்து வருவதாக உறுதி கொடுத்துவிட்டு இராஜகிருகம் வந்தான். மற்றைய தூதுவர்களுக்கு நேர்ந்த கதிதான் உதாயிக்கும் நேர்ந்தது. பிக்ஷு சங்கத்தில் சேர்ந்து கொண்டான். ஆலை மற்ற வர்களைப்போல் அவன் தான் வந்த காரியத்தை மறந்துவிடாமல், தக்க சமயத்தை எதிர்பார்த்துக் கொண்டே யிருந்தான்.

ஒரு நாள் புத்தர் தனிமையில் உட்கார்ந்திருக்கும்போது உதாயி அவரை யணுகி, "ஐயனே! மழைக்காலம் போய் இப்போது அற்புத மான இளவேனில் பிறந்திருப்பதைப் பார்த்தீர்களா? விருக்ஷங்களி லெல்லாம் கொத்துக் கொத்தாக மலர்கள் நிறைந்திருக்கின்றன. இளந் தென்றல் வீசுகிறது. பறவைக் கூட்டங்க ளெல்லாம் ஆனந்த மாய்ப் பாடி உல்லாசமாகப் பறந்து திரிகின்றன. எங்கு பார்த் தாலும் பொன்மயமான காட்சி தென்படுகிறது. இளவேனிலின் வனப்பே வனப்பு!" என்று பருவ காலத்தையும் அதன் காட்சி களையும் வருணித்துப் பாடத் தொடங்கினான்.

உதாயியின் அறிவையும் விசேஷமாக அவன் கல்விப் பெருக்கை யும் காவியப் புலமையையும்பற்றி இளவயதிலேயே கௌதமர் அறிந் திருந்தவர். ஆகையால் அவன் தன் மனம் போன போக்கில் கவிதை பாடிக்கொண்டிருக்கக் கேட்டுக்கொண்டே யிருந்தார்புத்தர். இயற்கை வருணனையில் சென்று கொண்டிருந்த அவன் கவிதை நாட்டு வருண னையில் திரும்பி, இராஜகிருகத்தையும் வேணு வனத்தையும் அங் குறையும் புத்தரையும் பொருளாகக் கொண்டு பாடினான் அவன். பின்னர் தொடர்ந்தது அவர் பூர்வீகம்: "மாதவன் தந்தையின் பெயர் சுத்தோதனன். அவரை ஈன்றெடுத்தவள் மாயாதேவி. இப்போது அவள் வானவர் பதியில் வாசம் செய்கிறாள்."

இவ்வாறு கவிதை பாடிப் புத்தருக்கு கபிலவஸ்துவைப் பற்றியும் பெற்றோரைப் பற்றியும் ஞாபக மூட்டிய உதாயி, சுத்தோதன மன்னன் தன் புதல்வனைப் பார்க்கவேண்டு மென்ற ஆவலோ டிருப்பதாயும், அவன் இந்தத் தள்ளாத வயதில், இறப்பதற்கு முன்னர், அறவாழி வேந்தனின் தருமோபதேசம் கேட்டுய்யத் தவிப்பதாயும் தெரிவித்தான். புத்தர் இதைக் கேட்டதும், கபிலவஸ்துவுக்குச் செல்லவேண்டிய சமயம் வந்துவிட்ட தென்பதை யுணர்ந்து, அப்படியே யாகட்டும் என்று உதாயிக்கு வாக்குக் கொடுத்தார். உதாயி மகிழ்ச்சி யடைந்து அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டவன் எவரு மறியாமல் தனது இருத்தி ஆற்றலால் வேற்றுருவம் எடுத்து ஆகாய மார்க்கமாகக் கபிலவஸ்துவை நோக்கிப் பறந்து சென்றான். புத்தர் தமது சீடர்கள் பலர் புடை சூழ இராஜகிருகத்தி லிருந்து கால்நடையாகவே பல நகரங்களையும் கிராமங்களையும் தாண்டிக் கபிலவஸ்துவை வந்தடைய அனேக நாட்கள் சென்றன.

புத்த சங்கம் வருவதற்கு முன்னரேயே சுத்தோதனன் முன்பு காட்சி யளித்த உதாயி துறவி வேடத்தில் நிற்பதைக் கண்டு சுத்தோதனன் சந்தேகம் கொண்டான். அப்போது உதாயி, "மன்னவ! தரும வேந்தனாகிய புத்தரின் மகன் நான். உதாயி என் பழைய பெயர். அந்தத் தரும முறைப்படி பார்க்கும்போது நீ எனது பாட்டன். சன்மார்க்கத்தை நாடிய உன் புத்திரன் விரைவிலே இங்கு வந்து சேருவார். நீயும் உன் மக்களும் கடைத்தேறச் சமயம் வந்துவிட்டது. ஆகையால் அந்தப் பேற்றைப் பெறுவதற்கு முன்பே தகுந்த வழியை வகுத்துக்கொண்டு உன் மனத்தைப் பக்குவப் படுத்திக் கொள்வாயாக" என்று சொல்லிச் சுத்தோதனனுக்கும் அவன் மந்திரி பிரதானிகளுக்கும் அறத்தை உபதேசித்து அவர்கள் நல்லெண்ணத்தைப் பெற்றுக்கொண்டான். பிரிந்தவரைக் கூட்டும் பெற்றி வாய்ந்தவன் உதாயி என்று யாவரும் அவனைப் புகழ்ந்தனர்.

ஏற்கெனவே உதாயியின் முயற்சியால் புத்தரை வரவேற்கத் தக்க ஆயத்தங்களெல்லாம் கபிலவஸ்துவில் நடைபெறத் தொடங்கின. அவருக்கும் அவரது சீடர்களுக்குமென நியக்குரோதவனம் என்ற ஆலமரச் சோலை யொன்றில் அழகான ஆசிரமம் அமைத்து வைக்கப் பட்டிருந்தது. பௌத்த சங்கம் அங்கு வந்து சேர்ந்தது. ஆயிரம் ஆயிரக் கணக்கில் மக்கள் திரண்டு வந்து வரவேற்றனர். புத்தர் பாதங்களில் விழுந்து நமஸ்கரித்தனர். ஆனால், சாக்கிய மன்னர்களும் அவர்களது சுற்றத்தவரும் மாத்திரம் வெறுமனே பார்த்துக் கொண்டு நின்றார்களல்லாமல் புத்தரை வணங்கவோ அல்லது

அவருக்குரிய மரியாதைகள் செய்யவோ தயங்கினர்கள். இதை யறிந்த புத்தர் இத்தகைய மனோபாவம் உள்ளவர்களை வழிப்படுத்த வெறும் உபதேசம் மாத்திரம் பயன்படாது என்று கண்டு தமது இருத்தி ஆற்றல் சிலவற்றைக் காண்பித்தார். இந்த அற்புதங்களி லொன்று யமகபிராதிஹாரியம் என்று சொல்லப்படும். ஒன்றுக் கொன்று எதிரிடையான காட்சியை இரட்டையாக ஏக சமயத்தில் காண்பிக்கும் இந்த இருத்தியில் புத்தர் வானத்திலே கிளம்பினர். அவருடைய உடலின் மேற் பாகத்தி லிருந்து அக்கினிச் சுவாலை யெழுந்தது. உடலின் கீழ்ப் பாகத்தி லிருந்து தாரை தாரையாக நீர் பெருகியது. ஒரு க்ஷணத்தில் இந்தக் காட்சி மாறி மேலே நீரும் கீழே அனலும் பிறக்கச் செய்தார். அதன் பின்னர் வலது பக்கத்தில் நெருப்பும் இடது புறத்தில் நீரும் பாய்ந்தன. இவ்வாறு யமகபிராதி ஹாரிய இருத்தியின் இருபத்திரண்டு வகைகளை ஒன்றன் பின் ஒன்றுகக் காண்பித்துவிட்டுக் கீழே இறங்கினர்.

இந்த அற்புதங்களைக் கண்ணுற்ற சுத்தோதன மன்னன் ஓடோடியும் வந்து தமது மைந்தனை வணங்கினன். முன்பு சித்தார்த் தர் பிறந்தபோது அசித முனிவர் வாயிலாக அவர் பெருமையை யுணர்ந்து சுத்தோதனன் தன் மைந்தனை வணங்கினன். பின் ஏர் மங்கல விழாவின்போது நாவல் மரத்தடியில் தியானம் செய்யும் சமயத்திலும் இரண்டாவது முறையாக வணக்கம் செலுத்தினன். இப்போது மூன்றுவது தடவையாகத் தந்தை மைந்தனை வணங்கு வதைக் கண்ட மற்றைய சாக்கியர்களும் வாளாவிருக்க முடியாது முன் வந்து புத்தரின் பாதங்களில் விழுந்து நமஸ்கரித்தனர்.

அந்தச் சமயத்தில் வானத்திலே யிருந்து சிறு மழை பெய்தது. அந்த மழைத் திவலைகள் பட்டவர்கள் யாவரும் இது நல்ல சகுன மென்று மகிழ்ந்தனர். ஆனால் மழையானது புத்தர் மேல் நம்பிக்கை கொண்டவர்கள் மீது தான் பட்டதே யல்லாமல் மற்றவர்கள் மீது படவில்லை. இதைப் பார்த்துவிட்டு புத்தர், "எனது சங்கத்தார் மீதும் என் உறவினர் மீதும் இப்போது மாத்திரம் இந்த மழை பெய்யவில்லை; நான் பழைய பிறவியில் விஸ்வாந்தர மன்னனாக இருந்த சமயத்திலும் இந்தக் கருணை மழை பொழிந்தது" என்று சொல்லித் தம் பழம் பிறப்பில் விஸ்வாந்தர மன்னனாகப் பிறந்து செய்த தானங்களைப் பற்றிய கதையைச் சொன்னர்.

இந்தச் சம்பவத்துக்குப் பின்னர் சாக்கிய மன்னர் குடும்பத்தினர் யாவரும் தத்தம் வீடுகளுக்குப் போய்விட்டனர். சாதாரணமாகப் பெரிய குடும்பத்திலுள்ளவர்கள் பௌத்த சங்கத்தாரிடம் அறவுரை கேட்ட பின் அவர்களை மறுநாள் தம் வீட்டில் விருந்துண்ண அழைப்பது

சம்பிரதாயம். இராஜகிருகத்தில் பிம்பிசாரன் ஆரம்பித்து வைத்த இந்த வழக்கம் நாளடைவில் பெருகி வந்தது. ஆலை சாக்கிய மன்னர் குடும்பத்தினர் புத்த பகவான் கபிலவஸ்துவுக்கு வந்து நியக்குரோத வனத்து ஆசிரமத்தில் வசிக்க ஒழுங்குகள் செய்து வைத்தார்களே யல்லாமல் அவரை வணங்கிச் சென்றபோது ஒருவராவது அவரை விருந்துக்கு அழைக்கத் துணியவில்லை. இதைக் கவனித்துவிட்டு புத்தரும் அவரது சங்கத்தினரும் மறுநாட் காலை வழக்கம்போல் தங்கள் திருவோடுகளை யெடுத்துக்கொண்டு பிக்ஷை யேற்க வீதி களில் புறப்பட்டு நடந்தனர்.

முன்பு குடை நிழலிருந்து குஞ்சர மூர்ந்த சித்தார்த்தர் அதே கபிலவஸ்து நகரத்தில் தமது குடிகளாயிருந்த பொதுமக்களிடம் மரபு தவறிப் பிச்சை யேற்று வீடு வீடாக நடந்து செல்வதைக் கண்ட தந்தையாகிய மன்னன் சுத்தோதனனுக்குப் பொறுக்கவில்லை. தனக்கும் தன் குடும்பத்துக்கும் மீளாத இழுக்கையும் வசையையும் கொடுக்கத் துணிந்துவிட்டான் தன் மகன் என்று ஆத்திரம் கொண்டு சுத்தோதனன் விரைந்து வந்து புத்தர் நடந்து சென்ற வீதியில் அவரை எதிர்கொண்டு, "என்ன காரியம் செய்யத் துணிந்தீர்? வம்சத்துக்கே இழுக்கைத் தேடித் தந்து விட்டீரே! இங்ஙனம் தெரு வீதிகளில் பிச்சை யேற்க வேண்டிய காரண மென்ன?" என்று கடிந்து கொண்டான். புத்தர் சாந்தமாக, "மன்னவ! இதுவே எங்கள் குலத்துக்குரிய வழக்கம்" என்றார்.

சுத்தோதனன் திகிலடைந்து, "என்ன! குலத்துக்குரிய வழக் கமா? க்ஷத்திரிய குலமல்லவா நமது குலம்? எந்த க்ஷத்திரியன் இப்படித் தெருவில் நடந்து பிச்சை யெடுக்கும் வழக்கத்தைக் கேள் விப்பட்டீர்?" என்று கேட்டான். புத்தர் சொன்னார்: "மன்னவ! க்ஷத்திரிய குலம்தான் உனது குலம் என்பதை நான் ஒப்புக்கொள்ளு கிறேன். ஆனால், எங்கள் குலம் அதுவல்ல. எங்கள் வம்சம் புத்த வம்சம். தீபங்கரர், கௌண்டின்னியர் முதலாகக் காசியபர் வரை வந்துள்ள எண்ணில் புத்தர்கள் பரம்பரையில் வந்தவன் நான். அந்தப் புத்தர் பரம்பரையில் ஒவ்வொரு புத்தரும் இவ்வாறே இரந் துண்டு வாழ்வதைத் தம் வாழ்வாகக் கொண்டு வந்தவர்கள். ஆகவே, அந்த மரபில் வந்த நானும் இரந்துண்பது ஆச்சரியமல்ல," என்று விடை பகர்ந்தார். பின்னர், அந்த வீதியில் நின்றபடியே பின் வருமாறு தந்தைக்குப் போதித்தருளினர்:

"மன்னவ! பெருமையும் சிறுமையும் மனத்தி லெழுகின்ற கீழ்த் தர இச்சைகள். அந்த இச்சைகளை அறவே துறந்து ஒருவன் சன்மார்க்கத்தை வளர்க்கவேண்டும்: தருமத்தைக் கடைப்பிடித்து

வாழ்பவனுக்குப் பெருமைக்கும் சிறுமைக்கும் பேதம் தெரியாது. ஒழுங்காக ஒருவன் தருமத்தைப் பயின்று வருவானுனால் அவன் இம்மையிலும் மறுமையிலும் மேன்மையான, சாஸ்வதமான இன்பத்தைப் பெறுவான்."

இந்த வார்த்தைகளைக் கேட்டதும் சுத்தோதன மன்னன் மனத்திலிருந்த மாசு நீங்கியது. அவன் உள்ளம் மாறியது. தருமராச்சியத்தை யடைவதற்குள்ள நான்கு படிகளில் முதற் படியை யடைந்தான். உடனே அவன் புத்தரிடம் வந்து அவர் கையிலிருந்த திருவோட்டை வாங்கித் தன் தன் கையில் வைத்துக்கொண்டு புத்தரையும் அவர் சீடர்களையும் பெருமையோடு அழைத்துக்கொண்டு தன் அரண்மனைக்குச் சென்றான். அங்கே தன் குடும்பத்திலுள்ள சகலரையும் அழைத்து பகவானுக்கு வணக்கம் செலுத்துமாறு உத்தரவிட்டான். அரண்மனைப் பெண்கள் யாவரும் வந்து துதித்து நின்றனர். புத்தரை இளமைப் பருவம் முழுவதும் வளர்த்தெடுத்தவளாகிய பிரஜாவதி கோதமி அங்கு வந்து புத்தர் பாதங்களில் விழுந்து நமஸ்கரித்து நின்றாள். புத்தர் யாவரையும் பார்த்து, "தருமத்தைக் கடைப்பிடித்து நடவுங்கள். தீவினையை அகற்றுங்கள். தருமத்தைக் கடைப்பிடிப்பவர்கள் இம்மையிலும் மறுமையிலும் நிலையான இன்பத்தை அனுபவிப்பார்கள்" என்று உபதேசம் செய்தார்.

அரண்மனையில் அன்று ஒரே கோலாகலம். புத்தருக்கும் சீடர்களுக்கும் விருந்து நடந்தது. ஆனால் அவர் மனைவி யசோதரை மாத்திரம் அந்தப் பக்கம் எட்டியும் பார்க்கவில்லை. சேடிகள் போய், "உனது நாதன் வந்திருக்கிறார், அவரைப் போய் வணங்கு" என்று சொன்னபோது, "என்னிடத்தில் ஏதாவது உத்தமமான பண்பு இருந்தால் எனது நாதன் என்னையே தேடி வருவார். அப்போது நான் வணங்குவேன்" என்று சொல்லிவிட்டாள் யசோதரை. இதை யறிந்த பகவான் "அரசகுமாரி அவள் விருப்பப்படியே வணக்கம் செலுத்தட்டும். அவளைக் குறை கூறவேண்டிய அவசியமில்லை," என்று சொல்லித் தன் கையிலிருந்த திருவோட்டைச் சுத்தோதன மன்னனிடம் கொடுத்துவிட்டுத் தமது சீடர்களில் முதன்மையான மௌத்கல்யாயனரையும் சாரீபுத்திரரையும் அழைத்துக்கொண்டு யசோதரை யிருந்த அந்தப்புரத்துக்குச் சென்றார். அங்கு போய் அவருக்கென வைக்கப்பட்டிருந்த ஆசனத்தமர்ந்ததும் யசோதரை ஓடோடியும் வந்து அவர் பாதங்கள் இரண்டையு மெடுத்துத் தன் தலை மீது வைத்து அளவற்ற மகிழ்ச்சியோடு தன் வணக்கத்தைச் செலுத்தினாள். அப்போது அங்கு வந்த சுத்தோதனன், "பெருமானே! தாங்கள் பிரிந்து சென்ற நாளிலிருந்து யசோதரை தங்களை நினைத்து

நினைத்து உருகிக்கொண்டே வந்தாள். தாங்கள் காஷாயம் தரித்து விட்டீர்கள் என்ற செய்தியைக் கேட்டதும் அவளும் மஞ்சளாடையே தரித்து வந்தாள். தாங்கள் தினசரி ஒரு தடவையே உணவு கொள்ளுகிறீர்கள் என்று கேட்டுத் தானும் ஒரு தடவை உண்டு வந்தாள். தாங்கள் பெரிய கட்டிலில் படுத்துறங்குவதைத் தவிர்த்ததும் அவள் சிறு கட்டிலையே விரும்பினாள். மலர்களையும் கந்த வர்க்கங்களையும் துறந்துவிட்டீர்கள் என்று கேட்டதும் அவளும் அவற்றை விரும்புவதில்லை," என்றான். அதற்குப் புத்தர், "யசோதரை இந்த ஜன்மத்தில் மாத்திரமல்ல, பழைய பிறவிகளில் கூடத் தனது பக்தியை நிலைநாட்டியவள்," என்று சொல்லி ஒரு கதை சொன்னார்.

அவள் முற்பிறவியில் சந்தன் என்ற ஒரு கந்தர்வனின் மனைவியாக வாழ்ந்தபோது யாரோ ஓர் அரசன் அவள் கணவனைக் கொன்றுவிட்டான். யசோதரை ஆத்திரங் கொண்டு "தெய்வமே இல்லையா இந்தக் கொடுமையைப் பார்க்க!" என்று முறையிட இந்திரன் வந்து கணவனை உயிர் பெறச் செய்து கொடுத்தான்.

புத்தர் கபிலவஸ்துவில் நியக்குரோத ஆசிரமத்தில் தங்கியிருந்தார். தமது சாக்கிய குடும்பத்திலுள்ள பலர் அறியாமை இருளில் மூழ்கிக் கிடக்கின்றனர் என்றும் அவர்கள் உள்ளொளி பெறச் செய்யவேண்டும் என்றும் உறுதி கொண்டார். ஆகவே நாளுக்கு நாள் அவர் பலருக்கு உபதேசம் செய்துகொண்டே வந்தார்.

அப்போது ஒரு நாள் பிரஜாவதி கோதமியின் புதல்வன் நந்தனுக்குத் திருமணம் நடந்தது. அதே நாளில் அவனுக்கு இளவரசுப் பட்டமும் அளிக்கப்பட்டது. அரண்மனையில் ஒரே கொண்டாட்டம். திருமணம் முடிந்த சமயம் புத்தர் அங்கு சென்றார். தேவமாது போன்ற அழகு நிரம்பிய மணப் பெண் சுந்தரியுடன் நின்ற நந்தன் தன் அண்ணன் கௌதமர் வருகிறார் என்று அளவு கடந்த அன்புடன் போய் நமஸ்கரித்தான். புத்தர் நந்தனை ஆசீர்வதித்துவிட்டுத் தன் கையிலிருந்த திருவோட்டை ஒரு சிறிது வைத்துக்கொள்ளும்படி சொல்லி ஒரு மங்கள சுலோகத்தைச் சொன்னார். பின்னர் அவர் தமது பாத்திரத்தை வாங்கிக் கொள்ளாமலே ஆசிரமத்தை நோக்கி நடந்தார். நந்தன் முதலில் என்ன செய்வதென்று திகைத்தான். பின்னர் எவ்வித பேச்சு மில்லாமல் திருவோட்டோடு புத்தர் பின் சென்றான். பாத்திரத்தைக் கொடுப்பதற்காகவே அவன் போகிறான் என்று நினைத்த அவன் மனைவி சுந்தரி, "தாங்கள் எதற்காகப் போக வேண்டும்? யாராவது ஒருவரிடம் கொடுத்து அனுப்பிவிடலாம்" என்று தடுத்தும் அதைப் பொருட்படுத்தாமல் சென்றான் நந்தன்.

ஆசிரம வாயில் வரையும் சென்ற புத்தர் திடீரெனத் திரும்பிப் பார்த்தபோது தான் தம் பின்னால் நந்தன் பிச்சைப் பாத்திரத்துடன் வருவதைக் கண்டார். உடனே அவர், "நந்தா! திருவோட்டைக் கையிலேந்தி யிருக்கிறாய். ஏது, திருமணம் நடந்தவுடனேயே துறவறம் பூண்டுவிட்டாய் போலும்?" என்று புன்சிரிப்புடன் சொன்னார். நந்தன் அண்ணல் மேற் கொண்ட மரியாதை காரணமாக, "ஆம், நான் துறவுதான் மேற்கொண்டுவிட்டேன்" என்று பதிலளித்தான். அவ்வளவுதான், புத்தர் உடனே அவனை யழைத்து மற்றைய பிக்ஷுக்களின் முன்பு நிறுத்தி வைத்து, "இந்தப் புதிய துறவி நந்தனுக்குத் தரும தீக்ஷை கொடுத்து விடுங்கள். இவர் நமது புதிய சங்கத்தவர்" என்று சொன்னார். அவ்வாறே தீக்ஷையும் நடந்தது! ஆனால், நந்தன் அடைந்த சஞ்சலத்தைச் சொல்லி முடியாது. அவன் உள்ளமெல்லாம் தன் காதலி சுந்தரியின் மீதே யிருந்தது. "ஏதோ மாயாதைக்காக ஆம் என்று சொல்லியவுடன் இவர்கள் நம்மையும் சங்கத்தில் சேர்த்துக்கொண்டு விட்டார்கள். இப்போது இதிலிருந்து எப்படித் தப்புவது?" என்று கவலை கொண்டான்.

நந்தன் இவ்வாறு ஆசிரமத்தில் தங்கிவிட்டதை யறிந்த அவன் மனைவி சுந்தரி அளவற்ற துயரக் கடலில் ஆழ்ந்தாள். "ஏற்கெனவே யசோதரையை விதவையாக்கிவிட்டார் சித்தார்த்தர். இப்போது தமது தம்பியையும் தம்முடன் சேர்த்துக்கொண்டு என்னைத் தனித்திருக்கச் செய்துவிட்டார்," என்று அழுதழுது நாளைப் போக்கினாள். எத்தனையோ உறவினர்கள் வந்து ஆறுதல் சொல்லியும் அவள் உடைந்த மனம் சீர் பெறவில்லை.

ஆனால், நந்தனை வென்றால் உபசாரத்துக்காகவே பிக்ஷு சங்கத்தில் சேர்ந்தானே யல்லாமல் உள்ளன்போடு சேரவில்லை. இதை யறிந்த ததாகதர் பல உபாயங்களை யெல்லாம் கையாண்டு அவன் உள்ளத்தி லிருந்த காதல் தீயை முற்றுக அழித்துவிட்டார். முதலில் அவன் சுந்தரியை மறக்கவேண்டு மென்று தீர்மானித்தவராய், தமது இருத்தி ஆற்றலை உபயோகித்து நந்தனை யழைத்துக்கொண்டு தேவர்கள் வசிக்கும் உலகத்துக்குச் சென்று அங்கே யுள்ள அப்ஸரமங்கையரைக் காண்பித்தார். அவர்கள் அழகில் மயங்கிய நந்தன் சுந்தரியை முற்றுக மறந்தான். அப்ஸரப் பெண்களின் நினைவோடு மீண்டும் பூலோகத்துக்கு வந்தபோது புத்தர், "அப்ஸர ஸ்திரீகளை மனத்தில் தியானித்துக்கொண்டிரு. உனக்கு மோக்ஷம் கிடைக்கும்" என்று சொன்னார். அந்த நினைவிலேயே அவன் பல நாள் சுந்தரியை மறந்து ஆசிரமத்தில் தரித்திருந்தான். பின்னர் புத்தரின் சிடர்களிற் சிலர், "நந்தன் அப்ஸரப் பெண்களை மணப்பதற்காகவே தியானத்

தில் உட்கார்ந்திருக்கிறான்" என்பதை யுணர்ந்து பகவானிடம் தெரி வித்தார்கள். புத்தர் சமயம் வந்துவிட்ட தென்று கண்டு நந்தனை யழைத்து நிலையாமையைப்பற்றி அவனுக்கு உபதேசம் செய்தார். தெய்வ மாதர்களா யிருந்தாலும் அவர்களும் என்றோ ஒரு நாள் அழியும் தன்மை யுடையவர்களென்றும், ஆகையால் அழியக்கூடிய வற்றில் பற்றுக் கொள்ளாது அழியாத இன்பமாகிய பிறவி நீக்கத் தில் சிந்தை கொள்ளவேண்டும் என்றும் உபதேசித்தார். நந்தன் சபலம் நீங்கப்பெற்று மன உறுதியுடன் தருமத்தில் பற்றுக்கொண்டு ஒழுகினான்.

ஒரு நாள் புத்தர் சுத்தோதனன் அரண்மனைக்கு வந்திருந்தார். அந்தச் சமயத்தில் யசோதரை தன் மைந்தன் இராகுலனை யழைத்து, அவனை ஆடை ஆபரணங்களால் அலங்கரித்து விட்டு, "அன்பே! இன்று நம் அரண்மனைக்கு வந்திருக்கும் முனிவரைப் பார்த் தாயா? தங்க மயமான மேனியோடு பிரம்மாவே பூலோகத்துக்கு வந்ததுபோல அனேக முனிவர்கள் சூழ வர நமது அரண்மனைக்கு வந்திருப்பவர்தான் உனது பிதா. முன்பு அவர் இங்கிருக்கும்போது ஏராளமான பொருள் வைத்திருந்தார். தங்கமும் வெள்ளியும் நவரத் தினங்களும் இருந்தன. ஆனால் அவர் அரண்மனையை விட்டுச் சென்ற பின் அந்தப் பொருள்களை நாம் காண முடியவில்லை. அந்தப் பொருளெல்லாம் புதல்வனுகிய உன்னையே சேரவேண்டும். பிதுரார்ச் சித சொத்து அது. அன்றியும், நீ ஒரு நாள் முடி சூடிப் பட்டம் தரித்து மன்னனாயிருக்கும்போது இந்தச் செல்வ மெல்லாம் உனக்கு அவசியம். ஆகையால், உன் அப்பாவிடம் போய், நீயே அவர் மகன் என்றும், உனக்குச் சேரவேண்டிய சொத்துக்களைத் தரவேண்டு மென்றும் அந்த முனிவரிடம் சொல்," என்று கூறி யனுப்பினாள்.

பல சீடர்கள் சூழ்தர வீற்றிருந்தார் புத்தர். சுத்தோதனனும் மந்திரிகளும் மற்றவர்களும் அங்கே யுட்கார்ந்திருந்தனர். அச்சமயத் திலே புத்தரின் பக்கத்தில் வந்த இராகுலன் என்ற இளம் பிள்ளை, பத்து வயது கழியாத பாலன், எவ்வித களங்கமு மில்லாத இனிய வதனத்துடன் புத்தரை நமஸ்கரித்துவிட்டு, "நான் இளவரசன். தங்க ளுடைய புதல்வன். தங்கள் சொத்துக்குரியவன் நான். ஆகையால், பிதுரார்ச்சித உரிமையை எனக்குத் தரல்வேண்டும்" என்று கேட்டான்.

புத்தர் புன்னகை புரிந்தார். ஒன்று மறியாச் சிறு பிள்ளையின் வார்த்தைகளில் மகிழ்ந்தார். அந்த க்ஷணமே, "அப்படியே யாகட் டும் குழந்தாய். உனது பிதுரார்ச்சிதம் உனக்கே சொந்தம். வேறு யாருக்கு மல்ல. நான் எவ்வளவோ பாடுபட்டுத் தேடி வைத்திருக்

கும் பெருநிதிய மெல்லாம் உன்னை யடையாமல் வேறு யாரைச் சேரும்? ஆகையால், என் சொத்தை நான் உனக்குக் கொடுக் கிறேன்," என்று சொல்லிவிட்டு எழுந்து ஆசிரமத்தை நோக்கி நடந் தார். இராகுலனும் பின் தொடர்ந்தான். புத்தர் தடுத்து நிறுத்த வில்லை. மற்றைய பிக்ஷுக்களும் ஒன்றும் சொல்லத் துணியவில்லை. ஆசிரமத்தை யடைந்ததும் புத்தர் தமது சீடர் சாரீபுத்திரரை நோக்கி, "இந்தச் சிறுவனுக்குத் துவராடை தரித்து அவனையும் சங்கத்தில் சேர்த்துக்கொள்ளத் தரும தீக்ஷை கொடுங்கள்" என்றார். சாரீ புத்திரர் தீக்ஷை கொடுக்க இராகுல இளவலும் பிக்ஷுவானார்.

இந்தச் செய்தி அரண்மனையில் பெரிய பரபரப்பை யுண்டாக்கி விட்டது. ஏற்கெனவே நந்தன் தனது இளம் மனைவியைத் திருமண வீட்டிலேயே தனித்திருக்க விட்டுச் சென்று பிக்ஷுவாகி விட்டான். அந்தப் புதல்வனை யிழந்தவுடன் இப்போது பேரப் பிள்ளை இராகுல னையு மிழந்துவிட்டோம் என்று சுத்தோதனன் பெருங்கவலை கொண் டான். உடனே அவன் புத்தரிடம் சென்று பின்வருமாறு முறையிட் டான். "அண்ணலே! என் முதல் மகன் துறவியாகி ஞாலேதயம் பெற்றுப் புத்தராகிவிட்டது எனக்குப் பெருமைதான். சாக்கிய மன்னரின் வம்சத்தைக் காப்பாற்ற நந்தன் இருக்கிறான் என்று நினைத் திருந்தேன். அவனும் துறவை மேற்கொள்ளச் செய்துவிட்டீர்கள். என் பேரக் குழந்தை யிருக்கிறான் என்று நம்பி யிருக்க, இப்போது அவனையும் தாங்கள் சங்கத்தில் சேர்த்துக் கொண்டீர்கள். பொருள் நிலையாமையைப் பற்றித் தாங்கள் சொல்லும் தருமத்தை நான் ஏற்றுக்கொண்டேன். ஆனால், தாங்கள் எனக்கு ஒரு வரம் தரல் வேண்டும். தாய் தந்தையரின் அனுமதி யின்றித் தாங்கள் அல்லது தங்கள் சங்கத்தவர் எவரொருவனுக்கும் பரிவிராஜக தீக்ஷை யளித்த லாகாது என்று வாக்குக் கொடுத்தல்வேண்டும்," என்றான். புத்தரும் அப்படியே யாகட்டும் என்று சொல்லிவிட்டு, அன்று முதல் பௌத்த சங்கத்தில் அதை யொரு முக்கியமான நிபந்தனையாக ஏற்படுத்தி வைத்தார்.

அதன் பின்னர் புத்தர் கபிலவஸ்துவி லிருந்து புறப்பட்டு மீண்டும் இராஜகிருகம் செல்வதற்காக அநோமை நதிக் கரைக்கு வந்தார். அப்போது சாக்கிய குல இளவல்கள் பலர் அங்கு வந்து கூடியிருப்பதைக் கண்டு வியப்படைந்து, இவ்வளவு விரைவிலே இந்த இளவல்களுக் கெல்லாம் மனமாற்றம் ஏற்பட்டு விட்டதே யென்று மகிழ்ந்தார். அங்கே பல இளவல்கள் வந்திருந்தார்கள். அவரது சகோதரர் முறையினரான அநிருத்தன், மகாநாமன், ஆனந்தன் ஆகியோரும், யசோதரையின் சகோதரனும் புத்தருடைய

மைத்துனனுமான தேவதத்தனும், பத்திரிகன், பிருகு, கிம்பலன் ஆகியோரும் அங்கு வந்திருந்தனர். இவர்களோடு சேர்ந்து நெடுங் காலமாக இளவரசர்களுக்குச் சேவை செய்து வந்த உபாலி என்ற நாவிதனும் அங்கு வந்திருந்தான்.

நாவிதனாகிய உபாலி தனது குலத்தைக் கருதிப் பின்னல் தயங்கி நின்றான். இதனை யறிந்த சாரீபுத்திரர் புத்தரிடம் சென்று, "சாக்கிய இளவல்களுடன் உபாலி என்ற நாவிதனும் வந்திருக்கிறான். ஆனால் அவன் தன் குலத்தை யுத்தேசித்துத் தயங்கி நிற்கிறான்" என்றார். உடனே புத்தர் மற்றவர்களைப் பொருட்படுத்தாமல் உபாலியை வரச் சொல்லி, "பிக்ஷுவே வருக!" என்று அழைத்துப் பக்கத்தி லிருத்தித் தீக்ஷை கொடுத்தார். மற்றைய சாக்கியர்கள் மனத்திலே இது வெறுப்பைக் கொடுத்தபோதிலும், போதி வேந்த ரின் அனுக்கிரகத்தால் துவேஷத்தை மறந்து அவர் பாதங்களில் சரணடைந்து கொண்டனர்.

இங்ஙனம் சங்கத்தில் சேர்ந்துகொண்ட கபிலவஸ்து இளவல் களில் ஆனந்தர் என்பவர் புத்தரோடு மிகவும் நெருங்கி வாழ்ந்தவர். புத்தர் இருபது ஆண்டுகள் உபதேசம் செய்து வந்த பிறகு அவரது மெய்ப்பாதுகாவலராக நியமிக்கப்பட்டு எச்சமயத்திலும் அவரைப் பிரியாது அவரோடு கூட இருந்து வந்தவர். தேவதத்தன் பல ஆற்றல்களைப் பெற்று பௌத்த சங்கத்தில் ஒரு தனிப் போக்கைக் கைக்கொண்டு, பின்னர் புத்தரின் ஸ்தானத்தையே பெறுவதற்குப் பாடுபட்டு எவ்வளவோ சூழ்ச்சிகள் செய்ததாகக் கதைகளுள்ளன. ஆயினும் தேவதத்தன் அளவற்ற சக்தி வாய்ந்த பிக்ஷு என்பதை எவரும் ஒப்புக்கொள்வர். பிக்ஷு சங்கத்தில் ஒரு கட்சியினர் எப் போதும் தேவதத்தனை ஆதரித்து வந்தார்கள் என்பதையும், நடந்த பல சூழ்ச்சி நாடகங்களையும் பற்றிப் போக போக நாம் அறிந்து கொள்வோம்.

பத்தொன்பதாம் அத்தியாயம்

வள்ளல் மகிழ்ந்தான்

புத்தர் சாரநாத்துக்கு வந்து உபதேசம் செய்ய ஆரம்பித்து, பஞ்ச பிக்ஷுக்களையும் மற்றவர்களையும் சேர்த்துச் சங்கம் ஸ்தாபித்ததி லிருந்து பல்லாயிரக் கணக்கானவர்கள் அவர் மதத்தைத் தழுவித் தருமோபதேசம் கேட்டனர் என்று தெரிந்துகொண்டோம். இவர் களிற் பெரும்பான்மையானவர்களும் எண்ணிக்கைக்காகச் சேர்க்கப் பட்டவர்களே யன்றி அறிவுக்கோ ஆற்றலுக்கோ பௌத்த சித்தாந் தத்தை யுணர்ந்த திறமைக்கோ மதிக்கப்படத் தக்கவர்கள் என்று கருத முடியாது. புத்தரின் வாழ்க்கைச் சரிதையில் முக்கிய இடம் பெற்றவர்கள் வெகு சிலரே யென்றுதான் சொல்லவேண்டும். இராஜகிருகத்தில் சஞ்சய முனிவரின் சீடர்களாயிருந்து புத்தரைச் சரணடைந்த மௌத்கல்யாயனரும் சாரீபுத்திரரும் இவர்களில் மிக உயர்ந்தவர்கள். இவர்களையே புத்தர் தமது முதன்மையான சீடர் இருவர் என்று பகிரங்கமாக அறிவித்து அங்ஙனம் மதித்து வந்ததில் ஆச்சரிய மில்லை. இவர்க ளிருவரும் சாதாரணமானவர்களல்ல. அளவு கடந்த கல்வி ஞானமும் தவ வலிமையும் பெற்றவர்கள்.

உருவில்வா வனத்தில் மதம் மாற்றப்பட்ட முப்பெரு முனிவர் களான காசியப சகோதரர்களைப் புத்தர் எவ்வளவு முயற்சி எடுத்துத் தமது சங்கத்தில் சேர்த்துக்கொண்டார் என்பதை நாம் முன்னர் அறிந்தோம். ஆனால் அவர்கள் பெயர்கள் அதற்குப் பிறகு புத்தரின் சரித்திரத்தில் இடம் பெறக் காணவில்லை. அந்த மூவ ரோடும் ஆயிரம் சீடர்கள் சேர்ந்துகொண்டார்கள் என்று சொல்லப் பட்டாலும் அவர்களைப் பற்றியும் பின்னர் வேறு செய்திகள் காணப் படவில்லை. புத்தர் சென்ற இடங்களிலெல்லாம் சீடர்கள் சேர்ந் தார்கள். ஆனால், எவராவது புகழ் வாய்ந்த நிலையை எய்திய தாகச் சரித்திரமோ புராணமோ கூறவில்லை.

கபிலவஸ்துவில் வசிக்கும்போது சாக்கிய இளைஞர் பலரைப் புத்தர் தம் மதத்தில் சேர்த்துக்கொண்டார். இவர்களில் ஆனந்தர் பெயர் முக்கியமானது. உத்தம மெய்காப்பாளராக வாழ்ந்த இவர் புத்த சரித்திரம் சம்பந்தமான சித்திரங்களிலும் சிலைகளிலும் காட்சி கொடுக்கக் காண்கிறோம். தேவதத்தன் புத்தரின் மைத்துனன். ஆரம்ப நாட்களி லிருந்தே புத்தரோடு போட்டி யிட்டவன். யார்

பெரியவர் என்று இருவருக்குள்ளும் ஓயாத வாதம் நடந்திருக்கிறது. பிற்காலத்திலும் தொடர்ந்து வந்த இந்தப் போட்டி தான் பிக்ஷு சங்கத்தில் நேர்ந்த பல பிளவுகளுக்கெல்லாம் காரணமாயிருந்தது என்று சொல்லவேண்டும். தேவதத்தனுடைய சூழ்ச்சிகளைப் பற்றிப் பௌத்த நூல்கள் மிகைப்படுத்திக் கூறிய போதிலும் அவன் மேற் கொண்டிருந்த சில கண்டிப்பான நியமங்களைப் பற்றியும் போற்றி யிருக்கின்றன. அவன் தோற்றி வைத்த தனிச் சங்கம் நெடுங்கால மாக நிலைத்து நின்றது. இக்காலத்திலும் சில பௌத்த பிக்ஷுக்கள் தம்மைத் 'தாபஸ பிக்ஷுக்கள்' என்று சொல்லிக் கொண்டு மிகவும் கண்டிப்பான விதிகளைக் கைக்கொண்டு நடமாடுவதை நாம் காண் கிறோம். இவர்கள் தேவதத்தன் பரம்பரையில் வந்தவர்களே.

மேற்கூறியவர்களைத் தவிர, மஹாகாசியபர் என்ற மற்றொரு முனிவர் பௌத்த சரித்திரத்தில் ஒரு பிரதான இடம் பெற்றுள்ளார். இவர் பௌத்த சங்கத்தில் சேர்ந்துகொண்ட செய்தி உருவில்வா காசியபர் போன்றவர்களைப்போல் ஆடம்பர மில்லாமல் மிக எளிதானதா யிருந்தும் பின்னல் அவர் பௌத்த சங்கத்தின் வளர்ச் சிக்குச் செய்த தொண்டுகள் சரித்திரத்தில் இடம் பெற்றுள்ளன.

புத்தர் கபிலவஸ்து சென்று சாக்கிய இளவல்களைத் தமது மதத்தில் சேர்த்துக்கொண்டு மீண்டும் ஒரு முறை இராஜகிருகத் துக்குத் திரும்பி வரும் வழியிலேதான் இந்த மஹாகாசியபர் என்ற பெரியாரைச் சந்தித்தார். நாலந்தாவுக்கும் இராஜகிருகத்துக்கும் இடையிலுள்ள ஒரு சாலையோரத்தில் புத்தரைச் சந்தித்த காசியபர் அவரைச் சரணடைந்து தருமம் கேட்டு முக்கிய சீடர்களில் ஒருவ ரானர் என்று சொல்லப்படுகிறது.

காசியபர் ஒரு பிராமணக் குடும்பத்தில் பிறந்தவர். வைதிக மார்க்கத்தில் வளர்ந்தவர். பிரம்மசாரியா யிருக்கும்பொழுதே துறவை நாடியது அவர் மனம். அதனல் வீட்டைத் துறந்து கானகம் செல்லவேண்டு மென்று விரும்பி யிருந்தார். ஆனல் அவருடைய தாயார் எப்படியும் தன் மகனுக்குக் கல்யாணம் செய்து பார்த்துவிட வேண்டு மென்று பிடிவாதம் கொண்டிருந்தா ளாகையால், ஏதோ ஒரு விதமாக ஒரு பெண்ணைப் பேசி விவாகத்தை நடத்தி வைத்து விட்டாள். காசியபருக்கு மனைவியாக வந்து வாய்த்தவள் பெயர் பத்திரை என்பது. அவளும் தன் வாழ்வில் விவாகம் செய்து கொள்ளாமலே யிருக்கவேண்டு மென்று விரதம் பூண்டிருந்தவள். எனவே, விவாகம் நடந்த தினத்தன்று பெண்ணும் மாப்பிள்ளையும் ஒருவர் கொள்கையை மற்றவர் அறிந்து கொண்டவுடன் மன மொத்தவர்களாகித் தம்பதியாக வாழாமல் மகிழ்ச்சியுடன் தம்

இருவருக்குமிடையே மலர் தூவி எல்லை வகுத்துக்கொண்டு நெடுநாள் பிரிந்து வாழ்ந்தனர். காசியபரின் தாயார் இறந்ததும் அவர்கள் இருவரும் புறப்பட்டு ஒவ்வொரு திசையில் சென்று துறவிகள் கூட்டத்தில் சேர்ந்து கொண்டனர் என்பது கதை.*

காசியபர் முதலில் எந்த மதத்தைப் பின்பற்றி வாழ்ந்தவர் என்பது தெரியாது. அவர் பௌத்த சங்கத்தில் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்தும் அவரிடம் பொறுமை கொண்ட சில பிக்ஷுக்கள் காசியபர் வேற்றுமதச் சார்பு கொண்டவர் என்று குற்றம் சுமத்தியது முண்டு.

தருமத்திலும் சங்க விதிகளிலும் காசியபர் மகா சமர்த்தராயிருந்த காரணத்தால் பௌத்த சங்கத்தில் அவரை ஒரு முதல்வர் என்று சகலரும் கருதி, புத்தரைவிட அவருக்கே அதிகமாக அஞ்சி நடந்தார்கள். சட்டத்தை மீறும் பிக்ஷுக்களுக்கு ஈவிரக்கம் காட்டாமல் தண்டனை விதித்து அவர்களை வெளியேற்றவும் தயங்க மாட்டார் காசியபர். அதனல் பெரும்பாலான பிக்ஷுக்களும் அவருக்குப் பயந்து அடங்கி ஒடுங்கி நடந்தார்கள். ஒரு சிலர் பொறுமையும் கொண்டனர். எப்படி யிருந்தாலும் அவரில்லாமல் சங்கம் நடவாது என்ற ஒரு கருத்தும் இருந்து வந்தது. அதனலேயே அவரை 'மஹா காசியபர்' என்று வழங்கினர். புத்தர் குசீநகரில் இறந்தபோது அவரது பூதவுடலைத் தகனம் செய்யவேண்டிய சமயத்தில் காசியபர் அங்கில்லை. தீ மூட்டியபோது அத் தீ பற்றிக் கொள்ளாததைக் கண்டவர்கள், "காசியபர் இல்லாமல் தீ எவ்வாறு மூளும்?" என்று சொன்னர்களாம். இறுதியில் காசியபர் அங்கு வந்து சேர்ந்த பின்னர்தான் தீப்பற்றி எரிந்தது என்று சொல்லப் படுகிறது. அவ்வளவு பெருமை காசிய பிக்ஷுவுக்குக் கொடுக்கப்

---

*இந்தப் பத்திரை என்பவளே குண்டலகேசி என்ற பெயருடன் விளங்கிய பௌத்த பிக்ஷுணி என்றும் நம்பப்படுகிறது. முதலில் இவள் நிர்கிரந்தர் அல்லது நிகண்டர் என்று சொல்லப்படும் ஜைன மதத் துறவியாயிருந்து அனேக வாதங்களில் மற்றைய சமயப் புலவர்களை யெல்லாம் வெற்றி கொண்டு வரும் வழியில், வைசாலி நகரத்தில் புத்தரின் சீடரான சாரீபுத்திரருடன் வாதிட்டுத் தோல்வி யடைந்தா ளென்றும், அதன் பின் புத்தரிடம் சரணடைந்து தரும தீக்ஷை பெற்று ஒப்பற்ற பௌத்த மத வாதியாக விளங்கினள் என்றும் கதை. ஆனல், குண்டலகேசியின் ஆதி வரலாறு வேறு. அவள் ஒரு திருடனை மணந்தாள் என்றும், அவன் இவளைக் கொல்ல எத்தனித்தபோது தந்திரத்தால் அவனையே கொன்று விட்டு ஜைனத் துறவியானள் என்றும் குண்டலகேசி சரித்திரம் கூறுகிறது. அந்தக் குண்டல கேசிக்கும் பத்திரை யென்பதே இயற் பெயர். அவளும் பின்பு பௌத்தத்துக்கு மாறினவள். காசியபரின் மனைவி பத்திரையும் குண்டலகேசி யாகிய பத்திரையும் ஒருத்திதானை என்பது தெரியவில்லை.

படுகிறது. புத்தருக்குப் பின் சங்க விதிகளை யொழுங்கு படுத்தவும் திரிபிடகங்களை வகைப்படுத்தவும் கூட்டப்பட்ட முதலாவது பௌத்த சம்மேளனத்தில் காசியபர் முக்கிய இடம் பெறுகிறார்.

★

இராஜகிருகத்துக்கு வந்த புத்தர் காசியபரையும் சங்கத்தில் சேர்த்துக்கொண்டு வந்து வேணுவனத்தில் தங்கி யிருந்தார். இந்த விஜயத்தின்போது முக்கியமாக நடந்த சம்பவங்கள் இரண்டு. ஒன்று பிம்பிசாரன் மனைவி க்ஷேமை என்பவளை பௌத்தத்தில் சேர்த்துக் கொண்டது. மற்றது, அநாதபிண்டிகன் என்ற வணிகனைச் சந்தித்தது. இவற்றை விடச் சில இருத்தி ஆற்றல் சம்பந்தமான கதைகளுமுள்ளன.

பிம்பிசாரன் மனைவி க்ஷேமை சிறந்த அழகி யென்றும் தற்பெருமை கொண்டவளென்றும் சொல்லப்படுகிறது. அவள் கோசல தேசத்தவள். பிரசேனஜித் மன்னனின் தங்கை. நெடுங் காலமாக அந்தக் குடும்பம் ஜைன மதத்தைத் தழுவி வந்தது. பிம்பிசாரன் பௌத்தத்தைச் சார்ந்து புத்தரை அடிக்கடி போய்ப் பார்த்து வருவது க்ஷேமைக்கு அவ்வளவாகப் பிடிக்க வில்லை. மன்னனின் அழைப்பின் பேரில் பல தடவை புத்தர் அரண்மனைக்கு வந்த சமயங்களிலும் க்ஷேமை அவரைத் தரிசித்தது கிடையாது. எப்படியோ ஒரு நாள் புத்தர் அவளது தற்பெருமையை அடக்க வேண்டுமென்று சிந்தித்தவராய் பிம்பிசாரன் மூலமாக அவளைச் சந்தித்து, அவள் முன்பாகத் தமது இருத்தி ஆற்றலை உபயோகித்து ஒரு மாயப் பெண் தோற்ற மளிக்கும்படி செய்தார். அந்த மாயப் பெண் முதலில் கண் கொண்டு பார்க்கக் கூசும்படியான அழகுள் ளவளாகக் காட்சி யளித்தாள். பின்னர் அவள் அழகு படிப்படியாகக் குன்றி, இறுதியில் என்பும் தோலும் போர்த்தவளாய்த் தளர்ந்து முதுமை யடைந்து, பார்க்க விகாரமாய்க் காட்சி யளித்தாள். நிலையாமை என்ற தத்துவத்தை க்ஷேமைக்கு விளக்குவதற்காகப் புத்தர் இந்த உபாயத்தைக் கையாண்டு அதில் வெற்றியும் பெற்றார். புத்தரின் உபதேசத்தைக் கேட்ட க்ஷேமை தனது தற்பெருமையைக் கைவிட்டு உண்மை தெளிந்து புத்தர் பாதங்களில் சரணடைந்தாள் என்று சொல்லப்படுகிறது.

அந்த நாளிலே புத்தரைத் தினசரி வந்து தரிசித்து ஆசீர்வாதம் பெற்றுச் செல்பவர்கள் பலர். அவர்களில் ஒருவன் இராஜகிருகத்தில் பெரு நிதி படைத்த வணிகன் ஒருவன். இவன் ஒரு நாள் மாலை போதி வேந்தனைப் பார்த்து அவர் தரும உரையைக் கேட்டுவிட்டு,

மறு நாள் தன் வீட்டிலே புத்தரும் அவர் சீடர்களும் வந்து அமுதுண்டு செல்லவேண்டு மென்று கேட்டுக் கொண்டான். புத்தர் அதற் கிணங்கினர்.

அன்றிரவு அந்த வணிகன் வீட்டிலே பல ஏற்பாடுக ளெல்லாம் நடந்தன. மறுநாள் புத்தரும் சீடர்களும் விருந்துக்கு வருகிறார்கள் என்றவுடன் வேலையாட்கள் அங்கும் இங்கும் ஓடி ஊக்கத்தோடு வேலை பார்த்தனர். வணிகனே நேரில் நின்று யாவற்றையும் மேற் பார்வை செய்தான்.

அச்சமயம் அந்த வீட்டிலே மைத்துனன் சுதத்தன் என்பவன் விருந்தினனாக வந்திருந்தான். கோசல நாட்டைச் சேர்ந்த அவன் மிகவும் சீரும் சிறப்பும் பெற்றவன். தான தருமங்களில் அளவற்ற மதிப்புப் பெற்றிருந்தானையால் அவனை எல்லாரும் "அநாத பிண்டகதாதை" அல்லது அநாத பிண்டிகன் என்று சொல்லி யழைப் பார்கள். கோசத்தில் சிராவஸ்தி நகரத்தில் அவனுக்கு நிறைந்த செல்வாக்கு உண்டு. இராஜகிருக நகரத்துக்கு அவன் வியாபார நோக்கத்தோடு வந்தால் தனது மைத்துனன் வீட்டில்தான் தங்குவது வழக்கம். அன்று அவன் வந்திருந்த சமயத்திலேதான் வீட்டிலே புத்த சங்க விருந்துக்கு ஏற்பாடுகள் பலமாக நடந்துகொண்டிருந்தன. தன் மைத்துனன் தன்னையும் பொருட்படுத்தாது இவ்வளவு அக்கறை யாக வேறு காரியத்தில் ஈடுபட்டிருந்தது அநாத பிண்டிகனுக்கு ஒரு வித ஆச்சரியத்தையும் ஆவலையும் தந்தது. "மற்றைய சமயங் களில் நான் இங்கு வந்தால் ஒவ்வொரு கணமும் என் கூடவே யிருந்து உபசாரம் செய்வான் என் மைத்துனன். இன்று என்னையும் மறந்து விட்டு எதற்காக இவ்வளவு ஆர்ப்பாட்டமான விருந்து வைபவத்துக்கு ஆயத்தப்படுத்துகிறான்? ஒருவேளை மகத மன்னன் பிம்பிசாரனையும் அவன் மந்திரி பிரதானிகளையும் விருந்துக் கழைத்திருக்கிறானே!" என்று சந்தேகம் கொண்டான்.

தகுந்த ஒரு சமயம் பார்த்து அநாதபிண்டிகன் தன் மைத்துனனை யணுகித் தன் மனத்தி லெழுந்த சந்தேகத்தைச் சொன்னான். வணிகன் அதற்கு, "அப்படி யொன்று மில்லை. ஆனால், அரசனையும் விடப் பெரியவரான புத்தரையும் அவரது அடியார்களையும் அமுதுண்ண அழைத்திருக்கிறேன்" என்று விடை தெரிவித்தான்.

"என்ன? புத்தர் இந்த வீட்டுக்கு வருகிறாரா? புத்தர் ஒருவர் பிறந்திருக்கிறார் என்று நான் கேள்விப்பட்டதுண்டு. அவர் இந்த நகரத்துக்கு வந்திருக்கிறார், அதிலும் இந்த வீட்டுக்கே விருந்துண்ண வரப்போகிறார் என்று கேள்விப்படுவது பேராச்சரியத்தைத் தருகிறது. உண்மையில் நீ அதிர்ஷ்டசாலிதான். மைத்துன!

அப்படிப்பட்ட மகானை நான் இந்தச் சமயத்திலேயே போய் ஒரு தடவை தரிசித்துவிட்டு வரலாமா?" என்று கேட்டான். அதற்கு வணிகன், "இப்போது சந்தர்ப்பம் அவ்வளவு பொருத்த மல்ல. நாளைக் காலையில் அவரே இங்கு வருவார். வேண்டியமட்டும் கண்டு தரிசிக்கலாம்" என்று சொல்லி வைத்தான்.

அன்றிரவு அநாத பிண்டிகனுக்குத் தூக்கமே வரவில்லை. மறுநாள் புத்த பகவானைக் கண் குளிரக் காணப்போவதை எண்ணி யெண்ணி உள்ளம் பெருமித மடைந்தது. விடிந்து விட்டதா என்று இரண்டு தடவை படுக்கையி லிருந்து எழுந்து பார்த்தான். மீண்டும் படுத்துக் கொண்டான். மூன்றும் முறையாக எழுந்தான். விடிவதற்குச் சற்று நேரந்தான் இருக்கிறது என்று கண்டதும் எவருக்கும் தெரியாமல் எழுந்து, தனது ஆடைகளைச் சரிப்படுத்திக்கொண்டு, புத்தர் தங்கியிருந்த வேணு வனத்தை நோக்கி நடந்தான்.

உதய சூரியன் இன்னும் எழவில்லை. உஷத் காலத்து ஒளி மாத்திரம் வழி காட்டியது. நடந்துகொண்டே போனான். அப்போது அசரீரி போல் ஒரு குரல் கேட்டது. "வணிகனே! நடந்து செல். மேலும் மேலும் நடந்து செல். ஆயிரம் ஆயிரம் யானைகளையும் குதிரைகளையும் தேர்களையும் மற்றும் பெரு நிதியங்களையும் தேடிச் செல்வதைவிட இந்த உன் இலட்சியத்தை நாடிச் செல்வது மேலானது," என்று அந்தக் குரல் சொல்வது போல் இருந்தது.

விடிந்தது. உபவனத்தில் வெள்ளென ஒளி பரவி யிருந்தும் அமைதி நிலவியது. அச்ச மில்லாமல் அநாத பிண்டிகன் வேணுவன ஆசிரமத்தை நோக்கி நடந்தான். அச்சமயத்திலே எழுந்திருந்து அங்கு மிங்கும் நடை போட்டுக் கொண்டிருந்த பகவான், அநாத பிண்டிகன் தூரத்திலே வரும்போது கண்டவர், ஓர் ஆசனத்தி லுட்கார்ந்தார். வணிகன் சமீபத்தில் வந்ததும், "சுதத்தரே! வருக", என்று அநாத பிண்டிகனின் இயற்பெயரை, சாதாரணமாக எவரும் சொல்லி அழைக்காத பெயரைச் சொல்லி அழைத்தார். இது அநாத பிண்டிகனுக்கு அதிசயத்தையும் பெரு மகிழ்ச்சியையும் கொடுத்தது. பெருமிதம் கொண்டவனுய் மாதவ முனிவர் பாதங்களில் விழுந்து நமஸ்கரித்துப் பாத தூளியை எடுத்துத் தலையில் போட்டுக் கொண்டான்.

"சுதத்தா! இந்த அதிகாலையில் உன்னைப் போன்ற கிருகஸ் தர்கள் எல்லாரும் நன்முகத் தூங்கிக்கொண்டிருக்க எதற்காக நீ மாத்திரம் எழுந்து இந்தப் பக்கம் வந்தாய்?" என்று கேட்டார் புத்தர். "கதி மோக்ஷத்தை நாடி வந்தேன், தேவ! என் வாழ்நாள் முழுவதும் மற்றவர்களுக்குத் தானம் வழங்குவதில் ஈடுபட்டிருந்தேன். இன்று



26
சாரதாத்—
கௌகண்டி
(பக். 154)



27.
சாரநாத்—
தர்மமுக ஸ்தூபி
(பக். 157)



28.
சாரநாத்—
தர்மமுக ஸ்தூபி
சிற்ப அழகு
(பக். 157)



29.
சாரநாத்—
மிருகதாவம் என்ற
மான்காடும்
மூலகந்த கூட
விஹாரமும்
(பக். 152)



30.
சாரநாத்—
மூலகந்த கூடம்,
தர்ம சக்கரப்
பிரவர்த்தனம்
என்ற
முதல் பிரசங்கம்
செய்த ஸ்தலம்
(பக். 156)





32. தர்ம சக்கரப் பிரவர்த்தனம்—அஜந்தா சிற்பம் (பக். 156)

31. சாரநாத்—அசோக சின்னம் (பக். 157)



33.
கௌசாம்பி—
புதைபொருள்
சின்னங்கள்
(பக். 231)
Copyright:
Archaeological
Dept.,
Govt. of India

எனக்குத் தானம் பெற்றுக்கொள்ள இங்கு வந்தேன். நிருவாண மோக்ஷம் ஆகிய பெருங்கொடையைப் பெற்றுக்கொள்ள வந்திருக் கிறேன்", என்று பகன்றான் வணிகன்.

"நீ செய்துள்ள தான தருமங்க ளெல்லாமே உனக்கு மறு மையில் சிறந்த பலனைத் தரும் என்பதில் நீ திருப்தி கொள்ள வில்லையா?"

"ஒரு வேளை தரக்கூடும். ஆனால் நான் அதை யறியேன். அதனை யறிந்து கொள்வதற்காகவே நான் இங்கு வந்தேன்."

"சுதத்தா! நீ கொண்டுள்ள சந்தேகம் சரியானதே. தான தருமங் களில் ஈடுபட்டிருப்பது போன்ற வாழ்க்கை முறை யெல்லாம் விமுக்தி யின்பத்தைத் தர வல்லனவே. ஆனால், அதற்கும் ஒரு நிபந்தனை யுண்டு!"

"அந்த நிபந்தனைதான் என்ன, முனிவ?"

"அத்தகைய நற்செய்கை யெல்லாம் 'நான்' என்ற களங்க மற்றிருத்தல் வேண்டும். எவ்வளவுதான் தானம் செய்தாலும், தியாகம் செய்தாலும், 'நான் கொடுத்தேன்' என்ற மனப்பான்மை யில்லா திருந்தாலொழிய அந்தத் தானத்தின் பலன் கிட்டாது. அகந்தை யாகிய போர்வை யாவற்றையும் மறைத்து நிற்கும்."

"என்னைப் பற்றியோ எனது சுகத்தைப் பற்றியோ சிறிதும் கருதாமலே நான் இதுவரை வழங்கி வந்தேன்."

"உன்னைப் பற்றி நீ சிந்திக்கவில்லை யென்று நீ சொல்கிறாய்? உனது கொடைக ளெல்லாம் மெச்சப்பட வேண்டுமென்ற எண்ணம் உன் மனத்தி லெழவில்லையா? சுவர்க்கத்தில் உனக்கு வெகுமதி கிடைக்க வேண்டுமென்ற சிந்தனை யெழவில்லையா?"

அநாதபிண்டிகன் ஒரு கணம் சிந்தித்தான்: "ஆம், அத்தகைய எண்ணம் இருந்தது தான்" என்று விடை சொன்னான்.

"நல்ல செய்கைகளினால் சுவர்க்கத்தி லின்பம் கிடைப்பது நிச்சயம். ஆனால், அந்த சுவர்க்க இன்பம் மாத்திரம் நிருவாண மாகாது. சுவர்க்கத்தி லிருக்கும் தேவர்களும் அநித்திய மானவர் களே. அவர்களும் ஊழ்வினையின் பற்றிலிருந்து விடுபட்டவர்க ளல்ல. பிறப்பும் இறப்பும் தளர்வும் துன்பமும் அவர்களுக்கு முண்டு. அந்தத் துன்பங்களிலிருந்து முற்றுக விடுபட்டு நிருவாண மென்ற நித்தியமான விமுக்தி நிலையை இங்கேயே இப்பொழுதே பெறுவதற்குரிய மார்க்கத்தை யடைய வேண்டும்."

"அது எவ்வாறு பெறத்தக்கது?" என்று கேட்டான் அநாத பிண்டிகன். அவன் ஆவல் கட்டுக்கடங்காம லிருந்தது.

"நான் என்ற அகந்தையை அழிப்பதே அந்த மோக்ஷத்தைத் தரவல்லது. நான், எனது, என்ற பற்றுக்களை நீக்க வேண்டும். தருமத்தில் சரணடைந்தாயானால், அந்த மார்க்கத்தைக் கடைப் பிடித்து அதன் வழி யொழுகி வந்தால், இம்மையிலும் மறுமையிலும் சுகம் வேண்டும் என்ற அவா எழாமல், நன்மை செய்யவேண்டும் என்ற ஆசை தானும் பிறக்காமல், சாஸ்வதமான விமுக்தி யின்பத் தைப் பெற வழி பிறக்கும்."

"அவ்விதம் ஆசையை ஒழிப்பதற்கு வழியென்ன? 'நன்மை செய்யவேண்டு' மென்ற ஆசையை நான் எப்படித் தவிர்க்க முடியும்?"

"சுதத்தா! மற்றவர்கள் உன்னை வாழ்த்துவதை நீ காதில் போட்டுக் கொள்ளாதே. எவ்வித பலனையும் எதிர்பார்க்காமல், இம்மையிலோ மறுமையிலோ இன்பம் கிடைக்கவேண்டும் என்ற சிந்தனை யில்லாமல், இது உன் கடமை என்று கருதி உன் பணியைச் செய். முதலில், பெருமளவான கொடைகளைக் கொடுப்பதை நிறுத்திச் சிறிது சிறிதாகக் கொடுத்துக் கொண்டு வா. அப்போது 'நான் கொடுக்கிறேன்' என்ற சிந்தனையோ, 'இது எனக்குப் பலன் தரும்' என்ற சிந்தனையோ எழாது. 'நான்' என்ற அகந்தை தருமத்தில் அடங்கி மறைந்துவிடும்."

"அதெப்படி முடியும், முனிவரே? நான் இதுவரை வழக்கமாகக் கொடுத்து வந்த அளவில் குறைத்துக் கொடுத்தால் மற்றவர்கள் அதுபற்றிப் பேசிக்கொள்வதைக் கேட்டுக் கொண்டிருப்பது எளிதான காரியமா?"

"அதைப்பற்றி நீ சிந்திக்க வேண்டாம். 'நான் கொடுக்கிறேன்', 'இது எனக்குப் பலன் தரும்' என்ற சிந்தனை யெழாமல் கொடுக் கப்படும் கொடையினால் கிடைக்கும் பேறு, 'நான் பெரிய தியாகம் செய்கிறேன்' என்ற எண்ணத்துடன் கொடுக்கப்படும் கொடை யைவிட மேலான பலனைத் தரும். அப்பொழுதே தருமத்தின் வழி பிறக்கும்.

"சுதத்தா! நீ கொடுக்கும் உணவு மாத்திரம் ஒருவனைக் கடைத் தேற வைக்க முடியாது. அவன் உள்ளொளி பிறந்து துன்பத்தின் காரணத்தை யறிந்து கொள்வானால் துன்பமே பிறக்காத மார்க்கத் தைத் தேட முடியும். அதுவே நான் சொன்ன தரும மார்க்கம். அந்தத் தரும மார்க்கத்தைப் பின்பற்றினால் உனது உள்ளத் துக்குச் சாந்தி கிடைக்கும்."

இதைக் கேட்ட அனாதபிண்டிகன் அளவற்ற மகிழ்ச்சி யடைந் தான். புத்தரையும் அவரது சீடர்களையும் மறுநாள் தன்னுடன்

விருந்துண்ணும்படி அழைத்தான். அதற்குப் புத்தர் தாம் அநாத பிண்டிகனின் மைத்துனன் வீட்டுக்கு வருவதாக ஒப்புக்கொண்டதைச் சொன்னதும் அநாதபிண்டிகன் மற்றொரு முறை அதை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொண்டான்.

மறுநாள் இராஜகிருக வணிகன் வீட்டுக்குப் புத்தரும் சீடர்களும் சென்றார்கள். அங்கே உணவு முடிந்த பின் அநாதபிண்டிகன் புத்தரை சிராவஸ்திக்கு ஒரு தடவை விஜயம் செய்ய வேண்டு மென்று வேண்டினான். அதற்குப் புத்தர், "சிராவஸ்தி பெரிய நகரம். என்னைப் போன்றவர்களுக்குத் தனித்துறையத் தகுந்த இடம் கிடைக்காதே" என்றார். அநாதபிண்டிகன், "அத்தகைய இடத் தைச் சமைத்துக்கொண்டு நான் தங்களை விண்ணப்பித்துக் கொள்ளு கிறேன்", என்று மகிழ்ச்சியுடன் சொன்னான். புத்தரும், அவசியம் வருவதாக வாக்குக் கொடுத்தார்.

✱

அநாதபிண்டிகனுக்கு வாக்குக் கொடுத்தபடி புத்தர் சிராவஸ்திக்குப் போக வேண்டிய நாளை எதிர்பார்த்துக்கொண்டு இராஜகிருகத்தில் தங்கி யிருந்தபோது கபிலவஸ்துவிலிருந்து ஒரு செய்தி வந்தது. ரோகிணி ஆற்றின் நீர் சம்பந்தமாகச் சாக்கியருக்கும் கோலி யருக்கு மிடையில் அடிக்கடி பூசல்கள் ஏற்பட்டு வந்தன. இரு நாடு களுக்கு மிடையே எல்லையாக அமைந்த ரோகிணி நதியின் நீர் தான் அவர்களுக்கு நீர்ப்பாசனத்துக்குள்ள ஒரே யொரு வாய்ப்பு. அதன் காரணமாக அடிக்கடி உரிமை பற்றிய தகராறுகள் ஏற்பட்டு வந்தன. இப்போது அந்தச் சச்சரவு முற்றிப் பெரிய போர் நடக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டு அந்தச் செய்தி புத்தரின் காதுக்கு எட்டியதும் இராஜகிருகத்திலிருந்து நேரே கபிலவஸ்துவுக்கு மீண்டும் வரவேண்டிய தாயிற்று.

சாக்கியரும் கோலியரும் சம்பந்திகள். புத்தரின் தந்தை குடும் பத்தினர் சாக்கியர். அவர் தாயார் வழியினர் கோலியர். ஆகவே இவ்விரு குடும்பத்தாரும் ஒற்றுமை யின்றி வேண்டாத சண்டையி லிறங்கித் தம்மைத்தாமே அழித்துக்கொள்வதை விரும்பாத புத்தர் கபிலவஸ்துவுக்கு வந்தார். அச்சமயத்தில் இரு பக்கத்திலும் பெரும் கூட்டம் சேர்ந்து யுத்த களத்தில் இரு பெரும் சேனைகள் நிற்பது போல் ஆவேசத்துடன் நிற்கக் கண்டார். புத்தரைக் கண்டதும் அவர்கள் தயங்கினர். அப்பொழுது புத்தர் அவ்விரு கூட்டத் தாரையும் பார்த்து, "ஒரு சிறு ஆற்று நீருக்காக இத்தனை பேர் உயிரும் கொல்லப்பட வேண்டுமா? உங்கள் அறியாமைதான் என்ன!

கோபத்தை யடக்குங்கள். ஆத்திரப்படாதீர்கள். சாந்தமான உள்ளத்தோடு உங்கள் சச்சரவைச் சமாதானமான முறையில் இரு பக்கத்திலுள்ளவர்களும் கலந்தாலோசித்து முடிவு செய்யுங்கள். அப்போது ஆற்று நீரைப் பங்கு போடுவதற்கு வழி பிறக்கும். வீணாக எதற்குப் போர் செய்து உயிரை அழிக்க முற்பட்டீர்கள்?" என்று நல்ல வார்த்தை சொல்லிச் சமாதானப்படுத்தினர். உடனே சாக்கியரும் கோலியரும் கோபந் தணிந்து சமாதானம் செய்து கொண்டனர். அவர்களில் முதியவர்களா யிருந்தவர்கள், கூடி ஆலோசித்து ரோகிணி யாற்று நீரைப் பங்கீடு செய்வதற்கு நியமிக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் நிகழ்ந்து இரண்டொரு நாளில் சுத்தோதன மன்னன் மரணப் படுக்கையி லிருந்தான். புத்தர் அங்கு சென்று தமது தந்தைக்கு உபதேசம் செய்து மரணம் என்பது தடுக்க முடியாத ஓர் உபாதை யென்றும், மரணமற்ற நிருவாண மோக்ஷத் துக்கு வழிதேட வேண்டும் என்றும் போதித்தார். சுத்தோதனன் உள்ளத்தில் ஒளி பிறந்து அவன் உயிர் சாந்தமாகப் பிரிந்தது.

சுத்தோதனன் இறந்ததும் விதவையான பிரஜாவதி கோதமி புத்த பிரானை யணுகித் தனக்கும் தரும தீக்ஷை யளித்துச் சங்கத்தில் தன்னையும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று இரந்து கேட்டாள். ஆனால், புத்தர் தமது சங்கத்தில் பெண்களுக்கு இடமில்லை யென்ற பிடிவாதமான கொள்கையோ டிருந்தவர். ஆகையால் கோதமியின் வேண்டுகோளை மறுத்து விட்டார். மூன்று தடவை அவள் இங்ஙனம் வேண்டியும் புத்தர் அந்த மூன்று முறையும் மறுத்துவிட்டார். கோதமி மனமுடைந்து போனாள். தான் வளர்த்தெடுத்த மதனையே ஞானோதயம் பெற்ற புத்தராகி விட்டார். தான் பெற்றெடுத்த மகன் நந்தனும் பிக்ஷுவாகிச் சங்கத்தில் சேர்ந்துகொண்டான். தனது கணவன் சுத்தோதனனும் போய்விட்டான். விதவையான அவளுக்கு இனி இந்த உலகத்தில் ஆதரவளிக்க எவர் இருக்கிறார்கள்? ஆகையால், தருமத்தைச் சரணடைந்து பிக்ஷுணியாக வாழ்வ தொன்றையே விரும்பினாள். புத்தர் அதற்கு மறுத்துவிட்ட போதிலும் என்றோ ஒருநாள் சங்கத்தைச் சரணடைய வேண்டு மென்ற உறுதியோடு காத்திருந்தாள்.

கபிலவஸ்துவில் நியக்குரோத ஆசிரமத்தில் சில நாள் தங்கி யிருந்துவிட்டு புத்தர், சிராவஸ்திக்குச் செல்லவேண்டிய சமயம் வந்து விட்டதென்று கண்டதும், தமது முக்கியமான சீடர் சிலரை யழைத்துக்கொண்டு அந்த நகரை நோக்கிப் பிரயாணப்பட்டார்.

இருபதாம் அத்தியாயம்

விலையும் மதிப்பும்

கோசல நாட்டின் தலைநகரா யிருந்தது சிராவஸ்தி. புத்தர் காலத்திலே மகதமும் கோசலமும் செல்வச் சிறப்பும் அரசியல் சிறப்பும் பொருந்தியிருந்த இரு நாடுகள். கோசல நாட்டுக் கதிபதியா யிருந்தவன் பிரசேனஜித் என்பவன். இவன் சகோதரியே மகத மன்னன் பட்டத்தரசி க்ஷேமை. பிரசேனஜித் மன்னன் வைதிக தர்மத்தைப் பின்பற்றியவன் என்றும் வேத வேள்விகளில் சிறந்த சிரத்தை கொண்டிருந்தவன் என்றும் சொல்லப்படுகிறது. ஆனல், அவன் மற்றைய சமயப் புலவர்களிடமும் அளவற்ற மதிப்பு வைத்திருந்தவன். இராஜகிருகத்திலும் வைசாலியிலும் செல்வாக்குப் பெற்றிருந்த ஜைன, ஆஜீவக, பௌத்த மதத் துறவிகள் பலர் சிராவஸ்தியிலும் வந்துறைந்திருந்து சமய வாதங்கள் பல நடத்தினர். யாவரையும் ஆதரித்தவன் பிரசேனஜித்.

பிரசேனஜித் அரசனுடைய வம்சம் மாதங்கம் என்ற கீழ்க் குலத்தைச் சேர்ந்ததென்று லலிதவிஸ்தரம் என்னும் புத்தருடைய சரித்திரத்தைக் கூறும் புராணம் குறிப்பிட்டுள்ளது. இந்த அரசன் செல்வச் செழிப்பும் கீர்த்தியும் பெற்றிருந்த சமயத்தில் உயர்ந்த ஜாதியார் என்று கருதப்பட்ட சாக்கிய வம்சத்திலிருந்து ஒரு பெண்ணை மணந்துவிட வேண்டுமென்று தீர்மானித்து, சாக்கியரிடம் தூதனுப்பினன். மாதங்க வம்சத்தவன் ஒருவனுக்கு க்ஷத்திரியப் பெண்ணை எவ்வாறு கொடுப்பது என்று சிந்தித்த சாக்கியர் உடனே மறுத்துவிடவும் துணியவில்லை. ஏனெனில், கோசல மன்னனுக்கு அவர்கள் திறை கொடுத்து வந்த காலம் அது. வீண் சச்சரவில் இறங்கவும் அவர்கள் விரும்பவிலலை. ஆகையால், இதிலிருந்து தப்புவதற்கு உபாயம் தேடிக்கொண்டிருக்கையில், மகாநாமன் என்ற சாக்கியனுக்கு ஒரு தாசி வயிற்றில் பிறந்த ஒரு பெண் இருந்தாள். அவளையே ஒரு க்ஷத்திரியப் பெண்ணென்று சொல்லிக் கோசலத்துக் கனுப்பி பிரசேனஜித் மன்னனுக்கு மணம் செய்து வைத்துவிட்டனர். அவளைப் பட்ட மகிஷியாக்கி பிரசேனஜித் வாழ்ந்த காலத்தில் அவர்களுக்கு விதூர்த்தபன் என்ற ஒரு பையன் பிறந்தான். அவன் வளர்ந்து பதினறு வயது வந்த சமயத்தில் சாக்கியர்களிடம் வந்தபோது சரியான வரவேற்புக் கிடைக்கவில்லை. தாசி மகன்

என்ற செய்தி எப்படியோ அவன் காதுக் கெட்டியது. இந்தச் சூழ்ச்சியைப்பற்றி அறிந்துகொண்டதும் எப்படியாவது ஒரு நாள் சாக்கியரிடம் வஞ்சம் தீர்த்துக்கொள்ள வேண்டும் என்று விதூர்த் தபன் உறுதி கொண்டான். பிற்காலத்தில் ஒருநாள் தன் தந்தை யைத் தலைநகரிலிருந்து விரட்டிவிட்டு இராச்சியத்துக் கதிபதியாகி சாக்கியர் மேற் படையெடுத்துச் சென்று அவர்கள் வம்சத்தையே நிர்மூலமாக்கினன் என்று கதையுண்டு.

இராஜகிருகத்திலிருந்து புத்தர் பெருமானை சிராவஸ்திக்கு வருமாறு அழைத்த அநாதபிண்டிகன் ஊருக்குத் திரும்பி வந்ததும் எவ்வாறு பெருமானை வரவேற்பது, அவரை எங்கே தங்கச் செய்வது, அதற்கு ஏற்ற இடமாக எங்கே தேடுவது என்று சிந்தித்தான். இறுதியில் சிராவஸ்தியின் வெளிப்புறத்தில் கோசல இளவரசன் ஜேதனுக்குச் சொந்தமான ஜேதவனம் என்ற எழில் மிக்க உப வனம் ஒன்றிருப்பதை யுணர்ந்தான். இளவரசனின் வசந்த கால இருக்கையாயிருக்கும் அந்த உபவனத்தை எவ்வாறு பெற்றுக் கொள்ளலாம் என்று தீவிரமாகச் சிந்தித்துவிட்டு, எப்படியாயினும் இளவரசனைக் கேட்டுவிடுவது என்று முடிவு செய்து ஒருநாள் அவ னிடம் சென்று தனது உட்கருத்தைத் தெரிவித்தான்.

"ஜேதவனம் எனது சொந்த உபயோகத்துக்குள்ளது. அதை நான் எவருக்காவது விற்பதாக உத்தேசம் கொண்டிருக்கவில்லை" என்று சொன்ன இளவரசன், வேடிக்கையாகவே, "ஜேதவனத்தை வாங்குபவர்கள் வனம் முழுவதும் அதன் விலையைத் தங்கமாகப் பரப்ப வேண்டி வருமே!" என்றான்.

அநாதபிண்டிகன் விடுவதாயில்லை. "மன்னவ! தாங்கள் உப வனத்துக்கு ஒரு விலை கூறிவிட்டீர்கள். அந்த விலையை நான் ஏற்றுக்கொள்ளுகிறேன். தாங்கள் கேட்டவாறே நான் உபவனத்தில் தங்கமாகவே பரப்பி வைத்து அந்த விலையைக் கொடுத்துவிடு கிறேன்" என்றான்.

ஜேதன் இதை எதிர்பார்க்கவில்லை. "வேடிக்கையாக நான் சொன்னதை, இந்த விலை மதிப்பற்ற உபவனத்தை எவரும் வாங்கச் சக்தியில்லை யென்று கருதி நான் சொன்னதை, இந்த வணிகன் உண்மையாகவே ஏற்றுக்கொண்டு விட்டான். இதிலிருந்து எப்படித் தப்புவது?" என்று சிந்தித்துக்கொண்டே, "நான் விற்கவேண்டு மென்ற நோக்கத்தோடு அப்படிச் சொல்லவில்லை. வேடிக்கைக்காக அப்படிச் சொன்னேன். ஆகையால், எப்படி ஒப்பந்தமாகும்?" என்று வாதிட்டான். இறுதியில் இந்த வழக்கைக் கேட்ட அரசனின் மந்திரிகள், "இளவரசன் சொன்னது விலைதான். அந்த விலையை

வணிகன் ஏற்றுக்கொண்டான். ஆகையால், வணிகன் கூறியவாறு அந்த விலையைக் கொடுத்தால் ஜேதவனம் அவனுக்கே சொந்தம்" என்று தீர்ப்பளித்து விட்டார்கள்.

வண்டி வண்டியாகப் பொற்காசுகளைக் கொண்டு வந்து குவித்தான் அநாதபிண்டிகன். பல கூலியாட்கள் நின்று அவற்றை யெல்லாம் ஜேதவனத்தில் பரப்பினர்கள். முடிவில் ஒரு சிறிய இடம் மாத்திரம் காலியாக இருந்தது. அதனையும் மூடிக் காசு பரப்புவதற்காக அநாதபிண்டிகன் ஏவலாளரைத் தன் மாளிகைக்கு அனுப்பினன். இதை யெல்லாம் பார்த்திருந்த இளவரசன் ஜேதன், "வேண்டாம் அநாதபிண்டிகா! அந்தச் சிறிய இடம் என் சொந்தமாகவே இருக்கட்டும். அதனை உனது குருநாதர் புத்தருக்கு எனது சொந்தக் காணிக்கையாகக் கொடுக்க அனுமதி கொடு'' என்று கேட்டுக்கொண்டான். அநாதபிண்டிகன் மகிழ்ந்து அப்படியே யாகட்டும் என்று ஒப்புக்கொண்டான்.

மிக விரைவிலேயே அநாதபிண்டிகன் ஜேதவனத்தில் பிரமாண்டமான ஓர் ஆசிரமத்தைக் கட்டி முடித்தான். புத்தர் தங்குவதற்கும் பிக்ஷு சங்கத்தார் தங்குவதற்கும் சகல வகையான வசதிகளுடன் அந்தத் தவப்பள்ளி விளங்கியது. பொன் பரப்பி நிலம் வாங்கி மேலும் பொன் செலவழித்து இந்த ஆசிரமத்தைக் கட்டிய அநாதபிண்டிகனின் ஆர்வத்தையும் பக்தியையும் யாவரும் போற்றினர்.

அநாதபிண்டிகன் ஜேதவனத்தை வாங்கிய பின்னர் அந்த நிலத்தில் விஹாரம் கட்டுவதற்கு சாரீபுத்திரரை வரவழைத்து அவரது ஆலோசனையைக் கேட்டு, சாரீபுத்திரரின் மேற் பார்வையிலேயே கட்டப்பெற்ற தென்றும் கதையுண்டு.

விஹாரமும் அதைச் சேர்ந்த ஆசிரமமும் கட்டி முடிக்கப்பட்ட பின்னர் முக்கியமான சில சீடர்களுடன் புத்தர் சிராவஸ்திக்கு எழுந்தருளினர். தரும ராச்சியத்தின் சக்கரவர்த்தி சிராவஸ்திக்கு விஜயம் செய்கிறார் என்றவுடன் அந்நகர் என்றுமில்லாத சிறப்புடன் விளங்கியது. மன்னனும் குடிகளும் திரண்டெழுந்து சென்று வரவேற்றனர். ஜேதவனத்து வாயிலில் அநாதபிண்டிகன் காத்து நின்று பெருமான் வந்ததும் பொற்கெண்டியில் நீர் எடுத்து ஜேதவனத்தையும் விஹாரத்தையும் தாரை வார்த்து அன்பளிப்பாகக் கொடுத்தான்.

அநாதபிண்டிகனின் இந்தக் கொடை பௌத்த இலக்கியங்களில் மிக முக்கிய செய்தியாகக் காணப்படுகிறது. பௌத்த சிற்பங்களிலெல்லாம் அழியாத கதையாகச் சித்திரிக்கப்பட்டிருக்கிறது. ஜேதவன விஹாரம் ஏழு மாடிகளைக் கொண்ட தென்றும், பதினெட்டுக்

கோடி பொற்காசு செலவில் கட்டப்பட்ட தென்றும், மன்னர் அரண்மனைகளைவிட மேலான அழகுடன் விளங்கிய தென்றும் ललितविस्तरम் என்ற பௌத்த புராணம் வருணிக்கிறது.

புத்தரும் அவரது சங்கமும் ஜேதவன விஹாரத்தில் தங்கியிருந்தபோது தினசரி அங்கு சென்று அனாதபிண்டிகன் அவர்களுடைய தேவைகளைக் கவனித்து வந்தான் என்று சொல்லப்படுகிறது. பௌத்த உபாசகர்களி லெல்லாம் மிக உயர்ந்த ஸ்தானத்தைப் பெற்றான் அனாதபிண்டிகன்.

புத்தர் ஞானோதயம் பெற்றுத் தருமோபதேசம் செய்தது நாற்பத்தைந்து ஆண்டுகள். இந்த நாற்பத்தைந்து ஆண்டுகளிலே இருபத்து நான்கு ஆண்டுகள் மாரிக்கால உறைவிடமாக அவர் ஜேதவன விஹாரத்திலேயே கழித்தார். மாரிக்கால மல்லாத மற்றைய காலங்களில்கூட அவர் சிராவஸ்தியிலேயே தங்கியிருந்தார் என்று தெரிகிறது. தருமோபதேசம் செய்யப் புறப்பட்டு ஊர் ஊராகச் சுற்றிப் பிரயாணம் செய்த செய்திகளில் முதல் இருபத்து நான்கு ஆண்டுகள் அவர் தரிசித்த இடங்களைப்பற்றி பௌத்த நூல்களில் குறிப்புக்கள் காணப்படுகின்றன. அதன் பின் அவர் பரிநிருவாண மடைந்த சம்பவத்தைப் பற்றியும் இறப்பதற்கு முன்பு தரிசித்த இரண்டொரு இடங்களைப் பற்றியுமே குறிப்புக்கள் உள்ளன. ஆகையால், இடைப்பட்ட இருபது அல்லது இருபத்தொரு ஆண்டுகள் எங்கே தங்கியிருந்தார் என்ற செய்தி எங்கும் காணப்படவில்லை. அனேகமாக சிராவஸ்தியிலோ அல்லது சிராவஸ்தியிலும் இராஜகிருகத்திலுமாக மாறி மாறியோதான் வாழ்ந்திருத்தல் கூடும். இராஜகிருகத்திலுள்ள வேணுவன ஆசிரமத்தைவிட ஜேதவன விஹாரம் பன்மடங்கு சிறந்தது. ஆயிரக் கணக்கான பிக்ஷுக்கள் தங்கியிருப்பதற்கு வாய்ப்பாக அமையப் பெற்றது. ஆகையால், புத்தர் அங்குதானே நெடுங்காலம் தங்கியிருந்து தருமப் பிரசாரம் செய்தார் என்று சொன்னல் அதில் தவறிராது.

சிராவஸ்தியின் பெருமைக்கு அனாதபிண்டிகன் செய்த தானம் போல் மற்றும் ஒரு பெயர் பௌத்த இலக்கியங்களில் முக்கியத்துவம் பெற்றிருக்கிறது. புத்தரின் உபாசகர்களில் அனாதபிண்டிகன் முதலிடம் பெற்றதுபோல, உபாசிகைகளில் முதலிடம் பெற்றவள் விசாகை யென்பவள். இவள் அங்க தேசத்தைச் சேர்ந்த தனஞ்சயன் என்ற பெரும் செல்வனுடைய புதல்வி. இள வயதிலேயே பௌத்த தருமங்களை அறிந்தவள். புத்தரிடமும் சங்கத்திடமும் பக்தியுடையவள். சிராவஸ்தி நகரத்தில் நல்ல செல்வர்கள் வாழ்ந்தால் சிறப்பா யிருக்கும் என்று பிரசேனஜித் மன்னன் மகத நாட்டு

மன்னன் பிம்பிசாரனைக் கேட்டுக் கொண்டதால் பிம்பிசாரன் வேண்டுகோளுக் கிணங்கித் தனஞ்சயனும் தன் புதல்வியை யழைத் துக்கொண்டு கோசலத்துக்குச் செல்லும் வழியிலே கோசலத்தின் பழைய நகரமாகிய சாகேத நகரில் சில நாள் தாமதிக்க நேர்ந்தது. அந்த நகரத்தைப் பார்வையிட்ட தனஞ்சயன் அங்குத்தானே ஒரு மாளிகை யமைத்து வாழ்ந்தால் நல்ல தென்று நினைத்துப் பிரசேன ஜித் மன்னனிடம் தன் விருப்பத்தைத் தெரிவிக்கவும் மன்னனும் மகிழ்ந்து ஒப்புக்கொண்டான். கோசல நாட்டிலேயே ஈடு இணையற்ற தென்று சொல்லத் தக்க எழில் மிக்க மாளிகையைத் தனஞ்சயன் சாகேதத்தில் நிருமாணித்து, அங்கு தன் புதல்வி விசாகையுடன் வாழ்ந்து வந்தான். அவள் பேரழகும் அவளிட மிருந்த செல்வமும் நாற்றிசையும் கீர்த்தி பரவின. சில நாட்களில் சிராவஸ்தி நகரத்தில் வாழ்ந்த தன வணிகனை மிகாரன் என்பவனின் மகன் பூர்ணவர்த் தனனுக்கும் விசாகைக்கும் திருமணம் நடந்தது. விசாகை தன் கணவனுடைய ஊராகிய சிராவஸ்திக்கு வந்தாள். அவளோடு சேர்ந்து வண்டி வண்டியாக அவளுடைய திரவியங்களும் வந்து சேர்ந்தன. அளவுக்கு மிஞ்சிய செல்வப் பெருக்கில் வாழ்ந்தாள் அவள். கோடி கோடி பெறுமதியான ஆபரணங்கள் அவள் மேனியை அலங்கரித்தன. அவள் உள்ளமும் களங்கமற்ற தூய்மையோ டிருந்தது. தர்ம சிந்தனையும், பரோபகாரமும் சீல வாழ்வும் கொண்டவள் அவள்.

விசாகையின் மாமன் மிகாரன் ஜைன மதத்தைச் சேர்ந்தவன். அடிக்கடி ஜைனத் துறவிகளைப் போய்ப் பார்ப்பது வழக்கம். அதனல் புத்தரையும் அவரது சீடர்களையும் வெறுத்தான். இது வீட்டுக் குள்ளேயே பெரிய போராட்டத்தைக் கொடுத்தது. மாமன் ஜைன ரைப் பின்பற்றுபவன், மருமகள் பௌத்தரைப் பின்பற்றுபவள். இதனல் பெரிய சங்கடமா யிருந்தது. ஜைனர்கள் விசாகையின் மதத்தைத் தெரிந்து கொண்டதும் மிகாரனிடம் சொல்லி அவளை வீட்டிலே வைத்திருக்கலாகா தென்றும் தந்தை வீட்டுக்கே அனுப்பி விட வேண்டு மென்றும் புத்தி சொன்னர்கள். ஆனல், பௌத்தத் துறவிகள் பிச்சைக்கு வரும்போ தெல்லாம் விசாகை மனம் கோணமல் கொடுத்துக்கொண்டே வந்தாள். இதையறிந்த மிகாரன் கண்டித்தான். தன்னுடைய வீட்டில் அவள் அப்படி நடக்கலாகாது என்று உத்தரவு பிறப்பித்தான்.

ஒரு நாள் பகற் பொழுதில் மிகாரன் உணவருந்திக் கொண்டிருந் தான். வாயிலில் ஒரு பௌத்த பிக்ஷு திருவோட்டுடன் வந்து நின்றார். மாமனருக்கு விசாகையே உணவு படைத்துக்கொண்

டிருந்தா ளாகையால் உடனேயே பிக்ஷுவுக்கும் அமுது கொடுக்க முடியவில்லை. மாமனுர் சீறி விழுவார் என்பதை யுணர்ந்த அவள் பிக்ஷுவைப் பார்த்து, "எனது மாமனுர் பழையது சாப்பிடுகிறுர். தாங்கள் போய் வாருங்கள்," என்று சொல்லி அனுப்பிவிட்டாள். இது மிகாரனுக்கு அளவிறந்த கோபத்தை யுண்டாக்கியது. வீட்டில் பெரும் போர் நடந்தது. "என்னை அவமதித்த நீ ஒரு கணமும் இந்த வீட்டில் தங்கலாகாது" என்று மிகாரன் கண்டிப்பாகச் சொல்லி விட்டான். ஆனல் விசாகை, "நான் தங்களை அவமதிக்கவில்லை" என்று சொல்லி, "என் வீட்டி லிருக்க எனக்குரிமை யுண்டு," என்று வாதாடினுள். முடிவில் அவள் தந்தையார் அனுப்பி வைத்த பெரியவர்கள் வந்து விசாரணை செய்தபோது விசாகை சொன்னுள், "நான் எனது மாமனுரை அவமதிக்கவில்லை. அவர் சாப்பிடுவது 'பழையது' என்று சொன்னது உண்மை. அதாவது, அவர் பழைய பிறவியின் பயனை அனுபவிக்கிறுர் என்றுதான் சொன்னேன். அதற்கு வேறு அர்த்தம் கிடையாது," என்றுள். விசாரணை செய்தவர்கள் எல்லோரும் விசாகை வழக்கம் போல் அவள் மதத்தைக் கடைப்பிடித்து ஒழுகுவதில் தடை செய்தலாகாது என்று கேட்டுக்கொள்ள, மிகாரனும் சம்மதித்தான்.

அன்றி லிருந்து விசாகை தினசரி புத்தரையும் அவரது அடியார்களையும் போய்த் தரிசித்துக்கொண்டு வந்தாள். அவள் வீட்டு வாயிலில் வரும் பௌத்த பிக்ஷுக்கள் எல்லாருக்கும் அன்னமிட்டாள். ஒரு நாள் விசாகை புத்தரையும் சீடர்களையும் தனது மாளிகைக்கு வந்து விருந்துண்டு செல்லுமாறு கேட்க புத்தரும் ஒப்புக்கொண்டார். அவர்கள் விருந்துக்கு வந்தபோது மிகாரன், தீவிர ஜைனப் பற்றுள்ளவனுகை இருந்தும், புத்தரின் போதனைகளைக் கேட்டவுடன் அளவிறந்த மகிழ்ச்சி கொண்டு புத்தரை வணங்கி விட்டு, "இந்தப் பேறு எனக்குக் கிடைக்க வந்தது விசாகையின் புண்ணியத்தாலேதான். இவளே என் தாய்!" என்று சொல்லிக் கை யெடுத்துத் தனது மருமகளை வணங்கினன். அதிலிருந்து விசாகைக்கு மிகாரமாதா என்ற ஒரு பெயர் ஏற்பட்டு வழங்கியது.

ஒரு சமயம் விசாகை, புத்தர் தருமோபதேசம் செய்து கொண்டிருந்த இடத்துக்குச் சென்று அங்கே அவருடைய அறவுரைகளைக் கேட்டுவிட்டுத் திரும்பியபோது அவள் தலையி லணிந்திருந்த விலை மதித்தற்கரிய சூளாமணி தவறி விழுந்து விட்டது. அதனை அவள் மாளிகைக்கு வந்த பின்னரே அறிந்தாளாகையால் உடனே காவலாளரை யனுப்பித் தேடச் செய்தாள். அது எவராலும் தொடப்படாமல் ஆசிரமத்தில் அவள் உட்கார்ந்திருந்த இடத்திலேயே

கிடந்தது. இதை யறிந்த விசாகை, "ஆசிரமத்தில் விழுந்த பொருளை நான் திரும்பவும் பெற்றுக் கொள்ள விரும்பவில்லை. ஆகையால் ஆசிரமத்துக்கே இதனை நன்கொடையாகக் கொடுத்துவிடுகிறேன்" என்று சொல்லி பௌத்த சங்கத்தாரின் நலனுக்கு உபயோகப் படுத்த நிதி பெறும் பொருட்டு விற்கச் சொன்னாள். ஆனால், அத் தகைய பெரும் பொக்கிஷத்தை விலை கொடுத்து வாங்குபவர் எவரு மில்லை யாகையால் விசாகையே அதற்குரிய எட்டுக் கோடி பொற் காசு கொடுத்து வாங்கி அந்தப் பணத்தைக் கொண்டு சிராவஸ்தியின் கிழக்குப் பக்கத்தில் ஒரு பெரிய ஆசிரமம் அமைத்துக் கொடுத்தாள். பூர்வாராமம் எனப் பெயர் கொண்ட அந்த ஆராமம் ஜேதவன ஆராமத்துக்குத் துணையாக பௌத்த சங்கத்தின் உபயோகத்துக்கு விளங்கி வந்தது.

இங்ஙனம் நாளுக்கு நாள் பௌத்த சங்கத்துக்குச் செய்யும் சேவையே பெருந் தொண்டாகக் கருதி வந்த விசாகை புத்தரிடம் ஒரு வேண்டுகோள் விடுத்தாள். அந்த வேண்டுகோளில் எட்டு வரங்களை அவள் கேட்டிருந்தாள்.

"முனிவ! மழைக்காலங்களில் சங்கத்தாருக்கு எனது வேலைக்காரி வாசலில் உணவு படைக்கும்போது சங்கத்தார் ஆடைகள் நனைந்து விடு மென்று அஞ்சி அவற்றை அவர்கள் சுருட்டி வைத்திருக்கக் கண்டாள். நிர்கிரந்தர்களைப் போலப் பிக்ஷுக்களும் மழைக்காலங் களில் ஆடைகளைக் கழற்றி வைத்திருப்பது முறையல்ல வாகையால் சங்கத்திலுள்ள ஒவ்வொருவருக்கும் மழைக்காலத்தில் நான் என் வாழ்நாள் முழுவதும் புதிய துவராடைகள் வழங்க உத்தரவு தரல் வேண்டும்.

"இரண்டாவதாக, ஆசிரமத்துக்குப் புதிதாக வரும் ஒரு பிக்ஷு வழி தவறிக் கிராமங்களற்ற மார்க்கத்தில் வந்துவிட்டால் பிச்சை யெடுக்கச் சந்தர்ப்ப மில்லாமல் போய் விடுகிறது. அத்தகைய நிலைமையில் களைத்துப் போய் வரும் பிக்ஷுவுக்கு நான் உணவளிக்க அனுமதி தரல் வேண்டும்.

"மூன்றுவதாக, ஆசிரமத்தி லிருந்து வெளியூருக்குச் செல்லும் ஒவ்வொரு பிக்ஷுவும் போதியளவு உணவு கையிலே கொண்டு செல்லத்தக்கதாக நான் கொடுத்தனுப்ப வரம் தரல் வேண்டும். இவர்கள் போகும் வழியில் பிச்சை யேற்கச் சந்தர்ப்ப மில்லா விட்டால் அவர்கள் களைப்புற நேரும்.

"நான்காவதாக, வியாதியில் படுத்திருக்கும் பிக்ஷு வெளியே சென்று பிச்சை கேட்க முடியாதாகையால் நான் அவர்களுக்கு உணவு அனுப்ப வரம் தரல்வேண்டும்.

"ஐந்தாவதாக, வியாதியில் படுத்திருக்கும் பிக்ஷுவுக்குத் துணையிருந்து பராமரிக்கும் பிக்ஷுவும் வெளியே சென்று பிச்சை கேட்க முடியாதாகையால் அவர்களுக்கு நான் உணவளிக்க வரம் தரல் வேண்டும்.

"ஆறுவதாக, நோய் வாய்ப்பட்ட சங்கத்தாருக்குத் தகுந்த மருந்து வகைகளை நானே கொடுத்து உதவவும் வரம் தரல் வேண்டும்.

"ஏழாவதாக, பிக்ஷுக்களுக்கு இன்றியமையாத பாற் கஞ்சியைத் தினசரி அனுப்பி வைக்க எனக்கு வரம் தரல் வேண்டும்.

"எட்டாவதாக, பிக்ஷுணிகள் நீராடும்போது அவர்கள் கட்டிக் குளிக்க ஆடை கொடுத்துதவ வரம் தரல் வேண்டும். நதியிலே இந்த பிக்ஷுணிகள் குளிக்கும்போது ஆடைகளின்றியே குளிக்கிறார்கள். ஆற்றில் பல தரப் பெண்களும் குளிப்பார்கள். முக்கியமாக ஆற்றங்கரைக்கு வரும் தாசிகள் இவர்களைப் பார்த்து மிகவும் இழிவு படப் பேசுகின்றனர். ஆகையால் பிக்ஷுணிகள் ஆடை யின்றிக் குளிப்பதைத் தடுத்து அவர்கள் ஒவ்வொருவருக்கும் குளிக்கும்போது கட்டிக்கொள்ள ஆடை கொடுத்துதவ விரும்புகிறேன்," என்று இந்த எட்டு வரங்களையும் கேட்டாள்.

இவற்றை யெல்லாம் மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்த புத்தர் புன்னகை பூத்தார். பின்னர் அவளைப் பார்த்து, "விசாகா. இந்த வரங்களைப் பெற்றுக் கொண்ட பின்னர் என்ன நன்மைகள் கிடைக்குமென்று நீ எதிர் பார்க்கிறாய்?" என்று கேட்டார்.

அவள் சொன்னாள்: "பின்னர் ஒரு காலத்தில் எவரோ ஒரு பிக்ஷு இறந்துவிட்டார் என்று மற்றவர்கள் வந்து பெருமானிடம் சொல்லி அந்த பிக்ஷு என்ன கதி பெற்றார் என்று கேட்பார். பெருமான் அந்த பிக்ஷு அருகத் நிலை யடைந்துவிட்டார் என்று சொல்லுவார். அப்போது நான், அந்த பிக்ஷு ஒரு காலத்தில் சிராவஸ்திக்கு வந்தவரா என்று கேட்பேன். அவர்கள் ஆம் என்று சொல்வார்களாயின் எனது உள்ளம் குளிரும். இந்த பிக்ஷுவுக்கு நான் ஆடை கொடுத்தேன், உணவு கொடுத்தேன், மருந்து கொடுத்தேன் என்ற நினைவிலே நான் அளவற்ற மகிழ்ச்சி யடைவேன். இதன் காரணமாக நான் சாந்தி யடைந்து மெய்ஞானம் பெறுவேன்" என்றாள். புத்தரும் மன மகிழ்ந்து, "நீ கேட்டபடியே யாகட்டும்," என்று தமது சம்மதத்தைத் தெரிவித்தார். விசாகை பேருவகை கொண்டவளாய்த் தன் வாழ்நாள் முழுவதும் உபாசிகையாயிருந்து பௌத்த சங்கத்தாருக்கு வேண்டிய தொண்டுகளைச் செய்து வந்தாள்.

சிராவஸ்தியில் புத்தர் தங்கி யிருந்த காலத்தில் மற்றொரு அற்புத நிகழ்ச்சியும் பௌத்த நூல்களில் வெகுவாகப் பாராட்டப்படு கின்றது. கொடூர மனமும் பயங்கர கோலமும் கொண்ட ஒரு வழிப் பறி கொள்ளைக்காரனைப் புத்தர் மனம் திரும்ப வைத்த கதை அது.

சிராவஸ்திக்குப் பக்கத்தி லுள்ள ஒரு காட்டிலே பொது மக்களை வதைத்துத் துன்புறுத்தி வந்த ஒரு வழிப்பறி கொள்ளைக்காரன் வசித்து வந்தான். வழியிலே கண்ட எவரையும் உடனே கொன்று அவர்களின் கைக் கட்டை விரலை வெட்டி மாலையாகக் கழுத்திலே போட்டுக்கொண்டு திரியும் பழக்கத்தைக் கொண்டிருந்தவ னைகையால் அவனை அங்குலி மாலன் என்று ஊரிலுள்ளவர்கள் அழைத்து வந்தார்கள். மகா கொடியவன் என்று அந்த வழியே எவரும் செல்லத் துணிவதில்லை. கோசல நாட்டு அரசன் பற யறைவித்து அக் கொலை பாதகனைப் பிடித்துக் கொடுப்பவர்களுக்கு வெகுமதி யளிப்பதாகவும் அறிவித்திருந்தான். ஊரெல்லாம் இதே பேச்சா யிருந்தது.

அச்சமயத்தில் ஊரில் உலாவிய கதைகளில், அங்குலிமாலன் ஆயிரம் பேரைக் கொன்று அவர்கள் விரல்களை மாலையாகப் போட்டு விட வேண்டு மென்று விரதம் பூண்டிருக்கிறான். அவன் விரதம் முற்றுப்பெறும் சமயம் வந்துவிட்டது. ஆயிரம் விரல்கள் சேர இன்னும் ஒரே யொரு விரல்தான் அவனுக்குத் தேவை. ஆகையால் எவர்தான் இதிலே அகப்பட்டுக் கொள்ளப் போகிறார்களோ என்று மக்கள் திகில் கொண்டிருந்தனர்.

அரசன் பறையறைவித்து அங்குலிமாலனைப் பிடிக்க ஏற்பாடு கள் நடைபெறுவதைக் கேள்வியுற்ற அங்குலிமாலனின் தாயார் பதைபதைத்து, தன் மகனின் உயிரையே பறித்துவிடப் போகிறார் கள் என்று இரங்கி, எப்படியாவது அவனுக்கு நல்ல புத்தி சொல்லி அங்குலிமாலனை அழைத்து வந்துவிடவேண்டு மென்று காட்டு வழியே மகனைத் தேடிச் சென்றாள். அதே சமயம் ஜேதவன ஆராமத் தில் தங்கியிருந்த புத்தர் ஞான திருஷ்டியில் இச் செய்தியை யுணர்ந்து அங்குலிமாலனையும் அவன் தாயாரையும் காப்பாற்ற வேண்டு மென்று எண்ணியவராய், உணவு முடிந்ததும் அவரும் புறப்பட்டுச் சென்றார். வழியிலே இவரைக் கண்ட ஓர் இடையன், "ஏ துறவி! எங்கே போகிறாய்? அங்குலிமாலன் இந்தப் பக்கத்திலே வட்டமிட்டுக் கொண்டு திரிகிறான் என்பதை அறியமாட்டாயா? வீணாக அவனிடம் சிக்கி உன் உயிரைப் போக்கிக் கொள்ளாமல் வந்த வழியே திரும்பிப் போ" என்று புத்தி சொன்னான். பகவான் அதைக் கவனிக்காமல் மேலும் நடந்தார்.

தனித்த ஒரு வழி. தூரத்திலே ஒரு பெண் நடந்து செல்கிறாள். அவள்தான் அங்குலிமாலனின் தாயார் என்பதைப் புத்தர் அறிந்தார். திடீரென்று ஒரு புதர் மறைவிலிருந்து கிளம்பிப் பாய்ந்து தாயாரை நோக்கி ஓடினான் அங்குலிமாலன். தாயாக இருந்தாலும் ஆயிரம் விரல்கள் பூர்த்தியாக இன்று அவளைத் தீர்த்துவிடுவதென்ற நோக்கத்தோடு சென்ற அங்குலிமாலன் எண்ணத்தை யறிந்த புத்தர் உடனே தாய்க்கும் மகனுக்கு மிடையில் தோன்றி நடந்து சென்றார். அங்குலிமாலன் பார்த்தான், "வீணாக எதற்கு என் தாயாரைக் கொல்ல வேண்டும்? ஆயிரம் விரல்கள் சேர இன்னும் ஒன்றே யொன்றுதான் தேவைப்படுகிறது. அதற்கு இதோ ஒரு சிரமணன் எதிர்ப்பட்டிருக்கிறான். அவனைக் கொன்று காரியத்தை முடித்து விடுவோம்," என்று சிந்தித்தவனாய் மாரனே வென்ற மாதவ முனிவரை நோக்கி வாளை யுருவிக் கொண்டு பாய்ந்தோடினான். அச்சமயத்திலே புத்தர் தமது தவ வலிமையால் அங்குலிமாலன் தம்மை விரைந்து அணுகாதபடி செய்து விட்டார். எவ்வளவு முயன்றும் புத்தரை அணுக முடியாமல் அவஸ்தைப்பட்ட அங்குலிமாலன் ஸ்தம்பித்து நின்று ஆத்திரமடைந்தவனாய், "ஏ துறவி! நில்!" என்று கர்ஜித்தான். புத்தர் நடந்துகொண்டே திரும்பிப் பார்த்து, "நான் நடந்தபோதிலும் நின்றுவிட்டேன், அங்குலிமாலா! ஆனால் நீ நின்று விட்டாயா?" என்று கேட்டார்.

அங்குலிமாலனை அந்தச் சொற்கள் யோசிக்க வைத்துவிட்டன. "துறவிகள் பேசுவதெல்லாம் உண்மை யென்று சொல்வார்கள். ஆனால் இந்தத் துறவி நடந்து கொண்டே யிருக்கிறார். நிற்கவில்லை. நான்தானே நிற்கிறேன்! இதன் பொருளென்ன?" இவ்வாறு யோசித்தவன் புத்தரை நோக்கிக் கேட்டான், "நடந்துகொண்டே யிருக்கும் தாங்கள் நின்று விட்டதாகச் சொல்கிறீர்கள். ஆனால் நிற்கிற என்னைப் பார்த்து நடக்கிறேன் என்றீர்கள். இந்த வார்த்தைகளின் அர்த்தமென்ன?"

புத்தர் தமது முகத்திலே ஒளிபடர அங்குலிமாலனை விழித்துப் பார்த்து, "அங்குலிமாலா! உலகத்தில் சகல ஜீவன்களையும் கருணையோடு நோக்குகிறேன். ஹிம்சை செய்வதை நான் அடியோடு நிறுத்திக் கொண்டேன். ஆனால், நீ தான் ஹிம்சையை இன்னும் நிறுத்த வில்லை!" என்று பதிலளித்தார்.

இந்த வார்த்தைகளைக் கேட்டதும் அங்குலிமாலன் தன் உள்ளத்திலிருந்த மாசு நீங்கிப் பரிசுத்தவானான். "என் முன் காட்சியளித்து நிற்பவர் கௌதம சிரமண ரல்லாமல் வேறெவராயுமிருக்காது" என்று சிந்தித்தவனாய்த் தன் கையிலிருந்த வாளைத் தூர

வீசிவிட்டுப் பகவானை வணங்கி, "அடியேனை ரக்ஷித்தருள வேண்டும்" என்று இரந்து நின்றான். கருணை வள்ளலான புத்தர் எவ்வித தடையுமின்றி, "வாராய் பிக்ஷு!" என்று அன்போடு அழைத்தார். மறுகணமே கொலை பாதகனை அங்குலிமாலன் துவராடையும் பிக்ஷா பாத்திரமும் தரித்த பிக்ஷுக் கோலத்தில் காட்சி தந்தான். புத்தர் திரும்பி ஆசிரமத்துக்கு வர அவரைப் பின் தொடர்ந்து கண்ணியம் பொருந்திய சீடனை அவனும் வந்தான்.

அன்று மாலைப் பொழுது. பிக்ஷு சங்கம் சூழ்ந்திருக்க சாக்கிய முனிவர் உபதேசம் செய்வதற்கு ஆயத்தமா யிருந்தார். அப்போது கோசல மன்னன் பிரசேனஜித் பல மெய்ப் பாதுகாவலர் புடைசூழ அங்கு வந்து புத்தரை வணங்கி நின்றான். புத்தர் அவனைப் பார்த்து, "மன்னவ! ஏது இந்தப் பக்கம் இன்று தாங்கள் காட்சி கொடுத் தருளினீர்கள்?" என்று கேட்டான். மன்னன் மிகுந்த ஆவலோடு, "மாதவ! சிராவஸ்திக்கு அருகாமையில் அங்குலிமாலன் என்ற ஒரு துஷ்டன் வழியிலே போவார் வருவார் எல்லாரையும் கொள்ளை யடித்துக் கொன்று, பொறுக்க முடியாத துன்பம் விளைத்து வருகிறான். அவனை அகப்படுத்துவதற்குப் பல காவலாளர்களை ஏவி விட்டிருக் கிறேன். ஆனால், எந்தத் திசையிலும் அவனைக் கண்டு பிடிக்க முடியவில்லை. இன்னும் அந்தக் கொடியவன் எங்கோ ஓரிடத்தில் பதுங்கி யிருக்க வேண்டும். தாங்களும் தங்கள் சீடர்களும் தனி வழி செல்லும்போது ஒன்றும் நேராதிருக்க வேண்டும் என்று எச்சரிக்கை செய்வதற்காகவே இங்கு வந்தேன்" என்றான்.

புத்தர் புன்னகை புரிந்தார். "அந்த அங்குலிமாலன் அகப் பட்டானையின் தாங்கள் அவனுக்கு என்ன தண்டனை கொடுப்பீர்கள்?" என்று கேட்டார். "ஆயிரம் பேரைக் குரூரமாக வதைத்துக் கொன்ற அந்தப் பாவிக்கு மரண தண்டனை யன்றி வேறென்ன தண்டனை யிருக்கிறது?" என்று பதில் சொன்னான் பிரசேனஜித். புத்தர் மீண்டும் முகத்தில் கருணை ததும்ப, "அந்தத் திருடன் பிக்ஷு சங்கத் தாரைப் போலக் காவி யுடை தரித்துத் தங்கள் முன் காட்சி யளித் தால் தாங்கள் அவனை என்ன செய்வீர்கள்?' என்று கேட்டார்.

பிரசேனஜித் சிறிது சிந்தித்தான். பின்னர் அதற்கு விடை யாக, "அப்படிக் காட்சி யளித்தால் சங்கத்தாருக்குரிய மரியாதை செலுத்துவேன்" என்றான்.

புத்தர் தமக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருந்த அங்குலிமாலனைய பிக்ஷுவைச் சுட்டிக் காட்டி, "இதோ இருக்கிறார் அங்குலிமால பிக்ஷு! இன்று வரை கொலையும் களவும் செய்து வந்த அந்தத் திருடன் இதயப் பரிசுத்தம் பெற்ற பிக்ஷுவாகி விட்டார்" என்றார்.

மன்னன் திகைத்துப் போனன். தன் முன்னலேயே அங்குலிமாலன் உட்கார்ந்திருக்கிறான் என்பதைக் கேட்டவுடன் அவன் உடல் நடுங்கியது. புத்தர் மன்னனைத் தேற்றி, "பிக்ஷு சங்கத்திலுள்ளவர்களைப் பார்த்து அஞ்ச வேண்டிய அவசியமில்லை," என்றார். உடனே மன்னன் எழுந்து அங்குலிமாலனை வணங்கி, "அங்குலிமால பிக்ஷுவே! தாங்கள் பரிசுத்தனாகி விட்டீர்கள் என்பதை நம்புகிறேன். இனித் தாங்கள் நிம்மதியாக வாழலாம்" என்று வாழ்த்திவிட்டுப் புத்தரைப் பார்த்து, "மாமுனிவ! தங்கள் அருளே அருள். ஆயுதம் கொண்டு செய்ய வேண்டியதைத் தாங்கள் கருணை கொண்டு சாதித்து விட்டீர்கள். இந்த அதிசயம் உலகமுள்ள வரை நிலைத்து நிற்கும்" என்று கூறி யாவரையும் வணங்கிவிட்டுச் சென்றான்.

அங்குலிமாலனுக்கு உடனே கதிமோக்ஷம் கிடைத்ததற் கென்ன, சில காலம் அவன் பட்டபாடு கொஞ்ச மல்ல. ஊருக்குள் பிச்சை யேற்கச் சென்ற போதெல்லாம் மக்கள் பலவித இம்சை கொடுத்தனர். காறி உமிழ்ந்தனர், கல்லால் அடித்தனர். பல சமயங்களில் இரத்தம் கசிந்துருக, உணவு கிடைக்காமல் ஆசிரமத்துக்குத் திரும்பியதுண்டு. அதைப் பார்த்த சங்கத்தார் புத்தரிடம் முறையிட்டனர். புத்தர், "வினையை விதைத்தவன் வினையை அறுக்கத் தானே வேண்டும்? அங்குலிமாலன் பிக்ஷுவாகிவிட்ட போதிலும் அவன் செய்த கொடுமையின் பலனை அனுபவித்தே தீரவேண்டும். ஆகையால், கிடைக்கும் தண்டனையைப் பொருட்படுத்தாமல் நடந்து வந்தால் மிக மேலான இன்பத்தைப் பெற முடியும்" என்று சொன்னார். அதே விதமாக அங்குலிமாலன் தருமத்தைக் கைவிடாமல் நடந்து வந்து, ஈற்றில் சகலரும் மதிக்கக்கூடிய உயர்ந்த பிக்ஷுவாக விளங்கினான் என்பது கதை. பிக்ஷு சங்கத்தில் அங்குலிமாலனுக்கு ஒரு விசேஷ கௌரவம் கிடைத்தது.

இருபத்தோராம் அத்தியாயம்

கோசலத் தலைநகர்

இராஜகிருகமும் சிராவஸ்தியும் ஒரு காலத்தில் மிகச் சிறந்த பௌத்தத் தலைநகரங்களாக விளங்கின. இரு நகரங்களிலும் அரசு வீற்றிருந்த மன்னர்கள் புத்தருக்கும் பௌத்த சங்கத்துக்கும் அளவு கடந்த பக்தி செலுத்தி ஆதரித்து வந்தார்கள் என்பதிலும் சந்தேக மில்லை. இவற்றுள், இராஜகிருகத்திலே மன்னன் பிம்பிசாரன் பௌத்த துறவியாகிப் புத்தரின் சீடனைப் பணியாற்றினன் என்ற காரணத்தால் இராஜகிருக நகரமே முக்கியத்துவம் பொருந்தியதாகப் பௌத்த நூல்கள் பாராட்டுகின்றன. ஆனால் இன்று நாம் காணும் காட்சி வேறு விதமாக இருக்கிறது. இராஜகிருகம் புத்தர் அடிக்கடி தங்கிய கிருத்ரகூடம் என்ற கழுகுமலையைக் கொண்டிருந்த போதும் ஜைனர்களின் ஆதிக்கமே இங்கு மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்தது என்று தெரிகிறது. எங்கு பார்த்தாலும் ஜைனர்களின் கோயில்களும் மற்றும் புராதன சின்னங்களும் காணப்படுகின்றன. ஆனால், சிராவஸ்தியிலேதான் பெரும்பான்மையும் பௌத்தக் கட்டிடங்களின் சின்னங்கள் பரவிக் கிடக்கின்றன.

வைசாலியில் உற்பத்தியாகித் தெற்கே நாலந்தா இராஜகிருகம் முதலிய இடங்களில் பரவிய ஜைனர் ஆதிக்கம் நிச்சயமாக இராஜகிருகத்திலிருந்து பௌத்தத்தை வடக்கே சிராவஸ்திக்கு விரட்டிவிட்ட தென்று கொள்வதில் தவறில்லை. இராஜகிருகத்தில் புத்தர் வாழ்ந்த காலத்திலேயே ஜைனர்களாகிய நிர்கிரந்தர்களுக்கும் பௌத்த பிக்ஷுக்களுக்கும் அடிக்கடி சச்சரவுகளும் சண்டைகளும் ஏற்பட்டு வந்தன. பல தடவை வாதங்களில் வெற்றி கொள்ள முடியாத பௌத்தர்கள் மௌத்கல்யாயனர் முதலிய பிக்ஷுக்கள் மூலம் இருத்தி ஆற்றல்களைக் காண்பித்து, தாந்திரிக முறையில் வெற்றி யீட்ட வேண்டிய சந்தர்ப்பங்களும் ஏற்பட்டிருக்கின்றன. ஆகவே, ஜைனர்களின் ஆதிக்கம் வலுவடைய பௌத்தர்கள் இராஜகிருகத்தைத் துறந்து வேற்றிடம் சென்றிருக்கலாம்.

கோசலத்தின் தலைநகரான சிராவஸ்தியில் வணிகப் பெருமக்கள் பலர் வாழ்ந்தார்கள். அநாதபிண்டிகன் என்ற வணிகன் பதினெட்டுக் கோடி பொற்காசுகள் கொண்டு ஜேதவனத்தை வாங்கி மேலும் பதினெட்டுக் கோடி செலவு செய்து விஹாரங்களைக் கட்டினன்

என்றால் அந்நகரத்து வணிகரின் செல்வச் செழிப்பு எவ்வாறிருந்தது என்பது ஒருவாறு புலனாகும். விசாகை யென்ற உபாசிகையும் அவள் மாமன் மிகாரனும் மற்றைய பெருஞ் செல்வர்கள். வட தேசத்திலே கோசல நாடுதான் வாணிபத்தில் தலை சிறந்து விளங் கியது. ஆகையால் சிராவஸ்தி தனவணிகரின் ஆதிக்கத்தி லிருந்தது. மன்னன் பிரசேனஜித் பௌத்தனாக மாறிவிடாவிட்டாலும் பௌத்த சங்கத்துக்கு ஆதரவு கொடுத்து வந்தான். ஆகவே ஜைனமதம் சிராவஸ்தியில் சிறப்புட னிருந்த போதிலும், பௌத்தமும் பெரும் செல்வர்களின் ஆதரவு காரணமாக நன்கு செழித்து வளர்ந்தது. வணிகப் பெருமக்கள் கோடி கோடியாகச் செலவு செய்து கட்டிய கட்டிடங்கள் பிற்காலத்தில் சிதைந்து போனாலும், இன்றும் அவற் றின் சின்னங்கள் பண்டைப் பெருமையைக் காண்பித்துக்கொண்டு சிராவஸ்தியின் புராணத்தைக் கதை கதையாக எடுத்துரைக் கின்றன.

★

அதிகாலை வேளையில் பலராம்பூர் என்ற ரயில்வே ஸ்டேஷனை யடைந்தபோது வெளியூர்க்காரர் என்பதை யறிந்து கொண்டு பல சைக்கிள் ரிக்ஷா வண்டிக்காரர் ஓடி வந்து என்னைப் பார்த்து, "சாஹேத் மாஹேத் ஸாப்?" என்றார்கள். சிராவஸ்திக்கு இப்போது சாஹேத் மாஹேத் என்று தான் பெயர். பலராம்பூர் என்ற ஸ்டேஷனி லிருந்து பதினெரு மைல் தூரத்தி லிருக்கும் இந்த க்ஷேத் திரத்துக்கு சைக்கிள் ரிக்ஷாவில் போவது மிகவும் சுலப மென்று கேள்விப்பட்டிருந்தே னாகையால் ஒரு வண்டியைப் போக வர ஐந்து ரூபாய் பேசி ஏற்பாடு செய்து கொண்டு புறப்பட்டேன். பலராம்பூரி லிருந்து செல்லும் சாலை நன்றாகத்தா னிருந்தது. ஆனால், இரண்டு மைல் தூரம் கடந்ததும் மற்றைய பிரதேசங்களில் நான் பார்த்தது போன்ற சோலைகளைக் காண முடியவில்லை. ஒரே வனாந்தரமாகக் காட்சி யளித்தது. கபிலவஸ்து, உலும்பினி பிரதேசங்களில் மாட்டு மந்தைகள் எவ்வளவு அதிகமோ, இங்கு சிராவஸ்திப் பிரதேசத்தில் பன்றிக் கூட்டங்கள்தான் பெருவாரி. ஆட்டு மந்தைகளை இடையர் காப்பது போன்று கோலும் கையு மாகப் பல பையன்கள் பன்றிக் கூட்டங்களை விரட்டிக்கொண்டு செல்வது இந்தப் பக்கத்தில் சர்வ சாதாரணமாகக் காணப்பட்டது. இரு பக்கமும் வெட்ட வெளியாக மணல் பரந்த பாலை வனத்தில் நல்ல வேளையாகக் காலை நேரத்தில் நான் புறப்பட்டுச் சென்றேனாகையால் வெயிலில் அவஸ் தைப்படாமல் சிராவஸ்தி போய்ச் சேர முடிந்தது.

இதுதான் சிராவஸ்தி யென்று சுட்டிக் காண்பிப்பதற்கு, கயாவில் ஒரு வானளாவிய கோபுரம் இருப்பது போலவோ, சார நாத்தில் ஒரு ஸ்தூபி யிருப்பது போலவோ, இங்கு உயர்ந்த கட்டிடம் ஒன்று மில்லை. தெருக்கரையில் பர்மியர்கள் கட்டி வைத்திருக்கும் ஒரு தர்மசாலையின் பக்கத்தி லிறங்கி உள்ளே கிராமத்தில் நடந்து சென்றேன். ஆங்கிலம் தெரிந்த ஒருவரையும் காண முடியவில்லை. எனது சைக்கிள் ரிக்ஷாவாலா ஆங்கிலத் திலோ பௌத்த சரித்திரத்திலோ அல்லது சாஹேத் மாஹேத்திலோ எள்ளளவும் பற்றுதல் கொண்டவனைக் காணப்படவில்லை. சாலை யோரத்தி லிருந்த ஒரு மர நிழலில் வண்டியை நிறுத்தி வைத்துவிட்டு அவன் ஹிந்தியிலே, "நீங்கள் போய் எல்லாவற்றையும் பார்த்து விட்டுத் திரும்பி வாருங்கள். நான் இங்கேயே காத்து நிற்கிறேன்" என்று மேலே பேச இடம் வைக்காமல் முற்றுப்புள்ளி வைத்து விட்டான். ஆகவே, நானுகவே சிராவஸ்தியைத் தேடிக் கண்டு பிடிக்க வேண்டிய சிரமம் ஏற்பட்டது.

சற்று தூரம் சென்றேன். கிராமப் புறத்தில் மற்றொரு தர்ம சாலை காணப்பட்டது. அது சீனருடைய தர்மசாலை யென்று தெரிந் தது. வாசலில் நின்ற சீன பிக்கு ஒருவர் வாய் பேசாது புன்னகை யால் வரவேற்றார். சிராவஸ்தியில் பார்க்கவேண்டிய இடங்களெவை யென்று நான் ஆங்கிலத்தில் கேட்டபோது அவர் மீண்டும் ஒரு புன்னகை செய்தார். பின்னர் சீன மொழியில் ஏதேதெல்லாமோ சொன்னார். அதற்கு நான் புன்னகை செய்தேன்! இப்படியாக நாங்கள் இருவரும் புன்னகையால் சம்பாஷித்த பிறகு, இதற்கு மேல் அங்கே நின்றால் நான் வந்த காரியம் சரிவராது என்று எண்ணிக்கொண்டு அந்தச் சீன பிக்ஷுவுக்கு ஒரு கும்பிடு போட்டு விட்டு அப்பால் சென்றேன்.

யாரோ தோட்டக்காரன் ஒருவன் எதிர்ப்பட்டான். ஹிந்தியில் அளந்து கொட்டினான். சீன மொழியைவிட இவனுடைய ஹிந்தி பரவாயில்லை யென்று கருதிய நான் என்னுடன் வா என்று அவனை யழைத்துக்கொண்டு ஊர் சுற்றிப் பார்த்தேன். சிராவஸ்தி சம்பந்த மாக நான் தெரிந்து வைத்திருந்த செய்திகளில் சில முக்கியமான பெயர்ச் சொற்களை நான் சொல்லச் சொல்ல அந்த வழிகாட்டி தனக்குத் தெரிந்த இடங்களைக் காண்பிப்பான். அநாதபிண்டிகன், அங்குலிமாலன், ஜேதவனம், விசாகை, பூர்வாராமம் என்று ஏக வசனத்தில் மாத்திரம் நான் கேட்பேன். அவன் தனக்குத் தெரிந்த அளவில் ஒவ்வொரு இடமாகக் காண்பிப்பான். அன்றியும் தன் னிஷ்டம் போல் ஏதோ சொற்பொழிவும் நிகழ்த்தினான்!

முக்கியமான பௌத்த ஸ்தலங்களிலே சிராவஸ்தியில் நான் கண்டதுபோல நகர நிர்மாணமும் கட்டிட அமைப்பும் நான் வேறெங்கும் காணவில்லை. இலங்கையிலே பொலன்னறுவை நகரம் எப்படிக் காட்சி யளிக்கிறதோ அதே விதமாக சிராவஸ்தி தனது சரித்திரப் பெருமையை எடுத்துப் பேசுகிறது. ஆனால் பொலன்னறுவையில் பௌத்த சின்னங்களாகச் சிலைகளும் ஸ்தூபிகளும் மற்றும் கலைப் பொருள்களும் கட்டிட அமைப்புக்களுடன் சேர்ந்து காணப்படுகின்றன. இங்கே சிராவஸ்தியில் கட்டிட அமைப்புக்கள் மாத்திரம் இரண்டடி அல்லது ஓரடிச் சுவர்களாக, முழுவதும் செங்கல் வேலையாகக் காட்சி தருகின்றன. அரண்மனைகள், ஆராமங்கள், வீடுகள், கிணறுகள், மேடைகள், இத்தகைய அமைப்புக்களே சிராவஸ்தியில் காணப்படுகின்றன. முன்னொருகாலத்தில் சிராவஸ்தி செல்வச் செழிப்பில் வளர்ந்த வணிகர் இருக்கை என்பதற்கு ஒரு விதஐயமுமில்லை.

மற்றைய க்ஷேத்திரங்களுக்கு யாத்திரை செய்த அசோக மன்னன் சிராவஸ்திக்கும் வந்தான் என்றும், இங்கே இரண்டு கற்றூண்கள் நிறுவினன் என்றும் சொல்லப்படுகிறது. ஆனால் அவற்றை இப்போது காணவில்லை. மௌரிய சாம்ராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்ட காலத்தில் கோசலமும் மௌரியர் குடைக் கீழ் வந்தது. ஆனால் சிராவஸ்தி நகரம் எப்போது அழிபட்ட தென்பது தெரியவில்லை.

கி. பி. பத்து அல்லது பன்னிரண்டாம் நூற்றாண்டு வரை சிராவஸ்தியின் மகிமை குன்றவில்லை யென்று சொல்லலாம். தொல்பொருளாராய்ச்சியாளர் அகழ்ந்தெடுத்த சில சாசனங்களில் பன்னிரண்டாம் நூற்றாண்டுக் காலத்தில் சிராவஸ்திக்கு மானியம் பல வழங்கப்பட்டன வென்று குறிப்புக்கள் காணப்படுகின்றன. அதன் பின்னரே சிராவஸ்தியின் அழிவு ஏற்பட்டிருக்க வேண்டும்.

அநாதபிண்டிகன் பொன் பரப்பிய நிலமும் அவன் கட்டிக் கொடுத்த ஜேதவன விஹாரமும் இதுதான் என்பதைக் காட்ட இப்போது சிராவஸ்தியில் ஒரு கட்டிடத்தின் சின்னங்கள் காணப்படுகின்றன. விசாகை கட்டிய பூர்வாராமம் இருந்த இடம் காணப்படுகிறது. இன்னோரிடத்தில் அங்குலிமாலன் ஞாபகார்த்தமாக எவரோ ஒருவர் கட்டிய ஸ்தூபியின் மேடு தெரிகிறது. பிரசேனஜித் மன்னனும் பௌத்த சங்கத்துக்கு ஓர் ஆராமம் கட்டினன் என்று குறிக்கும் ஒரு மண் மேடு அங்கிருந்து, அதை அகழ்ந்த தொல்பொருளாராய்ச்சியாளர் சில சின்னங்களைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். இப்படியே எங்கு பார்த்தாலும் பல செங்கற் கட்டிடங்களின் அஸ்திவாரங்கள் பரந்து கிடக்கின்றன.

முன்பு ஒரு காலத்தில் சிறந்த கட்டிடங்களா யிருந்தவை யெல்லாம் என்றே ஒரு நாள் கைவிடப்பட்டு அழிந்துபோய் விட்டன. கி. பி. ஐந்தாம் நூற்றாண்டில் சிராவஸ்திக்கு வந்த பாஹியன் என்ற சீன யாத்திரிகன் அங்கு விஹாரங்களும் ஆராமங்களும் அழிந்து போய்க் காணப்பட்டன என்று சொல்லி யிருக்கிறான். அதே விதமாக அவனுக்குப் பின்னர் இருநூறு ஆண்டுகள் கழித்து வந்த ஹியூங் சியாங் என்ற யாத்திரிகனும், எவ்வித கட்டிடங்களையும் உருப்படியாகப் பார்க்க முடியவில்லை என்று வருந்துகிறான்.

பா ஹியன் தரிசித்த காலத்தில் ஒரு சில பௌத்த சந்நியாசிகள் அங்கு வசித்தார்கள். ஆனால், அங்கிருந்த பெரிய விஹாரம் ஒரு எலி செய்த சதியினால் முற்றும் எரிந்து சாம்பராய்விட்ட தென்கிறான். "ஏழடுக்கு மாடிகளை யுடைய இந்த விஹாரத்தில் பல கொடிகளும் திரைச் சீலைகளும் தொங்கவிடப்பட் டிருந்தன. இரவும் பகலும் இடைவிடாது தூண்டா விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. ஒரு நாள் ஓர் எலி விளக்கிலிருந்த திரியை யெடுத்துக் கொண்டு கூரையில் ஓடியபோது தீப்பிடித்து விஹாரம் முழுவதுமே எரிந்து சாம்பராகி விட்டது. இந்த விஹாரத்தினுள்ளே யிருந்த சந்தன மரத்தாலாய புத்த விக்கிரகம் மாத்திரம் தப்பிவிட்டது. ஊரிலுள்ள மக்கள் அந்த விக்கிரகத்தை வைத்து வேறொரு சிறு கோயில் இரண்டடுக்கு மாடியுடன் கட்டி வைத்தார்கள்." இவ்வாறு கூறுகிறான் பா ஹியன்.

ஹியூங் சியாங் சிராவஸ்திக்குச் சென்ற சமயத்தில் அரை குறையாக மாத்திரம் அழிவுபட்டிருந்த அந்தக் கட்டிடங்களையும் காண முடியவில்லை. எங்கு பார்த்தாலும் அஸ்திவாரச் சுவர்கள் மாத்திரம் காணப்படுகின்றன என்று குறிப்பிடுகிறான் ஹியூங் சியாங். பதின்மூன்று நூற்றாண்டுகளுக்குப் பின் இன்று நான் பார்த்ததும் அதே அஸ்திவாரச் சுவர்கள்தான்.

சிராவஸ்தியிலே மிகப் புராதனமான ஓர் அரச மரம் இருக்கிறதென்றும், அது புத்த கயாவில் மாதவன் போதிஞானம் பெற்ற சமயத்தில் நிழல் கொடுத்த ஆதி விருக்ஷத்தின் கிளையி லிருந்து வளர்ந்த தென்றும் சொல்லப்படுகிறது. அந்த மரத்தையும் போய்ப் பார்த்தேன். அத்தகைய பழமையான மரமாகக் காணப்படவில்லை. 'ஆனந்தபோதி விருக்ஷம்' என்று வழங்கப்படும் இந்த மரம் புத்தர் காலத்திலேயே நடப்பட்டதாம். இதுபற்றிய ஒரு புராணக் கதையு முண்டு.

புத்தர் மாரிக்காலம் தவிர்ந்த மற்றைய காலங்களில் வெளியூர் களிலே தருமப் பிரசாரத்துக்குச் சென்று விடுவதால், சிராவஸ்தியில்

வசித்த பிக்ஷுக்கள் அவருக்குப் பதிலாக ஒரு நிரந்தரமான சின்ன மிருந்தால் நல்லது என்று தீர்மானித்து, கயாவிலுள்ள போதி விருக்ஷத்தின் கிளையை அங்கே நாட்டுவதென்று முடிவு செய்தார்கள். ஆனல் அங்கே சென்று கிளை கொண்டு வருவதில் சிரமம் காணப் பட்டதால் அந்தக் காரியத்தை மௌத்கல்யாயனர் சுலபமாக்கி விட்டார். மந்திர தந்திர வித்தைகளில் அவர்தானே பெயர் போனவர். ஆகையால் அவர் ஒரு நொடிப் பொழுதில் போதி விருக்ஷத்திலிருந்து ஒரு கிளை தானகவே ஆகாய மார்க்கமாக சிரா வஸ்தியில் வந்து சேருமாறு செய்துவிட்டார். இந்தக் கிளையைப் பிரசேனஜித் மன்னனைக் கொண்டு நடுகை விழா நடத்த வேண்டு மென்று பிக்ஷுக்கள் விரும்பினர்கள். ஆனல் மன்னன் அதற் கிணங்காமல் அனாதபிண்டிகனைக் கொண்டு செய்விப்பதுதான் சிறந்த தென்று கூறினன். எனவே அனாதபிண்டிகன் தான் கட்டிய ஜேதவன விஹாரத்துக்கு முன்புறத்தில் போதி விருக்ஷத்தை நட்டு ஒரு பெரிய விழா நடத்தினன் என்ற கதை பூஜாவலி என்னும் சிங்கள நூல் ஒன்றிலே காணப்படுகிறது.

இருபத்தைந்து வருஷ காலங்களை, அதாவது மாரிக்கால ஓய்வு மாதங்களை, புத்தர் இந்த சிராவஸ்தியில் கழித்தார் என்று சொல்லப் படுகிறது. ஆகையால் நிரந்தரமாக இங்கு பௌத்த சங்கம் பல்லாண்டுகளாக இயங்கி வந்தபோது உட்பூசல்களும் புறத்தே யிருந்து தொந்தரவுகளும் அடிக்கடி ஏற்பட்டது ஆச்சரியமல்ல. இராஜகிருகத்தில் அடிக்கடி கிளர்ச்சி செய்து வந்த நிர்கிரந்தர் களாகிய ஜைனர்களும் மற்றும் மதத் துறவிகளும் சிராவஸ்திக்கு வந்து குடியேறிய பௌத்த பிக்ஷுக்களைச் சும்மா விடவில்லை. மேலும் மேலும் போட்டிகளும் பொருமையும் பூசல்களும் ஏற்பட்டுக் கொண்டே வந்தன. இதன் காரணமாக இரண்டு மூன்று தடவை புத்த பகவானுக்கே எதிராகச் சில சூழ்ச்சிகளும் நடந்தன.

ஒரு முறை நிர்கிரந்தர்களின் சூழ்ச்சியால் சிஞ்சை என்ற ஒருத்தி தான் புத்தருடன் நட்புக் கொண்டிருந்ததாகவும், அதன் பேருகக் கர்ப்பவதியாகி விட்டதாகவும் பெருங் கதை கட்டிவிட்டாள். ஒரு நாள் அவள் பிக்ஷு சங்கம் கூடி யிருக்கும்போது ஜேதவனம் சென்று புத்தர் மீது குற்றம் சுமத்தி, "என்னைக் கர்ப்பவதியாக்கி விட்டு இப்போது நடுத் தெருவில் நிற்க வைத்துவிட்டீர்!" என்று குறைப்பட்டாள். பார்த்தவர்கள் யாவரும் வியப்புற்றனர். அவள் உடல் நிலையைக் கண்டவர்கள் நிறை மாதத்தவள் என்றே நம்பி னர்கள். ஆனல், புத்தர் சிறிதும் சஞ்சலப்படாது அவளைப் பார்த்து, "சிஞ்சை! உன்னுடைய சுய ரூபத்தை மறைக்காமல் உண்மையான

நிலையைக் காண்பித்துவிடு!" என்று சொன்னதும், அவளை யறியாமலே அவள் வயிற்றிலே அடுக்கடுக்காகக் கட்டி வைக்கப்பட்டிருந்த துணி மூட்டை அவிழ்ந்து விழுந்தது! வேஷம் கலைந்தது. பௌத்த சங்கத்தார் அளவற்ற கோபங்கொண்டு சிஞ்சையை அடித்து விரட்டி விட்டனர்.

மற்றுமொரு முறை சுந்தரி என்ற பெண் தோன்றினாள். அவள் ஜைன மதத்தைச் சேர்ந்தவள். அடிக்கடி இவள் ஜேதவனத்துக்கு வருவதும் போவதுமா யிருந்தாள். சில சமயங்களில் இரவு வேளைகளில் வந்து எங்காவது தங்கி யிருந்துவிட்டுக் காலையில் போவதையும் பலர் பார்த்திருக்கிறார்கள். இவள் அசாதாரணமாகக் கூந்தலில் பூ முடித்துக் கொண்டும், உவகை மேலீட்டால் பாடிக் கொண்டும் உல்லாசமாக இப்படி வந்து போவதைக் கண்டவர்கள் எங்கே செல்கிறாள் என்று ஆராயத் தலைப்பட்டனர். சுந்தரி சிறிதும் நாணமில்லாமல், தான் புத்தரைப் பார்ப்பதற்காக வருவதுண்டு என்று சொல்லித் திரிவாள். கொஞ்சக் காலமாக இது நடந்து வர ஊருக்குள்ளே அவைசியமான பேச்சுக்கள் வளர்ந்தன. புத்தர் மறைவாக ஒரு பெண்ணுடன் தொடர்பு வைத்திருக்கிறார் என்ற வசை எழுந்தது.

இவ்வாறிருக்கத் திடீரென்று ஒருநாள் சுந்தரி படுகொலை யுண்டு ஜேதவனத்தருகே பிணமாய்க் கிடந்தாள். ஆத்திரங்கொண்ட பௌத்த பிக்ஷுக்கள்தான் அவளைக் கொன்றிருக்க வேண்டுமென்று விசாரணை நடந்தது. ஆனால், ஏழு நாட்களுக்குள்ளே உண்மைக் குற்றவாளிகள் தாமே வந்து ஒப்புக் கொண்டார்கள். பொறுமை கொண்ட சில ஜைனத் துறவிகளே இங்ஙனம் சுந்தரியை ஏவி விட்டுப் புத்தர்மீது பழி சுமத்துமாறு செய்தார்கள் என்றும், பின்னர் அவர்களே சில கொலைகாரரை ஏவி விட்டுச் சுந்தரியைக் கொல்லச் செய்தார்களென்றும் உண்மை வெளிவந்தது.

இப்படிப் புறத்தே யிருந்து பௌத்த சங்கத்துக்குத் தொந்தரவுகள் ஏற்பட்டது மாத்திரமல்ல, சங்கத்தி னுள்ளேயும் அபிப்பிராய பேதமும் கட்சிச் சண்டைகளும் பொறுமைக் குணங்களும் சிராவஸ்தியில் நாளுக்கு நாள் வளர ஆரம்பித்தன. எல்லாம் பதவி வேட்டை காரணமாகவே ஏற்பட்டதாகச் சொல்லப்படுகிறது. ஏற்கெனவே சாரீபுத்திரரும் மௌத்கல்யாயனரும் முதன்மையான சீடர்களாக நியமிக்கப்பட்டபோது பூசல்கள் ஏற்பட்டன. மஹா காசியபர் ஒரு முக்கிய ஸ்தானத்தைப் பெற்றிருந்தது அவ்வளவு தூரம் பாதிக்கப்படவில்லை. ஏனென்றால், காசியபர் அறிவாளி. புத்தரைப் போன்ற ஒரு மேதை. அன்றியும் எந்த ஒரு பிக்ஷுவும் காசியபருடன்

எதிர்த்து நிற்க முடியாது. மிகவும் கண்டிப்பான பேர்வழி. யாவரும் அவரைக் கண்டால் நடுங்குவார்கள்.

இதற்கிடையில் சாக்கிய குடும்பத்திலுள்ள இளைஞர் பலர் சங்கத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்ட பின்னரே மிகவும் தீவிரமான கட்சிப் பிரிவுகளும் அபிப்பிராய பேதங்களும் பூசல்களும் வளர ஆரம் பித்தன. சாக்கிய இளைஞரில் தேவதத்தன் மகா பலசாலி. அஞ்சா நெஞ்சம் படைத்தவன். புத்தர் சம்போதி ஞானம் பெற்றதற் கென்ன, தேவதத்தன் தனக்கும் இருத்தி ஆற்றல்கள் இருக்கின்றன என்று எண்ணிக்கொண்டு அவருக்கு ஒரு போதும் அடங்கி நடக்க இசையவில்லை. பேச்சு வன்மையுள்ளவன். சட்ட திட்டங்களை விபரீத மாக விளக்கி மற்றவர்களை நம்பும்படி செய்வதில் சமர்த்தன். நெடு நாளாகவே பௌத்த சங்கத்தின் தலைமைப் பதவியைத் தானே பெற வேண்டுமென்று உள்ளத்தில் ஒருவித ஆசையை வளர்த்து வந்தான்.

இவ்வா றிருக்கும்போது சிராவஸ்தியில் புத்தர் தமக்கு ஒரு அணுக்கத் தொண்டர் வேண்டுமென்று சொல்லி ஆனந்தரை அப் பதவிக்கு நியமித்துக் கொண்டார், இது நடந்தது புத்தர் தருமோப தேசம் செய்யத் தொடங்கி இருபத்தைந்து ஆண்டுகள் கழித்து. அதற்குள்ளாக பௌத்த சங்கத்தில் பல தரப்பட்ட மனப்பான்மை யுள்ளவர்களும் பிக்ஷுக்களாகச் சேர்ந்துவிட்டனர். போட்டியும் பொறுமையும் வளர்ந்துவிட்டன. ஆனந்தர் அந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்ட விஷயம் தேவதத்தனுக்கும் அவனைச் சேர்ந்த சகாக் களுக்கும் வயிற்றெரிச்சலைக் கிளப்பியது. நாளுக்கு நாள் பலத்த வாதங்கள் நடந்தன. முடிவில் சில பிக்ஷுக்கள் சிராவஸ்தியி லிருந்து புறப்பட்டு கௌசாம்பி சென்று அங்கே குடியேறினர்கள் என்று சொல்லப்படுகிறது. ஆனால், கௌசாம்பியிலும் நிலைமை மோசமாகி விட்டது. அங்கேயும் சண்டைகள் முற்றின. ஒரு சமயம் புத்தர் அங்கே சமாதானம் செய்யச் சென்று சமாளிக்க முடியாத நிலைமையைக் கண்டு அங்கே தாமதிக்காமலே திரும்பி வந்துவிட்டார் என்று சொல்லப்படுகிறது.

புறச்சமயவாதிகளின் தொல்லைகள் நாளுக்கு நாள் அதி கரித்தன. முக்கியமாக வைதிகத்திலுள்ளவர்களும் ஜைனர்களும் பௌத்த பிக்ஷுக்களை வாதுக்கழைத்தனர். சாரீபுத்திரர் போன்ற வர்கள் போட்டியில் நின்றால் நிலைமை வேறு. அவர்கள் தருமத்தை யெடுத்துச் சொல்லிப் பெருமையை நிலை நாட்டுவார்கள். ஆனால், எல்லா பிக்ஷுக்களும் சாரீபுத்திரர்களாக இருக்க முடியுமா? ஜைனத் துறவிகளோவென்றால் வாதம் செய்வதிலே சமர்த்தர்கள். சாதா ரணமாக அவர்களைத் தோற்கடிப்பது இலகுவான காரிய மல்ல.

அந்தச் சமயங்களில்தான் இக்கட்டான நிலை ஏற்படும்போது மௌத்கல்யாயனர் போன்றவர்கள் தமது இருத்தி ஆற்றலை உபயோகித்து மந்திர தந்திர வித்தைகளைக் காண்பித்துத் தப்பிக் கொள்வார்கள். இந்த விஷயத்தில் புத்தர் மிகவும் கண்டிப்பா யிருந்தார். ஆனால் அவர்கூட இங்கு சிராவஸ்தியில் நிலைமை மகா மோசமாய் வந்த ஒரு சமயத்தில் எண்ணற்ற அரிய சித்திகளைச் செய்து காண்பித்தார் என்று சொல்லப்படுகிறது. சிராவஸ்தியில் அவர் வாழ்ந்த காலத்தில் நடந்த நிகழ்ச்சிகளி லெல்லாம் 'சிராவஸ்தி அற்புதம்' என்று சொல்லப்படும் மஹாபிராதி ஹாரியம் என்ற இருத்தி நிகழ்ச்சி இன்றும் பல சிற்பங்களாக நிலை பெற்று வருகின்றது.

இந்த சிராவஸ்தி அற்புதம் சம்பந்தமான சூழ்நிலை ஏற்கெனவே இராஜகிருகத்திலேதான் உருவானது. மற்றைய சமயங்களைச் சேர்ந்த துறவிகள் இவ்வகையான இருத்தி ஆற்றல்களைக் காண்பித்துப் பொது மக்களிடையே தமது வீரப்பிரதாபங்களை யெடுத்துக் காட்டிப் பெருமைப்பட்டுக் கொண்டிருக்கையில் பௌத்த சந்நியாசிகளும் ஏன் அவ்வாறு தமது ஆற்றல்களைக் காண்பிக்கலாகாது என்று மகத மன்னன் பிம்பிசாரன் குறைப்பட்டுக் கொண்டானும்.

ஒரு முறை இராஜகிருகத்தில் பெரும் செல்வம் படைத்த ஒரு வணிகன், துறவிகள் உண்மையாகவே சித்திகளில் வல்லவர்கள்தானா என்பதைச் சோதித்துப் பார்க்க ஒரு யுக்தி செய்தான். மிக உயரமான ஒரு மூங்கில் கம்பத்தை நட்டு, அந்தக் கம்பத்தின் உச்சியில் சந்தன மரத்தில் கடைந்தெடுத்த ஒரு பிக்ஷா பாத்திரத்தை வைத்து, "எந்த ஒரு சிரமணனாவது தனது இருத்தி ஆற்றலால் ஆகாயத்தில் கிளம்பிப் போய் அத் திருவோட்டைப் பெற்றுக் கொள்ளலாம்" என்று அறிவித்திருந்தான். சந்தன மரப் பாத்திரத்துக்கு ஒரு தனி மதிப்பிருந்தது. அக்காலத்தில் புகழ் பெற்றிருந்த ஆறு மதங்களைச் சேர்ந்த சந்நியாசிகளிற் பலரும் அங்கு கூடியிருந்தார்கள். ஊரிலே இப்படி யொரு விநோதம் நடக்கப் போகிறதென்றால் மக்கள் சும்மா விருப்பார்களா? ஏராளமான கூட்டம் சேர்ந்து விட்டது. எல்லாச் சிரமணர்களும் அங்கு நின்று பாத்திரத்தையே பார்த்தார்க ளல்லாமல் ஒருவராவது ஆகாய கமனமாகச் சென்று பாத்திரத்தைப் பெற இயலவில்லை. முடிவிலே மௌத்கல்யாயனரால் வாளாவிருக்க முடியவில்லை. தமக்குப் பக்கத்தில் நின்ற பிண்டோல பாரத்வாஜர் என்ற தேரரைப் பார்த்து அவர், "இதைச் செய்து முடிக்காவிட்டால் நம்மை யெல்லாம் நிர்கிரந்தர்கள் ஏளனமாகக் கருதுவார்கள். ஆகையால், என்ன சொல்லுகிறீர்கள்?" என்று கேட்டார். உடனே பாரத்வாஜர் உயரப் பறந்து

சென்று பாத்திரத்துடன் கீழிறங்கினர்! மற்றைய சமயத்தவர் களெல்லாரும் தலை குனிந்து நின்றனர்.

இந்தச் சம்பவத்தைப்பற்றி அன்றிரவு ஆசிரமத்திலே புத்தர் கேள்விப்பட்டதும் கடிந்து கொண்டார். இம்மாதிரியான மாந்திரீக வித்தைகளை எந்த ஒரு பிக்ஷுவும் செய்யலாகாது என்று கட்டளை பிறப்பித்தார். அத்துடன், சந்தன மரத்தாலாய பாத்திரத்தையும் பிக்ஷுக்கள் உபயோகிக்கலாகாது என்று சட்டம் பிறப்பித்து, பாரத்வாஜர் பெற்ற பாத்திரத்தை வாங்கி உடைத் தெறிந்து விட்டார்.

இச்செய்தி வெளியே தெரிந்ததும் மறுமத வாதிகள் மகிழ்ந் தார்கள், "புத்தரின் சீடர்கள் அற்புதங்களைச் செய்ய இசைவார் களானால் நாங்கள் அதைவிடச் சிறந்த முறையில் செய்து காண்பிக்க முடியும்" என்று சொல்லித் திரிந்தனர். பிம்பிசார மன்னனும் இதைக் கேள்வியுற்றுப் புத்தரிடம் வந்து முறையிட்டான். "ஸ்வாமி! எதிர்க்கட்சிக்காரரை அடக்குவதற்குத் தாங்கள் இருத்தி ஆற்றலைத் தடை செய்தது நல்லதல்ல. அவர்களெல்லாம் பொது மக்களிடம் சென்று, பௌத்த பிக்ஷுக்களுக்கு அற்புதங்களைச் செய்து காண்பிக்கத் தெரியாதாகையால் அவர்கள் அருகத் நிலை யடைய வில்லை யென்று சொல்லித் திரிகிறார்கள். மக்களிற் பலர் அதை மெய்யென்று நம்புகின்றனர். ஆகையால் தங்கள் சீடர்கள் வேண்டிய இடத்தில் அவசியமானால் இருத்தி ஆற்றல்களைச் செய்து காண்பிக்க அனுமதி தரவேண்டும்" என்று வேண்டிக் கொண்டான்.

ஆனால் புத்தர், தமது சீடரைப் பொறுத்த வரையில் அனுமதி கொடுக்க மறுத்துவிட்டார். "வேண்டுமானால் நானே அற்புதங்களைச் செய்து காண்பிக்கிறேன். ததாகதருக்கு மாத்திரம் அந்த உரிமை யுண்டு. மன்னா! உனது தோட்டத்திலுள்ள மாங்கனியை உன் இஷ்டம் போல் பறித்து நீ உண்ணலாம். ஆனால், வேறு யாராவது பறித்தால் அவர்களை நீ தண்டிக்கக் கடமைப்பட்டவன்," என்று சொன்னார். மேலும் இந்த அற்புதங்களை யெல்லாம் சில நாட்கள் செல்ல, இராஜகிருகத்திலல்ல, வேறோரிடத்தில் செய்து காண்பிப் பதாகவும் வாக்குக் கொடுத்தார். அவ்வாறே சிராவஸ்தி நகரத்தில் அந்த அற்புதம் நடந்தது.

மேலே சொன்ன கதையில் மாங்கனியை உதாரணமாகச் சொன்ன விஷயம் மற்றொரு உபகதைக்குக் கருவாகிவிட்ட தென்று கொள்ளக் கிடக்கிறது. மாங்கனியை அடிப்படையாகக் கொண்டே சிராவஸ்தி அற்புதச் செய்தியும் கூறப்பட்டிருக்கிறது.

சிராவஸ்தியில் புத்தர் தமது அற்புதங்கள் சிலவற்றைச் செய்து காண்பிக்கப்போகிறார் என்ற செய்தி ஊர் முழுவதும் பரவியது. இதை யறிந்த எதிரிகள் மாங்கனி சம்பந்தமாக முன்பு புத்தர் ஏதோ சொல்லி யிருக்கிறாகையால் அவர் அற்புதம் நிகழ்த்தப் போகும் ஸ்தலத்தில் மாமரமே இல்லாமல் செய்துவிடவேண்டு மென்று கருதி சிராவஸ்தியின் சுற்று வட்டாரத்திலுள்ள மாமரங்களை யெல்லாம் தறித்து வீழ்த்தி அப்புறப்படுத்தி விட்டார்கள். பிரசேனஜித் மன்னனின் தோட்டக்காரனை கண்டன் என்பவன் புத்தர்மீது அன்பு கொண்டு எங்கோ இருந்து நல்ல பழுத்த மாம்பழமாகக் கொண்டு வந்து அவரிடம் கொடுத்தான். புத்தர் அதை உண்ட பின் விதையை ஓர் இடத்தில் போட்டு அதன் மேல் தன் கைகளைக் கழுவி நீரைக் கொட்டினர். உடனே அந்த ஸ்தலத்தில் ஐம்பது பாகம் உயரமுள்ள மாமரம் ஒன்று தழைத்து வளர்ந்து நின்று காட்சி யளித்தது! இதைக் கண்ட எதிரிகள் ஆச்சரியப்பட்டனர். புத்தர் அதோடு நிறுத்தாமல் மேலும் பல அற்புதங்களைச் செய்து காட்டினர். ஆகாயத்திலே மணிப் பீடம் ஒன்றைத் தோற்றுவித்து அங்கே போய் உட்கார்ந்து கொண்டு யமகபிராதிஹாரியம் என்ற இரட்டைக் காட்சி அற்புதத்தைச் செய்து காண்பித்தார். பின்னர் அங்கிருந்தபடியே வேறு பல அற்புதங்களைக் காண்பித்தார். ஆயிரம் ஆயிரம் புத்தர்கள் தோன்றும்படியான மகாபிராதிஹாரியம் என்ற அற்புதத்தைச் செய்து காண்பித்துவிட்டு அங்கிருந்தபடியே முப்பத்து மூன்று தேவர்கள் வசிக்கும் திரியஸ்திரிம்ச லோகத்துக்குச் சென்று விட்டார்.

பகவான் புத்தர் சிராவஸ்தியில் இந்த அற்புதங்களைக் காண்பித்ததற்குக் காரணம் முன் வந்த புத்தர்களும் அந்த இடத்தில் இதே விதமான அற்புதங்களைக் காண்பித்தார்கள் என்பதனால்தான் என்று சொல்லப்படுகிறது. இம்மாதிரியான மகாபிராதிஹாரியம் என்ற அற்புதம் நிகழ்த்திய பின் புத்தர்களாகப்பட்டவர்கள் திரியஸ்திரிம்ச லோகத்துக்குச் சென்று அங்கே தமது தாய்மார்களைக் கண்டு அவர்களுக்கு அபிதர்மத்தை உபதேசித்தார்கள் என்பது ஐதிகம். ஆகையால், கௌதம புத்தரும் மூன்று கவடுகள் வைத்து வானத்தில் மறைந்து வர்ஷகாலமாகிய மூன்று மாதகாலம் அங்கிருந்தபடியே தமது தாயார் மாயாதேவிக்கு அபிதர்மம் உபதேசித்துக் கொண்டிருந்தார்.

சிராவஸ்தியில் அற்புதம் பார்க்க வந்தவர்களெல்லாரும் புத்தர் எங்கே யென்று வானத்தையே பார்த்துக் கொண்டிருந்தனர். ஆனால் அவர் திரும்பி வரக் காணவில்லை. அன்றிரவும் வந்ததாகக் காணவில்லை. எனவே கூட்டம் கலைந்தது. பௌத்த சங்கத்திலும் பெரிய

பரபரப்பு ஏற்பட்டதும் மௌத்கல்யாயனர் யாவருக்கும் உண்மையை எடுத்துச் சொல்லிவிட்டுத் தாமே வானுலகம் பறந்து சென்று புத்தரைக் கண்டு அவர் எப்போது திரும்பி வருவார் என்றும் எங்கே இறங்குவார் என்றும் விசாரித்து வந்தார். புத்தர் தாம் சங்கர்ஷபுரத்தில் இறங்குவதாகச் சொல்லியனுப்பினர். அவ்வாறே பின்னர், இந்திரன் கட்டளைப்படி விஸ்வகர்மன் அமைத்துக் கொடுத்த ஏணி மூலம் புத்தர் சங்கர்ஷபுரத்தில் இறங்கிக் காட்சி கொடுத்தார் என்று சொல்லப்படுகிறது.

வேறொரு கதையின்படி, புத்தர் வானுலகத்துக்குச் சென்று மறைந்தவுடன், தமது பூலோக வாழ்வுத் தொடர்பு பங்கப்படாமலிருப்பதற்காகத் தம்மைப் போல் வேறொரு உருவத்தைச் சிருஷ்டித்து வைத்துவிட்டுப் போனர் என்றும், நியமப்படி அந்த உருவம் தருமோபதேசம் செய்வதையும் தினசரி பிச்சை யேற்பதையும் நடத்தி வந்த தென்றும் சொல்லப்படுகிறது.

இருபத்திரண்டாம் அத்தியாயம்

வானக் காட்சி

சங்கர்ஷபுரம் என்ற பழைய க்ஷேத்திரம் பாலி மொழியில் சங்கிஸ்ஸா என்றும், தற்காலத்தில் சங்கஸா என்றும் வழங்கப்படுகிறது. இந்த ஸ்தலத்தை எப்படியும் போய்ப் பார்த்து விட வேண்டு மென்று நான் முடிவு செய்திருந்தும் சில காலத்துக்கு முன்பு பௌத்த யாத்திரை செய்தபோது சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. பின்னர் இரண்டாம் முறையாக வடநாட்டுப் பிரயாணம் செய்தபோது சங்கர்ஷ புரத்தையும் போய்ப் பார்த்தேன்.

ஆக்ராவி லிருந்து வடக்கே பரூக்காபாட் என்றநகரம் வரை செல்லும் ரயில் மார்க்கமாக சங்கர்ஷபுரத்துக்குச் செல்ல வேண்டும். போகும் வழியில் ஷிக்கோஹாபாட் என்ற ஸ்டேஷன் எதிர்ப்படும். அதைத்தாண்டிச் சென்ருல் மோட்டா என்ற ஸ்டேஷனில் இறங்கிப் போகலாம், அல்லது அதற்கு அடுத்துள்ள பக்னு என்ற இடத்தி லிருந்தும் போகலாம் என்று இந்திய அரசாங்க தகவல் இலாகா வெளியிட்டுள்ள அறிக்கைகள் கூறுகின்றன. ஆனல், எது சுலபமான பாதை யென்ரே அல்லது எங்கே வாகன வசதி கிடைக்கு மென்ரே தகவல் இலாகா ளியீடுகளில் தெளிவான விவரத்தைக் காண முடியாது. இது சம்பந்தமாக பம்பாய் தகவல் இலாகா ஆபீஸிலும் டில்லி ஆபீஸிலும் நான் பலரிடம் கேட்டும் அவர்கள் தமக்கு ஒன்றும் தெரியாது என்று கையை விரித்து விட்டார்கள். எதற்கும் நேரில் போய்ப் பார்த்தால் தெரிந்து விடுகிறது என்று நினைத்துக்கொண்டு நான் மோட்டா ஸ்டேஷனுக்கே டிக்கட் வாங்கினேன்.

டில்லியி லிருந்து சென்ற அந்த ரயில் வண்டி மோட்டா என்ற ஸ்டேஷனில் அதிகாலை ஐந்து மணிக்குப் போய்ச் சேர்ந்தது. நன்ருக விடிந்து வெளிச்சம் காணப்பட்டது. ஸ்டேஷனில் இறங்கியவுடன் உண்மையில் அது ஒரு ரெயில்வே ஸ்டேஷன்தானு அல்லது தவறுத லாக ஓரிடத்தில் வண்டி நின்று விட்டதா என்று முதலில் சந்தேகப் பட்டேன். வெறிச்சென்றிருந்தது அந்த இடம். பிரயாணிகள் எவராவது இறங்கவுமில்லை, ஏறவுமில்லை. நான் மாத்திரம் கீழே இறங்கி மோட்டா என்ற பெயரைக் கண்டதும் இதுதான் ஸ்டேஷன் என்ற தைரியத்தில் சுற்றுமுற்றும் பார்த்தேன். வண்டி வந்து நின்ற

பக்கத்துக்கு எதிர்ப்பக்கத்தில் ஒரு சிறு தகரக் கொட்டில் காணப்பட்டது. அங்கே போய் அதுதான் மோட்டா ஸ்டேஷன் என்பதை ஊர்ஜிதம் செய்து கொண்டு, சங்கஸாவுக்குப் போக ஏதாவது வண்டி கிடைக்குமா என்று அங்கே யிருந்த ஒருவரிடம் கேட்டுப் பார்த்தேன். "சார், சார், இங்கே எதற்காக இறங்கினீர்கள்? இது ஒரு உபயோகமில்லாத இடம் சார்! சங்கஸாவுக்குப் போக வண்டி ஒன்றும் கிடைக்காது. கட்டாந்தரை வழியே ஐந்து மைல் நடக்கவேண்டும். அடுத்தாற்போல பக்னு ஸ்டேஷன் இருக்கிறது. அங்கே போங்கள் எக்கா கிடைக்கும்" என்றார் அவர். இதற்கிடையில் வண்டி குரல் கொடுத்து விட்டுப் புகை யெழுப்பிக் கிளம்பத் தொடங்கி விட்டது! நல்ல வேளையாக அங்கே நின்றவர்கள் என்னுடைய நிலைமையைப் பார்த்து விட்டு வண்டியை நிறுத்தச் சொன்னார்கள். கிராமப் புறங்களில் செல்லும் ரயில் வண்டிகள் கிராமத்திலுள்ளவர்கள் நில் என்று சொன்னால் நிற்கும், போ என்றால் போகும்! பட்டணங்களில் இது முடியாது. ஆகவே அவர்கள் வண்டியை நிறுத்தச் சொல்லி வைத்து, என்னை அதில் ஏறிப் பக்னுவுக்குப் போகச் சொன்னார்கள்.

பக்னு ஸ்டேஷனும் மோட்டாவுக்கு அண்ணன் தம்பி தான்! சிறிய ஸ்டேஷன். ஆனால், நாலைந்து பிரயாணிகள் அங்கே இறங்கக் கண்டேன். வேறு நாலைந்து பேர் ஏறினார்கள். நான் எனது பெட்டியையும் படுக்கையையும் இறக்கி வைத்துவிட்டு ஸ்டேஷன் மாஸ்டர் அறையில் சென்று சங்கஸாவைப்பற்றி விசாரித்தேன். "இப்போது சற்று முன்புதான் சங்கஸாவுக்கு ஒரு எக்கா போயிருக்கிறது. இனி எப்போது வேறு வண்டி அகப்படுமோ தெரியாது," என்றார் அவர். எனக்கு மறுபடியும் திகில் ஏற்பட்டது. நாள் முழுக்க அங்கே காத்துக் கிடக்கவேண்டி வருமோ என்று யோசித்துக் கொண்டிருக்க அங்கே நின்ற ஒரு போர்ட்டர், "எக்கா ஒன்று இப்போதுதான் வந்து கொண்டிருக்கிறது," என்ற செய்தியைத் தெரிவித்தான். நல்ல வேளையாக எனக்குக் கொஞ்சம் உயிர் வந்தது.

காலை வேளை. தை மாதத்துக் கடுங் குளிர். காப்பி அல்லது டீ சாப்பிட ஏதாவது வசதி கிடைக்குமா, என்று ஸ்டேஷன் மாஸ்டரிடம் கேட்டேன். அவர் சிரித்தார். "இந்தப் பிரதேசத்தில் ஹோட்டல் இருக்குமென்று எதிர்பார்க்கவேண்டாம். இந்த ஸ்டேஷனைத் தாண்டிக் கடைத் தெருவுக்குப் போகவேண்டுமானால் ஏழு மைல் நடக்கவேண்டும். இது வெறும் வனாந்தரம்," என்று சொல்லிவிட்டு. "இங்கு எனக்காகக் கொஞ்சம் டீ நானே தயாரிக்கப் போகிறேன், நீங்களும் சாப்பிடலாம், உட்காருங்கள்" என்று அழைத்தார். இந்த

எதிர்பாராத உபசாரத்தை நன்றியுடன் ஏற்றுக்கொண்டு ஸ்டேஷன் மாஸ்டரின் சிறிய அறையில் உட்கார்ந்தேன். அதற்குப் பக்கத்தில் மற்றொரு சிறிய அறை. அதிலேதான் ஸ்டேஷன் மாஸ்டரின் படுக்கை யிருக்கை யெல்லாம். ஒரு 'ஸ்டவ்' அடுப்பை ஏற்றி அவர் டீ தயாரித்தார். யாரோ ஒருவர் ஒரு பெரிய செம்பு நிறைய நல்ல பால் கொண்டுவந்து கொடுத்தார். பாலை நன்றாகக் காய்ச்சி அதிலே தேயிலையைப் போட்டு ஒரே பால் மயமான டீயை எனக்கு அன்போடு கொடுத்தார். முன்பின் அறியாத இத்தகைய அன்னிய இடங்களுக்குப் போகும்போ தெல்லாம் எதிர்பாராத உபசாரங்களை யும் உதவிகளையும் பெற்று எனக்குப் பழக்கப்பட்டுவிட்டது!

சற்று வேளையில் எக்கா வந்தது. அதில் ஏறி சங்கஸா என்று சொல்லப்படும் சங்கர்ஷபுரத்துக்குப் போனேன். ஸ்டேஷனி லிருந்து அந்த ஸ்தலத்துக்குப் போக ஏழு மைல் தூரம். புத்தர் பரிநிருவாணத் தின் இரண்டாயிரத் தைந்நூறுவது ஆண்டு விழா உலகெங்கும் கொண்டாடப்பெற்ற சமயத்தில் இந்திய அரசாங்கம் யாத்திரிகர் களுக்காகப் பலவித வசதிகள் செய்துவைத்தபோது, பக்னவி லிருந்து சங்கஸாவுக்குப் போவதற்கும் அழகான ஒரு புதிய சாலை அமைத்து வைத்தது. அந்தச் சாலையிலே நான் எக்காவில் போகும்போது இரு பக்கத்திலும் கோதுமை, தினை, கரும்பு, துவரை ஆகிய பயிர்கள் கண்ணுக்கெட்டிய தூரமெல்லாம் செழித்து வளர்ந்திருப்பதைக் கவனித்தேன். பக்கத்திலே காளி நதி என்ற ஒரு சிற்றாறு நீர்ப் பாசனத்துக்கு உதவியா யிருக்கிறது. வெறுந் தரையாக எந்த இடமு மில்லாமல் எங்கும் ஒரே பச்சைப் பசேல் என்ற காட்சி தந்தது.

ஸ்டேஷனி லிருந்து ஐந்து மைல் போனதும் இடது பக்கமாகச் சென்ற ஒரு பாதை வழியாக எக்கா திரும்பியது. நேரே சென்றால் ஒரு முக்கியமான கிராமம் வரும் என்றும் இடது புறம்தான் சங்கஸா கிராம முள்ள தென்றும் வண்டிக்காரன் சொன்னான். அந்த இடத்தில் அழகான ஒரு சிறு கட்டிடம் காணப்பட்டது. அது யாத்திரிகர்களுக் கென அரசாங்கம் கட்டி வைத்திருக்கும் பிரயாணிகள் விடுதி யென்பதை யறிந்தேன். நவீன முறையில் கட்டப்பட்டிருக்கும் இந்த விடுதிக்கு முன்புறமாக அழகான ஒரு தோட்டமும், கிணறும், மோட் டார் பூட்டி இயங்கும் தண்ணீர்க் குழாய்களும் இருந்தன. இந்த நிம்மதியான இடத்தில் ஒரு நாள் தங்கினால் இன்பமா யிருக்குமே யென்று கருதினேன். அந்தக் குக்கிராமத்தில் பிரயாணிகள் விடுதி அவ்வளவு கவர்ச்சிகரமா யமைந்திருக்கிறது.

சிறிது நேரத்தில் சங்கர்ஷபுரம் போய்ச் சேர்ந்தோம். இரண்டு பெரிய அரச மரங்கள் நிழல் பரப்பிக்கொண் டிருக்க அதன் கீழே

ஒரு மண்மேடு தெரிந்தது. அதுதான் சங்கர்ஷபுரத்துக்கு அடையாளம். புத்தர் சிராவஸ்தியில் நிகழ்த்திய பிராதிஹாரியம் என்ற அற்புதத்தின் பின்னர் இந்திர னுலகத்திலிருந்து மூன்று ஏணிகள் வழியாக இறங்கி மக்களுக்குக் காட்சி கொடுத்தருளிய திவ்விய க்ஷேத்திரம் அது. ஓர் அரச மரத்தின் கீழே கம்பிக் கூட்டினுள்ளே துதிக்கை ஒடிந்த கல் யானை யொன்று காணப்பட்டது. இந்த இடத்திலே அசோக மன்னன் நாட்டி வைத்த சிலா ஸ்தம்பத்தின் உச்சியிலிருந்த கல் யானை இதுவே யென்று சரித்திரக்காரர் சொல்கிறார்கள். கன்னிங்ஹாம் என்ற ஆராய்ச்சியாளரே இந்த சங்கர்ஷபுரத்தையும் கண்டு பிடித்தவர்.

கி. பி. ஐந்தாம் நூற்றுண்டிலே சங்கர்ஷபுரத்துக்கு வந்த பா ஹியன் இந்த ஸ்தலத்தின் பெருமையைக் குறிப்பிட்டு, "அசோக னும் மற்றும் அரசர்களும் பல ஸ்தூபிகளையும் கோயில்களையும் கட்டி வைத்திருக்கிறார்கள்" என்று சொல்லி யிருக்கிறன். ஆனால் ஒரு கோயிலையாவது ஸ்தூபியையாவது இப்போது பார்க்க முடிய வில்லை. அசோக சின்னமாகிய கல் யானை யிருக்கும் அரசமரத்துக் குச் சில கஜ தூரத்தில் ஒரு பெரிய மண் மேடு காணப்படுகிறது. அதன் மேல் கிராமத்தவர்கள் பழைய செங்கற்களை யெல்லாம் சேர்த்தெடுத்து வைத்து ஒரு கோயில் எழுப்பி வைத்திருக்கிறார்கள். 'விசாரி தேவி' கோயில் என்று சொல்லி இப்போது வணங்கி வருகிறார்கள்.

முன்னொரு காலத்தில் இந்தக் கோயில் நாக வழிபாட்டுக் குரியதா யிருந்தது என்று சொல்லப்படுகிறது. கிராமவாசிகள் ஊரிலே மழையில்லா திருந்தால் நாகத்துக்குப் பூஜை செய்து வேண்டிக் கொள்வது வழக்கம். இப்பொழுதும் கிராம மக்கள் அவ்வாறு வழிபட்டு வருகிறார்கள்.

நான் சங்கஸாவுக்குப் போன சமயத்தில் மேலே சொன்ன அரச மரத்தடியில் இரண்டு பர்மிய பிக்ஷுக்களும் அங்கு யாத்திரையில் வந்து வழிபட்டுக்கொண்டிருந்ததைப் பார்த்தேன். தொல்பொரு ளாராய்ச்சி இலாகாவின் கணக்கிலே அங்கு நியமிக்கப்பட்டிருக்கும் ஒரு காவல்காரன் அவர்களையே வட்டமிட்டுக் கொண்டிருந்தான். என்னைக் கண்டதும் அவன் ஒரு பெரிய சலாம் போட்டான். பர்மிய பிக்ஷுக்களோடு மற்றொரு பிக்ஷுவும் நிற்கக் கண்டேன். அவரைப் பார்த்ததும் அவர் சிங்களநாட்டைச் சேர்ந்தவரா யிருக்கலா மென்று சந்தேகித்து அவருடன் பேசியபோது சந்தேகம் தெளிந்தது. தென்னிலங்கையைச் சேர்ந்த விஜயசோம என்ற அந்தத் தேரர் ஒன்றரை வருடங்களுக்கு முன்பு சங்கஸாவுக்கு வந்து அங்கே தங்கி

யிருந்து சொந்தப் பணத்தைக் கொண்டு அசோக சின்ன மிருக்கும் அரச மரத்துக்குப் பக்கத்தி லுள்ள மற்றொரு மரத்தடியில் ஒரு சிறிய சாந்துக் கட்டிடம் கட்டி புத்தர் கோயில் என்று சொல்லி வருகிறார். வெளியூரி லிருந்து வருபவர்கள் அதைப் பிரதக்ஷிணம் செய்து வழி படுகிறார்கள். என்னோடு பேசிக் கொண்டிருக்கையில் சங்கஸாவைப் பற்றிப் பல விளக்கங்களை யெடுத்துச் சொன்னர் விஜயசோம தேரர்.

இந்த அரச மரத்தையும் மண்மேட்டையும் சுற்றி வர சுமார் எண்ணூறு ஏக்கரா நிலத்தை அரசாங்கம் தனிப்படுத்தி வைத்திருக் கிறது. இதுவே பழைய சங்கர்ஷபுரமா யிருக்குமாகையால் என்றே ஒரு நாள் தொல்பொரு ளாராய்ச்சிப் பகுதியார் ஆராய்ச்சி செய்ய விருக்கிறார்கள். ஆகையால் இந்தச் சுற்று வட்டாரத்தில் பொதுமக்கள் எந்தவிதமான கட்டிடமும் கட்ட முடியாது. அப்படி யிருக்க அரச மரத்தின் கீழே சிறிய புத்த கோயிலை எப்படி அந்த சிங்கள பிக்ஷு கட்டினர் என்று கேட்டேன். அவர் சிரித்துக் கொண்டு, "நான் எவ்வித அனுமதியும் பெறவில்லை யென்பது உண்மைதான். கிராமத்திலுள்ளவர்கள் எல்லாரையும் அழைத்து விழா நடத்தினேன். ஆகையால் தகராறு எதுவும் நிகழாது என்று தான் நம்பியிருக்கிறேன்" என்றார்.

அந்த ஸ்தலத்திலே யிருந்து சிறிது தூரத்திலேதான் சங்கஸா என்ற கிராமம் உள்ளது. அக்கிராமமும் அரசாங்க பாதுகாப்பு எல்லைக்குள்ளேயே அடங்கி யுள்ளது. வெள்ளம் அணுகாத ஒரு மேட்டுப் பிரதேசம் அது. கிராமத்தவர்கள் இந்த இடத்தைக் கோட்டை என்று சொல்கிறார்கள், முன்னொரு காலத்தில் சங்கர்ஷ புரம் செங்கற் கட்டிடங்கள் நிறைந்த பெரிய நகரமா யிருந்தது என் பதில் சந்தேகமில்லை, அந்த அழிந்த நகரத்தின் செங்கற்களெல்லாம் இன்னும் அந்தப் பிரதேசத்தில் பூமிக்கடியில் புதைந்து கிடக்கின்றன. அவற்றைச் சேகரித்தே கிராம மக்கள் தமது சிறு வீடுகளையும் சேரி களையும் கட்டி வைத்திருக்கிறார்கள். சங்கஸாவைச் சுற்றி நாற்புறமும் ஒரு காலத்தில் பெரிய மதில் சூழ்ந்திருந்தது. இப்போது அது அழி பட்டுச் சிற்சில இடங்களில் மாத்திரம் மதில் இருந்த அடை யாளங்கள் காணப்படுகின்றன.

விஜயசோம தேரர் என்னைக் கிராமத்துக்கு அழைத்துச் சென்றார். சுமார் ஐம்பது அல்லது அறுபது குடிசைகள் ஒன்றோ டொன்று நெருங்கி யிருந்தன இந்தக் கிராமத்தில். மாடும் எருமையும் பன்றியும் முட்டிக்கொண்டு வட்டமிட்டன. கிராமத்துச் சிறுவர்கள் பலர் எங்களை வந்து சூழ்ந்து கொண்டனர். வளைந்து வளைந்து சென்ற ஓர் ஒடுக்கமான பாதை வழியாக நடந்து சென்று முடிவிலே

ஒரு வீட்டுக்குள் நுழைந்தோம். "இங்கேதான் ஓர் அறையில் நான் வசிக்கிறேன். இந்த வீடு கிராமத் தலைவருக்குச் சொந்தமானது" என்று சொல்லி விஜயசோம தேரர் கிராமத் தலைவராகிய பண்டிட் முகுந்த பிரசாத் சாஸ்திரி என்பவருக்கு என்னை அறிமுகப்படுத்தி வைத்தார்.

பண்டிட் முகுந்த பிரசாத் சாஸ்திரி ஒரு கலைஞர். தொல்பொருளாராய்ச்சியில் மிகுந்த பற்றுக்கொண்டவர். சங்கர்ஷபுரத்துப் பழமையைப் போற்றுபவர். அவருடைய வீட்டின் ஒரு பகுதியை 'சங்கஸா மியூசியம்' என்று சொல்லி ஒதுக்கி வைத்திருக்கிறார். கிராமத்தில் பல இடங்களிலே மக்கள் விவசாயத்துக்கு நிலத்தை உழும்போ தெல்லாம் ஏதாவது புராதன சின்னம் அகப்படுமாம். அவற்றையெல்லாம் கண்ணும் கருத்துமாகச் சேகரித்து வந்து தமது வீட்டில் காட்சிக்கு வைத்திருக்கிறார். கி.பி. முதலாம் இரண்டாம் நூற்றாண்டுக் காலத்திலிருந்து பதினைராம் நூற்றாண்டு வரை சம்பந்தமான பல சிலைகள், கட்டிடச் சின்னங்கள், காசுகள், மணிகள், மட்பாண்ட ஓடுகள், இத்தியாதி பொருள்களையெல்லாம் அங்கு கண்டேன். புத்தரின் சிலைகள் பல இருக்கின்றன. விஷ்ணு வடிவங்களும் சிவன் வடிவங்களும் காணப்பட்டன. பழைய சங்கர்ஷபுரத்தைத் தோண்டி முறையான வழியிலே ஆராய்ந்து பார்த்தால் இன்னும் எத்தனை கலைப் பொக்கிஷங்களைக் கண்டு பிடிக்கலாமோ தெரியாது. ஆனால் இந்தக் கிராமம் ஒரு காலத்தில் மிகவும் பெரிய நகரமாக விளங்கிய தென்பதில் சந்தேகமில்லை.

பிக்ஷு விஜயசோம தேரர் சங்கர்ஷபுரத்தின் சரித்திரத்தைப் பற்றி ஓரளவு விளக்கம் கொடுத்தார். இப்போது பெரும்பாலும் மஹாயான பௌத்தர்களே இந்த க்ஷேத்திரத்தை மகிமையுடன் போற்றுகின்றனர் என்றும் ஹீனயானிகள் அவ்வளவாக அக்கறை கொள்வதில்லை யென்றும் சொன்னார். சிராவஸ்தியில் பிராதிஹாரிய சித்திகளைச் செய்துவிட்டுப் பகவான் புத்தர் வானுலகம் சென்றதை மஹாயான பௌத்தர்களும் ஹீனயான பௌத்தர்களும் ஒப்புக் கொள்ளுகின்றனர். ஆனால், வானுலகில் யாருக்கு அவர் அபிதர்மத்தை யுபதேசித்தார் என்பதில் தான் இரு பக்கத்தாருக்கு மிடையில் அபிப்பிராய பேதமுண்டு. தமது தாயாருக்கு உபதேசித்தார் என்பது மஹாயானர்களின் கொள்கை. இந்திரன் முதலிய தேவர்களுக்கு உபதேசித்தார் என்பது ஹீனயானர்களின் நம்பிக்கை. "தேவானாம் தேசயி புத்தோ அபிதம்ம மனுத்தரம்" என்ற ஒரு மங்கள ஸ்லோகத்தையும் இதற்கு ஆதாரமாக விஜயசோம தேரர் பாடிக் காட்டினார்.

இந்திரன் முதலிய தேவர்களுக்கு உபதேசம் செய்த பின் புத்தர் சங்கர்ஷபுரத்துக்கு இறங்கி வந்தார். மூன்று ஏணிகள் தேவர்களால் நிருமாணிக்கப்பட்டன. நடுவிலுள்ள ஏணி வழியாக புத்தர் இறங்கினர். இடது பக்க ஏணியில் இந்திரன் வெண் கொற்றக் குடை நிழற்றிக் கொண்டு இறங்கினன். வலது பக்கத்தில் பிரம்மா சாமரை வீசிக்கொண்டு வந்தான். இந்தக் காட்சியைக் கண்ட சங்கர்ஷபுரத்து மக்கள், "நாங்கள் ஒவ்வொருவரும் புத்தராவோம்" என்று பேருவகையுற்றனர். கிடைத்தற் கரிய பெரிய பாக்கியம் இந்தக் காட்சி என்று சொல்லப்படுகிறது.

இவர்கள் இறங்கி வந்த ஏணிகள் அந்த க்ஷணமே மாயமாய் மறைந்துவிட்டன. ஆனல் கடைசியிலிருந்த ஏழு படிகள் மாத்திரம் பூமியில் புதைந்து கிடந்ததாக ஐதிகம். அசோக மன்னன் இந்தப் படிகளைக் கண்டுபிடிக்க வேண்டும் என்று பல வேலையாட்களைக் கொண்டு பூமியைத் தோண்டியும் படிகள் அகப்படவில்லை யென்று சீன யாத்திரிகன் பா ஹியன் தனது குறிப்புக்களில் எழுதி வைத்திருக்கிறன். பா ஹியன் சங்கர்ஷபுரத்துக்கு வந்த சமயத்தில் மஹாயான ஹீனயான பௌத்த பிக்ஷுக்கள் இருசாராரும் வித்தியாச மில்லாமல் கலந்து வாழக் கண்டதாகவும் கூறுகிறன்.

சிறிது நேரம் விஜயசோம தேரருடன் பேசிக்கொண்டே சங்கர்ஷபுரத்தைச் சுற்றிப் பார்த்துவிட்டு மறுபடியும் பக்ஸ ரயில்வே ஸ்டேஷனுக்கு எக்காவில் வந்தேன். அரை மணி நேரம் கழித்து வண்டி யொன்றில் ஏறி பரூக்காபாத் என்ற இடத்துக்குப் போய், அங்கே சாப்பாட்டை முடித்துக்கொண்டு அல்லாஹாபாத்துக்குப் பிரயாணமானேன்.

இருபத்து மூன்றும் அத்தியாயம்

புயலும் அமைதியும்

புத்தர் தருமோபதேசம் செய்த இடங்களில் கௌசாம்பி நகரும் ஒரு முக்கியமான இடமாகக் கொள்ளப்படுகிறது. வத்ஸ நாட்டின் தலைநகரா யிருந்த கௌசாம்பியில் பிரசித்திபெற்ற உதயணன் என்ற அரசன் ஆட்சி செய்தவன். அவன் காலத்திலேயே புத்தர் அங்கு சென்று தருமோபதேசம் செய்தார் என்று சொல்லப்படு கிறது. பெருங்கதையின் நாயகனுகிய உதயணன் தீவிர ஜைன மதப் பற்றுள்ளவன். அங்ஙன மிருந்தும் மற்றைய மதத் துறவி களிடத்தில் வெறுப்புக் கொள்ளாதவன். ஜைனம் எங்கெல்லாம் மேலோங்கி யிருந்ததோ அங்கெல்லாம் பௌத்தர்கள் சென்று பிரசாரம் செய்தார்களாகையால் கௌசாம்பி நகரத்தையும் ஒரு முக்கிய ஸ்தலமாகப் புத்தரும் அவர் சீடர்களும் ஏற்படுத்திக் கொண்டு அங்கிருந்து தருமப் பிரசாரம் செய்ததில் ஆச்சரிய மில்லை.

கௌசாம்பியில் கோஷிதாராமம், குக்குடாராமம், பாவாரி காராமம் என்ற மூன்று முக்கியமான ஆசிரமங்கள் இருந்தன. இவற்றை முறையே கோஷிதன், குக்குடன், பாவாரிகன் என்ற மூன்று தனவணிகர்கள் கட்டிக் கொடுத்தார்கள், சிராவஸ்தியில் போலவே இங்கும் பௌத்த சங்கத்தினர் நிரந்தரமாக வசித்து மற்றைய மதத் துறவிகளுடன் அடிக்கடி சம்வாதங்கள் நடத்தி வந்தனர். சில சமயங்களில் அவர்கள் வெற்றி பெற்றனர். மற் றைய சமயங்களில் பெருந் தோல்வியு முற்றனர். நெடுநாளாகப் பூசல்கள் வளர்ந்து வந்தன.

கௌசாம்பியி லிருந்த ஆசிரமங்கள் எப்போது ஸ்தாபிக்கப் பட்டன என்ற செய்தி தெரியவில்லை ஆனல், புத்தர் தருமோப தேசம் செய்ய ஆரம்பித்து ஒன்பதாவது ஆண்டிலே கௌசாம்பிக்குச் சென்ருர் என்று ஒரு புராணம் கூறுகிறது. அப்போது நிகழ்ந்த ஒரு சம்பவம் விசித்திரமான கதை.

— கௌசாம்பியிலே மாகந்தியன் என்ற ஒரு பிராமணன் இருந் தான். அவனுக்கு மாகந்தியை என்ற பெயருள்ள ஒரு பெண் இருந்தாள். பேரழகி. கல்வி கேள்விகளிலும் நிகரற்றவள். இவளை எப்படியும்! புத்தருக்கு மணமுடித்துவிட வேண்டுமென்று அவள்

தந்தை விரும்பினன். ஆனல் தாயாரோ வென்றல், சகல சாஸ்திரங்களிலும் வல்லவளாகையால், புத்தரின் அங்க லக்ஷணங்களைப் பார்த்துவிட்டு, அவரிடம் காம சுகம் அனுபவிக்கும் லக்ஷணம் ஒன்றுமில்லை யென்று கண்டு தம் பெண்ணைப் புத்தருக்குக் கொடுக்க வேண்டாமென்று தடுத்தாள், மனைவியின் சொல்லைக் கேளாமல் மாகந்தியன் எவ்வளவோ முயற்சி செய்தும் தனது எண்ணம் நிறைவேறுமற் போய், முடிவில் அவளை உதயண மன்னனுக்கு மணமுடித்து வைத்தான்.

புத்தர் மறுத்துவிட்டார் என்ற ஆத்திரம் மாகந்தியனை விட்டகலவில்லை. இதற்குப் பழிக்குப் பழி வாங்க வேண்டுமென்று அவன் காத்திருந்தான். புத்தரோ இந்த விஷயத்தைப் பற்றிச் சிறிதும் கலக்கம் கொள்ளவில்லை. பௌத்த நூல்களிலே இந்தக் கதையை உதாரணமாகச் சொல்லி மாரனின் புதல்வியர் லீலைகளிலிருந்து புத்தர் தப்பிக்கொண்ட செய்தி கூறப்படுகிறது.

மாகந்தியனும் அவன் மகள் மாகந்தியையும் புத்தர் மீதும் அவர் சீடர்கள் மீதும் வெறுப்புக் கொண்டிருந்தனர். உதயணன் மனைவியர்களில் மாகந்தியையைத் தவிர சாமாவதி என்றொருத்தியிருந்தாள். அவள் மீது உதயணன் மிகுந்த அன்பு கொண்டிருந்தது மாகந்தியைக்கு வெறுப்பைத் தந்தது. அன்றியும், சாமாவதி புத்தரிடத்தில் விஸ்வாசம் கொண்டு அவருடைய உபாசிகையாக விளங்கியவள். மாகந்தியை ஆத்திரம் கொண்டு ஒருநாள் சாமாவதியின் அரண்மனைக்குத் தீ வைத்துக் கொளுத்தி சாமாவதியையும் அவளது ஐந்நூறு தோழியர்களையும் கொன்றுவிட்டாள் என்றும், இதை யறிந்த உதயணன் மாகந்தியையையும் அவளது உறவினர்களையும் கொன்று பழிக்குப் பழி வாங்கினன் என்றும் சொல்லப்படுகிறது.

சிராவஸ்தியில் பௌத்த சங்கத்தாரிடையே சிறிது சிறிதாக ஆரம்பித்த உட்பூசல்கள் கௌசாம்பியிலேதான் பெருமளவில் விருத்தியாகி இரண்டு கட்சிகளாகப் பிரிந்து சங்கத்தார் கடும் சண்டையில் ஈடுபட்டனர். பௌத்த சங்கத்தாரிடையே அடிக்கடி சச்சரவு ஏற்படுவது சகஜம். ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் புத்தர் தலையிட்டு விசாரணை செய்து அவர்கள் ஒழுக்கத்துக்காகச் சில சட்டதிட்டங்களை ஏற்படுத்துவார். இவைகளே பிற்காலத்தில் விநயங்கள் என்ற பெயருடன் பௌத்தத்தின் சட்ட நூலாகத் திரிபிடகத்தில் ஒரு முக்கிய இடம் பெற்றிருக்கின்றன. கௌசாம்பியில் வாழ்ந்த மௌத்கலி என்ற ஒரு பிக்ஷு (இவருக்கும் மௌத்கல்யாயனருக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை) ஏதோ தவறு செய்துவிட்டார் என்று மற்றைய பிக்ஷுக்கள் குற்றம் சுமத்தினர்கள். ஆனல் மௌத்கலி

தாம் செய்தது எந்தவிதத்திலும் குற்றமான காரியமல்ல என்று வாதாடினர். கட்சி பிரிந்தது. மௌத்கலியை ஆதரித்தவர்கள் விநய விதிகளில் ஆதாரம் காட்டினர்கள். எதிர்க்கட்சியாரும் சில ஆதாரங்களைக் காட்டினர்கள். ஆனல் பெரும்பான்மையான பிக்ஷுக்கள் மௌத்கலிக்கு எதிரிகளா யிருந்ததால் அவர்கள் தமது தீர்ப்பைக் கூறி மௌத்கலியைத் தண்டிக்கவேண்டு மென்று முடிவு செய்தனர். விநயத்தின் பிரகாரம் குற்றம் செய்த ஒரு பிக்ஷு அக்குற்றத்தை ஒப்புக் கொள்ள வேண்டும். அப்போதுதான் தண்டனை யளிக்கப்படலாம். குற்றத்தை ஒப்புக்கொள்ளாத வரையில் தண்டனை யளிக்க எவருக்கும் அதிகாரமில்லை யென்ற விதி யிருக்கிறது. இதன் காரணமாக இரு கட்சியாருக்கும் நெடு நாட் களாவே பகைமையும் பூசலும் நீடிக்கத் தொடங்கியது.

அச்சமயத்திலே புத்தர் அங்கு சென்று இரு கட்சியாருக்கும் போதனைகள் செய்தார். ஆனல், கட்சிகளிடையே யிருந்த கசப்பு நீங்கியபாடில்லை. சங்கத்தார் புத்தரின் ஆலோசனைகளுக்குச் செவி மடுக்கவில்லை. இதனல் அவர் மனம் நொந்து கௌசாம்பிக்கே இனி வருவதில்லையென்று தீர்மானித்து பாரிலேயகம் என்ற ஓர் உபவனத்துக்குச் சென்று வர்ஷகாலத்தைக் கழித்துவிட்டு மீண்டும் சிராவஸ்திக்குச் சென்றார். பலகாலம் சண்டை போட்டுக் கொண்டிருந்த கௌசாம்பி பிக்ஷுக்கள் முடிவில் ஒரு நாள் ஒன்று சேர்ந்து சிராவஸ்திக்குச் சென்று தமது ஒற்றுமையைப் புத்தருக்கு அறிவித்து அவரிடம் மன்னிப்புக் கோரித் திரும்பினர் என்று கதை.

ஆனல், பிற்காலச் சம்பவங்களைப் பார்க்கும்போது கௌசாம் பியில் எந்தக் காலத்திலும் சங்கத்தாரிடையே அமைதி ஏற்பட் டிருந்ததாகத் தெரியவில்லை. கன்னன் என்ற கபிலவஸ்துவைச் சேர்ந்த பிக்ஷு ஒருவர் அடங்காதவிதமாக நடந்து கொண்டார் என்றும் மற்றைய பிக்ஷுக்கள் மனம் நொந்து புத்தருக்குத் தூது அனுப்பினர்கள் என்றும் சொல்லப்படுகிறது. அப்போது பிக்ஷு மஹா காசியபர் ஆனந்தரைக் கௌசாம்பிக்கு அனுப்பி வைத்தார். இது நடந்தது புத்தர் இறப்பதற்குப் பத்து ஆண்டுகளுக்கு முன்னர். ஆனல் ஆனந்தரின் நல்ல வார்த்தைகளைக் கன்னன் கேட்டது கிடையாது. ஆனந்தர் மனம் நொந்து திரும்பிப் போன பின்னரே கன்னன் பச்சாத்தாப முற்றார் என்று சொல்லப்படுகிறது.

கௌசாம்பியிலிருந்த பிக்ஷுக்கள், சங்கத்திலே அடங்காமல், தமக்கெனச் சில விதிகளை யமைத்துக்கொண்டு வாழ்ந்தது புத்தரோடு நீங்காப் பகைமை பூண்ட தேவதத்தனுக்கு வாய்ப்பா யிருந்தது. தேவதத்தன் கௌசாம்பிக்கு வந்து கோஷிதாராமத்தைத்

தனது தலைமைப் பீடமாக அமைத்துக்கொண்டு புதிய விதிகளை உண்டாக்கி வந்தான். அதிலிருந்து அவனுக்கும் புத்தருக்கும் விரோதம் வளர்ந்தது. சங்கத்திலும் பிளவுகள் அதிகரித்தன.

இந்தக் கௌசாம்பி நகரம் அல்லஹாபாத்துக்குத் தென் மேற்கே யமுனை யாற்றங் கரையில் முப்பத்தெட்டு மைல் தூரத்திலிருக்கிறது. புத்தருக்கு எதிரிகள் பலர் இருந்த காரணத்தாலோ அல்லது கௌசாம்பி முக்கியமாக ஜைனர்களின் இருப்பிடமா யிருந்த காரணத் தாலோ பௌத்த யாத்திரிகர்கள் இந்த ஸ்தலத்தைக் கைவிட்டு விட்டார்கள். சீன யாத்திரிகர்கள் பா ஹியனும் ஹியூங் சியாங்கும் கூட கௌசாம்பியை அவ்வளவு அக்கறையுடன் எடுத்துச் சொல்லாமல் விட்டுவிட்டார்கள். மற்றைய பௌத்த க்ஷேத்திரங் களைப்பற்றி மிக விரிவாகச் சீனயாத்திரிகர்கள் சொல்லி வைத்த குறிப்புக்களைக் கொண்டு இந்தியத் தொல்பொருளாராய்ச்சி செய்த மேதைகள், பல க்ஷேத்திரங்களைக் கண்டு பிடித்து, அவற்றின் புராதனப் பெருமையைப் பூமியி லிருந்து அகழ்ந்தெடுத்துக் கலையுலகத்துக்குக் காண்பித்திருக்கிறார்கள். ஆனால் கௌசாம் பியைப்பற்றிப் பலகாலமாகவே அதிகம் தெரியாமலிருந்தது. மிகவும் சமீப காலத்தில் அல்லஹாபாத் சர்வகலாசாலையைச் சேர்ந்த சரித்திரப் பேராசிரியர் சர்மா என்பவர் கௌசாம்பியின் புனருத் தாரணத்தில் ஊக்கம் கொண்டு, அவர் மேற்பார்வையில் சில ஆராய்ச்சிகள் நடந்தன. இதன் பேரில் கோஷிதாராமம் முதலிய கட்டிடங்கள் இருந்த இடங்கள் இப்போது கண்டு பிடிக்கப்பட்டிருக் கின்றன. இன்னும் எவ்வளவோ முயற்சிகள் இங்கு செய்யப்பட வேண்டி யிருக்கின்றன. அசோகன் நாட்டி வைத்ததாகச் சொல்லப் படும் சிலா ஸ்தம்பம் ஒன்று (சுமார் இருபது அடி உயரத்தில்) இங்கு காட்சி யளிக்கிறது. பேராசிரியர் சர்மாவின் முயற்சியில் கண்டெடுத்த பல புத்தர் சிலைகளும் மற்றும் சின்னங்களும் அல்லஹாபாத் பொருட்காட்சிச் சாலையில் வைக்கப்பட்டிருக்கின்றன. கௌசாம்பி ஸ்தலத்திலுள்ள ஒரு ஜைனக் கோயிலிலும் பல பொருள்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கின்றன.

மற்றைய பௌத்த க்ஷேத்திரங்களைப் போய்த் தரிசிப்பதற்கு எவ்வளவோ சிரம மிருந்தாலும் எனக்கு எப்படியோ சில வசதிகள் கிடைத்தன. ஆனால் கௌசாம்பி, அல்லஹாபாத்துக்கு முப்பத் தெட்டு மைல் தூரத்தில்தானிருந்தும் அதைப் போயடைவதென்றால் எவ்வளவோ சிரமம். வசதியான பாதை யில்லை. முக்கியமான ஒரு சாலையில் போகும் பஸ்ஸில் சென்றாலும், பின்னர் பதினைந்து மைல் தூரத்துக்கு எவ்வித வாகன வசதியும் கிடையாது. ஆகையால்,

எனக்கு ஆலோசனை கூறிய ஒரு பௌத்த பிக்ஷு, சாரநாத்தி லுள்ளவர், "கௌசாம்பியை விட்டுத் தள்ளுங்கள்" என்று சொல்லி விட்டார். தற்செயலாக பம்பாயில் நான் சந்தித்த அல்லாஹாபாத் நண்பர் ஒருவர் எதிர்பாராத விதமாக உதவி செய்தார். அவர் தமது உறவினர் ஒருவருக்குக் கடித மெழுதி அவர் மூலமாக மோட்டார் வசதி செய்து தந்தார். அந்த வசதி கிடைக்காவிட்டால் நான் கௌசாம்பியைப் பார்த்திருக்க முடியாது.

இருபத்துநான்காம் அத்தியாயம்

சூழ்ச்சி நாடகம்

பௌத்த சங்கத்தில் புதிய விதி விலக்குகளைப் புகுத்தி மாறுபாடான கொள்கைகளை வகுத்துக்கொண்டு கௌசாம்பியி லிருந்து வந்த தேவதத்தனுக்கு இருப்புக் கொள்ளவில்லை. எப்படியாவது புத்தரின் ஸ்தானத்தைத் தான் பெற்றுவிடவேண்டு மென்று இரவும் பகலும் சூழ்ச்சிகளிலே ஈடுபட்டிருந்தான். அப்படி யிருக்கும்போது, நாட்கள் நீடித்துக்கொண்டே போவதும் கௌதமருக்கு முதுமை அதிகரித்து வருவதும் தேவதத்தனுக்குப் புதிய ஒரு சிந்தனையைக் கொடுத்தது. சிராவஸ்தியி லிருந்து அப்போது புத்தர் இராஜகிருத்துக்குப் போயிருந்தார். இராஜகிருகத்து மன்னன் பிம்பிசாரனின் புதல்வன் அஜாதசத்துரு கொஞ்சம் திமிர் பிடித்த வாலிபன். அடங்காத குணமுள்ளவன். அவனைத் தன் கைக்குள் போட்டு வைத்துக் கொண்டால் பல காரியங்களைச் சாதித்துக் கொள்ளலாம் என்பது தேவதத்தனுடைய சிந்தனை. ஆகையால் இராஜகிருகத்துக்கே போய் அங்கே யிருந்து முயற்சிகள் செய்யத் துணிந்தான். கௌசாம்பியி லிருந்து புறப்பட்டான்.

சிரமணக்கோலம் பூண்ட காலத்திலேயே தேவதத்தன் பல அரிய சாதனைகளில் பயிற்சி பெற்றிருந்தான். இருத்தி ஆற்றல்களில் மௌத்கல்யாயனரோடு சரி நின்று போட்டி போடக்கூடியவன். மந்திர தந்திர வித்தைகளில் சமர்த்தன். ஆகவே, அவன் இராஜ கிருகத்துக்கு வந்ததும் அஜாதசத்துருவின் நட்பையும் நம்பிக்கையை யும் பெறுவதற்கு ஒரு தந்திரம் செய்தான்.

அஜாதசத்துரு ஒரு நாள் தன் அரண்மனையில் தனியாக உட்கார்ந்திருக்கும் சமயம் பார்த்து அவன் மடியிலே கொடிபோன்ற ஒரு பாம்பு சுற்றிய மதலைபோலக் காட்சி யளித்தான் தேவதத்தன். அஜாதசத்துரு அஞ்சிக் கதறியதும் தேவதத்தன் தன் சொந்த வடிவத்தைக் காட்டிச் சிரித்து நின்றான். அஜாதசத்துரு தன் முன்னால் ஒரு சிரமணன் நிற்பதைக் கண்டதும் ஆச்சரிய வசத்தனாய்த் தேவத்தன் காலில் விழுந்து நமஸ்கரித்தான். இத்தகைய அற்புத செயலைச் செய்யும் பிக்ஷு மிகவும் சக்தி வாய்ந்தவரா யிருக்க வேண்டுமென்றும் அவருடைய நட்பைப் பெற்றுக் கொள்வது நல்லது என்றும் தீர்மானித்தான். அப்போது தேவதத்தன் அஜாதசத்

துருவைப் பார்த்து, "இளவரசே! தங்கள் சொந்த பலத்தையும் தங்களுக்கு விரைவில் கிடைக்கப் போகும் பெரிய யோகத்தையும் பற்றித் தாங்கள் உணராம லிருக்கிறீர்கள். விரைவிலே அதை யுணரக்கூடிய சந்தர்ப்பம் கிடைக்கும்" என்று சொல்லிவிட்டுச் சென்ருன். அன்றிலிருந்து தேவதத்தனுடைய ஆசிரமத்துக்கு அஜாதசத்துரு அடிக்கடி போய் வந்தான்.

மகதநாட்டு இளவரசரே தேவதத்தன் ஆசிரமத்துக்கு ஒவ்வொரு நாளும் வந்து போவதைக் கண்ட பல பிக்ஷுக்கள் தேவதத்தன் கட்சியில் போய்ச் சேர்ந்தனர். அவனுடைய கட்சி கௌசாம்பியி லிருந்த சங்கத்தைவிட இப்போது பன்மடங்காகி விட்டது. செல் வாக்கும் வரவரப் பெருகிக்கொண்டு வந்தது. அஜாத சத்துருவின் நண்பர்களான பல செல்வப் புதல்வர்கள் ஏராளமான பொருள்களைக் கொண்டு போய்த் தேவதத்தனுக்கும் அவன் சகாக்களுக்கும் கொடுத்து வந்தனர். அஜாதசத்துருவே ஒவ்வொரு நாளும் பிக்ஷுக்கள் ஐந்நூறு பேருக்கு வேண்டிய உணவைத் தேவதத்தன் ஆசிரமத்துக்கு அனுப்பி வந்தான். புதிய புதிய ஆடைகள் பல அனுப்பினன். இவ்வாருகத் தேவதத்தன் ஆசிரமத்தில் மதிப்பும் செல்வாக்கும் அதிகரித்துக்கொண்டு வருவதைக் கண்ட மௌத்கல் யாயனர், புத்தர் பெருமானிடம் சென்று, "தேவதத்தன் அளவுக்கு மிஞ்சிய செல்வாக்கோடு வாழுகின்ருன். அனேகம் பிக்ஷுக்கள் தேவதத்தன் கட்சியில் சேர்ந்துவிட்டார்கள். ஆகையால், இதை நாம் முளையிலே கிள்ளிவிடாவிட்டால் பெரிய ஆபத்தில் வந்து முடியும்" என்று எச்சரிக்கை செய்தார். ஆனல் பகவான் இதைக் கேட்டு எவ்வித கலக்கமும் கொள்ளவில்லை. "மௌத்கல்யாயனரே! ஒருவன் தானுகவே தேடிக்கொண்ட வினை அவனையே முடிவாக்கும். வாழைக்குத் தன் காயும், மூங்கிலுக்குத் தன் கதிரும், அமிதமாகத் தேடிய ஒருவனுக்குத் தன் தேட்டமும் உயிரைப் பறித்துவிடும். ஆகையால், நாம் தேவதத்தனைப் பார்த்து வீணுகக் கவலைப்பட வேண்டிய அவசியமில்லை" யென்று பதில் கூறிவிட்டார். ஆனல், தேவதத்தனுக்கு இதுவரை யிருந்து வந்த இருத்தி ஆற்றல்களெல் லாம் துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றன வென்று புத்தருக்குத் தெரியவந்த அதே கணம் அந்த ஆற்றல்களெல்லாம் அவனைவிட்டு நீங்கிவிட்டன.

எப்படியாவது புத்தரை யணுகித் தலைமைப் பதவியைப் பெற்றுவிட வேண்டுமென்று தீர்மானித்த தேவதத்தன் ஒரு நாள் நேரிலேயே போய்க் கேட்டுவிட்டான். "பகவான்! தங்களுக்கோ வயது அதிகரித்துக்கொண்டே போகிறது. சரீரத்தில் முன்பிருந்த

வலிமை குன்றிவிட்டது. ஆகையால், சங்கத்தில் முன்போல அவ் வளவு மேற்பார்வையும் சிரத்தையும் கொள்ளத் தங்களுக்கு இயலாது. எனவே, தாங்கள் பௌத்த சங்கத்தின் தலைமைப் பதவியை யாராவது ஒருவரிடம் ஒப்படைத்துவிட்டு ஓய்வு பெற்றுக் கொள்வது நல்லது. சங்கத்திலுள்ளவர்களில் நான் தங்களைப் போல் ஒரு க்ஷத்திரியன். தங்களைப் போல் சாக்கிய இளவல். பிக்ஷுக்க ளெல்லோரும் என் சொல்லைக் கேட்டு நடப்பார்கள் என் பதில் சந்தேகமில்லை. ஆகையால், தங்களுக்குப் பின் தலைமை தாங்கக்கூடியவன் நான் ஒருவனே யிருக்கிறேன்" என்று சொன்னான். புத்தர் புன்னகை புரிந்தார். தேவதத்தனைப் பார்த்து, "தேவதத்தா! நீ என் பொருட்டாக இரங்குவதற்கு நான் நன்றி தெரிவிக்கிறேன். ஆனால், என் உயிர் தரித்திருக்கும் வரையும் நான் சங்கத்தின் பொறுப்பை வேறு யாரிடமும் ஒப்படைக்கச் சித்தமாயில்லை. அப்படி நினைத்திருந்தாலும் எனது முக்கிய சீடர்களான மௌத்கல்யாயனர் அல்லது சாரீபுத்திரருக்குக் கொடுத்திருப்பேன். அவர்களுக்கே கொடுக்காத ஒரு பதவியை உனக்குக் கொடுப்பேன் என்று நீ கனவிலும் காத்திருக்கவேண்டாம்," என்று கண்டிப்பாகச் சொல்லி விட்டார். இதைக் கேட்ட தேவதத்தன் ஆத்திரமடைந்து சினத்துடன் வெளியேறினான்.

அன்றிலிருந்து பகைமை அதிகரித்தது. தேவதத்தன் தனது கட்சியிலுள்ள பிக்ஷுக்களுக்கு வெவ்வேறு கட்டளைகளைப் பிறப் பித்துக்கொண்டு வந்தான். இராஜகிருகத்திலிருந்த பிக்ஷுக்கள் பலர் சாதாரணமாக ஒழுகிவந்த சட்டங்களை மதிப்பதா அல்லது தேவதத்தன் அமைத்த விதிகளை மதிப்பதா என்பது தெரியாமல் திகைத்தனர். உடனே புத்தர், தேவதத்தன் ஆணைகளை ஒருவரும் கேட்டு ஒழுகலாகாது என்றும் அவன் செய்யும் காரியங்கள் எதுவும் புத்தரையோ தருமத்தையோ சங்கத்தையோ பாதிக்காது என்றும் பிரகடனம் செய்து வைக்குமாறு மௌத்கல்யாயனருக்கு உத்தர விட்டார்.

சிலநாட் செல்ல தேவதத்தன் வேறொரு சூழ்ச்சி செய்தான். புத்தர் உயிரோடிருக்கும் வரை தனது காரியம் பூர்த்தியாகா தென்று கண்டவன் மீண்டும் அஜாதசத்துருவிடம் சென்று, அவனுக்கு ஆசை வார்த்தைகள் கூறி, மிக மோசமான சில ஆலோசனைகளைச் சொன்னான். அதிகாரமும் கீர்த்தியுமுள்ள இளவரசனை அஜாத சத்துரு பிள்ளைப்பூச்சி போல் உட்கார்ந்திருப்பது சரியல்லவென்றும் தந்தையிடம் இராச்சியத்தைக் கைப்பற்றித் தானே ஆளவேண்டிய சமயம் வந்துவிட்ட தென்றும் தேவதத்தன் ஆலோசனை சொன்னான்.

பிம்பிசாரன் இருக்கும் நிலையில் அவனுகவே இராச்சியத்தை அஜாத சத்துருவிடம் கொடுத்துவிட மாட்டான். ஆகையால், அவனைக் தீர்த்துக் கட்டி விட்டுத்தான் இராச்சியத்தைக் கைப்பற்றிக் கொள்ளவேண்டும் என்றும் புத்தி சொன்னன். "இளவரசரே! உமது தந்தைக்கு நல்ல மனம்தான். ஆனல், கௌதமரின் பேச்சைக் கேட்டுக்கொண்டு உம்மை உதாசீனம் செய்து வருகிறார். இவர்கள் இருவரும் உயிரோடிருக்கும் வரை உமக்கு இராச்சியம் கிடைக்கு மென்று நம்ப வேண்டாம். ஆகையால் இருவரையும் தொலைத்து விட்டால்தான் காரியம் பலிக்கும். கௌதமர் விஷயத்தை நானே பார்த்துக்கொள்கிறேன். ஆனல் உமது தந்தையை ஒழித்துக்கட்டும் காரியத்தை நீரே கவனிக்கவேண்டும்" என்று தேவதத்தன் புத்தி சொல்லிக் கொடுத்தான். கெடுமதியுள்ள அஜாதசத்துருவும் தேவ தத்தன் பேச்சை நம்பி அப்படியே செய்வதாக ஒப்புக்கொண்டான். ஒருநாள் இரவு அஜாதசத்துரு கையிலே ஈட்டியை எடுத்துக்கொண்டு ஒருவருமறியாமல் தன் தந்தையைக் கொல்லச் சென்றன். ஆனல் அவன் திட்டம் நிறைவேறவில்லை. யாரோ காவலாளிகள் அதைக் கவனித்துத் தடுத்துவிட்டார்கள், பிம்பிசார மன்னன் காருண்ணியம் மிக்கவனுகையால் தன் புதல்வனுக்கு எத்தகைய தண்டனையும் கொடுப்பதற்குப் பதிலாக அவனையே இராச்சியத்தை ஏற்றுக் கொண்டு ஆளும்படி சொல்லிப் பட்டம் சூட்டி வைத்தான்.

அஜாதசத்துரு பட்டத்துக்கு வந்த பின்பும் தேவதத்தனின் உற வைக் கைவிடவில்லை. மேலும் அவர்கள் நட்பு வளர்ந்து வந்தது. இராச்சியத்தைத் துறந்த பிம்பிசாரன் காவி தரித்து பிக்ஷு சங்கத் தைச் சேர்ந்து கொண்டான். இதுவும் தேவதத்தனுக்கு அவ்வள வாகப் பிடிக்கவில்லை. அஜாதசத்துருவுக்கு மீண்டும் வலை வீசி அவனைக்கொண்டு பிம்பிசாரனைப் பிடித்துச் சிறையி லடைக்கும்படி செய்துவிட்டான். பிம்பிசாரன் பட்ட துன்பங்கள் கொஞ்ச நஞ்சமல்ல.

புத்தரைக் கொல்ல என்ன வழியைக் கையாளலாம் என்று ஆலோசித்த தேவதத்தன் அஜாதசத்துருவிட மிருந்து சில படை வீரர் உதவியைக் கோர வேண்டுமென்று சிந்தித்து மன்னனை யணுகித் தனக்கு இடையிடையே பகைவர் தொல்லை யேற்படுகிற தென்றும் அதற்கு மன்னனின் படை வீரர் உதவி யிருந்தால் நல்லது என்றும் சொன்னன். அஜாதசத்துரு தேவதத்தனைப் பார்த்து, "எனது இராச்சியத்திலுள்ள எதை வேண்டுமானலும் தாங்கள் தங்கள் சொந்தம்போல் உபயோகித்துக்கொள்ளலாம். எனது சேனையிலுள்ள அத்தனை பேரையுமே தங்கள் ஆணையிற் கட்டுப்

படச் செய்கிறேன்" என்று சொல்லிச் சேனைத் தலைவனை அழைத்துத் தேவதத்தன் விரும்பினால் அவர் கேட்ட உதவியை எந்தச் சமயத்திலும் செய்வதற்கு ஆயத்தமாயிருக்க வேண்டுமென்று கட்டளையிட்டான். சேனைத் தலைவனும் அவ்வாறே செய்வதாக வாக்களித்துச் சென்றான். சேனைத் தலைவனின் நட்பைப் பெற்றுக் கொண்ட பின் தேவதத்தன் அடிக்கடி அவனைத் தன் ஆசிரமத்துக்கு வரச்சொல்லி அங்கே தனது பெருமையையும் புகழையும் காண்பித்துத் தன்மேல் அவனுக்கு அளவற்ற நம்பிக்கையைப் பிறக்கச் செய்துவிட்டுத் தன் சதிச் செயலுக்குத் தக்க தருணத்தை எதிர் பார்த்துக்கொண்டிருந்தான்.

சேனைத் தலைவனிடம் ஒரு நாள் தனக்குப் பதினைந்து வீரர்கள் தேவை என்று சொல்லி வரவழைத்துத் தேவதத்தன் தனது சூழ்ச்சியை உருவாக்கினான். அவர்களில் ஒருவனை மாத்திரம் தனியாக வைத்துக்கொண்டு அவன், "வேணுவன ஆராமத்தில் இந்த சமயத்தில் கௌதம முனி தனியாக உட்கார்ந்திருப்பார். நேரே இந்த வழியாகப் போய் கௌதமரைக் கொன்றுவிட்டு அதே வழியாகத் திரும்பி வா" என்று சொல்லி யனுப்பினான். பின்னர் வேறு இரண்டு வீரர்களைத் தனியாக அழைத்து வைத்துக்கொண்டு, நீங்கள் இருவரும் அந்த வழியிலே ஓரிடத்தில் மறைந்து நில்லுங்கள். அவ்வழியாக எவர் வந்தாலும் உடனே பாய்ந்து கொன்றுவிட வேண்டும்" என்று சொல்லி, முதல் வீரன் போன பாதையில் அனுப்பி வைத்தான். இப்படியே பதினைந்து பேரையும் அனுப்பி வைத்துக் காத்திருந்தான்.

முதலில் சென்ற வீரன் மிகுந்த தைரியத்துடன் புத்தரை யணுகினான். ஆனால் இந்தப் பெருமானின் அயலில் சென்றவுடன் விலவிலத்துப் போய் அடங்கி யொடுங்கித் தன் கையிலிருந்த வாளையும் கீழே போட்டுவிட்டு நின்றான். புத்தர் சாந்தமாக அவனைத் தன் பக்கத்தில் அழைத்து வைத்து, "அன்பனே, என்னைக் கண்டு நீ அஞ்சவேண்டாம். யாரோ மதியீனத்தால் சொன்னதைக் கேட்டு இங்கு வந்தாய். பரிசுத்தமான உள்ளத்தோடு நல்ல காரியங்களைச் செய்து கொண்டு வாழ்வாயாக" என்று, தன்னையே கொல்ல வந்தவனைப் பார்த்து ஆசீர்வதித்தார். அந்தப் போர் வீரன் புத்தரின் பாதங்களில் விழுந்து நமஸ்கரித்துவிட்டு, "அண்ணலே! அறியாமையால் இந்தக் கொடுமையான தொழிலைச் செய்ய உடன் பட்டேன். என்னை மன்னித்தருள வேண்டும்" என்று வேண்டிக் கொண்டான். கருணை வள்ளலான புத்தர், "நீ நல்ல வாழ்வு வாழ்வாய்" என்று சொல்லி அனுப்பி வைத்தார். போர் வீரன் எழுந்து

தான் வந்த வழியே போகப் புறப்பட்டபோது, புத்தர் அவனைத் தடுத்து நிறுத்தி, "நீ வந்த பாதையால் திரும்பிப் போகவேண்டாம். உன்னை யறியாமல் ஏதாவது ஆபத்து நேரக்கூடும். ஆகையால், மற்றப் பக்கத்திலிருக்கும் பாதை வழியாகப் போ" என்று அனுப்பி வைத்தார்.

முதல் ஆள் போன வழியிலே அவன் திரும்பி வரக் காணுத மற்றைய இரண்டு வீரர்களும் அவனுக்கு என்னவாயிற்று என்று யோசித்துக்கொண்டே மேலும் நடந்து சென்றார்கள். சென்றவர்கள் புத்தர் உட்கார்ந்திருந்த இடத்துக்கே வந்து சேர்ந்தனர். புத்தர் அவர்களைப் பார்த்துக் கருணையோடு அழைத்து வைத்து முதலாமவனுக்கு உபதேசித்ததுபோலவே உபதேசம் செய்து அனுப்பினர். அவர்களும் திரும்பி, புத்தர் சொல்லிக் கொடுத்தவாறே, வேறொரு வழியாகச் சென்றனர்.

இவ்விதமே தேவதத்தலை அனுப்பப்பட்ட கொலையாளிகள் அத்தனை பேரும் பகவானுக்குத் துன்பம் விளைப்பதற்குப் பதிலாக அவரிடம் உபதேசம் கேட்டு நல்லவர்களாக மாறித் திரும்பிவிட்டார்கள். முதலிலே போனவன் திரும்பித் தேவதத்தனிடம் வந்து, "ஐயனே! என்னால் ஒன்றும் செய்வதற்கில்லை. கௌதம முனிவருக்கு எதிரில் போனவுடன் ஏதோ மாயசக்தியால் அவர் என்னை மயக்கி விட்டார். அப்படியே நடுங்கிக்கொண்டு கீழே விழுந்துவிட்டேன். எனது நோக்கத்தை அவர் எப்படியோ அறிந்துவிட்டார். நல்ல வேளையாக அந்த முனிவர் என்னைச் சபித்துக் கொல்லாமல் விட்டு விட்டார்" என்று நடுங்கிக்கொண்டே சொன்னான். சற்றுவேளையில் மற்றைய வீரர்களும் வந்து அதே விதமாக நடந்த வரலாற்றை எடுத்துச் சொன்னார்கள்.

இந்த முயற்சியில் படுதோல்வி யடைந்த தேவதத்தன் வேறு வழி தேடினான். அஜாதசத்துருவின் யானைகளில் மிகவும் பயங்கரமான மதங்கொண்ட நளகிரி என்ற யானை யிருந்தது. அந்த யானையை ஒருபோதும் கட்டவிழ்த்துவிடுவது கிடையாது. அதை உபயோகித்துத் தனது காரியத்தைச் சாதித்துக்கொள்ள வேண்டும் என்ற கெடுபுத்தி யேற்பட்டது தேவதத்தனுக்கு. ஒருவருக்கும் தெரியாமல் அவன் ஒருநாள் யானைப் பாகர்களில் ஒருவனைப் போய்ப் பார்த்து, "நான் அரசனின் அந்தரங்க ஆலோசகர் என்பதை நீ அறிவாயா?" என்று கேட்டான். பாகன் ஏற்கெனவே மன்னனுக்கும் தேவதத்தனுக்கு மிருந்த நட்பைப் பற்றிக் கேள்விப் பட்டிருந்தானதையால், "தங்கள் மகிமையைப் பற்றி நான் நான்கறிவேன். தாங்கள் இட்ட கட்டளையைச் செய்யச் சொல்லிச் சேனபதி

கூட எனக்குச் சொல்லி யிருக்கிறார்" என்றான். இதுதான் தக்க சமயம் என்றெண்ணிய தேவதத்தன் அந்தப் பாகனிடம் இரகசிய மாக, "உன்னால் ஒரு முக்கியமான காரியம் ஆகவேண்டி யிருக்கிறது. அதைச் செய்து முடித்த பின் அரசனிடம் சொல்லி உனக்கு உயர்ந்த பதவி பெற்றுத் தருகிறேன். கௌதம முனிவர் இந்தப் பாதையிலே போகும்போது நளகிரியைக் கட்டவிழ்த்துவிடவேண்டும். உன்னால் முடியுமா?" என்று கேட்டான். பாகன் சற்றுத் தயங்கியதைக் கண்ட தேவதத்தன், "புத்தருக்கு மந்திர சக்தி யிருக்கிறதென்று சொல் கிறார்கள். மதங்கொண்ட யானையை அவர் அடக்க முடியுமா என்று பார்ப்பதற்காகவே நான் இந்த யோசனையைச் சொன்னேன்" என்று தெரிவித்தான். அதன் பின்னர் பாகன் ஒருவாறு இசைந்து, "நளகிரியை அடக்குவது எவராலும் முடியாது. புத்தர் அதை அடக்கு வாரானால், நளகிரிக்கு நல்ல காலம்தான்" என்றான்.

மறுநாட்காலை பகவானும் அவரது சீடர் பலரும் இராஜகிருக நகர வீதியில் பிச்சை வாங்கிக்கொண்டு திரும்பிவந்தனர். அப்போது தூரத்திலே கட்டவிழ்த்துவிடப்பட்ட நளகிரி பயங்கரமான கோலத் துடன் வீதியில் அவர்களை நோக்கி வந்து கொண்டிருந்தது. வீதியில் சென்ற மக்க ளெல்லாரும் பயந்து ஓடிப்போய் வீட்டுக் கூரைகளில் ஏறி ஒளிந்து கொண்டனர். புத்தரின் சீடர்கள் ஐயனைப் பார்த்து, "ஆட்கொல்லியான மதங்கொண்ட யானை எதிர்த்து வருகிறது. உடனே திரும்புங்கள்! ஆபத்து! ஆபத்து!" என்று கத்தினர்கள். ஒரு சில சீடர்கள் பயந்து அங்கு மிங்கும் ஓடினர்கள். ஆனால் பகவான் மாத்திரம், "சன்மார்க்கத்தை நாடுபவர்களிடத்தில் மூர்க்கத்தனமான யானைதான் என்ன செய்ய முடியும்?" என்று சொல்லிக்கொண்டே அச்சமில்லாமல் மேலே நடந்து சென்றார். அவருடைய அஞ்சா நெஞ்சத்தில் அடைக்கலம் புகுந்த சில சீடர்கள் அவரைப் பின் தொடர்ந்து போனார்கள். புத்தரின் கருணைக்கதிர் மதங்கொண்ட யானை நளகிரிமீது சிந்தியதும் அதன் மதமெல்லாம் அடங்கி யொடுங்கிப் போய்விட்டது. சர்வ வல்லமையும் இழந்த யானை தன் துதிக்கையைத் தொங்கப்போட்டுக்கொண்டு அண்ணலை யணுகி அவர் பாதங்கள் பட்ட தூளியை வாரித் தன் பிடரிலே தூவிக் கொண்டு மறு பக்கம் திரும்பி அமைதியான நடைபோட்டு நடந்து தனது லாயத்துக்குச் சென்றது. அந்தக்ஷணமே மதமும் தீர்ந்து விட்டது. இந்த அற்புதத்தைக் கண்ணுற்ற இராஜகிருக மக்கள், "அங்குசத்தைக் கொண்டு யானையை அடக்கலாம். ஆனால், மனித ருக்குள்ளேயே களிறு போன்ற புத்தர் தமது கருணைக் கண் கொண்டே நளகிரியை வசப்படுத்திவிட்டார்" என்று வியந்தார்கள்.

இந்த முயற்சியிலும் தோல்வி கண்ட தேவதத்தன் வெகுவாகச் சிந்திக்கலானான். ஊரிலே அவன் மீது வெறுப்பு ஏற்பட்டது. அதனாலே வேறு ஏதாவது தந்திரத்தை உபயோகிக்க வேண்டும் என்று தீர்மானித்துச் சில நாள் அளவுக்கு மிஞ்சிய தபசு காரியங்களில் ஈடுபட்டிருப்பது போல் காட்டிக்கொண்டு அடக்கமாய் நடந்துகொண்டான். தன்னைச் சேர்ந்த சில பிக்ஷுக்களுக்குப் பௌத்த தருமத்தைப்பற்றி விபரீதமான சில விளக்கங்களைக் கொடுத்துப் புத்தரைச் சேர்ந்தவர்க ளெல்லாரும் முறை கேடாக ஒழுகுகின்றனர் என்று சொல்லி அவர்களை நம்பச் செய்தான். பிக்ஷுணிகள் சங்கம் அப்போது மதிப்போடு வளர்ந்திருந்தது. ஆரம்பத்தில் பெண்கள் சங்கத்தில் சேரலாகாது என்று புத்தர் கண்டிப்பாக அபிப்பிராயம் கொண்டிருந்தது போலவே தேவதத்தனும் கொள்கை பூண்டிருந்தான். ஆனால், புத்தர் தமது அபிப்பிராயத்தை மாற்றிக்கொண்டு சில பெண்களைச் சங்கத்தில் அனுமதித்துக் கொண்டார். இது எடுத்துப் பேசுவதற்குத் தேவதத்தனுக்கு ஒரு வாய்ப்பான கருவியா யிருந்தது. தேவதத்தன் நடத்தி வந்த ஆசிரமத்தை யடுத்துப் பிக்ஷுணிகள் ஆசிரமும் ஒன்றிருந்தது. அதில் வசித்த ஒரு சந்நியாசினி கர்ப்பவதியாகக் காணப்பட்டா ளென்று தேவதத்தன் அவளை உடனே வெளியேற்றி விட்டான். பெண்கள் சங்கத்தில் சேர்ந்து கொண்ட பின் தவறுக நடந்து கர்ப்பவதிகளானால்தான் அதர்மம்; ஆனால், சங்கத்தில் சேருங்காலத்தில் கணவனைடிருந்து வந்து சங்கத்தில் சேர்ந்து கொண்ட பின் ஆசிரமத்திலே ஒருத்திக்குக் குழந்தை பிறப்பது அந்தக் காலத்தில் தவறு என்று கருதப்படவில்லை. ஆகையால், தேவதத்தனால் வெளியேற்றப்பட்ட பிக்ஷுணியும் தான் ஆசிரமத்தில் சேரும்பொழுதே தனது சொந்தக் கணவன் மூலமாகக் கர்ப்பவதியாகி வந்தவள் என்று புத்தரிடம் போய் முறையிட்டதன் பேரில் அவர் அவளைச் சங்கத்தில் சேர்க்கும்படி சொல்லி விட்டார். பின்னர் ஆசிரமத்திலேயே பிறந்த அவள் குழந்தையை அரசன் எடுத்து வளர்த்தான் என்றும் அக்குழந்தைக்குக் குமார காசியபன் என்ற பெயரிடப்பட்ட தென்றும் கதை.

இந்தப் பிக்ஷுணியின் சம்பவமும் தேவதத்தன் எடுத்துச் சொல்லிய அவதூறுகளில் பெரிதாகப் பேசப்பட்டது. சில நாட்கள் செல்ல, தேவதத்தன் தன்னுடன் கோகாலிகன், கார்த்தமோரகன், கண்டதேவி புத்திரன், சமுத்திரதத்தன் என்ற நான்கு பிக்ஷுக்களை அழைத்துக் கொண்டு புத்தரிடம் போய் சங்க விதிகளில் சில முக்கியமான மாற்றங்கள் செய்யவேண்டு மென்று விண்ணப்பித்துக்



34.
சிராவஸ்தி --
ஜேதவன
விஹாரம்
(பக். 212)



35. புத்தருக்கு அதாத பிண்டிகன் ஜேதவனம் அளித்த காட்சி—பாரூத் சிற்பம் (பக். 199)

Copyright: Archaeological Dept., Govt. of India



36
சிராவஸ்தி—
அங்குலிமாலை
சைத்தியம்
(பக். 212)
Copyright:
Archaeological
Dept.,
Govt. India



39. அசோக சின்னம்—சங்கர்ஷபுரம் (பக். 224)



40.
நாலந்தை
விஹாரம்
(பக். 259)
Copyright:
Archaeological
Dept.,
Govt. of India



41.
நாலந்தை—
புராதன
பல்கலைக் கழகம்
இருந்த ஸ்தலம்
(பக். 259)
Copyright:
Archaeological
Dept.,
Govt. of India

கொண்டான். சங்கத்திலுள்ள பிக்ஷுக்கள் வர வர விநயத்தில் அவ் வளவு அக்கறை கொள்ளாமல் நடந்து வருகிறார்கள் என்றும், மிகவும் கண்டிப்பான நிபந்தனைகளை விதிக்கவேண்டும் என்றும் வாதித்தான். தேவதத்தன் முக்கியமான ஐந்து நிபந்தனைகளை எடுத்துச் சொன் னன். முதலாவதாக, பிக்ஷுக்கள் நகரங்களிலோ கிராமங்களிலோ வசிக்காமல் காடுகளிலேயே வசிக்கவேண்டும். இரண்டாவதாக, பிக்ஷுக்கள் வீட்டுக்கு வீடு சென்று வாசலில் பெறும் பிச்சையை மாத்திரம் உண்டுவர வேண்டு மல்லாமல், எவராவது தம் வீட்டில் வந்து விருந்துண்ணவேண்டு மென்று அழைப்பதை மறுக்க வேண்டும். மூன்றுவதாக, பிக்ஷுக்கள் குப்பை மேடுகளில் கிடக்கும் கந்தைகளைப் பொறுக்கி அவற்றைத் தைத்து ஆடைகளாகத் தரிக்க வேண்டு மல்லாமல், கிருகஸ்தர்கள் கொடுக்கும் புதிய ஆடைகளைப் பெற்றுக்கொள்ள மறுக்க வேண்டும். நான்காவதாக, பிக்ஷுக்கள் மழை வெயிலுக்கு மரங்களின் வேர்களுக் கடியிலோ அல்லது குகை களிலோ தங்கியிருக்க வேண்டு மல்லாமல் குடிசையிலோ ஆசிரமத் திலோ வசித்தலாகாது. ஐந்தாவதாக, பிக்ஷுக்கள் தம் வாழ்நாள் முழுவதும் மாமிசத்தையும் மீனையும் உண்ணலாகாது.

இந்த ஐந்து நிபந்தனைகளும் பிக்ஷு சங்கம் ஆரம்பித்த காலத் துக்கு முன்னரே பரிவிராஜகர் என்ற சிரமணர்கள் யாவரும் பின் பற்றி வந்தவைகள்தாம். ஆனல், பிக்ஷு சங்கத்தில் நாளுக்கு நாள் பல மாறுதல்கள் ஏற்பட்டுச் சந்தர்ப்பத்துக்குத் தக்க விதமாகப் பல சலுகைகள் உண்டாக்கிக் கொள்ளப்பட்டன. இந்தச் சலுகைகளை யெல்லாம் நிறுத்திவிட்டுக் கடுமையான நிபந்தனைகள் விதிக்கப்பட வேண்டு மென்பது தேவதத்தனின் வாதம். ஆனல் புத்தர் அதற்கு இடம் கொடுக்கவில்லை. "நீ சொல்வது எவராலும் சாதிக்கக்கூடிய காரியமல்ல எந்த ஒரு பிக்ஷுவும் நீ சொல்லும் விதிப்பிரகாரம் நடந்து கொள்ள விரும்பினல் அதற்கு எவ்வித ஆட்சேபணையு மில்லை. ஆனல், இந்த நிபந்தனைகளைக் கட்டாய விதிகளாக்க நான் உடன்பட மாட்டேன்" என்று சொல்லிவிட்டார்.

இங்ஙனம் பகவான் மறுத்தது தேவதத்தனுக்கு அளவற்ற மகிழ்ச்சியைக் கொடுத்தது. அப்படி மறுக்கவேண்டும் என்றுதான் அவனும் விரும்பி யிருந்தான். இந்த மறுப்பு இராஜகிருகம் முழுவதும் உடனே பரவியது. "தேவதத்தனும் அவனைச் சேர்ந்த பிக்ஷுக்களும் எவ்வளவோ ஒறுத்துக் கட்டுப்பாடாக ஒழுகி வருகிறார்கள்; ஆனல் கௌதமரும் மற்றும் பிக்ஷுக்களும் தாராளமாக உண்டும் உடுத்தும் போகத்தில் வாழுகின்றனர். இவர்களை எப்படித் துறவிகள் என்று சொல்லலாம்?" இப்படியான அபிப்பிராயம் ஊரிலே பரவவும் பொது

மக்களிற் பலரும், புதிதாகச் சேர்ந்து கொண்ட சில பிக்ஷுக்களும் தேவதத்தனையே ஆதரித்து அவனைச் சேர்ந்து கொண்டனர்.

பௌத்த சங்கத்தில் பிளவு உண்டாக்க எந்த ஒரு பிக்ஷுவும் துணிந்தால் அதைப்போல் குற்றம் வேறில்லை யென்பது பௌத்த சங்கத்தின் நம்பிக்கை. ஆகையால் தேவதத்தனின் சூழ்ச்சிகளைத் தெரிந்து கொண்ட கௌதமர் பின்னர் ஒரு நாள் அவனை நேரில் கண்டபோது, "இவ்வாறு ஊரிலெல்லாம் உலாவும் செய்திகள் உண்மைதானே?" என்று கேட்டார். தேவதத்தன், "ஆம், உண்மை தான். பிக்ஷு சங்கத்தில் கட்டுப்பாடும் ஒழுக்கமும் இருக்க வேண்டும் என்பதையே நான் வற்புறுத்தினேன். அதற்குத் தாங்கள் இடமளிக்க வில்லை. தங்களைச் சேர்ந்தவர்க ளெல்லாரும் அமித வாழ்க்கை நடத்துகிறார்க ளென்பதில் சந்தேக மென்ன?" என்று கேட்டான்.

புத்தர் உடனே, "தேவதத்தா! நீயாகவே உனக்குக் கேட்டைத் தேடிக்கொள்ளுகின்றாய். பிக்ஷு சங்கத்தில் பிளவை ஏற்படுத்தத் துணியும் எவனும் மன்னிக்க முடியாத குற்றத்தைச் செய்தவனாவான். சாந்தத்தையும் சமாதானத்தையும் ஏற்படுத்த முயல்பவனே சன் மார்க்கன்," என்று சொல்லிவிட்டுச் சென்றார்.

ஆனால் தேவதத்தன் உள்ளத்தில் வைரம் பாய்ந்துவிட்டது. சங்கத்தின் பிளவை மேலும் வளர்க்கவேண்டும் என்று தீர்மானித்து விட்டான்.

மறுநாள் தேவதத்தன், பிக்கு ஆனந்தரை யழைத்து, "சங்கத் தில் நடைபெறும் உபவஸத நாள்* கூட்ட நிகழ்ச்சிகளை யெல்லாம்

---

*உபவஸதம் - அமாவாசை, பௌர்ணமி, இரு பக்ஷ அட்டமி ஆகிய திதிகளில் பிக்ஷுக்கள் தாம் இருக்கும் பகுதியில், வயதால் மூதிர்ந்த ஒரு பிக்ஷுவின் அழைப்பின் பேரில் ஒன்று கூட வேண்டும். அந்தக் கூட்டத் தில் பிராதி மோக்ஷம் என்ற ஒழுக்க விதிகள் வாசிக்கப்படும். ஒழுக்கத் துக்கு மாறாக எந்த ஒரு பிக்ஷுவும் நடந்திருந்தால் குற்றத்தை ஒப்புக் கொண்டு பச்சாத்தாபப்படவேண்டும். குற்றம் செய்யாதவர்கள் மௌனமா யிருப்பார்கள். குற்றத்துக்குத் தண்டனை கிடையாது. பச்சாத்தாபப் படுவதே தண்டனை. மிகவும் பாரிய குற்றமா யிருந்தால் சங்கத்திலிருந்து விலக்கப்படுவர். ஆகியில் அமாவாசை, பௌர்ணமி ஆகிய இரண்டு நாட் களுமே யிருந்தன. பிற்காலத்தில் இருபக்க அட்டமி திதிகளையும் சேர்த் துக்கொண்டனர். இந்த உபவஸத பிராதிமோக்ஷ அனுஷ்டானங்கள் பிம்பி சார மன்னன் வேண்டுகோளின்படி முதன் முதல் புத்தர் ஏற்படுத்தி வைத்த நியமங்கள் என்று சொல்லப்படுகிறது. அக்காலத்தில் தீர்த்திகர் முதலிய பிராமண பரிவிராஜகர்கள் எட்டு நாட்களுக்கொரு தடவை ஒன்று கூடி விரத மனுஷ்டித்து வந்ததைக் கண்ட பிம்பிசாரன் அந்த வழக்கம் பிக்ஷு சங்கத்துக்கும் கட்டாய நியமமா யிருந்தால் நல்லது என்று சொல்ல, புத்த ரும் அவ்வாறே உபவஸதத்தையும் பிராதிமோக்ஷத்தையும் விதித்தார் என்பது வரலாறு.

நானே கொண்டு நடத்தப் போகிறேன். புத்தர் தான் நடத்த வேண்டு மென்ற நியதி யில்லை" யென்று அறிவித்தான். இந்தச் செய்தி புத்தருக்குத் தெரிய வந்ததும் அவர் குறுக்கிடவில்லை. "ஆனந்தா, நல்லவன் ஒருவன் நல்லன செய்வது மிக எளிது, ஆனால் தீயன செய்வது அரிது. தீயவன் ஒருவன் தீயன செய்வதும் எளிது, நல்லன செய்வது அரிது" என்றார். உபவஸத நாள் வந்தது. அந்தச் சபையிலே பிக்ஷுக்கள் ஆயிரக்கணக்கில் கூடியிருக்கும்போது தேவ தத்தன் எழுந்து, "விநயத்தில் சொல்லப்பட்ட ஒழுக்கங்களில் மிக முக்கியமான ஐந்து விதிகளைக் கடைப்பிடிக்க வேண்டு மென்று நான் வற்புறுத்துகிறேன். அதாவது, பிக்ஷுக்கள் தவ முறையில் மேலும் கண்டிப்பாக இருக்கவேண்டு மென்பதற்காகவே அந்த ஐந்து விதிகளும் வற்புறுத்தப்படுகின்றன. அவையாவன, பிக்ஷுக்கள் மாளிகைகள் போன்ற ஆசிரமங்களில் வசிக்கும் பழக்கத்தைத் தவிர்த்துத் காடுகளிலேயே உறைதல் வேண்டும்; பிச்சை யேற் றுண்பதே சிரமணர்களுக்கு விதிக்கப்பட்ட விதியாகையால், பிக்ஷுக்கள் வீடு வீடாகச் சென்று ஏற்றுக்கொள்ளும் பிச்சையையே உண்ணவேண்டு மல்லாமல், கிருகஸ்தர்கள் தம் வீடுகளுக்கு விருந் துக் கழைத்தால் அதை மறுத்துவிட வேண்டும்; குப்பை மேடுகளில் பொறுக்கி யெடுக்கும் கந்தைத் துணிகளைச் சேகரித்து அவற்றையே ஆடையாகத் தைத்துப் போர்த்துக்கொள்ள வேண்டும்; நமது பகவான்கூட முதலில் மயானத்தில் சேகரித்த கந்தைகளையே தைத்து ஆடையாக அணிந்ததை நாம் மறந்துவிடலாகாது. ஆகையால் கிருகஸ்தர்கள் தானமாகக் கொடுக்கும் புதிய ஆடைகளைப் பிக்ஷுக் கள் ஏற்றுக்கொள்ளலாகாது. மழை வெயிலிலிருந்து பாதுகாத்துக் கொள்ள பிக்ஷுக்கள் மரத்தின் அடி வேரையோ அல்லது குகை களையோ மாத்திரம் உபயோகிக்கவேண்டும், குடிசைகளில் வசிக்க லாகாது. பிக்ஷுக்கள் மாமிசத்தையும் மீனையும் உண்பதை அறவே தவிர்க்கவேண்டும். இந்த ஐந்து விதிகளையும் பிக்ஷுக்கள் கடைப் பிடிக்க வேண்டும் என்று நான் வற்புறுத்துகிறேன். இதற்குச் சம்மதமான சங்கத்தார் தமது கைகளைத் தூக்கிச் சம்மதத்தைத் தெரிவிக்கவும்" என்று திடீரென அபிப்பிராயம் கேட்டுவிட்டான்.

அந்தக் கூட்டத்தில் அன்றையத்தினம் புதிதாக வைசாலியி லிருந்து வந்து சங்கத்தில் சேர்ந்துகொண்ட இளம் பிக்ஷுக்கள் ஐந்நூறு பேர் இருந்தார்கள். அவர்கள் இந்தக் கடுமையான விதிகள் அனுஷ்டிக்கப்பட்டால்தான் பெருமை யென்றும் அவை விநயத்தில் சொல்லப்பட்டிருக்க வேண்டும் என்றும் நம்பி, தேவ தத்தன் கேள்விக் கிணங்கிச் சட்டென்று தமது கைகளை யுயர்த்திச்

சம்மதம் தெரிவித்தார்கள்! அதைக் கண்ட தேவதத்தன் அளவற்ற இறுமாப்புடன் சபையைப் பார்த்து, "பிக்ஷுக்களே! இத்தனை பேரும் சம்மதம் தெரிவிக்க ஒரு சில பிக்ஷுக்கள் மாத்திரம் மௌனமாயிருப்பது ஆச்சரியமாயிருக்கிறது. ஆகையால், கடும் தபசு முறைகளைக் கைக்கொண்டொழுகிச் சன்மார்க்கத்தைத் தேட விரும்பும் பிக்ஷுக்கள் என்னுடன் வரக்கடவீர்கள்" என்று சொல்லி அந்த ஐந்நூறு பிக்ஷுக்களையும் அழைத்துக்கொண்டு இராஜகிருகத்தை விட்டு கயா சீர்ஷத்துக்குப் போனன். அங்கே சில நாட்களிருந்து தருமோபதேசம் செய்துகொண்டிருந்தான்.

இராஜகிருகத்திலிருந்த பிக்ஷுக்களுக்கு இந்தச் சம்பவம் பெருங் கவலையைக் கொடுத்தது. தேவதத்தன் சாமானியமானவனல்லன்; ஆற்றலும் துணிவும் நிறைந்தவன். தான் பிடித்த காரியத்தைச் சாதிக்கும் வரை தளர மாட்டான். ஆகையால், பிக்ஷுக்களுக்குள் ஏற்பட்ட பிளவு நிரந்தரமாய் நீடித்து வளரக்கூடும் என்று அஞ்சினர்கள். உடனே பிரதான சீடர்களாகிய சாரீபுத்திரரும் மௌத்கல்யாயனரும் புத்தரிடம் சென்று, "ஐயனே! தேவதத்தன் ஐந்நூறு இளம் சீடர்களையும் அழைத்துக்கொண்டு கயாவுக்குப் போய் அங்கேயிருந்து புதிய சங்கம் அமைத்து நிர்வகித்து வருகிறான். இதனால் சங்கத்துக்கு ஆபத்து அதிகமாகப் போகிறது" என்று முறையிட்டார்கள். பகவான் அவர்கள் சொன்னதைக் கேட்டுவிட்டு, "நீங்கள் சொல்வதில் உண்மை யிருக்கிறது. தருமத்தையும் விநயத்தையும் இன்னும் நன்கறிந்து கொள்ளாத இளம் பிக்ஷுக்களின் உள்ளங்கள் பண்படுத்தப்பட வேண்டு மாகையால் நீவிர் இருவரும் சென்று எப்படியாவது அவர்களுக்கு நற்போதனை செய்து திருப்பி யழைத்து வாருங்கள்" என்று அறிவித்தார். அவ்வாறே அவ்விருவரும் இராஜகிருகத்திலிருந்து கயாவுக்குச் சென்றார்கள். இராஜகிருகத்திலுள்ளவர்கள் அவர்கள் என்ன நோக்கத்தோடு செல்கிறார்கள் என்பதை யறியாமல், மேலும் அதிகமான பிக்ஷுக்கள் புத்தரைத் துறந்து தேவதத்தன் சங்கத்தில் சேரப் புறப்பட்டு விட்டார்கள் என்று பேசிக்கொண்டனர்.

கயாசீர்ஷம் என்ற குன்றின்மேலே சங்கத்தைக் கூட்டி வைத்துக் கொண்டு தேவதத்தன் இரவும் பகலும் ஓயாது உபதேசம் செய்து கொண்டிருந்தான். அவனுடைய பேச்சுச் சாதுரியத்தையும் தருமசூத்திர விளக்கங்களையும் கேட்ட பிக்ஷுக்கள் மெய்ம்மறந்து கேட்டுக் கொண்டிருந்தனர். அப்போது சாரீபுத்திரரும் மௌத்கல்யாயனரும் அந்தக் கூட்டத்தை நெருங்கிவரக் கண்ட தேவதத்தன், "உண்மையான தருமத்தை யெடுத்துச் சொல்பவர்களுக்கு எக்காலத்திலும்

மதிப்புண்டு. அதோ வருகிறார்கள் சாரீபுத்திரரும் மௌத்கல்யாயனரும்! புத்தரின் பிரதம சீடர்களா யிருந்த அவர்களே இப்போது எது உண்மை யென்பதை யுணர்ந்து இங்கே வருகிறார்கள்" என்று சொல்லிப் பெருமிதப்பட்டான். ஆனால், விவேகியான கோகாலிகன் தேவதத்தனைப் பார்த்து, "தேவதத்த தேரரே! வெளிப்பார்வையில் மாத்திரம் மயங்கிவிட வேண்டாம். அந்த இருவரும் இங்கே வரும் நோக்கம் வேறு. ஏதோ சூழ்ச்சி நடக்கப் போகிற தென்பதில் சந்தேக மில்லை. ஆகையால் நாம் மிகவும் எச்சரிக்கையா யிருக்க வேண்டும்" என்று புத்தி சொன்னான். தேவதத்தன் அதைக் கேளா மல், "அவர்கள் எனது உபதேசங்களில் விருப்புக் கொண்டே வரு கிறார்க ளாகையால் அவர்களையும் இங்கே வரவேற்போம்" என்று சொல்லிச் சாரீபுத்திரரைப் பார்த்து, "சாரீபுத்திரரே, வருக! இதோ இந்த ஆசனத்தில் அமர வேண்டும்," என்று தனக்குப் பக்கத்தி லிருந்த ஓர் ஆசனத்தைச் சுட்டிக் காண்பித்தான். சாரீபுத்திரர் தமக்கு அந்த ஆசனம் அவசிய மில்லை யென்று சொல்லி வேறோரிடத் தில் அடக்கமாக உட்கார்ந்துகொண்டார்.

அன்றிரவு நெடு நேரமாக உபந்யாசம் செய்துகொண் டிருந்த தேவதத்தன் தளர்ந்து போனான். தூக்கம் அவன் கண்களைச் சொரு கியது. அந்தச் சமயத்தில் தேவதத்தன் சங்கத்தைப் பார்த்து, "பிக்ஷுக்களே, நமது அன்பிற்குரிய சாரீபுத்திரர் இப்போது நம்மிடையே வந்திருக்கிறார். அவர் உங்களுக்குச் சிறிது நேரம் உப தேசம் செய்வார்" என்று சொல்லிச் சாரீபுத்திரரை வேண்டிக் கொண்டான். சாரீபுத்திரர் இப்படியான ஒரு சந்தர்ப்பத்தையே எதிர்பார்த்திருந்தா ராகையால் உடனே எழுந்து உபதேசம் செய்ய ஆரம்பித்தார். ஒன்றன்பின் ஒன்றாகத் தரும சூத்திரங்களை யெடுத்து ஆராய்ந்து பொருள் சொல்லி விளக்கங்கள் கொடுத்து வரும்போது தேவதத்தன் தன்னையு மறியாமல் நித்திராதேவிக்கு ஆட்பட்டு விட்டதை அவர் அறிந்தார். அதுவே தக்க சமயம் என்பதை யுணர்ந்து சாரீபுத்திரர் பௌத்தத்தின் உண்மையான தத்துவங்களை யெடுத்துச் சொல்லி, தேவதத்தன் கொள்கைகளைக் கண்டித்துப் பேசி, இளம் பிக்ஷுக்கள் தவறான, முறைகேடான வழியில் செல்வது தீமையை விளைக்கும் என்று நயமாக எடுத்து விளக்கினர். அதன் பின் மௌத்கல்யாயனரும் அவ்வாறே பேசவும், அங்கிருந்த பிக்ஷுக் கள் மனம் மாறிவிட்டது. தேவதத்தன் ஆழ்ந்த நித்திரையி லிருக்கும் போதே சாரீபுத்திரரும் மௌத்கல்யாயனரும் அங்கிருந்து புறப் பட்டுச் செல்ல அங்கிருந்த கூட்டம் முழுவதும் மனம் மாறி அந்த இரு தலைவர்களைப் பின் தொடர்ந்து சென்றது! கோகாலிகன் மாத்திரம்

அங்கேயே தங்கி யிருந்து தேவதத்தனை யெழுப்பி, "நான் முன்னரே எச்சரிக்கை செய்தும் தாங்கள் கேட்கவில்லை. இப்போது நடந்ததைப் பார்த்தீர்களா?" என்று சொல்லி வருந்தினன், தேவதத்தன் இடி விழுந்தவன் போல் துடித்தான். புத்தரைக் கொல்வதை விட வேறு மார்க்க மில்லை என்ற தீர்மானத்தில் உறுதி கொண்டான்.

இருபத்தைந்தாம் அத்தியாயம்

வினையும் விளைவும்

இராஜகிருகத்திலே சில நாட்கள் தங்கி யிருந்த புத்தருக்கு முதுமைப் பருவத் தளர்ச்சிகள் காணப்பட்டன. தேவதத்தனின் தொல்லைகளும் அவரை வாட்டின. அத்துடன், சங்கத்தில் சேர்ந்திருந்த பிம்பிசார னுக்கு அவன் மகன் அஜாதசத்துரு செய்து வரும் கொடுமைகள் அவரைச் சஞ்சலத்தில் ஆழ்த்தின. நாளுக்கு நாள் அஜாத சத்துரு தன் தந்தையை வதைத்து வரலானான். சிறைக் கூடத்திலிருந்த தந்தைக்கு உணவு அனுப்புவதையே நிறுத்திவிட்டான். இதை யறிந்த தாயானவள் இரகசியமாகச் சில வேளைகளில் பிம்பிசார னுக்கு ஏதாவது உணவு அனுப்புவாள். அதையும் எப்படியோ கண்டு பிடித்து அஜாதசத்துரு, சிறைக்கூடம் சென்று பிம்பிசாரனைப் பார்த்து வருவது கூடாது என்று தாயாரையும் தடுத்து நிறுத்தி விட்டான். பட்டினியால் வாடிய பிம்பிசாரன் புத்தரே கதி யென்று நம்பிச் சிறைக் கூடத்திலிருந்த ஒரு சாளரம் வழியாகக் கிருத்திரகூட மலை யுச்சியில் பகவான் அமர்ந்து உபதேசம் செய்யும் காட்சியைப் பார்த்து அந்த உணர்ச்சியின் பலத்தைக் கொண்டே சில நாள் உயிரைக் காப்பாற்றி வந்தான். பிம்பிசாரன் இன்னும் இறக்க வில்லை யென்று கண்ட அந்த இரக்கமற்ற கிராதகன் ஒரு நாள் சிறைக்கூடம் சென்று பார்த்தபோது, கிருத்திர கூடத்திலேயே கண்களைப் பதித்த வண்ணம் பிம்பிசாரன் தியானத்தி லுட்கார்ந் திருப்பதைக் கண்டு, தந்தைக்குத் தஞ்ச மளித்த அந்தச் சாளரத்தை யும் அடைத்துவிட்டான். முடிவில், பிம்பிசாரன் புத்தர் தியான மாகவே அந்தச் சிறைக் கூடத்தில் உயிரை விட்டான்.

மகதமன்னன் பிம்பிசாரன் கதி யிப்படி யாயிற்று. அஜாதசத்துரு பித்ருஹத்தி தோஷத்தைத் தேடிக்கொண்டான். அவன் தோழன் தேவதத்தன் குருஹத்தியைத் தேடும்போது அவன் வினை குறுக்கிட்டது.

கிருத்திரகூட மலையி லிருந்து ஒரு நாள் புத்தர் இறங்கி, அம்மலைக்கு அருகிலுள்ள பள்ளத்தாக்கிலே நடந்துகொண்டிருக் கையில் மலையுச்சியில் நின்ற தேவதத்தன் அங்கிருந்த ஒரு பெரிய பாறையை உருட்டிக் கீழே சாய்த்துவிட்டான். புத்தரின் தலையிலே விழவேண்டிய அந்தப் பாறை தெய்வாதீனமாகச் சரிந்து அவர்

பக்கத்தில் விழுந்து காற் பெருவிரல் ஒன்றில் மாத்திரம் ஒரு சிறிய காயமுண்டாக்கிவிட்டுப் புரண்டது. இதைப் பார்த்திருந்த சீடர்கள் திகைத்தனர்.

தேவதத்தன் சூழ்ச்சிகளை யெல்லாம் ஒன்றன்பின் னொன்றுகச் சகித்துக்கொண்டு வந்த புத்தர் இந்தச் சம்பவத்துக்குப் பின்பும் பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை. அண்ணாந்து பார்த்தார். தேவதத்தன் அங்கே நின்றான். "தேவதத்தா! ததாகதரின் உயிருக்கே உலை வைக்கத் தூண்டிய உன் ஊழ்வினை இன்னுமா உன்னைவிட்டு நீங்கவில்லை? சங்கத்தைப் பிரித்தாய். ததாகதரின் உயிரைக் கொல்லப் பலதடவை எத்தனித்தாய். ஆனால், ததாகதரின் உயிர் உன் கையில் இல்லை யென்பதை நீ உணரவில்லை. நீ தான் என்ன செய்வாய்? மீளா நரகில் நீ இன்னும் அழுந்திக் கிடக்க வேண்டும் என்ற கர்மம் உன்னை விட்டபாடில்லை. இப்போதாவது உண்மையை யுணர்ந்து கொள்," என்று சொல்லிவிட்டு மெள்ள நடந்து மலை யேறினர்.

கிருத்திரகூடம் ஏறும் வழியிலே பிம்பிசார மன்னனின் அரண்மனை வைத்தியனை ஜீவகன் இருப்பிட மிருந்தது. அதற்குப் பக்கத்தில் புத்தரின் வசதிக்காக அந்தப் பெருந்தகை ஜீவகாராமம் என்ற ஆசிரமத்தை அமைத்துக் கொடுத்திருந்தான். புத்தர் காலிலே காயம் பட்டு அந்த இடத்தை யடைந்ததும் ஜீவகன் அன்போடு அவரை யேற்றுத் தன் வீட்டிலேயே சில நாள் தங்கச் செய்து சிகிச்சை செய்தனுப்பினன்.

புத்தரைக் கொல்லப் பாறையை யுருட்டிவிட்டான் தேவதத்தன் என்ற செய்தி ஊர் முழுவதும் பரவியது. நகரத்திலுள்ள மக்கள் தேவதத்தனைக் கண்டால் காறி யுமிழ்ந்து, பக்கலிலும் வரவொட்டாமல் துரத்தினர். அவனோடு சேர்ந்திருந்த பிக்ஷுக்களும் நம்பிக்கையை யிழந்து வெறுப்படைந்து பழையபடி போய்ப் புத்த சங்கத்தில் சேர்ந்துகொண்டனர். நிர்க்கதியாகிவிட்ட தேவதத்தன் வலியிழந்து நோயுற்று அலைந்து திரிந்து, ஈற்றில் எங்கோ வோரிடத்தில் விழுந்து மாண்டான். அவனைப் பூமியே விழுங்கி விட்டது என்று சொல்கிறது புராணம்.

ஏசு கிறிஸ்து நாதருக்கு யூதாஸ் என்ற ஒரு சீடன் அகப்பட்டது போலப் புத்தருக்கு வந்து வாய்த்தான் தேவதத்தன். பௌத்தமத ஆராய்ச்சியாளரின் கொள்கைப்படி தேவதத்தனைப் பற்றிய கதை யெல்லாவற்றையும் சரித்திர வுண்மையானவை யென்று கொள்ள லாகாது. தேவதத்தனைப்பற்றிச் சூட்டப்பட்ட கதைகளெல்லாம் புத்த ரின் மேம்பாட்டைச் சிறப்பிக்க எழுந்தவை. ஆயினும், தேவதத்தன்

காலத்திலே பௌத்த சங்கத்தில் பிளவுகள் ஏற்பட்டதைப்பற்றிச் சந்தேகமில்லை. அக்காலத்திருந்த மற்றைய சிராவக சங்கங்களில் லௌகிக காரியங்கள் பலவற்றை விலக்கி, ஒறுப்பான வாழ்க்கை யிருந்து வர, பௌத்த பிக்ஷுக்கள் மிதமான ஒழுக்கம் என்ற போர்வையில் பல அமிதமான காரியங்களில் ஈடுபட்டிருந்தது உண்மையே. அதனால், தேவதத்தன் முதலிய கடும் விரதவாதிகள் சட்டங்களை உறுதியாக்கவேண்டு மென்று அடிக்கடி வற்புறுத்தி வந்திருந்தால் அதில் ஆச்சரிய மொன்று மில்லை. அதனால் சங்கத்தில் பொறுமையும் பூசலும் வளரலாயின. தேவதத்தனுக் கெதிராகப் பல குற்றச் சாட்டுக்கள் தோன்றி யிருக்கலாம். சில ஆண்டுகளுக்கு முன்பு, இலங்கையில் வசிக்கும் சிங்கள பிக்ஷு சங்கத்தில் ஒரு புதிய பிளவு தோன்றியது. தாபஸ பிக்ஷுக்கள் என்று தம்மைக் சொல்லிக் கொண்டு ஊரூராகக் காடு காடாகத்திரிந்த இப் புதிய கூட்டத்தினர், மற்றைய சங்கத்தாரின் அமிதமான வாழ்க்கையைக் கண்டித்து, உண்மையான பரி விராஜகர்கள் எப்படி நடந்து கொள்ளவேண்டு மென்று ஒரு புதிய துறவு முறையில் நடந்து காட்டினர். வழி தெருவிலே கிடக்கும் கந்தைத் துணிகளையே சேகரித்து ஆடையாகப் போர்த்துக்கொள்வது, காட்டிலே அல்லது மயானத்திலேதான் படுத்துறங்குவது, மலம் மூத்திரம் உட்பட எது கிடைத்தாலும் ஒரு வேளைப் பசியை ஆற்றிக்கொள்வது, என்று இன்னோரன்ன கடுமையான தவ முறைகளே பௌத்த பிக்ஷுக்களுக்குரிய நியம மென அவர்கள் சில காலம் நடந்து வந்தார்கள். ஆனால், மற்றைய பிக்ஷுக்கள் இதைப் பார்த்துச் சும்மா விடவில்லை. எதிர்ப்பிரசாரம் செய்தார்கள். தொல்லைகள் அதிகரித்தன. செல்வாக்குடைய மற்றைய சங்கத் தவர்களை ஆதரித்த பொது மக்களே தாபஸ பிக்ஷுக்களை வெறுத் தொதுக்கி, ஈற்றில் அந்தக் கூட்டத்தை நிர்மூலமாக்கி விட்டனர்.

★

நாட்கள் சில சென்றன. தேவதத்தன் முடிவையும் மக்கள் மறந்து விட்டனர். பிம்பிசாரனையும் மறந்து போயினர். பௌத்த சங்கம் முன்போல் ஒரே வழியில் சென்று கொண்டிருந்தது.

ஆனால் ஒரு ஜீவன் மாத்திரம் இன்னும் நிலை கொள்ளாமல் துடித்துக்கொண் டிருந்தது. பிறந்த நாள் முதல் கேட்டையே செய்து வந்த அஜாதசத்துரு மாத்திரம் உள்ளத்தில் கவலையுடன் அளவற்ற கஷ்டப்பட்டான். மனச்சாட்சி அவன் இதயத்தை யறுத்தது. தந்தையை வதைத்த கொடுமையை அவனால் மறக்க முடியவில்லை. பச்சாத்தாபம் அவனை வாட்டத் தொடங்கியது.

ஒரு நாளிரவு பூரணை நிலவு ஒளிபரப்பிக்கொண் டிருக்கத் தனது முக்கியமான மந்திரிகளும் அரண்மனை வைத்தியனை ஜீவகனும் சூழ்தர அஜாதசத்துரு அரண்மனை நிலாமுற்றத்தி லுட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தான். அப்போது அவன் அவர்களைப் பார்த்து, "இந்தச் சந்திரன் எவ்வளவு சாந்தியுடன் விளங்குகிறது! நிலவும் குளிர்ச்சி தருகிறது. இம்மாதிரியே நமது உள்ளமும் ஏன் சாந்தியா யிருப்பதில்லை? இராஜகிருகத்தில் சிரமண மதங்கள் பல விருக் கின்றன. அதில் பூரண ஞானமுள்ள சிரமணர்களு மிருக்கிறார்க ளென்று பலர் பேசிக்கொள்ளுகின்றனர். மனத்துக்குச் சாந்தியை எப்படித் தேடிக்கொள்வ தென்பதை இலகுவான முறையில் எந்தச் சிரமணர் தெளிவாக எடுத்துச் சொல்லக்கூடும் என்பதை யாராவது சொல்லுவீர்களா?" என்று கேட்டான். உடனே ஒரு மந்திரி, "பூரண காசியபர் இருக்கிறார். அவரால் முடியாததை வேறெவரும் செய்ய முடியாது என்ற திறமையுள்ளவர். மன்னர் விரும்பினால் போய் அவரைப் பார்க்கலாம்," என்றான்.

இன்னொரு மந்திரி, மக்கலி கோசலன் என்ற சிரமணரைக் குறிப்பிட்டான். வேறொருவன் அஜிதகேசகம்பலன் என்ற பெரியவரைக் குறிப்பிட்டான். வேறொருவன் பகுத கச்சாயனனையும், மற்றொருவன் சஞ்சயனையும், இன்னுமொருவன் நிகண்டநாத புத்திரரையும் குறிப்பிட்டார்கள். ஒவ்வொருவர் சொன்னதையும் கேட்டுக்கொண்டிருந்த அஜாத சத்துரு, "இவர்களைப்பற்றி யெல்லாம் நான் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால், அவர்கள் சாந்தியைப் பற்றிய மருந்து இன்னதுதான் என்று தெளிவாகச் சொல்லவில்லை," என்று கூறிவிட்டு, மௌனமா யுட்கார்ந்திருந்த வைத்தியர் ஜீவகனைப் பார்த்து, "ஜீவகரே! தாங்கள் இந்தச் சமயத்தில் ஒன்றும் பேசாமல் மௌனமா யிருக்கிறீர்கள். உங்களுடைய கருத்தென்ன?" என்று கேட்டான்.

ஜீவகன் அடக்கமாக, "மன்னவ! புத்தர் கௌதமரைப் பற்றித் தாங்கள் அறியாதவர்களா? அவர் ஒருவர்தான் சாந்தி யென்றால் என்ன என்பதைப்பற்றி விளக்கம் தருவார். இப்பொழுது கூட அவர் என் வீட்டின் பக்கத்திலுள்ள ஆம்ரவனத்திலேயே தங்கியுள்ளார். அவரிடம் போனால் தங்கள் உள்ளத்துக்குச் சாந்தி கிடைக்கு மென்பதில் சந்தேகமில்லை. ஆனால், தங்கள் சித்த மெப்படியோ நான் அறியேன்" என்றான்.

சிலகாலமாகவே போதி வேந்தரின் தரிசனத்தைப் பெறவேண்டு மென்றுதான் அஜாதசத்துரு விரும்பியிருந்தான். ஆயினும், அவன் தற்பெருமை அந்த வேட்கையை வெளிக்காட்டிக்கொள்ள விடவில்லை.

ஜீவகன் சொன்ன பின் அஜாதசத்துரு, "அதுவும் ஒரு யோசனை தான்" என்று பதிலளித்ததும் ஜீவகன் பரம சந்தோஷப்பட்டான்.

சற்று வேளையில் அஜாதசத்துருவும் ஜீவகனும் மற்றும் சிலரும் வனத்தை நோக்கிப் புறப்பட்டனர். மாந்தோப்பில் நுழையும் போதே அஜாதசத்துருவின் நெஞ்சம் அச்சமுற்றுக் குறு குறு வென்றது. ஒருவேளை ஜீவகன், தனது முந்திய பாபச் செயல்களை மனத்தில் வைத்துக்கொண்டு சூழ்ச்சியால் இப்படி அழைத்துச் சென்று ஏதாவது தீங்கு விளைக்கத் துணிந்தானே என்றும் மன்ன னுக்குச் சந்தேக மேற்பட்டது. திகிலுடன், "எங்கே போகிறோம்?" என்று வாய்விட்டுக் கேட்டுவிட்டான் அவன். "ஒரே அமைதியும் பயங்கரமும் நிறைந்த தோப்பா யிருக்கிறது. புத்தர் இருக்கை யென்றால் அவரது சீடர்க ளெங்கே? ஜீவகரே! என்னை யேமாற்றி யழைத்து வந்து விட்டீரோ?" என்று கேட்டான்.

ஜீவகன் அரசனைப் பார்த்து, "மன்னவா! அத்தகைய மனப் பான்மை எனக்கில்லை. சாந்தியை விரும்பி வந்த தங்களுக்கு நான் அந்தச் சாந்த மூர்த்தியைக் காண்பிக்கப் போகிறேன். மனத்திலே அச்சம் கொள்ளவேண்டிய அவசியமில்லை. தைரியமா யிருங்கள். அதோ பாருங்கள் தோப்புக்கூடாக ஒரு சிறிய தீபவொளியும் ஒரு மண்டபமும் தெரிகிறதே. அந்த மண்டபத்தின் தூண் ஒன்றிலே சாய்ந்துகொண்டு கிழக்கு நோக்கி யுட்கார்ந்திருக்கிறார் தாங்கள் காணவேண்டிய சாந்த மூர்த்தி" என்றான்.

அஜாதசத்துரு அந்தக் காட்சியைக் கண்டதும் ஸ்தம்பித்து நின்றான். அவன் உடல் இயங்கவில்லை. உணர்வு மயங்கியது. சற்று நேரம் அப்படியே நின்றவன் ஜீவகனைத் பார்த்து, "வைத்தி யரே! எனது புதல்வன் இம்மாதிரியான சாந்தியைப் பெறுவானே?" என்று கேட்டான். ஜீவகன் விடையாக, "அரசே! தாங்கள் உயிருக் குயிராக நேசிக்கும் தங்கள் குமாரனைப்பற்றி இந்தச் சமயத்தில் சிந்திப்பதற்குக் காரணம் அறிவேன். அவன் உண்மையில் சாந்தி யுடன் வளருவான் என்பதில் சந்தேகம் கொள்ளவேண்டாம். அவன் அன்பின் வழி நடப்பவன்", என்று சொல்லி அஜாதசத்துருவின் கலங்கிய நெஞ்சத்துக்குத் தேறுதல் கூறினான்.

ஈற்றில் அவர்கள் புத்தர் முன்னிலையில் வந்து நின்றனர். சாந்தமே உருவாய் வீற்றிருந்த அந்தப் பெருமானின் சமுகத்தில் அஜாதசத்துரு வந்து தலைவணங்கி நின்றான். அவன் வாய் பேச வில்லை. அப்படியே கண்கொட்டாமல் சாந்த மூர்த்தியின் அருளைப் பருகினான். பின்னர் அவன் உணர்வு பெற்றதும் புத்த பகவானைப் பார்த்துக் கேட்டான்: "அருளாளரே! உலகத்தில் ஒவ்வொரு தொழி

லிலும் ஈடுபட்டுள்ளவர்கள் தங்கள் தொழிலின் பயனை இதே வாழ்க்கையில் பெறுகிறார்கள். நாம் அதை நேரில் காண்கிறோம். ஆனால், சிரமண சங்கத்தில் சேர்ந்துள்ள துறவிகள் இம்மையில் என்ன பலன் பெறுகிறார்கள் என்று நான் தெரிந்து கொள்ளலாமா?"

புத்தர் புன்னகை புரிந்தார். தமக்கு முன் வீற்றிருந்த பிக்ஷுக்கள் ஆனந்தமாய், அமைதியாய் உட்கார்ந்திருப்பதி லிருந்து அவர்கள் பெற்ற பலனை அரசன் தெரிந்துகொண்டும் அக்கேள்வியைக் கேட்டதன் பொருளைப் புரிந்து புத்தர் அரசனைப் பார்த்துச் சொன்னார்: "மன்னவ! உன்னுடைய ஆணையில் பல தொழிலாளர் இருக்கிறார்கள். குதிரைப் பாகன், தேர்ப் பாகன். மற்றும் வேலைக்காரர் பலர் உளர். அவர்களில் ஒருவன் தனது புலன்களுக்கு வேண்டிய இன்பங்களை யெல்லாம் மறந்து உண்ண உணவும் இருக்க வீடும் மாத்திரம் போது மென்றிருப்பானையின், அதுவே போதும் என்ற மனத்துடன் திருப்திப்படுவானையின், அந்த இரண்டும் கிடைக்கப் பெற்றால் மீண்டும் உன்னிடம் குதிரைப் பாகனைகவோ தேர்ப்பாகனைகவோ தொழில் பார்க்க விரும்புவானை?"

அஜாதசத்துரு பகவானைப் பார்த்து, "அவன் விரும்பமாட்டான். முன்பு அடிமையா யிருந்தவன் இப்போது சுயாதீனமாக வாழ்கிறான் என்று அவனை யாவரும் மதிப்பார்கள்", என்றான்.

"சரி, அப்படி ஒருவன் தன் சொந்தத்தில் தனது நிலத்தை யுழுது பயிரிட்டு மற்றவர்களை யெதிர்பார்க்காமல் வாழ்பவனை யிருந்துவிட்டுப் பின், இல்லறத்தைத் துறந்து ஒன்றுமே தேவையில்லை யென்று துறவை மேற் கொண்டால், அந்த இல்வாழ் வாழ்க்கையில் திரும்பவும் வர விரும்புவானை?"

"திரும்பமாட்டான். மக்களின் மதிப்பை மேலும் அவன் பெற்றுக் கொள்வானைகையால் அவன் இல்வாழ் வாழ்க்கையைத் திரும்பவும் பெறவேண்டிய அவசியமில்லை. ஆனால், இத்தகைய மதிப்பும் மரியாதையும் பெறுவதைத் தவிர வேறு பலனை அவன் பெறுவானை? அவனுக்குச் சாந்தி கிடைக்குமா?"

"மன்னவ! எல்லாவற்றையும் விட மேலான பலன் அவனுக்குக் கிடைக்கும். விருப்பு வெறுப்பு என்பவைகளை முதலில் எவன் தன் வசமிருந்து அகற்றி வாழ்கிறானே அவன்தான் சாந்தியைப் பெறுவான். அங்ஙனம் சாந்தியைப் பெற்றவன் வற்றாத இன்பத்தைப் பெறுவான். அரசனே! பிற உயிர்களையும் தன் னுயிர் போல் பேணி இரக்கமும் அன்பும் கருணையும் கொள்வதே முதலில் கற்றுக் கொள்ளவேண்டிய பாடம். அப்போது நீ தேடி வந்த சாந்தி உனக்குக் கிடைக்கும்" என்றார் புத்தர்.

கேட்டுக்கொண்டே யிருந்த அஜாதசத்துருவின் உள்ளத்தில் பச்சாத்தாபம் பெருகியது. தான் செய்த கொடுமைகளை யெல்லாம் எண்ணிப்பார்த்தான். இரு கண்களிலும் நீர் பெருகியது. புத்தரைப் பார்த்து அவன், "கருணைமூர்த்தி! நான் தங்கள் தருமத்தை யேற்றுக் கொள்ள விரும்புகிறேன். ஆனால், அதற்கு நான் அருகதை யுள்ளவனா? நான் செய்த பாவங்களைப்பற்றித் தாங்கள் அறிவீர்கள். அவற்றுக்காக நான் பச்சாத்தாபப்படுகிறேன். எனக்கு மீட்சி யுண்டா?" என்று கேட்டான்.

"நீ உன் செயலை நினைத்து அதற்காக வருந்துவாயானால் அதுவே போதும் உனக்குச் சாந்தி கிடைக்க. வருங்காலத்திலும் அதே விதமாக ஆசையை அடக்கி நடந்து கொள்" என்றார் புத்தர்.*

அஜாதசத்துரு அவ்வளவில் திரும்பினான். அவன் நெஞ்சத்தி லிருந்த ஒரு பெரும் பாரம் நீங்கியது. ஆனால், அவன் உள்ளொளி மாத்திரம் பிறக்கவில்லை. ஆசை யென்ற தளையி லிருந்து அவன் விடுபட்டால்தானே!

---

* இந்தச் சந்தர்ப்பத்தில்தான் புத்தர் திருவாய் மொழிந்த "சிராமண்ய பல சூத்திரம்" என்ற புகழ் பெற்ற உபதேசம் செய்யப்பட்ட தென்று பௌத்த நூல்கள் கூறுகின்றன. இந்தச் சூத்திரம் திரிபிடகங்களில் ஒன்றாகிய சூத்த பிடகத்தில் (சூத்ரபிடகம்) தீர்க்க நிகாயத்தில் காணப் படுகிறது. பௌத்த பிக்ஷுவாயிருப்பதிலுள்ள நன்மைகளையும், பெறக் கூடிய பலன்களையும் இதிலே புத்தர் தெளிவாக விளக்கியுள்ளார். ஒருவன் அடிமையா யிருந்தா லென்ன, கிருகஸ்தனா யிருந்தாலென்ன, துறவியான பின்னர் பெறும் பலன்களைச் சொல்லிவிட்டு, அவர், ஒரு புத்தர் தோன்றிய பின்னர் நிகழும் நிகழ்ச்சிகளைப் பற்றிச் சொல்லுகிறார். முதலில் ஒருவன் புத்தரிடம் தருமத்தைக் கேட்கிறான்; அத் தருமத்தைத் தோற்றுவித்த புத்தரில் நம்பிக்கை கொள்ளுகின்றான்; தன் இல் வாழ்வில் சன்மார்க்கம் முடியா தென்று கண்டு துறவியாகிறான்; நல்லொழுக்க மாகிய சீலத்தை மேற்கொண்டு, புலன்களின் அவாவை யறுத்து, சித்தத்தை யொருவழிப் படுத்தி முத்தி யின்பம் பெறுகிறான். இவற்றின் விளக்க மெல்லாம் சிராமண்ய பல சூத்திரத்தில் காணப்படுகின்றன.

இருபத்தாரும் அத்தியாயம்

தனகர்த்தர் பிரிவு

புத்தர் பரிநிருவாண மடைவதற்கு முன்னர் இறுதித் தடவையாக இராஜகிருகத்தில் தரித்திருந்த போதுதான் அவரது பிரதம சீடர்களான சாரீபுத்திரரும் மௌத்கல்யாயனரும் மரணமடைந்தனர் என்று சொல்லப்படுகிறது. சாரீபுத்திரர் இறந்து இரண்டு வாரம் கழித்து மௌத்கல்யாயனர் காலமானர். இவர்களில் மௌத்கல்யாயனரின் மரணம் ஏதோ சதிச்செயலின் காரணமாக ஏற்பட்டதென்றும் சொல்லப்படுகிறது. பிற மதத்தவர்கள் தூண்டுதலால் அவர் கொல்லப்பட்டார் என்பது கதை.

இராஜகிருகத்திலே மௌத்கல்யாயனர் ரிஷிகிரி என்ற குன்றில் அப்போது வசித்து வந்தார். அவர் இருத்தி ஆற்றலை உபயோகித்துத் தேவர் உலகு சென்று, அங்கே முன்பு புத்தரின் சீடர்களாயிருந்து இறந்த பின் போய் வசிப்பவர்களுக்கும், சங்கத்தின் எதிரிகளாயிருந்து நரகலோகம் சென்றிருக்கும் பழைய சீடர்களுக்கும் அடிக்கடி உபதேசம் செய்துவிட்டுத் திரும்புவார். இவ்வாறாக இருத்தி ஆற்றலில் பெரு மதிப்புப் பெற்ற மௌத்கல்யாயனர் தமது செல்வாக்குக்கு இடையூறாக நிற்கிறார் என்று கண்ட பிற மதத் துறவிகளான எதிரிகள் ஒன்று கூடி, மௌத்கல்யாயனரைக் கொன்றுவிடத் திட்டம் போட்டனர். ஆயிரம் பொற்காசுகளை ஒரு கொலையாளியிடம் லஞ்சமாகக் கொடுத்து அவனைத் தூண்டி மௌத்கல்யாயனரை ஒழித்துவிட வேண்டுமென்று கேட்டுக் கொண்டனர். அந்தப் பாதகனும் இணங்கி மௌத்கல்யாயனரிடம் வந்தான். அவன் நோக்கத்தை யறிந்த மௌத்கல்யாயனர் தமது இருத்தி ஆற்றலால் ஆகாயத்தில் உயரக் கிளம்பி நின்றார். ஆறு நாட்கள் இவ்வாறு கொலைஞன் எத்தனித்த போதும் மௌத்கல்யாயனர் ஆறு தடவையும் ஆகாயத்தில் எழுந்து நின்றார். ஆனால், ஏழாவது தடவை அவரால் முடியவில்லை. பழைய ஊழ்வினை அவரைத் தடுத்துவிட்டது. கொலைஞன் வாளுக்கு இரையாகி மாண்டார்.

இந்த ஊழ்வினையைப் பற்றியும் ஒரு கதை சொல்லப்படுகிறது. முன்னொரு பிறவியில் மௌத்கல்யாயனர் தமது பெற்றோர் இருவரையும் கொல்ல முயன்றாராம். கண் பார்வை யிழந்த அவர்களிருவரை

யும் எங்கோ ஓரிடத்துக்கு அழைத்துச் செல்வதுபோல் கூட்டிக் கொண்டு போய் காட்டிலே விட்டுவிட்டு, யாரோ திருடர் கூட்டம் வருவது போல் சப்தங்களை யுண்டாக்கிவிட்டுத் தம் பெற்ரோரை நையப் புடைத்தார். அவர்கள் கண் பார்வையற்றவர்க ளாகையால் திருடர்தான் தம்மை வதைக்கிறார்கள் என்று கதறவும், மௌத்கல்யா யனர் அந்தச் சமயத்திலும் அவர்கள் தம்மைப் பற்றிக் குறைவாக எண்ணவில்லை யென்று இரங்கி, திருடரை விரட்டிக் காப்பாற்றுவது போல் நடித்து வீட்டுக் கழைத்து வந்தார் என்பது கதை. அந்தக் கர்மம்தான் இப்போது அவரை ஆகாயத்தில் கிளம்பவிடாது சக்தி யைத் தடுத்தது என்று சொல்லப்படுகிறது: மௌத்கல்யாயனருக்கு வேணு வனத்திலேயே ஈமக்கிரியைகள் நடந்து அவரது அஸ்திகள் அங்கேயே அடக்கம் செய்யப்பட்டன.

சாரீபுத்திரர் இவ்வித கதிக்கு ஆளாகவில்லை. சாந்தமும் அடக்க மும் தரும உரைகளில் பாண்டித்தியமும் பெற்ற சாரீபுத்திரருக்குப் பகைவர்க ளிருக்கவில்லை. பிறமதத்தினரும் சாரீபுத்திரரின் விவே கத்தை மெச்சினர்களல்லாமல் அவரை வெறுக்கவில்லை. சாரீபுத்திரர் இராஜகிருகத்துக்குப் பக்கத்திலுள்ள நாலந்தையைச் சேர்ந்தவர். தமக்கு மரண காலம் கிட்டிவிட்ட தென்பதை யுணர்ந்ததும் அவர் தமது தாயாரின் பக்கத்தி லிருக்கவேண்டு மென்றும், தாயாருக்கு உபதேசம் செய்யவேண்டு மென்றும் தமது விருப்பத்தைத் தெரிவித் தார். தாயார் ரூபசாரி என்பவள் அந்தணப் பெண். நிரம்பிய கல்வி கேள்விகள் பெற்றிருந்தவள். அந்தக் காலத்திலே நாலந்தையில் பெரும் புலவர்கள் வசித்து வந்தார்கள். ஆகையால் நாலந்தை வாசிகள் எல்லாருமே மற்றையவர்களைப் போலல்லாமல் சிறந்த அறிஞர்களாக விளங்கினர். தனது தாயார் பௌத்தத்தில் நம் பிக்கை கொள்ளவில்லை யென்பதை யுணர்ந்த சாரீபுத்திரர் தமது இறுதிக் காலத்திலாவது தம்மை யேற்றுக்கொண்டு தாயார் தமது உபதேசத்தையு மேற்றுக்கொள்வாள் என்று நம்பியதில் ஆச் சரியமில்லை.

சாரீபுத்திரர் பலவீனமா யிருக்கிறார் என்றும் மரணம் கிட்டி விட்ட தென்றும் செய்தி கேள்விப்பட்ட அவர் அன்னையார் சாரீபுத் திரரையும் அவரோடு சேர்ந்த பல பிக்ஷுக்களையும் தம் வீட்டுக்கு வர வழைத்தார். அங்கே தங்கியிருக்கும்போது சாரீபுத்திரரைக் காணத் தேவர்களான இந்திரனும் பிரமனும் மாறுவேடம் பூண்டு வந்தார்க ளென்றும் அவர்கள் தேவர்களே என்றுணர்ந்த சாரீபுத்திர ரின் தாயார் அதிசயித்துத் தன் புதல்வனின் அற்புத சக்தியை வியந்து சாரீபுத்திரரிடம் தருமம் கேட்டுப் பௌத்த மதத்தில் சேர்ந்து

கொண்டாள் என்றும் சொல்லப்படுகிறது. சாரீபுத்திரர் இறந்த பின் அவரது அஸ்திகள் சிராவஸ்தியில் அடக்கம் செய்யப்பட்டன.

நாலந்தை யிலிருக்கும்போது சாரீபுத்திரர் செய்த ஓர் ஆவேசப் பிரசங்கத்தை "சிம்ம கர்ஜனை" என்று சொல்லி வருணிக்கின்றன பௌத்த நூல்கள். புத்தர் மீது அளவிறந்த பக்தி கொண்டிருந்த உத்தம சீடர் சாரீபுத்திரர் மறுசமய வாதிகள் எதிர்த்துப் பேசுவதையும் சங்கத்திலேயே பலர் நம்பிக்கை யிழந்ததையும் கண்டு சகியாதவராய், புத்தரின் அருகத்துவத்தை நிலைநாட்ட ஆவேசம் கொண்டு பின் வருமாறு சொன்னார்: "கௌதமரே புத்தர்! அவரே அருகத்! அவரே தரும ராச்சியத்தின் சக்கரவர்த்தி! புத்தரைவிடச் சிறந்த துறவியோ அந்தணனே இதுவரை நாம் கண்டதுமில்லை, இனிக் காணப்போவதுமில்லை. அவரைவிட மெய்ஞானம் பெற்ற மகாஞானி இதுவரை யிருந்தது மில்லை, இனி வரப்போவது மில்லை," என்று கர்ஜித்தார். நம்பிக்கை யிழந்து வந்த சங்கத்தார் சிலருக்கு எடுத்துக் கூறிய அறைகூவல் அது.

புத்தரின் பிரதம சீடர்கள் இருவர் மரணமும் ஒன்றைத் தொடர்ந்து மற்றொன்றுக இரண்டு வாரங்களுக்குள்ளே நடை பெற்றது. அவர்களின் அஸ்திகளைப் பௌத்த உலகம் பல்வேறு இடங்களில் கொண்டு போய் வைத்து ஸ்தூபிகளை எழுப்பியது. புத்தரே அவ்விதம் செய்து அவர்களை மகிமைப்படுத்த வேண்டு மென்று அறிவித்தார். சாஞ்சியில் பல ஆண்டுகளுக்கு முன்பு தொல்பொருளாராய்ச்சி நடத்திய கன்னிங்ஹாம் என்பவர் அங்கே யொரு ஸ்தூபியி னடியில் சாரீபுத்திரர் மௌத்கல்யாயனர் ஆகிய இருவரது அஸ்திகளும் அவர்கள் பெயர் பொறிக்கப்பட்ட பேழை களில் ஒன்றுக்குப் பக்கத்திலே மற்றொன்றுக அடக்கம் செய்திருந்ததைக் கண்டு பிடித்தார். இந்த அஸ்திகள் பல்லாண்டுகளாக லண்டனில் விக்டோரியா பொருட்காட்சிச் சாலையி லிருந்து, இலங்கையிலுள்ள மகாபோதி சங்கத்தைச் சேர்ந்த பௌத்தர்கள் நெடுநாள் வாதாடி முடிவில் 1947-ஆம் ஆண்டு அந்த அஸ்திகளைத் திருப்பிப் பெற்றார்கள். இப்போது அவை மறுபடியும் சாஞ்சியிலேயே ஒரு விசேஷ விஹாரத்தில் அடக்கம் செய்யப்பட்டிருக்கின்றன.

தமது முதன்மையான இரு சீடர்களையும் இழந்த கௌதம முனிவர் சங்கத்தையே இழந்துவிட்டது போல் கவலை கொண்டார். அவர்கள் இருவரும் அவருக்கு வலக்கையு மிடக்கையும் போன்ற பலமளித்து வந்தவர்கள். பிற மதத்தவர்களின் எதிர்ப்புக்களையும் அவர்கள் பிரசாரங்களையும் அடித்து நொறுக்கி வாகை சூடியவர்கள் அவர்களே. முக்கியமாக இந்த மதப் போராட்டங்களுக்காகத்தான்

அவர்க ளிருவரும் நியமிக்கப்பட்டவர்கள் என்று சொல்லவேண்டும், சாரீபுத்திரர் அதனாலேயே "தர்மசேனபதி" என்ற பட்டத்தைப் பெற்றிருந்தார். மௌத்கல்யாயனர் இருத்தி ஆற்றல்களில் மற்றைய மதத்தவர்கள் பெருமையை அடித்துக்கொண்டு போக விடாமல் காப்பாற்றி வந்தவர். இவர்க ளிருவரையு மிழந்த பின் புத்தர் தனியே விடப்பட்டார் என்று தான் சொல்ல வேண்டும். மஹா காசியபர் என்ற சீடர் அறிவாளியும் ஆற்றலுள்ளவருமா யிருந் தாலும் அவருக்கு அவ்வளவாகப் பிற மதத்தவரோடு சண்டை போடக்கூடிய திறமை யிருக்கவில்லை. அன்றியும், அவர் ஓரளவு மற்றைய மதத்தவர்களை மரியாதையுடன் நடத்தி வந்தார் என்றும், சில சமயங்களில் அவர் பிற மதக் கொள்கைகளையே கடைப்பிடிப் பவர் என்றும் பௌத்த சங்கத்தில் குற்றச் சாட்டுக்கள் எழுந்தன. எனவே, சாரீபுத்திரர் மௌத்கல்யாயனர் ஸ்தானத்தைப் பெறக் கூடியவராக காசியபர் விளங்கவில்லை. ஆனந்தர் புத்தரின் அணுக் கத் தொண்டர்தான். ஆனால் ஆற்றல் குறைந்தவர்; அவருக்கு நிர்வாகத்திறமையோ வாதத்திறமையோ கிடையாது. பின்னொரு நாள், புத்தர் இறந்த சமயத்தில் பலர் அவர்மீது பல குற்றங்களைச் சுமத்தியபோது, அறியாமையாலும் ஆற்றலின்மையாலும் அந்தத் தவறுகளெல்லாம் நேர்ந்தன என்று அவரே ஒப்புக்கொள்ளவேண்டிய நிலைமை ஏற்பட்டது. அவ்வளவு திறமையற்றவர் அவர். ஆகையால் ஆனந்தருக்கும் முதன்மைச் சீடர் பதவி கிடைக்க முடியவில்லை. எனவே, சாரீபுத்திரரும் மௌத்கல்யாயனரும் போனபின்னர் புத்தர் தமது சொந்த பலத்தையே நம்பியிருக்க வேண்டி வந்தது. அத்துடன் ஒன்றன் பின் ஒன்றாகக் கஷ்டங்கள் பெருகவே அவர் இராஜ கிருகத்தை விட்டு நீங்கிப் பெரியதொரு யாத்திரையில் புறப்பட்டார். அங்கிருந்து அடுத்து அவர் போய்ச் சேர்ந்த இடம் இராஜகிருகத்துக் குப் பக்கத்திலுள்ள நாலந்தை.

இருபத்தேழாம் அத்தியாயம்

பல்கலைக் கழகம்

இராஜகிருகத்துக்குப் பக்கத்தில் ஏழு மைல் தூரத்தி லிருக்கிறது நாலந்தை என்ற க்ஷேத்திரம். மற்றைய பௌத்த க்ஷேத்திரங்களைப் போல நாலந்தை புத்தருடைய சரித்திரத்துடன் அதிக தொடர்பு கொண்டிருக்காவிட்டாலும் பின்னல் பௌத்தம் வளர்ந்த காலத்தில் அகில பாரதப் புகழ் பெற்ற ஒரு சர்வகலாசாலை நகரமாகத் திகழ்ந் தது. புத்தர் தமது யாத்திரைகளிலே நாலந்தை வழியாகப் பல தடவை சென்றிருக்கிறார். ஆனல் இராஜகிருகம் வைசாலி முதலிய ஸ்தலங்களில் தங்கி உபதேசங்கள் செய்தது போல இங்கு தரித் திருக்கவில்லைப் போலும். அவர் தமது இறுதி யாத்திரையின்போது மாத்திரம் வைசாலிக்குப் போகும் வழியில் நாலந்தை மார்க்கமாகச் சென்றார் என்று பௌத்த நூல்கள் கூறுகின்றன.

ஆனல், நாலந்தை அக்காலத்தில் சாதாரணமான ஒரு கிராம மாக மாத்திரம் இருக்கவில்லை யென்று தெரிகிறது. ஜைன மதத்தின் மகாவீரர் பல சந்தர்ப்பங்களில் நாலந்தையிலிருந்து தருமோபதேசம் செய்திருக்கிறார் என்ற வரலாறு காணப்படுகிறது. சாரீபுத்திரரின் பழைய குருவாகிய சஞ்சய முனிவரும் நாலந்தையிலேதான் வசித் திருந்து பல மாணவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்தார்.

இராஜகிருகத்திலிருந்து பாட்னவுக்குச் சென்ற பஸ்ஸிலேறி நாலந்தை போய்ச் சேர்ந்தோம். நாற்புறமும் விவசாய நிலங்கள் சூழ்ந்திருக்கும் கிராமத்தின் மத்தியில் புராதன நாலந்தை சர்வகலா சாலைக் கட்டிடச் சின்னங்கள் காணப்படுகின்றன. இந்தச் சின்னங் களைத் தவிர ஒரு பொருட்காட்சிச் சாலையும் புதிதாகக் கட்டப்பட்ட நவநாலந்தா சர்வகலாசாலையும் தான் இன்று இந்த ஸ்தலத்தில் பார்க்கக்கூடிய காட்சிகள்.

புத்தருக்குப் பின் எண்ணூறு ஆண்டுகள் கழித்தே நாலந்தை சர்வகலாசாலை உருப் பெற்றிருக்க வேண்டும். கி. பி. ஐந்தாம் நூற்றாண்டிலே பா ஹியன் என்ற சீன யாத்திரிகன் நாலந்தைக்கு விஜயம் செய்தபோது அங்கு சர்வகலாசாலை யிருந்ததாக எவ்வித குறிப்பும் எழுதி வைக்கவில்லை. அக்காலத்தில் புகழ் பெற்ற பௌத்த ஞானிகளாகிய நாகார்ஜுனர், ஆரியதேவர், அஸங்கர், வசுபந்து, திங்நகர் முதலியோர் நாலந்தையில் கல்விகற்றவர்கள்

என்று சொல்லப்படுவதால், அப்போது சர்வகலாசாலைக் கட்டிடங்கள் உருப் பெருவிட்டாலும் பௌத்த பள்ளிகள் இருந்து, அங்கே யவர்கள் பயின்று வந்தார்கள் என்று நம்பலாம். ஐந்தாம் நூற்றாண்டின் மத்தியிலேதான் புகழ்பெற்ற நாலந்தைப் பல்கலைக் கழகம் எழுந்தது. அப்போது குமாரகுப்தர் என்ற குப்த மன்னன் பௌத்த மதத்தை வளர்க்கவும் சாஸ்திரங்கள் பலவற்றைக் கற்பிக்கவும் அளவற்ற மானியங்களை அள்ளிக்கொடுத்துச் சர்வகலா சாலையை விருத்தி செய்தான். அவனுக்குப் பின் வந்த ஹர்ஷ சக்கரவர்த்தி காலத்தில் நாலந்தையின் கீர்த்தி உலகெங்கும் பரவத் தொடங்கியது.

நாலந்தையின் பண்டைப் பெருமையைப்பற்றியும் அங்கு நடை பெற்ற கல்வி முறையைப் பற்றியும் இப்போது நாம் அறியக் கிடப்ப தெல்லாம் கி. பி. ஏழாம் நூற்றாண்டில் அங்கு கல்வி பயின்ற ஹியூங் சியாங், இத் சிங் ஆகிய இரு சீனப் புலவர்கள் எழுதி வைத்துப் போன குறிப்புக்களில் கண்டவைதாம். ஹியூங் சியாங் நாலந்தையில் மூன்று ஆண்டுகள் தங்கி யிருந்து தத்துவ சாஸ்திரம் படித்தான். இத் சிங் பத்து ஆண்டுகள் படித்தான். நாலந்தையின் பழைய மாணவர் வரிசையில் ஹியூங் சியாங் புகழ் பெற்றவன். அவன் எழுதி வைத்த குறிப்புக்களில் நாலந்தையைப் பற்றி மிகவும் ருசிகரமான தகவல்கள் கிடைக்கின்றன.

நாலந்தையில் அக்காலத்தில் ஒரே சமயத்தில் நாலாயிரம் மாணவர்கள் உறைந்திருந்து கல்வி பயின்றார்கள். அரசர்களும் மற்றும் வள்ளல்கள் பலரும் வழங்கி வந்த மானியங்களைக் கொண்டே சகல மாணவர்களுக்கும் கல்வி வசதியோடு விடுதியும் உணவும் அளிக்கப்பட்டன. நாலந்தைப் பல்கலைக் கழகத்தில் கல்வி பயின்ற மாணவர்களுக்கு நாடு முழுவதும் ஒரு தனி மதிப்பும் செல்வாக்கு மிருந்தது. மாணவர்களின் ஒழுக்கம், உடல் வளர்ச்சி, மன வளர்ச்சி யாவும் கட்டுப்பாடான முறையில் கவனிக்கப்பட்டன. கலாசாலையில் மாணவர்கள் முதலில் சேர்ந்து கொள்வதே பகீரதப் பிரயத்தனம் என்று ஹியூங் சியாங் வருணிக்கிறான். சாதாரணமாக எல்லா மாணவர்களும் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டார்கள். ஆராய்ச்சித் துறை சம்பந்தமான மிக உயர்தரக் கல்விப் பயிற்சிக்கே மாணவர்கள் அனுமதிக்கப்பட்டார்கள். பாரதத்தின் எல்லாப் பாகங்களிலிருந்தும், வெளி நாடுகளி லிருந்தும் அதில் சேர விரும்பும் மாணவர்கள் நாலந்தைக்கு வந்தவுடன் அவர்கள் ஒரு தனி விடுதியில் வைக்கப் படுவார்கள். சர்வகலாசாலைக்குள் நுழையு முன்னர் வாயில் காப்பாளர் என்று சொல்லப்படும் சில முதியோர், மாணவரிடம்

பேச்சுக் கொடுத்துக் கேள்விகள் கேட்பார்கள். இந்த வாயில் காப்பாளர் சாதாரணமானவர்களல்ல, கலாசாலைப் பேராசிரியர் களாக இருப்பார்கள். அவர்கள் கேள்விகளுக் கெல்லாம் பதில் கொடுத்து அவர்களைத் திருப்தி செய்த பின்னர்தான் மாணவர்கள் உள்ளே அனுமதிக்கப்படுவர்கள் என்று சொல்லப்படுகிறது. இந்த முதல் பரீட்சையிலேயே பத்து மாணவர்களில் எட்டுப் பேர் தோல்வி யடைந்து ஊருக்குத் திரும்பிப் போவது சர்வ சாதாரண மென்று ஹியூங் சியாங் தெரிவிக்கிறான். எவ்வளவு தூரத்திலிருந்து வந்தவர் களாலும், எத்தனை சிபார்சுகளைக் கொண்டு வந்திருந்தாலும், வாயில் காப்பாளரின் பரீட்சையில் தோல்வியடைந்தவர்கள் திரும்பிப் போகவேண்டியதுதான். அவ்வளவு கடுமையான பிரவேசப் பரீட்சை அது.

சூரியோதயம் முதல் அஸ்தமனம் வரை நூற்றுக் கணக்கான வகுப்புக்கள், உபநியாசங்களாகவும், விவாதங்களாகவும், சம்பாஷணை களாகவும் நடைபெறும். ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் சம்வாதங்கள் சகஜம். பௌத்த தரும சாஸ்திரங்கள் மாத்திரமல்ல, மற்றும் சமய சாஸ்திரங்களும் நாலந்தையில் போதிக்கப்பட்டன. வேதங்கள், தரிசனங்கள், காவியம், இலக்கியம், வியாகரணம். தருக்கம் முதலிய துறைகளும், வைத்தியம், ரசாயனம் பௌதிகம், வானநூல், சிற்பம், ஜோதிஷம் முதலியனவும் கற்றுக்கொடுக்கப் பட்டன. பட்டமளிப்பு விழாவில் அரசர்களே தலைமை வகிப்பது சம்பிரதாயம்.

ஹியூங் சியாங் இந்த நாலந்தை சர்வகலாசாலையில் கற்ற சமயத்தில் கலாசாலைத் தலைமைப் பீடத்தி லிருந்தவர் சீலபத்திரர் என்ற பிக்ஷு. அதற்கு முன்பிருந்தவர் சீலபத்திரரின் குரு தர்மபாலர். இவர் காஞ்சீபுரத்தைச் சேர்ந்த தமிழர். மற்றும் பல ஆசிரியர்களும் தமிழ் நாட்டிலிருந்து நாலந்தையில் சேர்ந்திருந்தார்க ளென்று சொல்லப்படுகிறது. திங்நகர் என்பவரும் காஞ்சியைச் சேர்ந்தவரே.

அந்தக் காலத்திலே நாலந்தையில் வைக்கப்பட்டிருந்த ஏடுகள் மாத்திரம் மூன்று பெரிய கட்டிடங்களை நிறைத்திருந்தன என்று சொல்லப்படுகிறது. பிக்ஷுக்கள் தங்குவதற்கும் கல்வி கற்பதற்கும் தனித்தனி கட்டிடங்க ளிருந்தன. கி. பி. ஆரும் நூற்றாண்டிலே பூரணவர்மன் என்ற அரசன் ஆறடுக்கு மாளிகையான ஒரு பெரிய கோயில் கட்டி அதில் எண்பது அடி உயரத்தில் புத்த விக்கிரக மொன்றைப் பிரதிட்டை செய்து வைத்தான் என்று வரலாறு கூறுகிறது. அந்த விக்கிரகம் செம்பிலே வார்க்கப்பட்டது. நாலந்தையில் தொல் பொரு ளாராய்ச்சியாளர் சமீபத்தில்

கண்டெடுத்த பொருள்கள் பெரும்பாலும் உலோக விக்கிரகங் களாகவே யிருப்பதால் அந்தக் காலத்தில் நாலந்தையில் உலோக வார்ப்புத் தொழில் மிகச் சிறந்த முறையில் விருத்தி யடைந்திருந்த தென்பதில் சந்தேகமில்லை. ஹர்ஷ சக்கரவர்த்தியின் காலத்தில் நூறு கிராமங்களை நாலந்தை சர்வ கலாசாலைக்கு மானியமாகக் கொடுத்து நித்தியம் கலாசாலைக்கு இருநூறு வீடுகளிலிருந்து பாலும் நெய்யும் அரிசியும் வழங்கி வருவதற்கு அரசன் ஏற்பாடு செய்திருந்தான்.

அத்தகைய சிறப்புக்களைப் பெற்றிருந்த நாலந்தை இன்று ஒரு தொல் பொருட் சின்னமாக மாத்திரம் காட்சி யளிக்கிறது. நாலந்தையின் கல்வியும் நிலைக்கவில்லை, அதன் ஏடுகளும் நிலைக்க வில்லை, கட்டிடங்களும் நிலைக்கவில்லை. இயற்கையின் கொடுமையும் பித்துப் பிடித்த சில கொள்ளைக் கூட்டங்களும் சேர்ந்து நாலந்தை யைத் தரை மட்டமாக்கிவிட்டன. அங்கு இப்போது நிற்கும் ஒரு ஸ்தூபியும் நில மட்டத்திலிருக்கும் பழைய சில கட்டிடங்களின் அஸ்திவாரக் கட்டுக்களும் சில சிலைகளும் சாசனங்களும் மாத்திரம் பழைய கதையைச் சொல்லிக் கொண்டிருக்கின்றன.

ஹீனயான பௌத்தர்கள் நாலந்தையை அதிகம் விரும்பவில்லை யென்றும் அங்கே முக்கியமாக மஹாயானம்தான் நடைமுறையி லிருந்தது என்றும் சொல்லப்படுகிறது. ஆனால், மஹாயானத்தை விடத் தாந்திரிக பௌத்தம்தான் நாலந்தையில் வளர்க்கப்பட்ட தென்று பலரும் நம்புகிறார்கள். தாந்திரிகக் கொள்கை நாலந்தைக்குப் பிறகே பௌத்தத்தில் முக்கிய இடத்தைப் பெற்று வடக்கே வங்காளத்துக்கும் திபேத்துக்கும் சென்றது.

நாலந்தையில் இப்போது முக்கியமாகக் காணப்படுவது அரசினரின் பொருட்காட்சிச்சாலை யொன்றும், பௌத்த மக்கள் முயற்சியால் ஆரம்பித்து நடக்கும் நவநாலந்தை பாலி நிலையம் என்ற பல்கலைக் கழகமும். பொருட்காட்சிச் சாலையில் நாலந்தையின் தொல் பொருளாராய்ச்சியில் கண்டெடுத்த பல முக்கியமான சிலை களும் கல்வெட்டுக்களும் உலோகத் திருவுருவங்களும் காட்சி யளிக் கின்றன. பாலி வித்தியாசாலையில் பாலி மொழியும் பௌத்தமும் போதிக்கப்படுகின்றன. பல நாடுகளி லிருந்து இங்கே மாணவர்கள் வந்து கற்றுக் கொள்ளுகிறார்கள்.

இருபத்தெட்டாம் அத்தியாயம்

கங்கையைக் கடந்தது

கௌதம முனிவர் நாலந்தையி லிருந்து புறப்பட்டு வடக்கே வைசாலியை நோக்கிச் சென்றவர் கங்கைக் கரையி லிருந்த பாடலி கிராமத்தை யடைந்தார்.

நாலந்தையில் புராதன கட்டிடங்களின் சின்னங்களையும் அங்குள்ள பொருட்காட்சிச் சாலையி லிருக்கும் கலைப் பொருள்களையும் பார்த்துவிட்டு நானும் என்னுடன் கூட வந்த வழித் துணைவன் வஸந்தராமும் பஸ் ஏறிப் பாடலியை நோக்கிப் பிரயாணமானேம். முன்பு பாடலி அல்லது பாடலி கிராமம் என்றிருந்ததுதான் பிற்காலத்தில் பாடலிபுத்திரம் அல்லது பாடலிபுரம் என்று வழங்கப் பட்டு, இப்போது பாட்னா என்ற ஆங்கிலப் பெயரைப் பெற்றிருக் கிறது.

நாலந்தையி லிருந்து ஐம்பத்தைந்து மைல் தூரத்திலிருக்கும் பாடலிபுரத்துக்குப் போக பஸ்ஸில் அதிக நேரமாகும் என்பதைப் பற்றிச் சிரத்தை கொண்ட வஸந்தராம் முன்னேற்பாடாகவே முந்திரிப் பருப்பும் கடலையும் பொரித்த அவலும் வாங்கிக் கட்டி வைத்துக் கொண்டான். கிராமத்து மக்கள்தான் அந்த பஸ்ஸில் நிறைந்து காணப்பட்டனர். பேச்சுத் துணைக்கு யாராவது நாலந்தையி லிருந்து வருகிறார்களா என்று பார்த்தேன். ஆனால் ஒருவரையும் காண முடிய வில்லை. வெள்ளைக்கார உடையிலே இரண்டொருவர் தமது குடும்பத்தோடு அந்த பஸ்ஸில் பிரயாணம் செய்தார்கள். பேசிப் பார்த்தேன். ஆனால் அவர்கள் எவருக்கும் ஆங்கிலம் தெரியாதென்று கண்டதும் பேசாமலிருந்துவிட்டேன். கையிலிருந்த ஏர்ள் ஸ்டான்லி கார்டினர் துப்பறியும் ஆங்கில நாவலைத் திறந்து அதை விட வேறு வழித்துணை வேண்டாம் என்றெண்ணியபடியே அதில் லயித்துப் போய்ப் பிரயாண அலுப்பை மறந்துவிட்டேன். ரயில் பிரயாணத் திலும் நீண்ட பஸ் பிரயாணத்திலும் உலகத்தையே மறந்து அயராச மாகச் செல்ல ஆங்கில துப்பறியும் நாவல்களைப் போல வேறு துணையை நான் கண்டதில்லை.

சுமார் இரண்டு மணி நேரம் கழிந்ததும் பக்தியார்பூர் என்ற இடத்தில் பஸ் வந்து நின்றது. அந்த இரண்டு மணி நேரத்திலும் இருபத்தைந்து மைல் தூரம்தான் கடந்திருக்கிறோம் என்பதை

அப்போதுதான் உணர்ந்தேன். பிரயாணிகள் யாவரும் சிரம பரிகாரம் செய்து கொள்வதற்காக இறங்கினர்கள். நானும் வஸந்த ராமும் இறங்கிப் பக்கத்திலுள்ள ஒரு "ஹோட்டலில்" தேநீர் சாப் பிட்டுவிட்டு பஸ்ஸில் உட்கார்ந்துகொண்டோம். இந்தியாவிலே, வடக்கிலும் சரி தெற்கிலும் சரி, ஹோட்டல்களுக்குப் பஞ்சமில்லை. அந்த விலாஸ் இந்த விலாஸ் என்று தெய்வங்களின் பெயர்கள் முதல் அரசியல் தலைவர்கள் பெயர் வரை அனுமதி யின்றி சுவீ கரித்துக் கொண்டு வர்ணம் தீட்டப்பட்ட பெயர்ப் பலகையில் மாத் திரம் அவை ஹோட்டல்களாகக் காணப்படும். ஆனால் உள்ளே நுழைவதற்குப் பெரும்பாலானவையும் தகுதியற்றவை. நம் நாட்டில் காணப்படும் இந்த ஹோட்டல்களைப்பற்றி ஓர் ஆங்கில ஆசிரியர் மிகவும் வேடிக்கையாக ஓரிடத்தில் எழுதி யிருப்பது இங்கே ஞாப கத்துக்கு வருகிறது. ஹோட்டல் என்றால் சாதாரணமாக மேல் நாடுகளில் பிரயாணிகள் தங்குவதற்கும் அவர்கள் உணவருந்து வதற்கும் பொதுவாக அமைந்த விடுதிச்சாலை. சகலவிதமான சௌகரியங்களும் அந்த ஹோட்டலில் கிடைக்கும். நமது வீட்டி லுள்ள சௌகரியங்களை விட அதிகமாகவே கிடைக்கும். அதை நினைத்துக்கொண்டே அந்த ஆசிரியர் இந்தியாவில் பிரயாணம் செய்யும்போது பல இடங்களில் 'ஹோட்டல்' என்று எழுதப்பட்டிருப் பதைக் கண்டு அவை பெரும்பான்மையும் காப்பிக்கடை அல்லது தேநீர்க் கடைகளாக மாத்திரம் இருந்ததை யுணர்ந்து ஏமாந்த கதையை மிகவும் ருசிகரமாக எழுதியிருக்கிறார். ஆனால் நம் நாட்டில் பழக்கப்பட்ட நாமெல்லாம் அப்படியாக ஏமாறவேண்டிய அவசிய மில்லை. பக்தியார்பூரில் நான் தேநீர் சாப்பிட்ட ஹோட்டல் ஒரு பெரிய விலாசத்தோடுதான் இருந்தது. ஆனால் அது வெற்றிலை பாக்கு வியாபாரம் செய்துகொண்டிருந்த ஒருவன், பக்கத்திலே ஒரு வெந்நீர் அடுப்பை மூட்டி வைத்துத் தேநீர் வியாபாரத்தையும் சேர்த்து நடத்திக்கொண்டிருந்த ஒரு கடைதான்!

பக்தியார்பூரிலிருந்து பாட்னாவுக்கு மேலும் முப்பது மைல் பிரயாணம். அதற்குள்ளும் எத்தனையோ தடவை பஸ் நின்று நின்று சென்றது. கால நியதியும் இட நியதியும் கிராமத்து பஸ் வண்டி களுக்கு இருக்க முடியுமா? அரசாங்க ரயில்களுக்கே இல்லையானால் பஸ்களைப்பற்றி நாம் சொல்லத் தேவையில்லை. எப்படியோ ஒரு விதமாக இரவு ஏழு மணிபோல் பாட்னா என்ற பாடலிபுரத்தைப் போய்ச் சேர்ந்தோம்.

பீஹார் மாகாணத்துக்குத் தலைநகராக விளங்குகிறது பாடலி புரம். இன்று நேற்றல்ல, கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளாகவே

அது ஒரு பெரிய இராச்சியத்தின் தலைநகராகத்தான் விளங்கி வந்துள்ளது. புத்தர் காலத்திலே மகதநாட்டின் தலைநகர் இராஜ கிருகத்திலிருந்து அரசாண்ட அஜாதசத்துரு மன்னன் வைசாலியைத் தலைநகராகக்கொண்ட விரிஜியர் நாட்டிலே ஒரு கண் வைத்திருந்தான். அப்போது விரிஜியர்மீது போர் தொடுக்க வேண்டுமென்று ஆசைப் பட்டுக் கங்கை கரையிலிருந்த படாலிக் கிராமத்தில் சில பாசறை களைக் கட்டி ஒரு துறைமுகத்தையும் அமைத்து வைத்திருந்தான். பின்னர் விரிஜியரை வெற்றி கொண்டதும் பாடலிக்கே தன் அரசிருக் கையை மாற்றி அதைத் தன் தலைப்பட்டணமாக வைத்துக்கொண்டு மகதராச்சியம் முழுவதையும் அரசாண்டான் அஜாதசத்துரு என்று சரித்திரம் கூறுகிறது.

புத்தர் இந்தப் பாடலிக் கிராமத்தில் கால் வைத்தவுடனேயே அதன் பிற்காலப் பெருமையைப்பற்றித் தீர்க்க தரிசனம் சொல்லி வைத்தார் என்றும் கதையுண்டு. அந்தச் சமயத்தில் அஜாத சத்துருவின் பிரதானிகள் சிலர் கங்கைக் கரையில் கோட்டை கொத்தளங்களை அமைத்துக் கொண்டிருந்ததைப் பார்த்துவிட்டுப் புத்தர் தமது சீடர் ஆனந்தரைப் பார்த்து, "ஆனந்தா! திரை கடலோடித் திரவியம் தேடும் வணிகப் பெருமக்கள் இந்தக் கங்கை யையும் தினந்தோறும் கடக்க இப்பாடலிக் கிராமம் ஒரு காலத்தில் மிகப் பெரிய தலைப்பட்டணமாக விளங்கப் போகிறது" என்று சொன்னதாக பௌத்த நூல்கள் கூறுகின்றன.

அஜாதசத்துருவுக்குப் பின் வந்த சுங்க வம்சத்தவரும் அவர் களுக்குப் பின் மௌரியர்களும் பாடலிபுரத்திலிருந்தே சிறப் பெய் தினர். சிறு தேசமா யிருந்த மகதநாட்டோடு நாற்புறமுமிருந்த பல தேசங்களையெல்லாம் கைப்பற்றி ஒரு குடைக்கீழ் பெரியதோர் சாம்ராஜ்யம் அமைத்துக்கொண்டு சக்கரவர்த்தியாக விளங்கிய மௌரிய மன்னன் சந்திரகுப்தன் காலத்திலேதான் பாடலிபுரம் இந்தியாவில் மாத்திரமல்ல உலகத்திலேயே புகழ் பெற்ற ஒரு சிறந்த தலைநகரமாக விளங்கியது. சந்திரகுப்தனின் பேரன் அசோகன் இருந்து தரும சாம்ராஜ்யம் நடத்திய தலைநகரும் பாடலிபுரம்தான். சந்திரகுப்தன் காலத்தில் பாடலிபுரத்திலே கிரேக்க நாட்டைச் சேர்ந்த மெகஸ்தினீஸ் என்ற சரித்திர ஆசிரியன் வந்து பல காலம் தங்கி யிருந்தான். பாடலிபுரத்தில் அவன் நீங்காத பற்றுக் கொண்டு அந்த நகரத்தைப் பற்றிப் பின்வருமாறு எழுதிவைத்தான்.

"மகத சாம்ராஜ்யத்தின் தலைநகராகிய பாடலிபுரத்தைவிடப் பெரிய பட்டணம் பாரதத்திலே வேறில்லை. நகரத்து மக்கள் உறையும் உட்புற நகரமே பத்து மைல் நீளமும் இரண்டு மைல்

அகலமும் கொண்டது. பாடலிபுரத்தைச் சுற்றி அறுநூறு அடி அகலமும் முப்பது அடி ஆழமுங்கொண்ட அகழி தோண்டப்பட்டிருக்கிறது. இந்த அகழியைச் சுற்றியுள்ள கோட்டை மதிலில் ஐந்நூற்றெழுபது கோபுரங்களும் அறுபத்து நான்கு வாயில்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன. சந்திரகுப்தன் சேனையில் பாடலிபுரத்தில் மாத்திரம் அறுபதினாயிரம் காலாட் படையினரும் முப்பதினாயிரம் குதிரைகளும் எண்ணாயிரம் யானைகளும் காணப்படுகின்றன" என்று மெகஸ்தினீஸ் குறிப்பிடுகிறான்.

அசோகன் இருந்து ஆட்சி நடத்திய காலத்துக்கு எட்டு நூற்றாண்டுகள் கழித்துப் பாடலிபுரத்துக்கு வந்த சீன யாத்திரிகன் பா ஹியன் அந்த நகரம் சாதாரண மனிதர் கையால் கட்டப்பட வில்லை யென்றும் தேவர்களால் நிர்மாணிக்கப்பட்டிருக்க வேண்டு மென்றும் அதிசயத்தோடு குறிப்பிடுகிறான். "அசோகனிருக்கையா யிருந்த பாடலிபுரத்தின் நகர அமைப்பும் பட்டணத்திலுள்ள மாளிகையும் மற்றும் கட்டிடங்களும் அவன் ஏவலைப் புரிந்த தேவ கணங்களாலேயே சிருஷ்டிக்கப்பட்டிருத்தல் வேண்டும். அந்தத் தேவ கணங்களே கற்களை யெல்லாம் குவித்தன. கோட்டை மதில்களையும் வாயில்களையும் கட்டின. சிற்பங்களை யெல்லாம் செதுக்கி வைத்தன. சாதாரண மனிதன் கையால் இந்தக் காரியங்களை யெல்லாம் இவ்வளவு எழிலாகச் சாதித்துவிட முடியாது."

அப்படிச் சிறந்து விளங்கிய பாடலிபுரம் மற்றைய புகழ்பெற்ற நகரங்கள் அழிந்ததுபோல் எப்படியோ அழிந்து போய் இன்று அதன் சிறப்பின் ஒரு துளியைக்கூடக் காண முடியாதவாறு உருவழிந்து கிடக்கிறது. சாதாரணமாக ஒரு மாகாணத் தலைநகர் என்பதனால் மட்டும் இங்கு சில வியாபார நிலையங்களும் கட்டிடங்களும் மாத்திரமே காட்சியளிக்கின்றன. சிற்சில இடங்களில் தொல் பொருளாராய்ச்சியாளர் சில நிலையங்களை யகழ்ந்து வைத்திருக்கிறார்கள். அவையும் பழைய பாடலிபுரத்தின் சிறப்பைக் கூறுவதாயில்லை. பண்டைப் பெருமையைச் சொல்லிக் கொண்டிருப்பது அங்கே ஒரே யொரு இடம்தான். அதுவே பாட்னை நகரத்தின் பொருட்காட்சிச் சாலை. புத்தரின் ஞாபகத்தை நிலைநாட்டப் போலும் கௌதமர் வீதி என்ற ஒரு வீதியும் பாட்னாவிலிருக்கிறது.

பாடலிபுரத்தைச் சுற்றிப் பார்த்துவிட்டு நானும் வஸந்தராமும் அங்கிருந்து கங்கைக் கரையில் கட்டப்பட்டிருக்கும் துறைமுகமாகிய 'மஹேந்திர காட்' என்ற துறையை அடைந்தோம். கங்கையைக் கடப்பதற்கு ரயில்வேக் கணக்கிலே ஒரு பெரிய துறைமுக ஸ்டேஷன் கட்டி வைத்திருக்கிறார்கள். தனுஷ்கோடிக்கும் தலைமன்னா

ருக்கு மிடையில் செல்லும் கப்பல்போல் இங்கும் பெரிய கப்பல்கள் உபயோகப்படுத்தப் படுகின்றன. ரயில்வேயில் டிக்கட் வாங்கிலை கங்கையைக் கடந்து சென்று பின்னர் மறு கரையிலிருக்கும் ஸ்டேஷனில் போய் அடுத்த ரயிலேறிச் செல்லலாம். ஆயிரக்கணக்கில் பிரயாணிகள் இருபக்கமும் எந்நேரமும் கடந்துகொண்டிருப்பதால் இந்த மஹேந்திரகாட் என்ற துறைமுக ஸ்டேஷன் கல கலவென்றிருந்தது.

புத்த பகவான் இந்த கங்கை நதியைப் பல தடவை கடந்திருக்கிறார். அந்தக் காலத்திலே மள்ளர் ஜாதியினர் படகோட்டிப் பிழைத்தார்கள். ஆகையால் படகு மார்க்கமாகவே அவர் கங்கையைக் கடந்திருக்கவேண்டும். படகு என்றும் சொல்ல முடியாது; அந்தக் காலத்தில் புணை என்ற கட்டு மரம்தான் அதிகம் பழக்கத்திலிருந்தது. ஆனால், அவர் இந்த இறுதிப் பிரயாணத்தின் போது பாடலிபுரத்துக்கு வந்த கதையும் கங்கையைக் கடந்த வரலாறும் பௌத்த நூல்களில் எப்படிச் சொல்லப்பட்டிருக்கிற தென்பதைக் கொஞ்சம் பார்ப்போம்.

பாடலிபுரத்துக்குப் பகவான் வருகிறார் என்ற செய்தியை அறிந்த அங்குள்ள பிரபுக்கள் எல்லாரும் சேர்ந்து அவருக்கெனப் புதிதாக ஒரு மண்டபம் கட்டினார்கள். பலவித உபசாரங்களோடு புத்தரை யழைத்துச் சென்று மரியாதைகள் செலுத்திய பின்னர் அந்த மக்களுக்கெல்லாம் உபதேசம் செய்யுமாறு ஆனந்தர் கேட்டுக் கொண்டார். பகவானும் இணங்கி அங்கிருந்து இல்லறத்தாருக்கென நல்வினை தீவினை யாகியவற்றின் பயனைப்பற்றி ஒரு பிரசங்கம் செய்தார்.

"இல்லறத்தாரே! தீவினை செய்தவர்களுக்கு ஐந்து வகையான துன்பம் நேருகிறது. தீச் செயலைச் செய்த ஒருவன் முதலில் செல்வத்தை யிழந்து வறுமை யெய்துகிறான். இரண்டாவதாக, அத் தீச்செயல் ஊரெல்லாம் பேசப்பட்டு அவன் துன்பப்படுகிறான். பின்னர் அவன் போகுமிடமெல்லாம் அவனுக்கு வரவேற்பில்லை, எல்லாரும் புறக்கணிக்க அவன் உள்ளம் குழப்பமடைகிறது. நான்காவதாக, அவன் இறக்கும்போது இனி என்ன நடக்குமோ என்று அவஸ்தைப்படுகிறான். முடிவில் அவன் உடல் அழிந்த பின்னும் அவன் துன்பத்திலேயே உழலுகிறான்.

"ஆனால், நல்வினை செய்தவன் ஒருவன் ஐந்து வகையான நன்மையைப் பெறுகிறான். அவன் தொழிலில் லாபம் கிடைக்கிறது. அவன் பெயர் நன்றாகப் பேசப்படுகிறது. எந்த இடத்துக்குச் சென்றாலும் அவனுக்கு நல்வரவேற்புக் கிடைக்கிறது. இறக்கும்போது

சாந்தமாக இறக்கிருன். இறந்த பின்னரும் அவன் சித்தம் அல்லற் படாமல் இன்பம் துய்க்கிறது."

இந்த உபதேசத்தைக் கேட்ட மக்களெல்லாரும் மகிழ்ச்சி யடைந்தனர். அங்கிருந்து புறப்பட்ட புத்தர் கங்கைக் கரையை யடைந்தார். அஜாதசத்துருவின் ஆட்கள் அங்கே அரண்கள் கட்டிக்கொண்டிருந்தவர்கள் பகவானைக் கண்டதும் வணங்கி உபசரித் தனர். அந்த முயற்சிகளைக் கண்டபோதுதான் புத்தர் பாடலிக் கிராமம் ஒரு காலத்தில் சிறந்த தலைநகராக விளங்கப் போகிறது என்ற தீர்க்க தரிசனத்தைச் சொன்னர் என்று சொல்லப்படுகிறது. புத்தர் அது தலைநகராக விளங்கும் என்று சொன்னதோடு நிறுத்த வில்லை. வெள்ளத்தால், தீயால், உட்பகையால் இந்நகரத்துக்கு மூன்று ஆபத்துக்கள் நிகழவிருக்கின்றன என்பதையும் சொல்லி வைத்தார். கௌதம முனிவர் பாதம் பட்டுப் புனித மடைந்த காரணத்தால் பாடலியில் அரண்கள் கட்டிக்கொண்டிருந்த அஜாதசத் துருவின் பிரதானிகள் அந்த இடத்திலே அவர் பெயரால் 'கௌதமர் வாயில்' என்று தமது கோட்டை வாயிலுக்குப் பெயர் சூட்டினர்கள். கங்கையின் துறையைக் 'கௌதமர் துறை' யென்று பெயரிட்டனர். அந்த ஞாபகமாகத்தானே என்னவோ இப்போது பாட்னாவில் கௌதம வீதி யென்ற பெயர் காணப்படுகிறது.

கங்கைக் கரையை யடைந்த கௌதமர், எத்தனையோ படகுகள் அவரை அக்கரை கொண்டு போய்ச் சேர்ப்பதற்கு ஆயத்தமா யிருந் தும், அவற்றில் ஏறிச் செல்லவில்லை யென்று பௌத்த புராணங்கள் கூறுகின்றன. "அக்கரை சேர்வதற்கு இந்தச் சாதாரண புணை யெல்லாம் எனக்கு வேண்டாம் தருமமாகிய புணையே எனக்கு உதவியாக இருக்கிறது" என்று சொல்லி அவர் கங்கை நீரில் நடந்தா ராம். உடனே நீர் பிரிந்து அவருக்கு வழிவிட்டுக் கொடுக்க அவரும் சீடர்களும் அக்கரை சேர்ந்தார்கள் என்று சொல்லப்படுகிறது.

நாங்கள் கப்பலில் ஏறிக் கங்கையைக் கடக்கும்போது இரவு எட்டு மணிக்கு மேலாகிவிட்டது. நல்ல பசி. கப்பலில் போதியளவு சிற்றுண்டிச் சாலைகளிருக்கின்றன. ரொட்டியும் கறியும் வாங்கிச் சாப்பிட்டுக்கொண் டிருக்கையில் தாகத்துக்குத் தண்ணீர் கேட்டேன். கடையிலிருந்த பையன் ஒரு பித்தளை லோட்டாவில் தண்ணீர் கொண்டு வந்து என் பக்கத்தில் வைத்தான். அந்தத் தண்ணீரைப் பார்த்ததும் எனக்கு ஒரே சந்தேகமாகிவிட்டது. சேற்று நீர் போல வெண்ணிறமா யிருந்தது அந்தத் தண்ணீர். வஸந்தராமைப் பார்த்து, "இது சுத்த ஜலம்தானு?" என்று கேட்டேன். வஸந்தராம் கண்களை அகலத் திறந்துகொண்டே, "ஆஹா, அருமையான கங்கா

ஜலம்! நன்றுகச் சாப்பிடலாம்" என்று சொன்னேன். ஆற்று வண்டலும், நகர வீதிகளிலும் சாக்கடைகளிலு மிருந்து வந்த கழிவு களும், கப்பலி லிருந்து அகற்றப்பட்ட கழிவும் எண்ணெயும் அந்த நதியில் மிதந்தோடிக்கொண் டிருந்தன. அதிலிருந்து எடுக்கப்பட்ட நீர்தான் சாப்பிடுவதற்கும் என் முன் வைக்கப்பட்ட தண்ணீர்! எனக்கு என்னவோ மாதிரித்தான் இருந்தது. ஆனல், வஸந்தராம் போன்ற அவ்வூர் வாசிகளுக்கு கங்கை நீர் என்றுல் புனித தீர்த்தம். சகல நோய்களையும் அகற்றும் மருந்து. ஆகையால் எந்த இடத்தில் எடுத்தாலும் அவர்களுக்கு கங்கை நீர் புனித தீர்த்தம்தானே. வஸந்தராமின் ஆலோசனையைக் கேட்டுக்கொண்ட பின்னரும் நான் கொஞ்சம் யோசித்தேன். ஒரு கப் பாலை மாத்திரம் வாங்கிச் சாப்பிட்டுவிட்டு அக்கரை சேர்ந்தேன்.

பாட்னவுக்கு எதிர்ப்பக்கத்திலுள்ள துறை 'பலஸா காட்' என்று சொல்லப்படுகிறது. கப்பலி லிருந்து இறங்கிச் சிறிது தூரம் நடந்தபின் ஸ்டேஷனிலே வண்டி காத்து நின்றது. முஸாபர் பூர் என்ற இடத்துக்கு ஏற்கெனவே ரயில் டிக்கட் வாங்கி வைத் திருந்தோமாகையால் வண்டியிலேறி உட்கார்ந்தோம். முஸாபர்பூரி லிருந்து வைசாலிக்கு இருபத்திரண்டு மைல். பலஸா காட்டி லிருந்து வடக்கே முஸாபர்பூர் போய், பின் அங்கிருந்து வைசாலிக்குத் தென் கிழக்கு நோக்கித் திரும்பி வரவேண்டும். பலஸா காட்டுக்குப் பக்கத்திலுள்ள ஓர் ஊரிலிருந்தே நேராக வைசாலிக்குப் போவ தானல் பதினைந்து மைல் தூரம்தான் என்று கேள்விப்பட்டிருந்தோம். ஆனல், வாகன வசதி கிடைக்குமோ என்ற சந்தேகம் முதலில் இருந்தபடியால் இப்படிச் சுற்றி வளையும் மார்க்கத்தில் செல்ல வேண்டி யிருந்தது. வைசாலியி லிருந்து திரும்பி வரும்போது முஸாபர்பூரி லிருந்து ரயிலேறுமல் பஸ்ஸில் வந்துகொண்டிருக்கை யில் ஹாஜிபூர் என்ற இடத்தில் இறங்கிய ஒரு பிரயாணி, "நான் இந்த ஊர் மாஜிஸ்ட்ரேட். இங்கிருந்து வைசாலிக்கு இலகுவாகப் போகலாம். வண்டிகள் கிடைக்கும். இப்படி நீங்கள் முஸாபர்பூர் எல்லாம் சுற்றிவந்திருக்கவேண்டிய அவசியமில்லை" என்று சொன் னர். இதையெல்லாம் முதலிலே நாங்கள் கண்டோமா?

இருளிலே ரயில் பிரயாணம் அவ்வளவு சுகப்படாது. அக்கம் பக்கத்திலுள்ள காட்சிகளைப் பார்க்க முடிகிறதா? இருந்தும் நாங்கள் சென்ற ரயில் வண்டி ஒரு பாலத்தைக் கடப்பதற்கு வெகு நேரம் சென்றபோது அவ்வளவு பெரிய பாலம் என்ன என்று வஸந்த ராமைக் கேட்டதற்கு, இதுதான் கண்டகி நதி யென்றுன். கண்டகி நதியைப்பற்றி நாம் பழைய காவியங்களில் கேள்விப்பட் டிருக்

கிறேம். அது சாதாரணமான ஒரு நதியல்ல. கங்கையைப் போன்ற அதன் பெரிய கிளை நதிகளி லொன்று. கௌதம முனிவர் அக்காலத்தில் இந்த நதியையும் பல தடவை கடந்துதான் பிரயாணம் செய்திருப்பார். உண்மையில் அவர் பிரயாணத்தில் என்னென்ன கஷ்டங்களை யனுபவித்திருப்பார் என்று இப்போது நினைத்துப் பார்க்கும்போது ஆச்சரியமாகத் தோன்றும். எத்தனை மலைகளிலும் குன்றுகளிலு மேறி இறங்கி யிருப்பார், எத்தனை காடுகளில் தனி வழி நடந்திருப்பார், எத்தனை நதிகளையும் சுனைகளையும் கடந்திருப் பார். புத்தர் மாத்திரமல்ல, அந்தக் காலத்து சிரமணர்கள் யாவருமே இப்படித்தான் கஷ்டங்களை அனுபவித்தார்கள். நமக் கென்னவோ அது கஷ்ட மென்று தோன்றுகிறது. ஆனால், அவர்கள் கஷ்ட மென்ரு கருதினர்கள்? இன்பமாய்க் கண்டார்கள். பரிவிராஜ கம் என்ற அலைச்சலே அவர்கள் வாழ்வின் இலட்சியமா யிருக்கும் போது கஷ்டங்க ளெல்லாவற்றையும் இன்பமாகத்தானே அனுபவித் திருப்பார்கள்.

இருபத்தொன்பதாம் அத்தியாயம்

பெண்ணுக்குச் சம உரிமை

இரவோடிரவாகப் பிரயாணம் செய்து விடியற்காலை நான்கு மணிக்கு முஸாபர்பூர் போய்ச் சேர்ந்தோம். அங்கிருந்து வைசாலிக்கு இருபத்திரண்டு மைல். சாதாரணமாக அந்த ஊர் மக்கள் வைசாலி என்று அக்கிராமத்தைச் சொல்வது கிடையாது. பஸர் என்றுதான் வழங்கப்படுகிறது. முஸாபர்பூர் ரயில்வே ஸ்டேஷனுக்கு முன்பாக இருபது இருபத்தைந்து ஆண்டுக் காலத்தைக் கண்ட சில மோட்டார் வண்டிகள் நிறுத்தப்பட்டிருந்தன. வாடகைக்கு ஓடும் வண்டிகள் அவை. என்னையும் வஸந்தராமையும் கண்டவுடன் மோட்டார் ஓட்டிகள் சிலர் எங்களை யணுகி, "வைசாலி போகவேண்டுமா?" என்று கேட்க ஆரம்பித்துவிட்டார்கள். வஸந்தராம் இது விஷயங்களில் கை தேர்ந்த வழிகாட்டியாகையால் இலகுவில் தரகர்களிடம் மாட்டிக்கொள்ள மாட்டான். வண்டி ஒன்றும் வேண்டாம் என்று அவர்களிடம் சொல்லிவிட்டு, "பஸ் ஏதாவது போகும், அதில் ஏறிப் போய்விடலாம்" என்று எனக்கு ஆலோசனை சொல்லித் தந்தான்.

எதிர்ப்புறத்தில் நாலைந்து தேநீர்க் கடைகளிருந்தன. அங்கே தேநீர் சாப்பிடச் சொல்லி என்னை யிருத்திவிட்டு வஸந்தராம் பஸ் விசாரிக்கப் போனான். சற்று நேரம் கழித்து வந்து, "இன்னும் ஒரு மணி நேரத்தில் ஒரு பஸ் போகும். ஆனால் நேரே வைசாலி கிராமத்து வழியாகப் போகாது. சுமார் ஏழு மைல் தூரம் நடக்க வேண்டுமாம்," என்று சொன்னான். "வேண்டாமப்பா, செலவா யிருந்தாலும் ஒரு மோட்டாரையே பேசிக்கொண்டு வா, ஏழு மைல் தூரம் நடப்பதற்கு என் கால்கள் இணங்கமாட்டா." என்று சொன்னேன். "அதுவும் கேட்டுப் பார்த்துவிட்டேன். போகவும் வரவும் அங்கே தாமதிக்கவும் எல்லாம் சேர்த்து இருபத்தைந்து ரூபாய்க்குக் குறையா தென்கிறார்கள்" என்றான். முடிவாக இருபது ரூபாய்க்கு ஒரு மோட்டாரை ஏற்பாடு செய்து கொண்டு காலை ஆறு மணிக்கு வைசாலியை நோக்கிப் புறப்பட்டோம். அங்கே போய்ப் பார்க்க வேண்டியவற்றைப் பார்த்துவிட்டு மீண்டும் முஸாபர்பூரில் பதினெரு மணி ரயிலைப் பிடிக்கவேண்டு மென்பது எனது திட்டம். ஆனால், நாங்கள் திரும்பி வந்த சமயத்தில் ரயில் கிளம்பிவிட்டது!

நாங்கள் சென்ற மோட்டாரின் சாரதி அந்தக் காலத்து சத்தியவான் சாவித்திரி நாடகத்தில் யமதர்மராஜன் வேஷத்துக்குப் பொருத்தமான பேர்வழி. அவ்வளவு பயங்கரத் தோற்றம். நாடகப் பாணியில் இரு கன்னங்களிலும் பிடரியிலும் நீண்ட மயிர். வாய் நிறைய வெற்றிலை. உதட்டில் ஒரு பீடி. அவனுக்குப் பக்கத்தில் ஒரு சொக்கப் பையன். ஆனால் அந்தப் பையன் எதற்காக வண்டியில் வந்தான் என்பதுதான் எனக்குத் தெரியவில்லை. பிச்சைக்காரப் பையன்போல், அரையில் ஒரு கோவணமும் உடம்பைப் போர்த்தி ஒரு கம்பளிச் சால்வையும் மாத்திரம் அவன் மீதிருந்தன. காரைச் சுத்தம் செய்யும் 'கிளீனர்' என்றுதான் முதலில் எண்ணியிருந்தேன். ஆனால் அவன் எந்தச் சமயத்திலும் காரைவிட்டுக் கீழே இறங்கிய தாகத் தெரியவில்லை. இடையிலே இரண்டு தடவை மோட்டார் வழியிலே நிறுத்தப்பட்டது, டிரைவர் சாயா சாப்பிடுவதற்காக. பையன் மாத்திரம் தனது ஆசனத்தைவிட்டு நகரவில்லை. டிரைவரே பையனுக்குச் சாயா வாங்கிக் கொடுத்தும் பீடி ஒன்றைப் பற்ற வைத்துக் கொடுத்தும் வந்தான்! கடைசி வரையும் இந்தப் பணிவிடை எங்களுக்குப் புதிராகவே யிருந்தது.

கிராமத்திலும் ஒரு குக்கிராமம் வைசாலி. பரந்த நெல்வயல் களின்மத்தியில் ஒரு சிறிய சாலை. அதன் இரு பக்கங்களிலும் சுமார் இருபது இருபத்தைந்து குடிசைகள். அவ்வளவுதான் இன்றைய வைசாலி. ஆனால், முன்னொரு காலத்திலே பாரதத்திலேயே மிக உன்னதமான குடியரசாயிருந்த விரிஜியர் நாட்டின் தலைநகர். "பெருமையும் செல்வச் செழிப்பும் நிறைந்த நகரம் இது. எங்கு பார்த்தாலும் எழில் மிக்க கட்டிடங்கள், எழில் மிக்க நந்தவனங்கள். அடுக்கடுக்கான மாடிவீடுகளும் அரண்மனைகளும் கோபுரங்களும் கோட்டைகளும் அவற்றைச் சுற்றி மதில்களும், அந்தக் கோட்டைக்கு வெளியே சோலைகளும் களியாட்ட மண்டபங்களும். எங்கு பார்த் தாலும் இந்த நகரத்து மக்கள் ஆனந்தமாய் வாழுகின்றனர். வறுமை யென்பதையே அவர்கள் கண்டிலர்," என்று வருணிக்கிறது லலித விஸ்தரம் என்ற புராணம்.

இராமாயணத்திலே வைசாலியை விசாலம் என்று குறிப்பிடு கிறார் வால்மீகி. விஸ்வாமித்திர முனிவரோடு இராமரும் லக்ஷ்மணரும் கங்கையைக் கடந்து சென்றபோது வைசாலியைக் கண்டார்கள். பூலோக சுவர்க்கம் இது என்று அவர்கள் அதைப் பார்த்து ஆச்சரியப் பட்டனர். முஸாபர்பூர்தான் பழைய மிதிலாபுரி.

வைதிகம், பௌத்தம், ஜைனம் ஆகிய மூன்று மதங்களும் நெடுங் காலமாக வைசாலியில் செழித்து வளர்ந்தன. அங்கு வாழ்ந்

தவர்கள் லிச்சவி என்ற ஒரு வம்சத்தைச் சேர்ந்தவர்கள். பொதுவாக இவர்களை யெல்லாம் பிரபுக்கள் என்றே சொல்வர். அவ்வளவு செல்வச் சிறப்புப் பொருந்தியவர்கள் அந்த மக்கள். விரிஜி நாடு முழுவதும் பரவி யிருந்த இவர்கள் தமக்கென ஒரு அரசனை வைத்திருக்கவில்லை. குடியரசாகவே நடத்தி வந்தார்கள். இவர்களது குடியரசு ஆட்சி முறையைப்பற்றிப் புகழ்ந்து பாராட்டினர்கள் எல்லாரும். ஒற்றுமையும், நீதியும், பண்பாடும், ஒழுக்கமும் அந்த நாட்டில் வளர்ந்து வந்தன. அதனால்தானே என்னவோ சமயத் தலைவர்கள் பலர் வைசாலியை நாடிச் சென்றார்கள். வைசாலி மக்களின் முன்மாதிரியை மற்றவர்களுக்கும் எடுத்துச் சொன்னர்கள். புத்தர் தமது சீடர்களுக்கு வரையறுத்த பல ஒழுக்க விதிகளெல்லாம் வைசாலி மக்களின் நடை முறை வாழ்க்கையில் கண்ட ஒழுக்கங்கள் என்றே சொல்லப்படுகிறது. லிச்சவி மக்களின் குடியரசுக் கொள்கைகளிற் பலவே பௌத்த சங்கத்துக்கு விதிக்கப்பட்ட நியமங்கள் என்றும் நம்பப்படுகிறது. லிச்சவி மக்களைப் புத்தர் அடிக்கடி புகழ்ந்து பேசி யிருக்கிறார். "அவர்கள் தேவர்களைப் போல் உடையுடுத்து அலங்காரமாய் வாழ்பவர்கள்" என்று சொல்கிறார்.

ஒரு முறை புத்தர் இராஜகிருகத்தில் உறையும்போது, அவர் அந்த நகரத்தை இறுதியாக விட்டுப் பிரிவதற்கு முன்பு, விரிஜி நாட்டின் மீது படை யெடுக்க எண்ணங்கொண்ட மகத மன்னன் அஜாதசத்துரு வர்ஷகாரகன் என்ற மந்திரி மூலமாகத் தன் எண்ணம் கைகூடுமா என்று புத்தரின் கருத்தையறிந்து வருமாறு கேட்டு வரச் சொன்னன். வர்ஷகாரகன் போய், புத்தர் விரிஜி நாட்டவர் மீது என்ன அபிப்பிராயம் கொண்டிருக்கிறார் என்று மறைமுகமாக விசாரித்தான். புத்தர் ஆனந்தரைப் பார்த்து, விரிஜி நாட்டு மக்கள் பின் வரும் அவர்களுடைய ஏழு நியமங்களின்படி ஒழுகி வருகிறார்களா என்று கேட்டார்:

"லிச்சவி கணம் என்ற அவர்கள் கூட்டம் அடிக்கடி பொதுச் சபை கூடி ஆலோசனை நடத்துகிறார்களா? இரண்டாவதாக, அவர்கள் சபை கூடித் தீர்மானங்களையும், பின்னர் அத்தீர்மானங்களின்படி கருமங்களையும் அபிப்பிராய பேத மின்றி நிறைவேற்றுகிறார்களா? மூன்றுவதாக, அவர்கள் தமது பாரம்பரியக் கொள்கைகளுக்கும் தாம் செய்யும் வாக்குறுதிகளுக்கும் மதிப்புக் கொடுக்கிறார்களா? நான்காவதாக, அவர்கள் தமது இனத்தவர்களை மதித்து அவர்களை ஆதரித்து வருகிறார்களா? ஐந்தாவதாக, பெண்களுக்கு மதிப்புக் கொடுத்து வருகிறார்களா? பலாத்காரமாகப் பெண்களை அபகரிக்கவோ முறைகேடாக நடத்தவோ இடமில்லாமல் யோக்கியமாய்

வாழுகிறார்களா? ஆறுவதாக, தாம் வணங்கும் கோயில்களுக்கு மரியாதை செலுத்தி அவற்றைக் கிரமமாக ஆதரித்து வருகிறார்களா? ஏழாவதாக, அவர்கள் தம்முடன் வாழும் தவ முனிவர்களை ஆதரித்துக் காத்து வருகிறார்களா?"

இந்த ஏழு நியமங்களைப் பற்றிப் புத்தர் ஆனந்தரிடம் வினவினர். லிச்சவி கணத்தவர்கள் விரிஜி நாட்டிலே மேற்சொன்ன ஏழு விதிகளையும் முறை தவறாமல் கடைப்பிடித் தொழுகி வருகிறார்கள் என்று ஆனந்தர் சொன்னதும் புத்தர், "இந்த ஏழு தருமங்களையும் விரிஜியர் கடைப் பிடித்து ஒழுகும் வரை அவர்களை எவரும் வெற்றி கொள்ள முடியாது" என்றார்.

அஜாதசத்துருவின் தூதுவன் இதைக்கேட்டுத் திரும்பிப் போன பின்னர் புத்தர் அந்த ஏழு ஒழுக்கங்களையும் பௌத்த சங்கத்துக்குக் கட்டாய விதிகளாக விதித்தார் என்று சொல்லப்படுகிறது. இப்படியே அனேக லிச்சவிகணக் குடியரசு முறைகளெல்லாம் பௌத்த சங்க அமைப்பு முறையில் காணப்படுகின்றன.

ஜைன மதத்தின் தந்தையாகிய வர்த்தமான மஹாவீரர் பிறந்தது இந்த வைசாலியில்தான். அதன் காரணமாக வைசாலி புகழ் பெற்ற ஒரு ஜைன க்ஷேத்திரமாக விளங்கியது. தவ வலிமை மிக்க முனிவர்கள் அக்காலத்தில் வைசாலியில் வாழ்ந்தார்கள். புத்தர் முதன் முதல் சந்தித்த இரு பெருங் குரவர்களான ஆலாரகாலாமரும் ருத்திரக ராமபுத்திரரும் வைசாலியில் தவம் செய்து புகழ் பெற்றவர்கள் என்றும் சில நூல்கள் கூறுகின்றன.

புத்தருக்குப் பின் நூறு ஆண்டுகள் கழித்துக் கூடிய பௌத்த மகா சங்கமும் வைசாலியிலேயே கூடியது. பௌத்த சங்கத்தில் பெரும் பிளவு ஏற்பட்டிருந்தது என்றும், பல பிக்ஷுக்கள் விநய ஒழுக்கங்களை விபரீதமாகப் பொருள்கொண்டு நடந்தனர் என்றும் கண்டு அவற்றைத் திருத்துவதற்காக இரண்டாவது மகாசங்கம் கூட்டப்பட்டது. அப்படிக் கூடிய சங்கம் வைசாலியில்தான் நடை பெற்றதாகத் தீபவம்சம் என்ற காவியம் குறிப்பிடுகிறது.

இவ்வளவு சிறப்பு வாய்ந்த வைசாலியைப் புத்தர் தமது முக்கிய மான இருப்பிடமாகக் கொள்ளாமல் இராஜகிருகத்தையும் சிராவஸ்தியையும் எதற்காகத் தெரிந்தெடுத்தார் என்று தெரியவில்லை. ஒருவேளை மஹாவீரர் செல்வாக்கே காரணமா யிருக்கலாம்.

புத்தர் வைசாலிக்கு மூன்று தடவை விஜயம் செய்திருக்கிறார் என்று புராணங்கள் கூறுகின்றன. முதலில் அவர் வந்தது சித்தார்த்தரா யிருந்து துறவு பூண்டு இராஜகிருகத்துக்குப் போகும் வழியிலே. ஞானோதயம் பெற்ற பின்னர் வந்தது அவர் தந்தையார்

இறந்த சமயத்தில் கபிலவஸ்துவுக்குப் போய் மீண்டும் இராஜகிருகம் திரும்பும் மார்க்கத்தில். மூன்றுவது முறையாக அவர் இறுதி யாத்திரையின் போது வைசாலிக்கு வந்தார்.

கபிலவஸ்துவில் தந்தை சுத்தோதனன் இறந்தபின் அங்கேயுள்ள நியக்குரோத ஆராமத்தில் புத்தர் தங்கியிருந்தபோது விதவையான பிரஜாவதி கோதமி, புத்தரை வளர்த்தெடுத்த தாய், அண்ணலிடம் வந்து தானும் சங்கத்தில் சேரப்போவதாக எண்ணங் கொண்டிருப்பதாகவும், எப்படியும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்றும் இரந்து கேட்டாள். ஆனால், அவர் சங்கத்தில் பெண்களைச் சேர்க்கலாகாது என்ற பிடிவாதமான கொள்கையுடையவராகையால் முடியாது என்று மறுத்துவிட்டார். மூன்று தடவை அவள் கேட்டாள். மூன்று தடவையும் மறுக்கப்பட்டது. பெண்களைச் சங்கத்தில் சேர்த்துக் கொண்டால் சங்கத்தில் பல தீமைகள் ஏற்படுமென்பது புத்தரின் கொள்கை. ஆனால், பிரஜாவதி கோதமி நம்பிக்கையை இழக்கவில்லை. எப்போதோ ஒரு நாள் தனது விருப்பம் நிறைவேறும் என்று காத்திருந்தாள்.

ஜைன மதத்தின் செல்வாக்கு அதிகரித்திருந்த வைசாலியில் ஜைன சந்நியாசினிகள் பலர் இருந்தார்கள். அவர்களில் சிலர் மிகவும் கீர்த்தி பெற்றவர்கள். புத்தர் வைசாலிக்கு வந்த காலத்தில் அதன் பக்கத்திலிருந்த மகாவனம் என்ற காட்டினருகே கூடாகார விஹாரம் என்ற ஆசிரமத்தை லிச்சவிகள் கட்டிக்கொடுத்திருந்தார்கள். அதிலேதான் அவர் தங்கியிருந்து தமது சீடர்களோடு தருமோபதேசம் செய்வது வழக்கம். வைசாலியில் அவர் தங்கியிருக்கிறார் என்ற செய்தியைக் கேள்விப்பட்ட பிரஜாவதி கோதமி மகிழ்ச்சியடைந்தாள். அங்கே நூற்றுக்கணக்கான ஜைன சந்நியாசினிகள் வாழ்வதைக் காணும் புத்தர் தன்னையும் சேர்த்துக்கொள்ள மறுக்கிறார் பார்க்கலாம் என்ற நம்பிக்கையுடன் வேறு பல பெண்களையும் சேர்த்துக்கொண்டு கூந்தலை மழித்துவிட்டு, காஷாயம் தரித்து, கபிலவஸ்துவிலிருந்து வைசாலி வந்து சேர்ந்தாள். கூடாகார விஹாரத்தின் முன்பாக நின்ற கோதமி, நேரில் விஹாரத்தினுட் செல்வது முறையல்ல என்று சிந்தித்தவளாய், பிக்ஷு ஆனந்தருக்குச் சொல்லியனுப்பினாள். ஆனந்தர் வந்து பார்த்தார்.

நெடுந்தூரம் வழி நடந்து வந்ததால் வீங்கிப் புடைத்துப் போயிருந்த பாதங்களில் தூசி படர்ந்திருக்கக் கோதமியும் மற்றும் பெண்களும் விம்மி அழுதுகொண்டிருந்தனர். கோதமி ஆனந்தரைப் பார்த்து, "நாங்கள் பிக்ஷுணிக் கோலம் கொண்டுவிட்டோம். இனி எங்களை எவரும் தடுக்க முடியாது. ஆகையால் கௌதமர் எம்

மையும் சங்கத்தில் சேர்த்துக்கொள்ளும் வரை இங்கேயே அலைந்து திரிவோம்" என்று சொல்லிவிட்டாள். ஆனந்தர் புத்தரின் சம்மதத்தை எப்படிப் பெறுவதென்று ஆலோசித்துக்கொண்டு ஆசிரமத்துக்குள் சென்றார். தகுந்த சமயம் பார்த்து அவர் அண்ணலை நாடி, "கபிலவஸ்துவி லிருக்கையில் மஹாபிரஜாவதி கோதமி அம்மையார் சங்கத்தில் சேர வேண்டுமென்று கேட்டாரே. அவரை இப்போதாவது ஏற்றுக்கொண் டருளினு லென்ன?" என்று கேட்டார். புத்தர் அது முடியாத காரியம் என்று சொல்லி மறுத்தார். ஆனந்தர் மும்முறை கேட்டும் அந்த மூன்று தடவையும் புத்தர் சம்மதிக்கவில்லை.

சிறிது நேரம் யோசனை செய்துவிட்டு ஆனந்தர் கேட்டார்: "இல்லறத்திலிருந்து துறந்த ஒரு பெண் தருமத்தைக் கேட்டுணர்ந்த வளாய் ததாகதரால் சொல்லப்பட்ட சீலங்களைக் கடைப் பிடித்துத் துறவு வாழ்க்கை வாழ்ந்தால் அவள் முத்தி யின்பத்தைப் பெற முடியுமா?"

"ஆம். அந்தப் பெண்ணும் முத்தி யின்பத்தைப் பெற முடியும்" என்று பதிலளித்தார் புத்தர். உடனே ஆனந்தர், "அப்படியானால், பதந்தரே! அண்ணலின் சிற்றன்னையார் பிரஜாவதி கோதமியார், தங்களைத் தாலாட்டி வளர்த்தவர், எவ்வளவோ உத்தமமான சேவையைச் செய்திருக்கிறார். தருமராஜனுக்குத் தாயாக இருந்து வளர்த்தவரல்லவா அந்த அம்மையார்? அவர் இப்போது துறவுக் கோலம் பூண்டுவிட்டார். சீலத்தைக் கடைப்பிடித்து ஒழுகி வருகிறார். ஆகையால், அவரைப் போன்ற பெண்களைச் சங்கத்தில் சேர்த்துக் கொள்வதில் என்ன தடை?" என்று கேட்டார். புத்தர் சிறிது நேரம் யோசித்துவிட்டுப் பின்வருமாறு பதிலளித்தார்.

"ஆனந்தா, மஹாபிரஜாவதி கோதமி அட்ட நியமங்களைக் கடைப்பிடித் தொழுகுவாளானால் அதுவே அவளுக்குத் தீக்ஷையாகும். அவளும் சங்கத்தில் சேரலாம்" என்று சொல்லிப் பின்வரும் எட்டு நியமங்களையும் எடுத்துரைத்தார்.

"பிக்ஷுணியா யிருப்பவள் தனது முதற் கடமையாக எல்லா பிக்ஷுக்களையும் வணங்க வேண்டும். அவள் எவ்வளவு முதியவளா யிருந்தாலும், பிக்ஷு எவ்வளவு இளையவரா யிருந்தாலும், இந்த நியமம் கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

"வர்ஷகால வாசம் செய்யும்போது எந்த பிக்ஷுணியும் பிக்ஷுக்கள் எவருமில்லாத பகுதியில் வசிக்கலாகாது.

"மாதத்தில் இரு முறை பிக்ஷுணிகள் உபவஸத நாளைப் பற்றியும் பிராதிமோக்ஷ ஏற்பாட்டைப்பற்றியும் பிக்ஷுக்களிடம் கேட்டறிந்து கொள்ளவேண்டும்.

"வர்ஷகாலம் முடிந்த பின்னர் பிக்ஷுக்களும் பிக்ஷுணிகளும் கூடியுள்ள சங்கத்தின் முன்பு ஒவ்வொரு பிக்ஷுணியும் பிரவாரணை செய்துகொள்ள வேண்டும். அதாவது, தன் குற்றங்களைக் கூறும்படி சங்கத்தாரிடம் வேண்டிக்கொள்ள வேண்டும்.

"பாரிய குற்றத்தைச் செய்தவளாக இருந்தால் இரு சங்கத்தாரும் அளிக்கும் தண்டனையை பிக்ஷுணி ஏற்றுப் பரிவாசம் செய்ய வேண்டும். அதாவது, பதினைந்து நாட்களுக்கு ஆசிரமத்துக்கு வெளியே உறைய வேண்டும்.

"இரண்டு வருட காலம் தருமத்தில் பயிற்சி பெற்று ஆறு விஷயங்களிலும் தேர்ச்சி பெற்றபின் பிக்ஷுணியானவள் இரு சங்கத்தார் முன்பும் உபசம்பதை யென்ற தீக்ஷை பெறவேண்டும்.

"எந்த ஒரு காரணத்தைக் கொண்டும் ஒரு பிக்ஷுணி ஒரு பிக்ஷுவைக் கடிந்து கொள்ளவோ எதிர்த்துப் பேசவோ கூடாது."

"பிக்ஷுணிகள் பிக்ஷுக்களுக்கு உத்தரவுகள் கொடுக்கலாகாது; பிக்ஷுக்கள் பிக்ஷுணிகளுக்கு உத்தரவுகள் கொடுக்கலாம்."

புத்தர் சொன்ன இந்த எட்டு விதிகளையும் ஆனந்தர் பிரஜாவதி கோதமியிடம் தெரிவித்து, "இந்த நியமங்களை ஒப்புக்கொள்வீர்களானால் அதுவே தங்களுக்குச் சங்கத்தில் சேர உரிமையளிக்கும் உபசம்பதை தீக்ஷையாகக் கருதப்படும்" என்றார். கோதமி உளம் மகிழ்ந்து, "ஆனந்தரே! என் இரு கை கூப்பி அவற்றை ஏற்று என் சிரசில் வைத்து வணங்குகிறேன். இந்த அட்ட நியமங்களையும் நான் இவ்வுயிருள்ளவரையும் கடக்கத் துணியேன்" என்றாள். ஆனந்தர் திரும்பிச் சென்று புத்தரிடம் பிரஜாவதி கோதமி அட்ட நியமங்களையும் ஏற்றுக்கொண்டார் என்று அறிவித்ததும் புத்தர் சொன்னார்:

"ஆனந்தா! பெண்களுக்குச் சங்கத்தில் இடம் கிடைக்காமலிருந்தால் பிரமசரியமாகிய இம் மதம் ஆயிர வருட காலம் நிலைத்து நிற்கும். ஆனால், இப்போது பெண்களும் சேர்க்கப்பட்டு விட்டதால் ஐந்நூறு வருட காலத்துக்கே நிலைக்கும்" என்றார்.

புத்தர் ஏன் இவ்வாறு வருத்தப்பட்டார் என்பது தெரியவில்லை. அனேக காலமாகவே பெண்கள் முக்கியமான காரியங்களில் பங்கெடுத்துக்கொள்ளலாகாதென்ற வழக்க மிருந்த போதிலும் ஜைன சங்கத்தில் அவர்களுக்கு எப்போதுமே தடை யெதுவு மில்லாமல் எண்ணிக்கையற்ற சந்நியாசினிகள் சேர்ந்திருந்தார்கள். மஹா பிரஜாவதி கோதமியே முதன் முதலாகச் சங்கத்தில் சேர்ந்த பௌத்த பிக்ஷுணி. அதன் பின் க்ஷேமை என்ற பிம்பிசாரன் மனைவியும் சங்கத்தில் சேர்ந்தாள். சிராவஸ்தியில் கிரிஷா

கோதமி என்ற பெண்ணும் சேர்ந்தாள். இவள் தன் குழந்தை யிறந்ததும் அவன் உயிரைப் பிழைப்பிக்கவேண்டு மென்று புத்த ரிடம் வேண்டினாள். புத்தர் அவளைப் பார்த்து, "இந்த ஊரிலே யாராவது ஒருவர் வீட்டிலே போய்க் கொஞ்சம் கடுகு வாங்கி வா. ஆனால், நீ கடுகு வாங்கும் வீட்டிலே எப்போதாவது எவராவது இறவாம லிருந்திருக்க வேண்டும்" என்று சொல்லி யனுப்பினர். அவள் வீடு வீடாக அலைந்தாள். எங்கு போனாலும், 'எங்கள் தந்தை யிறந்தார், தாயார் அல்லது பாட்டி யிறந்தாள்' என்று சொன் னார்கள். அதனால் இறவாத பெருமையுடைய ஒரு வீடும் அகப்படா மல் அவள் புத்தரிடம் திரும்பி வந்து நடந்ததைச் சொன்னாள். புத்தர் அவளுக்கு மரணத்தின் உண்மையை விளக்கித் தருமத்தைப் போதித் தார். கிரிஷா கோதமி மெய்ஞானம் பெற்றுச் சங்கத்தில் சேர்ந்து கொண்டாள் என்று சொல்லப்படுகிறது.

சிராவஸ்தியிலேயே பிக்ஷுணியாகச் சேர்ந்து உயர்ந்த நிலை யைப் பெற்ற மற்றொரு பெண் பாதசாரி என்பவள். இவள் ஆடை யின்றி நிர்வாணக் கோலத்தோடு பைத்தியம் பிடித்து அலைந்து திரிந்தவள். புத்த தீக்ஷண்ணியம் பட்டதும் உடனே அவள் சுய நிலைக்கு வந்து அவரிடம் தருமோபதேசம் பெற்றுச் சங்கத்தில் சேர்ந்தாள்.

இப்படிப் பெண்களைச் சங்கத்தில் சேர்த்துக் கொண்ட போதி லும் புத்தர் சொன்ன தீர்க்க தரிசனத்தில் எவ்வளவோ உண்மை யிருக்கிறது என்று ஓர் ஆராய்ச்சியாளர் கருதுகின்றார். புத்தருக்கு ஐந்நூறு ஆண்டுகளுக்குப் பின்னர்தான் பௌத்த சங்கத்தில் மஹா யானம் ஹீனயானம் என்ற பிரிவுகள் தோன்றி, வைதிக மதத்தின் செறிவுகளெல்லாம் மஹாயானத்தில் படிந்து அது பரவ, ஹீன யானம் இந்தியாவில் குன்றியது. பின்னர் ஐந்நூறு ஆண்டுகள் செல்ல, புத்தர் சொன்ன ஆயிரம் ஆண்டுக்காலம் முடிய, கி. பி. ஐந்தாம் ஆரும் நூற்றாண்டில் புத்த மதமே இந்தியாவில் நிலைக்க முடியாமல் போய்விட்டது.

வைசாலியில் புத்தர் தங்கி யிருந்த போது மற்றொரு முக்கிய மான சம்பவமும் நிகழ்ந்ததாகப் பௌத்த நூல்கள் பாராட்டிப் பேசுகின்றன. சீஹன் என்ற லிச்சவி கணத்தின் சேனாபதி யொரு வன் நிர்கிரந்தர்களான ஜைனர்களில் மிகுந்த பற்றுள்ளவன். அவன் குடும்பமே ஜைனத் துறவிகளுக்கு அன்னமிட்டு ஆதரித்து வந்தது. அவன் ஒரு நாள் புத்தரைச் சந்தித்துப் பேசிய பின் அவர் தருமத் தில் சிரத்தை கொண்டு பௌத்தத்தைத் தழுவினன். இருந்தும் புத்தர் அவனுக்குச் சொன்ன புத்திமதி இதுதான்: "சீஹா! நெடுங்

காலமாக உனது குடும்பம் நிர்கிரந்தர்களை ஆதரித்து வந்திருக்கிறது. ஆகையால், நீ தருமத்தில் சரணடைந்த போதிலும் வழக்கமாக நிர்கிரந்த சிரமணர்களுக்கு அன்னமிட்டு வந்ததை நிறுத்திவிடாதே." இந்த ஓரிடத்தில்தான் புத்தர் ஜைனரிடத்தில் தாராள மனப்பான்மை காட்டுவது புலனாகிறது.

மஹாசச்சகன் என்ற ஜைன சிரமணன் வைசாலியில் வைத்துத் தான் புத்தருடன் ஆன்மவாதம் பற்றி வாதாடினான். புத்தரின் நியாயங்கள் எவற்றையும் அவன் ஏற்றுக்கொள்ளவில்லை. தமது சரீரத்தில் புத்தர் பற்றுக்கொண்டிருக்கிறார் என்று சச்சகன் விதண்டாவாதம் செய்தபோதுதான் புகழ் பெற்ற மஹாசச்சக சூத்திரம் என்ற பிரசங்கத்தைச் செய்தார் புத்தர். அதில் தாம் துறவு பூண்டு ஞானோதயம் பெற்ற வரலாற்றில் சில சந்தர்ப்பங்கள் கூறப்பட்டுள்ளன. ஆயினும் இறுதியில் சச்சகன் விட்டுக்கொடாமல் திரும்பி விட்டான்.

முப்பதாம் அத்தியாயம்

மாஞ்சோலை மங்கை

புத்தர் இறுதி யாத்திரையில் வைசாலிக்கு வந்தபோது நடந்த ஒரு நிகழ்ச்சிதான் அவர் தருமோபதேச வாழ்க்கையில் நிகழ்ந்த சம்பவங்களிலெல்லாம் மிகவும் அற்புதமான, அழகு நிறைந்த கதை. காவிய காரருக்கெல்லாம் கருக்கொடுத்த சிறந்த கதை.

ஒரு நாள் மாலை அவர் வைசாலியிலுள்ள ஆம்ரவனம் என்ற மாஞ்சோலையில் தங்கி யிருந்தார். அவரது சீடர்களெல்லாம் தருமோபதேசம் கேட்பதற்கு ஆயத்தமா யிருந்தார்கள். அந்த மாஞ்சோலை வைசாலியில் மிகப் புகழ்பெற்று விளங்கிய கணிகை மாதாகிய அம்பபாலிக்குச் சொந்தமானது. இவள் தாயார் லிச்சவிக் கணத்திலுள்ள ஒரு போர்வீரனுடு இரகஸ்ய நட்பு வைத்திருந்த தாயும், அவள் வயிற்றிற் பிறந்த பெண் குழந்தையை ஒரு மாமரத் தடியில் போட்டு விட்டுச் சென்றதாயும், அவளை வளர்த்தவர்கள் அவளுக்கு அம்பபாலி (ஆம்ரபாலி, ஆம்ரம்-மாமரம்) என்று பெயரிட்டதாகவும் கதை. அம்பபாலி இளம் வயதிலேயே சகல கலைகளும் கற்றுத் தேறினாள். மிகச் சிறந்த அழகி. ஆடல்பாடல்களில் நிகரற்று விளங்கிய கணிகை மாதான இவளைத் தரிசிக்க நாட்டின் பல பாகங்களி லிருந்தும் செல்வர்கள் வந்து போவார்கள். வைசாலியில் வாழ்ந்த லிச்சவி இளைஞர்களுக்கெல்லாம் அம்பபாலியை மணக்க வேண்டு மென்ற ஆசை. ஏழாயிரம் இளைஞர்கள் அவளை மணக்கக் காத்திருந்தார்கள் என்று சொல்லப்படுகிறது. ஆனால் மன்னர்களிட மெல்லாம் நட்புக்கொண்டிருந்த அம்பபாலி எவரையும் மணந்து கொள்ளச் சித்தமாயில்லை.

இத்தனை பேரழகியான அம்பபாலி ஒரு நாள் புத்தபகவான் தனது மாஞ்சோலையில் வந்திறங்கி யிருக்கிறார் என்ற செய்தியைத் தாதி யொருத்தியின் மூலமாகக் கேள்விப்பட்டு எவரும் எதிர்பாராத விதமாக அந்த அண்ணலைக் கண்டு தரிசிக்கச் சென்றாள். அவள் சென்ற சமயம் பகவான் தமது சீடர்களுக்குப் பின் வரும் உபதேசத்தைச் செய்துகொண்டிருந்தார்.

"பிக்ஷுக்களே, உங்கள் சித்தத்தை ஒழுங்காக வைத்துக் கொள்ளுங்கள். எண்ணங்களை அங்கு மிங்கும் அலைய விடாதீர்கள். ஆசிரமத்துக்கு வெளியே செல்லும்போதும், உள்ளே வரும்போதும்,

கண்களால் எதைப் பார்க்கினும், ஆடைகள் தரிக்கும்போதும், உண்ணும்போதும், உறங்கும்போதும், பேசும்போதும், மௌனமாயிருக்கும்போதும்—எந்தக் காரியம் செய்தாலும் அந்தக் காரியத்திலேயே சிந்தனையோடிருங்கள். ஆசைக்கு இடங்கொடாதீர்கள்."

இந்த வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டே நின்றாள் அம்பபாலி. அவள் சித்தமெல்லாம் தூய்மை பெற்றது. பிரசங்கம் முடிந்ததும் அம்பபாலி பகவான் பக்கத்தில் போய் நின்று நமஸ்கரித்துவிட்டு, "அண்ணலே! தாங்களும் அடியார் கூட்டமும் நாளை என் சிறு குடிலில் அமுதுண்ண எழுந்தருளவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அந்தப் பாக்கியம் எனக்குக் கிடைக்குமா?" என்று கேட்டாள். புத்தர் இப்படி அமுதுண்ண வரும் அழைப்புக்களுக்குச் சம்மதம் தெரிவிக்க வாய் விட்டுப் பேசாமல் மௌனமாயிருப்பதுதான் வழக்கம். அங்ஙனம் அவர் மௌனமாயிருந்ததும் அம்பபாலி ஆனந்த பரவசத்துடன் மீண்டும் அவரை வணங்கிவிட்டு, வெளியே காத்து நின்ற தேரில் ஏறித் தன் மாளிகைக்குச் சென்றாள்.

அம்பபாலி திரும்பிச் செல்லுகையில் லிச்சவிப் பிரபுக்கள் பலர் கம்பீரமான தோற்றத்துடனும் விலை மதிக்க முடியாத ஆடையாபரணங்களுடனும் எதிர்ப்புறத்தில் தமது தேர்களைச் செலுத்திக் கொண்டு வந்தனர். அம்பபாலியின் தேர் வெகு வேகமாகச் சென்று கொண்டிருப்பதைக் கவனித்த சிலர், "ஏது, அம்பபாலி இவ்வளவு களிப்புடன் வேகமாகச் செல்கிறாள்?" என்று ஆலோசித்தனர். அம்பபாலி அவர்களைக் கண்டதும் தனது தேரை நிறுத்திவைத்து, வழக்கமான தனது மரியாதையைச் செலுத்துவதற்காக வணங்கினாள். அப்போது லிச்சவிப் பிரபு ஒருவர் கிண்டலாக, "என்ன அம்பபாலி, இன்று என்றுமில்லாத குதூகலத்தோடு தேரை மிக வேகமாகச் செலுத்திச் செல்கிறாயே? ஏதாவது விசேஷமுண்டா?" என்று கேட்டார். அம்பபாலி, "ஆம், மிகவும் விசேஷமான செய்திதான். ஆம்ரவனத்தில் போதிநாதனுகிய புத்தர் வந்திருக்கிறார். அவர் நாளைய தினம் எனது மாளிகைக்கு விருந்துண்ண வருகிறார். அதுதான் இவ்வளவு சந்தோஷத்துக்குக் காரணம்" என்றாள்.

இதைக் கேட்டதும் லிச்சவிப் பிரபுக்கள் அப்படியே ஸ்தம்பித்துப் போயினர். "வைசாலியில் இத்தனை பிரபுக்கள் இருக்கவும், எமது மாளிகைகளில் வரவேற்பு நடப்பதற்கு முன்னர், ஒரு கணிகை வீட்டில் புத்தரை வரவேற்பதா? இது வைசாலி நகரத்துக்கும் லிச்சவி கணத்துக்குமே அவமானம்" என்று நினைத்துக்கொண்டனர். அதில் ஒருவர் அம்பபாலியைப் பார்த்து, "நீ சொல்வது உண்மைதானு அல்லது எங்களைக் கேலி செய்கிறாயா?" என்று கேட்டார்.

"உண்மையாகத்தான் சொல்லுகின்றேன். புத்தர் நாளைய தினம் எனது வீட்டுக்கு வருவார்" என்றாள் அம்பபாலி.

"அம்பபாலி, அதை மறந்துவிடு. சிரமணர்களை உன் வீட்டுக்கு அழைத்து விருந்து கொடுப்பதை நிறுத்திவிடு. அதற்கு ஈடாக நாங்கள் உனக்கு ஆயிரம் பொற்காசுகள் தருகிறோம்" என்று கேட்டனர் லிச்சவிகள். அம்பபாலி சிரித்துவிட்டு, "வைசாலி நகரத்தையே எனக்கு நீங்கள் பரிசாகக் கொடுத்தாலும் பகவான் புத்தரை என் வீட்டுக் கழைப்பதைக் கை விடேன்" என்று சொல்லிவிட்டுத் தேரைச் செலுத்தச் சொன்னாள்.

லிச்சவிப் பிரபுக்களுக்கு ஆத்திரம் தாங்க முடியவில்லை. அவர்கள் அத்தனை பேரும் சேர்ந்து, "எப்படியும் இந்த விருந்தை நிறுத்திவிட வேண்டும். புத்தரிடம் நாமே போய் நமது விருந்தில் பங்கு கொள்ளவேண்டு மென்று கேட்டுவிடுவோம். லிச்சவிப் பிரபுக்கள் விருந்தை அவர் ஒருபோதும் மறுக்க மாட்டார்" என்று தீர்மானித்துக்கொண்டு நேரே புத்தர் தங்கியிருந்த ஆம்ரவனத்துக்குச் சென்றனர்.

புத்தர் முன்னிலையில் சென்று அவருடைய உபதேசங்கள் சிலவற்றைக் கேட்ட பின் லிச்சவிகள், "ஐயனே! நாளைய தினம் எங்களுடன் விருந்துண்ணும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்" என்று வேண்டிக்கொண்டனர். புத்தர் உடனே பதிலாக, "தாசிப்பெண் அம்பபாலியின் வீட்டில் உணவுக்கு வருவதாக வாக்களித்துவிட்டேன்" என்று சொல்லிவிட்டு, மீண்டும் தனது பிரசங்கத்தைத் தொடர்ந்தார். லிச்சவிகள் மனமுடைந்துபோய்த் தங்கள் வீடுகளுக்குத் திரும்பினர்.

மறுநாள் அம்பபாலியின் வீட்டில் விருந்து நடந்தது. உள்ளன்போடு அவள் பிக்ஷு சங்கத்தாருக்கு உணவு படைத்தாள். உபசரித்தாள். உணவு முடிந்ததும் அவள் புத்தரின் பக்கத்தில் வந்து மண்டியிட்டு வணங்கி, "அண்ணலே! இன்றே என் மனம் சாந்தியடைந்தது. தங்கள் புனிதமான பாதங்கள் பட்டு என் வீடு தூய்மையடைந்துவிட்டது. தங்கள் அருள் இங்கு என்றென்றும் நிலைத்து நிற்கப் பிரார்த்திக்கிறேன். அண்ணலும் சங்கத்தவரும் என்றென்றும் தங்கியிருக்க எனது ஆம்ரவனத்தைக் காணிக்கையாகப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறேன்," என்று சொல்லி அந்த மாஞ்சோலையை உவந்தளித்தாள். பின்னர் சில நாட்களில் அவளும் துறவியாகிப் புத்த சங்கத்தில் சேர்ந்துகொண்டாள்.

★

வைசாலிக்கு நாங்கள் சென்றபோது முதன் முதலாகத் தரிசித்த இடம் 'கொலுஹா' என்று சொல்லப்படுகிறது. இது ஒரு சிறு சேரிப்புறம். நாலைந்து குடிசைகள் மாத்திரம் இருக்கின்றன. மோட்டாரைச் சாலை யோரத்தில் நிறுத்திவிட்டுச் சுமார் கால்மைல் தூரம் கோதுமை வயல்களுக் கூடாக நடந்து சென்றபோது அங்கே அசோக ஸ்தம்பம் ஒன்றிருக்கக் கண்டோம். இருபத்திரண்டு அடி உயரமுள்ள இந்த ஸ்தம்பத்தின் உச்சியில் சிங்க வடிவம் வைக்கப் பட்டுள்ளது. ஆனல் ஸ்தம்பத்தில் எவ்விதமான கல்வெட்டு சாசன மும் காணப்படவில்லை. அசோக மன்னன் தரும யாத்திரை செய் யும்போது பல இடங்களில் தனது மார்க்கத்தைக் காண்பிக்க நிறுத்திய ஸ்தம்பங்களில் ஒன்று இது என்று சொல்லப்படுகிறது. இந்த ஸ்தம்பத்தின் பக்கத்திலே ஒரு சிறு மண் மேடும் அதன் மேல் சிறிய சாந்துக் கட்டிடமும் அதனுள் ஒரு விக்கிரகமும் இருக்கின்றன. இந்தச் சிலை புத்தர் சிலை என்றுதான் சொல்கிறார்கள். மத்திய காலத்து விக்கிரகமாகையால் புத்தர் சிலையா அல்லது மகாவீரர் சிலையா என்று சொல்ல முடியவில்லை.

அசோக ஸ்தம்பத்தைப் பார்த்துவிட்டு மேலும் சென்றோம். வழியிலே மற்றோரிடத்தில் தொல் பொருளாராய்ச்சி இலாகாவினர் அரைவாசியில் தோண்டியபடி வைத்திருந்த ஒரு காட்சி தெரிந்தது. இங்கேதான் புத்தரின் அஸ்தி வைக்கப்பட்ட ஒரு ஸ்தூபி இருந்தது என்று சொல்லப்பட்டது. ஸ்தூபி இருந்ததைக் குறிக்கச் செங்கற் கட்டிடமொன்று வட்ட வடிவில் காணப்பட்டது. ஆராய்ச்சி வேலை இன்னும் முற்றுப் பெறவில்லையாகையால் அந்த இடத்தில் மழை பெய்து சேதப்படுத்தாம லிருக்க ஒரு கூரை போட்டு வேய்திருந் தார்கள். பிற்காலத்தில் ஆராய்ச்சி வேலை முடிவடைந்ததும் தட யங்கள் கிடைக்கலா மென்று நம்பப்படுகிறது.

மேலும் நடந்து சென்றோம். "வைசாலி மியூசியத்தை நீங்கள் அவசியம் பார்க்க வேண்டு" மென்று எமது மோட்டாரோட்டி வற் புறுத்தினன். "அப்படி ஒரு மியூசியம் இங்கு இருக்கிறதா? நாங்கள் தெரியாம லிருந்தோம், சரி" என்று சொல்லி நடந்து போகையில் ஒரு சோலையின் மத்தியில் சிறு கட்டிடம் ஒன்று எதிர்ப்பட்டது. ஆனல், கட்டிடத்தின் கதவுகள் பூட்டப்பட்டிருந்தன. யாரோ ஒரு வேலையாள் வெளிப்புறத்தில் நிற்பதைக் கண்ட வஸந்தராம் மியூசி யத்தைத் திறக்கச் சொன்னன். ஆனல், மியூசியத்தைக் கண்காணிப் பவர் வெளியே போய்விட்டார் என்றும் அவர் எத்தனை மணிக்குத் திரும்பி வருவாரோ தெரியாதென்றும் அந்த வேலைக்காரன் சொல்லி விட்டான்.

வஸந்தராம் திடீரென ஒரு பெரிய போடு போட்டான். "இப்படித் தான் இங்கே நிர்வாகம் நடக்கிறதா? வெகு தூரத்திலிருந்து 'கலெக்டர்' வந்திருக்கிறார். இந்த படே உத்தியோகஸ்தர் வரும் போதே இப்படி யிருந்தால், மற்றும் வேளையில் எப்படி நடக்கும்?" என்று இரகஸ்யமாக அவனுக்கு எச்சரிக்கை யொன்று செய்து வைத்தான். 'கலெக்டர்' ஒருவர் வந்திருக்கிறார் என்றவுடன் அந்த வேலையாள் ஓட்டம் பிடித்தான்! நாங்களும் சற்று தூரம் நடந்து மற் றோர் காட்சியைப் பார்த்துவிட்டுத் திரும்பி வருகையில் யாரோ ஒருவர் வியர்க்க விறைக்க ஓடி வந்து எங்களிடம் அழாக்குறையாக மன்னிப்புக் கேட்டுக்கொண்டு எங்களை அழைத்துப் போய்ப் பொருட் காட்சிச் சாலையைத் திறந்து அங்கிருந்த அனேக சின்னங்களை யெல் லாம் எடுத்துக் காண்பித்து விளக்கினர்!

பெரும்பான்மையான பொருள்களும் மௌரியர் காலத்துச் சின்னங்கள். சிலா விக்கிரகங்கள், மணிகள், மட்பாண்ட ஓடுகள், உலோகப் பொருள்கள், கல்லிலே செய்யப்பட்ட ஆபரணங்கள், குப்த அரசர்களின் முத்திரைகள், அவர்கள் வழங்கிய நாணயங்கள் என்றெல்லாம் காணப்பட்டன. லிச்சவிகள் தங்கள் தேர்தல் காலத்தில் உபயோகித்த 'வாக்குச் சீட்டுக்கள்' இவை என்று சொல்லி, கல்லில் செய்யப்பட்ட ஊசிகள் பலவற்றையும் அவர் காண் பித்தார். பொதுவாக நாங்கள் அங்கு பார்த்த பொருள்களெல்லாம் வைசாலி ஒரு காலத்தில் மிகச் சிறந்த நாகரிகமுள்ள பெரிய நகரமாக இருந்தது என்பதை வலியுறுத்தின. ஜைன, வைதிக, பௌத்த சின்னங்களெல்லாம் அங்கு காணப்பட்டன. விசேஷமாக அங்கே பௌத்த சின்னங்கள் அதிகம் காணப்படவில்லை. சமயச் சின்னங் களைவிட மக்கள் வாழ்க்கையில் அவர்கள் நாகரிக வளர்ச்சியைக் காண்பிக்கும் சின்னங்களே அதிகமா யிருந்தன.

பொருட்காட்சிச்சாலையைப் பார்த்துவிட்டுத் திரும்பும் வரை எனக்கு நெஞ்சிலே ஒரு பெரிய பாரமா யிருந்தது. 'கலெக்டர்' வந்திருக்கிறார் என்று வஸந்தராம் போட்ட போடு எந்தச் சமயத்தில் எப்படியாகுமோ என்று பயந்திருந்தேன். மியூசியப் பாதுகாப் பாளர் எந்த ஊர்க் 'கலெக்டர்' என்று கேட்டு விட்டால் குட்டு வெளிப்பட்டு விடுமே என்று யோசித்துக்கொண்டிருந்தேன்! நல்ல வேளையாக அந்த மனிதர் என்னிடம் சந்தேகமாக ஒன்றும் பேசாம லிருந்ததால் தப்பி விட்டோம் என்று நினைத்துத் திரும்பி வரும்போது வஸந்தராமிடம் இதைக் குறிப்பிட்டேன். "சார், அவர் என்னிடம் கேட்டார் சார்! நான் சற்றும் தயங்காமல் 'சிங்கபுரம்' என்று சொல்லி விட்டேன்! சரிதானே?" என்று கேட்டுச் சிரித்தான் வஸந்தராம்!

மேலும் நடந்தோம். இங்குதான் கூடாகார விஹாரம் இருந்தது என்று தெரிவிக்க ஒரு விளம்பரப்பலகை போடப்பட்டிருந்தது. ஆனல் பழைய கூடாகாரம் வைசாலிக்கு வெளிப்புறத்தே மகாவனம் என்ற பெரிய காட்டின் எல்லேயி லிருந்ததாகச் சொல்லப் படுகிறது. வைசாலியின் மத்தியில் எப்படி வந்ததோ தெரியவில்லே. இங்கு தொல்பொரு ளாராய்ச்சியாளர் இன்னும் வேலே ஆரம்பிக்க வில்லே யென்று தெரிந்தது.

சற்று தூரத்திலே ஒரு குளம் இருக்கிறது. இது ராமகுண்டம் என்று சொன்னர்கள். ஆனல், கன்னிங்ஹாம் என்ற அறிஞர் ஆராய்ந்தபோது அது பழைய மர்க்கட ஹ்ருதம் என்ற குரங்குக் குளம் எனக் கண்டு பிடித்தார். புத்தர் ஒரு முறை வைசாலிக்கு வந்தபோது குரங்குக்கூட்டம் அவருக்குக் தம் காணிக்கையாக ஒரு பாத்திரம் நிறையத் தேன் கொடுத்து வணங்கியதாக ஒரு கதை யுண்டு. இந்தக் கதை சாஞ்சி சிற்பங்களிலும் சித்திரிக்கப்பட்டிருக் கிறது. அந்தக் குரங்குகளே பகவானுக்கு ஒரு குளமும் தோண்டி அவர் உபயோகத்துக்குக்குக் கொடுத்ததாயும் அந்தக் குளம் மர்க்கட ஹ்ருதம் என்று வழங்கப்பட்ட தென்றும் சொல்வார்கள்.

வைசாலியின் கேந்திரஸ்தானம் என்று சொல்லப்படும் இடத்தை இப்போது ராஜ பிஸல்கா கர் (ராஜ வைசாலி கிருகம்) என்று வழங்குகின்றனர். சுமார் ஒரு மைல் சுற்றளவில், சூழவுள்ள நில மட்டத்திலும் பார்க்க எட்டு, பத்து, சில இடங்களில் பன்னிரண்டு அடி உயரத்திலுள்ள மேடான இந்தப் பூமிதான் முன்னெரு காலத்தில் வைசாலி நகரத்துப் பிரபுக்களும் வணிகரும் வசித்த மாளிகைகள் இருந்த ஸ்தலம் என்று சொல்லப்படுகிறது. தொல்பொருளாராய்ச்சி யாளர் சிற்சில இடங்களில் அகழ்ந்து பார்த்தபோது சில முக்கியமான நாகரிக வளர்ச்சியைக் குறிக்கும் சின்னங்கள் அகப்பட்டதால் இந்தச் சுற்று வட்டாரத்தை மேலும் ஆராய்ச்சி செய்ய ஒதுக்கி வைத்திருக் கிறார்கள்.

நான் போன சமயத்தில் அங்கே பரந்த வெளியில் பட்டாளத்தில் புதிதாகச் சேர்ந்த வீரர்களுக்குப் பயிற்சியளிக்கும் முகாம்கள் சில காணப்பட்டன. மற்றேரிடத்தில் தொல் பொருள் ஆராய்ச்சி இலாகாவைச் சேர்ந்த சில உத்தியோகத்தர் மேற்பார்வையில் நூற்றுக் கணக்கான தொழிலாளர் வேலே செய்துகொண்டிருந்தனர். எவ்வளவு பக்குவமாகவும் அமைதியாகவும் அவர்கள் வேலே செய் கிறார்கள்! உத்தியோகத்தர் ஒருவர் கையிலே படம் வைத்துக்கொண்டு நிற்கிறார். தொழிலாளரிற் சிலர் மண்ணே அரித்து அரித்து நிலத்தை அகழ்ந்து வருகிறார்கள். வேறு சிலர் அந்த மண்ணில்

ஏதாவது புதையல் கிடைக்குமா என்று தேடுகிறார்கள். ஒருவர் கையிலே சில செப்பு நாணயங்கள் அகப்பட்டன. அதை அந்த உத்தியோகத்தர் வாங்கி ஒரு பையில் போட்டுவிட்டு எந்த இடத்தில் எந்தத் தொழிலாளி கையில் கிடைத்தது, எத்தனை அடி ஆழத்தில் அகப்பட்டது என்ற விவரங்களை யெல்லாம் குறித்துக்கொள்ளுகிறார்.

நிலத்தைத் தோண்டத் தோண்டப் புதையல்களாகவே வெளிப் பட்டு வருகின்றன. செங்கற் கட்டிடங்கள், மாடிப்படிகள், அறைகள், மண்டபங்கள், கிணறுகள், மட்பாண்டங்கள், மணிகள், கல்லா யுதங்கள், இரும்பாயுதங்கள்—இப்படியான புராதன சின்னங்க ளெல்லாம் தோற்ற மளித்துக்கொண்டிருந்தன. நான் அக்கறையோடு கவனித்துவிட்டு என் கையிலிருந்த கமெராவைத் திறந்தேன். உடனே அங்கு நின்ற உத்தியோகத்தர் ஒருவர், "சார், சார்! இங்கே படம் பிடிப்பது அனுமதிக்கப்படவில்லை. தயவு செய்து நிறுத்திக் கொள்ளுங்கள்," என்று மிகவும் மரியாதையாக வந்து என்னிடம் தெரிவித்தார். எதற்காக என்று கேட்டேன். அவர் காரணத் தோடுதான் சொன்னார். "இப்போதுதான் ஆராய்ச்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன. அரை குறை வேலையில் நீங்கள் படம் பிடித்துக் கொண்டு போனால் பழைய நாகரிகத்தை விளக்குவதற்கு அரை குறையான ஆதாரங்கள் போதா. சில வேளை தப்பான முடிவு களுக்கும் வந்துவிடக் கூடும். பூரணமாக வேலை முடிந்தபின் படங் களைப் பிடித்தால் ஏதாவது உருப்படியான விளக்கம் பெறலாம்" என்று சொல்லிவிட்டு அவர் என்னை அழைத்துக்கொண்டு வேலை நடக்கும் மற்றோரிடத்துக்குச் சென்றார். அங்கே தோண்டப்பட்ட ஒரு விசாலமான இடத்தில் நான் இறங்கிப் பார்த்தபோது புராதன வைசாலியின் அற்புதமான நாகரிகச் சின்னங்கள் பலவற்றைக் கண்டேன். வீடுகள், சால் கிணறுகள், கிணற்றை யடுத்துக் குளிக்கும் தொட்டிகள், அறைகள், கழிவு நீர் ஓடும் மதகுகள், இப்படி யான பல சின்னங்கள் இருந்தன. அரை குறையாகத்தான் இங்கேயும் வேலை நடந்திருக்கிறது. வருஷக் கணக்கில் இந்த ஆராய்ச்சி நீடிக்கும் என்றும், நிச்சயமாக மிகச் சிறந்த நாகரிக நகரத்தின் திரை நீக்கப்படும் என்றும் அந்தத் தொல் பொருள் ஆராய்ச்சி நண்பர் எனக்குத் தெரிவித்தார்.

மற்றும் பல பௌத்த க்ஷேத்திரங்களை நான் பார்த்த போதெல்லாம் சமய சம்பந்தமான சின்னங்களையும் கட்டிடங்களையும் மாத்திரம் கண்டேன். ஆனால், வைசாலியில் அப்படியல்ல. சிறந்த நாகரிகத்துடன் விளங்கிய ஓர் அற்புத நகரம், இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னிருந்த மக்களின் வாழ்க்கைத்

தரத்தையும் அவர்கள் செல்வச் செழிப்பையும் எடுத்துக் காட்டும் ஒரு நகரம் எப்படி யிருந்தது என்பதைக் காட்டும் சான்றுகளை இந்த வைசாலியில் காண முடிந்தது.

வைசாலியில் வாழ்ந்த அந்த அழகரசி அம்பபாலியின் சரித்திர சம்பந்தமாக ஏதாவது தகவல் கிடைக்குமா என்று எனக்கு ஆவலா யிருந்தது. சுற்று முற்றும் பார்த்தால் நெல்வயல்களும் கோதுமை வயல்களும் காய்கறித் தோட்டங்களும் காணப்பட்டன. இடை யிடையே அடர்ந்த மாந்தோப்புக்கள். இந்த மாந்தோப்புக்கள்தான் வைசாலியில் அம்பபாலியை ஞாபகமூட்டிக் கொண்டிருக்கின்றன. தோப்புக்களுக்கூடாக நடந்தேன். வஸந்தராம் என்னைப் பார்த்து, "சார், நீங்கள் போய் அம்பபாலியைப் பார்த்துவிட்டு வாருங்கள், நான் இங்கேயே சற்று நேரம் உட்கார்ந்திருக்கிறேன்" என்று சொல்லி ஓரிடத்தில் குந்திவிட்டான். நான் என்னிஷ்டம்போல் சுற்றி வரும் போது ஓரிடத்தில், மாந்தோப்பின் எல்லையில், சதுர்முக மகாதேவர் என்ற சிவன் கோயில் ஒன்றைக் கண்டேன். சிறிய கோயில்தான். உள்ளே நான்கு முகங்களையுடைய மகாதேவ விக்கிரகம் ஒன்றிருக் கிறது. இதுதான் வைசாலியிலுள்ள முக்கியமான கோயில் என்று தெருவிலே நடந்து வந்த ஒருவர் சொன்னர். அந்தக் கோயிலின் பக்கத்தில் நின்ற சமயத்திலும் அம்பபாலியைத் தேடியது என் சிந்தனையெல்லாம்.

அந்தச் சமயத்திலேதான் மாந்தோப்புக்குள் ளிருந்து ஒரு பெண் வந்தாள். சாதாரணமான கிராமத்து மங்கை அவள். அழுக்குப் புடைவையைத் தரித்திருந்த போதிலும் அவளுடைய முகத்திலே விவரிக்க முடியாத ஓர் அழகு காணப்பட்டது. அவயவங்களிலே ஒரு பொலிவு. நாணமும் அச்சமும் கலந்த ஒரு பார்வை. உதட்டில் ஒரு மாயப் புன்னகை. அவள் தலையிலே பெரிய கூடை சுமந்து வந்தாள். அது நிறையக் காய்ந்த மாஞ்சருகு. கிராமத்தவர்கள் அடுப்பு எரிக்க இந்தச் சருகை உபயோகிக்கிறார்கள் என்று தெரிந்து கொண்டேன். அந்தக் கூடையைத் தலையில் வைத்து ஒய்யார நடை போட்டு மாஞ்சோலையி லிருந்து வெளிப்பட்ட அந்த இளம் மங்கையைப் பார்த்தவுடன் அப்படியே ஸ்தம்பித்து நின்றுவிட்டேன்! அவள் அழகும் கவர்ச்சியும் சாதாரண வர்க்கத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணல்ல என்பதை எடுத்துக் காட்டின. அவள் பேரழகைப் பார்த்த நான் அம்பபாலியின் கதையை நிச்சயமாக நம்பினேன். என் கமெராவைச் சரிப்படுத்திப் படம் பிடிக்கலாம் என்று ஆயத்தப் படுத்தினேன். ஆனால், அந்தப் பூலோக ரம்பை உடனே முக்காட்டை எடுத்து முகத்தை மூடிக்கொண்டாள்! இந்தக் காட்சியை எவராவது

கிராம வாசிகள் கண்டால் என்னை என்ன செய்துவிடுவார்களோ என்று பயந்தபோது வேறிரு பெண்களும் அங்கே வந்து சேர்ந்தனர். அதே சமயத்தில் எங்கிருந்தோ ஒரு கிராமவாசியையும் அழைத்துக் கொண்டு வந்து சேர்ந்தான் வஸந்தராம்!

"ஸார், தாங்கள் தேடிவந்த அம்பபாலி அகப்பட்டுவிட்டாள் போல் இருக்கிறதே!" என்று ஆச்சரியத்தோடு வந்து என் காதில் சொல்லிவிட்டுச் சிரித்தான் வஸந்தராம். அங்கு நின்ற கிராமவாசியின் உதவியைக்கொண்டு கிராமப் பெண்களைப் படம் பிடிக்கவும் வாய்ப்புக் கிடைத்தது. பின்னர் வஸந்தராம், "இந்த விவசாயியிடம் கேட்டுப் பாருங்கள் அம்பபாலியின் கதையை" என்று ஒரு முக்கிய மான தகவலைத் தெரிவித்தான். அந்தக் கிராமத்தில் அம்பபாலி கதை இன்னும் கர்ணபரம்பரையாக உலாவிக்கொண்டுதான் இருக்கிறது. விவசாயியின் கதையைக் கேளுங்கள்:

"வைசாலியில் லிச்சவிப் பிரபுக்கள் இருந்த காலத்தில் மாம்பழ வியாபாரம் செய்து வந்த ஒரு பெண்ணிடம் ஒரு 'போலீஸ் இன்ஸ்பெக்டர்' உறவு கொண்டுவிட்டார். அவளுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. ஊர் வம்புக்குப் பயந்து அவள் ஒரு நாள் அந்தக் குழந்தையை மாந்தோப்பில் போட்டுவிட்டு எங்கேயோ மறைந்து விட்டாள். குழந்தையை ஒரு தாசி எடுத்து வளர்த்து அம்பபாலி என்ற பெயர் வைத்து, அவளுக்கு நாட்டியமும் சங்கீதமும் சொல்லிக் கொடுத்தாள். லிச்சவிப் பிரபுக்கள் எழுநூறு பேர் இவளை மணக்க வேண்டு மென்று பாடுபட்டார்கள். ஆனால், அவள் அவர்களை யெல்லாம் ஒதுக்கிவிட்டு இராஜகிருகத்தில் வாழ்ந்த ஜராசந்த மன்னனையே விரும்பி அவனை மணந்து கொண்டாள்!"

இது அம்பபாலியைப்பற்றி அந்த விவசாயி சொன்ன கதை. ஆனால், புத்தரைப் பற்றியோ அவர் அம்பபாலிக்கு உபதேசம் செய்ததைப்பற்றியோ அவனுக்கு ஒன்றும் தெரியாது.

கிராமத்தைச் சுற்றிப் பார்த்துவிட்டுத் திரும்பி வரும் வழியிலே ஒரு தோட்டமும் இரண்டொரு குடிசைகளு மிருந்தன. அந்தக் குடிசைகளைக் கடந்து வரும்போது திடீரென அங்கே நான் சற்றும் எதிர்பார்க்காத ஒரு பௌத்த பிக்ஷுவைக் கண்டேன். அதிசயத் தோடு அவர் என்னைப் பார்த்தார். நானும் ஆச்சரியப்பட்டேன். முகத்தைப் பார்த்ததும் நான் அவர் ஒரு சிங்கள பிக்ஷுவாயிருக்கலாம் என்று எண்ணிக்கொண்டு, "ஸ்வாமி! எந்த ஊர்?" என்று கேட்டேன். அவர் தாம் சிங்கள நாட்டைச் சேர்ந்தவர் என்பதை ஒப்புக்கொண் டார். ஆனால், இலங்கையை விட்டு வந்து நாற்பது வருடங்களாகி விட்டன. ஜயவர்த்தன இந்திர சோமர் என்பது அவர் பெயர்.

வடநாட்டில் ஊரூராகச் சுற்றித் திரிவது அவர் தொழில். மஹா போதி சங்கத்துடனே அல்லது வேறு எந்தச் சங்கத்துடனே அவருக்குத் தொடர்பில்லை. வைசாலிக்கு அவர் முன்னொருபோது வந்த சமயத்தில் அங்குள்ள மக்கள் அவர் மீது பிரியம் கொண்டு இரண்டு ஏக்கரா நிலத்தை அவருக்கு இனமாகக் கொடுத்தார்களாம். அதனால், அறுவடை காலத்தில் வந்து வயல்களைப் பார்த்துவிட்டு, அதில் ஏதாவது கிடைத்தால் பெற்றுக்கொண்டு போவது வழக்கம் என்று சொன்னார். நாலைந்து கிராமவாசிகள் அந்த பிக்ஷுவுக்கு உபசாரம் செய்து தேநீர் கொடுத்துக்கொண்டிருந்தனர். நான் பிக்ஷுவுடன் பேசிக்கொண்டிருந்ததைப் பார்த்துவிட்டு அவர்கள் அன்போடு என்னையும் அன்று தங்கியிருந்து உணவருந்திச் செல்லுமாறு வற்புறுத்தினார்கள். அவர்களுடைய அன்புக்கு நன்றி செலுத்தி விட்டு, முஸாபர்பூருக்கு உடனே திரும்பி ரயிலைப் பிடிக்க வேண்டியிருந்ததால், அங்கிருந்து விடை பெற்றுக்கொண்டு புறப் பட்டேன்.

ஆனால் நான் திட்டம் போட்டிருந்தபடி நடக்கவில்லை. வைசாலியை விட்டுப் புறப்பட்டு ஒன்றரை மைல் தூரம் வந்ததும் எங்கள் மோட்டார் 'மக்கர்' பண்ண ஆரம்பித்து விட்டது! மிகப் பழைய காலத்து வண்டி; ஏதோ ஒரு விதமாக உயிரை வைத்துக் கொண்டிருந்தது. ஆனால், நாங்கள் மிக அவசரமாக ரயிலைப் பிடிக்கத் திரும்பி வரும் அந்தச் சமயத்தில்தானே இடைவழியில் திடீரென்று நிற்க வேண்டும்? அதைப்பற்றிச் சிறிதும் கவலைப் படாதவன்போல் டிரைவர் இறங்கியந்திரத்தைத் திறந்து பார்த்தான், அதையும் இதையும் சிறிது அசைத்துப் பார்த்து விட்டு, டிக்கியி லிருந்து ஆயுதங்களைத் தேட ஆரம்பித்தான். என்ன தகராறு என்று விவரமாகக் கேட்டறியும்படி வஸந்தராமிடம் சொன்னேன். பல கேள்விகளும் குறுக்குக் கேள்விகளும் போட்ட பின்னர் விஷயம் தெரிய வந்தது. யந்திரத்தை இயக்குவதற்குரிய மின்சாரத் தொடர்பு கெட்டுப்போய் விட்டதால் பெட்ரல் பம்பு இயங்க மறுத்து விட்டது! நல்ல வேளையாக பெட்ரல் ஆகிவிட்டது என்று அவன் சொல்லாமல் விட்டானே என்று திருப்திப்பட்டேன்! சற்று நேரம் ஆயுதங்களை வைத்துக்கொண்டு பேராடினன் டிரைவர். வண்டி அசைந்து கொடுக்கவில்லை. முடிவில் எனக்குத் தெரிந்த மோட்டார் மெக்கானிஸம் அறிவை அந்த இடத்தில் பயன்படுத்தலாமா என்று டிரைவரிடம் கேட்டேன். அவன் இடம் தரவில்லை! "எல்லாம் ஆச்சு, இனி ஸ்டார்ட் ஆகிவிடும்" என்று தைரியம் கூறிவிட்டு, அரைமணி நேரம் கழித்து வெற்றிக்கொடி நாட்டினன்! நடு வழியில் தவிக்காமல்



42.
கங்கையின் கிளையாகிய கண்டகி நதி
(படம். 289)



43 கங்கை தந்தி—மாலைக்காட்சி (பக். 266)



44.
வைசாலி—
அசோக ஸ்தம்பம்
(பக். 282)



45.
வைசாலி மங்கை—
அம்பபாலியின்
வழித்
தோன்றலோ?
(பக். 286)



46- வைசாலியில் வானரங்கள் புத்தருக்குத் தேன் அளித்தது— சாஞ்சி சிற்பம் (பக். 284)



47.
குசீதகர்—
மஹா
பரிநிருவாண
ஸ்தூபி
(பக். 309)



48.
மள்ளர்
ஜாதியினர் —
குடி நகர்
(பக். 301)



49. மஹா பரிநிருவாணம்—குசி நகர் (பக் 309)

திரும்பினேமே என்ற ஆறுதலோடு முஸாபர்பூருக்கு வந்து சேர்ந்த போது, ரயில் புறப்பட்டுப்போய் ஒரு மணி நேரமாகி விட்டதென்றும், அடுத்த வண்டிக்கு மேலும் இரண்டு மணி நேரம் காத்திருக்க வேண்டும் என்றும், அதுவும் சாதாரண பாசஞ்சர் என்றும் கேள்விப் பட்டு ஏமாந்துபோனேம். "ரயில் போலல் போகிறது, பஸ்ஸில் ஏறிப் போகலாம்" என்று வஸந்தராம் ஆலோசனை சொன்னன். சரி என்று அந்த ஆலோசனையை ஏற்றுக்கொண்டு, பக்கத்திலிருந்த ஒரு சிறு ஹோட்டலில் சாப்பிட்டு விட்டு பஸ் ஏறினேன்.

இந்த மோட்டார் பஸ் பிரயாணம் அவ்வளவு அலுப்புத் தரவில்லை. ஹாஜிப்பூர் என்ற இடத்துக்குச் சென்ற பிரயாணி ஒருவர், அந்த ஊர் மாஜிஸ்ட்ரேட் என்று தம்மை அறிமுகப்படுத்தி விட்டு, மிகவும் குஷியாகப் பேசிக் கொண்டிருந்தார். ஹாஜிப்பூரைத் தாண்டி வந்தபோதுதான் மறுபடியும் கண்டகி நதியைப் பகல் வேளையில் கடக்கச் சந்தர்ப்பம் கிடைத்தது. ஆற்றங்கரைக்கு பஸ் வந்ததும் பிரயாணிகள் யாவரையும் கீழே இறக்கி விட்டான் பஸ் டிரைவர்! ஆற்றின் மேலே போடப்பட்டிருந்தது ஒரு மிதவைப் பாலம். ஆகையால் பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு பஸ் அதன் மேல் செல்ல முடியாது. பஸ்ஸிலிருந்து இறங்கி அந்த மிதவைப் பாலத்தின் வழியே நடந்து கண்டகி நதியைக் கடந்தோம். ஆற்றின் அக்கரையில் நின்ற பஸ்ஸில் மறுபடியும் ஏறி, பலஸா காட் சேர்ந்து, அங்கிருந்து கப்பலேறிக் கங்கையைக் கடந்து பாட்னை வந்து சேர்ந்தோம்.

★

வைசாலி நகரத்தைவிட்டுப் பிரிவதற்கு முன்னர் புத்தர் தாம் இறக்க வேண்டிய சமயம் கிட்டிவிட்ட தென்பதைத் தமது சீடர்களுக்கு அறிவித்தார் என்று சொல்லப்படுகிறது. இது பற்றிய வரலாறு ஓர் உருக்கமான கதை:

வைசாலிக்குப் பக்கத்திலே யுள்ள வேலுகிராமம் என்ற இடத்தில் புத்தர் தமது இறுதி வர்ஷகாலத்தைப் போக்கினர். அங்கே அவருக்கு எதிர்பாராமல் ஒரு கொடிய நோய் ஏற்பட்டது. மரண வேதனை போன்ற அந்தக் கஷ்டத்தைப் பார்த்ததும் ஆனந்தர் மனம் கலங்கி, பகவான் இறந்து விடுவாரோ என்ற சந்தேகத்தில் இரவும் பகலும் அவர் பக்கத்திலேயே உட்கார்ந்து கவனித்து வந்தார். ஒரு சமயம் ஆனந்தர் கவலை சகிக்க முடியாமல் கண்ணீர் விட்டு அழுது புலம்பி, "ஐயனே! எம்மை விட்டுப் பிரிய வேண்டாம். இனி யார் எமக்குத் துணையாக இருக்கப் போகிறீர்கள்? எங்களை நிர்க்கதியாக விட்டுவிட வேண்டாம்" என்று கதறினர்.

அப்பொழுது பகவான் ஆனந்தரைச் சாந்தப்படுத்திச் சொன்னர்: "ஆனந்தா! இன்னும் என்னதான் நீங்கள் என்னிடமிருந்து எதிர்பார்க்கிறீர்கள்? நான் உபதேசிக்க வேண்டியதை யெல்லாம் பகிரங்கமாகவே உபதேசித்து விட்டேன். ததாகதர்கள் எதையும் மறைத்து வைத்திருக்கும் வழக்கமில்லை. சீடர்களுக்கு எல்லாவற்றையும் வெளிப்படையாகவே உபதேசிப்பார்கள்.

"ஆனந்தா! நானும் முதுமையை யடைந்துவிட்டேன். வயதும் எண்பதாகி விட்டது. ஆகையால், இச்சமயத்தில் நான் உங்களுக்குச் சொல்லவேண்டியது இதுதான்: 'இனி உங்களையே நீங்கள் நம்பியிருக்க வேண்டும். உங்கள் சொந்த முயற்சியைக் கொண்டே சித்தி பெற வேண்டும். ஆத்ம தீபம் ஆத்ம சரணம், அநந்நிய சரணம், தர்ம தீபம் தர்ம சரணம்.' பிக்ஷுக்களாகிய நீங்கள் உங்கள் மார்க்கத்துக்கு வேறெவரையும் எதிர்பார்க்க வேண்டாம். உங்களுக்கு நீங்களே தீபமாக, உங்களையே அடைக்கலமாகக் கொள்ளுங்கள். உங்கள் சன்மார்க்கத்துக்குப் பிறர் எவரையும் சரணடைய வேண்டாம். தருமத்தையே தீபமாகக் கொண்டு தருமத்தை நம்பி அதைக் கடைப்பிடியுங்கள்.

"ஆனந்தா, நான் இந்த உடலை ஒழித்த பின்னர் உங்களில் எவரொருவர் தம்மையே தமக்குப் புகலாகக்கொண்டு வேறெருவரையும் நாடாமல் தருமத்தில் அடைக்கலம் புகுந்து ஒழுகி வருவாரோ அவர் மறுமை யென்ற இருளைத் தாண்டி எல்லையற்ற பேரின்பத்தை யடைவார்."

மனத்துக்கண் மாசிலனுதல் அனைத்து அறன்
ஆகுல நீர பிற.

புத்தர் ஆனந்தருக்குக் கூறிய இந்த உபதேசம் மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது. இதற்கு முன்பு அவருக்கு பௌத்த சங்கத்தில் இருந்து வந்த சந்தேகமே இப்படி இடித்துக் கூறவேண்டிய அவசியத்துக்குக் காரணமாயிருந்தது என்பது வெளிப்படை. மறு சமயவாதிகளின் பிரசாரங்களும் பிக்ஷுக்களின் தளர்ச்சியடைந்த மனப்பான்மையும் அவரைக் கவலை கொள்ளச் செய்து வந்தன. அதனால் அவர் இப்படி வேறு எந்தக் கொள்கைக்கும் பிக்ஷுக்கள் வசமாகிக்கொள்ளலாகா தென்றும் பௌத்த தருமத்தைக் கைவிடாமல் அவர்கள் தமது சொந்த உள்ளத்தையே ஆராய்ந்து உண்மையை நாடவேண்டும் என்றும் உபதேசித்தார். அன்றியும், மந்திரமும் குருவுமின்றித் தானே சொந்த முயற்சி செய்து சன்மார்க்கத்தைத் தேடிக்கொள்ள வேண்டும் என்ற சிறந்த தத்துவத்தைப் புத்தர் இந்த இடத்தில் வற்புறுத்தியுள்ளார்.

வேலுகிராமத்தில் அவர் நோய் குணமடைந்தவுடன் புத்தர் மறுபடியும் வைசாலிக்கு வந்து சாபால சைத்தியம் என்ற கோயிலில் தங்கியிருந்தார். அங்கு அவர் தனிமையில் ஆனந்தரோடு உட்கார்ந் திருக்கும் சமயம் மரணத்தைப்பற்றி அவர் உள்ளத்தில் சில எண் ணங்கள் உதித்தன. இன்னும் சில நாட்கள்தான் அவர் உயிரோ டிருக்க முடியும் என்பதைத் தெரிந்துகொண்டார். ஆனந்தரைப் பார்த்து அவர் சொன்னார்:

"ஆனந்தா! நான்கு வகையான இருத்தி ஆற்றல்களைப் பெற்ற ஒருவர் ஓர் ஆயுள் வட்டம் முழுவதும் வாழ முடியும்."

இவ்வாறு சொல்லிவிட்டுப் புத்தர் ஆனந்தர் முகத்தைப் பார்த் தார். அதையே திரும்பவும் இரண்டாம் முறை சொன்னார். மூன் றாவது தடவையும் சொன்னார். ஆனந்தர் முகத்தில் எவ்வித மாறு தலும் காணப்படவில்லை. அந்த இருத்தி ஆற்றல்களை உபயோகித்து ஓர் ஆயுள் வட்டம் முழுவதும் சீவித்திருக்க வேண்டுமென ஆனந்தர் வேண்டிக்கொள்வார் என்றுதான் புத்தர் எதிர்பார்த்தார். ஆனால், ஆனந்தர் அதைப் புரிந்துகொள்ளவில்லை! ஆகவே பகவான் ஆனந்த ரிடம் தாம் தனிமையி லிருந்து தியானிக்க வேண்டுமென்று சொல்லி வேறிடத்துக்கு அனுப்பிவிட்டு உட்கார்ந்தார்.

அச்சமயத்தில் சில விரோதியாகிய மாரன் அவர் முன் தோன்றி, "சுகதரே! தாங்கள் நிருவாணம் பெற்றுக்கொள்ள வேண்டிய சமயம் வந்துவிட்டதே. இனியும் என்ன தாமதம்?" என்று கேட்டான். புத்தர் மாரனைப் பார்த்து, "எனது சங்கத்திலுள்ள பிக்ஷுக்களும் பிக்ஷுணிகளும் இன்னும் போதியளவு தரும விநயங்களைத் தெரிந்து கொள்ளவில்லை. தருமம் பூரணமாக அவர்களால் உணரப்பட்டு உறுதி பெற்றது என்று நான் கண்ட பின்னரே நிருவாணத்தை விரும்புவேன்" என்றார். மாரன் உடனே, "அதில் இன்னுமா சந்தேகம்? பௌத்த தருமம் எவ்வித தடையுமின்றி நிலை நாட்டப்பட்டு விட்டதே. பிக்ஷுக்களும் பிக்ஷுணிகளும் நன்றாகத் தருமத்தை யுணர்ந்து விநயங்களின்படி ஒழுகி வருகிறார்கள். தேவர்களிடத்திலும் மனிதர்களிடத்திலும் பௌத்த தருமம் பரவிவிட்டது வெளிப்படை யாகத் தெரிகிறதே" என்றான்.

இதைக் கேட்டதும் புத்தர் ஒருவித முடிவுக்கு வந்தவராய், "மாரனே! இனிமேலும் நீ கஷ்டப்பட வேண்டியதில்லை. இன்றிலிருந்து இன்னும் மூன்று மாத காலத்துக்குள் ததாகதர் நிருவாண மடை வார்!" என்று சொல்லிவிட்டு, உடனே தமது பூரண ஆயுள் வட் டத்தில் கழியவேண்டி எஞ்சியிருந்த காலத்தை உதறி நீக்கிவிட்டு எழுந்திருந்தார்.

அந்தச் சமயத்தில் பூமியே ஒருகணம் அதிர்ந்தது. எதிர்பாராத இந்த உற்பாதத்தைக் கண்ட ஆனந்தர் ஓடி வந்து பகவானைப் பார்த்து, "அண்ணலே! இதுவென்ன ஆச்சரியமா யிருக்கிறது? என்றுமில்லாத சகுனங்கள் தோன்றுகின்றன" என்று கேட்டார். புத்தர் சற்று முன்னர்தான் மாரன் தோன்றியதைப் பற்றியும் தாம் மாரனுக்குக் கொடுத்த பதிலையும் எடுத்துச் சொன்னர். அப்போது தான் ஆனந்தர் தாம் புத்தரிடம் பூரண ஆயுட் காலத்துக்கும் உயிரோடிருக்கும்படி வேண்டிக் கொள்ளவில்லையே என்று மிகவும் வருந்தினர். புத்தர் ஆனந்தரைப் பார்த்து, "ஆனந்தா! இப்போது வருந்தியென்ன செய்வது? முன்பு நான் பதினறு சந்தர்ப்பங்களில் இம்மாதிரியாக உனக்குக் குறிப்பாலுணர்த்திக் காட்டினேன். அந்தச் சந்தர்ப்பங்களை யெல்லாம் நீ தவறவிட்டு விட்டாய். இப்போதும் உணர்த்தினேன். நீ என்னை வேண்டிக்கொள்ளவில்லை. ஒரு தடவை, இரண்டு தடவை, மூன்று தடவை நான் சொல்லிக் காட்டியும் நீ உணரவில்லை. இது உன் மீது ஒரு பெரிய குற்றமாகும்" என்றார்.

புத்தர் இம்மாதிரி ஆனந்தர் மீது பழி சுமத்தி யிருக்க முடியாது என்றும், இது பின்னல் பௌத்த சங்கத்தி லுள்ளவர்கள், ஆனந்தர் சந்தர்ப்பம் கிடைத்திருந்தும் புத்தரிடம் வேண்டிக் கொள்ளத் தவறி விட்டார் எனக் குற்றம் சுமத்தி அதைப் புத்தர் வாயில் இருந்து வந்த குற்றமாகப் புராணத்தில் நுழைத்துவிட்டார்கள் என்றும் எட்வர்ட் தாமஸ் என்ற ஆராய்ச்சியாளர் கருதுகிறார். புத்தர் இறந்த பின் முதன் முறையாகக் கூடிய பௌத்த சங்கத்திலும் ஆனந்தர் பாவ மன்னிப்புக் கோரும் சந்தர்ப்பத்தில் தாம் இவ்வாறு பகவானிடம் வேண்டிக்கொள்ளாத பெருங் குற்றத்தை ஒப்புக் கொண்டார் என்றும் சொல்லப்படுகிறது.

புத்தருக்கும் ஆனந்தருக்கும் நடந்த இந்தச் சம்பாஷணையின் பின்னர் சங்கத்தை அழைத்து வருமாறு புத்தர் ஆனந்தரிடம் சொல்லி யனுப்பினர். வைசாலியின் மகாவனத்திலேயுள்ள கூடாகார மண்டபத்திலே சகல பிக்ஷுக்களும் கூடியிருந்த அந்தச் சபையிலே புத்தர் முக்கியமான ஒரு பிரசங்கம் செய்தார்.

"பிக்ஷுக்களே! இதுவரை காலமும் உங்களுக்கு நான் தருமத்தை எடுத்து விளக்கி வந்தேன். அந்தத் தருமத்தை யுணர்ந்து கொள்ளுங்கள். நடை முறையில் பயிலுங்கள். அதைப்பற்றிச் சிந்தியுங்கள். நாற்றிசையும் அந்தத் தருமத்தைப் பரப்புங்கள். இந்தத் தருமமானது உலக மக்களின் நன்மைக்காகவும், மக்கள் தேவர் ஆகிய எல்லாரது நன்மைக்காகவும் நித்தியமாய் நிரந்தரமாய் இவ்வுலகில் நிலவும் வகை செய்யுங்கள்."

பின்னர் புத்தர் தமது முக்கிய சத்தியங்களான நான்கு வாய்மைகளைப் பற்றியும், அஷ்டாங்க மார்க்கத்தைப்பற்றியும் விளக்கினர். படிப்படியாக நான்கு விதத் தியான முறைகள், நான்கு வித எத்தனங்கள், நான்கு வகையான இருத்தி முறைகள், ஐந்து சித்திகள், ஐந்து ஞானப் புலன்கள், ஏழு வித ஞானங்கள், எட்டு மார்க்கங்கள் என்ற மொத்தம் முப்பத்தேழு தத்துவங்களையும் எடுத்து விளக்கினர். இறுதியாக அவர் சொன்னர்:

"பிக்ஷுக்களே! தோன்றுபவை யெல்லாம் அழியும் தன்மையுடையன என்ற உண்மையை உணர்ந்துகொள்ளுங்கள். உங்கள் லட்சியத்தை அக்கறையுடன் அடைய முயலுங்கள். ததாகதர் இன்னும் மூன்று மாதத்தில் இறந்துவிடுவார்."

மறு நாள் புத்தர் வைசாலியை விட்டுப் புறப்பட்டார். சீடர்கள் பலர் பின் தொடர்ந்தனர். இறுதித் தடவையாக வைசாலியைவிட்டுப் பிரியும்போது அவர் அந்தச் சிறந்த குடியரசாகிய நாட்டையும் அதன் பெருமையையும் மகதமன்னன் அஜாதசத்துரு அழித்துவிடப் போகிறானே என்று தமது வருத்தத்தைத் தெரிவித்துக்கொண்டார். ஆனந்தரைத் திரும்பிப் பார்த்து அவர், "ஆனந்தா, வைசாலி நகரம் எவ்வளவு அழகாயிருக்கிறது பார்த்தாயா? லிச்சவிகள் தமது குடியரசுத் தத்துவத்தை எவ்வளவு சிர்மையோடு பேணி வருகிறார்கள். அந்த அரசும் நாடும் அஜாதசத்துருவின் கொடுமைக்கு இரையாகப் போவதை நினைக்கும்போது யார் தான் கவலைப்பட மாட்டார்கள். ஆனால் மற்றொரு தடவை நாம் இங்கு வரப் போவதில்லை. இதுவே எனது இறுதி யாத்திரை" என்றார்.

முப்பத்தோராம் அத்தியாயம்

மகா பரிநிருவாணம்

வைசாலியி லிருந்து புறப்பட்ட புத்தர் எந்த இடத்திலும் அதிக நாள் தங்கவில்லை. அவர் சென்ற வழியிலுள்ள பல கிராமங்களைப் பற்றிப் பௌத்த நூல்கள் குறிப்பிட்டிருந்த போதிலும் அவற்றை யெல்லாம் இப்போது நிச்சயமாகக் கண்டு பிடிக்கக்கூடிய ஆதாரங்கள் கிடையா. முதலில் அவர் பண்டகிராமம் என்ற ஊருக்குச் சென்றார். அங்கே ஒரு நாள் மாலை தங்கியிருந்தபோது சீடர்களுக்கு மறுபடியும் சீலம், தியானம், உள்ளொளி, விமுக்தி ஆகிய நான்கு விஷயங்களைப் பற்றியும் போதித்தார் என்று சொல்லப்படுகிறது.

பின்னர் ஹஸ்திகிராமம், அம்ப கிராமம், ஜம்புகிராமம் என்று சொல்லப்படும் கிராமங்கள் வழியாகக் கடந்து சென்று, போகநகரம் என்ற ஊரில் போய் யாவரும் சில நாள் தங்கினர்கள். போகுமிட மெல்லாம் புத்தரின் உள்ளமானது தமது சீடர்கள் தருமத்தைக் காப்பாற்றுவார்களா அல்லது எதிரிகள் வசப்பட்டுவிடுவார்களா என்ற ஐயம் இருந்துகொண்டே வந்தது. ஆகையால் போகநகரி லிருக்கும்போது அவர் ஒரு முக்கியமான உபதேசம் செய்தார். தமது சீடர்கள் நான்கு பிரமாணங்களையே தமக்குத் துணையாகக் கொள்ள வேண்டு மல்லாமல் வேறெவ்வித கொள்கையையும் ஆதரிக்க லாகாது என்று வற்புறுத்திச் சொன்னர். அடிக்கடி சங்கத்தாரிடையே அபிப்பிராய பேதமும் பிளவும் ஏற்படும்போது புத்தர் நேரில் சென்று சச்சரவைத் தீர்த்து வைப்பது வழக்கமல்லவா? ஆகையால், அவர் இல்லாத காலத்தில் என்ன செய்ய வேண்டுமென்பதைச் சிந்தித்தே புத்தர் இவ்வாறு நான்கு பிரமாணங்களை ஏற்படுத்தினர்.

முதலாவதாக, "எந்த ஒரு பிக்ஷுவும் தான் ஒரு விஷயத்தைத் தருமம் அல்லது விநயம் என்று எடுத்துச் சொல்லி அதை அவர் ததாகதரின் வாயிலிருந்து கேட்டதாகச் சொன்னாலும் மற்றைய பிக்ஷுக்கள் ஆராயாமல் ஏற்றுக்கொள்ளலாகாது. முதலில் அந்த விஷயம் சூத்திரங்களிலோ அல்லது விநயங்களிலோ இருக்கிறதா என்று ஆராய்ந்து பார்க்கவேண்டும்."

இரண்டாவதாக, "அது ததாகதரிட மல்ல, பிக்ஷு சங்கத் தாரிடம் கேட்டதாகச் சொல்லக்கூடும். அப்போதும் அது சூத்திரங்

களில் அல்லது விநயங்களில் உள்ளதா என்று ஆராய்ந்து பார்த்தே ஒப்புக்கொள்ள வேண்டும்."

மூன்றுவதாக, "தருமம், விநயம், மாத்திகம் ஆகிய மூன்று விஷயங்களையும் நன்கு கற்றுணர்ந்த பிக்ஷுக்களிடம் கேட்டதாகச் சொன்னாலும் ஒப்புக்கொள்ளலாகாது, சூத்திரங்களையும் விநயங் களையும் ஆராய்ந்து பார்த்தே ஒப்புக்கொள்ள வேண்டும்."

நான்காவதாக, "சங்கத்திலுள்ள தலைமையான தேரர் சொன்னாலும் முன்போல் ஆராய்ந்து பார்த்தே ஒப்புக்கொள்ள வேண்டும்."

இந்த நான்கு பிரமாணங்களையும் புத்தர் சொன்ன காலத்தில் அவர் வாய் மொழிகளாக வந்த தரும உரைகளெல்லாம் சூத்திரங் களாக வழங்கி வரத் தொடங்கிவிட்டன. அவர் அடிக்கடி சங்கத்தாருக்கு விதித்த விதிகளும் தவிர்த்த விலக்குகளும் விநயம் என்ற ஒழுக்க சாசனமாகிவிட்டது. அந்தக் காலத்தில் எழுத்துக் கிடையாது. பிற்காலத்திலேதான் எழுத்து வடிவிலே அந்த உரைக ளெல்லாம் ஏற்பட்டன. ஆனால் வேதங்கள் உபநிஷதங்கள் பலவும் மனனம் செய்யப்படும் முறையிலேயே, புத்தருடைய தரும சூத்திரங் களும் விநயங்களும் அத்யயனம் செய்யப்பட்டுக் குரு சிஷ்ய பரம் பரையில் பல்லாண்டுகள் நிலைபெற்று வந்தன.

போக நகரத்திலிருந்து புறப்பட்டுப் புத்தரும் ஆனந்தரும் பாவா என்ற கிராமத்துக்குச் சென்றார்கள். இவர்களுடன் தொடர்ந்து மற்றைய பிக்ஷுக்களும் சென்றார்கள். ஆனால் அந்தக் கூட்டத்தில் முக்கியமான சீடர்கள் பலர் இருக்கவில்லை. ஆனந்தர் ஒருவர்தான் புத்தருக்குத் துணையாயிருந்தார். பாவா கிராமத்தில் சுந்தன் என்ற ஒரு கொல்லன் இருந்தான். அவனுடைய சாலையிலேயே இவர்கள் போய்த் தங்கினார்கள். இதைக் கேள்விப்பட்ட சுந்தன் பேருவகை யடைந்து புத்தரையும் சங்கத்தாரையும் தனது இல்லத்தில் உணவருந்துமாறு அழைத்தான். அன்று அவர்களுக்குக் கொடுக்கப் பட்ட உணவு வகைகளில் காட்டுப் பன்றி இறைச்சியு மிருந்தது. அதைக் கண்ட புத்தர் சுந்தனைப் பார்த்து, "சுந்தா! காட்டுப் பன்றி இறைச்சியை எனக்கு மாத்திரம் பரிமாறு. மற்றவர்களுக்கு அதைப் போடாதே" என்று சொல்லிவிட்டார். உணவு முடிந்ததும், சுந்தனிடம் மிச்சமாயிருந்த காட்டுப் பன்றி யிறைச்சி ததாகதரைத் தவிர வேறெவர் சாப்பிட்டாலும் ஜீரணமாகாது என்று புத்தர் சொல்லி அதைக் குழி தோண்டிப் புதைக்கச் செய்தார். இந்த உணவுதான் புத்தர் தமது வாழ்நாளில் இறுதியாக உட்கொண்ட உணவு. ஆனால் அவர் உடலுக்கு அது ஒத்துக்கொள்ளவில்லை.

வயிற்றோட்டம் கண்டது. தாங்க முடியாத வலி எடுத்தது. ஆனால் புத்தர் அதைப்பற்றி மற்றவர்களிடம் முறையிடாமலே ஆனந்தரை யழைத்துக் கொண்டு குசீநகரை நோக்கி நடந்தார்.

போகும் வழியில் அவருக்கு நோய் முதிர ஆரம்பித்தது. வலி தாங்க முடியவில்லையாகையால் சற்று வேளை உட்கார்ந்து கொள்ள வேண்டுமென்று ஆனந்தரிடம் ஓர் ஆடையை நான்காக மடித்துக் கீழே போடச் சொல்லி அதன்மீது அமர்ந்தார். குடிப்பதற்குத் தண்ணீர் வேண்டுமென்று கேட்டார். பக்கத்திலே குகுஷ்டம் என்ற ஒரு சிற்றாறு இருந்தது. ஆனால் அதிலுள்ள தண்ணீர் உழவர்களின் வண்டி கள் அடிக்கடி போய் வந்த காரணத்தால் சேறு குழைந்து அழுக்கு நீராகக் கலங்கிப் போயிருந்தது என்று ஆனந்தர் கண்டு, அதிலே யிருந்து நீர் மொள்ளத் தயங்கினர். புத்தர் மூன்று முறை கேட்ட தால் மூன்றுவது முறை ஆனந்தர் மனக்கஷ்டத்தோடு ஆற்றண்டை சென்றபோது திடீரென்று ஆற்று நீர் சுத்தமாகித் தெள்ளத்தெளிந் தோடுவதைக் கண்டு மகிழ்ச்சியுடன் மொண்டு வந்து கொடுத்தார். புத்தர் அந்தத் தண்ணீரைக் குடித்து விட்டுச் சிறிது இளைப்பாறினர்.

குகுஷ்ட நதியின் தண்ணீர் கலங்கியதற்குக் காரணம் "ஐந்நூறு வண்டிகள் அதைக் கடந்து போனதால் சேறும் சகதியும் நிறைந்து விட்டன" என்றுதான் ஆனந்தர் கூறினர். இந்த ஐந்நூறு வண்டி களுக்கு ஒரு கதையும் அங்கே உற்பத்தியானது.

புத்தரும் ஆனந்தரும் உட்கார்ந்திருக்கும் சமயம் புக்குஷன் என்ற ஒருவன் அவ்வழியாக வந்தான். இவன் மல்லர் ஜாதியைச் சேர்ந்த ஒரு செல்வன். ஆலாரகாலாமரிடத்தில் ஒரு காலத்தில் பற்றுக் கொண்டிருந்தவன். தியான முறைகளைப் பற்றி ஓரளவு தெரிந்தவன். அவன் புத்தரைக் கண்டவுடன் அவரிடம் வந்து பேசிக் கொண்டிருந்தபோது, ஆலாரகாலாமர் ஒருமுறை ஒரு பரந்த வெளி யில் தியானத்தில் உட்கார்ந்திருக்கையில் அவர் பக்கமாகச் சென்ற ஐந்நூறு வண்டிகளை அவர் காணவுமில்லை, காதால் கேட்கவுமில்லை என்று, அவருடைய தியான மகிமையைப் பற்றிச் சொன்னான். புத்தர், "அது பெரிய காரியமல்ல. நான் ஒருநாள் தியானத்தி லிருக்கும்போது, வானத்தில் இடியிடித்துப் பெருமழை கொட்டியது. இரண்டு விவசாயிகள் இடியேற்றுக்குப் பலியானார்கள். அவர் களுடைய மாடுகள் நான்கும் இறந்தன. மக்கள் அங்கே வந்து கூடிய பின்னர் தான் என்ன நடந்தது என்று விசாரித்துப் பார்த்தபோது விஷயம் தெரியவந்தது. அதுவரையும் எனக்கு ஒன்றும் தெரிய வில்லை" என்று தமது தியானத்தின் ஏகாக்கிர சித்தத்தைப் பற்றிச் சொன்னார்.

புக்குஷன் இதைக் கேட்டதும் ஆச்சரியப்பட்டுப் புத்தரின் உபதேசங்களில் ஆட்பட்டு அவரது தருமத்தை ஏற்றுக்கொண்டான். உடனே அவன் தன் வீட்டுக்குச் சென்று இரண்டு அழகிய பொன்மயமான ஆடைகளைக் கொண்டு வந்து புத்தரிடம் அன்போடு கொடுத்தான். புத்தர் அவற்றை ஏற்றுக்கொண்டு, "புக்குஷா! ஒன்றை என்னுடம்பில் போர்த்தி விடு. மற்றதை ஆனந்தர் மீது போர்த்து" என்றார். சற்று வேளையில் ஆனந்தரின் ஆடை பிரகாசமாக மின்னிக் கொண்டிருக்கப் புத்தர் மீது போர்த்தப்பட்டிருந்த ஆடை மாத்திரம் ஒளியிழந்து மங்கிப் போய்க் காணப்பட்டது. ஆனந்தர் இதைக் கண்டு ஆச்சரியப்பட்டவராய் இதன் மர்மமென்ன வென்று பகவானிடம் கேட்டார். அதற்கு பகவான் சொன்னார்: "இதில் அதிசயம் ஒன்றுமில்லை ஆனந்தா! ஆடையின் ஒளி மங்கவில்லை. ததாகதரின் சரீரத்திலே புதிய பிரகாசம் ஏற்பட்டிருப்பதால் அந்தப் பிரகாசம் ஆடையின் ஒளியை மங்கச் செய்துவிட்டது. அங்ஙனம் ததாகதரின் சரீரத்தில் பிரகாசம் இரண்டு சந்தர்ப்பங்களில்தான் உண்டாகும். அவர் மெய்ஞானமாகிய சம்போதியை அடையும் இரவில் ஏற்படும்; பின்னர் அவர் எவ்வித உபாதியும் எஞ்சாமல் பரிநிருவாணம் பெறும் இரவிலே ஏற்படும். இன்றிரவு மூன்றும் யாமத்திலே பரிநிருவாணம் ஏற்படும் என்பதை அறிந்து கொள்வாயாக" என்றார். ஆனந்தரின் உள்ளத்தில் திகில் உறைய ஆரம்பித்தது.

சிறிது நேரம் கழித்து புத்தர் எழுந்து சென்று குகுஷ்ட நதியில் குளித்துவிட்டு வந்து மாஞ்சோலையில் சாய்ந்து கொண்டிருக்கும் போது ஆனந்தரை யழைத்துப் பின்வருமாறு சொன்னார்.

"ஆனந்தா! சுந்தன் கொடுத்த உணவுதான் எனது நோய்க்குக் காரணம் என்று வீணை அபவாதம் ஏற்படப்போகிறது. சுந்தன்மீது எவ்வித தவறுமில்லை. அவன் பரிசுத்தன். ஆகையால் அவன் மனம் சாந்தியடையும் வண்ணம் அவனிடம் நான் சொன்னதாக இவ்வாறு சொல்ல வேண்டும்: 'சுந்தா, நீ ததாகதருக்குக் கொடுத்த உணவு மிகப் பெருமையுடையது. அவர் நிருவாணமடைவதற்கு முன்னர் உனது உணவையே உண்டு நிருவாணத்தைப் பெற்றார். ஆகையால் நீ எவ்வளவோ கொடுத்து வைத்தவன்' என்று சொல். ததாகதர் வாழ்விலே இரண்டு தடவை அவருக்குக் கிடைத்த அமுது அவரால் மறக்க முடியாத சிறந்த அமுது. முதலில் அவர் சம்போதி ஞானம் அடைவதற்கு முன்பு சுஜாதையிடமிருந்து கிடைத்த பாலுணவு; இப்போது மகா பரிநிருவாணமடைவதற்கு முன்பு சுந்தனிடமிருந்து கிடைத்த உணவு. சுந்தன் ஒரு சிறந்த தானம் வழங்கியுள்ளானைகை

யால் நீடூழி வாழ்ந்து மறுமையில் இன்பம் பெறுவான் என்பதில் சந்தேகமில்லை." இவ்வாறு நான் சொல்லி யனுப்பியதாக அவனிடம் சொல் என்றார்.

★

அன்று வைசாக பூர்ணிமை நாள். நிறைமதி வானத்தில் எழுந்தது. ஹிரண்யவதி என்ற நதியைக் கடந்து புத்தரும் சீடர்களும் குசீநகரை யடைந்து அங்கிருந்த ஒரு சாலமரச் சோலையில் தங்கினர்கள். "ஆனந்தா!" என்றழைத்தார் புத்தர். பக்கத்திலேயே நிழல் போல் தொடர்ந்து வந்த ஆனந்தர் பகவானின் கட்டளைக்குக் காத்து நின்றார். "இந்த இரண்டு சால விருக்ஷங்களுக் கிடையில் எனக்குப் படுக்கை போடு. தலைப்பக்கம் வடக்கிலிருக்கட்டும். எனக்குச் சிறிது களைப்பா யிருக்கிறது" என்றார்.

ஆனந்தர் ஒரு கணப்பொழுதில் படுக்கை தயாரித்துக் கொடுத் தார். புத்தர் ஓர் ஆண் சிங்கம் படுத்திருப்பது போன்ற பாவனை யில் அதில் படுத்தார். வலப்பக்கம் சாய்ந்து வலக் கையைத் தலையின்கீழ் வைத்துக்கொண்டு ஒரு கால்மேல் மற்றைக் காலை வைத்தபடியே படுத்திருந்தார். அச்சமயத்திலே சால விருக்ஷங்கள் பூக்க வேண்டிய காலமல்லாவிட்டாலும் அந்த விருக்ஷங்களிலிருந்து அலர்ந்த புஷ்பங்கள் சொரிந்து அவர் சரீரத்தை மூடின. வானத்தி லிருந்து மந்தார மலர்கள் சொரிந்தன. தெய்வீகப் பாடலும் இசையும் நாற்புறமும் ஒலித்தன. அப்போது புத்தர் ஆனந்தரைப் பார்த்து, "ஆனந்தா! ததாகதருக்கு இப்போது நடக்கும் மரியாதையைப் பார்த் தாயா? ஆனால் இதுவெல்லாம் தான் மரியாதை யென்று நான் கருத வில்லை. ததாகதர் போதித்த தரும நெறியில் சகல பிக்ஷுக்களும் பிக்ஷுணிகளும் இல்லறத்திலுள்ள மற்றும் சீடர்களும் வழுவாது ஒழுகி வருவார்களானால் அதுவே ததாகதருக்குச் செலுத்தும் உண்மை யான வணக்கம் எனக் கருதுவேன்" என்று கூறினர்.

அப்போது புத்தரின் எதிரிலே முதியோராகிய உபவாணர் என்ற பிக்ஷு விசிறிக்கொண்டு பணி விடை செய்து நின்றார். புத்தர் திடீரென அவரைப் பார்த்து, "உபவாணரே! என் முன்னால் நிற்காமல் விலகி நில்லும்" என்றார். இதைக் கண்ட ஆனந்தர் கலங்கினர். நெடுங் காலமாகவே புத்தருக்குப் பணிவிடை செய்து வந்த உப வாணர் என்ன குற்றம் செய்து விட்டார் என்று தெரியாமல் திகைத் தார். பின்னால் புத்தரிடம் கேட்டபோது தான் சந்தேகம் நீங்கியது. கோடானுகோடி தேவர்களெல்லாம் ததாகதரைத் தரிசிப்பதற்கு வந்து அங்கு கூடி நின்றார்களென்றும், உபவாணர் எதிரில் நின்ற

தால் அவர்கள் பார்வையை மறைத்துக் கொண்டிருந்தார் என்றும் புத்தர் விளக்கினர்.

சால விருக்ஷங்களுக்கிடையே சயன நிலையிலிருந்த புத்தரிடம் அவர் பரிநிருவாணமடைவதற்கு முன்பாகப் பல சந்தேகங்களைக் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற ஆவலால் உந்தப் பெற்ற ஆனந்தர் சொன்னார்: "பகவான்! இதுவரை காலமும் வர்ஷகால நியமத்தை முடிந்துக்கொண்டு ததாகதரை வந்தடைந்து மரியாதை செலுத்தி உபதேசம் கேட்டு வந்தார்கள் சங்கத்திலுள்ளவர்கள். இந்தப் பேறு இனிமேல் எமக்குக் கிடைக்காதென்ற கவலை எம்மை வருத்துகிறது."

"ஆனந்தா! நம்பிக்கையுள்ள ஒவ்வொருவரும் வணக்கத்துடன் தரிசிப்பதற்கு நான்கு க்ஷேத்திரங்களிருக்கின்றன. ததாகதர் பிறந்த க்ஷேத்திரத்தையும், அவர் ஞானோதயம் பெற்ற க்ஷேத்திரத்தையும், உபதேசம் செய்து தரும சக்கரம் உருட்டிய க்ஷேத்திரத்தையும், ததாகதர் பரிநிருவாணமடைந்த க்ஷேத்திரத்தையும் எவரொருவர் கருத்துடன் தரிசித்து வருவாரோ அவருக்குச் சாந்தியும் முத்தி யின்பமும் கிடைக்கும். ஆகையால், ததாகதர் உயிரோடில்லையே என்று கவலைப்பட வேண்டாம்" என்று பகவான் விடை யளித்தார்.

பெண்கள் விஷயமாகவும் ஆனந்தர் ஒரு சந்தேகத்தைக் கேட் டார். பெண்களையே சங்கத்தில் சேர்த்துக் கொள்ளலாகாது என்று பிடிவாதம் பிடித்த புத்தர் இப்போது என்ன அபிப்பிராயம் சொல் வாரோ என்பது ஆனந்தரின் ஆவல். "அண்ணலே! பெண்மைக் குலத்திடம் பிக்ஷுக்கள் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும்?" என்று கேட்டார்.

"அவர்களைக் கண்கொண்டு பார்க்காதே."

"அங்ஙனம் பார்த்துவிட நேர்ந்தால் என்ன செய்ய வேண்டும்?"

"அவர்களுடன் பேசாதே."

"நாம் பேசாவிட்டாலும் அவர்களாகவே பேசினால் நாம் என்ன செய்வது?"

"விளிப்போடு இருந்துகொள்."

இது புத்தர் பெண்கள் விஷயமாக ஆனந்தருக்குச் சொன்ன புத்திமதி. பின்னர் ஆனந்தர் ததாகதரின் பூதவுடலைத் தகனம் செய்யும் விஷயமாகவும் சந்தேகத்துக் கிடமில்லாமல் எல்லா விவரங்களையும் கேட்டு வைத்துக் கொண்டார். புத்தர் இறந்தபின் தகனம் சம்பந்தமாகச் சங்கத்தில் அபிப்பிராய பேதங்கள் ஏற்படும் என்பது ஆனந்தருக்குத் தெரியும். அன்றியும், ஆனந்தர் ஒருவர் தான் ஞாபக சக்தியுள்ளவர் என்றும் சூத்திரங்கள் விநயங்கள்

சம்பந்தமாக அவரிடமே மற்றைய பிக்ஷுக்கள் கேட்டறிந்து கொள்வதென்றும் பெயர் பெற்றவர். ஆகவே தகனக் கிரியை விஷயமாக அவர் புத்தரிடமே கேட்டுவைத்துக் கொண்டார். புத்தர் சொன்னர்:

"ஆனந்தா! ததாகதரின் பூதவுடலை வைத்து அதற்கு மரியாதை செலுத்தி வழிபட்டு உன் சொந்த அறிவைத் தடை செய்யாதே. எப்பொழுதும் விழிப்போ டிருந்து உன் சித்தவிருத்தியில் அக்கறை கொள். உனது நன்மைக்காகவே நான் இதைச் சொல்லுகின்றேன். முயற்சி செய்; உன் நன்மைக்காக நீயே பாடுபடு. நீ ததாகதரின் பூதவுடலுக்கு மரியாதை செய்வதில் சிரத்தை கொள்ளாதே.

"பிரபுக்கள், அரசர்கள், அந்தணர்கள், இல்லறத்தாரில் முதியவர்கள் ஆகியோர்களில் அறிவு சான்றவர்கள் பலர் இருக் கிறார்கள். அவர்கள் ததாகதரின் பூதவுடலுக்குச் செய்ய வேண்டிய மரியாதையைச் செய்வார்கள்."

"ஈமக்கிரியை எவ்வாறு செய்யப்பட வேண்டுமென்பதைத் தெரிந்து கொள்ளலாமா?" என்று கேட்டார் ஆனந்தர்.

"ஆனந்தா! ராஜாதி ராஜனின் சடலத்தை எவ்வாறு மரியாதை யுடன் அடக்கம் செய்வர்களோ அவ்வாறே ததாகதரின் சடலத்தை யும் கவனிப்பார்கள். புதிய ஆடைகள் சுற்றி, அதன்மீது புதிய பருத்திப் பஞ்சு சுற்றி, இவ்விதம் ஒன்றுமாறி மற்றொன்றாக ஐந்நூறு தடவை சுற்ற வேண்டும். அதன் பின் தைலத்தில் தோய வைத்துக் கந்தவர்க்கம் நிறைந்த காஷ்டத்தின் மீது வைத்துத் தீயிடவேண்டும். பின்னர், நான்கு தெருக்கள் சந்திக்கு மிடத்திலே அஸ்தியை வைத்து ஸ்தூபி எழுப்ப வேண்டும். இதுதான், ஆனந்தா, ராஜாதி ராஜனுக்கு நடக்கும் மரியாதை. அதுவே ததாகதருக்கு முரியது."

இவற்றை யெல்லாம் கேட்டுக் கொண்ட ஆனந்தர் உள்ளம் கலங்கியது. இருபத்தைந்து ஆண்டுகளாக ஆனந்தர் புத்தரின் அணுக்கத் தொண்டராய், அவர் நிழல் போலத் தொடர்ந்து வந்திருக் கிறார். ஆனால் இன்னும் அவர் அருகத் நிலையைப் பெறாத மாணவனாகவேயிருக்கிறார். புத்தர் இப்போது ஆனந்தரைத் தனியே விட்டுப் பிரிவது, தாயைப் பறிகொடுத்த கன்றுபோலத் தனிமைத் துயரைக் கொடுத்தது அவருக்கு. புத்தர் பக்கத்திலிருந்து மெதுவாக எழுந்து சென்று அவர் வேறோரிடத்தில் தனிமையில் நின்று இரு விழிகளிலும் கண்ணீர் வாரத் தேம்பி அழலானர்.

இதை யறிந்த புத்தர் ஆனந்தரை யழைத்துப் பக்கத்தில் அன்போடு வைத்துக் கொண்டு தேறுதல் சொன்னர்: "ஆனந்தா! போதும் உனது கவலை. உன் அழுகையை நிறுத்து. முன்பு எத்தனை

தடவைகளிலே, கூடியிருக்கும் நாம் ஒவ்வொருவரும் பிரிய வேண்டியது நியதி என்று போதித்திருக்கிறேன். உடன் பிறந்தார் சுற்றத்தார் எல்லாருமே ஒரு வரை விட்டொருவர் என்றே ஒரு நாள் பிரிய வேண்டியவரே. ஆனந்தா! நெடுங்காலமாக நீ என் பக்கத்தில் இருந்தாய். அன்போடு என்னைக் கவனித்தாய். உள்ளன்போடு எனக்குச் சேவை செய்தாய். எல்லாச் சேவையும் நீ சிறந்த முறையில் செய்திருக்கிறாய். அந்தத் தொண்டின் பலனை விரைவிலே நீ அவா என்ற துன்பத்தினின்றும் விடுதலை பெற்று நித்தியானந்தப் பேற்றைப் பெறுவாய். ஆகையால் கவலையை விடு" என்று சொல்லி விட்டு மற்றைய பிக்ஷுக்களைப் பார்த்துப் பின்வருமாறு சொன்னர்.

"பிக்ஷுக்களே! ஆனந்தர் மிகவும் புத்திசாலி. அவரிடம் நான்கு சிறந்த குணங்களிருக்கின்றன. எந்தச் சமயத்திலே பிக்ஷுக்கள் பிக்ஷுணிகள் மற்றும் பக்தர்கள் வந்து என்னைக் காணவேண்டு மென்பதைத் தெரிந்துள்ளவர் ஆனந்தர். தரும விளக்கங்கள் கொடுப் பதில் ஆனந்தர் நிகரற்றவர். எல்லாரிடமும் முகங்கோணமல் நடப் பதில் சமர்த்தர். பிக்ஷுக்களிடையே சமாதானத்தை வளர்ப்பவர்." இவ்வாறு அவர் பிக்ஷு சங்கத்தின் முன்பாக ஆனந்தரைப் பாராட்டிப் பேசினர்.

சற்று நேரம் சென்றபின் ஆனந்தருக்கு மற்றொரு கவலை தோன்றியது. மன்னருக்கு மன்னரான புத்தர் இந்தச் சிறிய குசீநகரில் இறப்பது அவருக்குப் பொறுக்கவில்லை. புத்தரிடம் அவர் சொன்னர்: "அண்ணலே! இந்தச் சிறிய நகரத்திலேதான் தாங்கள் பரிநிருவாணமடைய வேண்டுமா? சம்பா, சிராவஸ்தி, கௌசாம்பி, இராஜகிருகம், சாகேதம் முதலிய பெரிய பெரிய நகரங்களெல்லாமிருக்கின்றன. அங்கே யடைந்தால் பிரபுக்களும் அரசர்களும் தகுந்த மரியாதை செலுத்துவர்கள்."

"அப்படிச் சொல்ல வேண்டாம்" என்றார் புத்தர். "இது சிறிய நகரம் என்று எண்ண வேண்டாம். இது முன் காலத்தில் குசாவதி என்ற பெரிய நகரமாய்த் தானிருந்தது. மற்றும் பெரிய நகரங்கள் என்ன, எப்போதும் பெரிய நகரங்களாகவேதான் நிலைத்திருக்குமா? இப்பொழுதே போய் குசீநகர் வாழும் மல்லர் மக்களிடம் இன்றிரவு கடையாமத்தில் ததாகதர் பரிநிருவாணமடைவார் என்ற செய்தியைப் பரப்பு. பின்னர் அவர்கள், தமது நகரத்தில் ததாகதர் வந்தும் அவரைத் தரிசிக்கக் கிடைக்கவில்லையே என்று வருத்தப்படலாகாது" என்றார்.

ஆனந்தர் அவ்வாறே சென்று மல்லர் யாவருக்கும் அறிவித்தார். அன்றிரவு மல்லர்கள் குசீநகரத்திலுள்ள நகர

மண்டபத்தில் ஏதோ காரணமாகக் கூடியிருந்தார்கள். அந்த இடத்துக்குச் சென்ற ஆனந்தர் செய்தியைத் தெரிவித்தார். தாமதமில்லாமலே மள்ளர் யாவரும் தத்தம் குடும்பங்களையும் அழைத்துக்கொண்டு புத்தர் தங்கியிருந்த குசீநகரத்து உபவர்த்தனத்துக்கு வந்து தமது வணக்கத்தைச் செலுத்தினர். அவர்களை ஆனந்தர் புத்தருக்கு அறிமுகப் படுத்திவைத்தார்.

குசீநகரத்தில் அந்தக் காலத்தில் சுபத்திரர் என்ற ஒரு பரிவிராஜகர் வாழ்ந்து வந்தார். அவர் ஜைன மதத்தைக் சேர்ந்தவர். புத்தர் பெருமான் அங்கு எழுந்தருளியிருப்பது பற்றியும் அன்றிரவு பரிநிருவாண மெய்தப்போவது பற்றியும் கேள்விப்பட்டவுடன் சுபத்திரருக்கு கௌதம முனிவரை ஒருதரம் பார்க்க வேண்டுமென்ற ஆவல் பிறந்தது. உடனே சுபத்திரர் உபவர்த்தனத்துக்கு வந்து ஆனந்தரைப்பார்த்து, "சிரமண கோதமரின் பரிநிருவாணம் இன்றிரவு கடையாமத்தில் நடைபெறப் போவதாகக் கேள்விப்பட்டேன். அந்த முனிவரை ஒருதரம் பார்க்க விரும்புகிறேன்" என்றார். ஆனால் ஆனந்தர் அதை விரும்பவில்லை. "பகவான் களைப்புற்றிருக்கிறார். ஆகையால் அவரை இந்தச் சமயத்தில் தொந்தரவு செய்யலாகாது" என்று சொல்லி மறுத்துவிட்டார். சுபத்திரர் விடாமல் மூன்று தடவை கேட்டார். மூன்று தடவையும் ஆனந்தர் மறுத்துவிட்டார். இவர்கள் இப்படிப் பேசிக் கொண்டிருப்பது புத்தரின் காதில் விழுந்தது. உடனே அந்தப் பெருமான் ஆனந்தரை யழைத்து, "ஆனந்தா! சுபத்திரரை இங்கே அனுப்பு. அவர் இங்கு என்னைத் தொந்தரவு செய்ய வரவில்லை. அறிவைத் தேடவே வந்திருக்கிறார்" என்றார். சுபத்திரர் உள்ளே அனுமதிக்கப்பட்டதும் அவர் சென்று புத்தரை வணங்கி ஒருபக்கத்தில் உட்கார்ந்தார். அவருக்குப் புத்தர் தருமோப தேசம் செய்து உள்ளொளி பிறப்பித்துத் தீக்ஷையும் செய்து வைத்தார். இவரே புத்தர் மரணமாகு முன்னர் இறுதியாக அவர் கையால் தருமதீக்ஷை பெற்ற பிக்ஷு.

இந்தச் சம்பவம் நடந்து முடிந்த பின் புத்தர் களைப்புற்றார். அவரது ஆவி பிரிய வேண்டிய நேரமாகி விட்டது. நள்ளிரவு. அந்தச் சமயத்திலும் பகவான் சங்கத்தின் பிற்காலத்தைப் பற்றியும் அதன் பிளவற்ற வளர்ச்சியைப் பற்றியும் சிந்தித்துக் கொண்டிருந்தார். உடனே ஆனந்தரை யழைத்துப் புத்தர் தமது இறுதி வாக்கியங்களை மொழிந்தார்:

"ஆனந்தா! 'நமது குரு போய்விட்டார். அவரது உபதேசம் இனி நமக்குக் கிடைக்கப் போவதில்லை' என்ற எண்ணம் உங்களில் எவருக்காவது ஏற்படலாம். அவ்வாறு ஒருவராவது எண்ணக்

கூடாது. நான் இதுவரை உங்களுக்குச் சொல்லி நாளுக்கு நாள் வற்புறுத்திய தருமமும் விநயமுமே இனி நானில்லாத காலத்தில் உங்கள் குருவாகக் கருதப்படத்தக்கவை.

"ஆனந்தா! இதுவரை சங்கத்திலுள்ள பிக்ஷுக்கள் ஒருவரை யொருவர் 'நண்பரே' என்று சொல்லி யழைத்து வந்ததுபோல் இனி நானில்லாத காலத்தில் அழைத்தலாகாது. வயதில் மூத்தவர்கள் இளையாரைப் பார்த்து அவ்வாறு அழைத்தாலும் வயதில் மூத்தவர்களை இளையார்கள் 'உத்தமரே' என்று சொல்லி அழைத்தல் வேண்டும்." பின்னர் புத்தர் அங்கிருந்த பிக்ஷுக்கள் ஐந்நூறு பேரையும் பார்த்துச் சொன்னார்:

"பிக்ஷுக்களே! உங்களுக்குள்ளே ததாகதரைப் பற்றியோ தருமத்தைப் பற்றியோ சங்கத்தைப் பற்றியோ விநயத்தைப் பற்றியோ ஏதாவது சந்தேகமிருந்தால் இப்போதே என்னிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். பின்னால் நானில்லாத காலத்தில், 'நாங்கள் ததாகதருக்கு நேருக்கு நேர் உட்கார்ந்திருந்தும் கேட்கத் தவறிவிட்டோமே' என்று கழிவிரக்கப்பட வேண்டாம். இப்போதே சந்தேக மிருந்தால் கேளுங்கள்."

பிக்ஷுக்கள் மௌனமாயிருந்தனர். புத்தர் அதே கேள்வியை மீண்டும் கேட்டார். மூன்றும் முறையும் அவர்கள் மௌனமாயிருந்ததைக் கண்டு, "ஒருவேளை நீங்கள் மரியாதை காரணமாக என்னிடம் கேள்வி கேட்கக் கூச்சப்படலாம். அப்படியானால் உங்களுக்குள்ளேயே ஒருவர் மற்றவரிடம் சந்தேகத்தைக் சொல்லலாம்" என்றார்.

அப்பொழுதும் மௌனம் நிலவியது. இதைக் கண்ட ஆனந்தர் பேரானந்தமடைந்து புத்தரைப் பார்த்துப் பின்வருமாறு சொன்னார்: "பகவானே! என்ன ஆச்சரியம்! பிக்ஷு சங்கத்தாரிடையே எவ்வித சந்தேகமும் தோன்றவில்லை யென்பதை இப்போதுதான் நான் நம்புகிறேன். அளவற்ற மகிழ்ச்சி யடைகின்றேன். புத்தரைப் பற்றியோ தருமத்தைப் பற்றியோ சங்கத்தைப் பற்றியோ விநயத்தைப் பற்றியோ இங்கு ஒரு பிக்ஷுவாவது சந்தேகம் கொள்ளவில்லை."

"ஆனந்தா! நீ நம்பிக்கையின் காரணமாக அப்படிச் சொல்லுகிறாய். ஆனால் நான் அதை நேரில் காண்கிறேன். இங்கு கூடியிருக்கும் பிக்ஷுக்கள் ஐந்நூற்றுவரும் பந்தங்களை யறுத்துவிட்டனர். பிறவிக் கடலை நீந்திவிட்டனர். அருகத் நிலை அவர்களுக்குக் கிட்டவிருக்கிறது.

"பிக்ஷுக்களே! மீண்டும் உங்களுக்குச் சொல்லுகின்றேன். தோன்றுவன வெல்லாம் அழியும் தன்மையுடையன. விழிப்புடன் உங்கள் விமோசனத்துக்கு முயற்சி செய்யுங்கள்."

இவையே புத்தரின் இறுதி வாக்கியங்கள்.

மனைவி மக்களைத் துறந்து, சுற்றத்தைத் துறந்து, அரசுரிமையைத் துறந்து, நாட்டையே துறந்து மெய்ப்பொருளின் உண்மையைத் தேடி ஆறு வருட காலம் அருந்தவம் இயற்றினர். சிந்தனையில் முயன்று முயன்று அந்த முயற்சியின் பயனாக மெய்ஞானம் உதயமாகிப் பிறவித் துன்பத்தை யொழிக்கும் மருந்தைக் கண்டுபிடித்தார். அங்ஙனம் அரிதிற் பெற்ற சிகிச்சை முறையைப் பல்லுயிர்களினதும் விமோசனத்துக்காகத் தம் உயிர் பிரியும் சமயத்திலும் எடுத்தோதினர். "தோன்றுவன வெல்லாம் அழியும் தன்மையுடையன. அங்ஙனம் தோன்றுமலும் அழியாமலும் இருக்கும் அதீத நிலையைப் பெறுவதற்கு உங்கள் சித்தத்தை யியக்கிப் போத மெய்ப்பொருளை நீங்களாகவே உணர்ந்து கொள்ளுங்கள்."

புத்தரின் கண்கள் மூடின. ஐம்புலன்களும் மனமும் ஒடுங்கின. அவர் தியான சமாதியிலிருந்தார். நான்கு படிகளையும் அடைந்தபின் வெட்டவெளி எல்லையற்ற தென்னும் அறிவு தரும் ஆகாசாநந்தியாயதனம் என்ற தியானத்திலும், பின் விஞ்ஞானம் எல்லையற்ற தென்னும் அறிவு தரும் விஞ்ஞானாநந்தியாயதனம் என்ற தியானத்திலும், அதற்குப் பின் யாவுமற்ற சூனிய மென்னும் ஆகிஞ்சந்யாயதனம் என்ற தியானத்திலும், அதற்கடுத்து அறிவுள்ளதும் அறிவற்றதல்லாததும் என்கின்ற நிலையெனச் சொல்லப்படும் நைவஸம் ஜ்ஞாந ஸம்ஜ்ஞாயதனம் என்ற தியானத்திலும், இறுதியாக சகலமும் ஒடுங்கிய விமுக்தி நிலையென்ற ஸம்ஜ்ஞாவேதயிதநிரோத நிலையையடைந்தார்.

இங்ஙனம் சமாதி நிலையடைந்த மாதவனைப் பார்த்த ஆனந்தர் தமது பக்கத்தில் நின்றுகொண்டிருந்த பிக்ஷு அனுருத்தரைப் பார்த்து, "அனுருத்தரே! பகவானின் உயிர் பிரிந்து விட்டது" என்றார். அதற்கு அனுருத்தர், "பகவான் இன்னும் இறக்கவில்லை. அவர் இப்போதுதான் சமாதி நிலையின் இறுதிப்படியை யடைந்திருக்கிறார்" என்று சொன்னர். அதன் பின்னர் புத்தர் படிப்படியாக அந்நிலையி லிருந்து இறங்கிக் கீழே தியானத்தின் முதல் படிக்கு வந்து மீண்டும் ஏறி இறுதிப்படியை யடைந்து பரிநிருவாணம் எய்தினர் என்று மகா பரிநிருவாண சூத்ரம் என்ற பௌத்த புராணம் கூறுகிறது.

அந்தச் சமயத்திலே பூமியதிர்ந்தது; வானத்தில் இடியிடித்து மழை கொட்டியது. தேவர்கள் பூமியில் வந்திறங்கினர். கூடியிருந்த பிக்ஷுக்களில் பலர் தாங்கொணாத் துயரத்தில் கதறி யழுதனர். அனுருத்தர் யாவரையும் தேற்றி, பகவான் அடிக்கடி சொன்ன

நிலையாமையை விளங்கச் சொல்லி அழுகையை நிறுத்தினர். ஆயினும் தலைவனை யிழந்த பிக்ஷுக்கள் தமது நிர்க்கதியை நினைத்து வருந்தினர். அனுருத்தரும் ஆனந்தரும் விடியும்வரை தரும பாராயணம் செய்து கழித்தனர்.

விடிந்த பின்னர் ஆனந்தர் குசீநகர் மள்ளர்களிடம் சென்று புத்தரின் பூதவுடலைத் தகனம் செய்ய வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யச் சொன்னர். மள்ளர்கள் ஆண்களும் பெண்களும் ஆயிரம் ஆயிரமாகக் கூடிவந்து தமது வணக்கத்தைச் செலுத்தினர். ஆனந்தர் ஈமக்கிரியை விஷயமாகப் பகவான் சொன்னதை எடுத்துச் சொன்னர். மள்ளர்கள் ஏழு நாட்களாக அங்கு புத்தரின் உடலை வைத்துப் பூஜித்து ஆடலும் பாடலும் நடத்தி மங்கள முழக்கம் செய்தனர். ஏழாவது நாள் உடலைத் தகனம் செய்ய ஏற்பாடுகள் செய்துவிட்டுத் தெற்குத் திசையிலிருந்த மயானத்துக்கு எடுத்துச் செல்ல அவ் வுடலைத் தூக்கினர்கள். ஆனால் எவராலும் அசைக்க முடியாமல் புத்தரின் உடல் அந்நிலையிலேயே உறுதியாய்க் கிடந்தது! இதன் காரணமென்ன என்று அவர்கள் யோசிக்கும்போது அனுருத்தர், "நாம் ஒன்று நினைக்கத் தேவர்கள் ஒன்று நினைக்கிறார்கள். மயானத் துக்குக் கொண்டு செல்லாமல், கிழக்குத் திசையிலிருக்கும் மகுட பந்தனம் என்ற மள்ளர்களின் ஆலயத்துக்குக் கொண்டு போய் அங்கேயே ஈமக்கிரியையைச் செய்ய வேண்டுமென்பதே தேவர்கள் விருப்பம் போலிருக்கிறது" என்று கூறினர். மள்ளர்கள் அவ்வாறே செய்வோம் என்று தீர்மானித்துப் பிரேதத்தைத் தூக்கினர்கள். எவ்வித கஷ்டமுமில்லாமல் அவர்கள் கையில் எழுந்தது! மகுட பந்தனம் என்ற இடத்தில் வைத்துப் புத்தாடையும் புதுப் பஞ்சும் சுற்றித் தைலமாட்டி நறுமணங் கமழும் சந்தனம் அகில் முதலிய விறகுகளை அடுக்கி அதன்மீது வைத்தனர். மள்ளர்களில் மூத்தோர் நால்வர் தமது தலைகளிலுள்ள மயிரை மழித்துக் குளித்துப் புத்தாடை புனைந்து கொண்டு புத்தரின் பூதவுடலுக்குத் தீ மூட்ட முன்வந்தனர். ஆனால் தீ மூள மறுத்தது. மீட்டும் மீட்டும் முயன்றார்கள். முடிய வில்லை. அனுருத்தர் யோசித்துவிட்டு, "இன்னும் ஏதோ குறையிருக்க வேண்டும். பிக்ஷுக்களில் மூத்தோராகிய மஹா காசியப பிக்ஷு இந்தச் சமயத்தில் இங்கில்லையே! அவர் இதில் பங்கு கொள்ளாமல் எப்படி இவ்வைபவம் நிறைவேறும்?" என்றார். அதே சமயம் எங் கிருந்தோ வந்து சேர்ந்தார் காசியபர். வந்ததும் புத்தரின் பாதங் களைத் தொட்டு வணங்கினர். மற்றைய பிக்ஷுக்கள் ஐந்நூற்று வரும் ஒழுங்காக வணங்கியவுடன் திடீரென்று தீப்பற்றிக் கொழுந்து விட்டெரிந்தது. வானத்திலிருந்து மலர் மாரி பொழிந்தது.

அந்தப் பூதவுடல் தகனமாகிய வுடனே பெருமழை பெய்து தீயை அவித்தது. மள்ளர்கள் பன்னீர் தெளித்தனர். அஸ்தியைச் சேர்த்தெடுத்து வைத்து ஏழு நாட்களாக இரவும் பகலும் காவல் புரிந்தனர்.

புத்தரின் மரணத்தைக் கேள்வியுற்ற மகத மன்னன் அஜாத சத்துரு, புத்தர் ஒரு க்ஷத்திரியர்; தானும் க்ஷத்திரியன்; ஆகையால் தனக்கு அவர் அஸ்தியில் ஒரு பாகம் கொடுக்க வேண்டும் என்று சொல்லி ஒரு தூதுவனை யனுப்பி யிருந்தான். வைசாலியிலுள்ள லிச்சவிகளும் வந்து அஸ்தியில் பங்கு கேட்டனர். கபிலவஸ்துவில் சாக்கியர்கள் பெரும்பாலானவர்களும் அழிந்து போயினராலும் ஒரு சிலர் எஞ்சியிருந்தவர்கள் தமக்கும் ஒரு பாகம் வேண்டும் என்று வந்து சேர்ந்தனர். இங்ஙனமே கோலியர்களும் மற்றவர்களும் வந்து பங்கு கோரினர். அவர்களுக்குள் உனக்கு எனக்கு என்று ஒரே சண்டை மூண்டது. யார் உரிமை பெற வேண்டுமென்று வாதம் கிளம்பியது. இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த துரோணர் என்ற அந்தணர் அவர்களை நோக்கி, "புத்தர் பெருமான் சாந்தத் தையும் சமாதானத்தையும் இவ்வுலகில் போதித்தார். ஆகையால் நாம் அவர் உபதேசத்தின்படி ஒழுகுவோம். வீணாக எதற்கு இப்படி வாதம் செய்கிறீர்கள்? இந்த அஸ்தியை எல்லாருமே பெற்றுக் கொள்வதுதான் நீதி. இங்கே எட்டுப் பேர் பங்கு கேட்கிறீர்கள். ஆகையால் நானே அஸ்தியை எட்டுப் பங்காகப் பகிர்ந்து தருகி றேன்" என்று சொல்லி ஒரு பாத்திரம் கொண்டு அஸ்தியை எட் டாகப் பகிர்ந்து ஆளுக்கொரு பங்கைக் கொடுத்தார். அளவையாக உபயோகித்த பாத்திரத்தைத் தமக்கு வைத்துக் கொண்டார். அரசர் தூதுவர்கள் அஸ்தியைக் கொண்டு சென்று ஒவ்வொரு நாட்டிலும் அதை யடக்கம் செய்து ஸ்தூபிகள் கட்டி யெழுப்பினர்கள் என்றும், துரோணர் தாம் வைத்திருந்த பாத்திரத்தையே அடக்கம் செய்து அதன்மீது ஒரு ஸ்தூபி கட்டி யெழுப்பினர் என்றும் சொல்லப் படுகிறது.

முப்பத்திரண்டாம் அத்தியாயம்

யாத்திரை முடிந்தது

அசோக மன்னன் இருந்திராவிட்டால் புத்தரைப் பற்றியோ பௌத்தத்தைப் பற்றியோ நாம் இன்று பேசிக் கொள்ளச் சந்தர்ப்ப மிருக்காது. அவன் ஒருவன்தான் புத்தர் போதித்தவைகளில் மிக முக்கியமான சீலம் என்ற வாழ்க்கை முறை உலகெங்கும் பரவ வேண்டுமென்ற சிந்தையுடன் தரும முழக்கம் செய்து தருமத் தூதுவரை யனுப்பி நாற்றிசையும் புத்தர் புகழ் பரப்பினன். கலிங் கத்துப் போரில் பிணக் காட்டைக் கண்ட அசோகன் கவலை மேலீட்டால், மறப் போரில் லாபமில்லை அறப்போரே சிறந்த தென்ற சிந்தையோடு தரும யாத்திரை செய்தான். புத்தர் பிறந்த இடம், ஞானம் பெற்ற இடம், தருமோபதேசம் செய்த இடம், பரிநிருவாண மெய்திய இடம், இப்படியாக யாத்திரை செய்து ஒவ்வோரிடத் திலும் ஸ்தூபி கட்டியெழுப்பினன். தருமவுரையில் கண்ட சில மொழிகளைக் கற்றூண்களில் செதுக்கி வைத்தான். அவ்வாறு யாத்திரை செய்துகொண்டு வரும் வழியில் குசீநகரத்துக்கும் வந்து அங்கே போதி மாதவன் இறுதியாக ஆனந்த நித்திரையிலாழ்ந்த இடத்திலும் ஒரு ஸ்தூபியை எழுப்பினன்.

அவனைத் தொடர்ந்து மற்றும் பல பௌத்தர்கள் அங்கே விஹாரங்களைக் கட்டினர்கள். சிலைகளை நிறுவினர்கள். சீனத்தி லிருந்தும் பௌத்த யாத்திரிகர்கள் வந்து வழிபட்டுச் சென்றார்கள். ஆனால் இன்று குசீநகர் எப்படிக் காட்சி யளிக்கிறது?

*

காசியிலிருந்து ரயிலேறி வடக்கேயுள்ள கோரக்பூர் என்ற கோரக்ஷக புரியை அடைந்தேன். காலை வேளை. கோரக்பூர் ஸ்டேஷனில் மாம்பழமும் கொய்யாப் பழமும் கூடை கூடையாக மலைபோல் குவித்து வைக்கப்பட்டிருந்தன. அந்தப் பிரதேசம் பழ வர்க்கங் களுக்குப் பெயர்போன இடம். கோரக்பூர் நகர்தான் மற்றைய இடங் களுக்கெல்லாம் விளைபொருட் பண்டங்களை அனுப்பிக் கொண் டிருக்கும் முக்கியமான ஸ்தலமாகையால் ரயில்வே ஸ்டேஷன் மிகப் பெரிய அளவில் கட்டப் பெற்றிருக்கிறது. பிளாட்பாரம் முழுவதும் விவசாயப் பொருள்களாகவே காட்சி யளித்தன.

முக்கியமான ரயில்வே நிலையமாகையால் அங்கே நல்ல முறையில் ஒரு சிற்றுண்டிச்சாலை யிருந்தது. அதில் போய் சிற்றுண்டி சாப்பிட்டுக்கொண்டு ஒரு சைக்கிள் ரிக்ஷாவில் ஏறி கோரக்பூர் கன்டோன்மெண்டு என்று சொல்லப்படும் இடத்துக்குப் போனேன். அங்கிருந்துதான் காசியா என்று சொல்லப்படும் குசீநகரத்துக்கு பஸ் போகிற தென்றும், பஸ் நிலையத்துக்குப் போனால் காலா காலத்தில் சீட் ரிசர்வ் செய்து கொள்ள வசதி கிடைக்கும் என்றும் ஸ்டேஷனில் புத்தி சொல்லித் தந்தார்கள். மற்றைய ஊர்களைப் போலல்லாமல் பீஹார் அரசாங்கம் இந்த கோரக்பூரில் மெச்சத்தக்க விதமாக பஸ் போக்கு வரத்து சேவையை நடத்தி வருகிறார்கள் என்பதைக் கண்டேன். மிகவும் அழகாக அமைந்த பஸ் நிலையம். பிரயாணிகள் சௌகரியமாகத் தங்கியிருக்க ஒரு மண்டபமும் மற்றும் வசதிகளும் காணப்பட்டன. ஒரு மணி நேரத்துக்கு முன்பே நான் அங்கு போய்விட்டதால் மேலதிகமாக நாலணாக் கொடுத்து முதல் வகுப்பு சீட் ஒன்று பிடித்துவைத்துக் கொண்டேன்.

கோரக்பூரிலிருந்து குசீநகருக்குப் போக முப்பத்தாறு மைல் தூரம். மிக அழகிய, வளைவோ முடக்கோ இல்லாத நெடிய சாலை. இரு பக்கங்களிலும் நிழல் தரும் விருக்ஷங்கள். புளிய மரங்களும், மாமரங்களும், இடையிடையே ஆலமரங்களும் நடப்பட்டுச் சோலையாக வளர்ந்திருக்கின்றன. வெயிலின் கொடுமையே தோற்றுமல் நிம்மதியாகப் பிரயாணம் செய்யக் கூடிய சாலை. நாலந்தையிலிருந்து பாடலிபுரத்துக்குச் செல்லும்போது அடிக்கொரு தடவை நின்று நின்று சென்ற வண்டியைப்போல் இந்த பஸ் போக வில்லை. கோரக்பூரிலிருந்து புறப்பட்ட பஸ் இருபத்து மூன்று மைல் தூரம் ஒரே வேகத்தில் சென்ற பின்னர் ஹாட்டா என்ற இடத்திலே தான் நிறுத்தப்பட்டது. அங்கே சற்று வேளை பிரயாணிகள் இறங்கிச் சிரம பரிகாரம் செய்துகொண்ட பின் மறுபடியும் கிளம்பிப் பதின்மூன்று மைல் சென்று காசியா கிராமத்தில் போய் நின்றது.

காசியா என்று வழங்கும் கிராமத்திலேதான் குசீநகர் க்ஷேத்திரம் இருக்கிறது. பெரிய சாலையிலிருந்து இரண்டு பர்லாங்கு தூரம் நடக்க வேண்டும். அதற்கும் நல்ல பாதை அமைத்திருக் கிறார்கள். சாலையின் பக்கத்திலே இரண்டு பள்ளிக்கூடங்களிருக் கின்றன. சந்திரமணி ஆரம்பப் பாடசாலை யென்பது ஒன்று; இது முதலில் இலங்கையைச் சேர்ந்த சத்தானந்தர் என்ற பிக்ஷுவும் தர்மபாலரும் சேர்ந்து ஆரம்பித்துவைத்த பள்ளிக்கூடம். இதற் கடுத்து, ஆங்கிலமும் ஹிந்தியும் கற்றுக் கொடுக்கும் பௌத்த

வித்தியாசாலை யொன்றிருக்கிறது. உத்தரப் பிரதேசத்தில் அந்தக் காலத்திலே மிகவும் செல்வாக்கோடிருந்த காங்கிரஸ் ஊழியர் ராகவதாஸர் என்பவர் பௌத்த தருமத்தை வளர்க்க வேண்டுமென்ற ஆவலில் இந்தப் பள்ளிக்கூடத்தை ஸ்தாபித்து வைத்ததாகக்சொல்லப் படுகிறது. இந்த இரு பள்ளிக்கூடங்களையும் கடந்து சென்றபோது ஆரிய விஹார தர்மசாலை யென்ற ஒரு கட்டிடத்தில் அச்சுதானந்தா என்ற ஒரு பௌத்த பிக்ஷுவைச் சந்தித்தேன். இவர் வடநாட்டவர். நல்ல கல்விமான். மிகவும் சுறுசுறுப்பான, முயற்சியுள்ள மனிதர். மேலே சொன்ன இரண்டு பள்ளிக்கூடங்களையும் இந்த பிக்ஷுவே மேற்பார்வை செய்து வருகிறார். தர்ம சாலையையும் பார்த்துக் கொள்ளுகிறார். குசீநகரத்து உள்நாட்டு நிர்வாக விஷயங்களிலும் அக்கறையோடு பங்கு கொண்டு, கிராமப் பஞ்சாயத்து விஷயங் களிலும் கவனம் செலுத்திக் கொள்ளுகிறார். நான் போன சமயத்தில் யாரோ இரண்டு விவசாயிகள் வந்து நின்று தங்கள் சொந்தப் பிரச்சினைகளை முறையிட்டுக் கொண்டிருந்தனர். அவர்களுக்கும் ஆலோசனைகள் சொல்லி யனுப்பிவிட்டு என்னையும் அன்போடு வரவேற்றுப் பல இடங்களுக்கு அழைத்துச் சென்று காட்டினர்.

இலங்கையிலே அனுராதபுர நகரத்தைக் கிட்டும்போதே அங்குள்ள ருவாங் வெலி சைத்தியம் முதலில் காட்சி தருவதுபோல குசீநகரத்தில் நமது கண்ணில் முதலிலே தோற்றமளிப்பது அங்குள்ள மகாபரிநிருவாண ஸ்தூபிதான். இலங்கையில் காணப்படுவதுபோல அவ்வளவு பெரிய ஸ்தூபியா யில்லாவிட்டாலும், அகலக் குறைவான, ஆனால் உயரமான ஸ்தூபி இது. அந்தக் காலத்திலே புத்தர் பரிநிருவாணமடைந்தவுடன் குசீநகரத்து மள்ளர்கள் அவருடைய அஸ்தியை வைத்து ஒரு ஸ்தூபி எழுப்பி வைத்தார்கள். பின்னர் அசோக மன்னன் வந்தபோது பெரிய ஸ்தூபி கட்டிச் சென்றான். கி. பி. ஐந்தாம் நூற்றாண்டிலே ஒரு தடவை ஸ்தூபிக்குத் திருத்தம் செய்யப்பட்டதாம். ஆனால் அவையெல்லாம் அழிந் தொழிந்துபோய் இப்போது காணப்படும் ஸ்தூபியைச் சில பர்மிய பௌத்த மக்கள் சமீப காலத்திலேதான் கட்டி வைத்திருக்கிறார்கள்.

1877-ம் ஆண்டிலே கார்லில் என்ற ஆங்கிலத் தொல் பொருளா ராய்ச்சி நிபுணர் இங்கு வந்து சில இடங்களை அகழ்ந்து ஆராய்ச்சி செய்தபோது அற்புதமான சில தகவல்கள் அவருக்குக் கிடைத்தன. மிகப் புராதனமான ஒரு புத்தர் சிலை, அவரது மகாபரிநிருவாண நிலையைச் சித்திரிப்பதாக சயன நிலையிலுள்ளது, உடைந்து தகர்ந்து போய் ஸ்தூபி யிருந்த ஸ்தலத்துக்குப் பக்கத்து நிலத்தில் கண்டெடுக் கப்பட்டது. அதை அவர் பக்குவமாக ஒன்று சேர்த்துப் பொருத்திப்

பழைய நிலையிலே இருக்கும் வண்ணம் செய்து வைத்தார். அந்த மகாபரிநிருவாண விக்கிரகம் ஸ்தூபிக்குப் பக்கத்திலுள்ள ஒரு சாந்துக் கட்டிடத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. சுனர் என்ற மத்துரா நகர்க் கல்லிலே செதுக்கப்பட்ட இந்தப் புத்தர் வடிவம் இருபது அடி நீளமுள்ளது. சால விருக்ஷங்களினிடையே ஆனந்தரைக் கொண்டு படுக்கை போடச் சொல்லி சிங்கத்தைப் போன்ற பாவனையில் வலப்பக்கம் சாய்ந்து, வலது கைமேல் தலையை வைத்து, வலக்கால் மேல் இடக்காலைப் போட்டு அதன்மீது இடது கையை வைத்துச் சமாதி நிலையில் மீளா நித்திரையில் ஆழ்ந்த புத்தர் பெருமானை இந்தச் சிலை ஞாபகமூட்டிக் கொண்டிருக்கிறது. புத்தரின் மகா பரிநிருவாணத்தைக் காண்பிக்கும் சிலைகளிலெல்லாம் இதுவே மிகப் புராதனமானது என்று சொல்லப்படுகிறது. ஒரு கட்டிலில் படுத்திருக்கிறார் புத்தர். கட்டிலின் பக்கத்திலே ஆனந்தர், சுபத்திரர் ஆகிய இரு பிக்ஷுக்கள் நிற்கிறார்கள். வஜ்ரபாணி என்ற மள்ளர் தலைவனும் மற்றும் ஆறு பேரும் அங்கே நிற்கிறார்கள். ஆனால் இந்த விக்கிரகத்தை வைத்துக் கட்டப்பட்டிருக்கும் கோயில் என்ற பெயரிலுள்ள கட்டிடம்தான் சிற்பக் கலையின் சிந்தனையே யில்லாதவர்கள் செயலாகத் தெரிகிறது. வெளிச்சம் உட்புகாதவாறு குகை போன்றிருக்கிறது கட்டிடம். பக்தியோடு வழிபாடியற்றும் பர்மியரும் சிங்களர்களும் வந்து பலவிதமான திரைச் சீலைகளைப் போட்டு விக்கிரகத்தை மூடி வைத்திருக்கிறார்கள். கொடிகளும் பல தொங்க விடப்பட்டிருக்கின்றன. விக்கிரகத்தை ஒரு போட்டோ பிடிப்பதற்கு அங்கு காவல் காத்து நின்ற ஒரு 'பூசாரி' மிக அன்போடு திரைச் சீலைகளை நீக்கித் தந்தார். பொலன்னறுவையிலுள்ள சயன விக்கிரகம் போல் உறுதியும் திண்மையு மில்லாவிட்டாலும் இங்குள்ள இந்த விக்கிரகத்தின் முகத்திலே சாந்தம் பொலிந்து காணப்படுகிறது.

அறிஞர் கார்லில் முதலிலே ஆராய்ச்சி செய்யும்போது அகப்பட்ட செப்பேட்டிலேதான் இந்த விக்கிரகத்தைப் பற்றியும் ஸ்தூபியைப் பற்றியும் குறிப்பிடப்பட்டிருந்தது. கி. பி. ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த குமார குப்தன் என்ற அரசன் காலத்தில் யாரோ ஹரிபலசுவாமி என்பவர் இந்தச் சிலையை ஸ்தாபிதம் செய்து வைத்தார் என்றும், மானியங்கள் சில கொடுத்தார் என்றும், அந்தச் செப்பேட்டில் எழுதப்பட்டிருந்தது.

குசீநகர் ஸ்தூபிக்குச் சமீபமாகத் தொல்பொருளாராய்ச்சிப் பகுதியார் பல இடங்களை அகழ்ந்து சில விஹாரங்களும் ஆசிரமங்களும் இருந்த கட்டிட அஸ்திவாரங்களை வெளிப்படுத்தி யிருக்கிறார்

கள். ஸ்ரீ விஷ்ணு துவீப விஹாரம், பதந்த சுவீர விஹாரம் என்ற இரு விஹாரங்கள் இங்கே ஒரு காலத்தில் இருந்தன என்பது மேலே சொன்ன செப்பேட்டிலிருந்தே அறியக்கிடக்கிறது. சாரநாத் முதலிய ஸ்தலங்களைப் போல குசீ நகரத்தில் பரந்துபட்ட கட்டிடச் சின்னங் கள் அதிகமாயில்லை.

இந்த இடத்திலிருந்து கிழக்கே முக்கால் மைல் தூரத்தில் புத்தரின் பூதவுடல் தகனம் செய்யப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. அந்தக் காலத்தில் இந்த இடத்தை மகுட பந்தனம் என்று சொன்னர் கள். மள்ளர் ஜாதியினர் கோயில் ஒன்று இங்கே யிருந்ததாகச் சொல்லப்படுகிறது. தகனம் முடிந்த பின்னர் மள்ளர்கள் அங்கார சைத்தியம் என்ற ஒரு ஸ்தூபியைக் கட்டி எழுப்பி வைத்தார்களாம். இப்போது அங்கே ஸ்தூபியாவது கோயிலாவது கிடையாது. ஒரு பெரிய மண்மேடு மாத்திரம் காணப்படுகிறது. நான் போன சமயத் தில் அந்த மேடு முழுவதும் பல விழுதுகளோடு ஆலமரம் ஒன்று சடைத்து வளர்ந்திருந்தது. இப்போது தொல்பொருளாராய்ச்சிப் பகுதியார் மேட்டைத் துப்புரவு செய்துவைத்திருக்கிறார்கள். இந்த அங்கார சைத்தியத்தை நான் பார்க்கச் சென்றபோது என்னுடன் வந்த அச்சுதானந்த பிக்கு அங்கே ஆலமரத்தின் கிளையொன்றில் கொட்டில் கட்டி சீனத் துறவி யொருவர் வசித்து வருவதாகச் சொன்னர். ஆனல், அந்தச் சமயத்தில் கொட்டிலை மாத்திரம் பார்த்தேனல்லாமல் சீனத் துறவியைச் சந்திக்க முடியாமல் போய் விட்டது. உள்ளூர் மக்கள் இந்த அங்கார சைத்தியம் இருந்த மேட்டை 'ராம்பார்' என்று சொல்லி வருகிறார்கள்.

இங்கிருந்து திரும்பி வரும்போது ஒரு சிறு வாய்க்காலைக் கடந் தோம். அதுதான் அந்தக் காலத்து குகுஷ்ட நதியாக இருந்தது என்று சொன்னர் பிக்கு. சிறிய வாய்க்கால்தான். ஆனல் மழைக் காலத்தில் தண்ணீர் ஆருகப் பெருகும் என்று சொல்லக் கேட்டேன். விவசாயிகள் இப்பொழுதும் அந்த வாய்க்காலைக் கடந்து வண்டிகளை ஓட்டித்தான் செல்கிறார்கள். புத்தர் இந்தப் பக்கம் வரும்போது களைப்புற்று இங்கேதான் தண்ணீர் மொண்டு சாப்பிட்டார் என்றும், ஐந்நூறு வண்டிகள் சென்றதால் கலங்கிப் போயிருந்த நீர் திடீரென்று சுத்தமாகிவிட்டதென்றும் கதை.

குசீநகரில் மற்றொரு சிறு கட்டிடம் மஹா பாபா கி மூர்த்தி மந்திர் என்ற பெயரிலுள்ள சிறு கோயில். இது சமீபகாலத்துக் கட்டிடமானலும் இதனுள்ளே யிருக்கும் ஒரு தியான புத்தரின் சிலை கி. பி. முதலாவது நூற்றாண்டில் கனிஷ்கர் காலத்தில் செய்யப் பட்டதென்று சொல்கிறார்கள். பர்மிய சந்நியாசிகள் இப்போது

அந்தக் கோயிலை மேற்பார்வை செய்து வருகிறார்கள். ஒரு பர்மியப் பெண் உபாசிகையே அக்கோயிலைக் கட்டிவைத்தாள்.

மேற்சொன்னவற்றைத் தவிரக் குசீநகரில் பார்ப்பதற்கு வேறொன்றும் விசேஷமாக இல்லை. ஆனால் பாழடைந்த ஊராக அதை விட்டுவிடாமல் அந்த ஊர் மக்கள் கிராமப் புனருத்தாரண வேலைகளைச் செய்து நல்ல முறையில் அபிவிருத்தி செய்து வருகிறார்கள். நான்கு பக்கமும் விவசாயம் செழிப்பாகக் காணப்பட்டது. கிராமப் பள்ளிக்கூடங்களும் வளர்ந்து வருகின்றன.

பஸ் வருவதற்கு இன்னும் ஒரு மணி நேரமிருந்தது. சற்று தூரம் நடந்து சென்றபோது காசியாவின் கடைத்தெரு தென்பட்டது. அங்கே ஒரு கடையில் உட்கார்ந்து ரொட்டியும் பாலும் சாப்பிட்டு விட்டு பஸ்ஸில் ஏறித் திரும்பினேன்.

முடிவுரை

சாக்கிய முனிவராகிய கௌதம புத்தரின் யாத்திரை முடிவடைந்து விட்டது. அவருடைய அடிச்சுவட்டில் சென்ற நமது யாத்திரையும் பூர்த்தியாகிவிட்டதால் இப்போது வாசகர்களிடமிருந்து விடை பெற்றுக்கொள்ள வேண்டிய சமயம் வந்துவிட்டது.

சாக்கிய நாட்டில் சுத்தோதன மன்னன் ஆட்சி செய்த கபிலவஸ்துவுக்குப் போய் அவன் ஆட்சியைப் பார்த்தோம். உலும்பினி வனத்தில் புத்தர் அவதரித்ததைக் கண்டோம். கபிலவஸ்துவில் அவர் வாழ்வையும் துறவையும் பார்த்துவிட்டு அவர் அடிச்சுவட்டிலேயே சென்று அவர் இயற்றிய தவங்களையும் யோக சாதனைகளையும் பார்த்தோம். பின்னர் போதி விருக்ஷத்தினடியில் வைசாக பூர்ணிமையில் அவர் சம்போதி ஞானம் பெற்றதைப் பார்த்து மகிழ்ந்தோம். அதற்குப் பிறகு ரிஷிபதனத்தில் அவர் செய்த முதல் பிரசங்கத்தைக் கேட்டுவிட்டு அவர் சென்றவிடமெல்லாம் சுற்றித் திரிந்து, இறுதியில் குசீநகரில் பரிநிருவாணம் பெற்ற காட்சியையும் கண்டுகொண்டோம்.

புத்தர் பரிவிராஜகர் என்ற சந்நியாச வர்க்கத்தைச் சேர்ந்தவர். அலைந்து திரியும் வர்க்கம் அது. தருமோபதேசம் செய்வதற்காக நகரங்களுக்கும் கிராமங்களுக்கும் அவர் போனது உண்மைதான். ஆயினும் அவர் சுற்றித் திரிந்த இடங்கள், தங்கிய இடங்கள் எல்லாம் பெரும்பாலும் மலைச் சிகரங்கள், மகாவனங்கள், மாஞ்சோலைகள் என்றுதான் காணப்படுகின்றன. வருடத்தில் மூன்று மாதங்கள் வர்ஷகாலம் என்ற மாரிக்காலத்தில் மாத்திரம் ஓரிடத்தில் தங்கி யிருப்பார். மற்றைய நாட்களெல்லாம் சுற்றித் திரிவார். இப்படி நாற்பத்தைந்து ஆண்டுகள் அவர் எப்படித்தான் உறுதியோடு, பிச்சைச் சோற்றை மாத்திரம் உண்டுகொண்டு சிங்கம் போல நடந்தார் என்பது ஆச்சரியமா யிருக்கிறது. ஆறு வருட காலம் அவர் செய்த யோகானுஷ்டானம்தான் அந்த மகாவீரரின் உடற்சக்திக்கும் உள்ளச் சக்திக்கும் காரணமா யிருக்கவேண்டும். உண்மையில் அவர் ஒரு மகா புருஷரே-

தென்னாட்டிலே நான் ஸ்தல யாத்திரை நிறையச் செய்திருக்கிறேன். ஐரோப்பாவிலும் பல இடங்களுக்குப் பிரயாணம் செய்

திருக்கிறேன். தென்னாடு நமது சொந்த நாடு என்பதாலும் சௌகரியங்கள் குறைவாயிருக்கு மிடங்களில் சமாளித்துக்கொள்ளப் பழக்கமிருப்பதாலும் பிரயாணம் அவ்வளவு அலுப்புத் தராது. ஐரோப்பாவிலோ வென்றால் பிரயாணிகளுக்கு அளவற்ற சௌகரியங்களிருக்கின்றன. ஆனால், தமிழர் ஒருவர் வடநாட்டிலே, அதிலும் கிராமப் புறங்களிலே, பிரயாணம் செய்வதென்றால் அது ஒரு தனி அனுபவம். போக்குவரத்து வசதிக்குறை, உணவு வசதிக்குறை, தங்குவதற்கு வசதிக்குறை, எல்லாவற்றையும்விட பாஷை தெரியாத ஒரு பெரிய முட்டுக்கட்டை—இத்தனை கஷ்டங்களோடு தனியாக ஒருவர் நேபாளப் பிரதேசத்திலும், உத்தரப் பிரதேசத்திலும், பீஹார் கிராமங்களிலும் சமாளித்துக்கொண்டு திரும்புவதானால் அதை ஒரு தனி அனுபவம் என்றுதான் சொல்லவேண்டும். என்னுடைய பிரயாணத்தில் பல கஷ்டங்கள் இருந்தனதான். ஆனால் முன்பின் தெரியாத பட்டிக்காட்டிலும் அந்நியர்கள் பலர் அன்போடும் ஆதரவோடும் எனக்குச் செய்துதந்த உதவிகளை நினைக்கும்போது மனிதவர்க்கத்திடையே அன்பு என்பது ஒரு தவிர்க்க முடியாத பண்பு என்பதையும், அதற்கு இனம், சாதி, சமயம், பாஷை என்று வேறுபடுத்திப் பார்க்கும் தன்மை கிடையாது என்பதையும் உணர்ந்தேன். அந்த அன்பு, தயை, கருணை, பரோபகாரம் என்ற பண்புகளைத்தான் பகவான் புத்தரும் தமது உபதேசம் முழுவதிலும் வற்புறுத்திக் கொண்டிருந்தார். அதனால் அவர் பிரயாணத்தில் கஷ்டப்படவில்லை. நானும் அதை உணர்ந்தேன்.

பிரயாணம் ஒரு இன்பமான அனுபவம். அந்த அனுபவத்தை மற்றவர்களுக்குச் சொல்வதில் இன்பம் மேலும் அதிகப்படுகிறது. அதனாலேயே இந்தப் புத்தகத்தை எழுதும்போது நான் அளவற்ற இன்பத்தைப் பெற்றேன். அந்த இன்பத்தில் வாசகர்கள் ஒரு சிறிதளவாவது பெறுவார்களானால் அதுவே எனது யாத்திரா பலனாகும்.

யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்.

அனுபந்தம்

பௌத்தம்

உலகத்திலுள்ள மொத்த ஜனத்தொகையில் ஐந்திலொரு பங்கினர், அதாவது 50 கோடி மக்கள் பௌத்த மதத்தைத் தழுவி வாழுகின்றனர் என்று சொல்லப்படுகிறது. இலங்கை, பர்மா, திபேத்து, நேபாளம், தாய்லந்து, கம்போடியா, லாவோஸ், சீனு, ஜப்பான், கோரியா ஆகிய ஆசிய நாடுகளிலேயே அது பெருவாரியாகப் பரந்து காணப்படுகிறது. ஆனால், சீனு, ஜப்பான், கோரியா ஆகிய தேசங்களில் வசிக்கும் மக்களில் பெரும்பான்மையும் பௌத்தர்கள் என்று சொல்லப்பட்ட போதிலும், அந்த பௌத்தம் எத்தனையோ வகையில் மாறுபாடடைந்து ஒரு புதிய மதம்போல் காணப்படுகிறது. பௌத்தம் உதித்த பாரதத்தில் கி.பி. ஆரும் நூற்றாண்டளவில் அது சிதைவடைய ஆரம்பித்து, பன்னிரண்டாம் நூற்றாண்டிலே முற்றாக ஒழிந்து போய்விட்டது. அதாவது பௌத்த மதத்தினர் அற்றுப் போய்விட்டனர். இருந்த போதிலும், பௌத்தத்தின் பல கொள்கைகளும் ஒழுக்கங்களும் வைதிகத்துடன் இரண்டறக் கலந்துவிட்டன. ஆகையால் பௌத்த மதம் அற்றுப் போனாலும் பௌத்த நாகரிகம் பாரதத்தில் நிலைத்திருந்தது.

கிறிஸ்தாப்தம் ஆரம்பித்த காலத்திலேயே பௌத்தர்கள் இரு வகையினராகப் பிரிந்து கொண்டனர். வைதிக மதத்தின் கொள்கைகளும் சடங்குகளும் தெய்வ வழிபாடுகளும் பொது மக்களைக் கவர்ந்ததால் பௌத்தர்களில் ஒரு பகுதியார் (மஹாயானர்) புத்தரைத் தெய்வங்களில் ஒருவராகவும், அவரை அனேக மூர்த்தங்களாகவும் வழிபட ஆரம்பித்தனர். ஒவ்வொரு புத்த மூர்த்தியும் அனேக போதிசத்துவர்களால் சூழப்பட்டு விண்ணுலகில் வசிப்பதாக அவர்கள் நம்புகின்றனர். தாமும் ஒரு புத்தராகிவிட வேண்டுமென்பதே அவர்கள் இலட்சியம். அது துறவறத்தின் மூலமாகவே பெற்றுக்கொள்ளப்படலாம் என்பது அவர்கள் கருத்தல்ல. எல்லாருமே புத்தர்களாகலாம். விண்ணுலகில் வாழும் புத்த மூர்த்திகளில் நம்பிக்கையும், பிற உயிர்களிடத்திலே அன்பும் கருணையும், சுயநலத் தியாகமும் மோக்ஷத்தைத் தரும் என்பது மஹாயானர்களின் கொள்கை. 'மஹாயானம்' என்பது பிறவிப் பெருங்கடலைத் தாண்டுவதற்கு உபாயமான 'பெரிய தெப்பம்.'

ஹீனயானம் என்ற சிறிய தெப்பம் மற்றது. இந்த மதத்தைச் சேர்ந்தவர்களைத் தேரவாத பௌத்தர்கள் என்றும் சொல்வதுண்டு. தேரவாதம் என்பது 'ஸ்தவீரர் வாதம்,' அதாவது முதிய துறவிகளின் கொள்கை. பௌத்த சந்நியாசிகளைத் தேரர்கள் என்று அழைப்பது வழக்கம். ஆதியில் புத்தர் சொன்ன தரும சூத்திரங்களையும் ஒழுக்க நெறிகளையும் எழுத்துப் பிசகாமல் பின்பற்றுபவர்கள் ஹீனயான பௌத்தர்கள். புத்தர் ஒரு தெய்வமல்ல, அவர் ஒரு மனிதரேயென்றும், பிறவிப்பிணி நீங்க அவர் கண்ட மருந்தைத் துறவு மார்க்கத்தின் மூலமாகத்தான் அடைய முடியும் என்றும் அவர்கள் நம்புகின்றனர். மனிதனின் செய்கைகளே, அவன் கன்மங்களே துன்பத்துக்குக் காரணம். அத்துன்பத்தை யொழிக்க அறியாமை தடையாக நிற்கிறது. அந்த அறியாமையை நீக்குவதற்குத் துறவு மார்க்கமும் அதன் வழித் தியானமும் புலனடக்கமுமே கைக்கொள்ளத்தக்கது என்பது ஹீனயானர்கள் கொள்கை. இலங்கை, பர்மா, தாய்லந்து ஆகிய நாடுகளில் வழங்குவது ஹீனயானம். திபேத்து, நேபாளம், சீனு, ஜப்பான் ஆகிய நாடுகளில் வழங்குவது மஹாயானம்.

பௌத்த தருமம்

புத்தர் ஆதியில் விளக்கிய தருமம் மிக எளிதானது. மனிதன் பிறப்பதும் இறப்பதும் நோய்வாய்ப்படுவதும் எல்லாம் ஆசை என்ற வேட்கை யிருப்பதனாலேயே. இந்த வேட்கையை ஒழிப்பதற்குத் தூய வாழ்வு வாழவேண்டும். தூய வாழ்வுக்கு நடைமுறையில் எட்டு வகையான வழிகளைச் சொல்லியிருக்கிறார். அந்த எட்டு வழிகளையும் கடைப்பிடித்து நடந்தால் ஆசையை அடக்கவேண்டிய அறிவு தோன்றும். அந்த அறிவு தோன்றவே ஆசை தானாகவே அடங்கும். பின்னர் கன்மத்தின் பற்று நம்மைத் தொடராமல் முத்தி யின்பம் கிடைக்கும். பிறப்புமில்லை, இறப்புமில்லை. இதுவே புத்தர் போதித்த பௌத்தத்தின் சாரம்.

இதில் புதுமை யொன்றுமில்லை யென்றுதான் தோன்றும். வைதிக நெறியிலும் இதுதான் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனந்த குமாரசுவாமி அவர்கள் இதனை அழகாக எடுத்துச் சொல்லுகிறார்; "மேலாழ்ந்தவாரியாக ஒருவர் பௌத்தத்தைப் பற்றிப் படித்தால் அது வைதிகத்திலிருந்து எவ்வளவோ மாறுபட்டதென்று காண்பார். வைதிகத்திலிருந்துதான் அது உதித்தது என்பதும் புலனாகாது. ஆனால், நன்றாக ஆராய்ந்து ஒருவர் படித்தால் வைதிகத்துக்கும் பௌத்தத்துக்கும் வித்தியாசம் கண்டுபிடிப்பது கஷ்டமாயிருக்கும்."

அவ்வாறிருக்க பௌத்தம் எப்படி ஒரு தனி மதமாக விளங்குகிறது என்ற கேள்வி யெழலாம். அரசியற் கொள்கைகளைப் போலச் சமயக்கொள்கைகளும் வாதங்களில் திளைப்பன. ஒவ்வொரு வாதமும் ஒவ்வொரு மதமாகி விடுகிறது. கட்சிகள் பிரிகின்றன. உயர்வு தாழ்வு பேசப்படுகிறது. புத்தர் உபதேசம் செய்துகொண்டிருந்த காலத்தில் வத்ஸகோத்திரன் என்ற அந்தணன் அவரிடம் சென்று, "கௌதம, ஆன்மா உண்டா இல்லையா?" என்று ஒரு கேள்வியைக் கேட்டான். அப்போது புத்தர் சொன்ன விடை யாவது:

"வத்ஸகோத்திரனே, இந்தத் தருமம் அளப்பரியது. துருவி ஆராய முடியாதது. கிரகிக்க முடியாதது. சாந்தமானது. உத்தமமானது. தர்க்கவாதத்துக்கும் எட்டாதது. நுண்ணியது. ஞானிகளுக்கே புலனவது. வேறொரு குருவின் சீடனுய், வேறொரு கொள்கையைப் பின்பற்றுபவனுய், பிற மதத்தனுய், வேறொரு மார்க்க ஒழுக்கத்தில் வந்தவனுகிய உன்னுல் எனது இந்தத் தருமத்தை உணர்ந்துகொள்ள முடியாது."

மத்யம நிகாயம் என்ற பௌத்த நூலில் கண்ட இந்தக் கூற்று பிற்காலத்தில் பௌத்தவாதிகள் சொற்போரில் தோல்வி கண்ட போது எழுதி வைத்த கூற்று. ஒவ்வொரு மதத்திலும் தரிசனப் புலவர்கள்என்று சொல்லிக்கொள்பவர்கள் இம்மாதிரி அறிவு என்னும் கருவியை வைத்துக்கொண்டு சிலம்ப வித்தைகள் செய்வது வழக்கம். சாதாரண மக்களைப் பார்த்துக்கொண்டிருக்கச் சொல்லிவிட்டு மதங்களின் தளகர்த்தர்கள் சொற்போர் புரிவதையே தொழிலாகக் கொண்டிருந்தார்கள் ஒரு காலத்தில். புத்தரின் சீடர் சாரீபுத்திரர் இப்படியான போருக்கென்றே நியமிக்கப்பட்டவர். தர்மசேனபதி யென்று அவருக்குப் பட்டம் சூட்டப்பட்டிருந்தது. பெண்கள்கூட இதில் ஈடுபட்டிருந்தார்கள். பௌத்தத்திலே குண்டலகேசியைப் பற்றியும் சமணத்திலே நீலகேசியைப் பற்றியும் நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனல் பொதுமக்கள் இந்த வாதப் பிரதிவாதங்களில் அக்கறை கொண்டார்களா என்று பார்த்தால் அதுதானில்லை. அவர்கள் பௌத்த மதத்தில் பற்றுக்கொண்ட காரணம் வேறு. புத்த தருமத்தை உலகமெல்லாம் பரப்பிய அசோக மன்னன் மிக எளிய முறையில் ஒரு சில வார்த்தைகளிலேயே பௌத்த தருமம் என்றுல் என்ன என்று ஒரு கல்வெட்டில் எழுதிவைத்துவிட்டான்.

"தருமத்தைப் பயிலுங்கள். அது நற்கதியைத் தரும். இந்தத் தருமத்தில் என்ன அடங்கியுள்ள தென்றுல், பாவச் செயல்களை நீக்கவேண்டும். உத்தமமான செயல்களையே பெருக்க வேண்டும்.

ஈகை, தயை, தூய சிந்தனை, வாய்மை ஆகிய குணங்களை வளர்க்க வேண்டும். இதுவே தருமத்தின் பொருள்."

புத்தர் போதனையில் பொது மக்களை வசீகரிக்கக்கூடிய தத்துவம் இதைவிட வேறொன்றையும் சொல்ல முடியாது. வெறும் வாதப் பிரதிவாதங்கள் பொது மக்களை வசப்படுத்தா. பௌத்தத்தின் தளகர்த்தர்களான பிக்ஷு சங்கத்தார் உலகத்தில் ஐம்பது கோடி மக்கள் பௌத்தர்களா யுள்ளனர் என்று பெருமைப்படலாம். ஆனால் அந்தப் பெருமை பௌத்த சேனபதிகளான அவர்களைச் சேர்ந்ததல்ல, புத்தரையும் அவர் தருமத்தை உண்மையாக உணர்ந்த அசோக மன்னனையுமே சேரும். புத்தர் தமது தருமத்தை அகாலிக தருமம் என்று சொல்வார். அதுவே முந்தையோர் கண்ட முறையாகிய சநாதந தருமம். "இது மிகப் புராதனமான பாதை. எனக்கு முன்பு சம்போதி ஞானம் பெற்றவர்களின் பாதை. அதையே நான் பின்பற்றிச் செல்லுகிறேன்" என்று புத்தர் சொன்னதும் சம்யுக்த நிகாயத்தில் காணப்படுகிறது.

பௌத்த நூல்கள்

மகத தேசத்தில் கௌதம புத்தர் தமது சீடர்களுக்கெல்லாம் உபதேசித்த பாஷை அந்த நாட்டில் வழங்கிய மாகதி மொழியாகும். இந்த மாகதி மொழியே பேச்சு வழக்கிலிருந்து எழுத்து வழக்குக்கு வளர்க்கப்பட்ட பின்னர் ஹீனயான அல்லது தேரவாத பௌத்த வேதங்களை எழுதிவைக்கும்போது பாலி அல்லது தேவபாஷை என்ற பெயர் பெற்றது. அசோகன் காலத்திலேயே இலங்கையில் பௌத்த மதம் கொண்டு வரப்பட்டது. அப்போது கர்ண பரம்பரையாக வந்த பௌத்த வேதத்தை இலங்கையிலிருந்த பௌத்த பிக்ஷுக்கள் சிங்கள லிபியில் எழுதி வைத்திருந்தார்கள். அவர்களே முதன் முதலாக பௌத்த தருமத்தை எழுத்தில் கொண்டு வந்தவர்கள். பின்னர் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டிலே இலங்கைக்கு வந்த புத்த கோஷாசாரியார் என்ற வடநாட்டு பிக்ஷு சிங்களத்திலிருந்த வியாக்கியானங்களையெல்லாம் பாலி மொழியில் மொழிபெயர்த்தார்.

பௌத்த வேத நூல்களெல்லாம் திரிபிடகங்கள் என்று சொல்லப்படும். பிடகம் என்றால் கூடை. விநய பிடகம், சூத்திர பிடகம், அபிதம்ம பிடகம் என்பவையே அந்த மூன்று பிடகங்களும்.

விநய பிடகம் பௌத்த பிக்ஷுக்களின் ஒழுக்கம் பற்றியும் சங்கத்தின் விதிகளைப்பற்றியும் கூறுவது. இது மூன்று பிரிவுகளைக் கொண்டது. ஒன்று: சுத்த விபங்கம்—227 கட்டளைகளும் அவற்றில்

தவறியவர்களுக்குத் தண்டனையும்பற்றிக் கூறுவது. இரண்டு, கந்தகங்கள்—இவை பிக்ஷுக்களின் உபசம்பதை என்ற தீக்ஷை, உபவஸதம், பிராதிமோக்ஷம் சம்பந்தமான விதிகள், பிக்ஷுக்களின் உணவு, உடை, வசிக்கும் இடம், உபயோகிக்கத்தக்க பொருள்கள், இப்படியாக அவர்கள் ஒழுக்கம் சம்பந்தமாகவும் சங்கத்தில் விசாரணைகள் பற்றியும் கூறுவன. மூன்று, பரிவாரம். இதிலே மேற்சொன்ன விதிகளெல்லாம் நிரல்படுத்தப்பட்டுச் சுருக்கமாகக் கூறப்பட்டிருக்கின்றன.

சூத்திர பிடகம் என்ற பகுதியில்தான் புத்தருடைய உபதேசங்களெல்லாம் காணப்படுகின்றன. அத்துடன் தேரகாதா, தேரீகாதா என்ற சில முக்கியமான பிக்ஷுக்கள் பிக்ஷுணிகளின் வரலாறுகளும், புத்த ஜாதகக் கதைகளும் இந்த சூத்திர பிடகத்தில் சேர்க்கப் பட்டுள்ளன. சூத்திர பிடகம் ஐந்து காண்டங்களை யுடையது: தீர்க்க நிகாயம், மத்யம நிகாயம், சம்யுக்த நிகாயம் அங்குத்தர நிகாயம், குத்தக நிகாயம், என்பன. கடைசியாகச் சொல்லப்பட்ட குத்தக நிகாயத்திலேயே குத்தக பாடம், தம்மபதம், உதானம், இதிவுத்தகம், சுத்தநிபாதம், விமானவஸ்து, பேதவஸ்து, தேரகாதை, தேரீகாதை, ஜாதகம், நிர்த்தேசம், பிரதிசம்பிதாமார்க்கம், அபதானம், புத்தவம்ஸம், சரியாபிடகம் என்பன சேர்க்கப்பட்டுள்ளன.

அபிதம்ம பிடகம் ஏழு பிரிவைக்கொண்டு தரும சூத்திரங்களுக்கு விளக்கங்களும் தர்க்கவுரைகளும் உள்ளது. அபிதம்ம பிடகம் வெறும் சொற்கோவையும் விளக்கமற்ற பின்னல் நிறைந்த பொருளையும் கொண்டது. ஆழமோ தனித்தன்மையோ இல்லாதது. "பௌத்த தத்துவத்தைத் தெரிந்துகொள்வதற்கு அபிதம்மத்தைப் படிக்காமல் விட்டால் அதனால் நாம் தவறிவிட்டோம் என்று வருத்தப் படவேண்டியதில்லை" யென்றும் அபிதம்மம் பிரயோசன மற்றது என்றும் ஆனந்த குமாரசுவாமி அவர்களே சொல்லுகிறார்கள்.

மஹாயான பௌத்தர்களின் நூல்கள் யாவும் சமஸ்கிருதத்திலுள்ளன. இவைகள் பாலி நூல்களிலிருந்து மொழிபெயர்க்கப் பட்டவை யல்ல. ஆதியிலிருந்தே வளர்ந்து வந்தவை. இவற்றில் பாலி நூல்களை விட சில புராதனமான விஷயங்களும் காணப்படுகின்றன. மஹாவஸ்து, லலிதவிஸ்தரம், அசுவகோஷரின் புத்தசரிதம் ஆகியவை மஹாயான நூல்கள்.

பௌத்த சங்கம்

சீந்நியாச சம்பிரதாயம் மிகப் பழங்காலத்திலிருந்தே பாரதத்தில் வழி வந்திருக்கிறது. உபநிஷதங்களில் துறவிகளைப்பற்றிக் கூறப்பட்

டிருப்பதைக் காணலாம். புத்தர் காலத்தில் பௌத்த பிக்ஷுக்களைத் தவிர மற்றும் ஆறு மதங்களைச் சேர்ந்த சிரமணர்கள் திரிந்தார்கள் என்றும் கேள்விப்பட்டோம். அந்த சிரமணர்களுக்கெல்லாம் பொதுவான பல ஒழுக்க நியதிகளையே பௌத்த பிக்ஷுக்களும் கைக் கொண்டொழுகி வந்தார்கள். இருந்தும் நாளுக்கு நாள் பௌத்த சங்கத்துக்கு நியமங்கள் அதிகரித்துக்கொண்டு வந்தன. அவற்றை யெல்லாம் விநயபிடகத்தில் தொகுத்து எழுதி வைத்திருக்கிறார்கள்.

சீலம்

புத்தர் போதித்த அட்டாங்க மார்க்கம் என்ற எண் வகை வழிகளில் சீலம், சமாதி, பிரஜ்ஞை—அதாவது ஒழுக்கம், தியானம், ஞானம் ஆகிய மூன்றும் அடங்கியுள்ளன. "எல்லாத் தீமைகளினின்றும் நீங்கி நல்லனவற்றையே செய்ய வேண்டும். அறிவைத் துலக்கி ஞானத்தை வளர்க்கவேண்டும். இதுவே புத்தர்களுடைய உபதேசம்" என்ற பொருள்பட பௌத்த சுலோகம் ஒன்று பின்வருமாறு காணப் படுகிறது:

ஸர்வ பாபஸ்ஸ அகரணம்
குஸலஸ்ஸ உபஸம்பதா
ஸ சித்த பரியோதபனம்
ஏதம் புத்தான ஸாஸனம்

சீலம் என்ற ஒழுக்கம்தான் மிக முக்கியமானது. இது பஞ்ச சீலம், அட்ட சீலம், தச சீலம் என்று மூவகைப்படும். சாதாரணமாக எல்லா மக்களும் பஞ்ச சீலத்தைக் கடைப்பிடிக்கவேண்டும். முக்கியமான தினங்களில், சிறிது உயர்ந்த நிலையை யடைந்தவர்கள், அட்ட சீலத்தைக் கைக்கொள்ளவேண்டும். துறவிகளாகிய பிக்ஷுக் களும் பிக்ஷுணிகளும் தச சீலத்தைக் கைக்கொண்டொழுக வேண்டும்.

பௌத்த சமயத்திலே வழிபாடு என்பது கிடையாது. தியானமே அவர்களுக்கு முக்கியம். அந்தத் தியானத்துக்கு உதவியாகவே திரிசரணம், பஞ்ச சீலம் முதலியவற்றை வாயிலால் சொல்லிக் கொள்ளுவார்கள்.

திரிசரணம் என்பது புத்தர், தருமம், சங்கம் ஆகிய மூன்றிலும் சரண் புகுதல்.

புத்தம் ஸரணம் கச்சாமி
தம்மம் ஸரணம் கச்சாமி
சங்கம் ஸரணம் கச்சாமி

இதனை மூன்று தடவை சொல்லுதல். இரண்டாம் முறையாகச் சொல்லும்போது

துதியம்பி புத்தம் ஸரணம் கச்சாமி
துதியம்பி தம்மம் ஸரணம் கச்சாமி
துதியம்பி சங்கம் ஸரணம் கச்சாமி

என்று சொல்லிவிட்டு, மூன்றும் முறையாக,

ததியம்பி புத்தம் ஸரணம் கச்சாமி
ததியம்பி தம்மம் ஸரணம் கச்சாமி
ததியம்பி சங்கம் ஸரணம் கச்சாமி

என்று திருப்பிச் சொல்லுவார்கள். இந்தத் திரி சரணத்தை மூன்று முறையும் ஓதிய பின்னர் இல்லறத்திலுள்ளவர்கள் பஞ்ச சீலத்தைக் கடைப்பிடிக்கிறேன் என்று சொல்லி அந்தப் பஞ்ச சீலங்களிலும் மனத்தைச் செலுத்துவார்கள். பஞ்ச சீலமாவன: கொல்லாமை, களவு செய்யாமை, வியபிசாரம் செய்யாமை, பொய்யாமை, மதுபானம் அருந்தாமை. "இந்த ஐந்தையும் மேற்கொண்டு தியானிக்கிறேன்" என்ற பாலி சுலோகங்கள் பின்வருமாறு:

பாணதிபாதா வேரமணீ ஸிக்காபதம் ஸமாதியாமி
அதின்னதானு வேரமணீ ஸிக்காபதம் ஸமாதியாமி
காமேஸுமிச்சாசாரா வேரமணீ ஸிக்காபதம் ஸமாதியாமி
முஸாவாதா வேரமணீ ஸிக்காபதம் ஸமாதியாமி
ஸுராமேரய பஜ்ஜப மாதட்டானு வேரமணீ ஸிக்காபதம்
[ஸமாதியாமி.

அட்டசீலத்தைக் கைக்கொள்பவர்கள் மேற்சொன்ன ஐந்தோடு இன்னும் மூன்றைச் சேர்த்துக்கொள்ளவேண்டும்: உண்ணத் தகாத வேளையில் உண்ணுமலிருத்தல், இசையிலும் ஆடலிலும் நாட்டம் கொள்ளாதிருத்தல், புஷ்பம் வாசனைப் பொருட்களை உபயோகியாமலிருத்தல். துறவிகளாகிய பிக்ஷுக்களும் பிக்ஷுணிகளும் மேலும் இரண்டை விலக்கித் தசசீலம் அனுட்டிப்பார்கள். அவர்கள் பணம், பொன், வெள்ளி முதலியவற்றைத் தொடலாகாது. உயரமும் அகலமுமான படுக்கை, சுக ஆசனம் முதலியவற்றை உபயோகித்தலாகாது. அத்தோடு, மூன்றுவதாகச் சொல்லப்பட்ட வியபிசாரம் செய்யாமை இல்லறத்தாருக்கு உரியதாகையால், துறவிகள் காமத்தை முற்றுக விலக்கிப் பிரமச்சரிய விரதம் காக்கவேண்டும். ஆகையால், மூன்றுவது சுலோகத்தில் "காமேஸுமிச்சாசாரா" என்ற வார்த்தைகளுக்குப் பதிலாக "அப்பிரம்மச்சரியா" என்ற வார்த்தையைச் சேர்த்துக் கொள்வார்கள்.

போதி மேவினை புன்மை யகற்றினை
சோதி வானவர் தொழுவெழுந் தருளினை
ஆதி நாதநி னடியினை பரவுதும்.

தோடார் இலங்கு மலர்கோதி வண்டு
வரிபாட நீடு துணர்சேர்
வாடாத போதி நெறிநீழல் மேய
வரதன் பயந்த அறநூல்
கோடாத சீல விதமேவி வாய்மை
குணனுக நாளும் முயல்வார்
வீடார்த இன்ப நெறிசேர்வர் துன்ப
வினைசேர்தல் நாளும் இலரே.

ஆதார நூல்கள்

உ. வே. சாமிநாதையர் — புத்த சரித்திரம், பௌத்த தருமம், பௌத்த சங்கம்

,, ,, (பதிப்பு) — மணிமேகலை

சக்கரவர்த்தி நயினார் (பதிப்பு) — நீலகேசி

ஞானப்பிரகாசர் (உரை) — சிவஞான சித்தியார், பரபக்கம்

தர்மானந்த கோசம்பி (கா. ஸ்ரீ ஸ்ரீ. மொழி பெயர்ப்பு)— பகவான் புத்தர்

ப. ராமஸ்வாமி — போதிமாதவன்

பிக்கு சோமானந்தர் — புத்தர் சரித்திரம்

,, ,, — புத்த தர்மச் சுருக்கம்

மயிலை சீனி. வேங்கடசாமி — கௌதம புத்தர்

,, ,, — பௌத்தமும் தமிழும்

விவேக சிந்தாமணிப் பிரசுரம் — புத்தரது திவ்ய சரித்திரம்

Ali, Amir — The Story of the Buddha
Ananda, Bhikku — Buddhism
Arnold, Sir Edwin — The Light of Asia
Bouquet, A. C. — Comparative Religion
Brewster, E. H. — The Life of Gotama the Buddha
Burtt, E. A. — The Teachings of the Compassionate Buddha
Byles, Marie B. — Footprints of Gautama the Buddha
C. H. W. (Galle, Ceylon) — Some Aspects of Ceylon Buddhism
Carus, Paul — The Gospel of Buddha
Chakravarti S. C. — The Philosophy of the Upanishads
Conze, Edward — Buddhism
Coomaraswamy, Ananda K. — Buddha and the Gospel of Buddhism
— Hinduism and Buddhism
Coomaraswamy, Ananda K. and Horner, I. B. — Gautama the Buddha
Egoroff, Sophia — Buddha Sakyamuni
Geiger, W. — Mahavamsa
Govt. of India Puplication — Buddhist Shrines in India
Hardy, Spence — A Manual of Buddhism
Herold, Ferdinand — The Life of Buddha
Humphreys, Christmas — Buddhism
Korosi, Alexander Csoma — The Life and Teachings of Buddha
Law, Bimala Churn — Concepts of Buddhism
— Geography of EarlyBuddhism
Ludowyke, E. F. C. — The Footprint of the Buddha
Metteyya, Bhikku — The Cynosure of Sanchi
Narada, Bhikku — A Manual of Buddhism
— The Buddha Dhamma or the Life and Teachings of the Buddha
Narain, Pandit Sheo — Sarnath

Nyanatiloka, Bhikku — Paticca Samuppada
Oldenberg, H — Buddha, His Life, His Doctrine, His Order
Radhakrishnan, S. — Gautama the Buddha
— Indian Philosophy
— The Dhammapada (Trans.)
Raven-Hart, Major R. — Where the Buddha Trod
Rhys Davids, T. W. — Buddhism
— Buddhist India
Rhys Davids, Mrs — Buddhism
Roy, P. B. — Banaras the Soul of Hinduism
Saint Hilaire, J. Barthelemy — The Life and Legend of Buddha
Sakuntala Masani — Gautama
Sen, Dr. A. C. — Buddhist Remains in India
Silachara, Bhikku — A Young People's Life of the Buddha
Sircar, Dr. D. C. — Inscriptions of Asoka
Smith, F. Harold — Buddhist way of Life
Subasinha, D. J. — Buddhist Rules for the Laity
Tachibana, S. — Ethics of Buddhism
Thomas, Edward J. — The Life of Buddha as Legend and History
— The History of Buddhist Thought
— Early Buddhist Scriptures
Valisinha, Devapriya — Buddhist Shrines in India
— The Buddhist way of Life
— Guide to Buddha Gaya
Veerappan, S. M. — Holy Varanasi and Lumbini to Kusinara
Vidyaranya — Introduction to the Study of Upanishads (Tr. A. Mahadeva Sastry)
Vijayavardhana, D. C. — The Revolt in the Temple
Warren — Buddhism in Translations

சிறப்புப் பெயர் அகராதி

அக்பர் 154
அக்னி காசியபர் 101, 160, 161, 163
அகல்யாபாய் 135
அகாலிக தருமம் 318
அங்க நாடு 82
அங்கார சைத்தியம் 311
அங்குத்தர நிகாயம் 143, 319
அங்குலிமாலன் 205-208, 211
அச்சுதானந்தா 309, 311
அசி 128, 134
அசி சங்கமம் 134
அசித முனிவர் 20, 42-45, 52, 59, 67, 179
அசுவகோஷர் 319
அசுவஜித் 102, 170
அஞ்சனன் 13, 42
அஞ்ஞாத கௌண்டின்னியர் 145
அட்டசீலம் 320, 321
அதர்வவேத மடம் 115
அநாத்ம லக்கணம் 146
அநாத்ம லக்கண சூத்திரம் 146
அநாத பிண்டிகன் 190-195, 198. 200, 209, 211, 212, 214
அநிமிஷலோசனம் 120
அநிருத்தன் 185
அநுப்பியா 81
அநோமை நதி 78. 81, 185
அபதானம் 319
அபிதம்ம பிடகம் 318, 319
அபிதர்மம் 219
அம்பகிராமம் 294
அம்பபாலி 279-281, 286, 287
அம்ருதை 13
அமிதோதனன் 13, 57
அர்த்தகில மதானுயோகம் 139
அர்ஜுனன் 57
அரிச்சந்திர பஜார் 136
அருகத் 103, 138, 171, 172, 176, 300, 303
அரூபத்தியானம் 94
அரூபலோகம் 94
அல்லாஹாபாத் 227, 231, 232
அவுரங்கசீப் 128, 135
அனுசூயாபாய் 114
அனுமான் கட்டம் 131
அனுமான் குண்டம் 114
அனுராதபுரம் 117, 309
அனுருத்தர் 304, 305
அஜபால விருக்ஷம் 105-107, 120
அஜாத சத்ரு 99, 100, 122, 233-236, 238, 247, 249-251, 253, 264. 267, 272, 273. 293, 306
அஜிதகேச கம்பலர் 168, 250
அஸங்கர் 258
அக்ஷய வடம் 112, 113
ஆக்ரா 221
ஆதிசங்கரர் 115, 116, 127
ஆடி நோன்பு 15
ஆடி விழா 17
ஆம்ரவனம் 151
ஆரிய சத்தியம் 140, 141
ஆரியதேவர் 258
ஆரிய விஹார தர்மசாலை 309
ஆலார காலாமர் 82, 93-95, 101, 102, 123, 273, 296
ஆனந்த குமாரசுவாமி 316, 319
ஆனந்த போதி விருக்ஷம் 213
ஆனந்தர் 57, 168, 185-187, 216, 230, 242, 257, 264, 273-276, 289-305, 310

இத்சிங் 259
இதிவுத்தகம் 319
இரத்னகிரி 90
இராகுலன் 70, 75, 184, 185
இராமம் 60
இராஜகிருகம் 10, 81-89, 93-101, 122 123, 165-170, 173-178, 180, 185, 187, 188, 190, 195, 197, 200, 209, 214, 217, 218, 233, 235, 239, 241, 244, 247. 250, 254-258, 264, 272-275, 287, 301
இக்ஷுவாகு 11, 12
உச்சயினி 42
உத்கலம் 120
உத்தரகோசலம் 15
உதயகிரி 90
உதயணன் 228, 229
உதாயி 34, 47, 52, 53, 55, 67-69, 176-178
உதானம் 319
உபகர் 126, 127
உபசம்பதை 276, 319
உபவாணர் 298
உபதிஸ்ஸர் 169, 171
உபவஸதம் 242, 243, 275, 319
உபாலி 186
உருவில்வா 49, 101, 102, 108, 116, 123, 126, 137, 159-161, 165, 167, 187
உருவில்வா காசியபர் 161-166, 168, 172, 188
உலும்பினி 22, 23, 26, 28, 31-33, 35-40, 42, 46, 54, 87, 167, 210, 313
ஏசுகிறிஸ்து 248
ஏர்மங்கல விழா 43
கங்கை 81, 82, 112, 127, 128, 134, 135, 265-269
கண்டகம் 34, 58, 76, 77, 80
கண்டகி நதி 81, 268, 289
கண்டதேவி புத்திரன் 240
கண்டன் 219
கந்தகங்கள் 319
கந்தகூடம் 150, 156
கபிலர் 12, 15
கபிலவஸ்து 1-4, 9-12, 15-21, 23, 26, 31, 39, 41-48, 52, 57, 63, 77-82, 108, 109, 167, 175, 176-182, 185-188, 195, 196, 210, 230, 273-275, 306, 313
கபீர் 127
கயா 24, 82, 87-90, 96, 98, 101, 102, 112-115, 124, 125, 211, 244
கயா காசியபர் 101, 160, 164
கயா சிராத்தம் 113
கயாசீர்ஷம் 101, 102, 164, 244
கயாசுரன் 113
கல்கத்தா 87
கலந்தக நிவாசம் 96
கன்னன் 230
கன்னிங்ஹாம் 117, 118, 154, 224, 256, 284
காசி 82, 84, 87, 113, 114, 125 136, 147, 150, 154, 158, 169 307
காசிமடம் 135
காசியப புத்தர் 180
காசியபர் 82, 91, 113, 114
காசியா 308, 312
காஞ்சீபுரம் 260
காட்மாண்டு 38
காமசுகல்லிகானு யோகம் 139
கார்த்த மோரகன் 240
கார்லெ 309, 310
காரணகாரிய ஞானம் 122, 143
காளி நதி 223
காஸ்னி முகமது 128
கிம்பலன் 186
கிரண நதி 134
கிரிஷ்ணகோதமி 72, 276, 277
கிருத்திய ஞானம் 141
கிருத ஞானம் 141

கிருத்ரகூடம் 99, 166, 167, 209, 247, 248
கிருஷ்ண சந்த்ர சாஸ்திரி 17, 22
குக்குடன் 228
குக்குடாராமம் 228
குகுஷ்டம் 296, 297, 311
குசாவதி 301
குசீநகர் 30, 39, 82, 89, 189, 296, 298, 301, 302, 305, 307-313
குண்டலகேசி 189, 317
குத்தக நிகாயம் 319
குத்தக பாடம் 319
குத்புடன் 128
குப்தர் 157
குமரகுருபரர் 127, 135
குமார காசியபன் 240
குமார குப்தர் 259, 310
குமாரதேவி 156
குருநானக் 127
கூடாகாரம் 274, 284, 292
கேதார கட்டம் 131, 135
கொலுஹா 282
கொஹாஞ 19
கோகாலிகன் 240, 245
கோசலம் 10, 44, 81, 93, 191, 197, 205, 209, 210, 212
கோசேன கமந்தி 116
கோண்டா 1
கோபால் சரண் 115
கோரக்பூர் 1, 24, 41, 307, 308
கோரக்ஷகபுரி 307
கோலிதர் 169, 171
கோலியர் 11, 19, 42, 44, 55, 57, 195, 196, 306
கோவிந்த சந்திரன் 156
கோஷ்டிஹாவா 22
கோஷிதன் 228
கோஷிதாராமம் 228, 231
கௌசாம்பி 216, 228-234, 301
கௌண்டின்னிய புத்தர் 180
கௌண்டின்னியர் 45, 102, 137, 145, 149, 171
கௌதமர் 81-86, 91-95, 101-109, 113, 114, 117, 118, 162
கௌதமர் துறை 267
கௌதமர் வீதி 265, 267
சக்கர தீர்த்தம் 134
சகலோதனன் 13
சங்கமனம் 119
சங்கமித்திரை 117
சங்கர்ஷபுரம் 220-227
சங்கரத்னதேரர் 155-158
சங்காராமம் 20, 151
சசங்கன் 117
சஞ்சயர் 168, 169, 171, 187, 250, 258
சத்தானந்தர் 308
சத்திய ஞானம் 141
சத்ரகிரி 90
சதுர்முக மகாதேவர் 286
சந்தகன் 34, 62-69, 77-80
சந்தன் 182
சந்திரகுப்தன் 264, 265
சந்திரமணி 308
சப்ததாரை 90, 91, 97
சம்பா 301
சம்போதி ஞானம் 49, 177, 297, 313
சம்யுக்த நிகாயம் 318, 319
சமாபத்தி 94, 95, 102, 111
சமுத்திர தத்தன் 240
சர்மா 231
சர்வார்த்த சித்தர் 44, 45
சரஸ்வதி 134
சரியாபிடகம் 319
சாக்கியர் 11, 13, 19, 42, 46, 48, 55, 57, 58, 82, 109, 178, 195-201, 203, 205, 207, 216, 306, 313
சாகேதம் 201, 301
சாங்கியம் 82, 94

சாஞ்சி, 10, 256, 284
சாடித் அலிகான் 128
சாந்தி தேவர் 47
சாபால சைத்தியம் 291
சாமாவதி 229
சார்ங்கநாதர் 152
சாரத்வதி 169
சாரநாத் 10, 37, 39, 150-158, 187, 211, 232, 311
சாரீ 169
சாரீபுத்திரர் 86, 168-172, 181, 185-189, 199, 215, 216, 235, 244, 245, 254-258, 317
சாலியகிரி 90
சாஹேத் மாஹேத் 210, 211
சிஞ்சை 214, 215
சித்தார்த்தர் 10, 14, 19, 20, 45-84, 108-110, 147, 148, 175, 176, 179, 180
சிம்மஹனு 13, 19, 58
சிரமண சங்கம் 168, 169
சிராமண்ய பல சூத்திரம் 253
சிராவஸ்தி 10, 168, 169, 195-198, 209-216, 226, 229, 230, 233, 273, 276, 277, 301
சிராவஸ்தி அற்புதம் 217, 218, 224
சீதாகுண்டம் 114
சீலபத்திரர் 260
சீஹன் 277
சுக்லோதனன் 13, 19
சுத்த நிபாதம் 319
சுத்த விபங்கம் 318
சுத்தோதனன் 13, 15-19, 42-49, 52-58, 61, 62, 67, 70, 73, 76, 92, 109, 175-181, 184, 185, 196, 274, 313
சுதத்தன் 191-194
சுந்தன் 106, 295, 297
சுந்தரி 182, 183, 215
சுந்தா 38, 40
சுப்பிர புத்தன் 13, 51, 55-57, 59
சுபத்திரர் 302, 310
சுபதம் 60
சுமேதர் 14
சுராமம் 60
சுவஸ்திகா 107, 108
சுஜாதை 105, 106, 120, 297
சூத்திர பிடகம் 253, 318, 319
சேஞ நிகமம் 101, 105
சைதன்னியர் 127
சைதன்னிய ஜீயர் 116
சோமாநந்த தேரர் 124, 125
சோண பண்டார குகை 97
சௌகண்டி 154
ஞானவாபி 135
தசசீலம் 320, 321
தசபலர் 50
தசபாரமிதை 49, 183
தசாஸ்வமேத கட்டம் 129, 134
தண்டபாணி 13
ததாகதர் 39, 138-140, 148, 248, 291, 294, 297-299, 301
தபோதநாடி 90, 97, 100
தம்ம பதம் 319
தர்மசக்கரப் பிரவர்த்தனம் 139, 143
தர்மசக்கரப் பிரவர்த்தன சூத்திரம் 143, 156
தர்ம நதி 134
தர்மபாலர் 116, 124, 156, 260, 308
தர்கமுக ஸ்தூபி 157
தர்மராஜிக ஸ்தூபி 156
தர்மோதய சபா 38
தனஞ்சயன் 200, 201
தாதுகர்ப்பம் 21
தாபஸ பிக்ஷு 249
தாமஸ் 148, 292
தாராதேவி 22
திந்நகர் 258, 260

திரிசரணம் 121, 149, 155, 166, 320, 321
திரிபிடகம் 253, 318
திரிபுஷன் 120
திரியஸ்திரிம்ஸ லோகம் 219
திருப்பனந்தாள் 135
தில்லோராக் கோட்டம் 22
தீபுங்கர புத்தர் 14, 180
தீபவம்சம் 273
தீர்க்க நிகாயம் 11, 253, 319
தீர்த்தங்கரர் 82
துரோணர் 306
துவாதச நிதானம் 111
துளசிதாஸர் 127
துஷிதலோகம் 14, 15, 50
தூதவாபி 134
தேரகாதா 319
தேரவாதம் 316
தேரீகாதா 319
தேவதத்தன் 51, 55-59, 99, 109, 152, 153, 186-188, 216, 230, 233-249
தேவதாகம் 13, 17, 23, 42
தோப்ரா 125
தௌதோதனன் 13
தௌலீவா 1, 2, 6, 8, 18, 21-23
நதி காசியபர் 101, 160, 163, 164
நந்தன் 57, 182-185
நவநாலந்தா 258, 261
நவாடா 88, 90
நளகிரி 238, 239
நாகர் 97
நாகார்ஜுனர் 258
நாலந்தை 87, 89, 169, 188, 255-262, 308
நிக்லீவா 22
நிகண்டநாத புத்திரர் 168, 250
நியக்குரோதம் 178, 180, 182, 196, 274
நிர்த்தேசம் 319
நீலகேசி 317
நேபாள் தரை 29
நைரஞ்சனை 101, 106, 107, 120
நௌகர் 31
நௌத்தன்வா 24-26, 28, 41
பக்தியார்பூர் 86, 262, 263
பக்ஞ 221-223, 227
பகவத்கீதை 105
பகுத கச்சாயனர் 168, 250
பஞ்சகங்கா தீர்த்தம் 134
பஞ்சசீலம் 320, 321
பஞ்ச தீர்த்தம் 134
பஞ்ச வர்க்கீயர் 137, 171, 187
பஞ்ச ஸ்கந்தம் 140
பத்திரிகன் 186
பத்திரை 188, 189
பத்ரவர்க்க பிக்ஷு 160
பத்ரிகர் 102
பதந்த சுவீர விஹாரம் 311
பரிநிருவாணம் 279, 299, 301, 302, 304, 309, 313
பரிவாசம் 276
பரிவாரம் 319
பரூக்காபாட் 221, 227
பல்குனி 101, 112, 113, 115, 160
பல்லிகன் 120
பலராம்பூர் 210
பஷ்லஸாகாட் 268, 289
பா ஹியன் 19, 20, 39, 118, 213, 224, 227, 231, 258, 265
பாட்னு 86. 258, 262, 263, 267, 268, 289
பாடலி கிராமம் 261, 264, 267
பாடலிபுரம் 81, 82, 86, 115, 262-267, 308
பாண்டவமலை 91
பார்க்கவர் 81, 84, 85, 102
பாரமிதை 50
பாரிலேயகம் 230
பாலர் வம்சம் 40
பாலி 318

பாவா 293
பாவாரிகன் 228
பாவாரிகா ராமம் 228
பிடக நூல் 83
பிண்டோல பாரத்வாஜர் 217, 218
பிம்பிசாரன் 86, 90-100, 122, 165-169, 175, 180, 190, 191, 201, 209, 217, 218, 233, 236, 247-249, 276
பிரசேனஜித் 168, 190, 197, 200, 201, 207, 210, 212, 214
பிரதீத்ய சமுத்பாதம் 143-145
பிரம்மகுண்டம் 91
பிரம்ம நியமம் 83
பிரம்மயோனி 102
பிரம்ம லோகம் 94
பிரம்ம விஹாரம் 94
பிரம்மா 34, 108, 227, 255
பிரதி சம்பிதாமார்க்கம் 319
பிரமீதை 13
பிரவாரணை 276
பிரஜாவதி கோதமி 13, 46, 57, 181, 182, 196, 274-276
பிராதி மோக்ஷம் 242, 275, 319
பிராதி ஹாரியம் 224, 226
பிஹார் ஷரிப் 88-90
பீமன் 98
புக்குஷன் 296, 297
புத்த கயை 10, 22, 39, 101, 112, 115, 116, 123, 124, 213
புத்த கோஷாசாரியார் 11, 318
புத்த சரிதம் 319
புத்த வம்சம் 319
பூர்ண வர்த்தனன் 201
பூர்வாராமம் 203, 211, 212
பூரண காசியபர் 168, 250
பூர்ண வர்மன் 260
பூரணி 105
பூஜாவலி 214
பேத வஸ்து 319
பொலன்னறுவை 212
போக நகரம் 294, 295
போதி சத்துவர் 14-16, 34, 36, 37, 41, 43, 47, 49, 50, 76-78, 83, 109-111, 152, 153
போதி விருக்ஷம் 34, 36, 117, 119 120, 214, 313
பௌத்த மகா சங்கம் 86, 273
ஃபூரர், டாக்டர் 36
மக்கலி கோசலர் 168, 250
மகதம் 10, 44, 81, 86, 93, 122, 197, 200, 234, 318
மகாநாமன் 102, 185, 197
மகா பரிநிருவாணம் 309, 310
மகாபிநிஷ்கிரமணம் 79, 84
மகா பிரஜாவதி 13
மகாபோதி விஹாரம் 117, 118
மகாபோதி மடம் 87, 88
மகா வம்சம் 97, 117
மகாவனம் 81, 274, 292
மகாவீரர் 82, 86, 168, 273
மகுடபந்தனம் 305, 311
மங்கள்மான் 18, 23
மத்யம நிகாயம் 83, 122, 317, 319
மத்யம மார்க்கம் 105, 140
மணிகர்ணிகா கட்டம் 131, 132, 134
மணிநாகன் 97
மணி பல்லவம் 97
மணிமேகலை 97, 144
மணியார் மடம் 97, 98
மர்க்கட ஹ்ருதம் 284
மள்ளர் 11, 29, 30, 42, 44, 82, 84, 301, 302, 305, 306, 309-311
மஹா காசியபர் 188-190, 215, 230, 251, 305
மஹா சச்சக சூத்திரம் 83, 278
மஹா சச்சகன் 83, 278
மஹா பரிநிருவாண சூத்திரம் 38, 304

மஹா பாபாகிமூர்த்தி மந்திர் 311
மஹாபிரம்மா 122, 123
மஹாபிராதி ஹாரியம் 217
மஹாயானம் 22, 226, 227, 261, 277, 315, 319
மஹாவஸ்து 319
மஹேந்திரகாட் 265, 266
மாகதி 318
மாகந்தியன் 228, 229
மாகந்தியை 228, 229
மாயாதேவி 13-17, 22, 23, 26, 31-37, 39-41, 44, 45, 76, 177, 219
மாரன் 78, 108-110, 291, 292
மிகாரமாதா 202
மிகாரன் 201, 202, 209
மிதிலை 82, 271
மிருகதாவம் 150, 151
முகுந்த பிரசாத் 226
முசலிந்தன் 120
முஸாபர்பூர் 268, 270, 271, 288, 289
மெகஸ்தினீஸ் 264, 265
மைத்திரேய போதிசத்துவர் 15
மொகஞ்சதரோ 10
மோட்டா 221, 222
மௌத்கல்யாயனர் 86, 161, 186, 169, 171, 172, 181, 187, 209, 214-217, 220, 233-235, 244, 245, 254-257
மௌத்கலி 229, 230
மௌரியர் 283
யசன் 147, 148
யசோதரை 13, 34, 55, 56, 58, 59, 65, 67, 69, 73-76, 109, 181-185
யமக பிராதிஹாரியம் 179, 219
யமுனை 231
யஷ்டிவனம் 98, 165
யூதாஸ் 248
ரதகாரம் 120
ராகுலன் 19
ராம் குமார்ஜி 129
ராம் லீலா 131
ராகவதாஸர் 309
ராமகுண்டம் 114
ராஜ பிஸல்கா கர் 284
ராஜாயதனம் 120
ரிஷிகிரி 98, 254
ரிஷிபதனம் 123, 137, 138, 147, 150, 313
ருத்ரக ராமபுத்திரர் 82, 95, 101, 102, 123, 273
ரும்மிந்தேயி 35
ருவாங்வெலி சைத்தியம் 309
ரூபசாரி 255
ரூபத்தியானம் 91
ரூபாதேவி 22, 35
ரைஸ் டேவிட்ஸ் 147
ரோகிணி 19, 195, 196
லங்கா பாபா 24, 25, 41
லலித விஸ்தரம் 197, 200, 271, 319
லிச்சவி 86, 272-274, 279-283, 287, 293, 306
வசுபந்து 258
வசுமதி 86
வத்ஸ கோத்திரன் 317
வத்ஸ நாடு 228
வர்ஷகாரகன் 272
வருஷ காலம் 173
வஜ்ரபாணி 310
வஜ்ராசனம் 117
வஸந்தராம் 24, 25, 27, 30, 40, 41, 87-89, 98, 112-115, 125, 128, 129, 132, 133, 136, 262-270, 283, 287, 288
வாரண நதி 128, 135, 151
வாரணசி 82, 123, 127, 128
வாஷ்பர் 102
விசாகை 200-204, 210-212
விசாரிதேவி 224

விசாலம் 271
விதுர்த்தபன் 19, 21,197
விந்தியகிரி 43
விநயபிடகம் 318, 320
விநயம் 229, 230, 241, 243
விபுலகிரி 90, 91
விமானவஸ்து 319
விரிஞ்சி 11, 30, 44, 82, 86, 264, 271-273
வின்சென்ட் ஸ்மித் 40
விஜயசோம தேரர் 224-227
விஸ்வநாதர் ஆலயம் 114, 128, 135
விஸ்வாந்தர 110, 179
விஸ்வாமித்திரர் 46-48, 83
விஷ்ணுபாதம் 112-114
வென் தீ 21
வேணுவனம் 96, 167, 171, 175, 177, 190, 192, 200, 237
வேலுகிராமம் 289, 291
வைசாலி 81, 82, 84, 87, 169, 197, 209, 243, 258, 262, 263, 268-274, 277-289, 291, 293, 294, 306
வைபாரகிரி 90, 96, 97
ஜகத் சிங் 154
ஜடிலர் 160, 162-165
ஜம்பு கிராமம் 294
ஜம்பு துவீபம் 15
ஜயசேனன் 13
ஜயவர்த்தன தேரர் 287
ஜராசந்தன் 98, 287
ஜராசந்தன் மேடு 98
ஜாதகக் கதை 50, 152, 319
ஜீயர் 115
ஜீவகன் 99, 248, 251
ஜேதன் 198, 199
ஜேதவனம் 198-200, 209, 211, 212, 214, 215
ஜோஞதன் டங்கன் 154
ஜோஷி மடம் 115
ஸ்வர்ணகிரி 90, 98, 99
ஸமயமஹீ 22
ஸஹஸ்ரார சக்கர ரேகை 43
ஷிக்கோஹாபாட் 221
ஷோரத்கர் 1, 4, 23, 31
ஹர்ஷன் 259, 261
ஹரப்பா 10
ஹரிபலசுவாமி 310
ஹஸ்தி கிராமம் 294
ஹாட்டா 308
ஹாஜிப்பூர் 289
ஹியூங் சியாங் 20, 39, 100, 118, 150, 156, 213, 231, 251, 260
ஹிரண்யவதி 298
ஹீனயானம் 20, 151, 226, 227, 261, 277, 316, 318
க்ஷேமை 190, 197, 276
ஸ்ரீ சக்கரம் 116
ஸ்ரீநிவாஸ பிக்கு 25-27, 31, 41
ஸ்ரீ விஷ்ணு துவீப விஹாரம் 311